ஜாதக கணிதம் நான்காம் பாகம்

என்னும்

T. 12033

ஜாதக ராஜ மனோரஞ்சிதம்

(Astro ... has.)

இது ச... , சத்தி

யசம்... நாடி,

யோ... பலா

பல... ள

Saraswathi Thanai.
Navagraha ...yam.
Shanmuga Vilas.
S. Venkatasubramania
Josiar.
S/o ... S. Swaminatha
Josiar.
Mannargudi.
Book No

இது ... சன்ஸ்
உபாத்தியாயராயிருந்தவரும், கணிதசாஸ்திரத்தில் பி.ஏ.
பட்டம் வகித்தவரும், ஆனந்த போதினி சுத்த திருக்
கணித பஞ்சாங்க கணிதரும், இராஜ ஜோதிட
கணிதம், ஜாதக கணிதம் ஓராம் பாகம் என்ற
ஜோதிட கிரகசட்பலம் ஆயுள்கணிதம், ஜாதக
கணிதம் இரண்டாம் பாகம் என்ற ஜாதக
பலாபலன்கள் நிர்ணயம் இவைகளின்
ஆசிரியரும், பிருஹத் ஜாதகத்தின்
பதிப்பாசிரியருமாகிய

C. G. ராஜன், B.A., (*Mathematics*)

அவர்களாலும், அவர் குமாரர்

C. சுப்பிரமணியம் அவர்களாலும்

எழுதப்பட்டது.

கிடைக்கும் இடம் :—அடுத்த பக்கம் பார்க்கவும்.

1940

All Rights Reserved.

முதல் பதிப்பு] சென்னை. [விலை ரூ. 2-4-0

உ

ஜாதக கணிதம் நான்காம் பாகம்

என்னும்

ஜாதக ராஜ மனோரஞ்சிதம்

ஸ்ரீ ராமஜெயம்
ஸ்ரீ ஷண்முக விலாஸ் ஜோதிட சாலை
M. S. வெங்கடராமன் ஜோஸ்யர்
மன்னார்குடி.

மலர் 2

(Astrological Dogmas employed in Nadi Granthas.)

இது சம்ஸ்கிருத சுக்கிரநாடி, கேரளநாடி, துருவநாடி, சத்தியசம்ஹிதை, பிருகு சம்ஹிதை, சர்வ சங்கிரஹ நாடி, யோகநாடி முதலிய நாடிக்கிரந்தங்களில் ஜாதக பலாபலன்களை நிர்ணயஞ்செய்ய உபயோகப்படுத்தியுள்ள மூலக்கிரந்தங்களின் விதிகளின் திரட்டு.

இது சென்னை முத்தியாலுப்பேட்டை ஐ ஸ்கூலில் சைன்ஸ் உபாத்தியாயராயிருந்தவரும், கணிதசாஸ்திரத்தில் பி.ஏ. பட்டம் வகித்தவரும், ஆனந்த போதினி சுத்த திருக் கணித பஞ்சாங்க கணிதரும், இராஜ ஜோதிட கணிதம், ஜாதக கணிதம் ஒராம் பாகம் என்ற ஜோதிட கிரகசட்பலம் ஆயுள்கணிதம், ஜாதக கணிதம் இரண்டாம் பாகம் என்ற ஜாதக பலாபலன்கள் நிர்ணயம் இவைகளின் ஆசிரியரும், பிருஹத் ஜாதகத்தின் பதிப்பாசிரியருமாகிய

C. G. ராஜன், B.A., (Mathematics)

அவர்களாலும், அவர் குமாரர்

C. சுப்பிரமணியம் அவர்களாலும்

எழுதப்பட்டது.

கிடைக்கும் இடம் :—அடுத்த பக்கம் பார்க்கவும்.

1940

All Rights Reserved.

முதல் பதிப்பு] சென்னை. [விலை ரூ. 2–4–0

உ

கடவுள் துணை

இது

ஜாதக கணிதம் நான்காம் பாகம்.

என்னும்

ஜாதக ராஜ மனோரஞ்சிதம்.

மலர்-2

(Astrological Dogmas employed in Nadi Granthas.)

இதில் மேஷம் முதல் மீனம் வரையிலுமுள்ள ஒவ்வொரு லக்கினத்திற்கும் தொண்ணூறு முதல் நூற்றைம்பத்தெட்டு வரையிலுமுள்ள விதிகள் அதாவது மொத்தத்தில் ஆயிரத்து ஐந்நூற்றைம்பது வித கிரக அமைப்பு விதிகளும், அவைகளால் உண்டாகக்கூடிய பலாபலன்களும் விவரமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதில் ஜாதகருடைய சர்வ பலன்களும், அவருடைய தாய், தகப்பன், அவருடைய சகோதர சகோதரி, அவருடைய தகப்பருடைய சகோதர சகோதரி அவருடைய அம்மான், அவருடைய மாற்றாந்தாய், அவருடைய மாற்றாந்தாயின் புத்திர புத்திரிகள், அவருடைய மாமனார் ஆகிய இவர்களுடைய பலன்களும், அந்தந்த ஆதிபத்திய காரக கிரக நிலைகளையும், கிரக பார்வையையும், கிரக சம்மந்தத்தையும் அனுசரித்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இப்பலாபலன்கள் விருத்த வசிஷ்டர், பராசர், நாரதர், காசிபர், ஜெயமுனி, கர்கர், பிருகு, சத்தியாச்சாரி, மனு, விஷ்ணு, ஈஸ்வரர், யவனர், மயன் இவர்கள் கொள்கைபடி கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இது

C. G. ராஜன், B.A., (*Mathematics.*)

அவர்களாலும், அவர் குமாரர்

C. சுப்பிரமணியம் அவர்களாலும்

எழுதப்பட்டது.

கிடைக்கும் இடம்:—(1) C. விஸ்வநாதம் அண்டு கம்பெனி,
நெ. 7, வெங்கிடேச மேஸ்திரி தெரு, கிருஷ்ணப்ப நாய்க்கன் குளம் சமீபம், சௌகார்பேட்டை போஸ்ட்டு, மதராஸ்.

(2) C. சுப்பிரமணியம், 70, பேடல்ஸ் ரோட்டு பெரம்பூர், மதராஸ்.

(3) ஒ. பி. லக்ஷ்மிநரஸிம்மாசாரியார், தேவ கேரள ஜோதிடர்,
366, தங்கசாலை தெரு, மதராஸ்.

சென்னை.

1940

All Rights Reserved.] [*Indian Edition*

முன்னுரை.

இப்புத்தகம் என்னுடைய "ஜாதக கணிதம் என்னும் ஜோதிட கிரக சட்பலம் ஆயுள் கணிதம்" என்ற புத்தகத்தினுடைய நான்காம் பாகம் ஆகும். மேலும் இது ஜாதக கணிதம் இரண்டாம் பாகம் என்னும் ஜாதகப் பலாபலன்கள் நிர்ணயம்" என்ற என்னுடைய புத்தகத்தில் ஏழாவது அத்தியாயம் 116-வது ஐட்டமாகிய "துவாதச லக்கின ஜாதகப் பலன்கள்" என்ற பகுதியின் துடர்ச்சியாகும். இப்போது ஜோதிட கிரந்தங்கள் அனேக கிரந்தங்கள் அச்சிடப்பட்டிருக்கின்றன. அவைகளில் கிரகங்களின் நிலையை மேஷ லக்கினம், ரிஷப லக்கினம் முதலிய துவாதச லக்கினங்கள் ரீதியாய் அனுசரித்துச் சொல்லாமல் அதாவது லக்கினம் இன்ன ராசியிலிருக்கின்றதென்று குறிக்காமல் பொதுவாய் லக்கினத்திற்கு இத்தனையாவது வீட்டில் அல்லது பாவத்தில் அல்லது ராசியில் கிரகம் இருந்தால் இந்த இந்த பலன்கள் நேரிடும் என்று சொல்லி இருக்கின்றது. லக்கினத்தை இன்ன லக்கினம் என்று நிர்ணயித்துவிட்டால் கிரகங்களின் ஆதிபத்தியமும், சுபா அசுப குணங்களும் தானகவே நிர்ணயிக்கப்பட்டுவிடுகின்றன; அப்போது கிரகங்கள் தங்கள் தங்களுடைய நிலையையும், பார்வையையும், சம்மந்தத்தையும் அனுசரித்துக் கொடுக்கும் பலன்கள் அந்தக் குறித்த லக்கினம் வரையிலும் ஸ்திரமாகவும், துல்லிபமாகவும் அமையப்படுகின்றன. இவ்விதமாக லக்கினம் இன்ன ராசியிலிருக்கின்றது என்பதைக் குறிக்காமல் பொதுவாய்ப் பலன் சொல்லத் துணிவோமானல் கிரகங்களின் ஆதிபத்தியமும், சுபா அசுப குணங்களும் தானகவே நிர்ணயிக்கப்படாமல் போய்விடுவதால் ஜோதிடர்கள் அந்தந்த கிரகத்தின் ஆதிபத்தியத்தையும், சுபா அசுப குணங்களையும் தாங்களே நிர்ணயஞ்செய்து அதனல் பலாபலன்களில் ஏற்படும் பேதாபேதங்களைச் சிரமப்பட்டு தாங்களே நிர்ணயஞ்செய்ய வேண்டியதாயிருக்கும். இத்தகைய சிரமத்தை நீக்கும் பொருட்டும், ஜோதிடர்கள் தாங்களே நிர்ணயஞ்செய்வதில் தவறுகள் ஏற்படக்கூடுமாகையால் அத்தவறுகள் நேரிடாமலிருக்கும் பொருட்டும் நமது மகரிஷிகள் தங்களுடைய கிரந்தங்களில் லக்கினத்தை நிர்ணயஞ்செய்தும், அப்படி நிர்ணயஞ்செய்வதாலுண்டாகும் கிரகங்களின் ஆதிபத்தியத்தையும், சுபா அசுப குணங்களையும் அனுசரித்தும் பலாபலன்கள் சொல்லியிருக்கின்றார்கள்.

(2) இவ்வித பலாபலன்கள் அடங்கியுள்ள கிரந்தங்களில் பெரும்பான்மையான கிரந்தங்கள் அழிந்துபோய்விட்டபடியால் இப்போது அவை ஓலையிலாவது அல்லது காகிதத்திலாவது கிடைப்பது அபூர்வமாக விருக்கின்றது. மேலும் அக்கிரந்தங்களில் தற்காலம் அகப்படக்கூடிய சிற்சில கிரந்தங்கள் ஓலையில் எழுதப்பட்டு

சில குடும்பங்களில் தங்களால் மாத்திரம் உபயோகப்படுத்தப்பட்டும், உபயோகப்படுத்தப்படாமல் செல்லுக்கும், பாச்சைக்கும் இரையாக இருப்பதாலும் அவை பொது ஜனங்களுக்குக் கிடைப்பது மிகவும் அரிதாயிருக்கின்றது. அழிந்துபோய்விட்ட கிரந்தங்களில் கொடுக்கப்பட்டுள்ள விதிகள் நாடிக் கிரந்தங்களில் மேற்கோளாக அதாவது பிரமாண வாக்கியங்களாக (Authority) க் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவ்வித நாடிகள் "சுக்கிர நாடி, கேரள நாடி, துருவ நாடி, சத்திய சம்ஹித நாடி, பிருகு சம்ஹிதை நாடி, சர்வ சங்கிரஹ நாடி, யோக நாடி" என பெயரிட்டு வழங்கிவருகின்றன. இந்த நாடிகள்கூட பொது ஜனங்களுக்கு அகப்படாமல் சிலரிடத்திலிருப்பதாலும், இவைகள் சமஸ்கிருத பாஷையில் இருப்பதாலும் அனேகருக்குப் பயன்படாமல் இருக்கின்றன. இந்த நாடிகளில் விவரித்திருக்கும் பலாபலன்களுக்கு ஆதாரமாக சில மகரிஷிகளையும், பூர்வீக கிரந்த கர்த்தர்களையும், கிரந்தங்களையும் இந்த நாடிகளில் குறித்திருக்கின்றது. இப்படிக் குறிக்கப்பட்ட மகரிஷிகளும், கிரந்த கர்த்தர்களும் விருத்தவசிஷ்டர், பராசர், நாரதர், காசியபர், ஜெய முனி, கர்கர், பிருகு, சத்தியாச்சாரி, மனு, விஷ்ணு, ஈசுவரர், யவனர், மயன் முதலானவர்களாவர். இப்படிக் குறிக்கப்பட்ட கிரந்தங்கள் சூரிய நாடி, சந்திர நாடி, குஜ நாடி, புத நாடி, குரு நாடி, சனி நாடி, சாம்பசிவ நாடி, கார்கிய நாடி, ஜம்புநாதீயம், கர்ம யோக பலாத்யாயம் லக்கினுதிபதி நாடி, பாவ நாடிகள், காலார்ணவம் முதலியவைகளாகும். ஆகையால் மேற்சொல்லிய நாடிகளில் ஆதாரமாகக் கொடுக்கப்பட்டுள்ள விதிகள் மேற்சொல்லிய மகரிஷிகளால் ஏற்படுத்தப்பட்டும், கிரந்த கர்த்தர்களால் தங்கள் காலங்களில் தங்களுக்குக் கிடைத்த மட்டும் திரட்டப்பட்டும் உபயோகப்படுத்தப்பட்டு வந்துள்ள விதிகளாகும். இவ்வித விதிகள் லக்கினவாரியாக ஒன்றுய்த் திரட்டிச் சேர்க்கப்பட்டு இப்புத்தகத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதுதான் நான் இப்புத்தகத்தில் புதியதாய்ச் செய்திருக்கும் என்னுடைய சொந்த விஷயமாகும். மிகுதி எல்லா விஷயங்களும் நமது முன்னோர்களால் செய்யப்பட்ட விஷயங்களே என்று அறிய வேண்டியது.

(3) இப்புத்தகத்தில் உபயோகப்படுத்தப்பட்டுள்ள நாடி அம்சங்களைக் கணிக்கும் விதம் எனது "ஜாதக கணிதம் இரண்டாம் பாகமாகிய ஜாதக பலாபலன்கள் நிர்ணயம்" என்ற புத்தகத்தில் ஏழாவது அத்தியாயத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதையும் வாசிக்கவும். நாடிக் கிரந்தங்களில் லக்கினம், கிரகங்கள் இவைகள் இருக்கும் நாடி அம்சங்களைக் கொண்டு பலாபலன்களைத் துல்லியமாகச் சொல்லியிருக்கின்றார்கள். நாடி அம்சங்களின் உதவியால் பெரும்பாலும் ஜாதகன் பிறந்த இடத்தின் நகரச் சிறப்பு, ஜாதகனுடைய குலத்தின் ஜாதி, ஜாதகன் இத்தனையாவது பிறவி என்

பது, ஜாதகனுடைய சகோதர சகோதரியின் சங்கியை முதலிய துல்லிபமான அம்சங்கள் நாடிக் கிரந்தங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. நாம் பரிசீலனை செய்யும் ஜாதகத்தின் நாடி அம்சமும், விதிகளில் கொடுக்கப்பட்டுள்ள நாடி அம்சமும் சரிபட்டு வந்தால் ஸ்தூல பலன்களும் (broad details) அதிக விபரமான (minute details பலன்களும் நாடிக் கிரந்தங்களில் உபயோகப்படுத்தப்பட்டு இந்தப் புத்தகத்தில் திரட்டிக் கொடுக்கப்பட்ட விதிகளில் சொல்லிய படி துல்லிபமாயிருக்கும். அப்படி நாடி அம்சம் சரிபடாவிட்டால் நாடி அம்சத்தில் ஏற்படும் வித்தியாசத்திற்குத் தகுந்தபடி துல்லிப மான பலாபலன்கள் கொஞ்சம் மாறுதலடையும். ஆயினும் கிரக யோகங்கள் சரியாக அமையப்பட்டு நாடி அம்சங்கள் மாத்திரம் வித்தியாசப்பட்டால் ஸ்தூல பலாபலன்கள் (*i.e.*, broad details) கூடிய மட்டும் சரியாயிருக்கும் என்ற காரணத்தைக் கொண்டே நாடிக் கிரந்தங்களில் உபயோகப்படுத்தப்பட்ட மேற்கோள்களாகிய மூலக் கிரந்தங்களின் விதிகள் இங்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவ்விதிகளில் சொல்லிய கிரக நிலை, கிரக திருஷ்டி, கிரக சம்மந்தம் முதலியவைகள் பிரகாரமே நாம் பரிசீலனை செய்யும் ஜாதகத்தில் அமைந்தால் இவ்விதிகளில் சொல்லிய பலாபலன்கள் சரி பட்டு வரும். அப்படிக்கன்றி விதிகளில் சொல்லியதற்கு அதிக மாகக் கிரக சம்பந்தமாகிலும் அல்லது கிரக பார்வையாகிலும் இருந்தால் இந்த அதிக கிரக சம்மந்தத்தாலும் அல்லது அதிக கிரக பார்வையாலும் பலாபலன்களில் உண்டாகும் பேதங்களையும் ஆலோசித்து சரிபடுத்தி ஒழுங்குபடுத்திப் பலாபலன்களைச் சாமர்த்தியமாயும், திறமையாயும் யூகித்துச் சொல்ல வேண்டும். நாம் பரிசீலனை செய்யும் ஜாதகத்திலுள்ள கிரக அமைப்புகள் பல விதிகளில் பொருந்தி சரிபட்டு வருமாகில் அதாவது சில கிரக அமைப்பு ஒரு விதியிலும் இன்னுஞ் சில கிரக அமைப்பு இன்னொரு விதியிலும், இன்னுஞ்சில கிரக அமைப்பு இன்னொரு விதியிலும் பொருந்தி சரிபட்டு வருமாகில் இந்த மூன்று வித விதிகளில் சொல்லியுள்ள பலாபலன்களை ஒரு காகிதத்தில் குறித்துக்கொண்டு இப் பலாபலன்களை ஒன்று தட்டி ஒழுங்குபடுத்தி நிகர பலாபலன்களை யூகித்துச் சொல்லத் துணிய வேண்டும். இதுதான் ஜோதிடர்களுடைய திறமையாகும்.

இந்தப் புத்தகத்திற்குத் தேவையான விஷயங்களைச் சேகரிப்பதிலும், எழுத்துப் பிரதி (காப்பி) எடுப்பதிலும், இப்புத்தகத்தை வெளியிடுவதிலும் என் திரவிய சகாயம் பெற்றுக்கொண்டு எனக்கு உதவி புரிந்த ஜோஸ்யம், ஒ. பி. லக்ஷ்மிநரஸிம்மாசாரியாருக்கு என்னுடைய வந்தனத்தை அளிக்கின்றேன்.

இந்தப் புத்தகத்தில் எழுத்துப் பிழை, சொற்பிழை முதலியவைகளிருந்தால் அவைகளை மன்னித்து இந்தப் புத்தகத்திலுள்ள

சாராம்சத்தை ஏற்றுக்கொண்டு இந்தப் புத்தகத்தை ஆமோதிக்கும்படியாய் இதை வாசிக்கும் பெரியோர்களையும், சிறியோர்களையும் மிகுந்த வணக்கத்துடன் கேட்டுக்கொள்கின்றேன்.

இந்தப் புத்தகத்தில் ஒவ்வொரு லக்கினத்திற்கும் தொண்ணூறு முதல் நூற்றைம்பத்தெட்டு விதிகள் வரையிலும் அதாவது மொத்தத்தில் ஆயிரத்தைந்நூற்றைம்பது விதிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதுவுமன்றி ஜாதக கணிதம் இரண்டாம் பாகத்தில் மேஷ லக்கினத்திற்குரிய விதிகள் அறுபது விதிகள் ஏழாவது அத்தியாயத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஜாதக கணிதம் மூன்றும் பாகத்தில் இரண்டாயிரத்து ஐந்நூற்றுப்பதினேரு விதிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவைகளுமன்றி என்னிடத்தில் துவாதச லக்கினங்களுக்குரிய விதிகள் அனேக ஆயிரக் கணக்காகவிருக்கின்றன. இந்தப் புத்தகம் ஜோதிடர்களுக்கு மிகவும் உபயோகமாகவிருக்கும் என்று சில நண்பர்கள் எனக்குத் தெரிவித்ததாலும், நானும் அவ்விதமாகவே அபிப்பிராயப்பட்டதாலும் இப்புத்தகத்தை அதிக திரவியஞ்செலவு செய்து வெளியிடத் துணிந்தேன். இந்த அபிப்பிராயம் பிரகாரமே இப்புத்தகம் ஜோதிடர்களுக்கு மிகவும் உபயோகமாகவிருக்கும் என்று இதை வாசிக்கும் ஜோதிடர்களும் மற்றுமுள்ளவர்களும் எனக்குத் தெரிவிக்கும்பட்சத்தில் என்னிடத்திலுள்ள மிகுதி விதிகளையும் ஐந்தாவது, ஆறுவது முதலிய பாகங்களில் அச்சிட்டு வெளியிடப்படும். மேலும் இப்புத்தகத்தை இன்னும் விருத்தி செய்வதற்காக யாராகிலும் தெரியப்படுத்தும் அபிப்பிராயங்களை மிகுந்த வந்தனத்துடன் அங்கீகாரஞ்செய்வதுடன் அவ்வபிப்பிராயங்களுக்கிணங்க விருத்திகளை அடுத்தப் பதிப்பில் செய்யச் சித்தமாயிருக்கின்றேன்,

22—6—1940
நெ. 7. வெங்கடேச மேஸ்திரி தெருவு,
கிருஷ்ணப்ப நாய்க்கன் குளம் அருகில்.
சௌகார்பேட்டை போஸ்டு, சென்னை.

C. G. ராஜன் B.A

விஷய அட்டவணை.

—(***)—

விஷயம்		பக்கம்.
1. மேஷ லக்கின ஜாதக துவாதச பாவ பலன்கள்	...	1
2. ரிஷப லக்கின ஜாதக துவாதச பாவ பலன்கள்	...	38
3. மிதுன லக்கின ஜாதக துவாதச பாவ பலன்கள்	...	65
4. கடக லக்கின ஜாதக துவாதச பாவ பலன்கள்	...	99
5. சிம்ம லக்கின ஜாதக துவாதச பாவ பலன்கள்	...	121

6. கன்னியா லக்கின ஜாதக துவாதச பாவ பலன்கள் ... 145
7. துலா லக்கின ஜாதக துவாதச பாவ பலன்கள் ... 169
8. விருச்சிக லக்கின ஜாதக துவாதச பாவ பலன்கள் ... 197
9. தனுசு லக்கின ஜாதக துவாதச பாவ பலன்கள் ... 222
10. மகர லக்கின ஜாதக துவாதச பாவ பலன்கள் ... 257
11. கும்ப லக்கின ஜாதக துவாதச பாவ பலன்கள் ... 279
12. மீன லக்கின ஜாதக துவாதச பாவ பலன்கள் ... 295

பிழை திருத்தம்.

பக்கம்	வரி	பிழை.	திருத்தம்.
12	31	ஜாதகன்	அந்த ஜாதகன்
13	35	ஜென்கி	ஜென்ம
,,	38	மனைவி ஜாதகன்	ஜாதகன்
17	6	பனனிரண்டில் சனி இரு	பன்னிரண்டில் இருந்தால்
19	35	பாகத்தில் [ந்தால்	பாவத்தில்
21	36	சிய ஆலய	சிவ ஆலய
23	14	யவன்	யவள்
27	35	ஒருவன் புத்திரீ	ஒருவனுக்குப் புத்திரீ
33	1	சர ராசி	சராசி
34	22	மிருந்தால் ஜாதகன்	மிருந்தால் புண்ணிய

62 முதல் 71 வரை தலைப்பை ரிஷபம் அத்தியாயம் 2 என்பதை மிதுனம் அத்தியாயம் 3 எனக் கொள்ளவும்.

பக்கம்	வரி	பிழை.	திருத்தம்.
76	29	தகப்படைய	தகப்பனுடைய
102	12	மேஷ ராசியில் நிர்மலாம்	மேஷ ராசியில் சந்திரன்
103	21	சுக்கிரனுடன்	சந்திரனுடன் [நிர்மலாம்
104	29	ஆகி ஜாதகன் குரு	ஆகி குரு
109	26	சாஸ்திரமற்ற	சாஸ்திர ஞானமற்ற
114	9	சக்தி	பக்தி
128	14	தனுசு ராசியில் இருந்தால்	தனுசு ராசியில் சூரியனி
146	14	பக்தியுடையவன்	பக்தியுடையவள்[ருந்தால்
152	15	பாவாதிவதி	பாவாதிபதி
156	37	இருப்பதால்	இருந்தால்
158	23	ராஜந்திர	ராஜ தந்திர
176	23	ஜாதககிரு	ஜாதகிக்கு
179	30	ஜாதகன்	மரித்து

பக்கம்	வரி	பிழை.	திருத்தம்.
181	11	ஒன்பது இரண்டாம்	ஒன்பதாம் பாவாதிபதி
190	27	ஜாதகன் மத்திய	ஜாதகன் தகப்பன் மத்திய
208	2	லக்கினம் ஆகி	லக்கினம் விருச்சிகம் ஆகி
215	34	விருச்சிகம் ஆதி	விருச்சிகம் ஆகி [ன்
216	37	திசையில் மடைவான்	திசையில் மரணமடைவா
220	34	தகப்பன் மரிப்பான்	மூன்றுந்திசையில் தகப்ப
265	1	165	265 [ன் மரிப்பான்.
278	38	சொல்லுமுடையவன்	சொல்லுமுடையவள்
280	4	யாதனேயம்	யாதனேயும்
,,	23	னிளேயவளே	னிளேயவனே
281	1	281 முதல் 288-ம் பக்கம்வரை தலேயங்கத்தை மகரம் அத்தியாயம் 10 என்பதை கும்பம் அத்தியாயம் 11என கொள்ளவும்.	
284	13	குண பீடை	ரூண பீடை

ஒரு அம்சப் பலன் ஆரம்பமானது முதல் மறு அம்சம் ஆரம்பமாகும் வரையில் முன் சொல்லியிருக்கும் அம்சப் பலனே சொல்லப்பட்டிருக்கிறது.

"ஜாதக கணிதம்" என்ற புஸ்தகத்தின் நான்காம் பாகமாகிய

ஜாதக ராஜ மனோரஞ்சிதம்

மலர் 2

இது சுக்கிர நாடி, கேரள நாடி, துருவ நாடி, சத்திய சம்ஹிதை, பிருகு சம்ஹிதை, சர்வ சங்கிரஹ நாடி, யோக நாடி முதலிய நாடிக் கிரந்தங்களில் ஜாதக பலாபலன்களை நிர்ணயஞ் செய்ய உபயோகப்படுத்தியுள்ள மூலக்கிரந்தங்களின் விதிகளின் திரட்டு.

(Astrological Dogmas employed in Nadi Granthams.)

துவாதச லக்கின ஜாதக பலன்கள்

(1) மேஷ லக்கின ஜாதகம் *

துவாதச பாவ பலன்கள்

(1) ஜென்ம லக்கினம் மேஷம் (பாடலினீயம்சம்) ஆகி சூரியன் விருச்சிக ராசியிலும், ஒன்பதாம் பாவாதிபதி குரு மீனராசியிலுமிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் சுகமுடையவன், தன் பிதாவைக் காட்டிலும் வெகு ஆயுளுடையவன், சிவபக்தி மதத்தை அடைபவன், எப்பொழுதும் வியாபாரத்தில் ஜீவனமுடையவன், தேவப் பிராமண பக்தி யுடையவன்.

நாடியம்சம்—சுமதியாம்சம்:—

(2) ஜென்ம லக்கினம் மேஷம்ஆகி நாடியம்சத்தின் பூர்வ பாகத்தில் ஜனித்தவனுக்கு லக்கின பாவாதிபதி குருவுடனும் சனியுடனுங் கூடி விருச்சிகத்தில் இருந்தால் ஜாதகனுடைய தாய் பிரசவகாலத்தில் கொஞ்சமான வேதனையுடையவள். உத்தராம்சத்தில் ஜனித்தவனுக்குச் சந்திரன், சூரியனுல் பார்க்கப்பட்டால் ஜாதகனுடைய தாய் பிரசவத்தில் அதிக வேதனையடைவாள், தாய்க்குக் கொஞ்சம் பீடையுண்டாகும், சந்திரனுக்கு குரு திருஷ்டியிருந்தால் சுகமுண்டாகும், ஜாதகனுக்குப் பாலரோகம் முதலான குழந்தைகளுக்குரிய ரோகங்

* இது எனது ஜாதக கணிதம் என்ற புத்தகத்தின் இரண்டாம் பாகமாகிய "ஜாதக பலாபல நிர்ணயம் என்ற புத்தகத்தில் 7-வது அத்தியாயத்தில் 117-வது ஆயிட்டத்தில் கொடுத்துள்ள மேஷ லக்கின ஜாதக பலன்களின் தொடர்ச்

களால் பீடையுண்டாகும், மாந்த சுரம் முதலியவற்றாலும், அம்மை சுரத்தாலும் ஜாதகனுக்குப் பயமுண்டாகும்.

(3) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி லக்கினத்துக்கும் எட்டாம் பாவத்துக்குமுடைய செவ்வாய், குரு, சனி இவர்களுடன் கூடியிருந்து லக்கினத்திற்கு அல்லது இவர்களுக்குக் கேந்திர திரிகோணங்களில் சுக்கிரனிருந்தால் ஜாதகன் எல்லா தோஷங்களும் விலகி சுகமடைவான், அறுபத்தேழு வயது வரை ஜீவித்திருப்பவன், இருபத்தாறுவது வயதில் ஜ்வர பீதியும், முப்பத்திரண்டில் ஜ்வர பீதியும் உண்டாகும். நாற்பத்திரண்டாவது வயதில் பித்த வாயுவால் பீடையுண்டாகும், ஐம்பத்தாறாவது வயதில் மிக்கபீதியும், சன்னிபாத ஜ்வரமும் உண்டாகும். அறுபதாவது வயதில் அபமிருத்து உண்டாகும், அப்போது சாந்தியால் சுகமுண்டாகும். எண்ணெய் குடம், நெய், இரும்புத்தடி தானம் முதலிய தானங்கள் செய்தால் அபமிருத்து நீங்கிவிடும். அதன் பிறகு கும்பத்திரிகோணத்திலாவது, விருஷப ராசியிலாவது, விருஷப ராசியின் திரிகோணத்திலாவது கோச்சாரத்தில் சனிவரும் சமயம் ஜாதகன் ரோகத்தால் பீடையடைவான். தனக்குச் சமமான ஜனங்களின் நாசமும், தாய் தகப்பன் ஜனங்களுக்கு கெடுதியும் உண்டாகும், சனிப் பிரீதிசெய்து நீலவஸ்திர தானம் செய்தால் சுகமுண்டாகும்.

நாடி அம்சம்—பங்கஜாம்சம்:—

(4) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி சூரியன் புதனுடன் கூடி பதினோராவது பாவத்திலிருந்து ஒன்பதாம் பாவாதிபதியாகிய குரு மூன்றாம் பாவத்திலிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் விசேஷ சௌக்ய முடையவன், இந்த குரு மீனும்சத்திலாவது தனுசாம்சத்திலாவது இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் ராஜயோக முடையவன், ஸிம்மாசனபதியாவன், சதுரங்க பலத்துடன் கூடினவன், யானை, குதிரை, தேர் அநேக சேனை இவைகளுக்கு நாயகனாவான், சத்திரம் குடை சாமரம் முதலியன உடையவன், பாடகர்களால் துதி செய்யக் கூடியவன்.

யாகிய "ஜாதக கணிதம் மூன்றாம் பாகம்" என்னும் ஜாதக ராஜ மனோரஞ்சிதம் மலர் 1-ல் கொடுத்துள்ள மேஷ லக்கின ஜாதக பலன்களின் தொடர்ச்சி. நாடி அம்சங்களின் விபரமும் அவைகளைக் கணிக்கும் விதமும் மேற்சொல்லிய இரண்டாம் பாகத்தில் 7-வது அத்தியாயத்தில் 110-வது முதல் 115-வது வரையிலுமுள்ள அயிட்டங்களில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை வாசிக்கவும்.

(2) நாடி அம்சத்தைப்பற்றி இந்தப் புத்தகத்தின் முன்னுரையில் சொல்லியிருப்பதை அவசியம் வாசிக்கவும்.

(5) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி சூரியன் புதனுடன் கூடி பதினோராவது பாவத்தில் ராஜயோக கலாம்சத்தில் இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் மகாராஜாவாகவும், எப்பொழுதும் சரசத்தில் பிரியமுடையவனாகவும் குதிரை ஏறுவதில் வல்லவனாகவும் இருப்பான். அநேக சேவகர்கள், ஏவலாளர்களுடையவன், உத்ஸாகமுடையவன், பெரியோரிடம் பக்தி யுடையவன், சௌரிய சாகஸ கீர்த்தியுடையவன், பராக்கிரம முடையவன், சுதந்திர முடையவன், சத்துருக்களை அழிக்கப்பட்டவன், பிரதாபமுடையவன், அயலாருடைய ரகசியங்களை அறிபவன், உபாயத்தால் காரிய சாதகமுடையவன் ஆவான். ராஜ்யாவஸ்தையில் சூரியனிருந்தால் ராஜ தந்திரத்தில் வல்லவனாகவும், சாஸ்திரார்த்தக் கியானமுடையவனாகவும், ஆசையுடையவனாகவும், தத்துவ மறிந்தவனாகவும், தத்துவத்தைப் போதிப்பவனாகவும், விஷ்ணு, சிவ பக்தியுடையவனாகவும், தேவி சத்தியினுடைய அருளடைந்தவனாகவும், நாடக, அலங்கார காவியப்பிரியனாகவும், சங்கீத லோலனாகவும், விஷய போகத்தில் அதிகம் முழுகப்பட்ட மனதுடையவனாகவும், அயலார் மனைவிகளிடத்தில் புணர இச்சையுடையவனாகவும், நல்ல அழகுடைய மனைவியையுடையவனாயிருந்தும் போகஸ்திரீயுடன் சரஸம் செய்வதில் பிரியமுள்ளவனாகவும், தேசாந்தரத்தில் நல்ல கீர்த்தியுடையவனாகவும், தியாகமும், போகமும் உடையவனாகவும், தானம் செய்பவனாகவும், தடாகம், உத்யானம், தேவாலயம் முதலியவற்றில் தர்மம் செய்பவனாகவும், ஏழைகளுக்கிரங்குபவனாகவும், ஸ்ரீமானாகவும், தேவ பிராமணர்களை காப்பாற்றுபவனாகவும் ஆவான். ஒன்பதாம் பாவத்தில் சனி இருந்தாலும் ஒன்பதாம் பாவத்தைச் சனி பார்த்தாலும் கொஞ்சம் ரோக சரீரமுடையவனும், வாத ரோகத்தால் பீடையுடையவனும், கொஞ்சம் மறைவிடத்தில் (ரகசியத்தானத்தில்) ரோகமுள்ளவனும், யௌவனத்தில் ராஜயோகமுடையவனும், கொஞ்சம் ருண பீடையுடையவனும், தெய்வயோகத்தால் பெருக்குடையவனும், மத்திய அந்திய வயதுகளில் வெகு கீர்த்தியுடையவனுமாக ஜாதகனுடைய தகப்பன் இருப்பான். இப்படிப்பட்ட தகப்பன் ஜாதகனுடைய நான்காந் திசையில் மதிப்பான்.

(6) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி நான்காம் பாவாதிபதி கேந்திர ராசியிலிருந்து செவ்வாய் சனி இவர்கள் இருவராலும் ஏக காலத்தில் பார்க்கப்பட்டால் ஜாதகனுடைய தாய் விசேஷ சௌக்கியமுடையவள், கணவனிடம் அன்புடையவள்.

(7) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி சந்திரன் சர ராசியிலிருக்க சுக்கிரன் தன் உச்சத்தில் வலுத்து இருந்தால் ஜாதகன் மாற்றுந்தாயுடையவன், மூன்று தாயுடையவன், தாய் குணவதி, பொறுமையுடையவள், கணவன் மனதறிந்து அனுசரணையாக இருப்பவள், அன்னதானம் செய்வதில் பிரியமுடையவள், புண்ணியவதி, மேலான தர்ம சிந்

தையே மனதிலுடையவள், புத்திர புத்திரிகளைப் பெறுபவள், வம்ச விருத்தியுடையவள், ஜாதகனுடைய மூன்றும் திசையில் ஜாதகனுடைய தாய் மரிப்பாள், மூன்றும் திசையில் சுக்கிர புத்தியில் கன்னியா ராசியின் கடைசியில் அல்லது துலா ராசியில் கோச்சாரத்தில் சனி வரும் சமயம் ஜாதகனுடைய தாய்க்கு மரணமுண்டாகும். அந்த கன்னியா ராசியின் திரிகோணத்தில் அல்லது துலா ராசியின் திரிகோணத்தில் சனி கோச்சாரத்தில் சஞ்சரிக்கும் காலம் தாய்க்கு மனோவேதனையுண்டாகும், தாய்க்குச் சமமான ஜனங்களின் நாசமும் உண்டாகும், அல்லது அதற்கு முன்பே ஜாதகனுடைய ஜன்ம திசையாகி ராகு தெசை வந்து அந்த தெசை ராகு புத்தியில் விருச்சிக ராசியின் அந்தியத்திலாவது தனுசு ராசியின் முதலிலாவது சனி கோச்சாரத்தில் சஞ்சார காலத்தில் ஜாதகனுடைய மாற்றுந் தாய்க்கு ரோகமும், ஜாதகனுடைய சொந்த தாய்க்கு மரணமும் உண்டாகும்.

(8) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி மூன்றும் பாவாதிபதி புதன், பதினோராம்பாவத்தில் சூரியனுடன் கூடியிருக்க லக்கினத்திற்கு மூன்றும் பாவத்தில் குரு இருந்தால் ஜாதகன் அற்ப சகோதா பலனுடையவன், பின் சகோதானில்லை என்று சிலரும், ஒரு சகோதரி மட்டும் சுகியாயிருப்பாள் என்று சிலரும் சொல்லுகிறார்கள். ஜாதகனுக்கு மாற்றுந்தாயின் புத்திரர்கள் இருவர் சௌக்கியத்துடனும், ஒரு சகோதரியும் சுகத்துடன் கூடியவருமாய் இருப்பார்கள். இந்த பேத சகோதரர்கள் நல்ல ராஜயோக முடையவர்கள் அரசாங்கத்தில் நல்ல யோகமும் அறிவும் முடையவர்கள் ஜாதகன் விவேகி கர்ப்பத்திலிருந்தே (சீமானவன்) சம்பத்துடையவன், வெகு சுகி, கல்வியுடையவன், இனிமையாய்ப் பேசுபவன், நியத மில்லாதவன், தர்மத்தைக் கொண்டாடுபவன், ராஜ்ய தந்திரத்தில் பிரசித்தியுடையவன், எல்லா காரியங்களிலும் சமர்த்தனவன், வேறொரு பேத சகோதரன் நல்ல போகி, யோகமுடையவன், நல்ல கீர்த்தியுடையவன், அனேக வாகனத்துடன் நிறைந்த சம்பத்துடையவன், தேசாந்திரத்தில் நல்ல கீர்த்தியுடையவன், சகோதரன் மூலமாக அதிக சுக மடைபவன், தேவாலயம் முதலிய வற்றிற்குத் தர்மம் செய்பவன்.

(9) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி இரண்டாம் பாவாதிபதியும் சூரியனும், புதனுடன் கூடி பதினோராம் பாவத்திலிருந்தால் அந்த இரண்டாம் பாவாதி தசையில் ஜாதகனுக்கு விசேஷ சௌக்கியமும், விவாகமும் உண்டாகும்.

(10) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி ஐந்தாம் பாவாதிபதி புதனுடன் கூடியிருக்க ஒன்பதாம் பாவத்தைக் குரு பார்த்தால் ஜாதகனுக்கு இரு மனைவியரிடத்தில் நல்ல புத்திரனுண்டாவார்கள். ஐந்தாம் பாவாதிபதி தசை மிக்க சுபமாகும், ஜாதகன் நீண்ட ஆயுளு

டைய இரண்டு புத்திரனுடையவன், இரண்டு புத்திரியுமுடையவன், மூன்று புத்திரர்களும் மூன்று புத்திரியும் உண்டு என்று வேறுசிலர் சொல்லுகிறார்கள். மிதுன ராசியின் திரிகோணங்களில் குரு கோச்சாரத்தில் சஞ்சரிக்கும் காலேயில் அல்லது ஜென்ம காலத்தில் குருவின் பார்வையடைந்த ராசியின் திரிகோணங்களிலாவது குரு வரும் சமயம் ஜாதகனுக்கு புத்திர உற்பத்தியுண்டாகும்.

(11) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி புத்திர காரகனை குரு மிதுன ராசியிலிருக்கத் தன் அம்சத்தில் இருக்கப்பட்ட செவ்வாயால் குரு பார்க்கப்பட்டால் ஜாதகனுக்குச் சில குழைந்தைகள் மரித்து விடும். அதற்காக சுப்பிரமணிய விரதம் செய்யவேண்டும். ஐந்தாம் பாவாதிபன் திசையில் தன வரவும், நல்ல யோகமும் உண்டாகும். தகப்பனுக்கு நேர்ந்த நல்ல யோகமுண்டாகும். சகோதர வர்க்கத்தில் சுப முண்டாகும்.

நாடி அம்சம்—சம்பகாம்சம்:—

(12) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி மூன்றும் பாவாதிபதி புதன், செவ்வாயுடன் கூடியிருந்தாலும் செவ்வாயால் பார்க்கப் பட்டாலும் ஜாதகனுக்குப் பின் சகோதரன் நாசமடைவான்.

நாடி யம்சம்—அம்புஜாம்சம்:—

(13) ஜென்ம லக்கினம் மேஷம் அம்புஜாம்சம் பூர்வ பாகமாகி நான்காம் பாவாதிபதி தன் உச்ச ராசியிலிருக்க லக்கின பாவாதிபதி சுய க்ஷேத்திரத்திலிருந்தால் ஜாதகனுக்கு நதிப்பிராந்தியத்தில் அக்கிரகாரத்திலும் உத்தராம்சத்தில் நகரத்திலும் ஜனனம் நேரிடும்.

(14) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி சந்திரன் தன் உச்சத்திலாவது சுவ க்ஷேத்திரத்திலாவது இருந்து நான்காம் பாவத்தில் சுபக்கிரகமிருக்க பாபக் கிரகங்களால் சந்திரன் பார்க்கப்படாமலிருந்தால் ஜாதகன் வெகு சீக்கிரமாக தாய்க்கு வேதனையில்லாமல் பிறப்பான்.

(15) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி லக்கின பாவத்திற்கு நான்காமிடத்தில் சனி பாபக்கிரகத்துடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தாய் ஜாதகனுடைய பிரசவ காலத்தில் அதிக வேதனையடைவாள். நான்காம் பாவம் சுபக் கிரகத்துடன் கூடியிருந்தாலும், சுப கிரகங்களால் பார்க்கப்பட்டாலும் ஜாதகனுடைய தாய் அற்ப வேதனையடைவாள்.

(16) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி லக்கினத்திற்கு இரண்டாம் பாவத்தில் சந்திரனும் லக்கினாதிபதி லக்கினத்திலுமிருந்தால் ஜாதகனுக்குத் தேக சௌக்யம் உண்டாகும்.

(17) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி பத்தாம் பாவாதிபதியும் லக்கின பாவாதிபதியும் பலத்துடனிருந்து சுபாம்சத்திலுமிருந்தால் ஜாதகன் பூர்ணயுளுடனும் தனத்துடனும் இருப்பான்.

(18) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி அதாவது லக்கினம் சர லக்கினம் ஆகி சந்திரன் ஸ்திர ராசியிலுமிருந்தால் ஜாதகன் எழுபத்திரண்டு வயதுவரை ஜீவித்திருப்பான்.

(19) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி சூரியன் கேந்திரத்திலிருக்க ஒன்பதாம் பாவாதிபதி கேந்திர கோணத்தில் இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் பிரசித்தியுடையவன், தன் தகப்பன் சகோதரனில்லாதவன், விஷ்ணு பக்தி மதத்தை அடைந்தவன், கர்ப்பத்திலிருந்தே சீமான், தகப்பன் போகி, கல்வி சுக செளக்யமுடையவன், மத்திய வயதில் பாக்கியமுடையவன், அரசனுக்குப் பிரியமானதைச் செய்பவன், தனமுடையவன், அரசாங்கத்தில் பிரசித்தியுடையவன், க்ஷேத்திர மூலம் நல்ல பாக்கிய முடையவன் ஒன்பதாம் பாவாதி தன் உச்சாம்சத்தில் உச்ச ராசியில் இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் பிதுருபாக்யமுடையவன், வேத சாஸ்திரார்த்த தத்துவமறிந்தவன், லோப சுபாவமுடையவன், சாந்தமுடையவன், இரண்டு தாரமுடையவன், போகி, வயோதிக வயதில் சுகமுடையவனுவான்.

நாடி அம்சம்—திரைலோக்கியாம்சம்:—

(20) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி லக்கின பாவாதிபதி தன் உச்சாம்சத்திலும் எழாம் பவாதிபதி நான்காம் பாவத்திலுமிருக்க ஜனித்த ஜாதகனுக்கு மகாநதிப் பிராந்திய தீரத்தில் ஜனனமும் வாசமும் நேரிடும் என்று எண்ணப்படுகிறது. பிரசவ காலத்தில் ஜாதகனுடைய தாய்க்கு அற்பவேதனையுண்டாகும், பூர்வகாலத்தில் ஜனித்தவனுடைய தாய்க்கு அதிகமான பிரசவ வேதனையுண்டாகும். உத்தராம்சத்தில் பிறந்தவனுடைய தாய்க்குச் சுக முண்டாகும், சந்திரன் ராகுவுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தாய்க்குத் தோஷமுண்டாகும், சந்திரனைக் குரு பார்த்தால் தாய்க்கும் குழந்தைக்கும் சுகமுண்டாகும்.

(21) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி லக்கினத்திற்கு ஐந்தாம் பாவத்தில் சனி ஆறும்பாவாதியுடன் கூடியிருக்கும்போது சந்திரன் ராகுவுடன் கூடியிருந்தால் ஜாதகன் பால ரோகத்தால் பீடிக்கப் படுவான், ஜன்ம தசையில் இரண்டாம் வருஷத்தில் அல்லது மூன்றுவது வயதில் மாந்த ஜுர பயத்தால் மிகவும் பீடிக்கப்படுவான்.

(22) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி லக்கின பாவத்திற்கு ஐந்தில் சனி ஆறும் பாவாதிபதியுடன் கூடியிருக்க குருவானவர் ராகு

கேது இவர்களுடன் கூடியிருந்தால் ஜாதகனுக்கு கொஞ்சம் காலந் தப்பிப் புத்திரப்ராப்தி உண்டாகும், மூத்தப் பிள்ளை மரணமடைவான். அதனால் புத்திரக் கிலேசமுண்டாகும். ஜாதகனுக்கு இருபத்தைந்து அல்லது இருபத்தாறுவது வயதில் புத்திர உற்பத்தி உண்டாகும். மூன்று பிள்ளைகளும் இரண்டு பெண்களும் ஆயுளுள்ளவர்களாயிருப்பர் அதிகம் பிறந்தாலும் மரித்து விடும்.

நாடி அம்சம்—அபலாம்சம்:—

(23) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகிப் பிரபாம்சத்தில் ஸ்திர ராசியில் சூரியனிருந்து சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகனுடைய தகப்பன் கண்ணுக்குத் தெரியாதபடி வெளி தேசத்தில் சஞ்சாரம் செய்துகொண்டிருக்கும்போது ஜாதகனுக்கு ஜனனம் நேரிடும். தாய் பாட்டன் வீட்டில் ஜாதகனுடைய பிறப்பும், வாசமும் எண்ணப்படுகிறது. ஜாதகன் ஜனித்த காலத்தில் ஜாதகனுடைய தகப்பன் வெளி தேசத்தில் வாசம் செய்துகொண்டிருப்பான்.

(24) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி சிம்மகவாம்சத்தில் பிறந்தவனுக்கு ஸ்திர ராசியில் சூரியனிருந்து ராகுவுடன் கூடியிருக்கும் செவ்வாயால் பார்க்கப்பட்டால் காடு முதலிய மலைப்பிராந்தியத்தில் பட்டிணத்தில் ஜாதகனுடைய ஜனனம் சம்பவிக்கும், தான் நான்காவது கர்ப்பத்தில் அல்லது ஐந்தாவது கர்ப்பத்தில் ஜனனமானவன், அநேக சகோதரிகளுடையவன், மூத்த சகோதரனில்லாதவன், மேஷ லக்கினத்தில் சிம்மாம்சத்தில் பிறந்தவன் எப்பொழுதும் சுகமுடையவன். (பிராமணனாக ஜென்மித்தவன்) நான்காவது கர்பத்தில் பிறந்தவன்.

நாடி அம்சம்—ஜகதியம்சம்:—

(25) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி சந்திரன் கேந்திர திரிகோணங்களிலிருக்க லக்கின பாவாதிபதியுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தாய் வெகு காலம் வரையில் ஜீவித்திருப்பாள், சகோதரருடன் கூடியவள், தர்மசீலமுடையவள், நல்ல வம்சத்தில் பிறந்தவள், முன் ஜென்மத்தின் பாபதோஷத்தால் வைதவியத்தால் கொஞ்சம் துக்கமடைவாள், ஜாதகனுடைய ஐந்தாம் திசையில் அல்லது ஐந்தாம் தெசையாக ராகு தெசை வந்தால் அந்த ராகு தசையில் ஜாதகனுடைய தாய் மரிப்பாள்.

நாடி அம்சம்—நிர்மலாம்சம்:—

(26) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி ஒன்பதாம் பாவத்தில் கேதுவும், மேஷாம்சத்தில் குருவும், லக்கின பாவத்திற்கு ஏழில் சனியும் இருந்தால் ஜாதகனுடைய புருஷக் குழந்தைகள் நாசத்தை அடை

யும் அந்த தோஷத்திற்காக நாகசாந்திசெய்து சொர்ணகேதுப் பிரதிமையை அர்ச்சித்து ஜோதிஷனுக்குத் தானம் செய்தால் நல்ல புத்திரனுண்டாவான்.

நாடி அம்சம்—ஸ்நிக்தாம்சம்:—

(27) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி செவ்வாய் பதினோராம்பாவத்தில் மூன்றாம் பாவாதிபதியுடன் கூடியிருந்தால் ஜாதகன் பின் சகோதரனில்லாதவன், ஜாதகனுடைய மூத்தசகோதரன் நல்ல யோகமுடையவன், புத்திர புத்திரிகளுடன் சுகத்துடன் கூடியவன், ஜாதகன் இரண்டுசகோதரிகளுடையவன், ஒருசகோதரி தீர்க்காயுளுடையவள்.

(28) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி மிதுனம்சத்தில் சனி பத்தாம் பாவத்தில் இருக்க செவ்வாய் கேதுவுடன் கூடி பதினோராம் பாவத்திலிருந்தால் ஜாதகனுடைய மூத்த சகோதரன் அதிக சம்பத்துடையவன், அரசாங்கத்தில் பிரசித்தியுடையவன்.

நாடி அம்சம்—சம்பகாம்சம்:—

(29) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகிப் பூர்வ பாகத்தில் குரு தன் உச்ச நவாம்சத்தில் உச்ச ராசியில் சுக்கிரனுடன் கூடியிருக்க குரு திரிம்சாம்சத்தில் பிறந்தால் கிழக்கு மேற்கு வீதியில் வடக்குப் பக்கத்திலுள்ள வீட்டில் ஜாதகனுக்கு ஜனனம் நேரிடும், ஜாதகன் சிவப்பு நிறமுடையவன், நல்ல ஆகிருதி உடையவன், மத்திய சம தேகமுடையவன், நல்ல ரூபடையவன், அறிவாளி, வாசாலகன், அழகிய முகமும் கண்களுமுடையவன், அதிருஷ்டசாலி, மேதாவி ராஜயோகமுடையவன், யதீச்வரப் பிரியன், தேவ பிராமணர்களைரக்ஷிப்பவன், அளவாய்ப் புசிப்பவன், அளவாய்ப் பேசுபவன், காமீ, கொஞ்சமான லீலையுடையவன், அதிக ஜாக்கிரதை யுடையவன், மேலான இங்கிதமறிந்தவன், நாலும் தெரிந்தவன், பல பாஷைகளுமறிபவன்.

(30) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி நாடி அம்சம் பூர்வ பாகமாகி பதினோராம்பாவாதிபதி, ஒன்பதாம் பாவத்திலிருக்க இரண்டாம் திசையில் பிராம்மண ஜன்ம ஜாதகனுக்குப் (உபநயனமும்) பத்தாம் பாவாதிபதி நவாம்சத்தில் இருக்கப்பட்ட ராசியின் திரிகோணத்தில் குரு கோச்சாரத்தில் வரும் சமயம் ஜாதகனுடைய ஜன்ம பூமிக்குத் தெற்கில் அல்லது தென்கிழக்கில் ஜாதகனுக்கு விவாகமும் நடக்கும்.

(31) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகிப் புத்திர பாவாதிபதி சூரியன் செவ்வாயுடன் கூடியிருந்தாலும், செவ்வாயால் சூரியன் பார்க்கப்பட்டிருந்தாலும் ஜாதகன் புத்திர புத்திரிசமிருத்தியுடையவன், ஆயுளுள்ள மூன்று புருஷப் பிள்ளைகளும், இரண்டு புத்திரிகளும் சுகஜீவிகளாக உடையவன்.

(32) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி புத்திர ஸ்தானத்துக்கு ஆரூடாதிபதியாகிய சனி இரட்டைப்பட்ட அம்சமாகிய யுக்மாம்சத்திலிருக்கப்பட்ட செவ்வாயால் பார்க்கப்பட்டு லக்கினத்திற்கு ஆறும் பாவாதிபதியும் செவ்வாயால் நன்கு பார்க்கப்பட்டால் ஜாதகனுக்கு இரட்டைப் பிள்ளைகள் பிறக்கும். சூரியன் ரிஷப விருச்சிக ராசிகளில் இருந்தால் சனி புத்திராரூடாதிபதி ஆவார்.

(33) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி சூரியனும், புதனும் கூடி பத்தாம் பாவத்திலிருந்து செவ்வாயுடன் கூடியிருந்தாலும் அல்லது நான்காம்பாவத்தில் இருக்கப்பட்ட செவ்வாயால் பார்க்கப்பட்டாலும் எப்பொழுதும் சரீரம் கருப்பாகவே யிருப்பவன், சதா போகியாயிருப்பவன், பத்தாம் பாவம் குருவால் பார்க்கப்பட்டால் மூன்றும் தார திசையில் பிற்பாதியில் கொஞ்சம் சுகமும், யௌவன காலத்தில் வெகு பாக்கியமுமுடையவன், நாற்பது வயதுக்குமேல் சுகமுடையவன், க்ஷேமதார திசையில் யோகம் பங்கமாகி கிலேசமுண்டாகும். அதற்குறிய விதிப்படி சாந்தி செய்தால் சுகமுண்டாகும்.

நாடி அம்சம்—குந்தாம்சம்:—

(34) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி லக்கின பாவாதிபதி செவ்வாய் லக்கினம் தவிர்த்த மற்ற கேந்திர திரிகோணங்களிலிருக்க லக்கினத்திற்கு ஐந்தாமிடத்தில் குரு இருந்தால் கிழக்கு மேற்கு வீதியில் தெற்குப் பக்கத்திலுள்ள வீட்டில் ஜாதகன் புண்ணிய க்ஷேத்திரத்தில் பிறந்தவன்.

நாடி-அம்சம்—பங்கஜாம்சம்:—

(35) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி ஏழாம்பாவாதிபதி மீனராசியில் காதாம்சத்தில் இருக்க இரண்டாம் பாவத்தில் செவ்வாய் இருந்தால் ஜாதகனுடைய மூத்த மனைவி புத்திரனில்லாதவள், ஜாதகன் வேறுமனைவியால் விசாரமுடையவன், ஜாதகனுக்கு இரண்டாம் தாராதிபன் திசையில் கல்வி பயிலும் சௌக்கியமும், தகப்பனுக்குச் சுகமும், மனைவி சௌக்கியமும், புத்திரவிருத்தியும், திசை முடிவில் மனைவி நாசமும் உண்டாகும்.

(36) ஜென்ம லக்கினம் மேஷம் (மங்களாம்சம்) ஆகி லக்கின பாவத்திற்கு ஏழாமிடத்தில் குரு இருந்து சுக்கிரனுடன் கூடியிருந்தாலும், சுக்கிரனால் குரு பார்க்கப்பட்டாலும் ஜாதகன் சீமந்த புத்திரனுவான், அல்லது இரண்டாவது கர்ப்பத்திலாவது ஜனித்தவனுவான், சகோதரர்களுடன் கூடியவன்.

(37) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி பாக்யாம்சத்தில் தன் உச்சத்தில் குரு இருந்து புத திரிம்சாம்சத்தில் ஜனித்தவன் ரூபமுள்ள

வன், அறிவாளி, வாசாலகன், அழகிய முகமும் கண்களும் பொருந்தியவன், அதிர்ஷ்டசாலி, தீரன், சகோதரர்களுடன் கூடியவன், பாலியத்தில் சௌக்கியமும் சுபமுமடைபவன், தகப்பனால் சுகமடைபவன், வெளுப்பு நிறமுடையவன், சமதேகமுடையவன், நல்ல ரூபமுடையவன், ஸங்கீதப்பிரியன், காமி, எப்பொழுதும் ஸ்திரீ லோலனாயிருப்பவன், இருபத்தைந்து வயதுக்குமேல் சுகமும் பாக்கியமும் உடையவன், சுயப்பிரபலமடைவான், அரசாங்கத்தில் பிரசித்தன், அரசாங்க ஜனநேசமுடையவன், வியாபாரத்தில் தன விருத்தியுடையவன், க்ஷேத்திர லாபமுடையவன், விசேஷ சுகமுடையவன், இருபத்தேழு வயதுக்குமேல் சுகத்தையடைவான், முப்பது வயதுக்குமேல் விஷேச சுகமுடையவன், நாற்பது வயதுக்குமேல் பாக்கியமுடையவன், பிரபல உத்தியோக ஜீவனமுடையவன், வயோதிக வயதில் விசேஷ யோகமுடையவன், ஆயுளுள்ளவரை நல்ல பாக்கியவானாயிருப்பவன்.

நாடி அம்சம்—பங்கஜாம்சம்:—

(38) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி ஒன்பதாம் பாவாதிபதி எட்டாம் பாவத்தில் இருந்து சந்திரன் (விப்ரகாலத்தில்) இருந்தால் ஜாதகன் பிராமணனாய்ப் பிறப்பான், தான் ஸீமந்த புத்திரன், அல்லது இரண்டாவது கெற்பத்தில் ஜனித்தவன், ஜாதகனுக்கு மூத்த சகோதரப் பிறப்பு இருந்தாலும் அவன் கெர்ப்பத்திலே ஏழு அல்லது எட்டாவது மாதத்தில் பிறந்து மரணமடைந்து விடுவான், ஜாதகனுடைய இளைய சகோதரிகள் இருவர் சுகியாய் இருப்பார்கள், ஜாதகன் இளைய சகோதரன் இல்லாதவன்.

(39) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி நாடி அம்ச பூர்வ பாகமாகி லக்கினாதிபதி கேந்திரத்திலிருந்து நான்காம் பாவாதிபதி நான்காம் பாவத்திலேயே இருந்தால் ஜாதகனுக்கு பெரிய ஆற்றுப் பிராந்தியத்தில் புண்ணிய க்ஷேத்திரத்தில் சிவாலயத்துடன் கூடிய இடத்தில் தாய் வீட்டில் ஜனனமும், உத்திர பாகத்தில் பிறந்தவனுக்கு தகப்பன் வீட்டில் ஜனனமும் நேரிடும்.

(40) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி ஒன்பதாம் பாவாதி எட்டாம் பாவத்திலிருந்து சூரியன் தன் உச்ச ராசியிலிருந்து ஒன்பதாம் பாவாதிபதி நவாம்சத்தில் தன் வீட்டிலேயேயிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் சௌக்கியமுடையவன், கறுப்பு நிறமுள்ளவன், மெல்லிய சரீரமுடையவன், சூட்டுத்தேகி, பித்தவாயு சுபாவமுடையவன், தித்திப்பில் பிரியன், சந்தன புஷ்ப அலங்காரப் பிரியன், சங்கீதப் பிரியன், காமி, பரஸ்திரீ சங்கமம் செய்பவன், சூத்திர ஸ்திரீ பற்பல ஸ்திரீ சங்கமமும் செய்வான், அதனால் தேக பீடை கொஞ்சம் அடைவான், பிறகு சுகமடைவான், கல்வி அறிவுடைய விவேகி, ஒரே பாஷை தெரிந்தவன், விசேஷ புத்தியுடையவன், யுக்தா யுக்தமறிந்த

வன், நியாயாநியாயம் தெரிந்தவன், தேவ பிராமண பக்தி, சிவபக்தி, விஷ்ணு பக்தி முதலியன உடையவன், ஜாதகனுடைய தகப்பன் தன் தகப்பனால் சம்பாதிக்கப்பட்ட ஆஸ்தி லாபமுடையவன், கொஞ்சம் சூத்திர புரோஹிதம் செய்பவன், அன்னிய தென் தேசத்தில் பந்துக்களின் மூலமாக மேற்படி புரோஹிதம் செய்வான், அவ்விடத்திலேயே வேறு தேசத்தில் தன் சகோதரி இருக்கும் கிராமத்தில் வசிப்பான், ஆயுள் வரையில் மேற்படி புரோஹித மூலமாகவே சுகமடைவான், அவ்விடத்திலேயே பூமி, வீடு முதலிய லாபமடைவான், ஜாதகனுடைய தகப்பன் இரண்டு மனைவியருடையவன், மூத்தவளுக்கு ஜாதகன் பிறந்தவன், ஜாதகனுடைய தாய் நான்கு அல்லது ஐந்து மாத ஐந்தாவது கர்ப்பத்துடன் ஜாதகனுடைய பத்தாவது வயதிலேயே விஷ பேதியால் மரித்துவிடுவாள், ஜாதகனுடைய தாய்க்கு ஒரு சகோதரனும் ஒரு சகோதரியும் உண்டு, சகோதரன் புத்திரீ புத்திர விருத்தியுள்ளவன், தாய்குணவதி, கணவனிடம் பக்தியுடையவள், சகோதரி பாலியத்திலேயே இறந்து விடுவாள், பிறகு ஜாதகனுடைய தகப்பன் இரண்டாவது வேறு ஒரு ஸ்திரீயை மணப்பான், இதற்கு முன்பே ஜாதகனுடைய தகப்பனுக்கு இரண்டு இடங்களில் விவாகத்திற்கு யத்தினமும் தடங்கலும் உண்டாகும், ஜாதகனுடைய தாய் மரித்த மூன்றல்லது நான்காம் வருஷத்தில் ஜாதகனுடைய தகப்பனுக்கு விவாகயெத்தினமும், சகோதரிக்குவிவாகமும், ஜாதகனுடைய தகப்பனுக்குஜாதகனுடைய பதிமூன்றுவது வயதில் விவாகமும், ஜாதகனுக்குப் பதினொன்காவது வயதில் ஜாதகனுக்கு விவாகமும் நடக்கும், ஜாதகனுடைய தகப்பனுக்கு ஒரு சகோதரனும் ஒரு சகோதரியும் உண்டு, அச்சகோதரன் மட்டும் பாலியத்தில் மறித்துவிடுவான், சகோதரியிடம் ஜாதகனுடைய தகப்பன் முன் சொன்னபடி வசிப்பான், அந்த சகோதரிக்குப் புத்திரி புத்திரர் ஒன்பதுபேர் உண்டாவார்கள், ஜாதகனுடைய தகப்பன் ஜாதகனுடைய க்ஷேம தெசையில் மரித்துவிடுவான்.

நாடி அம்சம்—குஸுமாம்சம்:—

(41) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி ஒன்பதாம் பாவாதிபதி துலாராசியில் வர்க்கோத்தமாம்சத்திலிருந்து நான்காவது காலத்தில் சந்திரனிருந்தால் ஜாதகன் சிவபக்த குலத்தில் ஜனிப்பான். தான் இரண்டாவது கர்ப்பத்தில் ஜனிப்பான். ஜாதகனுக்கு மூத்த சகோதரன் ஒருவன் பாலியத்திலேயே அற்பாயுளில் மரித்துவிடுவான், ஜாதகனுக்கு ஒரு இளைய சகோதரனும், இரண்டு இளைய சகோதரிகளும் உண்டு, ஜாதகனுடைய இளைய சகோதரன் புத்திரி புத்திர வம்ச விருத்தி உடையவன், இளைய சகோதரிகளில் ஒருவள் பாலியத்திலேயே இறந்து விடுவாள், மற்றொருத்தி புத்திரி புத்திர வம்ச விருத்தி உடையவள். ஜாதகனுக்கு மாற்றுத்தாய் பிள்ளை இரண்டு மூத்த சகோ

தார் உண்டு. அவர்களில் ஒருவன் பாலியத்தில் மரித்துவிடுவான், ஒருவன் சுகியாய் புத்திரி புத்திரருடன் கூடியிருப்பான்.

(42) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி நாடி அம்சம் பூர்வ பாகமாகி லக்கின பாவாதி பதினோராம் பாவத்திலும், நான்காம்பாவாதிபதி லக்கினத்திற்கு இரண்டாம் பாவத்திலுமிருந்தால் ஜாதகனுக்கு காட்டுப்பிராந்தியத்தில் பெரிய கிராமத்தில் சிவாலய, விஷ்ணு ஆலயங்களுடைய க்ஷேத்திரத்தில் தகப்பன் வீட்டில் ஜனனம் நேரிடும், உத்தர பாகத்தில் பிறந்தவனுக்கு தாய் வீட்டில் ஜனனம் நேரிடும்.

(43) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி ஒன்பதாமாதிபதி ஏழாவது கேந்திரத்திலிருந்து சூரியன் பதினோராம் பாவத்தில் இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் சௌக்கியமுடையவன், கல்வி அறிவுடையவன், ஒரே பாஷை தெரிந்தவன், யோகவான், கீர்த்தியுடையவன், வாதம் நிறைந்த தேகி, பித்த சுபாவமுடையவன், குண முள்ளவன், தித்திப்பு, புளிப்பு, இதில் பிரியன், ஸங்கீதப் பிரியன், காமி, பரஸ்திரீ கமனம் செய்ய எண்ணமுடையவன், தன் மனைவியிடம், சுகமுடையவன். யுக்தாயுக்த நியாயாநியாய விவேகி, சேர்க்கவும் கலைக்கவும், சாமர்த்தியமுடையவன், அயலாரின் இரகசியங்களை வெளிபடுத்துபவன், தன் இரகசியங்களை விடாதவன், தியாகி, போகி, சந்தோஷி, அரசாங்கத்தில் பிரசித்தியுடையவன், அரசன் மற்ற அன்னிய ஜனங்களின் நேசமுடையவன், விவகாரத்தில் சமர்த்தன், சுயகிராமத்தில் பிரசித்தியுடன் பற்பல கிராமங்களிலும் பிரசித்தியுள்ளவன், தன் இனத்தாரில் பிரசித்தமுடையவன், பிதுரார்ஜிதம், சுயார்ஜிதம் முதலான வீடு, க்ஷேத்திரம் முதலிய உடையவன், தன விருத்தியும், வியாபாரப் பெருக்கு முடையவன். நூல் வியாபாரம் செய்பவன், ஐந்து விதமான நூல் வியாபாரம், வஸ்திர வியாபாரம், கிரயவிக்ரயம் செய்தல், வெளிதேச வியாபாரத்தால் தனவிர்த்தி, யோக விருத்தி உடையவன். ஜாதகனுடைய தகப்பன் இருதாரமுடையவன், மூத்த மனைவி இரண்டு பிள்ளைகளை பெறுவாள், அவர்களில் மூத்தவன் இறந்து விடுவான், மற்ற ஒருவன் பிறக்கும்போது (சூதிகா கிருகத்தில்) பிரசவ அறையிலேயே தாய் சுமங்கலியாக மரித்து விடுவாள், ஜாதகன் வேறு ஸ்திரீயிடம் ஸ்தன்னியாபனம் செய்து வளர்வான், ஜாதகனுடைய தகப்பன் அவ்வருஷம் அல்லது மறுவருஷம் இரண்டாம் விவாகம் அடைவான், ஜாதகன் தன் தகப்பனுடைய இரண்டாம் மனைவிக்குப் பிறந்தவன் ஆவான்.

(44) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி நான்காம் பாவாதிபதி இரண்டாம் பாவத்திலிருந்து சந்திரனும் இரண்டாம் பாவத்தில் இருந்தால் ஜாதகனுடைய தாய் சுகமுடையவள், புத்ரீ புத்திரர்களைப் பெறுபவள், உடன்பிறந்த சகோதர சகோதரி உடையவள், அவர்க

ளில் ஒரு சகோதரன் புத்திரீ புத்திரவமிச விருத்தி உடையவன் மற்ற ஒரு சகோதரன் மத்திய வயதில் மரித்துவிடுவான், ஜாதகனுடைய தாயின் சகோதரிகள் பாலியத்திலேயே அல்லது அல்பத்தில் யௌவனத்தில் மத்தியவயதில் மரித்து விடுவார்கள், ஜாதகனுடைய தாய் ஜாதகனுடைய ஐந்தாம் தெசையில் நாற்பத்திரண்டு அல்லது நாற்பத்துமூன்றும் வயதில் சுமங்கலியாகவே மரிப்பாள்.

நாடி அம்சம்—பங்கஜாம்சம்:—

(45) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி சிம்ம ராசியில் செவ்வாய் வர்க்கோத்தமாம்சத்திலிருந்து, சந்திரன் விப்பிரகாலத்தில் இருந்தால் ஜாதகன் அந்தணனாகப் பிறப்பான், சுகியாயிருப்பான், சீமந்த புத்திரன் அல்லது இரண்டாவது கர்ப்பத்தில் ஜனித்தவன், மூத்த இளைய சகோதரனில்லாதவன், ஜாதகன் ஒண்டியானவன்.

(46) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி லக்கினபாவாதி ஐந்திலும், நான்காம் பாவாதிபதி நீச ராசியிலுமிருந்தால் ஜாதகனுக்குப் பெரிய ஆற்றுப் பிரதேசத்தில் புண்ணிய க்ஷேத்திரத்தில் சிவவாலயத்துடன் கூடிய இடத்தில் கிழக்கு மேற்கு வீதியில் தெற்கு வாடையில் தாய் வீட்டில் ஜனனம் நேரிடும், உத்தராம்சத்தில் வடக்கு தெற்கு வீதியில் மேற்கு வாடையில் தகப்பன் வீட்டில் ஜாதகனுக்கு ஜனனம் நேரிடும்.

(47) ஜென்ம லக்கினம் மேஷம்ஆகி ஒன்பதாம் பாவாதிபதி பத்தாம் பாவத்தில் தன் உச்சாம்சத்தில் நீசராசியிலிருந்து சூரியன் லக்கினத்தில் தன்னுச்ச ராசியிலும் நவாம்சத்தில் கடக ராசியிலுமிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் தீர்க்காயுசுடையவன். கல்வி அறிவுடையவிவேகி, கொடையாளி, உண்மையே பேசுபவன், ரூபலக்ஷணமுடையவன். தேவ பிராமண பக்தி, குருபக்தி முதலிய விசேஷமாயுடையவன், வாத சிலேஷ்ம சுபாவமுடையவன், தித்திப்பு, புளிப்பு முதலியவற்றில் பிரிய முடையவன், கந்த, புஷ்ப பிரியன், ஸங்கித பிரியன், கொஞ்சம் அன்னிய ஸ்திரீ சித்தமுடையவன், கொஞ்சம் திருட்டு விபசாரஸ்திரீ சேர்க்கையுடையவன், கல்வி மூலம் சுகி, ஜோதிட சாஸ்திர மூலம் சூத்திர ஆகம சிரார்த்தம் (திதி) மூலம் ஜீவனமும், சூத்திர பிரபு மூலம் சுகமும் அடைவான். சூத்திரர்களின் சத்திரத்தில் வாசம் செய்பவன். தன் இன தாயாதி சகோதரனேயும் அவன் குடும்பத்தையும் ஜாதகனுடைய தகப்பன் காப்பாற்றுவான்.

(48) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி ஏழாம்பாவத்தில் சனி தன் உச்சத்திலிருந்து, சுக்கிரன் சுயக்ஷேத்திரத்தில் ராகு கேதுவுடன் கூடியிருந்து, குருவால் சுக்கிரன் பார்க்கப்பட்டால் ஜாதகன் ஒரே தார முடையவன், ~~[illegible]~~ ஜாதகன் தான் பிறந்த

ஊருக்கு வடக்குப் பாகத்தில் அல்லது வாயு திக்கில் வெளிதேசத்தில் வனப்பிராந்தியத்தில் மனைவியை அடைவான், ஜாதகனுடைய ஷ மனைவி, தன் தாயாதியின் சகோதரியின் புத்திரியே, ஜாதகனுக்கு விவாஹம் பலவந்தமாக நடக்கும், ஜாதகனுடைய மனைவி ரூப லக்ஷண முடையவள், கணவனிடம் உள்ளன்புடையவள், தன் கணவனு டைய மனம்போல் அனுசரணையாய் நடப்பவள், வமிச விருத்தி யுடையவள்.

(49) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி ஏழாம் பாவத்தில் சனி யிருந்து சுக்கிரன் கேதுவுடன் கூடியிருந்து ராகுவால் பார்க்கப்பட் டும், புத்திர காரகனை குரு தன் உச்சாம்சத்திலிருந்து சனியாலும் பார்க்கப்பட்டிருந்தால் ஜாதகனுடைய மனைவிக்கு ஜாதகனுடைய இருபத்திரண்டாவது வயதில் புருஷ சுகமும், இருபத்தி நான்காவது வயதிலும் சுகமும், இருபத்தைந்து அல்லது இருபத்தாறுவது வய தில் புத்திர உற்பத்தியும், பிரசவத்திற்குப் பிறகு ஜாதகனுடைய மனைவிக்கு தேகபீடையும், வாயுபீடையும், சூதிகாகிரக தோஷத்தால் பயமும், பிறகு சங்காதோஷம் முதலிய பயமும் உண்டாகும், அத னால் ஜாதகனுடைய மனைவிக்கு ஐந்தல்லது ஏழுகர்ப்பம்வரை நஷ்ட மும் உண்டாகும்.

(50) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி ஐந்தாம் பாவத்தில் செவ் வாய் இருந்தால் ஜாதகனுடைய மனைவிக்கு ஐந்து அல்லது ஏழு தடவைகளில் கர்ப்ப நஷ்டமுண்டாகும்.

(51) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி நான்காம் பாவாதிபதி எட்டாம் பாவத்தில் இருந்து ராகுவுடன் கூடியிருந்து செவ்வாயினால் பார்க்கப்பட்டிருந்தால் ஜாதகனுடைய தாய் சாத்துவீகமுடையவள், சுத்தமானவள், கணவனிடம் பக்திகொண்டவள், வமிசவிருத்தி யுடையவள், புண்ணியவதி, ஒரே புத்திரனைப் பிரசவித்து, பிரசவித்த மூன்றும் நாளில் சூதிகா கிரகத்திலேயே சுமங்கிலியாய் மரித்து விடு வாள். ஜாதகன் மாற்றுந்தாயுடையவன், பிறகு கொஞ்ச காலத்துக் குப் பிறகு ஜாதகனுடைய மாற்றுந்தாயும் சுமங்கலியாகவே மரித்து விடுவாள், ஜாதகன் வேறு ஸ்திரீயிடம் ஸ்தன்னியாபானம் செய் வான்.

நாடி அம்சம்—குமராம்சம்:—

(52) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி நான்காம் பாவாதிபதி யாகிய சந்திரன் நீச்சனாகியிருந்து விப்பிர காலத்திலிருந்தால் ஜாதகன் பிராமணனாய்ப் பிறப்பான், ஜாதகன் தான் ஸீமந்த புத்திரன்.

(53) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி பூர்வ பாகத்தில் லக்கின பாவாதிபதி ஐந்திலும் நான்காம் பாவாதிபதி நீச ராசியிலு மிருந்தால் ஜாதகனுக்கு பெரிய நதிப் பிராந்தியத்தில் புண்ணிய க்ஷேத்திரத்தில் சிவாலயத்துடன் கூடிய இடத்தில் கிழக்கு மேற்கு வீதியில் வடக்கு சாகத்தில் ஜனனம் நேரிடும். உத்தராம்சத்தில் நதி பிராந்தியத்தில் சிறிய கிருமத்தில் ஒன்று அல்லது இரண்டு வீடு களுடைய இடத்தில் தர்ம கிரகத்தில் ஜனனம் நேரிடும்.

(54) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி நான்காம் பாவாதிபதி நீச்சனுகி ராகுவுடன் கூடியிருந்து, செவ்வாயினுல் சந்திரன் பார்க்கப் பட்டால் ஜாதகன் பிறந்த மூன்று அல்லது நான்கு தினங்களில் ஜாதகனுடைய தாய் மரித்து விடுவாள், பிறகு ஜாதகன் தாய் வீட்டு வாசம் விட்டுவிட்டு ஏழு அல்லது எட்டு நாள் வரையில் தகப்பன் வசிக்கும் வீட்டில் வசிப்பான், பிறகு வேறு சூத்திர ஸ்திரீயிடம் ஜாதகன் ஸ்தன்னியபானம் செய்வான், ஜாதகன் தகப்பன் வழிப் பாட்டி தகப்பனுடைய சகோதரி முதலியோர்களால் காப்பாற்றப் படுவான், ஜாதகனுடைய தாய்க்கு இருவர் சகோதரிகள் என்று சில ரும், வேறு சிலர் நான்கு சகோதரிகள் என்றும் எண்ணுகிருர்கள். தாய்வர்க்கத்தில் ஆபரண தன விஷயமாக முதலில் மனஸ்தாபமுற்று பிறகு சகஜமாகி தாயின் சகோதரி ஜாதகன் வீட்டில் வாசம் செய்து ஜாதகனை வளர்த்து வருவாள், ஜாதகன் தாய் பாட்டி இறந்த பின்பு அந்த பாட்டியின் ஆஸ்திகளை ஜாதகன் அடைவான்.

(55) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி எட்டாம் பாவத்தில் சந் திரனிருந்து ராகுவுடன் கூடியிருந்தால் ஜாதகனுக்கு மூலவாயுரோக மும், ரத்தமூலம் முதலிய ரோகமும், அதனுல் படிப்படியாக தேக பயமும், பிறகு சுகமும் உண்டாகும்.

நாடி அம்சம்—கமலாம்சம்:—

(56) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி ஒன்பதாம் பாவாதிபதி லக்கினகேந்திரத்திலிருந்து நான்காவது காலத்தில் சந்திரனிருந்தால் ஜாதகன் சிவபக்தகுலத்தில்தான் இரண்டாவது கெர்ப்பத்தில் பிறப் பான்.

(57) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி லக்கினபாவாதிபதி ஏழா வது கேந்திரத்திலும், நான்காம் பாவாதிபதி தசம கேந்திரத்திலு மிருந்தால் ஜாதகனுக்கு நதிப்பிராந்தியத்தில் புண்ணிய க்ஷேத்திரத் தில் சிவாலயத்துடன் கூடிய பிரசித்த க்ஷேத்திரத்தில் தகப்பன் வீட்டில் ஜனனம் நேரிடும்.

(58) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி பத்தாம் பாவாதிபதி, லக் கின கேந்திரத்திலும், சூரியன் ஏழாவது கேந்திரத்திலுமிருந்தால்

ஜாதகனுடைய தகப்பன் மத்திய வயதுடையவன், கல்வியறிவுடைய விவேகி. ஒரு பாஷையே தெரிந்தவன், தேவ பிராமண பக்தி உடையவன், நூல்வியாபாரத்தில் தனவிருத்தியடைவான், பிதுரார்ஜித ஆஸ்தி உடையவன், ஜாதகனுடைய பாட்டனைவிட ஜாதகனுடைய தகப்பன் அதிககீர்த்தி, பூமி விருத்தி, தனவிருத்தி முதலியன உடையவன். தாயாதிவர்க்கத் தகப்பன் மூலமாக கல்வி, புத்தி, விவாகம் முதலியன அடைவான். தாயாதியுடன் பாகம் பிரியாதவன், ஒரே குடும்ப க்ஷேமமுடையவன். ஆயுளுள்ளவரை சுகியாவான், ஜாதகனுடைய தகப்பன் உடன்பிறந்த சகோதரி சகோதாருடையவன், அவர்களில் ஒரு சகோதரன் ஒருவன் புத்திரி சந்தான முடையவன், சகோதரி ஒருத்தியும் வம்ச விர்த்தியில்லாதவளாகி மரிப்பாள், இவர்களைவிட தகப்பனுடன் பிறந்தவர்கள் அதிகம்பேர் இருந்தாலும் அவர்கள் மரித்து விடுவார்கள்.

(59) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி நான்காம்பாவாதிபதியாகிய சந்திரன் கேந்திரத்திலிருந்தால் ஜாதகனுடைய தாய் தீர்க்காயுளுடையவள், சாத்துவீகமுடையவள், கணவனிடம் பக்தி உடையவள், வமிசவிர்த்தி உடையவள், மூன்று உடன்பிறந்த சகோதாரும் மூன்று சகோதரிகளும் உடையவள், இவர்களில் இரண்டு சகோதரிகள் புத்திரி புத்திர வமிசவிர்த்தி உடையவர்கள், ஒருத்தி வமிசவிருத்தியில்லாதவளாய் மரிப்பாள், சகோதரர் மூவரும் சுகமாயிருப்பார்கள், ஜாதகனுடைய தாயின் சகோதர சகோதரிகள் இவர்களைத்தவிர அதிகம் பிறந்தாலும் மரித்துவிடுவார்கள், ஜாதகனுடைய தாய் ஆயுளுள்ளவரை சுகியாகவே யிருப்பாள், ஜாதகனுடைய முப்பத்து மூன்று அல்லது முப்பத்து நான்காம் வயதில் ஜாதகனுடைய தாய்க்கு கண்டமுண்டாகும்.

(60) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி ஆறும்பாவாதியாயும் தாயாதி ஸ்தானாதியுமான புதன் கேந்திரத்தில் இருந்து நவாம்சத்தில் தன்னுடைய நவாம்சத்தில் இருந்த ஷ்டி புதன் ஒன்பதாம் பாவாதியால் பார்க்கப்பட்டால் ஜாதகன் தாயாதிக்கு ஒரு புத்திரனும், புத்திரியும் உண்டாவார்கள், அந்த புத்திரியின் புத்திரன் ஒருவனை ஜாதகன் சுவீகாரமாக எடுத்துக்கொள்ளுவான். அப்புத்திரனால் ஜாதகன் வம்ச விருத்தியடைவான், அப்புத்திரன் நல்ல கல்வி அறிவுடையவனும், விவேகியும், யோக விருத்தியுமுடையவன், பற்பல தேசங்களிலும் வியாபாரஞ் செய்து விசேஷ ஆஸ்தி, இரண்டு வீடு, பூமி முதலியன சம்பாதித்து தடாகாதி அன்ன சத்திரம் முதலான தர்மம் செய்து சகல தானங்களும் செய்து புத்திர சம்பத்தை அடைந்து சுப்பிரமணியரிடம் பக்தி உண்டாகி கணபதியின் ஆலயத்தை புதுப்பித்தல் முதலியன செய்வான். அதிலிருந்து மூன்று நான்கு தலை முறைகள் பாக்

கியமுடையவர்களுமா யிருப்பார்கள். ஜாதகனுடைய பெரிய தகப்பன் ஒருவன் முன் பாபவினையால் சித்தப்பிரமை அடைவான்.

(61) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி ஏழாம் பாவாதிபதி சுக்கிரன் லக்கினத்திற்கு ஆறும் பாவத்தில் நீச்சனுகியிருந்து சனியுடனும் கூடி களத்திர ஸ்தானத்துக்குப் பன்னிரண்டில் சனி இருந்தால் ஜாதகனுக்கு இரண்டு மனைவியருண்டாவார்கள், ஜாதகனுடைய முதல் மனைவி ஒரு புத்திரனும், ஒரு புத்திரியும் இருவர் பிறந்த பிறகு சூதிகா கிரக தோஷத்தால் ஜாதகனுக்கு இருபத்தெட்டு அல்லது இருபத்தொன்பதாம் வயதில் சுமங்கலியாகவே மறிப்பாள், பிறகு அப்புத்திரியும் மரித்துவிடும், ஜாதகன் பிறகு இரண்டாம் மனைவியை மணந்து அவள் மூலமாக மூன்று பிள்ளைகளையும் ஒரு பெண்ணையும் அடைவான்.

(62) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி ஐந்தாம் பாவாதிபதி சூரியன் ஏழாம் பாவத்தில் நீச்சனுகி அங்கு செவ்வாயுடன் கூடியிருந்து தனுசு ராசியில் ராகு இருந்தால் ஜாதகனுக்கு புத்திர சந்தானத்துக்கு இடைஞ்சலுண்டாகும், நாகப்பிரதிஷ்டை செய்து சுப்பிரமணிய விரதமிருந்தால் அத்தோஷம் நீங்கி புத்திர சுகமுண்டாகும்.

(63) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி ஜாதகம் பெண் ஜாதகமானுல் நான்காம் பாவாதிபதியாகிய சந்திரன் நான்காவதான (சூத்திர) காலத்தில் கேந்திரத்தில் இருந்தால் ஜாதகிக்கு பாக்கிய வம்சத்தில் நான்காவது கர்ப்பத்தில் ஜனனம் ஏற்படும், ஜாதகிக்கு மூத்த சகோதரன் பாலியத்திலேயே நஷ்ட மடைவான், ஒரு இளைய சகோதரி ஒருத்தி சுகத்துடனும் புத்திரீ புத்திர வம்ச விருத்தியும் உடையவள்.

(64) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி லக்கினுதிபதி ஐந்திலும், நான்காமாதிபதி கேந்திரத்திலுமிருந்தால் ஜாதகிக்கு காட்டுப் பிரதேசத்தில் பெரிய கிராமம் அல்லது பட்டிணத்தில் விஷ்ணு ஆலய சிவாலயம் உள்ள இடத்தில் தகப்பன் வீட்டில் ஜனனம் நேரிடும்.

(65) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி ஒன்பதாம் பாவாதிபதி லக்கின கேந்திரத்திலிருந்து ஐந்தாம் பாவாதிபதியாகிய சூரியன் தன் உச்ச ராசியிலிருந்தால் ஜாதகியினுடைய தகப்பன் தீர்க்க ஆயுளுடையவன், சௌக்கிய முடையவன், கல்வி அறிவுடைய விவேகி, ஒரே பாஷையில் சமர்த்தன், இரண்டு பாஷையில் பயிற்சியுடையவன், விளையாட்டுச் சாஸ்திரத்தில் சமர்த்தன், வேதாந்தம் முதலிய பற்பல சாஸ்திரங்களிலும் சமர்த்தன், யோகமுடையவன், கீர்த்தியுடையவன்.

(66) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி ஏழாம் பாவாதிபதி தன் உச்சத்தில் பலத்துடன் இருந்தால் ஜாதகியின் புருஷன் ரூபமுடையவன், லக்ஷண முடையவன், ஒரே பாஷையில் சமர்த்தன், பிரபு லக்ஷண முடையவன், பிரபுப் பிரீதியுடையவன், ராஜ்ய காரியம் அதி

கமாக கவனிப்பவன், தன் தகப்பனுடையவும், சுபார்ஜிதமாகவும் சம்பாதிக்கப்பட்ட வீடு, மனை, பூமி முதலிய ஆஸ்தி உடையவன், அரசாங்கத்தில் ஒரு நிஷ்க பிரமாணத்திலிருந்து அறுபது நிஷ்கம் வரையில் சம்பளம் பெறுவான், உத்தியோகப் பிரபலமுடையவன், ஜாதகியின் கணவன் அந்திய வயதில் தன் தேசத்திலேயே உத்தியோகமுடையவன் ஆவான்.

நாடி அம்சம்—சுதாம்சம்:—

(67) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி புதன் சிம்ம ராசியில் வர்க்கோத்தமாம்சத்திலிருந்து சந்திரன் விப்ர காலத்தில் இருந்தால் ஜாதகன் அந்தணனாக பிறப்பான், சுகம் அடைவான், அன்றி ஜாதகன் ஆறுவது கெற்பத்தில் ஜனிப்பான், ஜாதகனுக்கு இரண்டு மூத்த சகோதரரும், மூன்று மூத்த சகோதரிகளும் பாலியத்திலேயே மரித்து விடுவார்கள், ஜாதகன் இளைய சகோதரனில்லாதவன், இளைய சகோதரிகள் ஐந்து பேர்கள் உண்டாவார்கள், அவர்களில் ஒருத்தி சூதிகா கிரகத்தில் மரித்துவிடுவாள், மற்ற நான்கு சகோதரிகள் புத்திரி புத்திர வம்ச விருத்தியுடையவர்களாயிருப்பார்கள்.

(68) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி ஒன்பதாம் பாவாதிபதி பன்னிரண்டிலிருந்து சூரியன் சுய க்ஷேத்திர பலத்துடன் ஐந்தாம் பாவத்திலிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் தீர்க்காயுளுடையவன், வித்தை புத்தியுடையவன், வேதாத்தியயனம் செய்பவன், கொஞ்சம் கொஞ்சம் காவிய ஞானமுடையவன், தேவி மந்திரம் கற்று தேவி உபாசனையுடன் கூடியவன், மந்திர சாஸ்திரத்தில் வல்லவன், யந்திர சமர்த்தன், தேவி ஸ்தோத்திரம் செய்து தேவி பிரிதியினால் சுகமடைவான், இரண்டு மூன்று பாஷைகளில் தெளிவுள்ளவன், பாலிய வயதில் அற்ப சுக முடையவன், ஜாதகனுடைய தகப்பன் தன் தகப்பனால் சம்பாதிக்கப்பட்ட ஆஸ்தி சுவல்பமிருந்து அதை விட்டுவிட்டவன் ஆவான்.

(69) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி நான்காம் பாவாதிபதி ஒன்பதாம் பாவத்திலிருந்து நவாம்சத்தில் தன் உச்ச ராசியில் இருந்தால் ஜாதகனுடைய தாய் சித்தாவதார பக்தியும், குணமுமுடையவள், வம்ச விருத்தியுடையவள், புத்திரி புத்திரர்களை பதினோரு கர்ப்பம் பிரசவிப்பவள், அவர்களில் ஐந்து பேர் புத்திரி புத்திரர்கள் சுகத்துடன் கூடியிருப்பார்கள், ஜாதகனுடைய தாய் உடன் பிறந்த சகோதரனில்லாதவள், இரண்டு சகோதரிகளைஉடையவள், ஜாதகனுடைய தாய்க்கு ஜாதகனுக்கு நாற்பத்திரண்டாம் வயதில் கெண்டமுண்டாகும்.

நாடி அம்சம்—சாரதாம்சம்:—

(70) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி பூர்வ பாகத்தில் லக்கின பாவாதிபதி மூன்றும் பாவத்திலிருந்து நான்காம் பாவாதிபதி கேந்

திரத்திலுமிருந்தால் ஜாதகனுக்கு நதிப்பிராந்தியத்திலுள்ள சிறிய கிராமத்தில் சிவ, விஷ்ணு ஆலயங்களுடன் கூடிய இடத்தில் அயல் வீட்டில் ஜனனம் நேரிடும், உத்தராம்சத்தில் பிறந்தால் தகப்பனுடைய வீட்டில் ஜனனம் நேரிடும், ஷை ஜாதகன் கல்வியுடையவன், யௌவன ஸ்திரீகளிடம் போகிப்பவன், சூரியனைப் போல் தேஜசுடையவன், நிலையான தீர்க்காயுளுடையவன், இருபது வயதிலிருந்து யோகமடைவான், கீர்த்தியுடையவன், பற்பல தேசங்களில் மேலான புகழடைவான், உத்தியோகத்தினால் பிரசித்தியடைவான்.

(71) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி இரண்டுக்குடையவன், ஏழுக்குடையவன் ஐந்தாமாதிபன் இவர்கள் இரண்டாமிடத்தில் கூடியிருப்பின் ஜாதகன் யோகவான் ஆவான்.

(72) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி மூன்றாம் பாவத்தில் லக்கின பாவாதிபதியும் பத்தாம் பாவாதிபதியும் கூடியிருப்பின் ஜாதகன் அநேக கீர்த்தியுடையவனாவான்.

(73) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி லக்கின பாவாதிபதி மூன்றாம் பாவத்தில் பத்தாம் பாவாதியுடன் கூடியிருந்தால் ஜாதகன் நற்செய்கை, ஆசாரம், யோகம், தனம், சுகம் முதலியவற்றுடன் கூடியவனாயிருப்பான்.

(74) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி ஒன்பதாம் பாவாதிபதி பன்னிரண்டாவது பாவத்தில் சுய க்ஷேத்திரத்தில் வலுவுடனிருந்து சூரியன் இரண்டாமாதியுடன் கூடியிருந்து நாவாம்சத்தில் சூரியன் சுய க்ஷேத்திரத்திலுமிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் தீர்க்காயுளுடையவான், ஜாதகனுடைய தகப்பன் சௌக்கியமுடையவன், புண்ணிய புத்தி உடையவன், இரண்டு மூன்று வித எழுத்துக்களில் வல்லவன், வேறு பாஷைகளையும் சமர்த்துடன் கற்பான், அரசாங்கத்தில் பிரசித்த யோகமும், கீர்த்தியும் உடையவன், ஜாதகனுடைய தகப்பன் இரண்டு தாரமுடையவன் ஆவான்.

(75) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி நான்காம் பாவாதிபதி கேந்திரத்திலிருந்து சந்திரனும் அப்படியே இருந்தால் ஜாதகனுடைய தாய் மத்திம வயது உடையவள், சாத்துவிக முடையவள், சுத்த முடையவள், கணவனிடம் பக்தி குணம் முதலியன உள்ளவள்.

நாடி அம்சம்—குமுதாம்சம்:—

(76) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி பூர்வ பாகத்தில் பிறந்தவனுக்கு ஏழாவது பாவத்தில் லக்கின பாவாதிபதி கேந்திர ராசியிலிருந்து நான்காம் பாவாதி நான்காம் பாவத்திலேயே இருந்தால் ஜாதகனுக்கு நதிப் பிராந்தியத்திலுள்ள விஷ்ணு ஆலயத்துடன் கூடிய

சிறிய கிராமத்தில் ஜனனம் அயலார் வீட்டில் நேரிடும். உத்தர பாகத்தில் ஜாதகனுடைய தகப்பன் வீட்டிலேயே ஜனனம் நேரிடும்.

(77) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகிப் பூர்வ பாகத்தில் லக்கின பாவாதிபதி இரண்டாம் பாவத்திலிருந்து நான்காம் பாவாதிபதியுடன் கூடியிருந்தால் ஜாதகனுக்கு நதிப் பிராந்தியத்தில், காட்டுப் பிராந்தியத்தில் சிவாலயத்துடன் கூடிய இடத்தில் தாயின் வீட்டில் ஜனனம் நேரிடும், உத்தர பாகத்தில் ஜாதகனுக்கு தகப்பன் வீட்டில் ஜனனம் நேரிடும்.

(78) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி ஒன்பதாம் பாவாதிபதி சுய க்ஷேத்திரத்தில் பலத்துடனிருந்து ஆருவது பாவத்தில் சூரியனிருந்து குருவால் பார்க்கப்பட்டிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் சௌக்கியமுடையவன், வழிவழியாக அரசாங்க மூலமாக சுயக் கிராமத்தில் நியாய விசாரணை செய்பவனுவான், ஆயுள்வரை சுயக் கிராமத்திலேயே வாசம் செய்பவனுவான்.

(79) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி நான்காம் பாவாதிபதியாகி சந்திரன் சுய க்ஷேத்திரத்திலிருந்தால் ஜாதகனுடைய தாய் தீர்க்காயுளுடையவள், சாத்துவீக முடையவள், சுத்தமானவள், தன் கணவனிடம் பக்தியுடையவள், வமிச விருத்தியுடையவள், புத்திரீ புத்திரர்கள் பத்துபேர்களை ஜாதகனுடைய தாய் பிரசவிப்பவள், எட்டு பிள்ளைகளையும், இரு பெண்களையும் பிரசவிப்பவள், இவர்களில் ஒரு பெண்ணும் ஜாதகன் உள்பட நான்கு சகோதரர்களும் புத்திரீ, புத்திர, பேரன் முதலான வமிச விருத்தி உடையவர்கள், ஜாதகனுடன் பிறப்பில் நான்கு பேர் நஷ்டமடைவார்கள், மற்ற ஒருத்தி விதவையாய் விடுவாள், ஜாதகனுடைய தாயின் உடன் பிறந்த சகோதரர் இருவர்களும், ஒரு சகோதரியும் வமிச விருத்தியுடையவர்கள், ஜாதகனுடைய தாயின் கூட இம்மூவரைவிட அதிகம் சகோதரம் பிறந்தாலும் அவை நாசமுறும், ஜாதகனுடைய தாய் ஜாதகனுடைய நாற்பதாம் வயதில் கண்டமடைவாள்.

நாடி அம்சம்—சுப்பிரபாம்சம்:—

(80) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி சந்திரன் நான்காம் பாவாதிபதியாகி சுய க்ஷேத்திரத்தில் வர்க்கோத்தமாம்சத்திலிருந்து விப்ர காலத்தில் இருந்தால் ஜாதகன் பிராமணனுக ஏழாவது கெற்பத்தில் பிறந்து சுகியாவான்.

(81) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி பூர்வ பாகத்தில் லக்கின பாவாதிபதி பன்னிரண்டாம் பாவத்தில் இருந்து நான்காம் பாவத்தில் சந்திரனிருந்தால் ஜாதகனுக்கு சமுத்திர சமீபத்திலுள்ள சிறிய கிராமத்தில் தகப்பன் வீட்டில் ஜனனம் நேரிடும், உத்தராம்சமானுல் தாய் வீட்டில் ஜனனம் நேரிடும்.

(82) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி ஒன்பதாம் பாவாதிபதி பத்தாம் பாவத்தில் இருந்து அங்கு சூரியன், புதன் இவர்களுடன் கூடி ராகு கேதுக்களுடன் கூடியாவது, ராகு கேது இவர்களால் பார்க்கப்பட்டாவதிருந்து பத்தாம் பாவாதிபதியாலும் இவர்கள் பார்க்கப்பட்டிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் கல்வி அறிவுடைய விவேகியாவான், வேதாத்தியயனம் செய்பவன், சாஸ்திரம், காவியம் முதலான ஞானமுடையவன், ஜோதிடத்திலும் சமர்த்தன், பிரசித்தன், ஒரே தாரமுடையவன், ஜாதகனுடைய தகப்பனுக்கு உடன் பிறந்த சகோதார் மூவரும், இரண்டு சகோதரிகளும் உண்டு, ஷெ சகோதரர் மூவரும் வமிச விருத்தியில்லாதவர்கள், சகோதரிகள் இருவரும் வமிசவிருத்தியுடையவர்கள், வேறுசிலர் சகோதரர்களுக்கு வமிசவிருத்தி உண்டாயினும் நஷ்ட மடையும் என்று எண்ணுகின்றனர், ஜாதகனுடைய தகப்பன் ஜாதகனுடைய இரண்டாவது வயதிலேயே மரித்து விடுவான்.

(83) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி நான்காம் பாவாதிபதியாகிய சந்திரன் நான்காம் பாவத்திலேயே இருந்து வர்க்கோத்தமத்திலுமிருந்து ராகுவுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தாய் தீர்க்காயுளுடையவள், தன் யௌவன வயதில் மத்தியிலேயே விதவையாகி துக்கிப்பவள், சாத்துமீகவதி, சுத்தமுடையவள், பதிபக்தியுடையவள், வமிச விர்த்தி உடையவள், புண்ணியவதி, புத்திரீ, புத்திர சந்தான சௌக்கியமுள்ளவள், சகோதர சகோதரி இல்லாதவள் என்று சிலரும், இருந்தாலும் பாலியத்திலேயே மரித்து விடுவார்கள் என்று சிலரும் எண்ணுகின்றனர், மேற்படி ஜாதகனுடைய தாய் ஜாதகனுடைய நாற்பதாவது வயதில் மரித்து விடுவாள்.

நாடி அம்சம்—பங்கஜாம்சம்:—

(84) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி எட்டாவது பாவத்தில் சூரியன் வர்க்கோத்தமத்திலிருந்து அங்கு கூட சந்திரன் நான்காவது காலத்தில் (சூத்திர காலத்தில்) இருந்தால் ஜாதகனுக்கு சிவ பக்த குலத்தில் பாக்கிய வமிசத்தில் மூன்றுவது கெற்பத்தில் ஜனனம் நேரிட்டு ஜாதகன் யோக முடையவனுகவும், கீர்த்தியுடையவனுகவும் இருப்பான்.

(85) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி பூர்வ பாகத்தில் லக்கின பாவாதிபதி தன் உச்ச ராசியிலிருந்து நான்காம் பாவாதிபதி எட்டாம் பாவத்திலிருந்தால் ஜாதகனுக்கு காட்டுப் பிராந்தியத்திலுள்ள பெரிய கிராமத்தில் விஷ்ணு ,சிவஆலயத்துடன் கூடிய கிராமத்தில் தகப்பன் வீட்டில் ஜனனமும், உத்தராம்சத்திலானுல் தாய் வீட்டில் ஜனனமும் நேரிடும்.

(86) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி ஒன்பதாம் பாவாதிபதி ஆறும் பாவத்திலும், சூரியன் எட்டாம் பாவத்திலுமிருந்தால் ஜாதக

னுடைய தகப்பன் தீர்க்காயுளுடையவன், சௌக்கியமுடையவன், கல்வி அறிவில்லாதவன், ஆயினும் புத்தியில் நான்கு மடங்கு மேலான வன், நியாயவாதி, நல்ல புண்ணியாத்துமா, வியாபாரத்தினுல் சுக மடைவான், நீல நூல் சிகப்பு நூல் முதலான நூல் வியாபாரம் செய்ப வன், முதலில் ஒன்று இரண்டு நூல்களும், பிறகுமூன்றுநான்கு என்று பதினாறு வித நூல்கள் வரையில் வியாபாரம் செய்பவன் ஆவான்.

(87) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி ஒன்பதாம் பாவத்தில் ஆருவது பாவாதிபதி வர்க்கோத்தமத்திலிருந்து எட்டாவது பாவத் தில் சந்திரன் வைசிய காலத்தில் இருந்தால் ஜாதகன் விஷ்ணு பக்த குலத்தில் விஷ்ணு சிவன் இவர்களிடம் பக்தியுள்ளவனுகி தான் ஐந் தாவது கெற்பத்தில் ஜனிப்பான்.

(88) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகிப் பூர்வ பாகத்தில் லக்கின பாவதிபதி ஐந்தாவது பாவத்திலும், நான்காவது பாவாதிபதி பதி ஞோரவது பாவத்திலுமிருந்தால் ஜாதகனுக்கு பெரிய நதிப்பிராந்தியத் தில் பிரசித்த விஷ்ணு ஆலய முள்ளதும், சிவாலய மில்லாததுமான பிரசித்த பட்டிணத்தில் தகப்பனுடைய வீட்டில் ஜனனம் நேரிடும், உத்தராம்சத்தில் ஜனிப்பவனுக்கு தாய் வீட்டில் ஜனனம் நேரிடும்.

(89) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி லக்கின பாவாதிபதி ஐந் தாவது பாவத்தில் ஒன்பதாம் பாவாதிபதியுடன் கூடியிருந்து பத் தாம் பாவாதிபதியுடன் கூடியிருந்தாலும், பத்தாம் பாவாதிபதியால் இவர்கள் பார்க்கப்பட்டிருந்தாலும் ஜாதகன் யோகவானுகியும், கீர்த் தியுடையவனுகியுமிருப்பான்.

(90) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி இரண்டாம் பாவாதிபதி நீச்சனுகி இருந்து பதினோரவது பாவாதிபதி லக்கினத்திற்கு மூன்ரு வது பாவத்திலிருந்தால் ஜாதகனுக்கு தனம், கீர்த்தி முதலிய விர்த்தி யுண்டாகி ஜாதகன் எழுபது வயது தீர்க்கமாயடைவான்.

(91) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி ஒன்பதாவது பாவாதிபதி ஐந்தாவது பாவத்தில் செவ்வாயுடன் கூடியிருந்து சூரியன் நீச்ச ராசி யில் கேந்திரத்திலிருந்து நவாம்சத்தில் பாக்யாம்சத்திலும் இருந்து ஒன்பதாம் பாவாதிபதி ஜராவதாம்சத்திலுமிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் மத்திய வயதுடையவன், சௌக்கியமுடையவன், சிகப்பு நிறமுடையவன், சம தேகி, வெளுப்பு நிறமும் நல்ல ஆகிருதியுமுடை யவன், வாத பித்த சுபாவமுடையவன், தித்திப்பு, புளிப்பு இவற்றில் பிரியமுடையவன், சந்தன, புஷ்ப, அலங்காரப் பிரியன், நாட்டியத்தி லும், சங்கீதத்திலும் பிரியமுடையவன், அயலார் மனைவிகளிடம் ஆசையுடையவன், தன் மனைவியிடமும் சுகமடைவான், கல்வி அறி வுள்ள விவேகி, மூன்று பாஷைகளில் வல்லவன், சமர்த்தன், யோக

முடையவன், அயலார் ரகசியங்களை வெளிப்படுத்துபவன், தன் மர்மங்களை விடாதவன், வியாபாரத்தில் நிபுணன், பலவும் தெரிந்தவன், பற்பல வியாபாரத்தில் சமர்த்தன், முதலில் தங்கம், வெள்ளி, ரத்தினம் முதலிய வியாபார முடையவன், அதனால் தன லாபமுடையவன், பிறகு வியாபாரத்துடன் கூடிய பிராமணனால் வியாபாரமும், தனப் பெருக்கும், பற்பல மார்க்கங்களிலும் வியாபாரமுடையவன், தீபாந்தரத்திலும் கிரய விக்ரய மூலம் தனலாபமுடையவன்.

(92) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி நான்காம் பாவாதிபதியும் சந்திரனும் கூடி பதினோராவது பாவத்தில் இருந்தால் ஜாதகனுடைய தாய் தீர்க்க வயதுடையவள், சாத்வீக முடையவள், சுத்த முள்ளவள், கணவனிடம் அன்புடையவள், வமிச விருத்தியுடையவள், உடன் பிறந்த இரண்டு சகோதரர்களும் மூன்று சகோதரிகளுமுடையவள், இவர்களில் சகோதரர் இருவரும் பாலியத்திலேயே மரித்து விடுவார்கள், மூன்று சகோதரிகளில் ஒருத்தி புத்திர சந்தான மில்லாமல் சுமங்கலியாகவும் மற்ற இருவர்கள் புத்திரீ புத்திர வமிச விருத்தியும் உடையவர்கள், இவர்கள் தவிர ஜாதகனுடைய தாயுடன் கூட அதிகம் பிறந்தாலும் மரித்துவிடுவார்கள், ஜாதகனுடைய நான்காவது தெசையில் ஜாதகனுடைய தாய் கண்டமடைவாள். பாவஸ்புடத்தில் 4-வது பாவாதிபதியாக புதன் அல்லது சூரியன் வரக்கூடும்.

நாடி அம்சம்—கமலாம்சம்:—

(93) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி நான்காவது பாவாதிபதி ஐந்தாம் பாவத்திலிருந்து சந்திரன் விப்ர காலத்தில் இருந்தால் ஜாதகனுக்கு சிவ பக்த குலத்தில் இரண்டாவது கெற்பத்தில் ஜனனம் நேரிடும்.

(94) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி கமலாம்ச பூர்வ பாகத்தில் பிறந்தவனுக்கு லக்கின பாவாதிபதி ஆறும் பாவத்திலிருக்க நான்காம் பாவாதிபதி ஐந்தாவது பாவத்தில் இருந்தால் ஜாதகனுக்கு காட்டுப் பிராந்தியத்திலுள்ள சிறியகிராமத்தில் சிவாலயத்துடன்கூடிய கிராமத்தில் தாய்வீட்டில் ஜனனம்நேரிடும், உத்தராம்சத்தில்ஆனால் நதிப்பிராந்தியத்தில் சிவாலயத்துடன்கூடிய தகப்பன் வீட்டில் ஜனனம்நேரிடும்.

(95) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி ஒன்பதாம் பாவாதிபதி பதினோராவது பாவத்திலிருந்து சூரியன் ஐந்தாவது பாவத்தில் இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் தீர்க்காயுளுடையவன், கல்வி அறிவுடையவன், விவேகி, ஒரே பாஷையில் வல்லவன், வேதாத்தியயனத்தில் சமர்த்தன், வைதீகத்தினால் ஜீவனம் செய்பவன், பற்பல கிராமங்களிலும் வைதீக மூலமாக ஜீவனம் செய்பவன், பிராமணப்பிரபு மூலமாக சுகமடைவான், பிதுரார்ஜிதமான வீடு, க்ஷேத்திரம் முதலிய நஷ்ட மடைபவன்.

(96) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி ஒன்பதாம் பாவாதிபதி பன்னிரண்டாம் பாவத்தில் இருந்து சந்திரன் நான்காவது காலத்தில் இருந்தால் ஜாதகனுக்கு இரண்டாவது கெற்பத்தில் ஜனனம் நேரிடும்.

(97) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி லக்கின பாவாதிபதி ஐந்தாவது பாவத்திலும் நான்காவது பாவாதிபதி ஐந்தாவது பாவத்திலுமிருந்தால் ஜாதகனுக்கு நதிப்பிராந்திய தேசத்தில் புண்ணிய க்ஷேத்திரத்தில் சிவாலய, விஷ்ணு ஆலயத்துடன் கூடிய வடக்குத் தெற்கு வீதியில் மேற்கு வாடையில் தகப்பன் வீட்டில் ஜனனம் நேரிடும்.

(98) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி ஒன்பதாம் பாவாதி பன்னிரண்டாம் பாவத்திலிருந்து சூரியன் ஆறும் பாவத்திலிருக்க பன்னிரண்டாம் பாவாதிபதியால் சூரியன் பார்க்கப்பட்டிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் சுக முடையவன், கல்வி அறிவுடையவன், ஒரே பாஷையில் சமர்த்தன், வாசாலகன், விவகாரத்தில் சமர்த்தன், நியாயவாதி, உண்மையே பேசுபவன், பூமியில் பயிர் செய்து விவசாயத்தினுல் மூலிகை முதலியவற்ருல் வியாபாரம் செய்து ஜீவனம் செய்பவன், சூத்திரப் பிரபு க்ஷேத்திரத்தில் விவசாயம் செய்து, அதிக பலனடைந்து சுக மடைவான், ஜாதகனுடைய தகப்பன் ஒரே மனைவியை யுடையவனுவான்.

நாடி அம்சம்—முகுந்தாம்சம்:—

(99) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி லக்கின பாவாதிபதி நான்காம் பாவத்திலும் பத்தாம் பாவாதிபதி பதிஞேராவது பாவத்திலுமிருந்தால் மகா நதிப் பிராந்திய தேசத்தில் புண்ணிய க்ஷேத்திரத்தில் ஜன்ம பூமிக்கு வடக்கில் கங்கைக்குச் சமமான தடாகம் உள்ளதும், சிவாலய, விஷ்ணு ஆலயத்துடன் கூடிய பெரிய கிராமத்தில் அல்லது பட்டிணத்தில் கிழக்கு மேற்கு வீதியில் வடக்குப் பக்கத்திலுள்ள சாகில் தகப்பன் வீட்டில் ஜாதகனுக்கு ஜனனம் நேரிடும்.

நாடி அம்சம்—கமலாம்சம்:—

(100) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி ஒன்பதாம் பாவாதிபதி ஏழாவது கேந்திர ராசியிலிருந்து சந்திரன் கும்ப ராசியில் நான்காவது காலத்தில் இருந்தால் ஜாதகன் சிவ பக்த குலத்தில் ஜனிப்பான்:

(101) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி லக்கினுதிபதி ஆறும் பாவத்திலிருந்து நான்காவது பாவாதிபதி பதிஞேராவது பாவத்திலிருந்தால் நதிப் பிராந்தியத்தின் அந்தியத்திலுள்ள சிறிய கிராமத்தில் சிவாலய, விஷ்ணு ஆலயத்துடன் கூடிய வடக்குத் தெற்கு வீதியில் மேற்கு வாயிற்படியுள்ள தாயின் வீட்டில் ஜாதகனுக்கு ஜனனம் ஏற்படும், உத்தாம்சத்திலானுல் ஜாதகனுக்கு தகப்பன் வீட்டில் ஜனனம் நேரிடும்.

(102) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி லக்கின பாவாதி ஆறு வது பாவத்தில் ஐந்தாவது பாவாதிபதியுடன் கூடியிருந்து பத்தாம் பாவாதிபதி சுய க்ஷேத்திரத்தில் பலத்துடன் இருந்து நவாம்சத்தில் சனி நான்காவது பாவாதிபதியுடன் கூடியிருந்தால் ஜாதகனுக்கு நல்ல யோகமுண்டாகும். மேலும் ஜாதகனுக்கு பன்னிரண்டு, பதி மூன்று வயதில் கொஞ்சம் பீடையும், இருபத்தினன்கு, அல்லது இருபத்தைந்து வயதில் ஜாதகனுடைய மனைவிக்குப் பீடையும், மனஸ்தாபமும், முப்பத்துமூன்றும் வயதில் தகப்பனுடன் மனஸ் தாபமும், முப்பத்து நான்கில் ஜாதகனுடைய தாய்க்கு மரணமும், முப்பத்தைந்தில் புத்திர நஷ்டமும், மனைவி மரணமும், முப்பத்தேழா வது வயதில் இரண்டாவது விவாகமும், முப்பத்தெட்டு அல்லது முப் பத்தொன்பதில் தேக பீடையும், புத்திர பிரதி பந்த சாந்தியும், நாற் பத்தி ஒன்றில் புத்திர உற்பத்தியும், நாற்பத்திரண்டில் தேக பீடை யும், சனி கேதுப் பிரீதியால் சுகமும், நாற்பத்திமூன்றில் பிதுரார்ஜித கிரக லாபமும், இரண்டாவது வேறு வீடு லாபமும், ஜாதகனுக்கு சுயார்ஜிதமும், பிதுரார்ஜித தனமும், தாயின் சகோதரியின் தனமும், ஜாதகனுடைய புத்திரன் மூலமாக தெய்வானுகூலமாக நிதிலாபமும், முப்பது ஆயிரம் தன லாபமும், வியாபார விருத்தியும், நாற்பத்து மூன்றிலேயே புத்திர சந்தானமும், நாற்பத்திநான்கு நாற்பத்தைந் தில் யோகப் பெருக்கும், நாற்பத்தாறு நாற்பத்தேழில் ஜாதக னுக்கு தேக பீடையும், பயமும், அக்காலத்தில் சனி கேது பிரீதியும், நாற்பத்தெட்டு, ஐம்பதில் மனைவி சுகமும், ஐம்பத்தொன்று ஐம்பத் திரண்டில், ஐம்பத்துமூன்றிலும் யோகப் பெருக்கும், ஐம்பத்தைந்து ஐம்பத்தாறில் புத்திரீ புத்திர விவாகமும், ஐம்பத்தெட்டு ஐம்பத் தொன்பதில் ஜாதகனுடைய தாயின் சகோதரி மூலம் தன லாபமும், ஜாதகனால் அவளுக்கு உத்தரகிரியை நடை பெறுதலும், ஐம்பத் தொன்பது, அறுபதில் வாயு பீடையும், அக்காலம் சாந்தியும், அறு பத்தொன்று, அறுபத்திரண்டில் ஜாதகனுடைய மனைவிக்கு தேக பீடையும், சாந்தி மூலம் சுகமும், அறுபத்தைந்து, அறுபத்தாறு, அறுபத்தேழில் யோக விருத்தியும், புத்திர பிரபலமும், பௌத்திர விர்த்தியும், ஜாதகனுடைய தகப்பனுக்கும், ஜாதகனுடைய சிறிய தகப்பனுக்கும், ஜாதகனுக்கும் ஒரே புத்திரர் வமிச விர்த்தியாக வரு வதும், தகப்பன் வமிசமுதல் இவ்வாறே வமிச விர்த்தியும், ஜாதக னுக்கு இரண்டாம் மனைவியிடம் ஒரு புத்திரனும், இரண்டு பெண்க ளும், மூத்த மனைவியின் புத்திரன் ஒருவன் புத்திரீ மூவர் ஆக நால் வர் சுகமும், ஒரு புத்திரீ வமிச விருத்தி இல்லாதவளும் ஆவாள், ஜாதகனுடைய அறுபத்தெட்டு, அறுபத்தொன்பது இக்காலம் ஜாத கனுடைய புத்திர பிரபலமும், புத்திர பௌத்திர விர்த்தியும், தன ஆபரண விருத்தியும், வாகனாதி சுகமும், வீட்டில் லக்ஷ்மீ கடாக்ஷ மும், எழுபத்தொன்று, எழுபத்திரண்டு வயதுகளில் சுகமும், ஆயு

ளுள்ளவரை சுகமும் அடைவான், எழுபத்திரண்டில் தேக நிர்யாணமும், இச்ஜென்மத்தில் ஜாதகன் நல்ல புண்ணியாத்துமாவாகி அந்தியத்தில் ஞானத்தையும் அடைவான்.

(103) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி ஏழாம் பாவாதிபதியாகிய சுக்கிரன் சுயக்ஷேத்திரத்தில் களத்திர ஸ்தானத்திலேயே பலத்துடன் கூடி ஆருவது பாவாதிபதி மூன்ரும் பாவாதிபதி இவர்களுடன் கூடியிருந்து சனியாலும் பார்க்கப்பட்டு விரயாதிபதியுடனும் கூடியிருந்தால் ஜாதகனுக்கு மூன்று மனைவியர் ஏற்படுவார்கள்.

(104) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி ஐந்தாம் பாவாதிபதி சூரியன் ஐந்தாம் பாவத்திற்கிரண்டாமிடமான லக்கினத்திற்கு ஆருமிடத்திலிருந்து ஒன்று, எட்டுக்குடைய பாவாதிபதியுடனும் கூடியிருந்து, புத்திர காரகன் ஆரும் பாவாதிபதியுடன் கூடியிருந்து ஏழாம் பாவாதிபதி சுப சத்துருவுடன் கூடியிருந்தால் ஜாதகனுக்கு பற்பல விதமான புத்திர தோஷமுண்டாகும், (அவ்வித தோஷம் கீழ் வருமாறு) 1. புத்திரஸ்தானதிபதி ஆரும் பாவத்தில்இருந்தால் தோஷம் ஒன்று, எட்டாம் பாவாதிபதியுடன் கூடியிருந்தால் ஏற்படும் தோஷம் இரண்டு, புத்திர காரகன் ஆருமாதியுடன் கூடியிருக்கும் தோஷம் மூன்று, ஏழாம் பாவாதிபதி சுப சத்துருவுடன் கூடியிருந்தால் ஏற்படும் தோஷம் நான்கு, புத்திர காரகன் சனியால் பார்வையுற்றிருந்தால் ஏற்படும் தோஷம் ஐந்து, நவாம்சத்தில் புத்திர காரகன் கடகாம்சத்தில் செவ்வாயுடன் கூடியிருந்தால் ஏற்படும் தோஷம் ஆறு, புத்திராம்சம் சனியால் பார்வையுரும் தோஷம் ஏழு, ஆக ராசி அம்சத்தில் ஏற்படும் நாநாவித தோஷங்களால் புத்திர சந்தானத்துக்கு இடைஞ்சல் உண்டாகும். இந்த தோஷங்களுக்கு பரிகாரமாக ஆரும் பாவத்தில் புத்திரஸ்தானதிபதி சூரியன் செவ்வாயுடன் கூடியிருந்தால் சர்ப்ப தோஷமும், சூரியனுக்காக இரவியந்திரமும், வெள்ளியினுல் பதினுறு விராகன் (நிஷ்க) எடை செய்து அதை பிரதிஷ்டை செய்து அருண சூத்திரத்தின்படி பிராமணன் மூலமாக ஒன்னரை மாதம்வரை ஜபம், சூரிய நமஸ்காரம் முதலியன செய்து, அந்த சூரிய பிம்ப யந்திரத்தின் எடை பொருள் தக்ஷிணையாகவும், அதே பிராம்மணனுக்கு தானம் சூரிய எந்திரத்துடன்கூட கொடுத்தால் சூரியனுடைய தோஷத்திற்குச் சாந்தி யுண்டாகும், அக்காலம் பிரதி தினம் சர்க்கரை கலந்த அன்னம் அந்த எந்திரத்துக்கு நிவேதனம் செய்யவேண்டும், பிதுரு சாப நிவர்த்திக்காக புண்ணிய க்ஷேத்திரத்தில் நாராயணபலி செய்யவும், ஆருமாதியுடன் கூடியிருக்கிற புத்திரகாரகனுக்கு ஐந்து விராகன் எடை பால முகுந்த தானத்தை கிருஷ்ணயாமள கல்பப்படி

செய்தால் நிவர்த்தியாகும், குருவும் சுக்கிரனும் கூடியிருந்தால் கோதானமும் செய்யவேண்டும்.

(105) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி ஒன்பதாமாதிபதி துலா ராசியிலிருந்து சூரியன் ஆறும் பாவத்தில் எட்டாம் பாவாதிபதியுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் தீர்க்காயுளுடையவன், சௌக்கிய முடையவன், கல்வி, அறிவுடையவன், விவேக முடையவன், ஒரே பாஷையில் சமர்த்தன், எழுதுவதில் சமர்த்தன், வியாபார ஜீவன முடையவன், தேவ பிராமண பக்தியும், குரு பக்தியும் விசேஷமாயுடையவன், சிவபத்தியும், தேவி பக்தியும் உடையவன், தேவியை அபசவ்வியமாக பூஜிப்பதில் மிக சமர்த்தன், மது மாம்சாதிகள் மூலமாக பூஜிப்பவன், சாஸ்திரப்படி பய பக்தியுடன் பூஜிப்பவன், தேவி மந்திர உபதேச முடையவன், சுயமாகவே பூஜிப்பவன், பிராமண மூலமாகவும் பூஜிப்பவன், பூஜை முகத்தில் மன உறுதியுடையவன், அதனுல் தேவியின் அருளடைவான், முக்காலங்களையும் உணர்ந்து உண்மைப்படி சத்திய வாக்காக உரை செய்பவன், தேவியை பிரத்தியக்ஷமாக தரிசனை செய்பவன், அப்பூஜை காலத்தில் வேறு வமிச ஸ்திரீ ஸ்நேக மூலம் அவளால் வெகு காலம் சிசுருஷையும் செய்யப்படுபவன், ஜாதகன் தன்னுடைய தகப்பனுடைய சகோதரனுல் தத்தாக எடுத்துக்கொள்ளப்படுபவன், அந்த ஆஸ்தியை அல்ப ஆஸ்தியை ஜாதகனுடைய தகப்பன் அடைவான், வியாபாரத்தில் ஜாதகனுடைய தகப்பன் மர்மமறிந்தவன், சமர்த்தன், தைரிய முடையவன், பராக்கிரம முடையவன், திடமான மனதுடையவன், யுக்தா யுக்த நியாயாநியாய மறிபவன், சேர்க்கவும், கலைக்கவும் வல்லவன், அயலார்களுடைய ரகசியங்களை வெளிப்படுத்துபவன், உள்ளுக்குள்ளே கபட முள்ளவன், குதிரையைப் போன்ற கபடமுடையவன், வாத பித்தம் நிறைந்தவன், தித்திப்பு, புளிப்பு ரசப் பிரியன், சந்தன புஷ்ப பிரியன், சங்கீதப் பிரியன், காமி, பர ஸ்திரீ கமனம் செய்பவன், திருட்டு விபசார ஸ்திரீ, வேறு ஜாதி ஸ்திரீ போகலோலன், வியாபாரத்தில் நிபுணன், ஜாதகனுடைய பதினுறுவது வயதிலிருந்து வியாபாரத்தில் மேன்மையடைவான், ஜாதகனுடைய தகப்பன் உடன் பிறந்த சகோதர சகோதரிகளை யுடையவன், ஜாதகனுடைய தகப்பனுடைய மூத்த சகோதரன் புத்திரீ புத்திர வமிச விருத்தியுடையவன், ஜாதகனுடைய தகப்பனுடைய இளைய சகோதரர் இருவர்களில் ஒருவன் புத்திரீ புத்திர விருத்தியுண்டாகி சந்ததி நஷ்டமடையும், அவன் ஒரேஒரு சந்ததி உடையவன், மற்றெருவன் புத்திரீ புத்திரனில்லாதவன், ஜாதகனுடைய தகப்பனுடைய சகோதரிகள் மூவர்களில் இரு சகோதரிகள் புத்திரீ புத்திர வமிச விருத்தி உடையவர்கள், அவர்கள் சுமங்கலியாகவே மரிப்பார்கள், மற்றவள் புருஷனல்லாத ஸ்ரீ ரூபமுள்ளவனை மணந்து நஷ்ட மடைவாள், ஜாதகனுடைய தகப்பன் ஜாதகனுடைய மூன்றும் திசையில் மரிப்பான்.

நாடி அம்சம்—சுப்பிரபாம்சம்:—

(106) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி துலா ராசியில் நான்காம் பாவாதிபதி கேந்திரத்திலிருந்து விப்ர காலத்தில் இருந்தால் ஜாதகன் விஷ்ணு பக்த குலத்தில் பாக்கிய வமிசத்தில் நான்காவது கெற்பத்தில் ஜெனித்து யோகவானுகியும், கீர்த்திமானுகவுமிருப்பான்.

(107) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி பூர்வ பாகத்தில் லக்கின பாவாதிபதி மூன்றுமிடத்திலும், நான்காவது பாவாதிபதி கேந்திர பாவத்திலுமிருந்தால் ஜாதகனுக்கு நதிப் பிராந்தியத்தில் சிறிய கிராமத்தில் சிவாலயம் விஷ்ணு ஆலயத்துடன் கூடிய வேறு அன்னியர் வீட்டில் ஜனனம் நேரிடும். உத்தராம்சத்திலானுல் தாய் வீட்டில் ஜனனம் நேரிடும்.

(108) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி பத்து, பதினோராம் பாவாதிகளும், ஒன்பதாம் பாவாதிபதியும், எட்டு முதலிய பாவாதிபதியும் கூடியிருந்து லக்கினத்திற்கு இரண்டாவது பாவத்தில் இரண்டு கிரகம் கூடியிருந்து மூன்றும் பாவத்தில் நான்கு கிரகம் கூடியிருந்தால் கேந்திராதியோகம் ஏற்படும், மேலும் இந்த கேந்திராதி யோகம் நாற்பது வருஷம் வரையில் நடக்கும், ஜாதகனுடைய பதினாறு வயது முதல் ஐம்பத்தெட்டு வருஷம் வரையிலும் உத்தியோகத்தினுல் சுகமும், ஸ்ரீமானுகவும், பிரசித்த பிரபுவாகவும், குதிரை, பல்லக்கு, வாகனம் முதலியன உடையவராகி எப்போதும் வீட்டில் லக்ஷ்மியுடன் கூடியும், நல்ல புத்திரன் முதலான பாக்கியமுள்ள சரிதமுள்ளவராகவும், சந்திரனைப் போன்ற காந்தியுடனும் பிரகாசிப்பவன், லோகாந்திரத்திலும் கீர்த்தி, பிரபாவம், சௌரியம், சாகஸம் முதலியன உடையவனுகிவாழ்வான், ஜாதகன் தேசாந்திரத்திலும் கீர்த்தி உடையவன்.

(109) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி ஒன்பதாம் பாவாதிபதி பன்னிரண்டாம் பாவத்தில் சுய க்ஷேத்திரத்தில் பலத்துடனிருந்து சூரியன் லக்கினத்திற்கு இரண்டாம் பாவத்தில் இரண்டாமாதியுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் தீர்க்க ஆயுளையுடையவன், சௌக்கியமுடையவன், ரூப லக்ஷணமுடையவன், கல்வி அறிவுடையவன், இரண்டு, மூன்று பாஷைகளில் சமர்த்தன், வேறு அன்னிய பாஷைகளிலும் சமர்த்தன், வாசாலகன், எல்லா காரியங்களிலும் சமர்த்தன், யோக முடையவன், கீர்த்தியுடையவன், பிதுரார்ஜித முடையவன், சுயார்ஜித முடையவன், அரசாங்கத்தில் பிரபல உத்தியோக முடையவன், மூன்று வாகன முடையவன், லோகப் பிரசித்தியான புகழுடையவன், சுய தேசத்திலும் வெளிதேசங்களிலும், பற்பல தேசங்களிலும் (புகழுடையவன்.) உத்தியோகம் பார்ப்பவன், முப்பது அல்லது முப்பத்திரண்டு வருஷம் பிரபல உத்தியோக

முடையவன், ஒரே தார முடையவன், பரோபகாரி, தான தர்மம் செய்பவன், சிவ பக்தி, விஷ்ணு பக்தி, தெய்வ பக்தி, பிராமண பக்தி குரு பக்தி முதலிய உடையவன், சகல தர்மங்களும் செய்பவன், சிக்ஷிக்கவும், ரக்ஷிக்கவும் அதிகார முடையவன், முதலில் ஒரு நிஷ்கம் பிறகு ஆறு, ஏழு, பதினைந்து, இருபது, முப்பது நிஷ்கம் வரை உத்தி யோக பிரபலம் உடையவன்.

(110) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி நான்காம் பாவாதிபதி கேந்திரத்தில் துலா ராசியிலிருந்தால் ஜாதகனுடைய தாய் மத்திம வயதுடையவள், சாத்துவீக முடையவள், சுத்த முடையவள், பதி பக்தி உடையவள், வமிச விர்த்தி உடையவள், புண்ணியவதி, ஜாதக னுடைய (மாமன்) தாயின் சகோதரர் ஒருவர் வமிச விருத்தி இல்லா மல் நஷ்ட மடைவார், ஜாதகனுடைய இருபத்துநான்கு அல்லது இருபத்தைந்தாவது வயதில் ஜாதகனுடைய தாய் கண்டமடைவாள்.

நாடி அம்சம்—கமலாம்சம்:—

(111) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி பத்தாம் பாவத்தில் சனி வர்க்கோத்தமாம்சத்திலிருந்து சந்திரன் சூத்திர காலத்திலிருந்தால் ஜாதகன் விஷ்ணு பக்த குலத்தில் பாக்கிய வம்சத்தில் ஸீமந்த புத்திர ஞக ஜனிப்பான்.

(112) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி பூர்வ பாகத்தில் லக்கின திபதி பதினோராவது பாவத்திலிருக்க நான்காமாதிபதி கேந்திர ராசி யிலுமிருந்தால் ஜாதகனுக்கு நதிப் பிராந்தியத்தில் சிவாலய விஷ்ணு ஆலயத்துடன் கூடிய இடத்தில் சிறிய கிருமத்தில் தகப்பன் வர்க்கத் தார் வீட்டில் ஜனனமும், உத்தராம்சத்தினுல் தாய் வர்க்கத்தார் வீட்டிலும் ஜனனம் நேரிடும்.

(113) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி ஒன்பதாம் பாவாதிபதி யாகிய குரு பத்தாம் பாவத்தில் நீச்சத்தில் உச்சாம்சத்தில் இருந்து பிதுருகாரகனை சூரியன் உச்ச ராசியில் இருந்து நவாம்ச சக்கிரத்தில் மிதுனத்தில் செவ்வாயும் சூரியனுமிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் மத்திம வயதுடையவன், கல்வி யறிவுடையவன், க்ஷேத்திர மூலம் சுகி, விவசாயத்தில் அதிக பலனுடையவன், ஜாதகனுடைய தகப்பன் தன் தகப்பனுல் சம்பாதிக்கப்பட்ட கிரக க்ஷேத்திர லாப முடைய வன், சுயார்ஜித கிரக க்ஷேத்திர விர்த்தியும், சௌக்கியமும் உடைய வன், ஜாதகனுடைய தகப்பன் பாக்கிய வமிசத்தில் விவாக மடை வான், விவாகத்திற்கு பிறகு சௌக்கியமும், க்ஷேத்திர தன விருத்தி யும், தன் மனைவி மூலமும் மனைவியின் வர்க்க மூலமும் ஜாதகனுடைய தகப்பன் சுகமுடையவன், ஒரே மனைவி, ஒரே புத்திரனையு முடைய வன், ஜாதகன் தான் பிறந்த இரண்டு அல்லது மூன்றும் நாளில் கண்

டமுடையவனுகி ஜாதகனுக்கு கண்ட நிவர்த்தியும், அவ்வருஷ முடிவில் ஜாதகனுடைய தகப்பனுக்கு மரணமும் நேரிடும்.

(114) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி நான்காம் பாவாதிபதி பத்தாவது பாவத்திலிருந்து ஒன்பதாமாதியுடன் கூடியிருந்து நான்காம் பாவாதிபதி தன் உச்ச நவாம்சத்தில் பலத்துடனிருந்தால் ஜாதகனுடைய தாய் தீர்க்க வயதுடையவள், ஜாதகனுடைய தாய் விவாகமடைந்த பிறகு தினம் தினம் சுகமும் பாக்கியமுமடைந்து முன் ஜென்மாந்திர பாபவசத்தினுல் ஒரேபுத்திரனை அதாவது ஜாதகனைப் பெற்று அவ்வருஷ முடிவில் கணவனை இழந்து விதவையாவாள், ஜாதகனுடைய தாய் உடன் பிறந்த மூன்று சகோதரரும், ஒரு சகோதரியும் உடையவள், அந்த சகோதரி புத்திர சந்தானமடைந்து அப்பிரசவத்தினுல் சூதிகா கிரகத்திலேயே சுமங்கலியாய் மரித்துவிடுவாள், சகோதரர்கள் மூவரில் ஒருவன் பாலியத்தில் நஷ்டமும், மற்ற இருவர் சுகியாயுமிருப்பார்கள்.

(115) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி அம்மான்ஸ்தானுதிபதியான புதன் லக்கின கேந்திரத்தில் வலுத்து இருந்தால் ஜாதகனுடைய அம்மான் யோக விருத்தி, க்ஷேத்திர விருத்தி வாகனுதிசுகம், லோக பிரசித்தியான புகழ் இவற்றை யுடையவனுகவும் இருப்பான், ஜாதகனுடைய தாய் வமிசம் மிகப் பிரசித்த முடையதாகும்.

(116) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி ஐந்தாம் பாவாதிபதியாகி சூரியன் தன் உச்ச ராசியில் லக்கினத்தில் மூன்றும் பாவாதிபதியுடன் கூடியிருந்து புத்திர காரகனை குரு நீச்ச ராசியில் சந்திரனுடன் கூடியிருந்து புத்திரஸ்தானம் குடும்பாதிபதியாகிய சுக்கிரனுடன் கூடிய செய்வாயால் பார்க்கப்பட்டு லக்கினத்திற்கு குடும்பஸ்தானமும், சனியால் பார்க்கப்பட்டிருந்தால் ஜாதகனுக்கு புத்திர சந்தானத்துக்கு இடைஞ்சலுண்டாகும், சாந்தியால் புத்திர சந்தான முண்டாகும், சாந்தி செய்யாவிட்டால் தத்து புத்திரனுல் சந்ததி விர்த்தி உண்டாகும்.

(117) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி ஜாதகனுடைய குடும்பஸ்தானம் பதினோராவது பாவத்திலுள்ள செவ்வாயாலும் பன்னிரண்டாம் பாவத்திலுள்ள சனியாலும் பார்க்கப்பட்டிருந்தால் ஜாதகனுக்கு வாக்கு கொஞ்சம் தெத்துதலும், ஜாதகனுக்கு பாக்கிய வமிசத்தில் மூத்த அம்மானுடைய புத்திரி விவாகமும் நடக்கும், ஜாதகனுக்கு இருபத்தைந்து அல்லது இருபத்தாருவது வயதில் புத்திர உற்பத்தியும், புத்திர நஷ்டமும் உண்டாகி பிறகு முப்பத்தாறு முப்பத்தேழு வயதில் புத்திர உற்பத்தியும் உண்டாகும், புத்திரீ புத்திரர்கள் இருவர் சுகத்துடன் புத்திர பௌத்திர விர்த்தியுடன் ஆயுளுள்ள வரை சுகமுடனிருப்பார்கள், ஜாதகன் பாலியம் முதலில் தன் அம்மான்

வீட்டிலேயே வாசமும், யோக விருத்தியும் அடைந்து ஆயுள்வரை சுகியாயு மிருப்பான்.

நாடி அம்சம்—குசுமாம்சம்:—

(118) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி லக்கின பாவாதிபதி பன்னிரண்டாம் பாவத்திலிருந்து நான்காவதுபாவாதிபதி பதினோராம் பாவத்தில் இருக்கப் பிறந்தவன் பெரிய நதிப் பிராந்தியத்தில் புண்ணிய க்ஷேத்திரத்தில் சிவாலயமுள்ளதும், விஷ்ணு ஆலய மில்லாததுமாகிய பெரிய கிராமத்தில் அல்லது பட்டிணத்தில் கிழக்கு மேற்கு வீதியில் தெற்கு வாடையில் தகப்பன் வீட்டிலும், உத்தர பாகத்தில் வடக்கு தெற்கு வீதியில் மேற்கு பார்த்த வீட்டில் தாய் வீட்டிலும் ஜனித்தவனாவான்.

(119) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி செவ்வாய் மீனத்தில் லக்ஷ்மீயாம்சத்தை அடைந்திருந்தால் ஜாதகன் யோகமும், கீர்த்தியும் அடைவான்.

(120) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி குருவுக்கு கேந்திரத்தில் ராசி சக்கிரத்திலும் நவாம்ச சக்கிரத்திலும் செவ்வாய் இருந்தால் ஜாதகன் ராஜயோக மடைவான்.

(121) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி சந்திரன் கும்ப ராசியில் வர்க்கோத்தமத்தில் இருந்து நான்கு (முதலிய) கிரகங்கள் லக்கினம் அல்லது நான்கு ராசிகளிலாவது, நான்கு அம்சங்களிலாவது இருந்து மேற்படி சந்திரனைப் பார்த்தால் ஜாதகன் தனபதி ஆவான், அல்லது முன்சொன்னபடி வர்க்கோத்தமத்திலிருக்கப்பட்ட சந்திரன் லக்கினத்திலிருந்து அல்லது நான்காவது ராசியிலிருந்து நான்கு முதலிய கிரகங்களால் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் பெருத்த திரவியவந்தன் ஆவான், மேலும் இந்த ஜாதகன் இருப்த்தைந்தாவது வயதுக்கு மேலிருந்து ராஜனால் சன்மானிக்கப்பட்டு நற்புகழும் பிரபல வியாபார சுகமும் அடைவான், முப்பது வயதுக்கு மேல் ஐந்து வருஷம் மத்திய வயதில் கிலேசமடைவான்.

(122) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி லக்கினத்தில் சூரியனும் பன்னிரண்டாமிடத்தில் புதனும் இருந்து இரண்டாம் பாவாதி குசுமாம்சத்தில் இருந்தால் ஜாதகன் ஜீவன் முக்திக்குறிய வேதாந்த ஞானம் நிறைந்தவனாகவும், வேதாந்தத்தில் திடமான மனதுடையவனாகவும், அந்திய வயதில் பிரமத்தினிடம் மனதுடையவனாகவும், இந்த ஜென்மத்தில் நல்ல தெளிந்த மனதும் உடையவனாகி பிரம்ம குலமடைந்த பின்பு முக்தியும் அடைவான்.

(123) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி ஒன்பதாம் பவாதிபதி மூன்றும் பாவத்திலிருந்து சூரியன் லக்கின கேந்திரத்தில் தன் உச்ச

நவாம்சத்தில் வர்க்கோத்தமாம்சத்தில் சுகதாம்சத்தை அடைந்திருக்க குரு பங்கஜாம்சத்தில் இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் சௌக்கியம், கல்வி, அறிவு, விவேகம், ஒரே பாஷையில் சமர்த்துவம், அடைவான் எழுதுவதில் சமர்த்தன், வெளுப்பு நிறம், சம தேகம், ரூபலக்ஷணம், வாத தேகம், கொஞ்சம் பெருத்த சரீரம் உடையவன். தித்திப் புதுவர்ப்பு முதலியவற்றில் விருப்பம் முதலியனவும், சிவத்தியானமுடையவனும், இருதார முடையவனுமாவான்.

(124) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி சந்திரன் நான்காம் பாவாதிபதியாகி மீன ராசியில் வர்க்கோத்தமத்திலிருந்து சுமநாம்சத்திலும் இருந்தால் ஜாதகன் தாய் சாத்துவீகம், சுத்தம், பதிபக்தி, வமிசவிருத்தி, குணம் முதலியன உடையவள், ஆயினும் கொஞ்சம் தோஷமுள்ள தேக முடையவள், உடன் பிறந்த சகோதாருடையவள், ஜாதகனுடைய மூன்றுவது தெசையில் ஜாதகன் தாய் மறிப்பாள்.

நாடி அம்சம்—சுகதாம்சம்:-—

(125) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி ரிஷப ராசியில் சந்திரன் வர்க்கோத்தமத்தை அடைந்திருந்தால் விப்ர காலத்தில் பிறந்த ஜாதகன் விப்ர குலத்தில் பிறந்து சுகியாயிருப்பான்.

(126) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி லக்கின பாவாதிபதி இரண்டாம் பாவத்தில் நான்காம் பாவாதிபதியுடன் கூடியிருந்தால் ஜாதகன் நதிப் பிராந்தியத்தில் புண்ணிய க்ஷேத்திரத்தில் பூர்வ பாகத்தில் ஜனனமும், உத்தா பாகத்தில் சிறிய கிராமத்தில் ஜனனமும் அடைவான்.

(127) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி ஒன்பதாவது பத்தாவது பாவாதிபதிகள் மூன்றுவது பாவத்தில் இருந்து சூரியன் இரண்டாம் பாவத்திலிருந்தால் ஜாதகன் தகப்பன் தீர்க்காயுளுடையவன், சாத்துவீக குணமுடையவன், ஒரே மனைவி உடையவன், உடன் பிறந்த சகோதாருடையவன், ஜாதகனுடைய இரண்டாம் தெசையில் ஜாதகனுடைய தகப்பன் மரிப்பான்.

(128) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி நான்காவது பாவாதிபதியாகிய சந்திரன் தன் உச்ச ராசியில் இருந்தால் ஜாதகன் தாய் சுகியாயும், தீர்க்க வயதுடையவளும், சுத்தம், பதிபக்தி, வமிச விருத்தி முதலியன உடையவளுமாகி ஜாதகனுடைய மூன்றுவது தெசையில் மரிப்பாள்.

(129) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி லக்கினத்திற்கு பன்னிரண்டாம் பாவம் வமிச விருத்தி ஸ்தானம் ஆனபடியால் அந்த வமிச விருத்தி ஸ்தானத்திற்கதிபதி லக்கினத்திற்கு பத்தாம் பாவத்தில் நீச்

சர ராசியையடைந்து வர்கோத்தமமு மடைந்து இருக்க, அந்த பாவாதிபதியாகிய சனி ஜென்ம லக்கின பாவத்தில் நீச்சமடைந்து சரராசியில் மேஷத்தில் இருந்து, பன்னிரண்டாம் பாவாதிபதி, பத்தாம் பாவாதிபதியால் பார்க்கப்பட்டு, வமிச விருத்தி ஸ்தான மான பன்னிரண்டாம் பாவத்தில் லக்கினாதிபதியாகிய பாபக்கிரகம் இருந்து லக்கினத்திலும் பாபக்கிரகமிருந்தால் ஜாதகன் புத்திரனால் வமிசவிருத்தி யில்லாதவனாவான்.

(130) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி மோக்ஷ ஸ்தானாதிபதி யாகிய குரு பத்தாம் பாவத்தில் வர்க்கோத்தம பலத்துடன் இருந் தால் ஜாதகன் மோக்ஷமார்க்கத்தில் மனம் உடையவன். முன் ஜென்மாந்திர ஞான விசேஷத்தால் இந்த ஜென்மத்தில் குரு மூல மாக ஜீவன் முக்திப் பிரம்மபதசாத்திய ஞானமும், ராஜயோக சுலப சாத்தியமும் அடைவான்.

(131) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி ஒன்பதாம் பாவாதிபதி நீச்சராசியில் வர்க்கோத்தமாம்சத்தில் பிதுருகாரகனான சூரியனு டன் கூடி ஆறும்பாவத்திற்கதிபதியுடனும் கூடியிருந்து, ராகு கேதுக்களின் கூடயிருந்து, அல்லது ராகு கேதுக்களால் பார்க்கப் பட்டு, பத்தாம் பாவாதிபதியாலும் பார்க்கப்பட்டால் ஜாதகனு டைய தகப்பனும், பாட்டனும் சாஸ்திர சமர்த்தர்கள். பற்பல கிரா மங்களிலும் பிரசித்த முடையவர்கள், வேதமறிந்து காவிய (நாடக) ஞானமுடையவர்கள், வைதீகத்தாலும் ஜீவிப்பவர்கள், உதாரகுண முடையவர்கள். பூமிமூலம் சுகமில்லாதவர்கள். பிதுரார்ஜித பூமி கிரக மில்லாதவர்கள், சுயார்ஜித ஜீவனமுடையவர்கள், ஜாதக னுடைய தகப்பன் புத்திரனால் சுகமில்லாதவன், சொல்ப லாபமும், அல்ப சௌக்கியமு முடையவன், ஒரே தாரமுடையவன், புத்திரர் மூன்றுபேரை உடையவன் ஆவான்.

(132) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி சந்திரன் நான்காம் பாவத்தில் வர்க்கோத்தமம் பெற்று ராகுவுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தாய் தீர்க்க வயதுடையவள், தன் யௌவன காலத் தில் விதவையாகித் துக்கிப்பாள், ஜாதகனுடைய நான்காம் தெசை யில் தாய் மரிப்பாள்.

(133) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி நான்காம் பாவாதிபதி விப்ரகாலத்தில் நான்காவது பாவத்திலேயே யிருந்தால் ஜாதகன் சீமந்த புத்ரனாக ஜனிப்பான்.

(134) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி லக்கின பாவாதிபதி கேந்திரத்திலும் நான்காவது பாவாதிபதி நான்காம் பாவத்திலு மிருந்தால் பூர்வபாகத்தில் ஜனித்தவனுக்கு பெரிய ஆற்றுப் பிராந் தியப் புண்ணிய தேசத்தில் தாய்வீட்டில் ஜனனமும், உத்தராம்சத் தில் தகப்பன் வீட்டில் ஜனனமும் நேரிடும்.

5

(135) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி ஒன்பதாம் பாவாதிபதி எட்டாவது பாவத்திலிருந்து சூரியன் பதினோராவது பாவத்திலிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் கறுப்பு நிறமுடையவன், சௌக்கிய முடையவன், மெல்லிய தேகமுடையவன், வாதம் நிறைந்த தேகி, கல்வி அறிவுடையவன், அல்பவித்தையுடையவன், விசேஷ புத்தியுடையவன், பிதுரார்ஜித ஆஸ்தியுடையவன், விசேஷமாக சூத்திர புரோகிதமூலம் ஜீவிப்பவன், இரண்டு தேசங்களில் பிதுரார்ஜித பாகத்தில் சிலகாலம் வாசமும், பிறகு வேறு தேசத்தில் தன் சகோதரிபாகத்தில், அல்பகாலம் வாசமும், தனவிருத்தி, பூமிவிருத்தி, சுகமும் உடையவன்.

(136) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி பன்னிரண்டாம் பாவத்தில் புதன் இருந்தால் ஜாதகன் பூர்ணமான வேதாந்த ஞானமடைந்து வேதாந்தத்தில் திடமான மனதடைவான், இந்த ஜென்மத்தில் புண்ணியாத்துமாவாகவும், அந்தியத்தில் (பிராமண ஜென்மத்தில்) மோக்ஷமும் அடைவான்.

(137) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி லக்கின பாவாதிபதி ஒன்பதாவது பாவத்திலும் சந்திரன் நான்காவது காலத்திலு மிருந்தால் ஜாதகன் சிவபக்த குலத்தில் சீமந்த புத்திரனாக ஜனிப்பான்.

(138) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி பூர்வபாகத்தில் லக்கின பாவாதிபதி ஒன்பதாம் பாவத்திலும், நான்காவது பாவாதிபதி கேந்திர பாவத்திலுமிருந்தால் ~~ஜாதகன்~~ புண்ணிய க்ஷேத்திரத்தில் பெரிய நதிப்பிராந்திய தேசத்தில் சிவாலய விஷ்ணு ஆலயங்கள் அதிகமாகவும் கிழக்கில் கங்கைக்குச் சமானமான குளம் உள்ளதுமான இடத்தில் உறவினரான வேறு ஒருவர் வீட்டில் ஜனனமும், உத்தரபாகத்தில் நதிப்பிராந்தியத்தில் சிவாலய சமீபத்தில் தாயைப் பெற்ற பாட்டன் வீட்டில் ஜாதகனுக்கு ஜனனமும் நேரிடும்.

(139) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி கேந்திரத்தில் இரண்டாம் பாவாதிபதியாகி, சுக்கிரன் மகரத்தில் மித்திர ராசியிலிருந்து தன் உச்ச நவாம்சத்தில் ஐந்தாம் பாவாதிபதியுடன் கூடியிருந்து, வாகீசாம்சத்தில் மேற்படி சுக்கிரன் இருந்தால் ஜாதகன் தனமும், புகழும் அடைவான், இனிமையாயும் மெதுவாகவும் பேசுபவன், சத்தியமே பேசுபவன், ஸ்ரீமான், தன் தகப்பனைவிட மேலான யோகமடைவான், குடும்பவிர்த்தி உடையவனுவான்.

(140) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி மூன்றுவது பாவாதிபதியாகிய புதன் ஒன்பதாம் பாவத்தில் லக்கினுதிபதியுடனும் சகோதர காரகனுடனும் கூடியிருந்து பதினோராம் பாவத்தில் கேது விருந்தால் ஜாதகன் மூத்த சகோதரனில்லாதவன், அன்றி இளைய சகோதரம் பிறந்தாலும் அவர்கள் மரித்து விடுவார்கள், பேத

சகோதரர் இருவர் உண்டு, அவர்களுடன் ஜாதகன் சிறிது காலம் விவாதமுடையவனா யிருப்பான், பிறகு அவர்களில் ஒருவன் மரிப்பான், வேறு ஒருவன் கங்காஸ்நாநம் முதலிய புண்ணியம் செய்து தேசசஞ்சாரியாகி புத்திரன் இல்லாதவனாகவும், விவாகமே இல்லாதவனாகவும் இருப்பான்.

(141) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி நான்காவது பாவாதிபதி ஏழாவது கேந்திர ராசியில் இருந்து குருவுடன் கூடியிருந்தாலும், குருவால் பார்க்கப்பட்டாலும், சந்திரன் தன் உச்சாம்சத்திலிருந்து வைசேஷிகாம்சத்திலு மிருந்து குருவால் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் தாய் சிறிது காலத்தில் சுமங்கலியாகவே மரிப்பாள், ஜாதகன் தாய் சாத்துவிகம், சுத்தம் முதலியன உடையவள், தவிர ஜாதகனுக்கு மாற்றாந்தாய் யோகமுண்டு, ஜாதகனுடைய மாற்றாந்தாய் துஷ்ட சுபாவமுடையவள், அவளுக்கு மூன்று குழந்தைகள் பாலியத்தில் மரித்துவிடும், அதனால் சிலகாலம் மனவியாகூல மடைவாள், ஜாதகன் தகப்பன் கடன் உபத்திரவத்தினால் சகல ஆஸ்திகளையும் இழந்துவிட்டுப் பிறகு தன் உடன் பிறந்த சகோதரனால் சுகமடைவான்.

(142) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி ஐந்தாம் பாவாதிபதியாகிய சூரியன் எட்டாம் பாவத்தில் ராசியிலும், நவாம்சத்தில் மீன நவாம்சையில் விரயாம்சத்தையுமடைந்து இருந்து, புத்திர காரகனாகிய குரு கேந்திர ராசியில் இருந்து, விருச்சிகாம்சத்திலும் இருந்து புத்திரபாவத்தைபார்க்காமலிருந்து இரண்டு பதினென்றுக்குடைய பாவாதிபனுடன் கூடியிருந்தாலும், சூரியன் சுகதாம்சத்தில் இருந்து சனியாலும் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் புத்திர சந்தானத்துக்கு தடங்கலுடையவனாவான். ஜாதகன் தன் வீட்டில் லக்ஷ்மீ கடாக்ஷமுடையவன், வியாபாரத்தால் தனலாபமடைவான்.

(143) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி ஐந்தாம் பாவத்தில் ராகு இருந்து, ஐந்தாம் பாவமான புத்திர நவாம்சம் செவ்வாயால் பார்க்கப்பட்டு ஐந்தாம் பாவாதிபதியும் சனியால் நன்கு பார்க்கப்பட்டால் ஜாதகன் புத்திரசந்தான தடங்கலுடையவன், சிறிதுகாலம் கடந்து பிறகு சேதுஸ்நாநம் நாகசாந்தி முதலியன செய்தால் ஜாதகனுக்கு புத்திரரிருவர் உண்டாவார்கள்.

(144) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி புத்திரஸ்தானம் சனியால் பார்க்கப்பட்டிருந்து மேற்படி சனியும் புத்திர ஸ்தானாதிபதியும் குருவால் பார்க்கப்பட்டால் ஜாதனுக்கு புத்திர ஸந்தானம் ஐம்பத்திரண்டாவது வயதில் அல்லது ஐம்பத்திமூன்றும் வயதில் சந்தேக மில்லாமல் உண்டாகும்.

(145) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி ஒன்பதாம் பாவாதிபதி கேந்திர ராசியிலிருந்து பாராவதாம்சத்திலுமிருந்து சூரியன் எட்டாம் பாவத்தில் விரய நவாம்சத்தில் பங்கஜாம்சத்திலும் இருந்து எட்டாவது அம்சமான ரந்திராம்சம் சனியால் பார்க்கப் பட்டால் ஜாதகனுடைய தகப்பன் தீர்க்காயுளுடையவன், விசேஷ சிவபக்தி உடையவன், பித்தவாயு சுபாவமுடையவன், தேவ பிராமண பக்தி உடையவன், தியாகமுடையவன், கெம்பீர புத்தியுடையவன், உதார குணமுடையவன், பாலிய வயதில் வைசியப் பிரபுவால் அல்பசுகமும், பிறகு அதிக சுகமும், அவன் மூலமாக வியாபாரத்தில் நல்ல ஜீவனமும் உடையவன், அந்த வைசியப்பிரபு லக்ஷக்கணக்கான ஆஸ்தியும், அநேக தேசங்களில் கீர்த்தியுமுடையவன், ஜாதகனுடைய தகப்பன் இரண்டு மனைவியருடையவன், அவர்களில் மூத்தமனைவி ஒரு புத்திரனைப் பிரசவித்து இறந்து விடுவாள், பிறகு ஜாதகனுடைய தகப்பன் இரண்டாவது மனைவியை மணப்பான், அவள் கொஞ்சம் துஷ்ட சுபாவமுடையவள், இவள் நான்கு அல்லது ஐந்துபேர் புத்ரீ புத்திரரைப் பிரசவிப்பாள், எப்போதும் சண்டையிடுபவள், ஜாதகனுடைய தகப்பன் ஜாதகன் மூலமாக ஆயுள்வரையில் சுகமடைவான், ஜாதகனுடைய இரண்டாம் தெசையில் ஜாதகனுடைய தகப்பன் மரணமடைவான்.

(146) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி நான்காம்பாவாதிபதி கேந்திரத்திலும் நவாம்சத்தில் தன் உச்ச நவாம்சத்தில் பங்கஜாம்சத்திலுமிருந்தால் ஜாதகன் தாய் பாக்கியசாலி, சாத்துவீகம், சுத்தம், பதிபக்தி, வம்சவிர்த்தி முதலியன உடையவள், ஜாதகன் முன்பின் சகோதரனில்லாதவன், என்று சிலரும், ஒரு சகோதரி மட்டும் உடையவனென்று வேறுசிலரும் எண்ணுகின்றனர். ஜாதகன் தாய் சுமங்கலியாகவே மரிப்பாள்.

(147) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி நான்காம்பாவாதிபதி ஒன்பதாம் பாவத்தில் இருந்து நான்காவது காலத்திலுமிருந்தால் ஜாதகன் விஷ்ணு பக்திஉடைய குலத்தில் ஜனிப்பான்.

(148) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி ஒன்பதாவது பாவத்தில் சூரியனிருந்து ஒன்பதாவது பாவாதிபதி ஆறுவது பாவத்திலிருந்து இருவரும் நவாம்சத்தில் சிம்மராசியில் இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் தீர்க்கவயதுடையவனும், சம்பூர்ண வித்தையில்லாதவனும், நற்குண பூர்ணனும், பசு, எறுமை, ஆடு முதலியவற்றால் ஜீவனமுடையவனும், பால், தயிர், நெய் இவைகளால் ஜீவிப்பவனும், ஐயாயிரம் பசு, எறுமை ஆடு இவைகளை உடையவனும், தன விருத்தி உடையவனும், ஒரே மனைவி உடையவனும், கொஞ்ச துஷ்ட சுபாவமுடையவனும், புத்திர சந்தானமுடையவனும் ஆவான். இவன் ஜாதகனுடைய நான்காவது தெசைமுடிவில் அல்லது ஐந்தாவது தெசையின் முதலில் மரிப்பான்.

(149) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி நான்காவது பாவாதிபதி ஒன்பதாம் பாவத்திலிருந்து, மூன்றும் நவாம்சத்தில் சுக்கிரனுடனும் கூடியிருந்தால் ஜாதகன் தாய் சாத்துவிகம், சுத்தம், பதிபக்தி, வமிச விர்த்தி முதலிய உடையவள், வீட்டு வேலைகளில் சமர்த்துடையவள், அவள் தனவிருத்தி உடையவள், லக்ஷ்மீ கடாக்ஷமுடையவள், உடன்பிறந்த சுகமுள்ள இரண்டு மூன்று சகோதரருடையவள், நான்கு சகோதரிகளுமுடையவள், இவர்கள் புத்திர சந்தான விருத்தி உடையவர்கள், ஆயுள்வரை சுகமுடையவர்கள்.

(150) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி பத்தாம் பாவாதிபதி கேந்திர ராசியிலிருந்து சந்திரன் நான்காவது காலத்தில் இருந்தால் ஜாதகன் நான்காவது கெற்பத்தில் அல்லது ஐந்தாவது கெற்பத்தில் சிவபக்த குலத்தில் ஜனனமாவான்.

(151) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி லக்கின பாவாதிபதி நான்காவது பாவத்திலும், நான்காம் பாவாதிபதி லக்கின கேந்திரத்திலும் இருந்தால் ஜாதகன் நதிப்பிராந்தியத்தில் ஹரிஹராலய சமீபத்தில் பெரிய கிராமத்தில் அல்லது பட்டினத்தில் கிழக்கு மேற்கு வீதியில் தகப்பன் வீட்டில் தெற்கு வாடையில் ஜனனமும், உத்தராம்சத்தில் பெரிய கிராமத்தில் வடக்குத் தெற்கு வீதியில் தாய் வீட்டில் ஜனனமும் அடைவான்.

(152) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி லக்கின பாவாதிபதி நான்காவது பாவத்திலும், நான்காவது பாவாதிபதி லக்கின கேந்திரத்திலுமிருந்து இரண்டாம் பாவாதிபதியும் நான்காவது பாவத்தில் இருந்தால் ஜாதகன் சுகம், சௌக்கியம், வியாபாரசுகம், தனவிருத்தி, தாய்தகப்பன், சகோதரம், பூமிமுதலிய சகல விருத்தியும் அடைபவன்.

(153) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி ஒன்பதாம் பாவாதிபதி ஆறுவது பாவத்தில் பங்கஜாம்சத்தில் இருந்து, நீச்சாம்சத்தில் பிதுரு காரகனை சூரியன் நான்காவது பாவத்தில் சுயநவாம்சத்தில் வசுதாம்சத்திலும் இருந்தால் ஜாதகன் தகப்பன் தீர்க்க வயதுடையவன், கல்வி அறிவுடையவன், வாததேகி, கொஞ்சம் ஸ்தூல சரீரமுடையவன், தித்திப்பு, துவர்ப்பு, புளிப்பு முதலியவற்றில் பிரியமுள்ளவன், பரஸ்திரீ சங்கம எண்ணமுடையவன், பாலிய வயதில் அல்பசுகமும், யௌவன வயதில் யோகமுமுடையவன், பின்வயதில் புத்திரனால் சுகமடைவான், ஜாதகன் பிறந்த பிறகு ஜாதகன் தகப்பன் யோகமடைந்தவன், ஜாதகன் பிறந்த பூமிக்கு வடக்கில் அல்லது வடகிழக்கில் சூத்திர வியாபார பிரபுவால் அரிசி வியாபார மூலம் தனலாப முடையவனுவான்.

அன்றி தீபாந்திர மூலமாக அல்ப தனலாபமும், சொல்ப நஷ்டமும், கஷ்டமும், ரசவாதத்தில் பிரமையினால் சூத்திரன் மூலமாக திரவிய விரயமும் அடைவான், ஜாதகனுடைய தகப்பன் ஒரே தாரமுடையவன், ஜாதகனுடைய ஐந்தாம் தெசையில் ஜாதகனுடைய தகப்பன் மரணமடைவான்.

(154) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி நான்காவது பாவாதிபதி லக்கின கேந்திரத்தில ராசியிலும், நவாம்சத்தில் ஆருவது அம்சத்திலுமிருந்தால் ஜாதகன் தாய் வமிசவிருத்தி, சாத்துவீகம் முதலிய சகல சுப விருத்தியும் உடையவள், உடன் பிறந்த வமிச விருத்தி உடைய நான்கு சகோதரருடையவள், நான்கு சகோதரிகளையு முடையவள், வமிசவிருத்தியுடைய மூன்று சகோதரிகளை உடையவள், மற்ற ஒருத்தி பாலியத்திலேயே மரிப்பாள், ஜாதகன் தாய் ஜாதகனுடைய ஐந்தாவது தெசையில் மரிப்பாள்.

ரிஷப லக்கினம்

(1) ஜென்ம லக்கினம் ரிஷபம் (கமலாம்சம்) ஆகி பூர்வபாகத்தில் லக்கின பாவாதிபதி மூன்றும் பாவத்தில் இருந்து செவ்வாயால் பார்க்கப்பட்டால் துர்க்காரண்ணிய கிரிப்பிராந்தியத்தில் அல்லது புண்ணிய க்ஷேத்திரத்தில் நகரத்தில் ஜனனமும், உத்தரபாகத்தில் பெரியகிராமத்தில் தேவாலய சமீபத்தில் ஜனனமுமடைவான்.

(2) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி கமலாம்ச பூர்வபாகத்தில் லக்கினத்தில் சனியிருந்தாலும், சனி லக்கினத்தைப் பார்த்தாலும் கடகராசியிலுள்ள லக்கின பாவாதிபதி குருவால் பார்க்கப்பட்டால் ஜாதகன் தாய்க்குப் பிரசவத்தில் அதிக வேதனையும், உத்தர பாகத்தில் அற்ப வேதனையுமுண்டாகும். அப்போது சந்திரன் ஐந்தாம் பாவத்தில் இருந்தால் குருவால் பார்க்கப்பட்டாலும், ஜாதகன் தாய்க்குப் பீடையால் பயமும், ஜாதகனுக்கு வைசூரி ஜுரபயமும், மாந்த ஜுரபயமும் உண்டாகும்.

(3) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி லக்கின பாவாதிபதி மூன்றும் பாவத்திலும், எட்டாம் பாவாதிபதி சுயக்ஷேத்திரத்திலுமிருந்து சந்திரன் கேந்திர திரிகோணத்திலிருந்தால், ஜாதகன் சகலதோஷங்களும் விலகி அறுபத்தெட்டு வயதுடையவனுவான். முப்பத்திரண்டு, முப்பத்திநான்கு இந்த வயதுகளில் சன்னி பாதத்தால் பீடையும், நாற்பத்திரண்டில் மேக ரோக பீடையும், அறுபதில் அபமிருத்து பயமும் உண்டாகும், அப்போது குரு சக்கிரதானம் ஆயுள்ஹோமம், மிருத்தியுஞ்ஜெயஜெபம், ஈசுவர சன்னிதியில்

லக்ஷமும் ஜபித்து மேலும், * மகிஷிதானமும் செய்தால் அக்காலம் அபமிருத்து நீங்கி சுகமடைவான்.

(4) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி சூரியன் சுக்கிரனுடன் கூடி மூன்றும் பாவத்தில் இருந்து, ஒன்பதாம் பாவாதிபதி புதனுடன் கூடி நான்காம் பாவத்திலிருந்தால் ஜாதகன் தகப்பன் விசேஷ சுகமுடையவன், மேலான தயாளகுண முடையவன், தேவப் பிராமணப் பக்தியுடையவன், உடன்பிறந்த சகோதரரிருந்தும் கடைசியில் ஒண்டியாய்விடுவான், விஷ்ணுபக்த மதத்தையுடைவன், விஷ்ணு சிவபக்தியுடையவன், கல்வி யறிவுடையவன்.

(5) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி சூரியன் கடகராசியிலிருந்து, ராகுவுடன் கூடியிருந்தாலும், ராகுவால் பார்க்கப்பட்டாலும், ஜாதகனுடைய தகப்பன் மூன்று தாரமுடையவன், துராலோசனை செய்பவன், பிறர் ரகசியங்களை வெளியிட்டு விடுவான்.

(6) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி ஒன்பதாம் பாவத்திற் கதிபதி புதனுடன் கூடி நான்காம் பாவத்திலிருந்தால், ஜாதகன் தகப்பன் தியாக போகாதிகளுடையவன், தயையுடையவன், சங்கீதப் பிரியன், போகஸ்திரீகளிடம் சரசம்செய்பவன், வேசி ஸ்திரீ சேர்க்கையுடையவன், திரவிய சம்பாதனையில் சமர்த்தன், க்ஷேத்திர கிராமாதி சுகமுடையவன், விசேஷ குருபக்தியுடையவன், நற்செய்கை, ஆச்சாரம் முதலியன உடையவனுவன், பிரபு வசியமுமுடையவன்.

(7) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி மூன்றும் பாவத்தில் சூரியன் கின்னராம்சத்தில் இருந்தால் ஜாதகன் தகப்பன் ராஜாங்கத்தில் சேனாதிகாரியாவன், வேலையாள்களும், சேவகர்களும் நிறைந்தவன், பாலியம்முதல் சுகமுடையவன், மத்திய வயதில் விசேஷ கீர்த்தியும், பிரபலமுமுடையவன், விசேஷ பிரபு பிரீதியுடையவன், வாகனம் முதலான நல்ல யோகமுடையவன், அனேக சேனைகளுக் கதிகாரியாவன், திரவிய சம்பாதனையில் சமர்த்தன் நரவாகனம் முதலானவையுடையவன், பிரபுவழியில் நல்ல யோகமுடையவன், இரண்டு வாகன முடையவன், சுயஜனங்களில் மிக்கப் பிரசித்தியுடையவன், ராஜ சன்மானமடைவான், கிரகக்ஷேத்திர விருத்தி தனதான்னிய சமர்த்திமுதலியன உடையவன், வெளி தேசங்களில் கீர்த்தியுடையவன், வயோதிக வயதில் புத்திரன் மூலமாக யோகமடைவான், தடாக உத்தியானாதிகளுக்குத் தர்மம் செய்பவன், புத்

---

* குறிப்பு:—இப்புத்தகத்தில் வரும், மகிஷிதானம், சாகதானம் என்னும் தானங்களைச்செய்யும் விதிகளை நமது தசாரிஷ்ட நிவாரணி என்னும் புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விலை அணு (0—6—0) ஆறுதான்.

திரனல் சுகமுடையவன், மத்தியில் அரசனல் கொஞ்சம் கோபிக்கப் படுபவன், மத்திய அந்தியத்தில் கொஞ்சம் சத்துரு பயமுடையவன், வயோதிக வயதில் பிரபல யோகமுடையவன், ஏதாவது கொஞ்சம் தர்மம் செய்வான், தீர்த்த யாத்திரை செய்வான், எப்போதும் நற்கதைகளைக் கேழ்ப்பான், தேவப் பிராமணபூஜை செய்பவன், இப்படிப்பட்ட குணங்களுடையவனை ஜாதகனுடைய தகப்பன் ஜாதகனுடைய மூன்ருந்திசையில் மரிப்பான், ஜாதகனுடைய சிற்றப்பன் ஒருவன் நல்லயோக முடையவன், சாந்த சுபாவமுடையவன், மூன்றுதார யோகமுடையவன், ராஜயோக விருத்தியுடையவன், கீர்த்தியுடையவன், சம்பத்துடையவன், மிக்க அழகுடையவன், சுகமுடையவன், கீர்த்தியுடைய புத்திரீ புத்திரருடையவன், மானீ, புகழப்பட்டவன், ராஜாஸ்தானத்தில் பிரசித்தியுடையவன், க்ஷேத்திர கிராமாதி யோகமுடையவன், இரண்டு வாகனமுடையவன், ராஜ சன்மானமடைவான், விசேஷ பிரபு பிரீதியுடையவனுவான்.

(8) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி நான்காம் பாவாதிபதியாகிய சூரியன் மூன்ரும் பாவத்தில் சுக்கிரன் ராகு இவர்களுடன் கூடியிருந்து நான்காம் பாவத்தில் சனி புதனுடன் கூடியிருந்து, ஐந்தாம்பாவத்தில் சந்திரனிருந்து குருவால் பார்க்கப்பட்டால் ஜாதகன் தாய் விசேஷ சுகமுடையவள், பதிபக்தியுடையவள், அன்னதானப் பிரியமுடையவள், பொறுமையுடையவள், வமிச பாக்கிய விருத்தியுடையவள், புத்திரனுக்குப் பிரியமானதைச் செய்பவள், தர்மசிந்தையுடையவள், ஜாதகனுடைய நான்காந்திசையில் மரிப்பாள்.

(9) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி மூன்ரும் பாவாதிபதியாகிய சந்திரன் ஐந்தாம்பாவத்திலிருந்து குருவால் பார்க்கப்பட்டு இருந்து, செவ்வாய் பன்னிரண்டாம் பாவத்தில் சுய க்ஷேத்திரத்தில் வலுவுடனிருந்தால், ஜாதகன் காலங்கடந்து சகோதரருடையவன். இதற்கே மேலும் வேறுசிலர்.

(10) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி மூன்ரும் பாவத்தில் பாபரிருந்து சுக்கிரன் குருவுடன் கூடியிருந்தாலும், சுக்கிரன் குருவால் பார்க்கப்பட்டாலும், காலங்கடந்து சகோதரவிருத்தியுடையவனுவன், பின்சகோதரன் ஒருவனும், சகோதரி ஒருவளும், தீர்க்காயுளுடையவர்களா யிருப்பார்கள். என்று எண்ணுகின்றனர்.

(11) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி (கன்னியில் சந்திரனும், மீனத்தில் குருவும் இருக்கும்) கேசரீயோகத்தில் புத திரிம்சாம்சத்தில் பிறந்தவன் கறுப்பு நிறமுடையவன், அறிவாளி, பித்த சுபாவமான சரீரமுடையவன், கொஞ்சம் வாயுமீறிய தேகமுமுடையவன்,

ரூபலக்ஷணம் நிறம்பியவன், கல்வியுடையவன், தன் குல பாஷையில் சதுரன், பாஷாந்திரத்திலும் ஞானமுடையவன், நாடக அலங்கார சாஸ்திரங்களின் சங்கீதப்பிரியன், பற்பல வித்தை எழுதுவதிலும் சமர்த்தன், நல்ல ஞானமுடையவன்.

(12) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி மூன்றும்பாவத்தில் லக்கின பாவாதி ராகுவுடன் கூடியிருந்தால் ஜாதகன் துராலோசனை செய்யும் புத்தியுடையவன், சேர்க்கவும் கலைக்கவும் வல்லவன், மித்திர வஞ்சனை செய்பவன், சுயகாரியவாதி, பலவான், சத்துருக்களை அழிப்பான், பிரதாபமுடையவன், விஷ்ணுபக்தி மதாச்சாரமுடையவன், ஹரிசங்கர பக்தியுடையவன், அளவாய்ப் புசிப்பான், ரகசிய மனமுடையவன், காமீ, ஆயுதத்தைத் தரிப்பவன், அரசனுக்கு இஷ்டமானவன், தேவப்பிராமண விசுவாசி, தியாகி, கெம்பீர புத்திமான்.

(13) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி இரண்டாம் பாவாதிபதி சனியுடன் கூடில் ஜாதகன் பராக்கிரமமுடையவன், சாகசமுடையவன், இரு தாரமுடையவன், சம்போகத்தில் ஆசையுடையவன், க்ஷேத்திர கிராமாதிபதி, பிரபு, பாலியம் முதல் சுகமுடையவன், பதினாறு வயதுமுதல் பிரசித்தியுடையவன், பதினேழல்லது பதினெட்டாம் வயதில் விவாகமடைவன், வெளுப்புநிறமுடைய மனைவியுடையவன், இருபது வயதிற்குமேல் விசேஷமுடையவன், பிரபுப் பிரீதியுடையவன், இருபத்தைந்து வயதுமுதல் விசேஷ யோகமடைவன், மனைவி சுகம், புத்திரவிருத்தி, தகப்பனால் பிரசித்தி முதலியன உடையவன், குதிரை யேறுவதில் நிபுணன், ராஜ சன்மான மடைவான், முப்பது வயதிற்குமேல் விசேஷ பாக்கியமும், பல்லக்கு முதலியனவுமுடையவன், பிரபு வசியமுடையவன், அனேக சேனாதிகாரியாவன், இரண்டு வாகனமுடையவன், சுய ஜனங்களில் கீர்த்தியுடையவன், முப்பத்தைந்தில் மனஸ்தாபமடைவான், தகப்பன் மரணமும் நேரிடும். முப்பத்தாறில் நற்கீர்த்தியும், நாற்பதில் மனோவேதனையும், தாய்க்குப் பீடையும், அதிக விரயமும், கொஞ்சம் யோகபங்கமும் உண்டாகும், பிறகு யோகவிருத்தியும், விசேஷ பிரபுப்பிரீதியும், ஐம்பதில் யோகவிருத்தியும், ஆயுள்வரை யோகமும் அடைவான்.

(14) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி சுக்கிரன் மூன்றும் பாவத்தில் ராகுவுடன் கூடியிருந்தாலும், அதி மித்திராம்சத்தில் ஷை சுக்கிரனிருந்தால் ஜாதகன் ஒரே தாரமுடையவனாவன்.

(15) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி நான்காம் பாவத்தில் புத்திர ஸ்தானாதிபதியாகிய புதன் இருந்து ஒன்பதாம் பாவாதிபதியுடனும், கூடியிருந்து புத்திர காரகனான குரு லக்கினத்திற்குப் பதினொன்றில் இருந்து, சந்திரன் லக்கினத்திற்கு ஐந்தாம்பாவத்

தில் இருந்தால் ஜாதகன் அற்ப சந்தான யோகமுடையவன், அதற்காக நாகப்பிரார்த்தனையும், சுப்பிரமணிய விரதமும் இருந்தால் ஜாதகன் இரு புத்திரருடையவன், இரு புத்திரிகளுமடைவன், இதைவிட அதிக சந்ததி பிறந்தாலும் அதிகமானவர்கள் மரித்து விடுவார்கள்.

(16) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி இரண்டுக் கிரகங்கள் (மீனத்தில் குருவும், மேஷத்தில் செவ்வாயும்) யோகாம்சத்தில் சுய க்ஷேத்திரத்தில் இருந்தால் ஜாதகன் ராஜயோகமடைவன்.

(17) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி நான்கு கிரகங்கள் சுய க்ஷேத்திரங்களில் இருந்தால் ஜாதகன் தரித்திர யோகமடைவான்.

(18) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி நான்கு கிரகங்கள் உச்ச ராசியில் இருந்தாலும் ஜாதகன் மேற்சொல்லிய பலனையேயடைவன்.

(19) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி நீச்சபாவத்தில் உச்சத்தில் இரண்டு கிரகங்களிருந்தாலும், அல்லது மூன்று கிரகங்கள் உச்சத்தில் இருந்தாலும் ஜாதகன் ஜீவனத்திற்கு கிலேசமடைவான், மேற்படி கிரகங்களே நீச்சாம்சத்தில் இருந்தால் பின்னும் விசேஷமாயடைவான்.

(20) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி ஒன்பது பத்துக்குடைய பாவாதிபதி இரண்டு ஐந்துக்குடைய பாவாதிபதியுடன் கூடியிருந்தால் ஜாதகன் அந்த திசைகளில் விசேஷ கீர்த்தியும், விசேஷ பாக்கியமும், பிரபு வசியமும், புத்திரவர்க்கத்தில் அதிக சுபமும், தன தான்னியவிருத்தியும், வாகன வஸ்திர லாபமும், சகோதர வர்க்கத்தில் அதிக சுகமும், சுபமும், தன் தகப்பனைவிட மேலான யோகமும், மனைவி, புத்திரன் முதலிய சுகமும், தனதான்னிய விருத்தியும், ஆயுள்வரை சுகமும், திசைமுதலில் பிரபு நாசமும், பிரபுவின் புத்திரனுடன் சினேகமும், அவனால் அதிக சுக தனலாபமும், சுபுத்திரப் பிரபலமும், கீர்த்தியும், தர்மசித்தியும், குளம் கிணறு, நடபாவி முதலிய புண்ணிய கர்ம விருத்தியும், நித்திய சம்பத்தும், நித்திய கல்யாணமுமாகவும், நற்கதைகளைக் கேழ்ப்பவனும், தேவப் பிராம்மண பூஜையும், இரண்டாம் பாவாதிபதி திசையில் பூர்வ பாகத்தில் இப்பலனும், பிற்பாதியான சந்திர புத்தியின் ஆரம்பத்தில் தேக நிரியாணமும் அடைவான், இந்த ஜென்மத்தில் நல்ல புண்ணியமும், அதின் பலனுக மறுஜன்மம் மிகவும் மேலானதாகவுமடைவான்.

(21) ஜென்ம லக்கினம் (ரிஷபம் மீனநவாம்சம்) ஆகி இந்திராம்சத்தில் லக்கின பாவாதிபதியிருந்து புததிரிம்சாம்சத்தில் பிறந்தவன் உடன்பிறந்த சகோதரருடையவன், விஷ்ணு பக்தகுலத்தில்

வீரவைஷ்ணவ வம்சத்தில் (தேன்கூடு கட்டுவிக்கும் வமிசத்தில்) தேன்கூடுகளை நிர்மாணம் செய்பவனுவான்.

(22) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி லக்கின பாவாதிபதியாகிய சுக்கிரனுடன் நான்காம் பாவாதிபதியும், சுபரும் கூடியிருந்தால் நதி சமீபத்தில் உள்ள பெரிய கிராமத்தில் சூரிய வாஸ்துவிலும், உத்தரபாகமானுல் இதர வாஸ்து வீதியிலும் ஜனன மடைவான்.

(23) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி லக்கின பாவாதிபதி சுபக்கிரகத்துடன் கூடியிருந்தால் ஜாதகன் தாய் பிரசவத்தில் அற்ப வேதனையடைவாள். ஜாதகனுக்கு ஐந்து வருஷம்வரையில் பால தோஷம் உண்டாகும், முன் புண்ணியத்தினுலும், தைவானுகூலத்தாலும் சுகமடைவான்.

(24) ஜென்ம லக்கினுதிபதியாகிய சுக்கிரன் ஐந்தாம் பாவத்திலும், எட்டாம் பாவாதிபதி தசம கேந்திரத்திலும் இருந்து சுக்கிரனுடைய ராசியாகிய ரிஷப லக்கினத்தில் பிறந்தவனுக்கு பால தோஷம் நிவாரணமாகும்.

(25) ஜென்ம லக்கினுரூடாதிபதியாகிய சனி தன் உச்ச ராசியிலிருந்து எட்டாம் ஆரூடாதிபதி செவ்வாயானுல் ஜாதகனுக்கு ஆயுள்விருத்தி உண்டாகும், தீர்க்காயுசுடையவனுக, எழுபத்தைந்து வயதுவரை ஜீவித்திருப்பான், எட்டாம் பாவாதிபதி யிருக்கும் ராசி அல்லது அம்சதிரிகோணம் அல்லது எட்டாம் பாவாதி பார்க்கும் ராசியில் கோச்சாரத்தில் சனி வரும்போது ஜாதகனுக்கு மாரகனுடைய (தெசா) புக்தியிலும், ஆறும் பாவாதிபதியிருக்கும் அம்ச திரிகோணத்தில் சனி வரும்போதும் ஜாதகனுக்கு பாபக்கிரக (தெசை) புக்திகளில் ரோகம் உண்டாகும், பன்னிரண்டாம் பாவாதிபதியிருக்கும் அம்ச திரிகோணத்தில் சனி வரும்போது தேகபீடையும், பயமும், தனநாசமும் ஏற்படும் அக்காலம் சனிப் பிரீதி செய்தால் சுகம் உண்டாகும், இதேபோல் பண்ணிரண்டு பாவங்களையும் ஊகிக்கவும்.

(26) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி ஜடாராம்சத்தில் பிறந்தவனுக்கு சூரியன் கேந்திர திரிகோணத்திலிருந்து ஒன்பதாம் பாவாதியாகிய சனி தன் உச்சராசியில் இருந்தால் ஜாதகன் தகப்பன் தீர்க்கவயதடைவான், வெகுஆயுசுடையவன், உடன்பிறந்த சகோதருடையவன், அனேக பிராதாக்களுடையவன், ஆயினும் ஏழு சகோதரர்களுடையவன், இரண்டு பெண் சகோதரமுடையவன், அவர்களில் ஒருத்தி தானுகவே விபசாரம் செய்வாள், தத்த புத்திர சுகமுடையவன், சகோதரனுல் சற்புத்திரனையடைவான், அனேக வியாபார சுகமுடையவன், தன் ஜனங்களுக்குத் தலைவனுவான், பற்

பல கிராமங்களிலும் பிரசித்தி உடையவன், தேசாந்திரத்தில் தன வரவுடையவன், மேற்படி சூரியனே இரண்டு சுபருடன் கூடியிருந்தால் ஜாதகனுடையபெரியதகப்பன் நற்கீர்த்தியுடையவன், இரண்டு வீடுகளில் வசிப்பான், நெருப்பினுல் ஏற்படும் பாதையால் பீடையடைவான், தியாகம்செய்யும் குணம் உடையவன், போகமுடையவன், பிரசித்தாத்துமா, குடும்பீ, அனேக ஜனங்களை ரக்ஷிப்பவன், அவனும் அவனுக்கிளையவனும், மத்தியாயுளுடையவன், புத்திர புத்திரி சுகமுடையவன், வீட்டு வேலைகளை கவனிக்கவும் வீட்டு விசாரணை செய்யவும் சமர்த்தனுவான், மற்றவர்கள் புத்திரருடையவர்கள், பூர்ணமான மத்திம வயதுடையவர்கள், ஜாதகனுடைய இந்த சகோதரர்களில் எவனுவது ஒருவன் தகப்பன்மார்களில் எல்லோருக்கும் மூத்தவனுன ஜாதகனுடைய பெரிய தகப்பனுக்கு தத்து ஆய்விடுவான், மற்ற சகோதரர்கள் சமர்த்தர்களாகி தேசாந்திரத்தில் திரவியம் சம்பாதிப்பார்கள், ஒருவனிவர்களில் வெளியில் தேசசஞ்சாரியாய் வரும்போது திருடனிடம் அடிபட்டு மரணமடைவான், ஜாதகனுடைய தகப்பன் சாத்துவீகமுடையவன், தேசாந்திரம் முதலிய அனேக இடங்களில் சஞ்சரிப்பவன், தேவப்பிராம்மண பக்தியுடையவன், பாலியத்தில் பாக்கியமுள்ள சீமானுகவும், வயோதிக வயதில் தரித்திரனுகவும் ஆவான், தைவானுகூலமாக புத்திரனுல் சுகமடைவான், ஜாதகனுடைய மூன்ருந்தெசையில் தகப்பன் மரிப்பான்.

(27) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி நான்காம் பாவாதிபதி ஐந்தாம் பாவத்தில் சுபருடன் கூடியிருந்து, அங்கு சந்திரனும் சுபருடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தாய் சுகமுடையவள், குணமுடையவள், புத்திரீ புத்திர சுகமுடையவள், ஜாதகனுடைய தாய் ஜாதகனுடைய மூன்ருந்திசையில் மரணமடைவாள்.

(28) ஜென்ம லக்கினம் ரிஷபமாகி செவ்வாய்க்கு மூன்ருமிடமான கன்னியாராசியில் புதன் இருந்து செவ்வாய் நீச்ச ராசியில் உச்சாம்சத்திலிருந்தால் ஜாதகன் சகோதர விருத்தியுடையவன், மூன்று சகோதரருடையவன், வேறுசிலர் இரண்டே சகோதரருடையவன் என்றும், சகோதரிகளும் உண்டென்றும் எண்ணுகின்றனர்.

(29) ஜென்ம லக்கினம் ரிஷபமாகி புத திரிம்சாம்சத்தில் அமலாயோகத்தில் (ஜர்ஜராம்சத்தில்) பிறந்தவன், வெளுப்பு நிறமுடையவன், அறிவாளி, சம தேகமுடையவன், வெகு ஆயுளுடையவன், கல்வி அற்பமாயுடையவன், எழுத்து எழுதுவதில் சமர்த்தன் ஜாதிவித்தையில் சமர்த்தன்.

(30) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி லக்கினருடாதிபதி சனியாகி அவர் தன் உச்ச ராசியில் இருந்தால் ஜாதகன் தன் பாலியத்

தில் அற்பமான பாக்கியமடைவான், இருபது வயதிற்குமேல் பிரசித்தி உடையவன், இருபத்தைந்து வயதிற்குமேல் அதிக சுகமுடையவன், தன் ஜனங்களுடைய சினேகம் மூலமாக சந்தேகமின்றிச் சுகமடைவான், முப்பது வயதிற்குமேல் விசேஷ சுகமுடையவன், முப்பத்தைந்தில் விசேஷ கீர்த்தியடைவான், தன் ஜனங்களிடம் பிரசித்தியுடையவன், திரவிய சம்பாதனையில் சமர்த்தன், யுக்தாயுக்தவிவேகமுடையவன், சகோதரனால் சுகமடைவான், வயோதிக வயதிலும் ஆயுள் பூராவும் சுகமுடையவனாவான்.

(31) ஜென்ம லக்கினம் ரிஷபமாகி மூன்றும் பாவத்தில் தன் உச்சாம்சத்தில் செவ்வாயும், கன்னியா ராசியில் தன் உச்சாம்சத்தில் சுக்கிரனுமிருந்தால் ஜாதகன் பாக்கிய வமிசத்தில் நல்ல ரூபமுடைய மனைவியை மணப்பான், ஜாதகன் புத்திரீ புத்திர சுகமுடையவன், முதலில் ஸ்திரீபிரஜையும், பிறகு புருஷ பிரஜையும் பிறக்கும் யோகமுடையவன்.

(32) ஜென்ம லக்கினம் ரிஷபம் (பிராம்மியம்சம்) ஆகி சந்திர லக்கினாதிபதி புதனாகி மித்திரராசியில் மித்திரக் கிரகத்துடன் கூடியிருந்தால் ஜாதகனுக்கு நதி தீரத்தில் பெரிய கிராமத்தில் சூரிய வாஸ்துவான தெருவில் சிவபக்தர் குலத்தில் தத்து வமிசத்தில் பிறப்பான்.

(33) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி சந்திரனுக்குக் கேந்திரத்தில் சனியிருந்தால் ஜாதகனுக்கு ஐந்து வருஷப்வரையில் சூதி தோஷ பயமுண்டாகும், இதற்கே மேற்படி சந்திர கேந்திரத்தில் குரு இருந்தால் ஜாதகனுக்குச் சகல தோஷங்களும் குணமாகும்.

(34) ஜென்ம லக்கினம் ரிஷபமாகி புதன் லக்கினாரூடாதிபதியாகி எட்டாமாரூடாதிபதியாகிய குரு பாபருடன் கூடியிருந்தால் ஜாதகனுக்குச் சகல தோஷங்களும் விலகிவிடும்.

(35) ஜென்ம லக்கினம் (ரிஷபம்) ஆகி லக்கின பாவாதிபதி சர (மகர) ராசியிலும், எட்டாம் பாவாதிபதி துவந்துவ ராசியாகிய தனுசு ராசியிலும் குரு இருந்து ஹோரா லக்கினமும், சரமானால் ஜாதகனுக்கு தீர்க்காயுளுண்டாகும், ஜாதகனுக்கு ஐம்பத்தாறும் வயதில் அல்லது அறுபதாம் வயதில் தேகபீடையால் மகாபயமும், அபமிருத்து பயமும், மேகவாயு பீடையும் உண்டாகும், இந்த தோஷ பரிகாரமாக சுக்கிர சக்கிர தானமும், சனிப்பிரீதியும், ஆயுர் ஹோமமும் செய்தால் ஜாதகனுக்குச் சகல சுகமும் உண்டாகும். ஜாதகன் சம்பூர்ணமாக எழுபத்தேழு வயதடைவான்.

(36) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி ஒன்பதாம் பாவத்தில் சூரியன் சுபருடன் கூடியிருந்து, ஒன்பதாம் பாபாதிபதி குருவுடன் கூடியிருந்து, ஒன்பதாமாரூடத்தில் விருச்சிகத்தில் செவ்வாயிருந்தால் ஜாதகன் வேறொருவரால் தத்துகொள்ள

படுவான், ஒன்பதாம் பாவத்தில் இருக்கும் லக்கின பாவாதிபதியாகிய சுக்கிரன் ஸ்வீகிருதாம்சத்தில் இருந்தால் ஜாதகன் தன் குலத்திலேயே தத்துபோவான், ஜாதகனுடைய சொந்த தகப்பன் சாது, தேவப் பிராம்மண பக்தியுடையவன், க்ஷேத்திரத்தால் அற்ப சுகியாவான், தேவகடாக்ஷத்தால் புத்திரீ புத்திரருடையவன், இரு மனைவியருடையவன். நேர்மையான புத்தியுடையவன், புத்திரனால் சுகமுடையவன், ஜன்மம் முதலாக பாக்கியமுடைய ஸ்ரீமான், சுவீகார தகப்பன் தன் குலதர்மப்படி வாழ்பவன், தத்த புத்திர சுகமுடையவன், பரோபகார குணமுடையவனாவான்.

(37) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி நான்காம் பாவாதிபதியாகிய சூரியன் ஒன்பதாம் பாவத்தில் இரண்டு சுபக்கிரகங்களுடன் கூடியிருந்து, சந்திரனுக்கு கேந்திரத்தில் குரு இருந்து சந்திரனும் குருவால் பார்க்கப்பட்டால் ஜாதகன் இரண்டு தாய்களை உடையவன், ஜாதகன் தாய் குணவதி, பதிபக்தி உடையவள், தீர்க்க வயதுடையவள், ஜாதகனுடைய சுவீகாரத்தாய் மத்திம வயதுடையவள். சுமங்கலியாகவே மரிப்பாள்.

(38) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி செவ்வாய்க்கு மூன்றுமிடத்தில் சூரியன் ஒன்பதாம் பாவத்திலிருந்து சூரியன் நின்ற ஸ்தானாதிபதி குருவுடன் கூடியிருந்து, மூன்றுமிடம் சுபருடன் கூடியிருந்தால் ஜாதகன் மூத்த சகோதரனில்லாதவன், ஜாதகனுக்கு இளையசகோதரர் நால்வரல்லது ஐந்துபேர் உண்டாவார்கள், ஜாதகனுடைய தத்த வமிசத்தில் ஒரு சகோதரியிருப்பாள், ஜாதகனுடைய ஜன்ம வமிசத்திலும் ஒரு சகோதரியிருப்பாள், வேறு சிலர் ஜென்ம வம்சத்தில் இரு சகோதரிகளுண்டென்று எண்ணுகின்றனர்.

(39) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி பிராம்மியம்சத்தில் புத திரிம்சாம்சத்தில் சந்திராதியோகத்தில் பிறந்தவன் வெளுப்பு நிறமுள்ளவன் குணமுடையவன்.

(40) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி லக்கின பாவாதிபதி சுபருடன் கூடியிருந்தால் ஜாதகன் ரூபவானாவான், அதிருஷ்டசாலி, மேதாவி, யுக்தாயுக்தம் தெரிந்தவன், தேவப் பிராம்மண பக்தி உடையவன், உசிதமாகத் தெரிந்தவன், சிவபக்தி உடையவனாயினும், விஷ்ணு பக்தியுமுடையவன், ஆஸ்தீகன், தர்ம புத்தியுடையவன், க்ஷேத்திர பாக்கியமுடையவன், பரோபகாரமுடைய புண்ணியாத்துமா சுயகர்மத்துடன் கூடியவனாவான்.

(42) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி லக்கின பாவாதிபதி சனியின் ராசியான மகரத்திலிருந்தால் ஜாதகன் கொஞ்சம் அனுச்சாரமுடையவன், பரஸ்திரி சங்கமமுடையவன்.

(42) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி சந்திரனுக்கல்லது லக்கினபாவத்திற்குப் பத்தில் ராகுஇருந்து சுபரால் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்கு வயதின் மத்தியில் தர்பசித்தியும், கங்காஸ்நான முதலான சுத்தியான பலனும் கிடைக்கும்.

(43) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி ஒன்பதாம் பாவாதிபதி குருவுடன் கூடியிருந்தால் ஜாதகன் வமிசத்தில் இரண்டு வமிசத்திலும் நல்மனைவி வாய்ப்பாள், அவள் தைவானுக்கிரக முடையவள், புத்திர பாக்கியமுடையவள், ஜாதகன் பதினாறு வயதிற்குமேல் பிரசித்தியும், இருபது வயதிற்குமேல் தன சம்பாதனையுமுடையவன், பூமியால் சுகமுடையவன், வீட்டுவேலையில் சுதந்திரமுடையவன், இருபத்தைந்தாவது வயதில் நல்ல நிபுணனுவான், முப்பது வயதிற்குமேல் நற்கீர்த்தி யுடையவன், முப்பத்தேழு வயதிற்குமேல் பூமியால் விசேஷ விரயமுண்டாகும், நாற்பதாம் வயதில் விசேஷமும், தேசாந்திரம் போதலுமுண்டாகும், புண்ணியஸ்நாநம் முதலிய சித்தியும், கங்காஸ்நாநம் முதலிய புண்ணியமும், நாற்பத்தேழாவது வயதில் திரும்பத் தன் தேசம் வருதலும், ஐம்பதாம்வயதில் மனைவி புத்திரனிவர்களால், சுகமும், நித்தியம் பஞ்சயக்கிய முதலானவைகளும், அன்னதானம் செய்தலும், ஆயுள்வரை சுபமும், உடையவனுவான்.

(44) ஜென்ம லக்கினம் ரிஷபம் மீனநவாம்சம் ஆகி லக்கின பாவத்தில் லக்கின பாவாதிபதி சுபகாம்சத்திலும், சந்திரனுக்கு நான்காமிடத்தில் செவ்வாயுமிருந்தால், ஜாதகன் வனப்பிராந்தியத்தில் சமுத்திர சமீபத்தில் உள்ள தேசத்தில் ஜனன மடைவான்.

(45) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி சூரியன் லக்கின கேந்திரத்தில் இருந்தால் ஜாதகன்தாய் பிரசவத்தில் அதிக வேதனை அடைவாள், அப்போது குருவால் ஷை சூரியன் பார்க்கப்பட்டால் சுகமுண்டாகும், ஷை சூரியனுக்குச் சனி ஏழாமிடத்திலிருந்தால் ஜாதகனுக்குப் பால தோஷமிருந்தாலும், முன் ஜென்ம புண்ணிய வசத்தால் இருபத்தேழுநாளைக்குப் பிறகு சுகமடைவான்.

(46) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி லக்கின பாவாதிபதி லக்கின பாவத்தில் சுபகாம்சத்திலும், எட்டாம் பாவாதிபதி, கும்ப ராசியில் சுசிராம்சத்திலும் இருந்தால் ஜாதகன் எழுபத்தோறு வயதுவரையில் ஜீவித்திருப்பான், வேறுசிலர் எழுபது வரையில் ஜீவிப்பான் என எண்ணுகின்றனர், ஐம்பத்தொன்பது அல்லது அறுபதாவது வயதில் ஜாதகன் அபமிருத்து பய மடைவான், அப்போது ஈசுவர சன்னிதியில் மிருத்தியுஞ் ஜெயஜெபமும், நவக்கிரக சக்கிரதானமும் செய்தால் குணமுண்டாகும், அதற்கு முந்தியே ஐம்பதாம் வயதில் தேக பீடையுண்டாகும், அப்போது எண்ணைக் குடம் தானம் செய்தால் குணமுண்டாகும்.

(47) ஜென்ம லக்கினம் ரிஷபம் மீன நவாம்சம் ஆகி சூரியன் மித்திரராசியில் இரண்டாம் பாவத்திலிருந்து சூரியனுக்கு ஏழாமிடத்தில் சனியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் அற்ப சுகமுடையவன். தீர்க்கஆயுசுடையவன், தேவப்பிராமண பக்தியுடையவன், ஷ சனி குருக்ஷேத்திரத்தில் இருந்தால் ஜாதகனுடைய தகப்பன். சிவபக்த மதத்தையடைந்தவன், உத்தியோக சுகமுடையவன், க்ஷேத்திர சுகமுடையவன், அரசாங்கஜன சினேகமுடையவன், மிதமான பாக்கியமுடையவன், முன் புண்ணிய பாக்கியத்தினல் புத்திரனுடையவனவான்.

(48) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி நான்காம் பாவாதிபதியாகிய சூரியன் மித்திர ராசியிலிருந்து குருவால் பார்க்கப்பட்டால் நான்காம்பாவத்தில் பாபர் (கேது) இருந்தாலும், ஜாதகன் தாய் முன் புண்ணியவசத்தினல் சுகமும், பாக்கியமும், தேவப்பிராமண பக்தியும், தெய்வானுக்கிரகமும் உடையவளாவாள்.

(49) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி சுக்கிரன் லக்கின பாவத்தில் சுபகாம்சத்தில் இருந்து மூன்ருவது பாவத்தில் நாடியம்ச சோதராம்சத்தில் செவ்வாயிருந்தால் ஜாதகன் நான்கல்லது ஐந்து பேர்கள் சகோதரர்களுடையவன், இவர்களில் ஒருவன் தத்து ஆவான், அவன் மிக்க பாக்கிய முடையவனவான்.

(50) ஜென்ம லக்கினம் ரிஷபம் மீனநவாம்சம் லக்கினம் ஆகி லக்கின பாவாதிபதி லக்கின பாவத்தில் சுபகாம்சத்தில் இருந்து மாலவியோகமுண்டானல் ஜாதகன் வெளுப்பு நிறமுடையவன், ரூபவான், சுப ஆகிருதி உடையவன், சமதேகி, தெளிந்த அறிவு உடையவன், கல்வி அறிவும் உடையவன், எழுதுவதில் நல்ல நிபுணன், ரூபலக்ஷணமுடையவன், அழகிய முகமுங் கண்களுமுடையவன், சந்தன புஷ்ப வஸ்திரப் பிரியன், சமஸ்கிருதப் பிரியன், உற்சாகமுடையவன், சரசமுடையவன், அதிருஷ்டசாலி, மேதாவி, எல்லாக்காரியங்களிலும் சமர்த்தன், ஊகிக்கவும், விலக்கவும் தெரிந்தவன், தியாக குண முடையவன், கெம்பீரன், தேவப்பிராமண பக்தியுடையவன், விசேஷ சிவபக்தியுடையவன், பரோபகாரமுடையவன், தர்மமறிந்தவன், தெய்வானுக்கிரகமுடையவன், இந்த லக்கினத்திலேயே இரண்டு சுபர் கூடியிருந்தால் ஜாதகன் போகமும், தனமும் உடையவன், தர்மசிந்தையுடையவன், உத்தியோகத்தில் சமர்த்தன், பிரசித்தன், மத்தியவயதில் பாக்கியமுடையவன், இருபத்தைந்து வயதிற்குமேல் பிரசித்தியும், சகோதரனல் பிரசித்தியுமுடையவன், இருபத்துநான்கு வருஷம் பாலியம்முதல் ரேகாயோகத்தினல் கஷ்டமடைவான், அல்ப சுகமுடையவன், முப்பத்தைந்து வயதிற்குமேல் உத்தியோகத்தினல் சுகமுடைய

வன், நாற்பத்திரண்டாவது வயதுமுதல் பிரபல உத்தியோகமடைவான், நாற்பத்தைந்தாவது வயதில் வாகன உத்தியோக பாக்கியமுண்டாகும், ஆயுள்வரை (எழுபது வயதுவரை) யில் சுகமடைவான்.

(51) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி லக்கின பாவத்திற் கெட்டில் சனி இருந்து இரண்டாம் பாவத்தில் சூரியனிருந்து, ஏழாம் பாவாதிபதியாகிய செவ்வாயும் நீச்ச மடைந்தால் ஜாதகன் இரண்டாவது விவாகமடைவான், அவளிடம் காலங்கடந்து புத்திரருடையவன், ஜாதகனுடைய மூத்தமனைவி புத்திரனில்லாதவளென்று சிலரும், ஒரு புத்திரனுடையவள் என்று வேறுசிலரும் எண்ணுகின்றனர். முப்பத்தைந்தாவது வயதில் அல்லது முப்பத்தேழாவது வயதில் ஜாதகன் மனைவி மூத்தவள் மரிப்பாள், பிறகு மேற்சொல்லிய இரண்டாவது மனைவி வந்தபின் அவளிடம் சாந்தியால் புத்திரன் பிறப்பான், சாந்தியாக நாகசாந்தியும், சொர்ணலிங்க தானமும் செய்யவேண்டும், செய்த பிறகு ஐந்தாவது தெசையில் இரண்டு புத்திரரும் மூன்று புத்திரிகளுமுண்டாவார்கள்.

(52) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி சிம்மராசியில் சனி வர்க்கோத்தமாம்சத்திலிருந்து குருவுடனும் கூடியிருந்தால் ஜாதகன் நான்காவது காலத்தில் விஷ்ணு பக்த குலத்தில் சகோதர ஹீனனுக ஜனனமடைவான்.

(53) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி சந்திர லக்கினுதிபதி செவ்வாயாகி மீன நவாம்சத்தில் சூரியனுடன் கூடியிருந்தால் ஜாதகன் புகழ்பெருகிய நதிதீர பட்டிணத்தில் ஜனனமடைவான், வேறுசிலர் தேவாலயத்துடன் கூடிய புண்ணிய க்ஷேத்திரத்தில் ஜனனமடைவான் என எண்ணுகின்றனர்.

(54) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி லக்கினுரூடாதிபதியாகிய சனி கேந்திரத்தில் குருவுடன் கூடியிருந்து சுக்கிரன் கேந்திர திரிகோணங்களில் இருந்தால் ஜாதகன் சகல தோஷங்களும் விலகி அறுபத்தாறு வயதடைவான். சனி லக்கினுரூடாதிபதியாக ஆவதற்கு சுக்கிரன், கன்னி, மீனம், ஆகிய ராசிகளில் இருந்தால் சனி லக்கினுரூடாதிபதியாய் வருவான்.

(55) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி சனி சிம்ம ராசியில் வர்க்கோத்தமாம்சத்திலிருந்து, குரு திரிம்சாம்சத்தில் பிறந்து பாப கேசரியோகமுண்டானுல் ஜாதகன் வெளுப்புநிறமுடையவன், நல்ல ஆகிருதியுடையவன், சூட்டுத் தேகமுடையவன், மேதாவீ, அழகுடையவன், அறிவாளி, தெளிந்த அழகான முகமுங், கண்களுமுடையவன், கல்வி அறிவுடையவன், அதிர்ஷ்டசாலி, மத்திய வய

தில் பிரசித்தியடைவான், விஷய போகங்களில் புத்தி யுடையவன், பகுத்தறிவுடையவன், சந்தன புஷ்ப வஸ்திர அலங்காரப் பிரியன், உத்தியோக ஜீவனமுடையவன், பிரபல உத்தியோகமடைவான், தேவப் பிராம்மண பக்தியுடையவன், விசேஷ விஷ்ணுபக்தி உடையவன்.

(56) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி லக்கினத்திற் கேழாம் பாவத்தில் சந்திரனிருந்தால் ஜாதகன் தாய் வமிசத்தினுல் சுகமடைவான், பாலியத்தில் தகப்பனை இழந்து பிதுரு பாட்டியினுல் சுகமடைவான், பதினாறு வயதிற்குமேல் பிரசித்தியும், இருபது வயதிற்குமேல் பிரசித்தியும் தனமுமடைவான், இருபத்தைந்து வயதில் புகழ் அடைவான், முப்பதுக்குமேல் பிரபு ஆவான், முப்பத்தைந்தில் விசேஷ பாக்கியமுடையவனுகி ஆயுள்வரை சுகமடைவன், ஜென்ம திசையில் சுகமும், தாய் தகப்பன் சுகமும் உடையவன், ஜாதகன் பிறந்த மூன்றல்லது ஐந்தாம் வயதில் தகப்பன் மரித்து விடுவான், இரண்டாந் திசை கேது திசையாய்வந்தால் ஜாதகன் அந்த கேதுதிசையில் சுபாசுபமிரண்டும் சமமாக அடைவான், திசையின் மத்தியில் விசேஷமும், தாய்ப்பாட்டனுக்கு மரணமும், நேரிடும், ஜாதகன் மூன்ருவது திசையில் விவாகமும், பிரசித்தியும், திசையில் பிற்பகுதியில் விசேஷ யோகமும் அடைவான், பாக்கிய வமிசத்தில் விவாகமும், ரூபவதியான மனேவியுமுடையவன், ஜாதகனுடைய மனேவி உடன்பிறந்த சகோதருடையவள், காலங்கடந்து புத்திரயோகமுடையவள், மேலும் இதற்கே ஜென்ம லக்கினமாகிய ரிஷபத்திற்கு ஐந்தாம் பாவத்தில் கேது இருந்து குரு, சனியுடன் கூடி சிம்ம ராசியிலிருந்தால் ஜாதகன் காலங்கடந்து புத்திரனை யடைவான், சேதுஸ்நாநம், நாகசாந்தி, சிவலிங்கதானம், பாலகிருஷ்ண தானம் முதலானவைகளை செய்த பின்பு காலங்கடந்து புத்திரனையடைவான், இருபத்தேழு வயதில் புத்திரி சந்ததியும், பிறகு சாந்தியால் இரண்டு புத்திரரும் உண்டாவார்கள், இரண்டு புத்திரரும் இரண்டு புத்திரிகளுமுடையவன், வேறு சிலர் மூன்று புத்திரியுடையவன் எனஎண்ணுகின்றனர், ஜாதகன் விவாகமடைந்த பின்பு மேஷதிரிகோணத்தில் குரு வரும்போதல்லது துலாராசியில் அல்லது அதன் திரிகோண ராசியில் சனி வரும்போது புத்திரீ புத்திர ஜனனம், அல்லது கர்ப்பாதானமாவது அடைவான், சுயப் பிரபலமும், சுயார்ஜிதமுமுடையவன், மனேவி வம்சத்தால் சுகமுடையவன், ஜாதகனுடைய மாமனுர் பிரபலமுடையவர், உத்தியோகத்தினுல் பிரசித்தி உடையவன், திரவிய சம்பாதனேயில் சமர்த்தன், பற்பல கிராமங்களிலும் பிரசித்தி உடையவன், துராலோசனே யுடன் கூடியவன், சத்துருக்களே ஜெயிப்பவன், பிரதாபமுடையவன், ஜாதகன் இப்படிப்பட்ட மாமனுரால் தன்னுடைய மூன்ருந் திசையில் சந்தேகமின்றி சுகமடைவான்,

(57) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி ராகு மீன ராசியி லிருந்து அவருடைய தெசை வந்தால் ஜாதகன் அந்த ராகுதெசை யில் முடிவுவரையில் பாக்கியமுடையவனுவான். வாகனம் கீர்த்தி முதலியன அடைந்து பிரபு லக்ஷணமுடையவனுவான், பதினுயிரத் திற்கு மேற்பட்ட தனமுடையவன், தியாகமும் போகமும் உடைய வன், நல்ல தர்மிஷ்டன், தடாகம், உத்தியான மிவற்றிற்குத் தருமம் செய்பவன், ஆயுளுள்ளவரை பலனுடையவனுவான்.

(58) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி லக்கின பாவாதி தன் உச்ச ராசியில் பாக்கியாம்சத்தில் சூத்திர காலத்திலிருந்தால ஜாதக கன் சிவபக்த குலத்தில் சகோதரனுடையவனுக கிழக்கு மேற்கு வீதியில் நதிப்பிராந்தியத்திலுள்ள கிராமத்தில் ஜனனம் அல்லது வாசமுடையவனுக, நிதானமாக ஜனனமுடையவனுவான்.

(59) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகிப் பிறந்தவனுக்கு சந்தி ரன் சனியுடன்கூடி (கடகராசியில்) யிருந்தால் ஜாதகன்தாய் அற்ப பிரசவ வேதனையுடையவளாயினும் ஜாதகனுக்குக் கொஞ்சம் சூதி தோஷ பயமுண்டாகும், தெய்வானுகூலமாக ஜாதகன் சுகமுடைய வனுவான், பாலதோஷ பயமும், மாதுரு பீடையுமுடையவன், ஆயி னும் தகப்பனுடைய புண்ணியத்தால் சுகமடைவான்.

(60) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி லக்கின பாவாதிக்குக் கேந்திரத்தில் எட்டாம் பாவத்தில் குரு இருந்தால் ஜாதகன் பால கிரக தோஷம் விலகி சுகமடைவான்.

(61) ஜென்ம லக்கினம் ரிஷபமாகி எட்டாம் பாவத்தில் எட் டாம் பாவாதிபதியேயிருந்து லக்கினுதிபதி தன் உச்ச ராசியில் இருந்தால் பாபக்கிரகத்துடன் சந்திரன் கூடியிருந்தாலும் ஜாத கனுக்கு ஆயுள் விருத்தியுண்டாகும், ஐம்பத்தொன்பதல்லது அறு பது வயது பரமாயுளாக அடைவான்.

(62) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி சந்திரன் தனுசு ராசி யில் மாலாம்சத்திலிருந்து சூரியன் சுபருடன் கூடியிருந்து ஒன்ப தாம் பாவாதிபதி கேதுவுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப் பன் அற்பசுகி, சகோதரனில்லாதவன், ஜாதகனுடைய தகப்ப னுக்குச் சகோதரர் இருந்தாலும் மரித்து விடுவார்கள், ஜாதகனு டைய தகப்பன் எப்போதும் சிவ பக்தியுடையவன், சொற்ப கல்வி யுடையவன், தேவப் பிராம்மண பக்தியுடையவன், புரோகிதத்தால் சுகமுடையவன், மனைவி வம்சத்தால் சுகமுடையவன், பிராம்ம ணக் கிராமங்களில் புரோகிதம் செய்பவன், சாஸ்திர ஞானமில்லாத வனுயினும் புரோகிதத்தில் சமர்த்தன், திரவிய சம்பாதனையிலும் சமர்த்தன், புத்திரீ புத்திர சுகமுடையவன், மறு மனைவியிடம் சுக முடையவன், ஜாதகனுடைய மூன்ருந்திசையில் மரிப்பான்.

(63) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி நான்காம் பாவாதிபதி கேந்திர ராசியில் இருந்து சந்திரன் கேந்திரத் திரிகோணத்தி லிருந்து இவர்கள் பாபக் கிரகத்துடன் கூடியிருந்தாலும், ஜாதகன் தாய் சுகமடைவாள், உடன்பிறந்த இரண்டு சகோதரருடையவள், சகோதரிகளுமுடையவள், ஜாதகன் தாய் ஜாதகனுடைய நான்காந் திசையில் மரிப்பாள்.

(64) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி மூன்றும் பாவாதிபதி பன்னிரண்டாம் பாவத்திலிருந்து செவ்வாய் கேதுவுடன் கூடியிருந் தால் கேந்திர ஸ்தானத்திலிருந்தாலும், ஜாதகன் இளைய சகோதர னில்லாதவன், மூத்த சகோதரன், அற்ப சுகமுடையவனுயினும் அற்பாயுசாய்விடுவான், ஆயினும் சமர்த்தன், நல்ல சாஸ்திர ஞான முடையவன், முன்பாபம் காரணமாக மூன்றுவதான ஆயுளாக அற்ப வயதுடையவனுகி விடுவான், ஜாதகன் இரண்டு சகோதரிக ளுடையவன், அவர்களுமிப்படியே அற்பாயுசுடையவர்கள்.

(65) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி தனுசு ராசியில் சந்தி ரன் மாலாம்சத்திலிருந்து சுக்கிரத் திரிம்சாம்சத்தில் ருசகயோகத் தில் பிறந்தவன் சிவப்பு நிறமுடையவன், சம ஆகிருதி உடையவன், சூட்டுத்தேகி, அறிவாளி, கல்வி அறிவுடையவன், இதற்கே சூரி யன் இரண்டு சுபருடன் கூடியிருந்தால் ஜாதகன் தன் வேலைகளை மட்டும் கவனிப்பான்.

(66) ஜென்ம லக்கினம் வைஷ்ணவாம்சம் ரிஷபம் ஆகி சூரி யன் கேந்திரத்தில் புதனுடன் கூடியிருந்து ஒன்பதாம் பாவாதிபதி மித்திர ராசியிலிருந்தால் ஜாதகன் அற்ப பிதுரு சுகமுடையவன், ஜாதகனுடைய தகப்பன் மத்திம வயதுடையவன், விஷ்ணு பக்த மதத்தை அடைவான், தேவப் பிராமண பக்தியுடையவன், எப் போதும் வைஷ்ணவர்களிடத்தில்அன்புடையவன், வைதீகத்தாலும், பிரபுக்களை அடைவதாலும், சுகமுடையவன், திரவிய சம்பாதனை யில் கருத்துடையவன், தன் ஜனங்களிடம் பிரசித்தியும், தெய்வா னுக்கிரகமுடையவனுமான புத்திரனையுடையவன், ஷை சூரிய னுக்கு ஐந்தாமிடத்தில் சனியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் சொற்ப பாக்கியமுடையவனுவான், ஜாதகனுடைய தகப்பன் ஜாத கனுடைய இரண்டாந்திசையில் மரிப்பான்.

(67) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி சந்திரனுக்கு நான்கா மிடத்தில் அல்லது எழு, பத்து முதலிய கேந்திரங்களில் சனி யிருந்து சந்திரன் சனியின் அம்சத்திலிருந்து சந்திரனிருக்கும் அந்த ராசி லக்கினத்திற்கிரண்டாம் பாவமாயினும் ஜாதகன் பாலி யத்தில் தாயை இழந்து தாயில்லாதவனுவான், வளர்ப்புத்தாயால் காப்பாற்றப்படுவான், அன்னிய ஸ்திரீயிடம் ஸ்தன்னியபானம்

செய்வான், தாய் சுகமில்லாதவன், பிதுரு சுகமும், அற்பமுடைய வன், சகோதரனுமில்லாதவன், வேறு சிலர் சகோதரி ஒருத்தி உண் டென்று எண்ணுகின்றனர்.

(68) ஜென்ம லக்கினம் வைஷ்ணவாம்சம் ரிஷபமாகி குஜ திரிம்சாம்சத்தில் பாக்கிய கேசரியோகத்தில் பிறந்தவன், வெளுப்பு நிறமும், சமதேகமும் உடையவன், சூட்டுத் தேகி, அற்ப கல்வி யுடையவன், தன் ஜாதி வித்தையிலும், அற்பமே தெரிந்தவன், தேவப் பிராம்மண பக்தியுடையவன், சாத்துவிக குணமுடைய வன், பிதுரார்ஜித சுகமுடையவன், அதைரிய சுபாவமுடையவன், பயந்தவன், பகுத்தறிவுடையவன், பாலியத்தில் தாயை யிழந்து சோகமடைவான், பிதுரு சுகமுடையவன், மாதுருவர்க்க சுகமுடை யவன், பிராம்மண ஜன்மத்தில் பிறந்தவன், எட்டு அல்லது ஒன்ப தாம் வயதில் உபநயன மடைவான்.

(69) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி பாக்கியாம்சத்தில் சுக்கி ரன் ரிஷப ராசியிலிருந்து சூரியன் பதினோராவது பாவத்தில் சுப ருடன் கூடியிருந்து ஒன்பதாம் பாவாதிபதியும் பதினோராவது பாவத்திலிருந்தால் ஜாதகன் பிதுரு பாக்கியத்தை அடைவான்.

(70) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி சூரியனுக்குக் கேந்திரத் தில் செவ்வாயிருந்து திரிகோணத்தில் சனியிருந்தால், சூரியன் பதி னோராவது பாவத்தில் இருந்தாலும் ஜாதகனுடைய தகப்பன் அற்ப சுகியாவான், சிவ பக்தியுடையவன், மத்திம வயதுடையவன், சிவ பூஜையில் பிரியமுடையவன், தேவப் பிராம்மணபக்தி உடையவன், மேஷ சூரியன் ராஜ யோகாம்சத்திலிருந்தால் ஜாதகனுடைய தகப் பன் ராஜயோக மடைபவன், வனப்பிராந்திய பட்டிணத்திற்கதிபதி யாவன், சதுரங்க பலமுடையவனுவான், சத்திர சாமரமுடைய வன், இவனைக் குறித்துக் கவி பாடுவோருக்குத் தலைவனுவான், அனேக வாகனமுடையவன், அனேக சேனை குதிரைகளுக்கு நாயக னுவான், மத்திய வயதில் ராஜயோக முடையவன், தியாகமுடைய வன், ஆயுதம் தரிப்பவர்களுக்குத் தலைவனுவான், அனேக வேலைக் காரர், ஏவலாளர் முதலானவர்களுடையவன், அனேக ஸ்திரீகளிடம் சுகிப்பான், பேரீ, மிருதங்கம் முதலிய அடையாள வாத்திய அடை யாளங்களுடையவன், ராஜிய தந்திரத்தில் நிபுணன், கடினமான ஆக்ஞையிடுபவன், வெகு தர்மங்களை செய்பவன், முன் தர்மங்களை யும் ரக்ஷிப்பவன், அக்கிரகாரப் பிரதிஷ்டை செய்பவன் பற்பல தேசங்களிலும் கீர்த்தியுடையவன், சீக்கிரகோபியாயினும், தெளிந்த மனதுடையவன், தேவாலயம் தடாகம் முதலியன தர்மமாக கட்டு விப்பவன், மூன்றுலக்ஷ நிஷ்கங்களுக்கதிபதியாவான், வயோதிக வய தில் விசேஷ கீர்த்தியுடையவன், முன் ஜென்ம பாபம் காரணமாக புத்திர சோகமடைவான், புத்திரீ சுகமுடையவன், நரபதியாவான்.

(71) ஜென்ம லக்கினத்திற்கு நான்காமிடத்தில் சந்திரனிருந்து சந்திரன் நின்ற ராசிநாதன் லாப பாவமாகிய பதினோராவது பாவத்திலிருந்தால் சர லக்கினத்தில் பிறந்தவனுடைய தாய் தீர்க்காயுளடைவாள், சுகமுடையவள், குணமுடையவள், உடன் பிறந்த சகோதரரின்றி தத்த சகோதரருடையவள், இரண்டு சகோதரிகளுடையவள், வேறு சிலர் மூன்று சகோதரிகளுடையவள் என எண்ணுகின்றனர், பாக்கியமுடையவள், இவள் ஜாதகனுடைய நான்காந்திசையில் மரித்துவிடுவாள்.

(72) சர லக்கினத்திற்கு மூன்றும் பாவத்தில் ராகு இருந்து செவ்வாயுடனும் கூடியிருந்தால் ஜாதகன் சகோதர மில்லாதவன், ஜாதகனுக்குச் சகோதரம் பிறந்தாலும் அவை மரித்துவிடும்.

(73) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி ரிஷப ராசியில் சுக்கிரன் பாக்கியாம்சத்திலிருந்தால் சகடயோகத்தில் குரு திரிம்சாம்சத்தில் பிறந்தவன், வெளுப்பு நிறமுடையவன், குணசாலி, சமதேகி, வெகு ஆயுளுடையவன், கல்வி அறிவுடையவன், ரூபலக்ஷணம் நிறைந்தவன், யுக்தாயுக்தம் தெரிந்தவன், ஊஹாபோக சமர்த்தன், மகா பாக்கியமுடையவன்.

(74) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி லக்கின பாவாதிபதி கேந்திர ராசியில் இருந்தால் பற்பல தேசங்களிலும் நற்கீர்த்தியுடையவன், கெம்பீர மனமுடையவன், பரோபகார முடையவன், தேவப் பிராம்மண பக்தியுடையவன், தீரமும், சௌரியமுமுடையவன், பராக்கிரமமுடையவன்.

(75) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி லக்கினபாவத்திற் கிரண்டாம் பாவத்தில் ராகு இருந்தால் சீக்கிரத்தில் கோபமடைவான், சந்தோஷமுடையவன், எல்லாக் காரியங்களிலும் சமர்த்தன், பிறந்ததுமுதல் சுபமேயுடையவன், பிதுரு சுகம், அற்பமும், தாய்சுகமும் உடையவன், ராஜ சின்னம் உடையவன், எப்போதும் புண்ணிய புத்தியும், உதாரகுணமும் உடையவன், ஜன்மம்முதல் சுகமுடையவன், ஜனங்களை ரக்ஷிப்பதிலேயே கருத்துடையவன், மத்திய வயதில் பிரசித்தியும், வயோதிக காலத்தில் கீர்த்தியுமுடையவன்.

(76) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி ஜென்ம லக்கினத்திற்கைந்தாம்பாவாதிபதி ராகுவுடன் கூடியிருந்து குருவுக்கு ஐந்தாமிடத்தில் சனியிருந்து குரு புதனுடைய அம்சத்திலிருந்தால் ஜாதகன் காலங்கடந்து புத்திரனையடைவான், சந்தானத் தடையுடையவன், அல்லது முன் ஜென்ம பாபம் காரணமாக மரித்த பிள்ளை பெறுவான்.

(77) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி லக்கினத்திற்கு புதன் கேந்திரத்திலிருந்து புதனுடைய தெசைவந்தால் அந்த திசையில் (ஜாதகனுக்கு) விசேஷ பிரசித்தியும், விசேஷசுகமும், தெசை முடிய சுகமும், புத்திரி வர்க்கத்தில் சுபமும் உண்டாகும்.

(78) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி ஜென்ம காலத்தில் சந்திரன் தனுசுராசியில் சூத்திரகாலத்தில் மேஷ நவாம்சத்தில் இருந்து சுக்கிரனுடன் கூடியிருந்தால் ஜாதகன் சகோதரனுடையவனாக சூத்திர ஜென்மத்தில் வியாபாரம் செய்பவர் குலத்தில் ஜனனமுடையவன், ஹரிசங்கர பக்தியுடையவன், உயர்ந்த மேட்டுப்பாங்கான பிரதேசத்தில் ஜனனமடைந்து நதிமாத்திரம் சமீபத்திலுள்ள சூத்திர கிராமத்தில் வாசமுடையவன்.

(79) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி குரு ராகுவுடன் கூடியிருந்தால் ஜாதகன் புரோகிதத்தால் சுகமடைவான், பிராம்மணர்களுடைய கிராமத்தில் பிராம்மணர்களால் பூஜிக்கப்பட்டு யாகம் முதலிய செய்பவனாகவும், செய்விப்பவனாகவுமாவான்.

(80) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி லக்கினாதிபதி சுபருடன் கூடியிருந்தால் ஜாதகன் சத்கருமாச்சாரமுடையவன், தர்ம சாஸ்திர மறிவான், தேவப் பிராம்மண பக்தியுடையவன்.

(81) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி லக்கினத்தில் செவ்வாய் கேதுவுடன் கூடியிருந்தால் ஜாதகன் சீக்கிரத்தில் கோபிப்பவன், சந்தோஷமுடையவன், நியாயமாய் சம்பாதித்து சுகமடைவான், புரோகிதத்தில் வல்லவன்.

(82) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி லக்கினத்திற்கு ஏழில் பாபரிருந்து சுக்கிரன் சூரியனுடன் கூடினால் ஜாதகன் மறு மனைவியுடையவனாவான், முதல் மனைவி விவாகமான சீக்கிரத்திலேயே மரித்து விடுவாள்.

(83) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி லக்கினத்திற்கு ஐந்தாவது பாவத்திலும், ஒன்பதிலும் பாபரிருந்து குருவும் மலட்டு அம்சத்தில் இருந்தால் ஜாதகன் மலட்டு ஸ்திரீயின் கணவனாவான். அல்லது புத்திரர் பிறந்து மரித்து விடுவார்கள், வேறுசிலர் தத்த புத்திரனுடையவனென்றும் அல்லது அபிமான புத்திரனுடையவனென்றும் எண்ணுகின்றனர்.

(84) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி ஜென்ம லக்கினத்திற்குப் பன்னிரண்டில் புதனிருந்தால் ஜாதகன் மரணத்திற்குப் பிறகு நற்கதியடைவான்.

(85) ஜென்ம லக்கினம் ரிஷபம் (நாடி அம்சம் கோகிலாம்சம்) ஆகி செவ்வாயால் சுக்கிரன் பார்க்கப்பட்டு, சந்திரன் விருச்சிக

ராசியில் மங்களாம்சத்தை அடைந்திருந்தால் ஜாதகனுக்கு சகோதர சகோதரருண்டாவார்கள், தவிர ஜாதகன் பின் சகோதரனுடையவன், மானீ, ஜாதகனுடைய மூத்த சகோதரன் அற்ப சுகமுடையவன், ஜாதகனுக்கு சகோதரிகளும் உண்டு, இவர்களில் நால்வர் சுகமுடையவர்கள்.

(86) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி நான்காம் பாவாதிபதியாகிய சூரியன் லக்கின பாவாதிபதியுடன் கூடியிருந்தால் ஜாதகன் கல்வியுடையவன், வினயமுள்ளவன், இனிமையோடு பேசுபவன், தர்மத்தைக் காப்பவன், நாடக அலங்கார காவியங்களை நன்கு அறிபவனும், பிரியமாய் பேசுபவனும், எழுதுவதில் சமர்த்தனும், கொஞ்சம் வேதமறிபவனும், மூன்று பாஷைகளில் வல்லவனும், வேறு பாஷைகளில் ஊக்கமுடையவனும் ஆவான்.

(87) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி லக்கினத்திற்கிரண்டாம் பாவத்தில் செவ்வாயிருந்தால் ஜாதகன் வாச்சாலகன், சாதுரியமான யுக்தியுடையவன்.

(88) ஜென்ம லக்கினம் ரிஷபம் (கோகிலாம்சம்) ஆகி சனி சிம்மராசியில் வைஷ்ணவாம்சத்தில் இருந்தால் ஜாதகனுக்கு விசேஷமாக பிதுரு சௌக்கியமும், மாதுரு சௌக்கியமும், பாலியம் முதல் தனமுடையவனும் ஆவான், தன் தகப்பனால் நல்ல யோகமுடையவன், அனேக கிராமங்களுக்கு அதிபதியாவான், அரசாங்கத்தில் பிரசித்தியடைவான், ராஜ மந்திரியால் சந்தோஷிப்பிக்கப்படுவான், அரசாங்கத்தில் சேவைகள் செய்வோருக்குத் தலைவனாவான், எப்பொழுதும் ராஜ தெரிசனையுடையவன், ராஜமுத்திரை தரித்தவன், நல்ல வாலிப சரீர சுகமுடையவன்.

(89) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி சுக்கிரன் தனுசு ராசியில் துலா நவாம்சத்தில் இருந்தால் ஜாதகன் ஒரே மனைவியுடையவன்.

(90) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி ராகு பத்தாம் பாவத்தில் இருந்தால் ஜாதகன் குணம் பொருந்தியவன், நல்ல தொழிலும் நற்காரியமும் செய்பவன்.

(91) ஜென்ம லக்கினம் ரிஷபம் (நாடிஅம்சம் சுதாம்சம்) ஆகி ஏழாம் பாவாதிபதி சிம்ம ராசியிலிருந்தால் ஜாதகன் இருதார யோகமுடையவன், இருபத்தைந்தாவது வயதில் தகப்பனை இழந்து விடுவான், முப்பது வயதுக்குமேல் புத்திர உற்பத்தி உடையவன், நாற்பத்தொன்பதாவது வயதில் அன்னிய தேசத்தில் பிரபுவைத் தரிசிப்பான், ஜாதகனுக்கு அவனால் தன விருத்தியும் சொர்ண வஸ்திர ஆபரண லாபமுண்டாகும், ஐம்பதாவதுவயதில் ஜாதகனுடைய

மனைவி மரிப்பாள், அதன் பிறகு ஜாதகன் சுகமடைவான், மேற்கு திக்கில் முன் சொன்ன பிரபுவால் வாகனாதி லாபமுண்டாகும், ஐம்பத்திரண்டாவது வயதில் இரண்டாவது மனைவிலாபமும், ஐம்பத்தாறில் புத்திர உற்பத்தியும் அடைவான், அக்காலம் ஜாதகன் தாய் மரணமடைவாள், ஜாதகனுக்கு இரண்டாம் மனைவியிடத்தில் புத்திர உற்பத்தி சாந்திமூலம் உண்டாகும்.

(92) ஜென்ம லக்கினம் ரிஷபம் (கின்னராம்சம்) ஆகி லக்கின பாவத்தில் சுக்கிரன் சுயக்ஷேத்திரத்தில் இருந்தால் ஜாதகன் நதிப் பிராந்தியத்தில் அக்கிரகாரத்தில் ஜனனமும், உத்தர பாகத்தில் சிறிய குக்கிராமத்திலும் ஜனனம் அடைவான்.

(93) ஜென்ம லக்கினம் ரிஷபம் (கின்னராம்சம்) ஆகி சந்திரன் சனியுடன் கூடியிருந்தால் பூர்வபாகத்தில் பிறந்தவனுக்கு பாலாரிஷ்ட தோஷமானது அல்பமும், உத்தர பாகத்தில் பிறந்தவனுக்கு அதிகமும் உண்டாகும், குரு சந்திரனைப் பார்த்தால் பூர்வ பாகத்தில் பிறந்தவனுக்கு மேற்படி பாலாரிஷ்ட தோஷம் சம்பவிக்காது, ஜாதகனுடைய தாய் தகப்பனுக்குப் பீடையுண்டாகும்.

(94) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி பன்னிரண்டாம் பாவத்தில் சூரியன் கேதுவுடன் கூடியிருந்தால், பிதுரு காரகனாகிய மேற்படி சூரியன் தன் உச்ச ராசியிலிருந்தாலும் ஜாதகன் தகப்பன் சுகமடையாதவன், விஷ்ணு சிவபக்தி உடையவன், பயிர்த்தொழிலுடையவன், அக்கிர காரத்தில் வாசம் செய்பவன், ஜாதகனுடைய ஜென்ம திசையில், ஜன்ம வருஷத்தில் அல்லது மூன்றுவது வருஷத்தில் ஜாதகனுடைய தகப்பன் மரணமடைவான்.

(95) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி சந்திரன் ஆறு, எட்டு, பன்னிரண்டு முதலிய பாவங்களிலிருக்க நான்காம் பாவாதிபதி பன்னிரண்டாம் பாவத்தில் இருந்தாலும், ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி சந்திரன் சனியுடன் கூடியிருந்தாலும், சனியால் சந்திரன் பார்க்கப்பட்டாலும் ஜாதகனுடைய தாய்க்குச் சுகமுண்டாகாது, தன் கணவனைப்போல் தானும் மரணமடைவாள்.

(96) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி செவ்வாய் கேந்திர திரிகோணங்களிலிருந்தாலும், எட்டாம் பாவத்திலிருந்தாலும், ஜாதகனுக்கு பின்பும், முன்பும், சகோதரமில்லை என்றும், ஜாதகன் சகோதர பாக்கியமில்லாதவன் என்றும் சொல்லப்படுகிறது.

(97) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி ஐந்தாம் பாவாதிபதியாகிய புதன் நான்காம் பாவாதிபதியுடன் கூடி பன்னிரண்டாம் பாவத்தில் இருந்து லக்கினத்திற் கிரண்டாவது பாவத்தில் குரு இருந்தால் ஜாதகனுக்கு புத்திரீ புத்திரருண்டாவார், மூன்று புத்திரரும் ஒரு புத்திரியுமுண்டாவார்கள்.

(98) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி லக்கினத்திற்கு ஆறுவது பாவத்தில் ராகு இருந்து அந்த ராசிநாதன் லக்கின கேந்திரத்தி லிருந்தால் அவனுக்கு ஆறும்பாவ ஆதிபத்தியத்தினால் ஜாதகன் ஆறுவது தெசையில் திருடர் மூலமும், ரோகம் முதலியவற்றாலும் பீடையடைந்து, பூமியால் அற்ப சுகமடைவான், யாசகத் தொழிலால் ஜீவிப்பான், அத்தெசையில் அற்பசுகமே அடைவான், எப்போதும் தர்ம சிந்தையுடையவன், டாம்பீகமுடையவன், பரதார கெமனமுடையவன், கல்வியால் ஜீவிப்பவன், எப்போதும் பிறரை வஞ்சித்து ஹிம்சிப்பவன் (தொந்திரவு கொடுத்து இம்சை செய்பவன்) ரோகத்தால் ஜாதகனுக்கு ௵ தெசையில் மரணசமான கண்டமுமுண்டாகும்.

(99) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி பன்னிரண்டாம் பாவத்தில் கேது சூரியனுடன் கூடியிருந்தால் ஜாதகன் தன் அந்திய வயதில் ஆபத்துச் சன்னியாச யோகமடைவான், இந்த லோகத்துள் நல்ல புண்ணியாத்துமாவாகி மரணத்திற்குப்பிறகு நற்கெதி அடைவான்.

(100) ஜென்ம லக்கினம் ரிஷபம் (சுமதியாம்சம்) ஆகி பூர்வ பாகத்தில் லக்கினபாவத்தில் சனியிருந்தாலும் சனி லக்கின பாவத்தைப் பார்த்தாலும், ஜாதகன் பிறக்கும்போது ஜாதகன் தாய் விசேஷ வேதனையடைவாள், உத்தராம்சத்தில் ௵ வேதனை அல்பமும், சூதிதோஷபயமும்உண்டாகும், அப்போது சந்திரனைக் குரு பார்த்தால் ஜாதகன் தாய்க்குப் பீடை அல்பமாகவும், ஜாதகனுக்கு மாந்தஜுர ரிண வைசூரியால் பயமும்உண்டாகிச் சுபமுண்டாகும்.

(101) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி லக்கின பாவாதிபதி பத்தாம் பாவத்தில் இருந்து எட்டாம் பாவாதிபதி மித்திர ராசியிலிருந்தாலும், லக்கினம் தவிர்த்த கேந்திரத்தில் சந்திரனிருந்தால், ஜாதகன் எல்லாத் தோஷங்களும் விலகிச் சுகமடைவான், பூர்ணரம்ப வயதாக அறுபத்தைந்து வயதடைவான், இருபதுக்கு மேல் அல்ப பீடையும், இருபத்தெட்டில் அற்ப பீடையும், முப்பத்திரண்டில் வியாகூலமும், தேகபீடையால் மனோபீதியும், முப்பத்தெட்டில் மனஸ்தாபமும், நாற்பத்திரண்டில் ஜுரபயமும், அறுபதில் அபமிருத்துவும் சாந்தியால் சுகமும் உண்டாகும்.

(102) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி சூரியன் கேந்திரத்தில் புதனுடன் கூடியிருந்து ஒன்பதாம் பாவாதிபதி பதினோராவது பாவத்தில் இருந்தால் ஜாதகன் தகப்பன் விசேஷ சுகமுடையவன், உடன்பிறந்த சகோதரி உடையவன், தாய் சௌளக்கியமில்லாதவன், சிவபக்தி மதாச்சார முடையவன், விஷ்ணு சிவ பக்தியுடையவன், உபாயத்தால் காரியத்தை சாதித்துக் கொள்ளுவான், தேவப்

பிராம்மண விசுவாசி, கல்வி அறிவுடையவன், எழுதுவதில் அல்பம் தெரிந்தவன், வேதாந்த சாஸ்திரங்களில் ஞானமுடையவன், சம்ஸ் கிருத ஞானமுடையவன்.

(103) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி ஒன்பதாம் பாவாதி செவ்வாயால் நன்கு பார்க்கப்பட்டால் ஜாதகனுடைய தகப்பன் கொஞ்சம் தாமதமான காரியங்களைச் செய்பவன், சேர்க்கவோ, கலைக்கவோ, சாமர்த்தியமுடையவன், யுத்தியாய் பிரசங்கள் செய்ப வன், துஷ்டர்களுக்கு துஷ்டனுவான்.

(104) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி சூரியன், சுக்கிரன், ராகு இவர்கள் கூடியிருந்தால் ஜாதகன் மித்திரவஞ்சனை செய்ப வன், எப்போதும் நல்ல கர்மம் உடையவன், தேவதாபக்தி குரு பக்தி உடையவன், சங்கீத நாட்டியப் பிரியன், காமீ, தேவிசத்தி யின் அருளடைவான்.

(105) ஜென்ம லக்கினம் ரிஷபம் (சுமதியாம்சம்) ஆகி ஒன்ப தாம் பாவத்திற்கு ஒன்பதாம் பாவாதிபதி சுக்கிரனுடன் கூடியிருந் தாலும், ஜாதகன் தத்தவமிசத்தினுல் நல்ல யோகமடைவான் மேலும் அரசாங்கத்தில் .பிரியமுடையவன், ஜாதகன் வைசியகுல சிஷ்யர்களால் திரவிய சம்பாதனையும், சுகமும் ஜீவனமும், பல பல பிரபுக்களின் மூலம் சுகமும், ஜாதகனுடைய தகப்பன் மரித்தபின்பு ஜாதகனுக்கு தீர்த்தயாத்திரையும் சித்திக்கும், ஜாதகன் கங்கா யாத்திரைசெய்து பூர்ணமான யாத்திரையின் பலனை அடைவான்.

(106) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி நான்காம் பாவாதிபதி யாகிய சூரியன் பத்தாம் பாவத்தில் புதன், சுக்கிரன் இவர்களுடன் கூடியிருக்க மாதுரு காரகனுகிய சந்திரன் செவ்வாயுடன்கூடி குரு வால் பார்க்கப்பட்டால் ஜாதகன் தாய் விசேஷ சௌக்கியமுடைய வள், குணவதி, சௌக்கியமுடையவள், பொறுமையுடையவள், கணவன் மனதை அனுசரித்து நடப்பவள், அன்னதானம் செய்வ தில் பிரியமுள்ளவள், சாது, வமிசவிருத்தி உடையவள், பதி விருதை, புத்திரனுக்குப் பிரியமானதைச் செய்பவள், தர்ம சிந்தை யுடையவள், இவள் ஜாதகனுடைய ஐந்தாம் தெசையில் மரிப்பாள்.

(107) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி பத்தாம் பாவாதிபதி செவ்வாயால் நன்கு பார்க்கப்பட்டால் ஜாதகன் குருவாயிருத்தலை அடைவான், வைசிய சிஷ்யர்களுடைய திரவியத்தால் ஜாதகன் ஜீவிப்பவன், அனேக சிஷ்யக் கூட்டத்தாரை உடையவன், அவர் களை சிக்ஷை செய்தல், ரக்ஷித்தல் ஆகிய இரண்டும் உடையவன்.

(108) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி சுக்கிரன் புதனுடன் கூடியிருந்தால் ஜாதகன் சங்கீதப் பிரியமுடையவன், சேர்க்கவும், கலைக்கவும் வல்லவன், திரவிய சம்பாதனையில் சமர்த்தன், பிறரின்

ரகசியங்களை வெளியாக்குபவன், வாச்சாலகன், சாதுரிய யுக்தி யுடையவன்.

(109) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி நான்காம் பாவாதிபதி யாகிய சூரியன், சுக்கிரன் புதனிவர்களுடன் கூடியிருக்க, செவ்வா யுடன் கூடிய ராகுவால் இவர்கள் பார்க்கப்பட்டாலும், இவர்களு டன் அவர்கள் கூடியிருந்தாலும், ஜாதகன் வித்தைக்கு இடையூ றடைவான், வேத சாஸ்திர புராணங்களிலும், சம்ஸ்கிருதத்திலும், பிரியமுடையவன், பிதுரார்ஜிதமான நல்ல யோகத்தையுடையவன், தேவியை எப்பொழுதும் தோத்திரம் செய்வதில் பிரியமுள்ளவன், தாய் தகப்பனுக்குப் பிரியமானவன், விசேஷ சௌக்கியமுடைய வன், ஐந்தாவது வயதில் அக்ஷராப்பியாசமும், (வித்தியாபியாச மும்) எட்டு அல்லது ஒன்பதாவது வயதில் தகப்பனுக்குச் சுக மும், (பிராம்மண ஜாதகனுக்கு உபநயனமும்,) பதினைந்து அல்லது பதினான்காவது வயதிலேயே விவாகமும், ஜாதகன் பிறந்த ஊருக்கு கிழக்கிலேயே வெளுப்பு நிறமுள்ளவளும், பதிபக்தி உடையவளும், லக்ஷிமீ கடாக்ஷமுள்ளவளும், அன்னதான பிரியமுடையவளும், வமிசவிருத்தியுடையவளும், விவாகத்துக்குப்பிறகு சுகமும் உடை யவள், ஜாதகனுக்கு மனைவியாவாள், பதினாறுவது வயதில் ஜாதகன் பிரசித்தியும், தாய்தகப்பனுக்கு மிக்க பயமும் பதினேழாவது வய தில் சந்தேகமின்றி இடம் மாறுதலும் இருபது வயதிற்குமேல் பிர சித்தியும், சுயப் பிரபலமும், விசேஷ திரவியமும், மனைவி சௌக் கியமும், கெற்பாதானமும், இருபத்தைந்து வயதிலிருந்து நல்ல யோகமும், சுயார்ஜிதமும், பற்பல வழிகளில் தனவரவும், நாகப் பிரார்த்தனை செய்த பின்பு காலதாமதத்தில் புத்திர உபற்த்தியும், இருபத்தேழாம் வயதில் சொர்ண சூரிய யெந்திர தானமும், சுப் பிரமணிய விரதமும் செய்தபிறகு அல்ப சந்தானமும் அடை வான், வாகனாதி நல்ல யோகமும், சிஷ்யர்களால் தனவரவும், பல லக்குமுதலிய சம்பத்துடையவனும், வெளிதேசத்தில் கீர்த்தியும், வைசிய பிரபுவால் சன்மானமும், முப்பது வயதுக்குமேல் விசேஷ கீர்த்தியும், முப்பத்தேழாம் வயதில் தகப்பன் மரணமும், தகப்ப னின் மரணத்தால் பலவழிகளில் தனவிரயமும், நாற்பதில் விசேஷ பாக்கியவரவும், நாற்பத்தேழில் தாய் மரணமும், சகோதரனுக்கு விசேஷ யோகமும், ஐம்பதில் விசேஷ கீர்த்தியும், புத்திரப் பிரபல மும், ஆயுள்வரை சௌக்கியமும், வயோதிக வயதில் தர்மம் செய் தலு முடையவனாவான்.

(110) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி பன்னிரண்டாம் பாவாதி கேதுவுடன் கூடியிருந்து பன்னிரண்டாம் பாவத்தில் குரு இருந்தால் ஜாதகன் மரணத்திற்குப்பின்பு புண்ணியலோகத்தை யடைவான், புண்ணியம் பாபம் இரண்டும் சமமாக உடையவன்.

(111) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி சூரியன் புதனுடன் கூடியிருந்து ஒன்பதாம் பாவாதிபதி தன்உச்ச ராசியில் இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் சுகமடைவான், ஜாதகனுடைய தகப்பன் தன் தகப்பனைக்காட்டிலும் மேலான குணமுடையவன், சிவபக்த மதத்தையுடையவன், விஷ்ணு சிவபக்தியுடையவன், தேவபிராமண விசுவாசி, கல்வி அறிவுடைய விவேகி, எழுதுவதில் சமர்த்தன், ஊகத்துடன் சேர்க்கத்தெரிந்து, விலக்கவேண்டியதை விலக்கவும் தெரிந்தவன்.

(112) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி ஒன்பதாம் பாவாதிபதி ராகுவுடன் கூடியிருந்தால் ஜாதகன் தகப்பன் துராலோசனை செய்பவனாவான்.

(113) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி சூரியன் மீனத்தில் ஸ்ரீ தராம்சத்தில் இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் ராஜ (சேவையால்) உத்தியோகத்தால், ஜீவிப்பவன், மனைவி மரித்தப் பிறகு பூமி, கிராமம் முதலிய யோகமடைவான், அரசாங்கத்தில் பிரசித்திபெற்று அனேக கிராமாதிகார மடைவான், வாகனம் முதலிய நல்ல யோகமுடையவன், பாலிய வயதில் அற்பசுகி, காமீ, மத்திய அந்தியவயதில் நல்ல பிரசித்த புகழடைவான், ராஜ சபையில் நன்கு வாச்சாலகனாய்ப் பேசுபவன், வயோதிக வயதில் விசேஷயோகமடைவான், பல்லக்கு முதலிய பாக்கியமுடையவன், ஜாதகனுடைய தகப்பன் ஜாதகனுடைய மூன்றும் தெசையில் மரணம் அடைவான்.

(114) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி எட்டாம் பாவாதிபதி பத்தாம் பாவத்திலிருந்து ஆயுள் காரகனாகிய சனி குருவால் பார்க்கப்பட்டால் ஜாதகன் அறுபத்தேழுவயது வரையில் ஜீவிப்பவன்.

(115) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி ஏழாம் பாவாதிபதி தன் உச்ச ராசியிலிருந்து, சந்திரன் சனியுடன் கூடியிருந்தாலும், இரண்டாம் பாவாதிபதி சுக்கிரனுடன் கூடியிருந்தால் ஜாதகன் நல்ல மனைவியை அடைவான், ஒரே மனைவியை உடையவன், போகஸ்திரீகளிடம் சரசப்பிரியன், தன் பிரபலமும், பிரசித்தியும், தன் தகப்பன் மூலமாக அடைவான்.

(116) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி ஐந்தாம் பாவாதிபதி கேந்திர ராசியிலிருந்து சுக்கிரன் சூரியனுடன் கூடியிருந்தாலும், ஒன்பதாம் பாவாதிபதி சுயக்ஷேத்திரத்தில் இருந்து புத்திர காரகனாகிய குரு பாபருடன் கூடியிருந்தாலும், ஜாதகன் சந்தான நாசத்தால் துக்கமடைந்து, காலங்கடந்து பிறகு நாகப் பிரார்த்தனை சுப்பிரமணிய விரதம், ஞாயிற்றுக் கிழமை விரதம் முதலியவற்றால் புத்திர விருத்தி அடைவான், மூன்று புத்திரரும், இரண்டு புத்திரி

களும் தீர்க்காயுளுடையவராயிருப்பார்கள், இவர்கள் தவிர அதிகம் பிறந்தாலும் இறந்து விடுவார்கள்.

(117) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி லக்கின பாவாதிபதி சூத்திரகாலத்தில் இருந்தால் ஜாதகன் சூத்திர ஜன்மத்தில் நான்காவது கெற்பத்தில் அல்லது ஐந்தாவது கெற்பத்தில் ஜனனமாவான், ஜாதகனுக்கு மூத்த சகோதரனிருக்கமாட்டான், ஜாதகன் பின் சகோதரமுடையவன், சகோதரிகளுடன் கூடிபவன்.

(118) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி லக்கின பாவாதிபதி கேந்திரத்திலிருந்து சூரியன் புதனுடன் கூடியிருந்தால் ஜாதகனுக்கு துர்க்கமத்தியில் வேறொருவர் வீட்டிலாவது, துர்க்காரண்ணிய மலைப்பிராந்தியத்திலாவது, புண்ணிய க்ஷேத்திரத்தில், பூர்வ பாகத்தில் தகப்பன் சமீபத்திலில்லாதபோது ஜனனமும், உத்தர பாகத்தில் பிறந்தவன் பட்டினத்தில் தேவாலயத்துடன் கூடிய இடத்தில் ஜாதகன் ஒண்டியாயும் பிறப்பான், முன் பின் சகோதர விருத்தியில்லாதவன், ஜாதகன் பால ரோகங்களால் பீடிக்கப்பட்டு மாந்த ஜுரம், வைசூரிஜுவரம், முதலியவற்றாலும், பீடிக்கப் படுபவன்.

(119) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி லக்கின பாவாதிபதி கேந்திர பாவத்திலும், எட்டாம் பாவாதிபதி மித்திர ராசியிலும், இருந்து சந்திரன் கேந்திர திரிகோணங்களில் இருந்தால் ஜாதகன் சகல தோஷங்களும் விலகி அறுபத்தைந்து வயது பரமாயுளாக ஜீவித்திருப்பான், தவிர ஜாதகன் இருபத்தெட்டாம் வயதில் ஜுரத்தால் பீடையும், முப்பத்தாறுவது வயதில் மேக ஜாட்டியமும், நாற்பத்திரண்டில் பீடையும், அறுபதில் அபமிருத்துவும் அடைவான், அக்காலம் சாந்தி செய்தால் ஆரோக்கிய முண்டாகும்.

(120) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி சூரியன் புதனுடன் கூடியிருந்து ஒன்பதாம் பாவாதிபதி சந்திரனுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் கூடப்பிறந்த சகோதர விருத்தி உடையவன், சகோதரிகளில்லாதவன், கல்வி அறிவுடைய விவேகி, சிவபக்த மதத்தை அடைபவன், விஷ்ணு சிவபக்தி உடையவன், உபாய முடையவன் காரியசாதனை யுடையவன்.

(121) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி ஒன்பதாம் பாவாதிபதி சுப க்ஷேத்திரத்திலிருந்து சந்திரன் செவ்வாயுடன் கூடியிருந்தால், ஜாதகனுடைய தகப்பன் பிரசித்தமுடையவன், அரசாங்கத்தில் உத்தியோகமூலம் ஜீவிப்பவன், தன் குலவித்தையில் நிபுணன், எழுதுவதில் சமர்த்தன், சிற்பவித்தையில் தேர்ச்சிபெற்றவன், நீச்ச பிரபுவால் சுகமுடையவன், வீடுகட்டுவதில் சமர்த்தன், (வீடுகட்

டும் கண்டிராக்டு, அல்லது, பிளான் போடுவதில் சமர்த்தன், குளம் கிணறு, நடபாவி, தேவாலயம் முதலிய பிரதிஷ்டை செய்பவன், சுயார்ஜிதமுடையவன், சகோதரனால் தனமடைவான், பயிர்த்தொழிலில் அற்பப் பலனுடையவன், தன யோகவிருத்தியுடையவன், ராஜ காரிய சமர்த்தன், வெளி தேசத்திலும் கீர்த்தி உடையவன், வாகனாதி நல்ல யோகமுடையவன், தன் ஜனங்களிடம் பிரசித்தி உடையவன், ராஜ மந்திரியாவான், ராஜப் பிரியனாவான், பிரபுக்களுக்கு இஷ்ட விர்த்தி செய்பவன், பற்பல தேசசஞ்சாரம் செய்பவன், வயோதிக வயதில் புத்திரன் மூலமாக விசேஷ சுகமுடையவன், ஜாதகனுடைய தகப்பன் ஜாதகனுடைய நான்காம் தெசையில் மரித்துவிடுவான்.

(122) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி நான்காம் பாவாதிபதி சுயக்ஷேத்திரத்தில் நான்காவது பாவத்திலேயே இருந்து சந்திரன் ஒன்பதாவது பாவத்திலிருந்தால் ஜாதகன் தாய் விசேஷ சௌக்கியமுடையவள், குணமுடையவள், பொறுமைசாலி, பதிபக்தி உடையவள், நல்ல குணமுடையவள், அன்னதானப் பிரியமுடையவள், சாது, வமிசவிருத்தி உடையவள்.

(123) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி சந்திரன், செவ்வாய் சனியிவர்களுடன் கூடியிருந்தால் ஜாதகன் தாய் சமர்த்தை, கடுமையாய்ப் பேசுபவள், ஜாதகனுடைய தாய் ஜாதகனுடைய நான்காம் தெசையில் இறப்பாள்.

(124) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி மூன்றும் பாவாதிபதியாகிய சந்திரன், சனி செவ்வாய் இவர்களுடன் கூடி ஒன்பதாம் பாவத்தில் இருந்தால் ஜாதகனுக்கு மூத்த சகோதர விருத்தி உண்டாகாது, அப்படி மூத்தசகோதரன் பிறந்திருந்தாலும், மரித்துவிடுவான், ஜாதகனுக்கு மூத்த சகோதரி ஒருத்தி புத்திரீ புத்திர சுகமுடையவள், ஜாதகனுக்கு இளைய சகோதரர் மூன்று பேரும், இரண்டு இளைய சகோதரிகளும் உண்டு, இவர்களில் இளைய சகோதரர் மூவரும், ராஜாங்க உத்தியோகத்துடனும், யோகத்துடனும் இருப்பார்கள், இளைய சகோதரிகளில் ஒருத்தி விதவையாய் விடுவாள், வேறு ஒருத்தி பிரசவத்தினால் சுமங்கலியாகவே மரிப்பாள்.

(125) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி நான்காம் பாவாதிபதியாகிய சூரியன், சுக்கிரன், புதனிவர்களுடன் கூடியிருந்தால் ஜாதகன் இரண்டு பாஷைகளில் வல்லவன், நீச்ச பாஷையில் வல்லவன், வேறு பாஷைகளையும் கற்பவன், எழுதுவதில் சமர்த்தனாவான்.

(126) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி பத்தாம் பாவாதிபதி சுயக்ஷேத்திரத்தில் யிருந்து சந்திரன் செவ்வா இவர்களுடனும்,

கூடியிருந்தால் ஜாதகன் எப்பொழுதும் உத்தியோக ஜீவனமுடைய வன், நீச்ச அரசனிடத்தில் சேவை செய்பவன்.

(127) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி குரு ராகுவுடன் கூடியிருந்தாலும், ராகுவால் குரு பார்க்கப்பட்டாலும், ஜாதகன் துரா லோசனை செய்பவன், சேர்க்கவும், கலைக்கவும் வல்லவன், ராஜாங்க துவேஷமுடைய வேலைகளைச் செய்பவன்.

(128) ஜென்ம லக்கினம் ரிஷபம் (நாடி அம்சம் குமராம்சம்) ஆகி பூர்வபாகத்தில் லக்கின பாவாதிபதி சுய க்ஷேத்திரத்தில் இருக்கும்போது, சூத்திர காலத்தில் பிறந்தவன் மூன்றாவது கெற்பத்தில் ஜனனமானவன், அல்லது நான்காவது கற்பஜனனம் ஆகும். ஜாதகன் மூத்த சகோதரனில்லாதவன், துர்க்காரண்ணிய சமீபத்தில் தேவாயத்துடன் கூடிய பெரிய கிராமத்தில் புண்ணிய க்ஷேத்திர சமீபத்தில், அல்லது நதிதீரத்தில் வடக்குத் தெற்கு வீதியில் மேற்குப் பாகத்தில் உள்ள தகப்பன் வீட்டில் ஜனனமும், உத்தராம்சத்தில் சிறிய கிராமத்தில் வேறு வீட்டில் தேவாலய சமீபத்தில் கிழக்கு மேற்கு வீதியில் தெற்குப் பாகவீட்டில் ஜனனமுமாக ஜனனம் நேரிடும்.

(129) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி லக்கின பாவத்தில் சுக்கிரன் புதனுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தாய்க்குப் பிரசவ வேதனை ஜாதகன் பிறக்குங்காலத்தில் அல்பமாயும், உத்தராம்சத்தில் விசேஷ வேதனையும், சூதிதோஷ பயமும், பாலதோஷமும் உண்டாகும், வைசூரி ஜுரம் முதலியபயம் ஜாதகனுக்குச் சம்பவிக்கும்.

(130) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி லக்கின பாவாதிபதி புதனுடன் கூடியிருந்து எட்டாம் பாவாதிபதி சந்திரனுடன் கூடியிருக்க ஆயுள் காரகனாகிய சனி பதினொராவது பாவத்தில் இருந்தால் ஜாதகன் சகல தோஷங்களும் விலகிச் சுகமடைவான், அன்றி அறுபத்தேழுவயது பரமாயுளடைந்து, முப்பது வயதுக்குமேல் சொற்ப பீடையும், முப்பத்தாறுவது வயதில் ஜுரபயமும், நாற்பதாம் வயதில் மனஸ்தாபமும், பித்தவாயுவால் பீடையும், நாற்பத்தொன்பதாவது வயதில் சன்னிபாத ஜுரத்தால் பீடையும், (சஷ்டியப்தபூர்த்தியில்) அறுபதாவது வயதில் அபமிருத்து பயமும், சாந்தியால் சுகமும் அடைவான், (அந்த சாந்திகள் விதம் தேன், நெய்க்குடம்) தானமும், மிருத்தியுஞ் செய ஜெபமும், விலையுள்ள வஸ்திர தானத்தாலும், பதினாயிர சிவார்ச்சனையாலும், எறுமைக் கிடா தானத்தாலும், சுபமுண்டாகும், அபமிருத்துநீங்கும், அன்றி சனிப்பிரீதியாக நீல வஸ்திர தானம் செய்தலும், நல்லதே ஆகும். மேற்சொன்னபடி கிரகமுள்ள ஜாதகர்கள் விஷயத்தில் கும்ப ராசி

திரிகோணங்களிலாவது, விருஷப ராசி திரிகோணங்களிலாவது சனி கோச்சாரத்தில் சஞ்சரிக்கும் சமயம் மேலே சொன்ன பீடையுண்டாகும், அக்காலங்களில் மேலே சொல்லியபடி சாந்தி செய்யின் சுகமுண்டாகும்.

(131) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி சூரியன் இரண்டாம் பாவத்தை அடைந்திருக்க ஒன்பதாம் பாவாதிபதி பதினோராம் பாவத்திலிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் விசேஷ சௌக்கியமுடையவன், சிவபக்தி உடையவன், தேவப் பிராம்மண பக்தி உடையவன், கல்வி அறிவுடைய விவேகி, எப்பொழுதும் திரவியம் சம்பாதிப்பவன், அநேக கிராமங்களிலும் பிரசித்தி உடையவன், ராஜாங்கத்தில் பிரசித்தி உடையவன், தன் குலவித்தையில் வல்லவன்.

(132) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி ஒன்பதாவது பாவத்திற்கு ஒன்பதில் கேது இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் மத்திய வயதில் ரோகபீதி யடைபவன், இவனுக்கு முன் ஜென்மாந்திர பாபத்தால் குல்ம ரோகம் முதலானவை சம்பவிக்கும், தன் இன ஜனங்களில் பிரசித்தியும், மத்திய அந்திய வயதுகளில் கீர்த்தியும் உடையவன், வயோதிக வயதில் தர்மம் செய்பவன், புத்திரனால் சுகமுடையவன், இவன் ஜாதகனுடைய இரண்டாவது தெசையில் மரிப்பான்.

மிதுன லக்கினம் :- அத்யாயம் 3

(1) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி சந்திரன் நீச்ச ராசியில் தனுசு அம்சத்தில் இருந்து சந்திரனுக்கு கேந்திரத்தில் கும்பராசியில் குரு இருந்தால் விப்ரகாலத்தில் பிறந்த ஜாதகன் மூத்த சகோதரனில்லாதவன், இளைய சகோதரனுடையவன்.

(2) *சந்திராரூடாதிபதி குருஆகி சந்திரனுக்குக் கேந்திரத்தில் கும்பராசியில் இருந்தால் ஜாதகன் நதிதீரத்திலுள்ள சிறிய கிராமத்தில் ஜனனமடைவான், மேற்படி சந்திரன் மாலினீயம்சத்தில் இருந்தால் ஜாதகன் சூரியவாஸ்துவாகிய கிழக்கு மேற்கு வீதியில் ஜனனமும், உத்தரபாகத்தில் ஆனால் வனப்பிராந்திய பெரிய கிராமத்தில் ஜனனமும் அடைவான்.

---

* ஆரூடபத விளக்கம் முதலானவற்றை நமது ஜாதக ராஜ மனோரஞ்சிதம் மலர் 1-ல் கடினபத விளக்கம் என்னும் தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்டிருக்கிறபடியால் அங்கு கண்டு கொள்ளவும்.

(3) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி லக்கினத்தில் குரு இருந்தாலும், குரு லக்கினத்தைப் பார்த்தாலும் ஜாதகனுடைய தாய்க்குப் பிரசவத்தில் வேதனை அற்பமாயிருக்கும், இதற்கே லக்கினத்திற்கைந்தாம் பாவத்தில் பாபரிருந்தால் சூதிகாரிஷ்ட முண்டாகும், ஷி பாவத்தையும் குரு பார்த்தால் பூர்வ புண்ணியத்தால் சுகமுண்டாகும், சந்திரன் நீச்ச ராசியில் இருந்தால் பால தோஷ பயமும், ஷி சந்திரனை சுபருடைய அம்சத்தில் இருந்தால் மாந்த ஜ்வரத்தால் பாதையும் ஏற்பட்டு, பிறகு குணமாகி விடும்.

(4) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி லக்கினாதிபதியாகிய புதன் கேந்திரத்தில் மீனராசியிலிருந்து, சந்திரனுக்கு கேந்திரத்தில் சனி சிம்ம ராசியிலிருந்தாலும், சனிக்குத் திரிகோணத்தில் குரு இருந்தால் ஜாதகனுக்குச் சகல தோஷங்களும் விலகி சுக முண்டாகும்.

(5) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி குரு லக்கினாரூடாதிபதியாகி அவரே எட்டாமாரூடாதிபதியாகவுமாகி, லக்கினத்தையும் பார்த்தால் ஜாதகன் சகல தோஷங்களும் விலகி சுகமடைவான், தீர்க்காரம்ப வயதாக எழுபத்திரண்டு வயதுண்டாகும். (குறிப்பு) இந்த ஆரூடபத விளக்கங்கள் நமது ஜாதக ராஜ மனோரஞ்சிதம் மலர் 1-ல் 552-ம் பக்கத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

(6) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி நீச்ச ராசியில் சந்திரன் தனுசு அம்சத்திலிருந்து சூரியன் மீனராசியில் கேந்திரத்தில் புதனுடன் கூடியிருந்து ஒன்பதாம் பாவாதிபதியாகிய சனி சத்துரு, ராசியான சிம்மத்தில் இருந்தால் ஜாதகனுக்கு பிதுரு சௌக்கியம் அற்பமாகும், ஜாதகனுடைய தகப்பன் மத்திம வயதுடையவன், விஷ்ணுபக்த மதத்தை அடைவான், அற்பமான கல்வியாலேயே சுகியாயும், எழுதுவதில் சமர்த்தனுகவும் ஆவான். தேவப் பிராம்மண பக்தி உடையவன், சேவகத் தொழில் செய்பவன், சூத்திரருடைய திரவியத்தால் அல்லது ஈனனிடமாவது தொழில் செய்யும் தனத்தால் ஜீவிப்பான், திரவிய சம்பாதனையில் சமர்த்தன், பூமியாலும் சுகியாவான், ஜன்ம பூமியை விட்டு வேறு கிராமத்தில் வசிப்பான், பிதுரார்ஜித சுகமுடையவன், சுயார்ஜிதமுமுடையவன், இவன் ஜாதகனுடைய ஜென்ம திசையில் ஜாதகனுடைய பாலியத்திலேயே மரிப்பான்.

(7) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி நான்காம் பாவாதிபதி கேந்திரத்தில் மீனத்தில் இருந்து சந்திரனுக்குக் கேந்திரத்தில் குரு இருந்து ஷி குரு சந்திராரூடாதிபதியாக ஆனால், ஜாதகனுடைய தாய் தீர்க்க வயதடைவாள், ஷி சந்திரன் சுபருடைய அம்சத்தில் இருந்தால் ஜாதகனுடைய தாய் குணவதியாவாள்,

தைவானுக்கிரகம் உள்ளவள், புத்திர பாக்கியமுடையவள், வயோதிக வயதில் புத்திரனுல் சௌக்கியமடைவாள், ஜாதகனுடைய ஐந்தாந் தெசையில் கடைசியில், அல்லது ஆருவது தெசையில் சுய புக்தி யல்லது ராகு புக்தியில் மரிப்பாள், இங்கு சந்திராரூடாதிபதியாக குருஆவது காணும்வழி:—கடக ராசிக்குச் சந்திரன் ஐந்தாவது ஸ்தானமான விருச்சிகத்திலிருந்தால், அங்கிருந்து ஐந்தாவது ஸ்தானம் மீனமாகும். அந்த மீனத்திற்கதிபதி குருவாவதால் அவர் சந்திராரூடாதிபதி ஆவார்.

(8) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி மூன்ரும் பாவாதிபதி மீனராசியில் கேந்திரத்தில் இருந்து செவ்வாய் குருவுடன் கூடி ஒன்பதாம் பாவத்திலிருந்தால், சனி மூன்ரும் பாவத்திலிருந்தாலும் ஜாதகனுக்கு அற்ப சகோதரருண்டாவார், ஜாதகன் மூத்த சகோதரனில்லாதவன், இளைய சகோதரருடையவன், ஜாதகனுடைய இளைய சகோதரன் புத்திரீ புத்திரருடையவன், தைவானுக்கிரகமுடையவன், சகோதரனுல் சுகமுடையவன், ஜாதகனுக்கு இளையவன் ஒருவன் தவிர்த்து மற்றவர்கள் மரித்துவிடுவார்கள்.

(9) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி நீச்சராசியில் தனுசு நவாம்சத்தில் சந்திரனிருந்து குஜ திரிம்சாம்சத்தில் நீச்சபங்க ராஜ யோகத்தில் பிறந்தவன் வெளுப்பு நிறமுடையவன், அறிவாளி, ரூபமுடையவன், புகழுடையவன், வசியமுடையவன், அழகிய முகமுங் கண்களுமுடையவன், அதிருஷ்டசாலி, மேதாவி, தைவானுக்கிரக யோகமுடையவன், ஸ்ரீ வைஷ்ணவ மதாச்சாரமுடையவன், சொற்ப கல்வியுடையவனுவான்.

(10) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி லக்கின பாவாதிபதி நீச்ச ராசியிலிருந்தால் ஜாதகன் ஆச்சாரக் குறைவுடையவன், இதற்கே குரு செவ்வாயுடன் கூடி கும்பராசியிலிருந்தால், ஜாதகன் தூராலோசன புத்தியுடையவன், லோப சுபாவமுடையவன், திரவிய சம்பாதனையில் சமர்த்தன், பூமியால் சுகி, வியாபாரத்தில் விருத்தியும், லாபமு முடையவன், அதிர்ஷ்டசாலி, மேதாவி, கொஞ்சம் மூர்க்க சுபாவமுடையவன், பாலியத்தில் தகப்பனை இழந்து தன் ஜனங்களால் சுகமடைவான், தனக்குச் சமமான ஜனங்களின் சினேகிதத்தாலும், பிராம்மணராலும் சுகமுடையவன், மிலேச்சர் (ஈனர்) சினேகிதத்தால் தனமடைவான், வியாபாரத்தில் தனவிருத்தியுடையவன், பதினறு வயதிற்குமேல் பிரசித்தி உடையவன், இருபது வயதிற்குமேல் தன சம்பாதனையடைவான், இருபத்தைந்து வயதிற்குமேல் சமர்த்தனுவான், வெகு திரவியம் சம்பாதிப்பவன், முப்பது வயதிற்குமேல் பிரசித்தியுடையவன், நாற்பது வயதிற்குமேல் விசேஷமான பிரசித்தியுடையவன், நாளுக்கு நாள் விருத்தியுடையவன் ஆவான்.

(11) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி சுக்கிரன் மேஷத்தில் கேதுவுடன் கூடியிருந்தால் ஜாதகன் மனைவியால் அதிக விரயம் செய்வான், பூமி பாக்கியமுடையவன், ஐம்பது வயதிற்குமேல் அதிக கீர்த்தியுடையவன், பிரபுக்கள் வழியாக பிரசித்தியாவான், சகோதர சினேக முடையவன், வயோதிக வயதில் கீர்த்தி உடையவனுவான், வாகனம், கீர்த்திமுதலிய சம்பத்துடையவன், வயோதிக வயதில் மேன்மையுடையவனுவான்.

(12) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி ஏழாம் ஆருடாதிபதி பாபியாகி சுக்கிரன் கேதுவுடன் கூடியிருந்தால் ஜாதகன் மறு மனைவியடைவான், மனைவியால் வெகு கிலேசமுடையவனுவான்.

(13) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி சுக்கிரனுக்கு ஏழா மிடத்தில் பாபரிருந்து சுக்கிரனும் பாபருடன் கூடியிருந்தால் மனை வியால் (வெகு கிலேசமுண்டாகும்) சுகமுண்டாகாது, தன்னை நம் பிச் சினேகம் செய்த ஸ்திரியைக் கொன்ற தோஷத்தால் அல்லது ஸ்திரீ ஹத்தியாலாவது மேற்படி பலனுண்டாகும், இதற்கே ஏழாம் பாவாதிபதி கேந்திர ராசியிலிருந்தால் ஜாதகனுக்கு வழி வழியாய் மனைவியர் வாய்ப்பார்கள்.

(14) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி சுக்கிரனுக்கு ஏழில் பாபரிருந்தால் ஜாதகன் மனைவியால் விசாரமுடையவன் ஆவான்.

(15) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி ஏழாம் பாவாதிபதி கேந்திர ராசியிலிருந்தாலும் பாபருடன் கூடியிருந்தால் ஜாதக னுடைய மனைவியர் அனேகர் மரித்து விடுவார்கள், ஜாதகன் ஐந் தல்லது ஏழுபேர்களை விவாகம் செய்துகொள்ளுவான், இவர்களில் ஐந்தல்லது ஆறுபேர்கள் மரித்துவிடுவார்கள், இந்த தோஷத்தின் சாந்திக்காக அவசியம் சேதுஸ்நாநம் செய்யவேண்டும், பிறகு அன்னதானம் செய்தால் மனைவியால் சுகமும், வயோதிக வயதில் சுகமும் உண்டாகும், வயோதிக வயதில் புத்திர சௌக்கிய முண் டாகும், சேதுஸ்நானத்திற்கு முந்தி கோதானம் செய்யவும்.

(16) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி ஐந்தாம் பாவத்தில் ராகு இருந்து ஐந்தாம் பாவாதிபதி கேதுவுடன் கூடியிருந்து குரு வும் செவ்வாயும் கூடி (கும்ப ராசியில்) இருந்தால் ஜாதகனுக்குச் சந்தானத்தடையுண்டாகும், இந்த தோஷபரிகாரமாக (சாந்தியாக) நாகசாந்தியும், சிம்சுமார தானமும் செய்தால் ஜாதகனுக்கு ஜீவத் ஸந்தானமாக ஒரு புத்திரனும், இரண்டல்லது மூன்று புத்திரிக ளும் ஆயுளுடனிருப்பார்கள், மேற்படி சாந்தி செயயாவிடில் சந்தா னம் (உண்டானுலும்) பிறந்தாலும் அவை நசித்து விடும், ஜாத கன் தத்து புத்திரனை யடைவான், ஜாதகன் விவாகமடைந்த பிறகு

சுகமும் சுயப்பிரபலமும், தன சம்பாதனையும், இரண்டாந் தெசையில் பிரசித்தியும், சுயார்ஜிதமும், சகோதரனால் விவசாயத்தால் தனவரவும் அடைவான், இதற்கே சுக்கிர தெசை மூன்றாந் தெசையாகி வந்தால் ஷை சுக்கிர தெசை ஐந்தாம் பாவாதிபதி தெசையானால் ஷை தெசையின் பிற்பாதியில் உத்தரோத்தரமான பிரபலமும், மனைவி சுகமும், மனைவி மரித்தலும், சம்பத்தும், தானிய வியாபாரமும், பயிர்த்தொழிலில் லாபமும் ஏற்படும்.

(17) ஜென்ம லக்கினம் மிதுனமாகி சூரியன் கேந்திர திரிகோணத்தில் இருந்து ஷை சூரிய தெசை வந்தால் அத்தெசையில் அதிக சுகமுண்டாகும்.

(18) ஜென்ம லக்கினம் மிதுனமாகி செவ்வாய் கேந்திர திரிகோணங்களிலிருந்து அவர் தெசை வந்தால் அந்த தெசையில் நல்ல யோகமும், வெகு பூமிக்கதிபதியாகவும், சம்பத் துடையவனாகவும், பிரபு லக்ஷணமுடையவனாகவுமாவான், பற்பல கிராமங்களில் நற்கீர்த்தியும், தியாக போகங்களும், சுகங்களுமுடையவன், வயோதிக வயதில் கீர்த்தியுமடைவான்.

(19) ஜென்ம லக்கினம் மிதுனம்(சுகதாம்சம் பூர்வபாகம்)ஆகி சந்திர லக்கினாதிபதியாகிய குரு தன் உச்சராசியிலிருந்து சந்திராரூடத்தில் சுக்கிரனிருந்தால் ஜாதகன் நதிப்பிராந்தியநகரத்தில் தேவாலயமுள்ள புகழ்வாய்ந்த பட்டினத்தில் ஜனனமும், உத்தராம்சத்தில் வேறிடத்தில் ஜனனமும் அடைவான்.

(20) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி லக்கின பாவாதிபதி மித்திர ராசியில் இருந்து எட்டாம் பாவாதிபதி தன் உச்சராசியில் இருந்து பத்தாம் பாவாதிபதியும் உச்ச ராசியில் இருந்தால் ஜாதகன் சர்வ தோஷங்களும் விலகி சுகமடைவான்.

(21) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி லக்கின பாவாதி ரிஷப ராசியில் சுமநாம்சத்திலும், எட்டாம் பாவாதிபதி துலா ராசியில் சுமநாம்சத்திலும், குரு தன் உச்ச ராசியிலும் இருந்தால் ஜாதகனுக்கு ஆயுள் விருத்தி உண்டாகும். மத்தியாயுளாக அறுபத்தாறு வயதடைவான்.

(22) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி சூரியன் பன்னிரண்டாம் பாவத்தில் சுபருடன் கூடியிருந்து, சனி தன் உச்ச ராசியில் மிதுன நவாம்சத்திலிருந்தால், ஜாதகனுடைய தகப்பன் சகோதரனுடையவன், ஹரிசங்கர பக்தி உடையவன், சிவபக்த மதாச்சாரமுடையவன், பிதுரார்ஜிதமாக சேர்த்துவைக்கப்பட்ட தனத்தால் ஜீவனம் சுகமாக உடையவன், அல்ப கல்வியும், அல்ப ஆச்சாரமும் உடையவன், ஜன்மம் முதல் தனமும், போகமும், சுகமும் உடைய

வன், விஷய போகத்திலாசையுடையவன், போகஸ்திரீகளிடம் சரசமும் செய்பவன், அதன் மூலமாக பிதுரார்ஜித திரவியத்தை விரயம் செய்வான், க்ஷேத்திரமூலம் சுகமுடையவன், நகரத்தில் வாசமுடையவன், இரு மனைவியருடையவன், மூத்தவளிடம் புத்திர சந்தானமுடையவன், வயோதிக வயதில் அற்ப பாக்கியமுடையவன், ஜாதகனுடைய இரண்டாந் தெசையில் ஜாதகனுடைய பத்தாவது வயதில் தகப்பன் மரணமடைவான்.

(23) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி சந்திரனுக்கு ஏழாமிடத்தில் சூரியனிருந்து சந்திரன் காதாம்சத்தில் இருந்து கேந்திரத்தில் இருந்தாலும், ஜாதகனுக்குத் தாய் சுகமுண்டாகாது, ஜாதகனுடைய பாலியத்தில் ஜாதகன் பிறந்த வருஷத்திலேயே தாய் மரித்துவிடுவாள், ஜாதகன் இரண்டாம் வயதில் மாற்றுந்தாயால் சுகமடைவான்.

(24) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி சூரியன் ரிஷப ராசியில் விசோத்தியாம்சத்திலிருந்து செவ்வாயும், சனியும் கூடி கடக ராசியிலிருந்தாலும், செவ்வாய்க்கு மூன்றுமிடத்தில் கேது இருந்தால் ஜாதகன் ஆண் சகோதரமில்லாதவனாகி, ஒரு சகோதரி வெகு ஆயுளுடையவளும், புத்திரனுடையவளும், முன் பாபம் காரணமாக விதவையாகியுமிருப்பவளை உடையவன் ஆவான்.

(25) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி புததிரிம்சாம்சத்தில் சாம்ராஜ்ஜிய சகடயோகத்தில் பிறந்தவன் வெளுப்பு நிறமுடையவன், நல்ல அறிவாளி, மேலும் லக்கின பாவத்தில் சூரியனிருந்தால் ஜாதகன் உஷ்ணமான சரீரமுடையவன், கல்வியுடையவன், புத்தியுடையவன், எழுதுவதில் அறிவுடையவன், ரூபலக்ஷணமுடையவன், அழகிய முகமுங் கண்களுமுடையவன், அதிருஷ்டசாலி, மேதாவி, தைவானுக்கிரகமுடையவன், சிவ பக்தியுடையவன், சிவ மதத்தைத் தழுவுபவன், தேவிஸ்தோத்திரம் செய்பவன், கெற்ப ஸ்ரீ மான், மகா போகி, யுக்தா யுக்த விவேகி, உபாயமுடையவன், நாலுந் தெரிந்தவன், வாச்சாலகன், திரவிய சம்பாதனையில் சமர்த்தன், பரோபகாரி, புண்ணிய முடையவன், தியாகமுடையவன், கெம்பீர புத்தியுடையவன், சந்தன புஷ்ப வஸ்திர அலங்காரப் பிரியமுடையவன்.

(26) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி இரண்டாம் பாவத்தில் குருவும், செவ்வாயும் கூடியிருந்தால் ஜாதகன் பிதுரார்ஜித தன மூலம் சுகமுடையவன், சுயார்ஜிதமுடையவன், கிராமாந்திரத்தில் வசிப்பவன், இரண்டு கிராமங்களுடையவனுவான்.

(27) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி சந்திரன் மிதுனராசியில் கும்ப நவாம்சத்தில் இருந்து சந்திரனுக்கு கேந்திரத்தில் உச்ச

ராசியில் சுக்கிரனிருந்தால் ஜாதகன் சகோதரனில்லாதவனாக ஒண்டியாக விப்ரகுலத்தில் பிறந்து மாதுரு சோகமுடையவனாக ஆவான்.

(28) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி சந்திராரூடாதிபதியாகிய சுக்கிரன் கேந்திர பாவத்திலிருந்தால் ஜாதகன் நதிப்பிராந்தியத்தில் கிழக்கு மேற்கு வீதியுள்ள அக்கிரகாரத்தில் தேவாலயத்துடன் கூடிய இடத்தில் ஜனன மடைவான்.

(29) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி லக்கின பாவத்தில் சந்திரன் செவ்வாயுடன் கூடியிருந்தால் ஜாதகன் தாய் பிரசவத்தில் வெகு வேதனையடைவாள், பாலாரிஷ்டம் ஜாதகனுக்கு ஆறு அல்லது ஏழுவருஷம் வரையிருந்துவரினும் தகப்பனுடைய புண்ணியத்தால் சுகமடைவான்.

(30) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி லக்கின பாவாதிபதியாகிய புதன் பதினோராம் பாவத்திலிருந்து எட்டாம் பாவாதிபதி சுயக்ஷேத்திரத்தில் இருந்து லக்கினத்திற்கு ஐந்தாம் பாவத்தில் குரு இருந்தால் ஜாதகன் பால தோஷங்களால் பீடைபடையமாட்டான்.

(31) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி எட்டாம் பாவாதிபதி சர ராசியிலிருந்தால் ஜாதகன் தீர்க்காயுளடைவான்.

(32) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி நான்காம் பாவம் செவ்வாயால் பார்க்கப்பட்டு சந்திரன் செவ்வாயுடன் கூடயிருந்து சந்திரன் மிதுனராசியில் கும்ப நவாம்சத்தில் இருந்தால் ஜாதகன் தாய் ஐந்தல்லது ஆறுவது வயதில் ஜாதகனுடைய பாலியத்திலேயே இறந்துவிடுவாள்.

(33) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி கேது சகோதராரூடத்தில் இருந்து செவ்வாய்க்கு அஷ்டமத்தில் சனியிருந்தால் ஷெ செவ்வாய் லக்கின கேந்திரத்திலிருந்தாலும் ஜாதகன் சகோதரஹீனனாவான், ஒரு பேத சகோதரனுண்டு என்று சிலரும், இரண்டு பேர்கள் உண்டு என்று வேறு சிலரும் எண்ணுகின்றனர், சகோதரிகளுமிப்படியே, அதிகம் சகோதர சகோதரிகள் பிறந்தாலும் மரித்து விடுவார்கள்.

(34) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி சந்திரன் மிதுன ராசியில் கும்ப நவாம்சத்திலிருந்து அமலாயோகத்தில் சனி திரிம்சாம்சத்தில் பிறந்தவன் நல்ல ரூபமும், கறுப்பு நிறமும் உடையவன், பிராம்மணனால் மிக்க அறிவாளியாவான், கல்வியுடையவன்,

விசேஷ விஷ்ணு பக்தியுடையவன், தேவப் பிராம்மணபக்தி உடையவன்.

(35) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி பத்தாம் பாவமுதலாக வரிசையாக கிரகமிருந்து ஆரம்பிக்கும் கர்மாதி மாலிகா யோகத்தில் எட்டாம் பாவத்தில் பாபக்கிரகமிருந்தால் ஜாதகன் பாலியம் முதலிருந்து தரித்திரமடைவான், பாலியத்தில் தாயை இழப்பான். தகப்பனுடைய சகோதரனால் சுகமடைவான், பதினாறு வயதிற்கு மேலிருந்து பிரசித்தியுடையவன், இருபது வயதிற்குமேல் தனமடைவான், பூமியாலும், உத்தியோகத்தாலும் சுகமடைவான்.

(36) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி லக்கினத்திற்குப் பத்தாம் பாவத்தில் சுக்கிரனிருந்தால் ஜாதகன் சங்கீத ரஸிகனாவான், பாட்டில் சமர்த்தன், ஜாதகன் ஸ்திரீலோலன் புணர்ச்சியில் பிரியமுடையவன், சந்தன புஷ்ப வஸ்திரப்பிரியன், விஷய போகத்தில் அதிக இச்சையுள்ளவன்.

(37) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி லக்கினாதிபதிக் கிரண்டாமிடத்தில் ரிஷபத்தில் ராகு இருந்தால் ஜாதகன் உத்தியோகத்தில் நிபுணனாவான், அந்தியத்தில் ஞானமுடையவனாவான்.

(38) ஜென்ம லக்கினம் மிதுனம் (பாரிஜாதாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி கேந்திர ராசியிலிருந்து சந்திரன் விப்ர காலத்தில் இருந்தால் ஜாதகனுக்கு விப்ரகுலத்தில் பாக்கிய வம்சத்தில் யோகமுடையவனும், கீர்த்தியுடையவனுமாக நான்காவது கெற்பத்தில் ஜனன மேற்படும், ஜாதகனுக்கு இரண்டு மூத்த சகோதரரும், ஒரு மூத்த சகோதரியும் உண்டு, இவர்களில் ஒரு சகோதரன் நஷ்டமடைவான், வேறு ஒருவன் சுகமும், இரண்டு பாஷைகளில் சமர்த்தனும், அமிச விருத்தி உடையவனும் ஆவான். ஜாதகனுக்கு இளைய சகோதர சகோதரிகள் உண்டாகார்கள், மூத்த பேத சகோதரி ஒருத்தி விருத்தியடைந்து மரிப்பாள், பேத சகோதரன் ஒருவன் ஒரு புத்திரன் பிறந்த பிறகு மத்திப வயதில் ரத்த சோகையால் மரித்து விடுவான்.

(39) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி லக்கின பாவத்திற்கு அதிபதியாகிய புதன் நீச்ச ராசியில் இருந்தால் ஜாதகன் நதிப் பிராந்தியத்திலுள்ள பெரிய கிராமத்தில் சிவ விஷ்ணு ஆலயங்கள் அதிகமாகவுள்ள இடத்தில் பூர்வ பாகத்தில் தகப்பன் வீட்டில் ஜனனமும், உத்தரபாகத்தில் தாய் வீட்டில் ஜனனமும் அடைவான், பூர்வ உத்தரபாக ஜாதகங்களில் பலனில் சிறிது வித்தியாசமுண்டாகும்.

(40) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி ஒன்பதாம் பாவாதிபதியாகிய சனி ஒன்பதாம் பாவத்திற்கு ஐந்தாமிடத்தில் இருந்து

பிதுரு காரகனான சூரியன் ஒன்பதாம் பாவத்தில் சத்துரு க்ஷேத் திரத்தில் பலத்துடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் சுக முடையவன், கல்வி அறிவுடைய விவேகி, இரண்டு மூன்று பாஷை களில் சமர்த்தன், வாச்சாலகன், எல்லா வேலைகளிலும் சமர்த்தன், அரசாங்க உத்தியோகமூலம் சுகமும், முதலில் அற்ப உத்தியோக மும், பிறகுப் பிரபல உத்தியோகமும், ஆயுள்வரை உத்தியோக மும், தன விருத்தியும், இரு தார யோகமும், புத்திர விருத்தியும் உடையவன், ஜாதகனுடைய பன்னிரண்டல்லது, பதிமூன்றும் வய தில் ஜாதகனுடைய தகப்பன் மரிப்பான்.

(41) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி நான்காம் பாவாதிபதி கேந்திர ராசியில் நீச்சமடைந்து செவ்வாயுடன் கூடியிருக்க சந்தி ரன் மாதுருஸ்தானமான நான்காமிடத்திற்குப் பத்தில் இருந்தால் ஜாதகன் தாய் மத்திய வயதடைவாள், சாத்துவீகம், சுத்தம், பதி பக்தி, நற்குணம், வமிச விருத்தி, புண்ணியம் முதலிய உடைய வள், உடன்பிறந்த சகோதர சகோதரி விருத்தியில்லாதவள்.

(42) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி பதினோராவது பாவத் தில் கேது இருந்து ராகுவால் பார்க்கப்பட்டால் ஜாதகனுடைய மூத்த சகோதரன் தன் மனைவிக்கு மூத்த விதவைச் சகோதரியால் மருந்திடப்பட்டு, புத்திப்பிரமை யேற்பட்டு, அதனால் ஜாதக னுடைய மூத்த சகோதரன் உத்தியோக மிழந்து, தன் சகோதர னால் (ஜாதகனால்) குணமடைவான், ஜாதகனுடைய மூத்த சகோ தரன் மனைவி துஷ்ட சுபாவமுள்ளவள், ஜாதகனுடைய மூத்த சகோதரனுக்குப் புத்தி சுவாதீனமில்லாத காலத்தில் ஒரு புத்திரி பிறப்பாள், அப்புத்திரியும் சிலகாலம் புத்தி சுவாதீனமின்றியிருந்து பிறகு சுகமடைவாள், ஜாதகனுடைய மூத்த சகோதரனுக்கு முன் ஜன்மாந்திர தோஷத்தால் ஒன்றல்லதிரண்டு வருஷம் கழித்துச் சுகமுண்டாகும், நற்புத்தி அடைவான், பிறகு அவன் உத்தியோக மின்றி சாஸ்திர புண்ணிய கதைகள் கேட்பது முதலானவற்றாலும், தன் இனத்துப் பிரபு மூலமும், பலராலும் தனலாப மடைவான், அற்ப சுகியாவன், பிறகு அவன் ஜாதகனால் சுகமில்லாதவன் ஆவான்.

(43) ஜென்ம லக்கினம் மிதுனம் (கூர்மாம்சம்) ஆகி பத்தாம் பாவாதிபதி தன் உச்ச ராசியில் இருந்தால் ஜாதகன் பாக்கிய வமி சத்தில் பேத சகோதரியுடையவனாக ஜனனம் ஆவான், ஜாதகனுக் குச் சகோதர விருத்தி உண்டாகாது, உண்டானாலும் இறந்துவிடும்.

(44) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி லக்கின பாவாதிபதி ராசியில் ரிஷபத்திலும், நவாம்சத்தில் தன் அம்சத்திலுமிருந்து, நான்காம் பாவாதிபதியும், அவ்வாறே யிருந்தால் ஜாதகன் நதிப்

பிராந்திய தேசத்தில் சிவாலய, விஷ்ணு ஆலயங்கள் அதிகம் உள்ள பெரிய கிராமத்தில் அல்லது பட்டிணத்தில் கிழக்கு மேற்கு வீதியில் தெற்கு வாடையில் ஜனனமும், உத்தர பாகத்தில் தாய் வீட்டில் ஜனனமும் அடைவான்.

(45) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி ஒன்பதாவது பாவாதிபதி தன் உச்ச ராசியில் ஐந்தாவது பாவத்தில் தன பாவாதிபதியுடன் கூடியிருந்தாலும்,

(46) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி ஒன்பதாம் பாவாதிபதி குருவுடன் கூடியிருந்து, சனி தன் உச்ச ராசியில் சந்திரனுடன் கூடியிருந்து, சுய நவாம்சம் பெற்ற சனியுடன் குருவும் சந்திரனும் கூடியிருந்தாலும்,

(47) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி சூரியன் லக்கின கேந்திரத்தில் இருந்து நீச்சாம்சம் பெற்று நவாம்சத்தில் சூரியன் குருவால் பார்க்கப்பட்டுச் சூரியன் சுப்பிரபாம்சத்திலும், முன் சொன்ன சனி சரஸ்வதாம்சத்திலிருந்தாலும் ஜாதகனுடைய தகப்பன் சௌக்கியமுடையவன், யோகமுடையவன், கீர்த்தி உடையவன், கல்வி அறிவுடையவன், ரூபலக்ஷணமுடையவன், பிரபுவைப்போன்ற அடையாளங்களுடையவன், பிரபுக்களால் சுகமடைவான், தேவப் பிராம்மண பக்தி, குரு பக்தி முதலிய உடையவன், விஷ்ணு கைங்கரிய தர்மாத்துமா, விஷ்ணு ஆலயப் பிரதிஷ்டை செய்பவன், குளம், உத்தியானம் முதலிய வற்றிற்குத் தர்மம் செய்பவன், தர்ம சிந்தை உடையவன், தர்மமான ஒழுக்கமுடையவன், சாத்துவீகன், தனிகன், போகி, அனேக குடும்பங்களை நிலைக்கச் செய்து ரக்ஷிப்பவன், வெகு ஜன உபகாரி, சகல தானங்களும் செய்பவன், சதாகாலமும் அன்ன தானம் செய்பவன், வாத சிலேஷ்ம சுபாவமுடையவன், தித்திப்பு, புளிப்பு, சந்தனம், வஸ்திரம், புஷ்பம் முதலியவற்றில் பிரியமுடையவன், சங்கீதப் பிரியன், கொடையாளி, சந்தோஷி, போகபோக்கியக் குறைவில்லாதவன், வியாபாரத்தில் நிபுணன், வஸ்திர வியாபாரத்தில் தன விருத்தி உடையவன், வெள்ளைசிகப்பு முதலிய நூல் வியாபாரம் செய்பவன்,வட்டிக்குத் தனமீந்து வட்டி வியாபாரமும் செய்பவன், சணப்பஜாதியில் தனிகனுடன் கூடி முப்பதுவருஷம் கூட்டாக வியாபார விர்த்தி உடையவன், தினந்தோறும் வியாபார விருத்தி, தனவிருத்தி உடையவன், இருபத்தைந்துவித நூல்வியாபாரம்செய்வன்,பற்பல தேசங்களில் தனவிருத்தி, புகழ் விருத்தி, மேற்கு திக்கில் மிக்க வியாபாரவிருத்தி, விசேஷ பிரசித்தி முதலியன உடையவன், தன் கிராமத்திலும், வியாபாரப் பிரபலமடைந்து தன் கிராமத்திற்கு அதிபதியாவான், தன் இனத்தாரில் (இவனே விசேஷ யோகமுடையவன் (சிக்ஷ தக்ஷாதிகாரி, நியாயாந்நியாய விசாரணை செய்ப

வன், ஜாதகன் பிறந்த பிறகே ஜாதகனுடைய தகப்பன் யோக விருத்தியடைபவன், மேலும் லக்ஷம் அல்லது ஒன்னரை லக்ஷத்திற்கதிபதியாகி லக்ஷாதிபதி எனப் பெயரெடுப்பான்.

(48) ஜென்ம லக்கினம் மிதுனம் (நாடி அம்ச சுப்பிரபாம்சம்) ஆகி பதினோராவது பாவாதிபதி கேந்திர பாவத்தில் இருந்து சந்திரன் நான்காவது காலத்தில் இருந்தால் ஜாதகனுக்கு சிவ பக்த குலத்தில் பாக்கிய வமிசத்தில் ஆறுவது கெற்பத்தில ஜனனம் நேரிடும், ஜாதகனுக்கு இரண்டு மூத்த சகோதரர் புத்திர சந்தானமுடையவரும், எழுதுவதால் ஜீவிப்பவரும் ஆவார்கள், இரண்டு மூத்த சகோதரிகள் புத்திர புத்திரீ வமிச விருத்தி உடையவர்கள், ஒரு மூத்த சகோதரனுக்கு முன் நஷ்டமடையும், ஜாதகன் இளைய சகோதரனில்லாதவன், ஒரு இளைய சகோதரி ஜாதகனுக்குப் பின்பு பிறந்து யௌவன வயதில் மரித்து விடுவாள்.

(49) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி பூர்வபாகத்தில் லக்கின சுக பாவாதிபதிகள் பன்னிரண்டாம் பாவத்தில் இருந்தால் ஜாதகனுக்கு நதிப்பிராந்திய புண்ணிய தேசத்தில் நிச்சயமாக பெரிய கிராமத்தில், அல்லது பட்டிணத்தில் தகப்பன் வீட்டில் (சிவாலய விஷ்ணு ஆலய) பிரசித்தமுள்ள இடத்தில் ஜனனமும், உத்தர பாகத்தில் தாய் வீட்டில் ஜனனமும் ஏற்படும்.

(50) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி மூன்றும் பாவத்தில் நான்காம் பாவாதிபதியிருந்தால் பின் வயதில் உத்தியோகமூலம் ஜீவிப்பான்.

(51) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி ஒன்பதாம் பாவாதிபதி இரண்டாம் பாவத்தில் இருந்து, சூரியன் பன்னிரண்டாம் பாவத்தில் சுய நவாம்சத்தில் இருந்தால் ஜாதகன் தகப்பன் தீர்க்காயுளுடையவன், வித்தை, புத்தி, விவேகம், தேவபிராமணபக்தி, விசேஷ சிவ பக்தி முதலியன அடைவான், முன்ஜென்மாந்திர சேஷத்தால் ஜாதகனுடைய தகப்பன் இந்த ஜென்மத்தில் விசேஷ பாக்கியமும், புத்திர பௌத்திர விருத்தியும், பிரபலமும் அடைவான்.

(52) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி நான்காம் பாவாதிபதி பன்னிரண்டாம் பாவத்தில் இருந்து சந்திரன் கேந்திர ராசியிலிருந்து குருவால் சந்திரன் பார்க்கப்பட்டால் ஜாதகன் தாய் தீர்க்க வயதடைவாள், சாத்துவீகம், சுத்தம், பதி பக்தி, வமிச விருத்தி முதலிய உடையவள், ஜாதகன் தாய் உடன்பிறந்த சகோதர சகோதரிகள் உடையவள், அவர்களும் வமிச விருத்தி உடையவர்கள், ஜாதகனுக்கு நாற்பதாவது வயதில் ஜாதகன் தாய் மரணமடைவாள்.

(53) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி லக்கின பாவத்தில் குருவும், பன்னிரண்டாம் பாவத்தில் சூரியனும், ஐந்தாம் பாவத்தில் கேதுவுமிருந்தால் ஜாதகன் வேதாந்தத்தில் திடச் சித்த முடையவனுவான்.

(54) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி இரண்டாம் பாவாதிபதியாகிய சந்திரன் வாக்கு ஸ்தானத்திற்கு ஆருமிடத்திலிருந்து, வாக்கு ஸ்தானமான இரண்டாமிடத்தில் சனி இருந்தால் ஜாதகன் கொஞ்சம் கொஞ்சம் வாய் தெத்துதலுடன் பேசுவான்.

(55) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி மோக்ஷ ஸ்தானுதிபதியாகிய சுக்கிரன் சுயக்ஷேத்திரத்தில் சூரியனுடன் கூடி மோக்ஷ ஸ்தானத்திலிருந்து மோக்ஷ காரகனுகிய கேது குருவால் பார்க்கப் பட்டால் ஜாதகன் தப்பாமல் மோக்ஷமடைவான்.

(56) ஜென்ம லக்கினம் மிதுனம் (புஷ்கராம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபதி வர்க்கோத்தமாம்சத்தில் மகர ராசியில் இருந்து சந்திரன் வைசிய காலத்தில் இருந்தால் ஜாதகன் பாக்கிய வமிசத்தில் விசேஷ தனமுள்ள கெற்ப ஸ்ரீமானுகவுள்ள குடும்பத்தில் ஐந்தாவது கெற்பத்தில் ஜனனமாகி யோகமும், கீர்த்தியும் அடைவான், ஜாதகனுக்கு ஒரு மூத்த சகோதரனும், ஒரு மூத்த சகோதரியும் உண்டு, மேற்படி மூத்த சகோதரனுக்குப் புத்திரி புத்திர விருத்தி உண்டாகும், மேற்படி மூத்த சகோதரி இரண்டு புத்திரரைப் பிரசவிப்பாள், அப்புத்திரர்கள் சூதிகா கிரகத்திலேயே மரித்து விடுவார்கள்.

(57) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி பூர்வ பாகத்தில் லக்கின பாவாதிபதி ஆருவது பாவத்தில் இருந்து நான்காம் பாவாதிபதியும், அப்படியேயிருந்தால் ஜாதகனுக்கு ஆற்றுப்பிராந்திய புண்ணிய க்ஷேத்திரத்தில் புண்ணிய குளத்திற்குச் சமீபமாக உள்ள பெரிய கிராமத்தில் சிவாலயப் பிரசித்தமுள்ள வடக்குத் தெற்கு வீதியில் மேற்குப் பார்த்த வாயிற்படி உள்ள தகப்பனுடைய வீட்டில் ஜனனமும், உத்தர பாகத்தில் தாய் வீட்டில் ஜனனமும் நேரிடும்.

(58) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி சந்திரன் வர்க்கோத்தமாம்சத்தில் ராஜ்ய ஸ்தானமான ஐந்தாமிடத்தில் இருந்து சுபருடனும் கூடியிருந்தால் ஜாதகனுக்கு ராஜயோகமுண்டாகும்.

(59) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி சனி வர்க்கோத்தமாம்சத்தில் மகர ராசியில் இருந்தால் ஜாதகன் பதினுறு வயதிற்குமேற்பட்டு சுகத்தையடைந்து, இருபத்திரண்டாவது வயதில் யோகமுண்டாகியோக பிரபல முடையவனுவான்.

(60) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி குரு ராசியில் மிதுனத் திலும், நவாம்சத்தில் செவ்வாயின் அம்சத்திலும் இருந்து பலக் குறைவுடனுமிருந்தால் ஜாதகன் புத்திர சோக முடையவனுவான்.

(61) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி செவ்வாய் துலா ராசி யில் வர்க்கோத்தமமடைந்திருந்தால் ஜாதகனுக்கு மூன்ருவது தெசையில் விசேஷ பாக்கியமும், புத்திர ஜெனனமும், நூதனவீடு லாபமும், கிராமம், பூமிமுதலிய லாபமும், வியாபார விருத்தியும் உண்டாகும்.

(62) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி பத்தாம் பாவத்திலா வது ஆரும் பாவத்திலாவது குரு இருந்து, நவாம்சத்தில் சுபாம் சத்தில் மேற்படி குரு இருந்து பாபர்களால் பார்க்கப்படாமலிருந் தால் ஜாதகன் தர்மசீலன் நல்ல புத்திமான்.

(63) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி ஐந்தாம் பாவாதிபதி யாகிய சுக்கிரன் சுய க்ஷேத்திரத்தில் இருந்து, அந்த ஐந்தாம் பாவத்திலிருந்து நான்காமிடத்தில் அம்சத்தில் ரந்திர ராசியான மகர நவாம்சத்தில் இருந்து, புத்திர ஸ்தானமான ஐந்தாமிடத்தில் செவ்வாய் வர்க்கோத்தமமடைந்து புத்திர ஸ்தானத்தில் சூரியன் இருந்தால் ஜாதகனுக்கு மூன்று விதமாக புத்திர தோஷ மேற் படும் மேலும்.

(64) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி புத்திர ஸ்தானத்தைச் சனி சுய க்ஷேத்திரமான மகர ராசியிலிருந்து பார்த்தாலும், சுக்கி ரன் மேற்படி சனியுடன் கூடியிருந்தாலும் ஜாதகனுக்குப் புத்திர தோஷமுண்டாகும், அந்த தோஷங்களுக்குச் சாந்தி செய்தால் ஜாதகனுக்கு நல்ல புத்திர உற்பத்தியுண்டாகும்.

(65) ஜென்ம லக்கினம் மிதுனம் (நாடியம்சம் ஸமாம்சம்) ஆகி ராகு ஏழாவது பாவத்தில் வர்க்கோத்தமாம்சத்தில் இருந்து சந்தி ரன் விப்பிரகாலத்தில் இருந்தால் ஜாதகன் விப்பிரகுலத்தில் சீமந்த புத்திரனுக ஜெனிப்பான், ஜாதகன் ஒரேஒரு இளையசகோதரயோக முடையவன், அவன் கல்வி அறிவுடையவன், எழுதுவதில் சமர்த் தன், விவகாரத்தினுல் ஜீவிப்பவன், அரசாங்க மூலமாக ஜீவிப்ப வன், ஒரே மனைவியுடையவன், புத்திர சந்தானமுமுடையவன்.

(66) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி பூர்வ பாகத்தில் ஜாதகனுக்கு லக்கின பாவாதிபதி எட்டாவது பாவத்தில் இருந்தால் ஜாதகனுக்கு பெரிய நதிப்பிராந்திய புண்ணிய க்ஷேத்தி ரத்தில் பெரிய கிராமமல்லது பட்டிணத்தில் வடக்குத் தெற்கு வீதியில் அந்த வீட்டிற்குக் கிழக்கில் சம்பூர்ணமாக ஜலமுள்ள

குளத்திற்கருகில் மேற்குப்பார்த்த வாயிற்படி உள்ள உறவினர் வீட்டில் ஜனனமும், உத்தர பாகத்தில் தகப்பன் வீட்டில் ஜனன மும் நேரிடும்.

(67) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி ஒன்பதாவது பாவாதி பதி பதிமூன்றாவது பாவத்தில் நீச்சமடைந்து இருந்து பிதுரு கார கனுகிய சூரியன் கேந்திர ராசியில் இருந்தால் ஜாதகனுடைய தகப் பன மத்திய வயதடைவான், ஜாதகனுடைய தகப்பன் கல்வி அறி வுடையவன், விவேகி, ரூபலக்ஷணமுடையவன், பாலிய வயதில் அற்ப சுகமுடையவன், கஷ்டமுடையவன், மனத்துன்பமும், வேத னையும் உடையவன், ஜாதகனுடைய தகப்பன் தன் தகப்பன் சம் பாதித்த ஆஸ்திக் கிருக வாகன, பூமி இல்லாதவன், சுயார்ஜிதம் சம்பாதிப்பவன், தன் சுய தேசத்தில் சுகமுடையவன், முதலில் விவகாரஸ்தலத்தில் எழுதுவதால் ஜீவனமும், பிறகு சூத்திரப் பிரபுமூலம் விசேஷ அன்படைந்து, தினே தினே பிரபல உத்தி யோகமடைவான், ஜாதகனுடைய தகப்பன் வெளிதேசத்தில் பத் துப் பன்னிரண்டு வருஷம் மத்திய வயதில் உத்தியோகமும், பிறகு மூன்று வருஷம் வரை உத்தியோக பங்கமும், பிறகு உத் தியோகமும், வாகனுதிலாபமும், போகஸ்திரீ சேர்க்கையும், அதன் மூலியமாக தேகத்தில் ஜல ரோகமும், அதனுல் ஜாதகனுடைய தகப்பன் அவனுடைய நாற்பதாவது வயதில் அல்லது, நாற்பத்தி ரண்டாம்வயதில் ஜாதகனுடைய இரண்டாம்தெசையில் மரணமும் அடைவான், ஜாதகனுடைய தகப்பன் தன் உடன்பிறந்த சகோதர னில்லாதவன், ஐந்து சகோதரிகளுடையவன், அவர்களில் இரண்டு சகோதரிகள் புத்திர சந்தானமுடையவர்கள், வேறு இரு சகோதரி கள் ஒரு ஒரு புத்திரருடையவர்கள், மற்ற ஒரு சகோதரி ஒரு புத் திரனைப்பெற்று மரித்து விடுவாள்.

(68) ஜென்ம லக்கினம் மிதுனம் (நாடிஅம்சம்சுப்பிரபாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபதி இரண்டாம்பாவத்தில் இருந்து, சந்தி ரன்நான்காவது காலத்தில் இருந்தால் ஜாதகன் சிவபக்த குலத்தில் ராஜ லக்ஷணமுடையவனுக நான்காவது கெற்பத்தில் தனிகர் வீட்டில் ஜெனனமடைவான், ஜாதகனுக்கு இரண்டு மூத்த சகோ தரிகள் விவாகமடைந்து வமிச விர்த்தியின்றி சுமங்கலியாய் மரிப் பார்கள், தவிர ஜாதகன் மூத்த இரட்டைப் பிறப்பாகப் பிறந்த ஒரு பிறப்பு நஷ்டமும் உடையவன், ஜாதகனுக்கு ஒரு இளைய சகோதரனுண்டாவான், அவன் சுகமாயிருப்பான்.

(69) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி நான்காம் பாவாதி ஐந் தாவது பாவத்தில் இருந்தால் ஜாதகனுக்கு ஆற்றுப் பிராந்திய பெரிய கிராமத்தில் அல்லது பட்டினத்தில் மெத்தைமேல் மெத்

தையுள்ள கல்வீட்டில் தகப்பன் வீட்டில் ஜனனமும், உத்தர பாகத்தில் தாய்வீட்டில் ஜனனமும் நேரிடும்.

(70) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி லக்கின பாவாதிபதி ராசியில் துலாராசியிலும், நவாம்சத்தில் கும்பாம்சத்திலுமிருந்து, குரு விருச்சிகத்தில் ராசியிலும், அம்சத்தில் குரு கும்பத்திலு மிருந்தால் ஜாதகனுக்கு மகா புருஷனுடைய (சித்திபுருஷனுடைய) அனுக்கிரகத்தினால் மகாதேவ தக்ஷிணாமூர்த்தி மந்திர வித்தையும், மகா யந்திர சாதனையும், அதனால் ராஜ பட்டாபிஷேக புருஷனு டைய கடுக்கனும் கிடைக்கும்.

(71) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி ஒன்பதாம் பாவாதிபதி இரண்டாம் பாவத்தில் இருந்து, சூரியன் ஐந்தாவது பாவத்தில் நீச்சமடைந்திருந்தால் ஜாதகனுடைய தகப்பன் மத்திப வயதடை வான், ராஜ துவாராவாக ஆயுத பரீக்ஷை செய்பவன், சத்துருக் களை அதம் செய்பவன், தீரன், திட சித்தமுடையவன், யுத்த களத் தில் சமர்த்தன், அரசனிடம் விசேஷ அன்புடையவன், ரூப லக்ஷணமுடையவன், ராஜ லக்ஷணமுடையவன், வெளுப்பு நிற முடையவன், சௌக்கியமுடையவனுமாவான்.

(72) ஜென்ம லக்கினம் மிதுனம் (நாடி அம்ச கமலாம்சம்)ஆகி நான்காம் பாவாதிபதி மூன்றும் பாவத்தில் இருந்து சந்திரன் நான் காவது காலத்தில் இருந்தால் ஜாதகன் ஏழாவது கெற்பத்தில் சிவ பக்த குலத்தில் யோகமும், கீர்த்தியுமுடையவனுமாக ஜெனிப் பான், ஜாதகனுக்கு நான்கு மூத்த சகோதரிகளும், இரண்டு மூத்த சகோதரரும் உண்டு, இவர்களில் மூத்த சகோதரரிருவரும் மூன்று சகோதரிகளும், பாலியத்திலேயே மரித்து விடுவார்கள், மற்ற ஒரு சகோதரி விவாகமடைந்து ஒரு புத்திரியைப் பிரசவித்துச் சூதிகா கிரக தோஷத்தால் பிரசவித்த அதேமாதக்கடைசியில் மரிப்பாள், அப்புத்திரி வேறு ஸ்திரீயிடம் ஸ்தன்னியபானம் செய்து பிழைக் கும், ஜாதகனுக்கு ஒரு இளைய சகோதரனும், ஒரு இளைய சகோ தரியும் புத்திரீ புத்திர வமிச விருத்தி உடையவர்கள் பிறப்பார் கள்.

(73) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி நான்காவது பாவாதி பதி நான்காம் பாவத்திற்குப் பன்னிரண்டாம் பாவத்தில் இருந்து நவாம்சத்தில் சுய க்ஷேத்திரத்தில் தன் உச்சாம்சத்தில் இருந்து சந்திரன் ராசியில் மீன ராசியிலும், நவாம்சத்தில் விருச்சிகத்திலும் இருந்து, ராசியில் துலாத்திலும், நவாம்சையில் ரிஷபத்திலு மிருக் கப்பட்டகுருவால் அம்சத்தில் சந்திரன் பார்க்கப்பட்டால் ஜாதகனு டைய தாய்தீர்க்கவயதடைவாள், சாத்துவீகம்,சுத்தம்,பதிபக்தி,வமி சவிருத்தி முதலிய உடையவள், தன் உடன் பிறந்த நான்கு சகோ தரரும், நான்கு சகோதரிகளுமுடையவள், இந்த சகோதரிகளில்

மூவர் வமிச விருத்தி உடையவர்கள், ஒருத்தி வமிச விருத்தி யில்லாதவள், ஜாதகனுடைய அம்மான்கள் யோகவிருத்தி உடைய வர்கள், ஜாதகனுடைய இருபத்து மூன்றுவது வயதில் தாய் மரிப்பாள்.

(74) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி ஒன்பதாவது பாவாதி பதி பதினோராவது பாவத்தில் நீச்ச ராசியில் தன் உச்சாம்சத்தில் இருந்து சூரியன் இரண்டாம் பாவத்தில் இருந்து, நவாம்சத்தில் துலா ராசியில் குரு இருந்து பிதுருஸ்தானமான ஒன்பதாம் பாவத் தையும், ஒன்பதாவது பாவாதிபதியையும், குரு பார்த்தால் ஜாதக னுடைய தகப்பன் தீர்க்காயுளுடையவனும் சுகியுமாவான்.

(75) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி ஒன்பதாம் பாவத்திற் காறுவது பாவாதிபதியாகிய சந்திரன் ஒன்பதாம் பாவத்திற்கு இரண்டாம் பாவமான லக்கினத்திற்குப் பத்தாமிடத்தில் இருந்து ஒன்பதாம் பாவத்திற்கு ஆறுவது பாவமான கடக ராசியில் சூரி யன் சுக்கிரனுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பனுக்கு இருபத்தொன்பதாவது வயதில் அன்னத் துவேஷமும், அஜீர்ண ரோகமும் உண்டாகும், மருந்து சாப்பிடுவதால் மேற்படி வியாதி குணமுண்டாகாது, அது முன் ஜென்மாந்திர தோஷமானபடியால் இச்ஜென்மத்தில் அன்ன தானம் செய்தால் ரோக நிவர்த்தியும், சுக மும் குணமும் உண்டாகும்.

(76) ஜென்ம லக்கினம் மிதுனம் (நாடி அம்சம் சுப்பிரபாம் சம்) ஆகி லக்கின பாவாதிபதி இரண்டாம் பாவத்தில் இருந்தால் ஜாதகனுக்கு நதிப்பிராந்தியத்தில் கிழக்கு மேற்கு வீதியில் வடக்கு வாடையிலுள்ள தகப்பன் வீட்டில் ஜனனமும், உத்தர பாகத்தில் வடக்குத் தெற்கு வீதியில் மேற்குமுக வாயிற்படி உள்ள தாய்வீட் டில் ஜனனமும் நேரிடும், இரண்டு அம்சத்திலும் ஜெனித்தவர் களுக்கு ஜெனித்த பட்டிணம் அல்லது, பெரிய கிராமமிவற்றில் நிச் சயமாக விசேஷ விஷ்ணு சிவ ஆலயங்களிலிருக்கும்.

(77) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி லக்கின பாவாதிபதி இரண்டாம் பாவத்தில் இருந்தால் ஜாதகன் பிறந்த பிரசவ அறை யின் வாயிற்படியானது கிழக்கிலாவது, தெற்கிலாவது இருக்கும், சூதிகாகிருகத்திற்குள் இரண்டு சுமங்கலிஸ்திரீகளும், ஒரு விதவை யும் இருப்பார்கள். பிரசவ அறையில் இரண்டு தீபங்கள் காரமான கசப்புள்ள எண்ணெ வார்க்கப்பட்டு இருக்கும், தாய்க்கும், குழந் தைக்கும் வெளுப்பும், சிவப்பும் கலந்த வஸ்திரம் உடுத்தப் பட்டிருக்கும், பிரசவ சமயத்தில் ஜாதகன் தாய்க்கு வேதனை பூர்வ பாகத்தில் அற்பமாயும், உத்தர பாகத்தில் விசேஷமாகவும் நேரிடும்.

(78) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி லக்கின கேந்திரத்தில் சூரியனும், பத்தாவது கேந்திரத்தில் சனியுமிருந்தால் ஜாதகனுக்கு பாலரோகாதி மாந்த ஜுரம், வைசூரி ஜுரபயத்தால் பிராண உபத்திரவமான பயம் எட்டு வருஷம்வரையில் இருக்கும், ஜாதகனுக்குப் பத்தாம் வயதில் அல்லது பன்னிரண்டாம் வயதில் தப்பாமல் தாய் மரித்து விடுவாள், ஜாதகன் மாற்றாந்தாய் யோகமுடையவன், பாலியவயதில் மந்த புத்தி உடையவன், பதினாறாவது வயதில் பிரசித்தி அடைவான், வியாபாரத்தினால் சுகமடைவான், பிதாவுக்குச் சுகமும், மாற்றாந்தாய்க்குச் சுகக்குறைவு முண்டாகி மாற்றாந்தாய் புத்திர சந்தானமில்லாமலே ரோகத்துடன் மரிப்பாள், பிறகு ஜாதகனுடைய தகப்பன் மூன்றாவது விவாகமடைவான்.

(79) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி சூரியன் லக்கின பாவத்தில் வர்க்கோத்தமாம்சத்தில் இருந்து ஒன்பதாம் பாவாதிபதியும், பத்தாம் பாவத்தில் வர்க்கோத்தமாம்சத்தில் இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் யோகமும், கீர்த்தியுமுடையவன், கல்வி அறிவுடைய விவேகி, தேவப் பிராம்மண பக்தி உடையவன், வியாபாரத்தில் நிபுணன், வல்லவன், வாச்சாலகன், கோள் சொல்லுபவன், தயையுடையவன், உபகாரி, சொல்பபோகி, குணவான், ரூபலக்ஷணமுடையவன், பிதுரார்ஜிதம் நிறைய உடையவன், தான் சுயார்ஜித அதிகார யோகமுடையவன், லக்ஷ ஆஸ்தியுடையவனாவான்.

(80) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி நான்காம் பாவாதிபதி இரண்டாம் பாவத்திலிருந்து மாதுரு காரகன் நீச்ச ராசியில் இருந்தால் ஜாதகன் தாய் மத்திய அல்பாயுசுடையவள், சாத்துவீகம், சுத்தம், பதிபக்தி, வம்சவிருத்தி முதலியன உடையவள், பாக்கிய விருத்தி உடையவள், தன் உடன் பிறந்த சகோதரருடையவள், அன்ன தானம் செய்பவள், சாதுவானவள், எல்லோரிடத்திலும் அன்புடையவள், ஜாதகனுடைய ஜென்ம தேசையிலேயே இவள் மரித்துவிடுவாள்.

(81) ஜென்ம லக்கினம் மிதுனம் (லக்ஷிமீசாம்சம்) ஆகி ஜாதகம் பெண் ஜாதகமானால், லக்கின பாவாதிபதி லக்கின கேந்திரத்திலும், சந்திரன் விப்பிரகாலத்திலுமிருந்தால் ஜாதகி விப்பிர குலத்தில் சிவ பக்தியுடையவர் வீட்டில் சீமந்த புத்திரியாய் ஜனிப்பாள், ஜாதகிக்கு இரண்டு இளைய சகோதரரும், ஒரு இளைய சகோதரியும் பிறப்பார்கள், இவர்களில் இளைய சகோதரிமட்டும் மரிப்பாள், சகோதரரிருவரும் சுகியாயிருப்பார்கள், இவர்களைவிட ஜாதகிக்கு அதிக சகோதர விருத்தி உண்டாகாது.

(82) ஜென்ம லக்கினம் மிதுனம் (லக்ஷிமீசாம்சம்) ஆகி பூர்வ பாகத்தில் லக்கின பாவாதிபதி லக்கின கேந்திரத்தில் இருந்தால்

ஜாதகி நதிப்பிராந்திய சிறிய கிராமத்தில் தகப்பன் வசிக்கும் வீட்டில் ஜனனமும், உத்தர பாகத்தில் தாய் வீட்டில் ஜனனமும் அடைவாள்.

(83) ஜென்ம லக்கினம் மிதுனம் (சம்பகாம்சம்) ஆகி பதினோராவது பாவாதிபதி நீச்ச ராசியிலிருந்து சந்திரன் விப்பிர காலத்தில் இருந்தால் ஜாதகன் விஷ்ணுபக்த குலத்தில் ஐந்தாவது கெற்பத்தில் ஜெனனமாவான், ஜாதகனுக்கு இரண்டு மூத்த சகோதரரும் ஒரு மூத்த சகோதரியும் உண்டு, இவர்களில் மூத்த சகோதரர்கள் இருவரும் பாலியத்திலேயே மரித்து விடுவார்கள், மூத்த சகோதரி விவாகமான பிறகு மத்திய வயதில் முன் ஜென்மாந்திர பாபத்தினால் விதவையாவாள், ஜாதகனுக்கு ஒரு பேத சகோதரி ஒருவள் இருந்து அவளும் விதவையாகி மரிப்பாள், இரண்டு பேத சகோதரிருந்து அவர்களும் பாலியத்தில் மரித்து விடுவார்கள்.

(84) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி பூர்வ பாகத்தில் லக்கின சுக பாவாதிபதிகள் மூன்றும் பாவத்திலிருந்தால் ஜாதகனுக்கு சிறிய கிராமத்தில் விஷ்ணு ஆலயமுள்ள தெருவில் தாயின் உறவினர் வீட்டில் ஜனனமும், உத்தர பாகத்தில் தாய் வீட்டிலேயே ஜனனமும் நேரிடும்.

(85) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி ஒன்பதாம் பாவாதிபதியாகிய சனி லக்கினத்திற்கு மூன்றும் பாவத்தில் பாபருடன் கூடியிருந்து சூரியன் இரண்டாம் பாவத்தில் நீச்சக் கிரகத்துடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் சௌக்கியம், கல்வி, அறிவு, விவேகம், ஒன்றல்ல திரண்டு மூன்று பாஷைகளில் சாமர்த்தியம், வாச்சாலகம் முதலிய உடையவன், இரண்டு தாரமுடையவன், ஜாதகனுக்கு முப்பத்தி மூன்றுவது வயதில் ஜாதகனுடைய தகப்பன் மரிப்பான்.

(86) ஜென்ம லக்கினம் மிதுனம் (சுபாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி ஆறுவது பாவத்திலிருந்து நான்காம் பாவாதிபதியும் அப்படியே யிருந்தால் ஜாதகனுக்கு புண்ணிய க்ஷேத்திரத்தில் நதிப்பிராந்தியத்திலுள்ள பெரிய கிராமத்தில் ஜனனமும், உத்தர பாகத்தில் சிறிய கிராமத்தில் ஜனனமும் நேரிடும்.

(87) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி லக்கின பாவாதிபதி ஆறுவது பாவாதிபதியுடன் கூடியிருந்து நவாம்சத்தில் புதன் தன்னுடைய உச்சாம்சத்தில் இருந்தால் ஜாதகன் வியாபாரத்தால் சுகமடைவான்.

(88) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி இரண்டாவது பாவாதிபதி கேந்திர ராசியிலிருந்து நான்காவதான கன்னியா ராசியில் சுக

தாம்சத்தில் சனியிருந்தால் ஜாதகன் சௌக்கியமடைவான், எல்லா ஜனங்களுக்கும் பிரியமானவன், எல்லோரிடத்தும் அன்புடையவன், எல்லோர்க்கும் உபகாரம் செய்பவன், வாசாலகன், பயங்கர சுரூப முடையவன், குடும்ப விர்த்தி உடையவன், ஜாதகனுடைய புத்திரீ புத்திரர்கள் மரித்து விடுவார்கள், ஜாதகனுக்குப் புத்திர சந்ததி நிலைக்காது, ஜாதகன் தன் மூத்த சகோதரனின் புத்திரனை தத்து எடுத்துக்கொள்ளுவான்.

(89) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி மூன்றும் பாவாதிபதி யாகிய சூரியன் ஐந்தாவது பாவத்தில் சுக்கிரனுடன் கூடியிருந்து ஆறும் பாவத்தில் பதினோராவது பாவாதியிருந்து, நவாம்சத்தில் தன் உச்சாம்சத்தில் பதினோராவது பாவாதியிருந்தால் ஜாதக னுக்கு இரண்டு சகோதரர் புத்திர சந்தானமுடையவர்களும், ஒரு மூத்த சகோதரி புத்திர சந்தானமுடையவளும் இருப்பார்கள், ஒரு இளைய சகோதரியும் உண்டாவாள், ஜாதகன் இளைய சகோதர னில்லாதவன்.

(90) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி நான்காம் பாவாதிபதி ஆறும் பாவத்தில் சுகதாம்சத்தில் விருச்சிக ராசியிலிருந்து நவாம் சத்தில் தன் உச்சாம்சத்திலுமிருந்து, சந்திரன் கேந்திர ராசியி லிருந்தால் ஜாதகன் தாய் தீர்க்க வயதுடையவள், சாத்துமீகம், சுத்தம், பதிபக்தி, புத்திரீ புத்திர விருத்தி, உடன்பிறந்த சகோ தரர் முதலிய விருத்தியுடையவள், ஜாதகனுடைய மூத்த சகோ தரன் தத்து ஆய்விடுவான், அவன் இருதாரமுடையவன்.

(91) ஜென்மலக்கினம் மிதுனம் ஆகி ஐந்தாம்பாவத்தில் ஐந்தாம் பாவாதிபதி சூரியனுடன் கூடியிருந்து, புத்திரபாவத்தில் குரு இருந் தாலும், புத்திரபாவத்தைக் குருராசி அம்சங்களில்பார்த்தாலும்,புத் திர நவாம்சத்தில் குரு இருந்து ராகு கேதுக்களுடன் கூடியிருந்தா லும், ராகு கேதுக்களால் புத்திர நவாம்சம் பார்க்கப்பட்டாலும், ஜாதகனுக்கு புத்திரஸ்தானத்திற்கு குரு பார்வையிருந்தால் புத் திர சந்தானமுண்டாகும், சனி ராகு இவர்களால் புத்திரஸ்தானம் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்குப் புத்திரி சந்தானம் உண்டாயினும் புத்திரன் பிறந்து மரித்து விடுவான், மேலும் ஜாதகனுக்கு புத்திர ஸ்தானத்தில் ராசியில் அல்லது அம்சத்தில் குரு, சூரிய சுக்கிரர் கலந்து இருந்தால் ஹரி, ஹர சாபத்தால் ஜாதகனுக்கு புத்திர சந் தானமுண்டாகாது. சாந்தி செய்யின் ஜாதகனுக்கு தத்த புத்திரன் தீர்க்காயுளுடனிருப்பான், அச் சாந்திகளாவது:—நாக சாந்தி தானம், பாலகிருஷ்ண தானம், நாராயணபலி தானம், முதலிய வைகளை கிருஷ்ணயாமள கல்பவிதிப்படி செய்தால் ஜாதகனுக்கு தத்த சந்ததி நிலைக்கும், அப்படிச் செய்யாவிடின் தத்த புத்திர னுக்கும், ரோகபீடையால் பிராணபயமுண்டாகும்.

(92) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி சூரியன் ராசியில் ஐந்தாம் பாவத்தில் இருந்து அம்சத்தில் கும்பத்திலுமிருந்து, ஒன்பதாம் பாவாதிபதி நான்காம் பாவத்தில் ராசியிலும், அம்சத்தில் சிம்மாம்சத்திலுமிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் தீர்க்காயுளுடையவன், விசேஷ விஷ்ணு பக்தி உடையவன், மத்திய வயதில் தான் பிறந்த ஊரை விட்டு விட்டு ஜாதகனுடைய தகப்பன் பட்டிணத்தில் வசிப்பான், ஜாதகனுடைய தகப்பன் உடன் பிறந்த சகோதரருடையவன் என்று சிலரும், சகோதரர் மரித்து விடுவார்கள் என்று சிலரும், எண்ணுகின்றனர், ஜாதகனுடைய தகப்பன் ஒரு தாரமுடையவனென்று சிலரும், இரு தாரமுடையவனென்று வேறு சிலரும் எண்ணுகின்றனர்.

(93) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி நான்காம் பாவாதிபதி ஆருவது பாவத்தில் இருந்து நான்காம் பாவத்தில் சனி ராசியிலும், அம்சத்தில் சிம்மாம்சத்திலுமிருந்து, சந்திரன் கேந்திர ராசியில் இருந்து நான்காம் அம்சத்தில் உச்சனான புதனுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தாய் சாத்துவீகம், சுத்தம், பதிபக்தி, வமிசவிருத்தி, புண்ணியம் முதலிய உடையவள், புத்திரீ புத்திர விருத்தி உள்ள உடன் பிறந்த சகோதரருடையவள், ஜாதகன்தாய் அன்ன தானம் செய்பவள், பந்துக்களுக்கு உபகாரம் செய்பவள், புத்திர பௌத்திராதி விருத்தி உடையவள். தன் ஆயுள் வரை சுகியாயிருந்து ஜாதகனுடைய ஐந்தாவது தெசையில் மரிப்பாள்.

(94) ஜென்ம லக்கினம் மிதுனம் (நாடி அம்சம் கமலாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி விருச்சிக ராசியில் வர்க்கோத்தமத்தில் இருந்து சந்திரன் விப்பிரகாலத்திலிருந்தால் ஜாதகன் விப்பிர குலத்தில் பாக்கிய வமிசத்தில் நான்காவது கெற்பத்தில் ஜனனமடைவான், ஜாதகனுக்கு ஒரு மூத்த சகோதரன் விவாகமடைந்து புத்திர சந்தான மில்லாதவனுவான், அவனுக்கு ஒரு சமயம் புத்திரன் பிறந்தாலும், அப் புத்திரன் மரித்து விடுவான். அவன் ஒரே தாரமுடையவன். ஜாதகனுடைய மூத்த சகோதரன் தன் மனைவி வமிசத்தில் சுவீகாரம் எடுத்துக்கொள்ளுவான், அப்புத்திரனால் அவன் இறந்தபின் உத்தர கிரியைகளை அடைவான், ஜாதகனுக்கு முன்பு இரண்டு கெற்பம் ஜாதகனுடைய தாய்க்கு நஷ்டமுண்டாகிவிடும், ஜாதகன் இளைய சகோதரனில்லாதவன், ஒரு இளைய சகோதரி ஒருத்தி பிறக்கும் பிரசவத்தில் ஜாதகன் தாய் மரித்து விடுவாள், ஜாதகனுடைய இந்த இளைய சகோதரி விவாகமடைந்து ருதுவாகிப் பின்பு சுமங்கலியாக மரித்து விடுவாள்.

(95) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி ஏழாம் பாவாதிபதி நீச்ச ராசியில் எட்டாம் பாவத்திலிருந்து களத்திர காரகனாகிய சுக்கிரன் சுய க்ஷேத்திரத்தில் ஐந்தாம் பாவத்தில் சனியுடன் கூடி

யிருந்து, ஏழாம் பாவத்தில் சூரியன் செவ்வாயிவர்களிருந்து, சனியால் சூரியனும் செவ்வாயும் பார்க்கப்பட்டால் ஜாதகன் ஒரே தாரமுடையவன், ஜாதகனுடைய மனைவி மெல்லிய சூட்டுத்தேகமுடையவள், கர்ப்பாதான காலத்திலிருந்து கணவனோடு விரோத மடைவாள், பிறகு யௌவன வயதின் கடைசியில் தெய்வானுகூலமாக கணவனுடன் கூடுவாள், பிறகு ஒரே ஒரு புத்திர சந்தானத்தை அடைவான், அவனால் ஜாதகனுடைய வமிச விருத்தி ஏற்படும்.

(96) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி ஐந்தாம் பாவாதிபதியாகிய சுக்கிரன் சுயக்ஷேத்திரத்தில் எட்டு ஒன்பதுக்குடைய பாவாதிபதிகளுடன் கூடியிருந்தால் ஜாதகனுக்கு புத்திர சந்தானத்திற்கு இடைஞ்சலுண்டாகும், இப்படிக் கிரகமிருந்து, நீச்ச ராசியில் தன் உச்சாம்சத்தில் குரு இருந்தால் ஜாதகனுக்குச் சாந்தியால் புத்திர சந்ததி ஏற்படும்.

(97) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி ஒன்பதாம் பாவாதிபதி தன் உச்சராசியில் இருந்து சூரியன் கேந்திர ராசியில் தன் உச்சாம்சத்திலும், ஒன்பதாம் பாவாதிபதி விருஷபாம்சத்திலும், பலத்துடனிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் வித்தை, புத்தி, விவேகம், வாத தேகம், பித்த சுபாவம், அரசாங்க உத்தியோக ஜீவனம், அதிகார யோகம், முதலியன அடைவான், ஜாதகனுடைய தகப்பன் முதலாக மூன்று தலைமுறைவரையில் அரசாங்க அதிகார உத்தியோகமும், ஆயுள்வரை உத்தியோகமும் செய்பவர்கள், ஜாதகனுடைய தகப்பன் இரு தாரமுடையவன், தன் உடன்பிறந்த நான்கு அல்லது ஐந்து சகோதரருடையவன், நான்கு ஐந்து சகோதரிகளுமுடையவன், ஜாதகனுடைய தகப்பன் ஜாதகனுடைய இரண்டாந் தெசையில் மரிப்பான்.

(98) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி நான்காம் பாவாதிபதி ஆறுவது பாவத்திலிருந்து சந்திரன் தன் உச்சராசியில் கேதுவுடன் கூடியிருந்து குருவால் சந்திரன் பார்க்கப்பட்டால் ஜாதகனுடைய தாய் மத்திய வயதுடையவள், சாத்து மீகம், சுத்தம், பதிபக்தி, வமிசவிருத்தி, முதலியனவும் வமிச விருத்தி உடைய இரண்டு சகோதரரும் உடையவள், ஜாதகனுடைய ஆறுவது வயதில் ஜாதகன் தாய் மரித்து விடுவாள்.

(99) ஜென்ம லக்கினம் மிதுனம் (நாடி அம்சம் மங்களாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி தன் உச்ச ராசியை யடைந்திருக்கச் சந்திரன் வைசிய காலத்தில் இருந்தால் ஜாதகன் சிவபக்த வைசிய குலத்தில் பாக்கிய வமிசத்தில் ஜனனம் அடைவான், ஜாதகனுடைய மூத்த சகோதரன் யோகமும், கீர்த்தியும் அடைவான், ஜாதகனுக்கு ஒரு இளைய சகோதரனும், ஒரு இளைய சகோதரியும் தீர்

காயுளுடையவர்கள் பிறப்பார்கள், ஜாதகனுடைய இளைய சகோதரி புத்திர சந்தான யோகமுடையவள்.

(100) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி லக்கின சுக பாவாதிபதி சுகஸ்தானத்தில் வர்க்கோத்தமாம்சத்தில் இருந்து குரு ஐராவதாம்சத்தை அடைந்திருந்தால் ஜாதகன் வாகன சுகமுடையவன், சௌக்கியமுடையவன், போகி, குதிரை பல்லக்கு முதலியன உடையவன், யோகமுடையவன், கீர்த்தி உடையவன், அனேக பிரபு சினேகிதமுடையவன், அனேக பிரபுக்களால் வெகுமானிக்கப் படுபவனுவான்.

(101) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி ஐந்து பன்னிரண்டுக்குடையவன், புதனுடைய ராசியில் நான்காம் பாவத்தில் இருந்தால் ஜாதகன் பிரபுமூலமாக விசேஷ சுகமும், வியாபாரத்தில் சுகமும், நீச்ச அரசனிடம் விசேஷ அன்பும், உத்தியோகமும், முதலில் குதிரை வாகனமும், முப்பதாவது வயதில் பல்லக்கும், உத்தியோக பிரபலமும், திக்குத் திக்குகளில் அதிகாரமும், பல பல கிராமங்களில் அதிகாரமும் அடைவான்.

(102) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி நான்காம் பாவாதிபதி தன் உச்ச ராசியில் வர்க்கோத்தமம் அடைந்து இருந்தால் ஜாதகன் கர்னடக தேசத்தில் உத்தியோகப் பிரசித்தி அடைவான், அரசாங்கத்தில் சுகமுடையவன், ராஜ சன்மானம் பெருவான், உத்தமமான பிரபல யோகமுடையவன், முப்பத்தைந்தாவது வயதில் விசேஷ கீர்த்தி அடைவான், சகோதரனுடன் பாகம் செய்து கொள்ளுவான், நாற்பதாவது வயதில் உத்தியோகப் பிரபலமும், ஐம்பதில் கீர்த்தியும், பல வழிகளில் தன விருத்தியும் உடையவன், இரண்டு லக்ஷம் ஆஸ்தி உடையவனுவான், மெத்தை வீடு, பூமி, வாகனம் முதலியன அடைவான், லோகப் பிரசித்தியாவான், சகோதரனிடம் அன்புடையவன் அவனும் ஒன்னரைலக்ஷ ஆஸ்தி உடையவனுவான், இந்த ஜாதகனைப் போலவே அவனும் அனேக பிரபு சிநேகமும், தேசமெங்கும் கீர்த்தியுமடைவான்.

(103) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி நான்காம் பாவாதி வர்க்கோத்தமடைந்து, சந்திரன் பதினோராவது பாவத்திலிருந்தால் ஜாதகன் தாய் வெகு ஆயுளுடையவளாவாள், சாத்மீகம், சுத்தம், பதிபக்தி, நற்குணம், வமிச விருத்தி முதலியன உடையவள், அன்ன தானம் செய்பவள், சாது, உறவினர்களுக்கு உபகாரம் செய்பவள், பதிவிரதை, மிக்க புகழுடையவள், கணவனுடைய மனம்போல் நடப்பவள், தேவப் பிராம்மண பக்தி உடையவள், உடன் பிறந்த இரண்டு சகோதரருடையவள், அவர்களில் ஒருவன் மத்திய வயதில் மரிப்பான், வேறு ஒருவன் கொஞ்சம் தேக

பீடை யுடையவன், சகோதரி ஒருவள் உண்டு, அவள் மத்திய வய தில் விதவையாகிவிடுவாள், ஜாதகனுடைய தாய் ஆயுள் வரையில் சுகியாயிருந்து ஜாதகனுடைய மூன்றாம் தெசையில் கடைசியில் அல்லது பிறகு நான்காந் தெசையிலாவது மரிப்பாள்.

(104) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி நான்காம் பாவாதிபதி பன்னிரண்டாம் பாவத்தில் இருந்து சந்திரன் நீச்ச ராசியில் இருந் தால் ஜாதகன் தாய் மத்திய வயதுடையவள், சாத்துவீகம், சுத்தம் பதிபக்தி, வமிச விருத்தி முதலிய உடையவள், ஆறு பிரசவம் பிர சவிப்பவள், இரண்டு புத்திரரும், இரண்டு புத்திரிகளும், சுக முடையவர்களா யிருப்பார்கள், இரண்டு புத்திரர்கள் பாலியத்தில் மரித்து விடுவார்கள், மேலும் ஜாதகன் தாய் மூன்று சகோதரரும், ஐந்து சகோதரிகளும் உடையவள். இரண்டு சகோதரிகள் தவிர இவர்களில் மற்றவர்கள் மரித்து விடுவார்கள், ஜாதகனுடைய தாய் ஜாதகனுடைய மூன்றாந் தெசையில் சுமங்கலியாகவே மரித்து விடு வாள்.

(105) ஜென்ம லக்கினம் மிதுனம் (நாடி அம்சம் திரைலோக் யாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி ஐந்தாம் பாவத்தில் இருந்து சந்திரன் விப்பிர காலத்தில் இருந்தால் ஜாதகனுக்கு விப்பிர சிவ பக்த குலத்தில் பாக்கிய வமிசத்தில் பன்னிரண்டாவது கெற்பத் தில் ஜனனம் நேரிடும், ஜாதகனுக்கு மூத்த சகோதரம் ஐந்துபேர் பிறந்து பாலியத்திலேயே மரித்து விடுவார்கள், ஆறு மூத்த சகோ தரிகளுண்டு, அவர்களில் மூவர் பாலியத்திலேயே மரணமாவார்கள், வேறு ஒருத்தி பாலியத்தில் அல்லது யௌவனத்தில் வமிசவிருத்தி யடையாமல் மரிப்பாள், மற்ற இருவரில் ஒருத்தி புத்திரீ புத்திர வமிசவிருத்தியுடன் இருந்து அந்திய வயதில் சுமங்கலியாய் மரிப் பாள், வேறு ஒருத்தி புத்திரீ புத்திர வமிசவிர்த்தியுடன் இருந்து விதவையாகி மரிப்பாள், ஜாதகனுக்கு இளைய சகோதர சகோதரி கள் பிறந்து அவர்கள் பாலியத்திலேயே மரித்து விடுவார்கள்.

(106) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி லக்கின பாவாதிபதி ஐந்தாவது பாவத்தில் பத்தாம் பாவாதிபதியுடன் கூடியிருந்து ஒன்பதாம் பாவாதிபதி சுய க்ஷேத்திரத்தில் பலத்துடன் இருந் தால் ஜாதகன், பூமி விருத்தி, தன விருத்தி, பசு விருத்தி, கீர்த்தி முதலியன அடைவான்.

(107) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி ஒன்பதாம் பாவாதி பதி எட்டாம் பாவத்தில் இருந்து சூரியன் நான்காவது பாவத்தில் இருந்தால் ஜாதகனுடைய தகப்பன், சௌக்கியம், கல்வி, அறிவு, விவேகம் எழுதுவதில் சமர்த்தம் முதலியன உடையவன், யோக முடையவன், தைரியமுடையவன், பராக்கிரமீ, தீரன், திடச்சித்த

முடையவன், யுக்தாயுக்தம், நியாயாந்நியாயம், சேர்க்க கலைக்கச் சாமர்த்தியம் முதலியனவுமுடையவன், பிறர் மர்மங்களை வெளிப் படுத்துபவன், தன் மர்மங்களை விடாதவன், ராஜாங்கத்தில் பிர சித்தி உடையவன், அரச வெகுமதிகளை அடைவான், வாகனாதி சுகமுடையவன், அனேக குடும்பங்களை ரக்ஷிப்பவன், லோகப் பிர சித்தக் கீர்த்தியடைவான், தன் திரவியத்தை தர்ம மார்க்கத்தில் விரயம் செய்வான், தர்ம சிந்தையுடையவன், ஜாதகனுடைய மேற் படி தகப்பன் ஒரே தாரமுடையவன்.

(108) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி வித்தியாஸ்தானத் தில் சூரியன் செவ்வாயிவர்கள் கூடியிருந்தால் ஜாதகன் வித்தைக்கு இடையூறுடையவன், தன் மத்திய வயதில் பிரபு மூலமாக கல்வி அடைவான், ஒரே தாரமுடையவன், தீர்க்காயுசுள்ள, ஒரே புத்திர னுடையவன், ஜாதகன் புத்திர பௌத்திர விருத்தி உடையவனு வான்.

(109) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி நான்காம் பாவாதிபதி ஐந்தாம் பாவத்தில் இருந்து, சந்திரன் நான்காவது பாவத்தில் இருந்தால் ஜாதகன் தாய் சுகமுடையவள், வமிச விருத்தி, சாத்து வீகம், சுத்தம், பதிபக்தி முதலியனவுமுடையவள், ஜாதகன் தாய் இரண்டு சகோதரருடையவள், இவர்களில் வமிச விருத்தி உடைய ஒருவன் ஏழு அல்லது எட்டு புத்திரரை பாலியத்தில் இழப்பான், மற்றவன் வமிச விருத்தியில்லாதவன், ஜாதகன் தாய் ஜாதகனுடைய மூன்றாந் தெசையில் மரிப்பாள்.

(110) ஜென்ம லக்கினம் மிதுனம் (நாடி அம்சம் சமாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி ஒன்பதாவது பாவத்தில் இருந்து நான் காமாதியும் கூடியிருந்தால் ஜாதகன் நதிப்பிராந்திய சிறிய கிராமத் தில் பூர்வ பாகத்தில் சிவாலயமுள்ள ஊரில் தகப்பன் வீட்டில் ஜனனமும், உத்தரபாகத்தில் தாய் வீட்டில் ஜனனமும் அடைவான்.

(111) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி ஒன்பதாம் பாவாதி பதி எட்டாம் பாவத்திலும், சூரியன் கேந்திர ராசியிலுமிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் தீர்க்கவயது, சௌக்கியம், இரண்டு பாஷையில் சமர்த்தம், கல்வி, அறிவு, வேதபாடம், சாஸ்திரப்படி அனுஷ்டானம், ஒழுக்கம், வைதீக ஆசாரம், பிதுரார்ஜிதம், முதலி யன உடையவனுகி முன் வயதில் தன் ஊரிலும், பின் வயதில் பிர சித்தப்பட்டிணத்தில் ஜாதகனுடைய தாய் வீட்டிலும், வசித்து வந்து அங்கு வைசியர்களுக்குப் புரோகிதம் செய்து வைத்து சூத் திரர் கோயிலில் பூஜை செய்து, அங்கேயே வாசமும் செய்பவன், மேலும், ஜாதகனுடைய தாய் வழி வமிச விருத்தியில்லாத ஆஸ்தி யும் அடைந்து, வைசியர்கள், சூத்திரர்கள் முதலானவர்களால்

குருவைப்போல் உபசரிக்கப்பட்டு, தேவப் பிராம்மண பக்தியும் உடையவனுகி, மந்திர யெந்திர உபதேசங்கள் செய்து, தான் மந்திர சாதனையின்றிருப்பான், மேலும் ஜாதகனுடைய தகப்பன் தான் மந்திர சாதனைக்காக கேரள தேசத்தில் பிரயாணம் செய்து அங்கு பலனடையாமல் முதலில் பலரை ஏமாற்றிய தோஷத்தால் சந்தேகமடைந்து தன்னூருக்கே திரும்பி, பிதுரார்ஜித வீட்டை விற்று ஜீவிப்பான், இரு தாரமுடையவன், ஜாதகனுடைய தகப்பன் இருபத்து மூன்றும் வயதில் முதல் விவாகமடைவான், இருபத்தேழாவது வயதில் அவள் பிரசவத்தில் சூதிகா தோஷத்தால் மரிப்பாள், பிறகு ஜாதகனுடைய தகப்பன் விவாகமின்றி இருந்து முப்பத்திநான்கு அல்லது முப்பத்தைந்தாவது வயதில் இரண்டாவது விவாகம் செய்து கொள்வான், ஜாதகனுடைய தகப்பன் மத்திய காலத்தில் வெளி ஊர்கள்கூட செல்லப் பயப்படுவான், ஜாதகனும் ஓரே பேத சகோதரனும் தீர்க்காயுளுடையவர்கள், ஜாதகனுடைய தகப்பன் ஜாதகனுக்கு நாற்பத்தைந்தாம் வயதில் மரிப்பான்.

(112) ஜென்ம லக்கினம் மிதுனம் (நாடி அம்சம் பங்கஜாம்சம்) ஆகி இரண்டாம் பாவாதிபதி ஐந்தாவது பாவத்திலிருந்து சந்திரன் நான்காவது காலத்தில் இருந்தால் ஜாதகன் சிவ பக்த குலத்தில் ஜனனமடைவான், உடன் பிறந்த சகோதரருடையவன், மூத்த சகோதரன் அல்லது சகோதரி யில்லாதவன், மூத்தவர் இருந்தாலும் மரித்து விடுவார்கள், இளைய சகோதரிகள் இருவரும், இரண்டு இளைய சகோதரர்களும் சுகமும், கீர்த்தியுமுடையவர்களாவார்கள்.

(113) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி ராசியில் இரண்டாம் பாவாதி ஐந்தாம் பாவத்திலும், அம்சத்தில் மீனத்திலுமிருந்து சூரியன் இரண்டாம் பாவத்திலும், புதனுடைய க்ஷேத்திரத்தில் செவ்வாயுமிருந்தால் ஜாதகன் தீர்க்காயுளடைந்து, சகோதரனுடன் கூடி கிராமாதிபதியாவான்.

(114) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி ராசியில் ஒன்பதாம் பாவாதிபதி ஆருவது பாவத்திலும், அம்சத்தில் தன் உச்சாம்சத்திலும் இருந்து சூரியன் ராசியில் இரண்டாம் பாவத்திலும், அம்சத்தில் சுய அம்சத்தில் பங்கஜாம்சத்திலும் இருந்தால் ஜாதகனுடைய தகப்பன், சுகமுடையவன், மெல்லிய நீண்ட கூட்டுத்தேகி, பித்தவாயு உடையவன், மத்திய வயதில் வயிற்று நோயால் பயமடைவான், அக்காலம் சனிப் பிரீதி செய்தால் குணமடைவான்.

(115) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி நான்காம் பாவாதிபதி இரண்டாம் பாவத்திலிருந்து சந்திரன் ஐந்தாவது பாவத்திலிருந்தால் ஜாதகன் தாய் தீர்க்க வயதுடையவள், சாத்துவீகம், சுத்தம்

பதிபக்தி, வமிச விருத்தி முதலிய உடையவள், நான்கு உடன் பிறந்த சகோதரிகளும், ஒரு சகோதரனும் உடையவள், ஒரு சகோதரி புத்திரீ புத்திரர்களை ஒன்பது கெற்பம் பிரசவித்து சுகமுடையவளாயிருப்பாள், அவளுடைய ஒன்பது பிரசவத்தில் நால்வர் பாலியத்தில் மரித்து விடுவார்கள், ஜாதகனுடைய அம்மானும் மரித்து விடுவான்.

(116) ஜென்ம லக்கினம் மிதுனம் (நாடியம்சம் சுதாம்சம்) ஆகி சூரியன் ஆருவது பாவத்தில் வர்க்கோத்தமமடைந்து சந்திரன் நான்காவது காலத்தில் இருந்தால் ஜாதகனுக்கு சிவ பக்த குலத்தில் ஐந்தாவது கெற்பத்தில் ஜனனமுண்டாகும், ஜாதகனுக்கு மூன்று மூத்த சகோதரரும், ஒரு மூத்த சகோதரியும், உண்டு, இவர்களில் ஒரு சகோதரனும், சகோதரியும் சுகமும், வமிச விருத்தியுமுடையவர்களா யிருப்பார்கள், மற்ற சகோதரிகள் மரித்து விடுவார்கள், ஜாதகனுக்கு ஒரு இளைய சகோதரி மட்டும் பிறந்து பாலியத்தில் மரித்து விடுவாள்.

(117) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி ஒன்பதாம் பாவாதிபதி சுய க்ஷேத்திரத்தில் ஒன்பதாவது பாவத்திலேயே யிருந்து சூரியன் ஆருவது பாவத்தில் வர்க்கோத்தமாம்சம் அடைந்திருந்தால் ஜாதகனுடைய தகப்பன் தீர்க்க வயதடைவான், சௌக்கிய முடையவன், ஒரே பாஷையில் சமர்த்துடையவன், ஒரே தாரமுடையவன், சிறிது காலம் பிதுரார்ஜித ஸ்தானத்திலும், பின்னும் சிறிது காலம் வெளியூரிலும், பிறகு பிரசித்த பட்டிணத்திலும் வாசமடைவான், ஜாதகனுடைய தகப்பன் ஜாதகனுக்குக் குரு ராசியில் விருச்சிகத்திலும், அம்சத்தில் விருச்சிகத்திலுமிருந்தால் ஜாதகன் மூலமாக உத்திர கிரியைகளை அடைவான்.

(118) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி நான்காம் பாவாதிபதி ஆருவது பாவத்திலும், சந்திரன் இரண்டாம் பாவத்திலுமிருந்தால் ஜாதகன் தாய் தீர்க்க வயது, சாத்துவீகம் முதலான நற்குணங்கள் யாவுமுடையவள், ஜாதகன் தாய் மூன்று சகோதரருடையவள், அவர்களில் ஒருவன் மட்டும் வமிச விருத்தி யுடையவன், ஜாதகனுடைய முப்பத்தாறு அல்லது முப்பத்தேழாவது வயதில் ஜாதகன் தாய் மரிப்பாள்.

(119) ஜென்ம லக்கினம் மிதுனம் (வாகீசாம்சம்) ஆகி சூரியன் கும்ப ராசியில் வர்க்கோத்தமாம்சமடைந்து சந்திரன் விப்பிர காலத்தில் இருந்தால் ஜாதகன் விப்பிர குலத்தில் ஆருவதாக பிறந்து நல்ல புத்திமானுக இருப்பான், ஜாதகனுக்கு மூத்த சகோதரர் மூவரும், இரண்டு சகோதரிகளும் உண்டு, இவர்களில் இரண்டு சகோதரிகளும், இரண்டு சகோதரரும் பாலியத்திலேயே

மரித்து விடுவார்கள், வேறு ஒரு சகோதரன் அவனுடைய இருபத்திநான்கல்லது இருபத்தைந்தாவது வயதில் விவாகத்திற்குப் பிரயத்தினம் செய்யும்போது அவன் அல்பவயதினுல் மரித்துவிடுவான்.

(120) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி ஒன்பதாம் பாவாதிபதி பலத்துடன் சுப க்ஷேத்திரத்தில் சூரியனுடன் கூடியிருந்து, சூரியன் வர்க்கோத்தமாம்சத்திலும், சனி அம்சத்தில் தனுசாம்சத்திலுமிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் சௌக்கியம், கல்வியறிவுடையவன், ஒரே பாஷையில் சமர்த்தன், சமர்த்த வாச்சாலகன், அரசாங்கப் பிரசித்தியுடையவன், ராஜாங்க ஜன நேசமும், ராஜசினேகமும் உடையவன், விவகாரத்தில்சமர்த்தன், நிபுணன், யுக்தாயுக்த விவேகி, உத்தியோகத்தில் அரசாங்கத்தில் கலஹமும், ராஜதண்டனை முதலிய பயமும், பின் வயதில் உத்தியோக பங்கமும், கஷ்டமும், தன் மனைவியின் சகோதரியின் வீட்டில் ஜாதகனுடைய தகப்பன் வாசமும் செய்பவன், வயிற்று நோய் பீடையுடையவன், பின்வயதில் வேற்று மனிதன் மூலமாக தானிய விவஹாரமும், நியாயசபையில் விசாரணையும், ஜாதகனுடைய தகப்பனுக்கு இரண்டு மாதம் சிறை தண்டனையும், அந்த தண்டனை காலத்தில் விஷபேதியால் ஜாதகனுடைய தகப்பன் மரணமும் அடைவான்.

(121) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி நான்காம் பாவாதிபதி எட்டாவது பாவத்திலும், சந்திரன் ஐந்தாமிடத்திலுமிருந்தால் ஜாதகன் தாய் சாத்துவீகாதி சுத்த நற்குணங்கள் உடையவள், சுகமுடையவள், உடன்பிறந்த இரண்டு சகோதரருடையவள், இவர்களில் ஒரு சகோதரன் மரிப்பான், வேறு ஒருவன் விவாகமடைந்து புத்திரீ புத்திரரின்றி மனைவியும் மரித்து விடுபவன், அவன் ஜாதகன் வீட்டில் வசிப்பன், அம்மானுடைய கிரக க்ஷேத்திர ஆஸ்திகளை ஜாதகன் அடைவான், ஜாதகனுடைய இருபத்தெட்டு அல்லது இருபத்தொன்பதாவது வயதில் ஜாதகனுடைய தாயும் அம்மானும் மரித்து விடுவார்கள், அம்மானின் உத்தரகிரியைகளையும் ஜாதகனே செய்வான்.

(122) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி ஏழாம் பாவாதிபதியாகிய குரு சுய க்ஷேத்திரத்தில் இருந்தாலும், நீச்ச ராசியிலிருந்தாலும், களத்திர காரகனுகிய சுக்கிரன் ஒன்பதாம் பாவத்தில் சத்துருக் கிரகங்களுடன் கூடியிருந்தால் ஜாதகனுக்குக் காலங்கடந்து விவாகம் நடக்கும், முதலில் இரண்டிடங்களில் எத்தினப்பட்டும், விவாகம் நடைபெறுமல் பிறகு சூத்திர வியாபாரப் பிரபுவால் முப்பத்தேழாவது வயதில் விவாகம் நடக்கும்.

(123) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி ஜாதகனுக்குப் புத்திரஸ்தானதிபதி சனியுடன் கூடியிருந்தால் ஜாதகனுக்குச் சீமந்த சிசு

மரித்து விடும், பிறகு இரண்டு புத்திரரும் இரண்டு புத்திரிகளும் ஆக நால்வர் சுகமுடையவர்களுண்டாவார்கள்.

(124) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி ஐந்தாம் பாவாதிபதியாகிய சுக்கிரன் ஒன்பதாம் பாவத்தில் ஒன்பதுக்குடைய பாவாதிபதியுடன் கூடியிருந்தால் ஜாதகனுக்கு சூத்திர வியாபாரப் பிரபு மூலம் முப்பத்திரண்டல்லது முப்பத்தி மூன்றும் வயதில் பிரபுவினிடம் வாசமும், அப்பிரபு மூலம் முப்பத்துநான்கு, முப்பத்தைந்தில் வீடு லாபமும், முப்பத்தேழாவது வயதில் வைசூரியால் ஜாதகனுக்குப் பீடையும், பிறகு விவாகமும், முப்பத்தெட்டில் மனைவியால் சௌக்கியமும் அடைவான்.

(125) ஜென்ம லக்கினம் மிதுனம் (மஞ்சுளாம்சம்) ஆகி ஒன்பதாவது பாவாதிபதி இரண்டாம் பாவத்தில் இருந்து, சந்திரன், விப்பிரகாலத்தில் இருந்தால் ஜாதகன் பாக்கியமுள்ள சிவ பக்த பிராமண குலத்தில் ஸ்ரீமந்த புத்திரனுக ஜெனிப்பான், ஜாதகனுக்கு ஒரு இளைய சகோதரனும், ஒரு சகோதரியும் இருப்பார், ஒரு இளைய சகோதரனும், ஒரு சகோதரியும் ஆக வேறு இருவர் பாலியத்தில் மரித்து விடுவார்கள்.

(126) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி ஒன்பதாம் பாவாதிபதி இரண்டாம் பாவத்தில் இருந்து சூரியன் எட்டாம் பாவத்தில இருந்து, சூரியனும் சனியும் நவாம்சத்தில் கர்மாம்சத்தில் இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் சௌக்கியம், கல்வி, அறிவு, பிதுரார்ஜித ஆஸ்தி, சுயார்ஜித தனவிருத்தி, இரண்டு பாஷையில் சமர்த்தம், அரசாங்கப் பிரசித்தி, ஜாதகன் பிறந்த பிறகு உத்தியோகப் பிரபலம், பின்வயதில் பூமிமூலம் சுகம், ஓரே தாரம், வம்ச விருத்தி உள்ள சகோதரன், ஒரு சகோதரி இவர்களை உடையவனுகி ஜாதகனுடைய மூன்றும் தெசையில் மரிப்பான்.

(127) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி நான்காம் பாவாதிபதி எட்டாம் பாவத்தில் இருந்து சந்திரன் நீச்ச ராசியில் இருந்தால் ஜாதகன் தாய் தீர்க்கவயதடைவாள், சாத்துவீகம், சுத்தம், பதி பக்தி முதலிய உடையவளாகி ஜாதகனுடைய நான்காம் தெசையில் மரிப்பாள்.

(128) ஜென்ம லக்கினம் மிதுனம் (நாடிஅம்சம் சம்பகாம்சம்) ஆகி இரண்டாம் பாவாதிபதி தன் உச்ச ராசியில் இருந்து சந்திரன் வைசிய காலத்திலிருந்தால் ஜாதகனுக்கு வைசியகுலத்தில் பாக்கிய வம்சத்தில் ஸ்ரீமந்த கெற்பத்தில் ஜனனமுண்டாகும், ஜாதகன் மூத்த சகோதரனில்லாதவன், ஒரு இளையசகோதரி வம்ச விருத்தி உடையவள் பிறப்பாள், ஜாதகனுக்கு பேதசகோதரி சிலர் நஷ்டமடைந்து பேத சகோதரி ஒருவள் வம்ச விருத்தி அடைவாள்.

(129) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி தன லாபாதிபதிகள் கூடியிருந்தால் ஜாதகன் புது வியாபாரத்தினால் வீடு யோகம் முதலிய விருத்தி அடைவான்.

(130) ஜென்ம லக்கினம் மிதுனம் (காந்தாம்சம்) ஆகி ராகு லக்கின கேந்திரத்தில் இருந்தால் ஜாதகன் தாய் பிரசவத்தில் அதிக வேதனை அடைவாள், அப்போது சந்திரன் செவ்வாயுடன் கூடி மீனராசியில் இருந்தால் சூதிதோஷ பயம் உண்டாகும், ஜாதகன் தாய்க்குப் பீடையும், ஜாதகனுக்கு பாலரோக பீடையும் உண்டாகும், உத்தர பாகத்தில் பிறந்தவன் கொடி சுற்றிப் பிறப்பான், குரு கூடியிருந்தால் சுகமுண்டாகும்.

(131) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி லக்கின பாவாதிபதி தன் உச்ச ராசியிலிருந்து எட்டாம் பாவாதியும், சுய க்ஷேத்திரத்தில் எட்டாம் பாவத்திலேயேயிருந்து குருவும் கேந்திர திரிகோணத்தில் இருந்தால் ஜாதகன் சகல தோஷங்களும் விலகி மத்திய வயதாக அறுபத்தேழு வயதடைவான், இருபது வயதிற்கு மேலும், முப்பத்தைந்து, நாற்பது இந்த வயதுகளில் பித்தவாயுவால் பீடையும், அறுபதாவது வயதில் அபமிருத்துவும் ஏற்படும், அக்காலம் சாந்தியால் சுகமும் உண்டாகும்.

(132) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி சூரியன் கேந்திர திரிகோணத்தில் இருந்து ஒன்பதாம் பாவாதிபதி எட்டாம் பாவத்தில் சுய க்ஷேத்திரத்திலிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் விசேஷ சுகமடைவான், தகப்பனைவிட மேலான குணமுடையவன், தேஜசுடையவன், தெளிவான புத்தியுடையவன், சிவ பக்தி மதாச்சாரமுடையவன், ஹரிசங்கர பக்தியுடையவன், கல்வி அறிவுடைய விவேகி, எழுதுவதில் சமர்த்தன், தேவப் பிராம்மண விசுவாச முடையவன், உபாயத்தினால் காரிய சாதனையடைவான், திரவிய சம்பாதனையில் சமர்த்தன், கொஞ்சம் லோபகுணமுடையவன்.

(133) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி எட்டாம் பாவத்திலுள்ள சனியை குரு கூடினாலும், பார்த்தாலும் ஜாதகனுடைய தகப்பன் பிரபு சேவைசெய்து ஜீவிப்பவன், சூத்திரப் பிரபுவால் சுகமடைவான், அதனால் ஜீவனமுமுடையவன், அரசாங்கப் பிரசித்தியுடையவன், பற்பல மார்க்கங்களிலும் தனமடைபவன், பற்பல வழிகளிலும் பிரசித்தியடைபவன், ராஜ சன்மானமடைவான், மூன்று தாரமுடையவன், போகி, வெளி தேசங்களிலும் கீர்த்தியடைவான்.

(134) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி செவ்வாய் சூரியனுடன் கூடியிருந்தாலும், செவ்வாயால் சூரியன் பார்க்கப்பட்டாலும், ஜாதகனுடைய தகப்பன் பரஸ்திரீ கமனம் செய்வான், இரண்டல்

லது மூன்று தடவைகளில் அஜீர்ண ஜுரத்தால் பீதியடைவான், பாலிய வயதில் அற்ப சுகமடைவான், மத்திய அந்திய வயதுகளில் வெகு சௌக்கியமுடையவன், வயோதிக வயதில் புத்திரனால் சுக மடைவான், க்ஷேத்திரம், வாகனம் முதலிய லாபமுடையவன், தன் ஜனங்களிடத்தில் பிரசித்தியும், சைவப் பிரபுவால் பிரசித்தி யும் அடைவான். கொஞ்சம் தர்ம சிந்தையும், தீர்த்தயாத்திரையு மடைவான், புண்ணிய தீர்த்தத்தால் அபிஷேகம் செய்யப் பெறுப வன், பிரபுவின் காரியங்களில் சுதந்திரமுடையவன், இவன் ஜாதக னுடைய இரண்டாந்தெசையில் மரிப்பான்.

(135) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி சந்திரன் செவ்வாயு டன் கூடி மீன ராசியிலிருந்து நான்காம் பாவாதிபதி தன் உச்சரா சியிலிருந்து செவ்வாயால் பார்க்கப்பட்டால் ஜாதகன் தாய் சுக முடையவளாவாள், பதிபக்தியுடையவள், சுத்தமும், நற்குணமும் உடையவள், வமிசத்தில் பாக்கிய விருத்தி யுடையவள், ஜாதகனு டைய ஜென்ம திசையில் ஜாதகனுடைய தாய் மரித்துவிடுவாள்.

(136) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி மூன்றும் பாவாதிபதி யாகிய சூரியன் கேந்திரத்தில் நீச்ச ராசியிலுள்ள சத்துருக் கிரக மாகிய சுக்கிரனுடன் கூடியிருந்து, சகோதர காரகனாகிய செவ்வாய் சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்குச் சகோதர சுக முண்டா காது, இரண்டு பேத சகோதரர்களும் அப்படியே, இரண்டு சகோ தரிகளுமுடையவன், அவர்கள் இவர்களைவிட அதிகம் பிறந்தால் மரித்துவிடுவார்கள்.

(137) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி கேசரீ யோகத்தில் சனி திரிம்சாம்சத்தில் பிறந்தவன் வெளுப்பு நிறமுடையவன், அதிஷ்டமுடையவன், மேதாவி ரூபலக்ஷணமுடையவன்.

(138) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி லக்கின பாவாதிபதி சூரியனுடன் கூடி நான்காம் பாவத்தில் இருந்தால் ஜாதகன் சூட் டுத் தேகமுடையவன், கொஞ்சம் வாயு பீடையுடையவன், சம அங்கங்களுடையவன், அறிவாளி, நாடக அலங்கார, காவிய, சாஸ் திர சங்கீதப்பிரியன், விஷயபோகத்தில் ஆசையுடையவன், பரதார கமனம் செய்பவன், பாலிய வயதில் மந்த மதியுடையவன், சாது யவ்வன வயதில் தெளிந்த அறிவுடையவன், கல்வி அறிவுடைய விவேகி, அவசியமுள்ளவற்றை தெரிந்து கொள்பவன், நற்குண முடையவன், வாச்சாலகன், சேர்க்கவும் கலைக்கவும் வல்லவன், யுக் தியாய்ப் பிரசங்கம் புரிபவன், சாகசமுடையவன், துஷ்ட புத்தி யுடையவன், கோள் சொல்லுபவன், தயையுடையவன், யவ்வன ஸ்திரீகளிடம் ரமிப்பவன், சூரியனைப்போன்ற தேஜசுடையவன், இருபத்து வயதிற்குமேல் குரு பாதபூஜை செய்பவன், ராஜ யோக

முடையவன், அரசனும் பூஜிக்கப் படுபவன், பற்பல சாஸ்திர ஆகமங்களை அறிந்தவன், வயோதிக வயதில் ஞானமுடையவன், ஸ்ரீமான், பிரமுகன், வைபவமுடையவன் ஆவான், இருபாஷைக ளில் வல்லவன், வேறு பல பாஷைகளும் கற்பவன், தேவப் பிராம் மண விசுவாசமுடையவன், உபாயமுடையவன், காரியசாதனை யுடையவன் பாலியமுதல் கீர்த்தியுடையவன் ,பிதுரார்ஜிதம் நிறைந் தவன், சுயார்ஜித யோகமுடையவன், பதினாராவது வயதிற்குமேல் பிரசித்தியும், இருபது வயதிற்குமேல் நல்லயோகமும் உடையவன், இருபத்தைந்து வயதுமுதல் கீர்த்தியும் வாகனமும் உடையவன், சூத்திரப் பிரபுவின் விசேஷ அன்பும், சுகமுமுடையவன், முப்பது வயதிற்குமேல் விசேஷ யோகமுடையவன், ராஜ சன்மானமும், கீர் த்தியுமுடையவன், பல்லக்கு முதலிய வாகன பாக்கியமும் உடை யவன், முப்பத்தைந்து வயதிற்குமேல் விசேஷ கீர்த்தியும், கப்பல் பிரபுவினுடைய சினேகவசத்தால் சுகமும் அடைவான், பற்பல வழிகளிலும் தனமடைவான், ஜலமார்க்கமாக தன வரவுடையவன், தீபாந்தரங்களுடைய ரத்தின மணி வஸ்துக்களால் ரத்தினம் முத லிய பாக்கியமடைவான்.

(139) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி லக்கின பாவாதிபதி தன் உச்ச ராசியிலிருந்து அங்கு நீச்சக்கிரகம் கூடியிருந்து, அதே ஸ்தானம் கேந்திரமுமானால் ஷை நீச்சக் கிரகத்தின் நீச்ச தோஷம் விலகி விடும், ஜாதகன் சௌக்கியத்தையும், மிக்க மேன்மையான பதவியையும் மிக்கசீக்கிரமாக அடைவான், அப்போது அங்கு நீச்ச மாகியிருக்கும் கிரகத்திற்கு திசையும் நேரிடின் நீச்சப் பிரபுவால் சமுத்திர சமீபத்தில் வாசமும் ஏற்படும், விசித்திரமான வீடு கட்டுவான், ஜல வஸ்துக்களின் வியாபாரத்தால் தனவரவடைவன், ரத்தினம், தான்னியம், நல்வஸ்திரம், இரண்டு வாகனம் முதலிய உடையவனாக நாற்பது வயதிற்குமேல் விசேஷ யோகத்துடன் ஆயுள்வரை பாக்கியவானா யிருப்பான்.

(140) ஜென்ம லக்கினம் மிதுனம் (பிரபாம்சம்) ஆகி பூர்வ பாவத்தில் லக்கின பாவாதிபதி விப்பிர காலத்தில் லக்கின பாவத் தில் இருந்தால் ஜாதகன் விப்பிர வமிசத்தில் சகோதரருடையவ னாக தேவாலயத்துடன் கூடிய வன துர்க்கப்பிரதேசத்தில் உள்ள நகரத்தில் ஜனனமும், உத்தர பாகத்தில் நதி தீரத்தில் பெரிய கிராமத்தில் அன்னியர் வீட்டில் ஜனனமும் அடைவான்.

(141) ஜென்ம லக்கினம் மிதுனம் (பிரபாம்சம்) பூர்வ பாகம் ஆகி லக்கின பாவத்தில் குரு இருந்தாலும், பார்த்தாலும், லக்கின பாவாதிபதி சூரியனுடன் கூடி லக்கின பாவத்தில் இருந்தால் ஜாத கன் தாய் பிரசவ காலத்தில் அற்ப வேதனையடைவாள், உத்தர

பாகத்தில் பிறந்தவனுடைய தாய்க்கு அதிக வேதனையும், சூதி தோஷ பயமும் உண்டாகும்.

(142) ஜென்மலக்கினம் மிதுனம் ஆகி சந்திரன் செவ்வாயால் பார்க்கப்பட்டால் ஜாதகன் மாந்தஜுரத்தால் பயமும் வைசூரி பீடையுமடைவான்.

(143) ஜென்மலக்கினம் மிதுனம் ஆகி லக்கின பாவாதிபதி லக்கினபாவத்தில் குரு சூரியனிவர்களுடன் கூடியிருந்தால் எட்டாம் பாவாதிபதி நீச்ச பாவத்தில் பதினோராவது பாவத்திலும், சந்திரன் கேந்திரத்திலுமிருந்தால், ஜாதகன் சர்வ தோஷங்களும் விலகி பூர்ணயுளாக அறுபத்தெட்டு வயதடைவான், இவனுக்குப் பதினாறு, இருபத்திமூன்று, முப்பத்தெட்டு, ஐம்பத்தைந்து இந்த வயதுகளில் பீடையுண்டாகும், ஐம்பத்தைந்தில் அபமிருத்து பயமும், அதற்கு முந்தி பித்தவாயு பீடையுமுண்டாகும், அக்காலங்களில் சாந்தி செய்தால் சுகமுண்டாகும்.

(144) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி மிதுன ராசியில் சூரியன் புதனுடன் கூடியிருந்து ஒன்பதாம் பாவாதிபதி நீச்ச ராசியிலிருந்து ஒன்பதாம் பாவம் லக்கினத்திலிருக்கப்பட்ட குருவால் பார்க்கப்பட்டால் ஜாதகன் தகப்பன் அற்ப பாக்கியமுடையவனாயினும் விசேஷ சுகமுடையவன், கல்வி அறிவுடையவன், உடன் பிறந்த சகோதரருடையவன்.

(145) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி சூரியன் லக்கின கேந்திரத்தில் புதனுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் மத்து வாச்சாரமுடையவன், விசேஷ குருபக்தி யுடையவன், தேவப்பிராம்மண பக்தியுடையவன், சாந்த சுபாவமுடையவன், குணமுடையவன், ஆசையுடையவன், காமீ, விஷய புத்தியுடையவன்.

(146) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி இரண்டாம் பாவத்தில் சுக்கிரன் ராகுவுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் துராலோசனை செய்பவன், பிறருக்கு இங்கிதம் சொல்பவன், வாச்சாலகன், எழுதுவதில் சமர்த்தன், அரசாங்கப் பிரசித்தியுடையவன், உத்தியோக ஜீவனமுடையவன், எழுத்து உத்தியோகமூலம் ஜீவனமுடையவன், பாலிய வயதில் அற்ப சுகமுடையவன், மத்திய அந்திய வயதில் கீர்த்தியுடையவன், நீச்ச அரசாங்கத்தில் உத்தியோகமுடையவன், அரசனாலும், அரச மந்திரியாலும் சந்துஷ்டியடைபவன், வெளி தேசத்தில் புகழப்பட்ட கீர்த்தி யுடையவன், பற்பலவழிகளிலும் தனமடைவான், பிரபல உத்தியோக ஜீவனமுடையவன், நீச்ச அரசாங்கத்தில் நல்ல யோகமடைவான், வாக

ஞாதி யோகங்களுடையவன், அனேக கிராமாதிகார முடையவன், பிரபுப் பிரீதி விசேஷமாயுடையவன், வயோதிக வயதில் புத்திரனால் வெகு சுகமுடையவன், தர்மமும் செய்வான், ஜாதகனுடைய நான் காந்திசையில் ஜாதகனுடைய தகப்பன் மரணமடைவான்.

(147) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி நான்காம் பாவாதிபதி சுய க்ஷேத்திரத்தில் லக்கின பாவத்தில் இருந்து குரு, சூரியனிவர்களுடனும் கூடியிருந்தால் ஜாதகன் தாய் விசேஷ சுகமுடையவள்.

(148) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி சந்திரன் தனுசு ராசியில் வர்க்கோத்தமத்திலிருந்தால் ஜாதகன் தாய் பதிபக்தி யுடையவள், அன்னதானப் பிரியை, சாது, பதிவிரதை வமிசவிருத்தி யுடையவள், ஜாதகனுடைய ஐந்தாந் திசையில் கன்னியா ராசியில் அல்லது துலா ராசியில் சனி கோச்சாரத்தில் வரும்போது தாய் மரித்து விடுவாள்.

(149) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி மூன்றும் பாவாதிபதியாகிய சூரியன் லக்கின பாவத்தில் குரு புதனிவர்களுடன் கூடியிருந்து பன்னிரண்டாம் பாவத்தில் செவ்வாயிருந்தால் ஜாதகன் இரண்டு இளைய சகோதரருடையவன், இரண்டு சகோதரிகளுமுடையவன், மூத்த சகோதரனில்லாதவன், ஜாதகனுடைய சகோதரிகள் புத்திரீ புத்திர சுகமுடையவர்கள், இவர்களைவிட ஜாதகனுடன் அதிக சகோதரம் பிறந்தாலும் அதிகமான அவர்கள் மரித்துவிடுவார்கள்.

(150) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி பத்திர யோகத்தில் சனி திரிம்சாம்சத்தில் பிறந்தவன் வெளுப்பு நிறமுடையவன், மிக்க அறிவாளி, பித்த சுபாவ தேகமுடையவன், கொஞ்சம் வாயு பீடையுமுடையவன், சமதேகமுடையவன், தீரன்.

(151) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி லக்கின பாவத்தில் நான்காம் பாவாதிபதியாகிய புதன், குரு சூரியனிவர்களுடன் கூடியிருந்தால் ஜாதகன் கல்வியுடையவன், பூமியுடையவன், மூன்று பாஷைகளறிபவன், நாடக அலங்கார காவிய சங்கீத மிவையறிவான், தேவப் பிராம்மண பக்தியுடையவன், எழுதுவதில் சமர்த்தன், குரு பக்தி யுடையவன்.

(152) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி இரண்டாம் பாவத்தில் சுக்கிரனுடன் ராகு கூடி இருந்தால் ஜாதகன் பரஸ்திரீ சங்க தோஷமுடையவன், மித்திர வஞ்சனையுடையவன், சேர்ப்பதிலும், கலைப்பதிலும் பிரியன், அரசாங்கத்தில் பிரசித்தியடைவான், பிரபு ஜன சினேகமுடையவன்,

(153) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி பத்தாம் பாவாதிபதி சூரியனுடன் கூடி லக்கினத்திலிருந்தால் ஜாதகன் ராஜ சேவையால் ஜீவனமுடையவன், எழுத்து வித்தையினுல் ஜீவன முடையவனுவான், நீச்சப் பிரபுமூலம் சுகமுடையவன்.

(154) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி ஐந்தாம் பாவாதிபதி கேதுவுடன் கூடியிருந்து ஐந்தாம் பாவம் சனியால் பார்க்கப்பட்டு புத்திர காரகனுன குரு சூரியன் கூடி லக்கின பாவத்திலிருந்தால் ஜாதகன் அற்ப சந்தானமடைவான், ஜாதகன் ஷை கிரகப் பிரீதியாக நாகதானம் செய்தால் புத்திரப் பிராப்தியுண்டாகும், இந்த கிரகமுள்ள ஜாதகனுக்கு மிதுன ராசியின் திரிகோணத்தில் அல்லது மேஷ சிம்ம ராசிகளிலாவது குரு வரும்போது புத்திரீ புத்திர உற்பத்தியடைவான், இரண்டு புத்திரரும், இரண்டு புத்திரிகளும் நிலையாயுடையவன், அதிகம் பிறந்தால் மற்ற அவை நாசமடைந்துவிடும்.

(155) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி கேசரீ யோகத்தில் பிறந்தவனுக்கு குரு தெசை வந்தால் அந்த திசையில் ஜாதகன் தன மடைவான், நித்திய அன்ன தானமும், சந்தோஷமும், சற்கதை கேட்டலும், தேவதை பக்தியும், குரு பக்தியும், தன் மத ஜனப் பிரீதியும், சாதுக்கள் சற்ஜனர் இவர்களுக்கு சுகமுண்டாக்குதலும் உண்டாகும்.

(156) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி தனுசில் சந்திரனும், மிதுனத்தில் குருவும் இருந்து பத்தாம் பாவாதிபதியாகிய ஷை குரு தெசை வந்தால் ஜாதகன் புத்திரன் அந்த திசையில் கொண்டாடப்பட்ட கீர்த்தியும், க்ஷேத்திர கிராம சௌக்கியத்தையும் அடைவான், ஜாதகன் பேரணிக்காணும் சந்தோஷமும், நித்திய சம்பத்தும், நித்திய கல்யாணமும், தீர்த்த யாத்திரையும், தர்ம சிந்தையும், புத்திரனுல் சுகமும், வயோதிக வயதில் தர்மமும் அந்தியத்தில் ஞானமும் அடைவான்.

(157) ஜென்ம லக்கினம் மிதுனம் (நாடி அம்சம் காந்தாம்சம்) ஆகி லக்கின பாவத்தில் செவ்வாயிருந்தாலும், பார்த்தாலும், துர்க்காரண்ணிய சமீபத்தில் பெரிய கிராமத்தில் நதி தீரத்தில் தேவாலய சமீபத்தில் ஜனனமும், உத்தர பாகத்தில் புண்ணிய க்ஷேத்திரத்தில் அக்கிரகாரத்தில் ஜனனமும் ஜாதகனுக்கு நேரிடும்.

(158) ஜென்ம லக்கினம் மிதுனம் (காந்தாம்சம்) ஆகி லக்கினத்தில் செவ்வாயிருந்தாலும், பார்த்தாலும் சந்திரனுடன் கூடிய குருவால் லக்கினம் பார்க்கப்பட்டால் ஜாதகன் தாய்க்குப் பிரசவ காலத்தில் அற்ப வேதனையுண்டாகும், உத்தராம்சமானல் அதிக வேதனையுண்டாகும், ஜாதகனுக்கு கொஞ்சம் சூதிதோஷ பயமும், பால தோஷ பீடையும், சிசுக்களுக்குறிய ரோகமும் உண்டாகும்.

கடக லக்கினம்

(1) ஜென்ம லக்கினம் கடகம் (ஐந்திராம்சம்) ஆகி லக்கின பாவத்தைச் செவ்வாய் தன் உச்ச ராசியிலிருந்து பார்த்தால் ஜாதகன் கொஞ்சம் பாலதோஷ பயமுடையவன், ஜாதகன் தாய் பிரசவத்தில் அற்ப வேதனையுடையவளாவாள்.

(2) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி சந்திரன் எட்டாவது பாவத்திலிருந்தால் ஜாதகன் கொஞ்சம் சூதிதோஷபயமும், பாலதோஷ பயமுமுடையவன்.

(3) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி லக்கின பாவாதிபதி எட்டாம் பாவத்தில் சுப்பிரபாம்சத்திலும், எட்டாம் பாவாதிபதி தன் உச்சத்திலும், பத்தாம் பாவாதி நீச்ச ராசியிலுள்ள குருவுடனும் கூடியிருந்தால் ஜாதகன் ஐம்பத்தொன்பது அல்லது அறுபது வயதடைவான், முப்பத்தெட்டு, ஐம்பத்தாறு இந்த வயதில் ஜாதகன் அபமிருத்து பயமுடையவன், அக்காலம் திலதானம், காலசக்கிர தானம், எறுமைகிடா தானம் இவற்றை செய்தால் ஜாதகன் சுகமுடையவனுவான்.

(4) ஜென்ம லக்கின கடகம் ஆகி சூரியன் ஆறுவது பாவத்திலிருந்து ஒன்பதாம் பாவாதிபதி நீச்ச ராசியிலிருந்து உச்சனுன செவ்வாயுடன் கூடியிருந்தாலும் ஜாதகன் தகப்பன் அற்ப சுகமடைவான்.

(5) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி ஒன்பதாம் பாவாதிபதி குரு ஆனுல் ஜாதகனுடைய தகப்பன் சிவ பக்தி உடையவன், தேவப் பிராம்மண விசுவாசமுடையவன், வியாபாரத்தால் ஜீவனமுடைபவன், சுயார்ஜிதத்தால் கப்பல் வியாபாரமுடைய பிரபு ஆவான், மூன்று வாகனமுடையவன், அனேக வேலை யாட்களுடையவன், கல்வி அறிவுடைபவன், விவேகி, தர்ம புத்தியுடையவன், ஆழ்ந்த யோசனையுடையவன், பரோபகாரமுடையவன், லக்ஷத்திற்கு மேற்பட்ட தனமுடையவன், அரசன்வரை பிரசித்தியுடையவன், அரசன் ஆவன் என்று சிலர் மதம், பற்பல தேசங்களிலும் பிரசித்தியுடையவன், நல்லோருக்குக் கொடுப்பவன், தர்ம புத்தியுடையவன், நர வாஹனமுடையவன், எண்பத்தினுன்கு கப்பல்களுடையவன், ஜாதகனுடைய ஷ யோகமுள்ள தகப்பன் ஜாதகனுடைய இரண்டாந் திசையில் மரணமாவான்

(6) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி நான்காம் பாவாதிபதி ராகுவுடன் கூடி ஐந்தாம் பாவத்திலிருந்து சந்திரன் எட்டாம் பாவத்தில் இருந்தாலும், சந்திரன் கேந்திரகோணங்களிலிருந்தாலும், ஜாதகன் தாய் சுத்தம், சற்குணம், பதி பக்தி முதலியவை

யுடையவளாகி, முன் பாபவசத்தால் மத்திய வயதில் விதவையாய் விடுவாள், இவள் ஜாதகனுடைய மூன்றுந் தெசையில் மரணமாவாள்.

(7) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி செவ்வாய் தன் உச்சராசியிலிருந்து குருவுடனும் கூடியிருந்து, மூன்றும் பாவம் குருவால் பார்க்கப்பட்டால் ஜாதகன் இளைய சகோதரனில்லாதவன், மூத்த ஒரு சகோதரன் உடையவன், ஒரு சகோதரியுமுடையவன், இரண்டு சகோதரிகளுடையவனென்று வேறு சிலர் மதம், ஜாதகனுடைய மூத்த சகோதரன் அறிவுடையவன், பிரபுக்களின் சினேகமுடையவன், தர்மமுடையவன், ஜாதகனும் அவனால் சுகமடைவான்.

(8) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி சகடயோகத்தில் கும்ப ராசியில் சந்திரனும், மகர ராசியில் குருவுமிருக்கும் சகடயோகத்தில் பிறந்தவன் வெளுப்பு நிறமுடையவன், ரூபமுடையவன், கல்வி அறிவுடையவன், வாச்சாலகன், சம்ஸ்கிருதத்தைப் பிரியமாய் பேசுபவன், தேவப் பிராம்மண பக்தியுடையவன், விசேஷ சிவ பக்தியுடையவன், கொஞ்சம் லோப குணமுடையவன், ஊகையுடன் சேர்த்துக் கொள்ளவும், விலக்கிவிடவும் தெரிந்தவன், தன் வித்தையில் வல்லவன், வியாபார நிபுணன், திரவிய சம்பாதனையில் சமர்த்தன், வித்தை விநயமிவை நிறைந்தவன், தகுந்தமட்டும் தெரிந்தவன், நற்குணமுடையவன், அனேக வேலையாள்களுடையவன், ஜலமார்க்கமாக வெகு வியாபார லாபமுடையவன், கப்பல் வியாபாரியாவான், மூத்த சகோதரனை அடைபவன், கடினமான தண்டனையிடும் பிரதாபமுடையவன், பற்பல தேசங்களிலும் பிரசித்தியுடையவன், கோடி திரவியவந்தன், பரோபகாரமுடையவன், பிரபு லக்ஷணமுடையவன், மூன்று வாகனமுடையவன், உபாயத்தினால் காரியசாதனையுடையவன், பாலியத்தில் தகப்பனையிழந்து மூத்த சகோதரனால் சுகமடைவான், தன் ஜனங்களால் கௌரவிக்கப்படுபவன், பதினன்காவது வயதிலிருந்து பிரசித்தியுடையவன், பதினேழுவயதிற்குமேல் விசேஷமுடையவன், சுயார்ஜிதம் சம்பாதிப்பவன், வியாபார நிபுணனாயினும் சிக்ஷைசெய்யவும் ரக்ஷிக்கவும் சாதுரியமுடையவன், இருபது வயதிற்குமேல் சர்வ காரியங்களிலும் வல்லவனாவான், இருபத்தைந்தாவது வயதில் தன் தகப்பனை விட விசேஷ பாக்கியமுடையவன், தன் தகப்பனைவிட மேலான யோகமுடையவன், தனம் சேர்ப்பதில் சமர்த்தன், முப்பது வயதிற்குமேல் கீர்த்தியும், ஆயுள்வரை சுகமும் உடையவன், மேலும்,

(9) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி ஷை சகடயோகத்தில் பிறந்தவன் ஜன்மதிசையில் பாலரோகமுடையவன், அப்போது பிதுரு புண்ணியத்தினால் சுகமுடையவன், ஜாதகனுடைய தகப்பன்

மேன்மையான புகழுடையவன், இரண்டாந் திசையில் ஷை குரு புக்திவரையில் ஒரேமாதிரி பலனுடையவன், ஐந்தாவது வயதில் அட்சர ஞானமுடையவன், கல்வியுடையவனும் அறிவாளியு மாவான், பாலியத்தில் தகப்பனையிழந்து விடுவான், பன்னிரண்டா வது வயதில் அல்லது பதினான்காவது வயதில் இரண்டு மூன்று தடவைகள் விவாக யத்தினம் செய்து தடைப்பட்டுப் பிறகு விவாக மடைவான், ஜாதகனுடைய மனைவி நல்ல ரூபமுடையவள்.

(10) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி ஏழாம் பாவத்தில் பாபக் கிரகமிருந்தால் ஜாதகன் மனைவி காரமான சொல்லுடையவள், எப் போதும் உக்கிரமாய் பேசுபவளுமாவாள்.

(11) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி லக்கினத்திற் கேழா மிடத்தில் பாபரிருந்து சுக்கிரனும் ராகுவுடன் கூடியிருந்தால் ஜாத கன் பரஸ்திரீ சங்கமமுடையவன், வேறு சிலர் மனைவி கொஞ்சம் கணவனை மிஞ்சினவள் என்று எண்ணுகின்றனர், காலங்கடந்து புத்திர உத்பத்தியுண்டாகும், இரண்டு மூன்று சந்தான நாச மேற் படும்.

(12) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி லக்கினத்திற்கு ஐந்தாம் பாவத்தில் ராகு இருந்து, குரு மகரராசியில் செவ்வாயுடன் கூடி யிருந்தால் ஜாதகன் சந்தானத் தடையுடையவன், அதற்குச் சாந் தியாக நாகதானம், பால கிருஷ்ண தானம், சொர்ணலிங்க தான மிவற்றைச்செய்தால் சந்தானம் நிலைக்கும், இல்லாவிடில் சந்தான நாசமேற்படும், ஜாதகன் அற்ப சந்தான யோகமுடையவன், மூன் றாந்திசையில் மீனத்திரிகோணத்தில் அல்லது ரிஷபராசி திரிகோ ணத்தில் கோச்சாரத்தில் குரு வரும்போது ஜாதகனுக்கு புத்திரீ புத்திர உற்பத்தி அல்லது ஜனனம் ஏற்படும், ஜாதகன் அற்ப புத் திரியுடையவன், விவாகத்திற்குப் பிறகு சுயப் பிரபலமடைவான், வீட்டுக் காரியங்களில் விசாரணையுடையவன்.

(13) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி மகர ராசியில் குருவும், செவ்வாயும் கூடியிருந்தால் ஜாதகனுக்கு உச்சக் கிரகமும், நீச்சக் கிரகமும் கூடினால் நீச்சக் கிரகத்தின் தோஷம் நீங்கி உச்ச பலனுக ராஜயோக மேற்படும், அப்போது குருவின் திசை நடந்தால் ஜாத கன் அந்த குருதிசையில் நல்ல பாக்கியமும், வீட்டில் லக்ஷிமீகடா க்ஷமும், நற்கீர்த்தியும், வியாபார விருத்தியும், ஜலமார்க்கத்தால் தன விருத்தியும், உத்தரோத்தரமான பிரபலமும் அடைவான், ஷை திசை பாக்கிய பாவாதிபதி திசையானல் அந்த திசையில் லக்ஷத்திற்கதிகமாக தனம் அடைவான், பற்பல தேசங்களிலும் புகழடைவன், ஷை திசையின் முற்பாதியில் சுகமும், பிற்பாதியில் விசேஷ சுகலாபமும், வியாபாரத்தினல் தன விருத்தியும், வீட்டில்

லக்ஷிமீகடாக்ஷமும், சொர்ண பாத்திர லாபமும், ஷெ குருவுடன் கூடிய செவ்வாய் புக்தியில் ஷெ திசையில் சுபா சுபமிரண்டும் கலந்தும் புத்திரனுல் நல்ல யோகமும், புத்திரனுக்கு பாக்கிய விருத்தியும், வயோதிக வயதில் தர்மசித்தியும் அடைந்து வாழ்வான், ஷெ குரு திசை ஐந்தாந்திசையாகி வந்தால் ஜாதகன் அந்த திசையில் மரணத்தையும் அடைவான்.

(14) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி சனி திரிம்சாம்சத்தில் கன்னியா நவாம்சம் ஆகி ஜனித்தவன் விப்பிரகாலத்தில் ஜனனமானுல் விப்பிரனுவான், சகோதரனில்லாதவனுக நதிப்பிராந்தியத்தில் ஜனித்தவனுவன்.

(15) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி மேஷராசியில் சந்திரன் நிர்மலாம்சத்தில் இருந்தால் ஜாதகன் புண்ணிய தேசத்தில் ஜன்ன மடைவான்.

(16) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி சந்திரன் மேஷ ராசியிலேயே நிர்மலாம்சத்திலிருந்து சுபக்கிரகத்துடன் கூடினுல் ஜனனமான கிராமாந்திர புண்ணிய தேசத்திலேயே வசித்து வருவான், ஜாதகன் தாய் பிரசவகாலத்தில் அற்ப வேதனையடைவாள்.

(17) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி சந்திரன் பத்தாவது பாவத்தில் தன் உச்ச நவாம்சத்தில் இருந்தால் ஜாதகன் தாய் சுகமடைவாள், பிதுரு சுகமுடையவன், தேக சுகமுடையவன், சூதி தோஷமுண்டாகாது.

(18) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி பத்தாம் பாவத்தில் சந்திரனுடன் சனி கூடியிருந்தால் ஜாதகன் ஐந்து வருஷம்வரையில் அற்ப பாலதோஷமடைவான், மாந்த ஜுரம், ரிணம் முதலியவற்றுலும்பயமடைவான்.

(19) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி சந்திரன் பத்தாம் பாவத்தில் தன் உச்ச நவாம்சத்திலிருந்து சுக்கிரனுடனும் கூடியிருந்து லக்கினத்திற்கு மூன்றும்பாவத்தில் குரு இருந்தால் ஜாதகன் சகல தோஷங்களும் விலகி சுகமுடையவனுவான்.

(20) ஜென்ம லக்கினம் கடகம் (சர) லக்கினம் ஆகி ஹோரா லக்கினம் ஸ்திரமாகி லக்கினத்திற்குப் பன்னிரண்டாம் பாவத்தில் செவ்வாயிருந்தால் ஜாதகன் மத்திபாயுளடைவான்.

(21) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி லக்கின பாவாதிபதி மேஷத்தில் நிர்மலாம்சத்தில் இருந்து எட்டாம் பாவாதிபதி கமலாம்சத்தில் பத்தாம் பாவத்திலும் சுராதீசுவர ஷஷ்டியம்சத்தில் ஜனித்தவன் மத்தியாயுளாக அறுபத்தொன்பது வயதடைவான்.

(22) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி சூரியன் கேந்திர திரிகோணத்தில் இருந்து பதினோராம் பாவத்திலாவதிருந்து குருவால் பார்க்கப்பட்டால் ஜாதகன் தகப்பன் சுகமுடையவன்.

(23) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி சிம்மாரூடத்தில் செவ்வாயிருந்தால் ஜாதகன் தகப்பன் மிதமான பாக்கியமுடையவன், தரித்திரம் சிலகாலம் உடையவன், விஷ்ணு பக்த மதத்தை அடைபவன்.

(24) ஜென்ம லக்கினம் கடகமாகி கேந்திர திரிகோண பதினோராம்பாவங்களில் சூரியன் எங்காவதிருந்து சனியின் அம்சத்தில் ஸ்ரீதராம்சத்தில் இருந்தால் ஜாதகன் தகப்பன் பாஞ்சராத்திர மதத்தை அடைவான், வைதீகாச்சாரத் தொழிலுடையவன், வேதமறிவான், சூத்திர சினேகித்தாலும், பிராம்மணராலும், சுகமுடையவனுவன், அற்பகல்வியால் கீர்த்தியும் தனமும் அடைவான், அற்பசந்தான யோகமுடையவன்.

(25) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி ஒன்பதாம் பாவாதிபதியாகிய குருவால் சூரியன் பார்க்கப்பட்டால் ஜாதகன் தகப்பன் வைதீகாச்சாரமுடையவன், க்ஷேத்திர சுகமுடையவன், ஆயினும் தரித்திர யோகமுடையவன்.

(26) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி நான்காம் பாவாதிபதி பத்தாம் பாவத்தில் சந்திரனுடன் கூடியிருந்தால் ஜாதகன் தாய் சுகமுடையவள், உடன்பிறந்த சகோதரருடையவள், பதி பக்தியுடையவள், இஷ்டமுடன் அன்னதானம் செய்பவள், பதிவிரதை, ஜாதகனுடைய இரண்டாந் திசையில் ஜாதகனுக்கு இருபதாம் வயதில் அல்லது அதற்குமுன்பே பதினாறுவது வயதில் மரிப்பாள்.

(27) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி செவ்வாய் எட்டாவது பாவத்தில் கராளாம்சத்திலிருந்தால், தன் உச்ச நவாம்சத்திலிருந்தாலும் கூட ஜாதகன் சகோதர சுகமில்லாதவன், உடன்பிறந்த ஒரு சகோதரி அற்ப சந்தானமுடையவள், வேறு சிலர் இரண்டு சகோதரிகளுண்டென்று எண்ணுகின்றனர்.

(28) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி மூன்றும் பாவாதிபதியாகிய புதன் கேந்திர திரிகோணத்தில் இருந்தாலும், ஜாதகனுடைய சகோதரர் பிறந்தாலும் இறந்து விடுவர்.

(29) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி சனி திரிம்சாம்சத்தில் அமலாயோகத்தில் ஜனித்தவன் வெளுப்பு நிறமுடையவன், நல்லரூபவான், சமதேகி, தெளிந்த மனதுடையவன், அறிவாளி, சரசப்பிரியன்,

(30) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி லக்கினத்திற்கு மூன்ருவது பாவத்தில் குரு இருந்தால் ஜாதகன் கல்வி அறிவுடைய விவேகியாவன்.

(31) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி லக்கின பாவாதிபதி பத்தாம் பாவத்தில் நிர்மலாம்சத்தில் இருந்தால் ஜாதகன் அழகிய முகமுங் கண்களும் பொருந்தியவன்.

(32) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி லக்கிஞருடபதத்தில் சனியிருந்தால் ஜாதகன் பாலியத்தில் தரித்திர யோகமடைவான், விசேஷ விஷ்ணு பக்தியுடையவன், தியாகி, தாராள புத்தியுடையவன், சேர்க்கவும் கலைக்கவும் வல்லவன், வாச்சாலகன், சாதுரிய யுக்தியுடையவன், தைவானுக்கிரக யோகமுடையவன், இருபது வயதிற்குமேல் பிரசித்தியுடையவன், வைதீகாச்சார தர்மாத்துமா, எல்லோருக்கும் உபகாரமுடையவன், தன்காரியங்களில் சமர்த்தன், சத்துரு காரியங்களை கெடுப்பவன், மத்திய வயதில் பெரிய கீர்த்தியடைபவன், இருபது வயதிற்குமேல் தன சம்பாதனமுடையவன், பிதுரார்ஜிதஹீனன், சுயார்ஜித யோகமுடையவன்.

(33) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி பத்தாம் பாவத்தில் சுக்கிரனிருந்து லக்கின பாவாதிபதியுடன் கூடியிருந்தால் முப்பத்தாறு வயதிற்குமேல் ஜாதகனுக்கு யோகமும், நாற்பதாவது வயதில் நல்ல வாகனமும் ஏற்படும், தியாகமும், போகமும், சமர்த்தும், திரவிய சம்பாதனையுமுடையவன், பற்பல தேசங்களிலும் கொண்டாடப்படுபவன்.

(34) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி ஒன்பதாம் பாவாதிபதியாகிய குரு மூன்ரும் பாவத்தில் சுமநாம்சத்தில் இருந்தால் ஜாதகன் விசேஷ குருபக்தி யடைவன், நல்வழியில் சொற்ப சிலவு செய்பவன், அன்னதானப் பிரியன், குணமுடையவன், சாகஸீ, துஷ்ட புத்தியுடையவன், தீரன், சூரன் பராக்கிரமமுடையோன்.

(35) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி ~~ஜாதகன்~~ குரு கன்னியா ராசியிலும், லக்கின பாவாதிபதி பாப ராசியிலும் உள்ள சகட யோகத்தில் பிறந்தவனுல் பாலியவயதில் கிலேசமும், தரித்திரமுமுடைபவன், மித்திர வஞ்சனை செய்பவன், பிரபு வசியமுடையவன், அனுச்சாரமுடையவனுவான்.

(36) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி பத்தாம் பாவத்தில் லக்கின பாவாதிபதி நிர்மலாம்சத்திலிருந்தால் ஜாதகன் நிர்மலமான ஆச்சாரமுடையவன், நற்புத்தியுடைபவன், ராஜ்ஜிய தந்திரத்தில் நிபுணனுவான், அரசாங்கவழியில் நன்கு பேசுவான், மந்திராலோ

சனை செய்யும் திறமையுடையவன்.

(37) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி சகட யோகத்தில் பிறந்தவனுக்கு ஒரு சமயம் யோகபங்கமடைவான், கொஞ்சம் புத்திர சோகமுடையவன், நாற்பது வயதிற்குமேல் யோகமடைவான்.

(38) ஜென்மலக்கினம் கடகமாகி ஏழாம்பாவம் குருவால் நன்கு பார்க்கப்பட்டு சுக்கிரன் சுபருடன் கூடியிருந்தாலும், செவ்வாயின் க்ஷேத்திரமாகிய மேஷத்திலிருந்தாலும் ஜாதகன் நன் மனைவியை யடைவான், ஜாதகன் மனைவி ரூபலக்ஷணமுடையவள், கிருகஸ்தன் வமிசத்து பெண்ணவள், உடன்பிறந்த சகோதாருடையவள், வமிசவிருத்தியுடையவள், வேறு சிலர் ஜாதகன் மனைவி மிருது வாய்ப் பேசுபவளென்றும், வேறு சிலர் வெகு பேச்சுடையவளென்றும் எண்ணுகின்றனர்.

(39) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி லக்கின பாவாதிபதியும், நான்காம் பாவாதிபதியும், அல்லது ஒன்பதாம் பாவாதிபதியும், ஜென்ம லக்கினத்தில், அல்லது பத்தாம் பாவத்தில் இருந்தாலும், ஷ பாவங்களில் ஒரு பாவத்திற்கு அதிபதியாக சுக்கிரன் ஆகி அவர் கூடியிருந்தால் மட்டும் ஜாதகன் வாகனாதி லாபமுடையவனும், சதுரங்க பலனுடையுவனுமாவான்.

(40) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி நான்காம் பாவாதிபதி பத்தாம் பாவத்தில் கேந்திரத்தில் இருந்து லக்கின பாவாதிபதியுடனும் கூடியிருந்தால் ஜாதகன் நரவாகனமும், ஆபரணங்களும், வீட்டில் லக்ஷ்மீகடாக்ஷமும் அடைவான்.

(41) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி ஐந்தாந் தாராதிபதி செவ்வாயாகி எட்டாம் பாவத்தில் பாப ராசியில் இருந்து அவருடைய திசை வந்தால் ஜாதகன் அந்த திசையில் மனஸ்தாபமும், புத்திர நாசமும் அடைவன், திசை முதலில் வெகு க்ஷேத்திர லாபமும், பிரபுவாகவும் ஆவான், திசை மத்தியில் புத்திர நாசமும், யோகபங்கமும், வழி வழியாய்நேரிடும், தன் தேகத்திற்கு ஆபத்தும், ஆயாசமும் நேரிடவேண்டிய சமயம் புத்திர சோகமும், ருணமும் ஏற்படும்.

(42) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி செவ்வாய் சனி க்ஷேத்திரத்தில் கரளாம்சத்திலிருந்தால் ஜாதகன் யோகபங்கமும், புத்திர நாசத்தையும் ஷ திசையில் அடைவான்.

(43) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி ராகு ஆறுவது பாவத்திலிருந்து அவருடைய திசையும் ஆறுவது திசையாகி வந்தால் ஜாதகன் அத்திசையில் ராஜ முத்திராதிகாரமும், மண்டலாதிபதி வழியில் சர்வாதிகாரியாகவும், பிரதான ராஜ தந்திரியாகவும், ஒன்

னறை லக்ஷ தனம் சம்பாதிப்பவனுகவும், சாமரம் குடை முதலிய யோகமுடையவனுகவும், துதி பாடுவோர்களுக்குத் தலைவனுகவும், அனேக ராஜ்யாதிகாரமும், லோகத்தில் கொண்டாடப்பட்ட கீர்த்தியும் உடையவனுகி பன்னிரண்டு வருஷம் வரையில் தொடர்ந்து யோகமும் அடைவன்.

(44) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி ஏழாமாரூடபதத்தில் பாபரிருந்தாலும், பாபர்கள் ஏழாமாரூடபதத்தைப் பார்த்தாலும் ஜாதகன் மனைவி நாசமடைவாள், ஜாதகன் மனஸ்தாபமடைவன்.

(45) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி பன்னிரண்டாம் பாவாதிபதி சந்திரனுடன் கூடியிருந்து பன்னிரண்டாம் பாவத்தில் கேது இருந்தாலும், பன்னிரண்டாம் பாவத்தைக் கேது பார்த்தாலும் ஜாதகன் அந்தியத்தில் ஞானமடைவான், தேகாந்தியத்தில் நற்கெதியடைவன், சிலர் ஜாதகன் எழுபது வயது உடையவனென்று எண்ணுகின்றனர்.

(46) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி லக்கின பாவாதிபதி வர்க்கோத்தமத்திலிருந்தாலும், கேந்திரத்திலிருந்தாலும், சுக்கிரனுடன் கூடியிருந்தால் ஜாதகன் தனத்தையுடையவனுகியும், நற்செய்கையுடையவனுகவுமாவான்.

(47) ஜென்ம லக்கினம் கடகம் (நாடி அம்சம் குந்தாம்சம்) ஆகி லக்கின கேந்திரத்தில் நீச்சனுன செவ்வாயுடன் இரண்டாம் பாவாதிபதி யிருந்தால் ஜாதகன் வெளிதேசத்தில் தனமடைவான், தீபாந்தரம் செல்வான், மிலேச்சரால் தீபாந்தரம் சென்று தனம் சம்பாதிப்பான், இருபத்தைந்தாவது வயதுமுதல் வீட்டில் லக்ஷிமீ கடாக்ஷ மடைவான்.

(48) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி ஏழாம் பாவாதிபதி தன் உச்ச ராசியிலிருந்து லக்கின பாவத்தில் நீச்சக் கிரக மிருந்தால் ஜாதகன் பரஸ்திரீகமனமுடையவன், (அக்கிரமப் புணர்ச்சியில்) சந்தோஷமுடையவன், பரதார ரதிப்பிரியன், தன் மனைவியிடம் ஆசைக்குறைவுடையவன், துஷ்ட ஸ்திரி சங்கதோஷத்தால் சந்தான நாசமுடையவன், இருபத்திநான்காவது வயதில் மனைவியிடம் புத்திரி ஜனிப்பாள், பிறகு புத்திர யோகமுண்டாகும்.

(49) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி லக்கின பாவத்தில் செவ்வாயிருந்து அவர் மிருத புத்திராம்சத்திலுமிருந்தால் ஜாதகனுக்கு புத்திரர் பிறந்து பிறந்து மரித்துவிடுவர், இருபுத்திரிகள் மூத்த மனைவியிடம் நிலைப்பர், மூத்த மனைவி அபுத்திரவதி, மறு மனைவியிடம் புத்திரனுடையவன், அற்பசந்தான யோகமுடையவன், முப்பத்திரண்டாம் வயதில் தகப்பன் மரிக்கும் யோகமுடையவன், பிறகு

ஜாதகனுடைய சகோதரன் மரிப்பான், பிறகு பற்பல வழிகளிலும் தன விரயமுண்டாகும், முப்பத்தைந்து வயது வரையில் அவதி யுண்டாகும், முப்பத்தாறு அல்லது முப்பத்தேழாவது வயதில் இரண்டாவது மனைவியை மணந்து அவளிடம் புத்திரனை யடைவன், நாற்பதாவது வயதில் இரண்டாம் மனைவியிடம் யோகசாலி யான புத்திரன் பிறப்பன்.

(50) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி ஐந்தாம் பாவாதிபதி லக்கின பாவத்திலிருந்து அவருடைய திசை வந்தால் ஜாதகன் அந்த திசையில் ஐந்தாம் பாவாதி யிருக்கும் நவாம்ச திரிகோண ராசி யில் கோச்சாரத்தில் குரு வரும்போது பாலகிருஷ்ண பிரதிமை தான சாந்திமூலம் ஜாதகன் இரண்டு புத்திரரையும், இரண்டு புத்திரிகளையுமடைவன், ஜாதகன் முப்பத்தாறு வயதிற்குமேல் மிலேச்சர் மூலமாக வெளி தேசத்தில் தன லாபமும், ரத்ன லாபமும் அடைவன், பற்பல வியாபாரத்தால் தன லாபமடைவன், நாற்பதாவது வயதில் விசேஷ தனத்தை யடைவன், ஐம்பதாவது வயதில் சகோதரனால் விசேஷ சம்பத்தடைவன், அதற்கு முன்பே ஜாதகனுடைய நாற்பத்திமூன்றும் வயதில் ஜாதகன் தாய் மரிப்பாள், தாய் இறந்த பிறகு ஜாதகனுடைய சகோதரனும் மரித்துவிடுவான், முப்பத்தாறு வயதிற்குமேல் பிரபல யோகமுடையவன், ஐம்பத்தாறுவது வயதில் விசேஷ சம்பத்தை யடைவன், பல்லக்கு முதலிய விசேஷ லக்ஷிமீகடாக்ஷம், ஆபரணம் முதலியன அடைவன், சகோதரப் பிரபலத்தால் வீட்டில் சமர்த்தியானதனமடைவன், கிராம க்ஷேத்திர லாபமும், பற்பல தேசங்களிலும் மிக்க மேன்மையான கீர்த்தியும், தர்ம புத்தியும், உதாரகுணமும், வயோதிக வயதில் புத்திர யோகமும், விசேஷ தர்மமும், அறுபத்தொன்பது எழுபது வயதுவரையில் ஆயுள் வரையில் விசேஷ சுகமுமடைவான்.

(51) ஜென்ம லக்கினம் கடகம் (நாடி அம்சம் க்ஷமாம்சம் பூர்வ பாகம்) ஆகி லக்கின பாவத்தில் சனி யிருந்தாலும், லக்கின பாவத்தைச் சனி பார்த்தாலும் ஜாதகன் தூர்க்காரண்ணிய சமீபத்தில் சிறிய கிராமத்தில் அல்லது புண்ணிய க்ஷேத்திரத்தில் கிழக்கு மேற்கு வீதியில் தெற்கு வாடையில் தகப்பன் வீட்டில் ஜனன மடைவான், உத்தர பாகத்தில் பெரிய கிராமத்தில் அல்லது பட்டிணத்தில் தேவாலயத்துடன் கூடிய கிராமத்தில் வடக்குத் தெற்கு வீதியில் கிழக்கு வாடையில் அக்கிரகாரத்தில் ஜனனமடைவான், ஜாதகன் தாய் பிரசவத்தில் அதிக வேதனையடைவாள்.

(52) ஜென்ம லக்கினம் கடகம் (க்ஷமாம்சம் பூர்வபாகம்) ஆகி சந்திரன் கன்னியா ராசியிலிருந்து லக்கினத்திலுள்ள சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகன் மாந்தஜுர பீடையடைவான், ஜாத

கன் தாய் பீடையடைவாள், அப்போது நான்காம் பாவாதிபதி நான்காம் பாவத்திலிருந்து மிதுனராசியிலுள்ள குருவால் பார்க்கப்பட்டால் ஜாதகன் தாய் சுகமடைவாள்.

(53) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி லக்கின பாவாதிபதி மூன்றும் பாவத்திலிருந்து, எட்டாம் பாவாதிபதி லக்கின கேந்திரத்திலிருந்து, சுக்கிரன் கேந்திர திரிகோணத்திலிருந்தால் ஜாதகன் அறுபத்தைந்து வயது பரமாயுளுடையவனுவன், இருபது இருபத்தினுன்கு இந்த வயதுகளில் ஸ்தான நாசமும், மிக்க கஷ்டமும், முப்பத்திஞன்கில் மனேபயமும், ஐம்பத்திரண்டில் அற்ப பீடையும் அடைவான், அறுபதாம்வயதில் அபமிருத்து பயமுண்டாகும், அக்காலம் தேன், நெய்குடம், நவக்கிரக சக்கிரதானம், மிருத்தியுஞ்ஜெயஜபம் முதலானவற்றுலும் குணமடைவான்.

(54) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி சூரியனிரண்டாவது பாவத்தில் புதனுடன் கூடியிருந்து ஒன்பதாம் பாவாதிபதி பன்னிரண்டாம் பாவத்திலிருந்தால் ஜாதகன் தகப்பன் அற்பசுகமுடையவன், தயாளு, சகோதரனில்லாதவன், சிவபக்த மதாச்சார முடையவன், ஹரி சங்கர பக்தியுடையவன், தேவப் பிராம்மண விசுவாசி, சாந்த சுபாவமுடையவன், சற்குணமுடையவன், கல்வியுடையவன், விவேகி, அற்பகல்வியுடையவனுயினும் புகழுடையவன், கொஞ்சம் பஞ்சாங்கத் தொழிலுமுடையவன், பற்பல கிராமங்களில் பிரசித்தியுடையவன், சாஸ்திர ஞானமில்லாதவன், புரோகிதத்தாலும், ஜோதிஷத்தாலும், சகோதரனுலும் ஜீவிப்பவன், பயிர்த் தொழிலால் லாபமும், தனவிருத்தியுமுடையவன், மத்திய வயதில் கீர்த்தியும், தன் ஜனங்களிலும் பிரசித்தியுமுடையவன், புத்திரனுல் சுகமுடையவன், ஜாதகனுடைய இரண்டாந் திசையில் ஜாதகனுடைய தகப்பன் மரிப்பான்.

(55) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி நான்காம் பாவாதிபதி சுயக்ஷேத்திரத்தில் நான்காம் பாவத்திலேயே கேதுவுடன் கூடியிருந்து மிதுனராசியிலுள்ள குருவால் பார்க்கப்பட்டு மாதுரு காரகனுகிய சந்திரன் மூன்றும்பாவத்திலிருந்தால் ஜாதகன் தாய் சுகமுடையவள், குணமுடையவள், பொறுமையுடையவள், பதிபக்தியுடையவள், புத்திரீ புத்திரரிடம் அன்புடையவள், முன் ஜென்ம பாபவசத்தால் புத்திர சோக முடையவளாவாள், இவள் ஜாதகனுடைய ஐந்தாந்திசையில் மரிப்பாள்.

(56) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி மூன்றும் பாவாதிபதியாகிய புதன் இரண்டாம் பாவத்தில் செவ்வாய் சூரியனிவர்களுடன் கூடியிருந்து லக்கினத்திற்கு மூன்றும் பாவத்தில் சந்திரனிருந்தால் ஜாதகன் அற்ப சகோதரமுடையவன், மூத்த சகோதரனின்றி

ஒரு இளைய சகோதரனுடையவன், நல்ல சகோதரி ஒருத்தி காலங் கடந்து புத்திர உற்பத்தியுடையவளை உடையவன்.

(57) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி கேசரீ யோகத்தில் கன்னியில் சந்திரனும், மிதுனத்தில் குருவும் இருக்கும் கேசரீ யோகத்தில் சனி திரிம்சாம்சத்தில் பிறந்தவன் கறுப்பு நிறமுடையவன், பித்த தேகமுடையவன், கொஞ்சம் வாயுதேகமுடையவன், சம தேகமுடையவன், அறிவாளி, அழகிய முகமுங் கண்களுமுடையவன், சிவபக்தி மதாச்சாரமுடையவன், விஷ்ணு சிவபக்தியுடையவன், தேவப் பிராம்மண பக்தியுடையவன், தயையுடையவன், தாக்ஷண்ணிய சீலன்.

(58) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி லக்கினத்தில் சனியிருந்தாலும், சனி லக்கினத்தைப் பார்த்தாலும் ஜாதகன் கொஞ்சம் தாமத சுபாவமுடையவன்.

(59) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி இரண்டாம் பாவாதிபதி இரண்டாம் பாவத்திலேயே செவ்வாய் புதனிவர்களுடன் கூடியுமிருந்தால் ஜாதகன் தன சம்பாதனையில் சமர்த்தன், எப்போதும் லாபமடைந்தபடியே யிருப்பான்.

(60) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி நான்காம் பாவாதிபதியாகிய சுக்கிரன் நான்காம் பாவத்தில் சுய க்ஷேத்திரத்திலேயே கேதுவுடன் கூடியிருந்து ஷை சுக்கிரனைக் குரு பார்த்தால் ஜாதகன் அற்பவித்தையடைவன், எழுதுவதில் சமர்த்தன், வேதாத்தியாயனமுடையவன், விரதமுடையவன், மௌனமுடையவன், மந்திரத்தை நன்கறிவான், ஷை சுக்கிரன் வர்க்கோத்தமத்திலிருந்தால் ஜாதகன் தேவி சக்தியினருளடைவான், வைதீகாச்சாரமுடையவன், சாஸ்திரமறறவனுவான்.

(61) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி பத்தாம் பாவாதிபதி புதனுடன் கூடி (இரண்டாம் பாவத்தில் இருந்து பத்தாம் பாவத்தில் ராகு இருந்தால் ஜாதகன் புரோகிதத்தால் ஜீவிப்பான், க்ஷேத்திர சுகமுடையவன்.

(62) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி ஐந்தாம் பாவாதிபதி சூரியனுடன்கூடி இரண்டாம் பாவத்திலிருந்தால் ஜாதகன் காலாந்தரத்தில் சற்புத்திரனை அடைவான், இரண்டு புத்திரரும், இரண்டு புத்திரிகளுமுடையவன்.

(63) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி ஐந்தாம் பாவாதிபதி இரண்டாம் பாவத்தில் சூரியன் புதனிவர்களுடன் கூடியிருந்து புத்திர காரகனுகிய குருவும் பன்னிரண்டாம் பாவத்திலிருந்தால் ஜாதகன் அற்பசந்தான யோகமுடையவன்.

(64) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி பத்தாம் பாவத்தில் பலமுடன் ராகு இருந்து நான்கு பதினொன்றுக்குடைய சுக்கிரனால் பார்க்கப்பட்டிருந்து ஷை ராகு திசை வந்தால் ஜாதகன் அந்த திசையில் விசேஷ தனலாபமும், நற்கீர்த்தியுமுடையவனாவான்.

(65) ஜென்ம லக்கினம் கடகமாகி பன்னிரண்டாம் பாவாதிபதி இரண்டாம் பாவத்திலுள்ள சூரியனுடன் கூடியிருந்து பன்னிரண்டாம் பாவத்தில் குரு இருந்தால் ஜாதகன் தேகாந்தியத்தில் சற்கெதியடைவன், சமமான பாப புண்ணிய முடையவனுமாவான்.

(66) ஜென்ம லக்கினம் கடகம் (நாடிஅம்சம் சீதளாம்சம்) பூர்வபாகம் ஆகி லக்கின பாவாதிபதி நீச்ச ராசியில் விப்பிர காலத்தில் இருந்தால் ஜாதகன் சீமந்த புத்திரனாக அல்லது இரண்டாவது கெற்பத்தில் ஜனனம் அடைவன், ஜாதகனுக்கு ஒரு பின் சகோதரனும், ஒரு சகோதரியு முண்டாவார்கள், ஜாதகன் உத்தர பாகத்தில் தூர்க்காரண்ணிய சமீபத்தில் குக்கிராமத்தில் புண்ணிய க்ஷேத்திரத்தில் அல்லது அக்கிரகாரத்தில் பெரிய கிராமத்தில் சிவாலய சமீபத்தில் ஜனனமும், வாசமும் அடைவன்.

(67) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி லக்கின பாவாதிபதி நீச்ச பாவத்திலிருந்து சுக்கிரன் சூரியனிவர்களால் பார்க்கப்பட்டால் ஜாதகன் பிரசவ சமயம் தாய் அற்ப வேதனையடைவாள், உத்தராம்ச ஜாதகனுக்கு சூதிதோஷ பயமுண்டாகும்.

(68) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி சுக்கிரன் சுய க்ஷேத்திரத்திலிருந்து சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகன் தாய் அற்ப பீடையடைவள், மாந்த ஜுரம் முதலியவற்றால் ஜாதகன் பீடையடைவன்.

(69) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி லக்கின பாவாதிபதி நீச்ச பாவத்திலிருந்து சுக்கிரனால் பார்க்கப்பட்டு எட்டாம் பாவாதிபதி ஒன்பதாம் பாவத்தில் இருந்து குரு, புதன் செவ்வாயிவர்களுடன் கூடி கேந்திர பாவத்திலிருந்தால் ஜாதகன் சகல தோஷங்களும் விலகி அறுபத்தைந்து வயதடைவான், இருபத்தாறு, முப்பத்திரண்டு இந்த வயதுகளில் பித்த வாயுவால் தேக பீடையும், நாற்பத்திரண்டில் சன்னிபாத ஜுரத்தால் பயமும், ஐம்பதில் தேக பீடையும், அறுபதில் அபமிருத்து பயமும் உண்டாகும், அக்காலம் சாந்திசெய்தால் ஜாதகன் சுகமடைவான்.

(70) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி சூரியன் ரிஷப ராசியில் சுக்கிரனுடன் கூடியிருந்து ஒன்பதாம் பாவாதிபதி மேஷத்தில் கேந்திர பாவத்தில் இருந்தால் ஜாதகன் தகப்பன் சுகமுடையவன், தயாளு, உடன் பிறந்த சகோதரரில்லாதவன், இரண்டு சகோதரிக

னுடையவன், ஒரு சகோதரி இவர்களில் அல்பாயுளாய் விடுவாள், வேறு ஒருத்தி புத்திரருடன் சுக ஜீவியாயிருப்பாள், கல்வியுடைய வன், இனிமையாய் பேசுபவன், சாந்த குணமுடையவன், சிவபக்த மதாச்சாரமுடையவன், விஷ்ணு சிவ பக்தியுடையவன், தேவப் பிராம்மண பக்தியுடையவன், நியாயவாதி, குருப்பிரியன்.

(71) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி ஒன்பதாம் பாவாதிபதி செவ்வாயால் பார்க்கப்பட்டால் ஜாதகன் தகப்பன் தியாகமுடைய வன், கம்பீர மனமுடையவன், விஷயபோகத்திலிச்சையுடையவன், பரதாரகமனப்பிரியன், துஷ்ட சங்கமில்லாதவன், பாஷாந்தரத்தில் மேலான அறிவுடையவன், மித்திர வஞ்சனை செய்பவன், சேர்க்க வும் கலைக்கவும் வல்லவன்.

(72) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி சூரியன் ரிஷப ராசியில் சுக்கிரனுடன் கூடியிருந்தால் ஜாதகன் தகப்பன் வீணைப் பாட்டி லும், சங்கீதத்திலும் சமர்த்தன், இதற்கே பத்தாம் பாவத்தில் குரு கந்தர்வாம்சத்திலிருந்தால் க்ஷேத்திர மூலமாகவும், ராஜ சன் மானத்தாலும் சுகமடைவான், பிரபு வசியமுடையவன், பற்பல தேசங்களிலும் பிரசித்தியுடையவன், வாகனம்முதலிய நல்லயோக முடையவன், பற்பல பிரபுக்களாலும் சுகமுடையவன், நிச்சப்பிரபு வால் வஸ்திர வாகன லாபமும், சொர்ணவஸ்திர பூஷணலாபமும், கிரக க்ஷேத்திர லாபமும், கல்வியால் மத்திய அந்திய வயதில் கீர்த் தியுமுடையவன், ராஜ சபையின் மத்தியில் சாகித்தியத்தில் பிர சித்தியுடையவன், விசித்திர வஸ்து லாபமுடையவன், பற்பல வஸ் துக்களிலும், பற்பல வழிகளாலும், புத்திரனாலும் சுகமுடையவன், ஞானி, தத்துவ விவேகமுடையவன், ஜாதகன் தகப்பன் ஜாதகனு டைய இரண்டாந் திசையில் மரிப்பான்.

(73) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி நான்காம் பாவாதிபதி சுய க்ஷேத்திரத்தில் ரிஷப ராசியில் இருந்து சந்திரன் நீச்ச ராசியி லிருந்தால் ஜாதகன் தாய் சுகமுடையவள், ஜாதகன் தாய் குண முடையவள், பொறுமையுடையவள், பதிபக்தியுடையவள், அன்ன தானப் பிரியை, கர்வமுடையவள், கண்டிப்பான சொல்லுடைய வள், புத்திரனுக்கு இஷ்டமானதைச் செய்பவள், புண்ணியமுடைய வள், வமிச விருத்தியுடையவள், பதிவிரதை, இவள் ஜாதகனு டைய மூன்றாந் திசையில் மரணமாவாள்.

(74) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி மூன்றாம் பாவாதிபதியா கிய புதன் பத்தாம் பாவத்தில் குரு செவ்வாயிவர்களுடன் கூடி யிருந்து மூன்றாம் பாவம் சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகன் அற்ப சகோதரனுடையவன், ஜாதகனுக்கு ஒரு இளைய சகோதர னுண்டாவான், அவன் அற்ப கல்வி சுக முடையவன், பயிர்த்

தொழிலுடையவன், வீட்டு வேலைகளில் சுதந்தர முடையவன், மனைவி புத்திரன் முதலிய சுக முடையவன், யோகமுடையவன், தனிகன், சுகமுடைய புத்திரீ புத்திர சுகமுடையவன்.

(75) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி குஜ திரிம்சாம்சத்தில் மேஷ ராசியில் குருவும், விருச்சிக ராசியில் சந்திரனும் இருக்கும் சகட யோகத்தில் பிறந்தவன் வெளுப்பு நிறமுடையவன், மிக்க அறிவாளி, அதிருஷ்டசாலி, மேதாவி, தேஜசுடையவன், பித்த சுபாவ தேகமுடையவன், கொஞ்சம் வாயுபீடை யுடையவன், மித மாய்ப் புசிப்பவன், மர்ம மனமுடையவன், காமீ, மித்திர வஞ்சனை செய்பவன், சிவ பக்த மதாச்சாரமுடையவன், ஹரி சங்கர பக்தி யுடையவன், தேவப் பிராம்மண பக்தியுடையவன், கொஞ்சம் தாமச காரியமுடையவன்.

(76) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி வித்தியா ஸ்தானாதிபதி யாகிய சுக்கிரன் சுய க்ஷேத்திரத்தில் ரிஷப ராசியில் சூரியனுடன் கூடியிருந்தால் ஜாதகன் கல்வி அறிவுடையவன், சாஸ்திர ஞான மில்லாதவன்.

(77) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி சுக்கிரன் சுய க்ஷேத்தி ரத்தில் சாரதாம்சத்திலிருந்து பத்தாம் பாவாதிபதி குருவுடன் கூடி மேஷ ராசியிலிருந்தால் ஜாதகன் பாட்டுமூலம் நல்ல ஜீவன முடையவனாவான், க்ஷேத்திர மூலமும் சுகமுடையவன்.

(78) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி லக்கினத்திற் கிரண் டாம் பாவத்தில் கேது இருந்தால் ஜாதகன் (மறைவாக) ரகசியத் தில் காமமுடையவன், சந்தன புஷ்ப வஸ்திரப் பிரியன், வேசி ஸ்திரீ சரமுடையவன், பற்பல ஜாதிஸ்திரீகளைச் சேர்பவன், தகாத ஸ்திரீ சேர்க்கையில் சந்தோஷி, நாடக அலங்கார காவியங்களிலும், சாஸ்திரங்களிலும் பிரியன், சங்கீத லோலன், வீணைப் பாட்டின் ரஸமறிபவன், தேவி சக்தியின் அருளுடையவன், கல்வியால் பிர சித்தியுடையவன், திரவிய சம்பாதனையில் சமர்த்தன், பிரபுத் துவாராவாக நன்கு பேசுவான், பிரபு வசியமுடையவன், பற்பல பிரபுக்களால் (சுக முடையவன்) சன்மான மடைபவன், குதிரை வாகனமுடையவன், தியாக போகமுடையவன், பாலியம்முதல் சுக முடையவன், பிதுரு மாதுரு சுகமுடையவன்.

(79) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி சகடயோக ஜாதகத்தில் சந்திரன் பாக்கியாவஸ்தையிலிருந்தால் ஜாதகன் அதி சம்பத்தும், அரச மந்திரியின் அன்பையுமடைவான்.

(80) ஜென்ம லக்கினம் கடகம் (சம்பகாம்சம்) ஆகி லக்கின பாவத்தில் குரு இருந்தாலும், பார்த்தாலும், ஜாதகன் தாய்க்குப்

பிரசவத்தில் அற்ப பாதையும், உத்தர பாகத்தில் அதிக பாதையும் உண்டாகும், அப்போது ஐந்தாம் பாவத்தில் சூரியனிருந்தால் சூதிதோஷமுண்டாகும்.

(81) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி திரிகோண ஸ்தானங்களில் பாபர்களிருந்தால் ஜாதகன் பாலரோக பயமுடையவனுவான்.

(82) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி லக்கின பாவாதிபதி லக்கின பாவத்திலிருந்து, எட்டாம் பாவாதிபதி சுய க்ஷேத்திரத்தில் எட்டாம் பாவத்திலிருந்து, குரு தன் உச்ச க்ஷேத்திரத்தில் இருந்தால் ஜாதகன் சகல தோஷங்களும் விலகி எழுபது வயதடைவான், நாற்பத்தாறு, ஐம்பத்துமூன்று, அறுபது இந்த வயதுகளில் ஜாதகன் தேகஜாட்டியமும், பீடையும் அடைவான், அக்காலங்களில் சாந்தி செய்தால் ஜாதகன் சுகமடைவான்.

(83) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி சூரியன் கேந்திர திரிகோணத்திலிருந்து ஒன்பதாம் பாவாதிபதி தன் உச்ச ராசியிலிருந்தால் ஜாதகன் தகப்பன் சுகமும், தயையும் உடையவன், ஹரிசங்கர பக்தியும், கல்வியறிவும், ராஜசேவையும், ராஜ்ய தந்திரத்தில் நல்ல அறிவுமுடையவன்.

(84) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி சூரியன் ஐந்தாம் பாவத்தில் பத்தாம் பாவாதிபதியுடன் கூடியிருந்தால் ஜாதகன் தகப்பன் ராஜ முத்திராதிகாரமுடையவன், வனந்தர பட்டிணங்களுக் கதிகாரியாவான், பிரபு காரியத்தில் சுதந்திரமுடையவன், வாகனுதி சுகமும், தன் ஜனங்களில் பிரசித்தியும், நல்ல யோகமும் அடைந்து ஜாதகனுடைய இரண்டாந்திசையில் மரிப்பான்.

(85) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி நான்காம் பாவாதிபதி நீச்ச ராசியிலிருந்து சந்திரன் சுய க்ஷேத்திரத்திலேயே யிருந்தால் ஜாதகன் தாய் சுகமுடையவளாவள், பதிபக்தியுடையவள், வம்ச விருத்தியுடையவள், ஜாதகனுடைய நான்காந்திசையில் மரிப்பாள், வேறு சிலர் ஜாதகனுடைய தாய் ஜாதகனுடைய பாலியத்தில் இறந்து விடுவாள் என்றும், மாற்றுந்தாய் உடையவனென்றும் எண்ணுகின்றனர்.

(86) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி நான்காம் பாவத்தில் கேந்திரத்தில் மூன்றும் பாவாதிபதியும், செவ்வாய் ஐந்தாம் பாவத்தில் கேந்திர திரிகோணத்திலுமிருந்தால் ஜாதகன் மூத்த சகோதரனில்லாதவன், இரண்டு அல்லது மூன்று இளைய சகோதரனுடையவன், சகோதரிகளுமுடையவன்,

(87) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி லக்ஷ்மீயோகத்தில் சுக்ர திரிம்சாம்சத்தில் பிறந்தவன் வெளுப்பு நிறமுடையவன், ரூபலக்ஷணமுடையவன், பித்த சுபாவ தேகமுடையவன், அதிர்ஷ்டசாலி, மேதாவி, கல்வி அறிவுடைய விவேகி, எழுதுவதில் சமர்த்தன், சங்கீதப் பிரியன், காமுகனுவன்.

(88) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி குரு லக்கின கேந்திரத்தில் இருந்தால் ஜாதகன் வாச்சாலகன், பிரசங்கங்கள் யுக்தியுடன் செய்வான், ஹரிசங்கர பக்தியுடையவன், தேவி சக்தியுடையவன்.

(89) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி ஐந்தாம் பாவத்தில் பத்தாம் பாவாதியிருந்தால் ஜாதகன் ராஜ சேவையுடையவன்.

(90) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி தன் உச்ச ராசியில் குருவிருந்து லக்கினதிபதியுடனும் கூடியிருந்து பத்தாம் பாவாதிபதி சுய க்ஷேத்திரத்தில் (விருச்சிகராசியில்) இருந்தால் ஜாதகன் அரச மந்திரியாவன், பதினறு வயதுமுதல் பிரசித்தியும், இருபதில் சுதந்திரமும், விசேஷமும், இருபத்தைந்தில் அனேககிராமாதிகாரமும், தேவ க்ஷேத்திர அதிகாரமும் அடைவன், முப்பது வயது முதல் ராஜ முத்திராதிகாரமும், முப்பத்தைந்து நாற்பது இந்த வயதுகளில் அரசாங்கப் பிரசித்தியும், நர வாகனதி மூன்று வாகன பாக்கியமும், சத்திர சாமரபோகமும், அரசாங்கத்தில் பிரதானியாகவும், வயோதிக வயதில் க்ஷேத்திர சுகமும், ஆயுள்வரையில் சுகமுமுடையவனுவான்.

(91) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி மூன்றும் தாராதிபதி கேதுவாகி அவர் பதினோராம் பாவத்திலிருந்து பத்தாம் பாவாதிபதியுடன் கூடியிருந்தாலும், பத்தாம் பாவாதிபதியால் பார்க்கப்பட்டிருந்தாலும், அவர் திசையில் ஜாதகன் விசேஷ பாக்கியமும், சத்திர சாமர வைபவங்களும், புத்திர வர்க்கத்தில் சுபமும், மூன்று புத்திரரும் மூன்று புத்திரிகளுமுடையவன், சிவப்பு தானியம், வஸ்திரம், வீட்டில் வெள்ளிப்பாத்திரம் முதலானவைகளுமுடையவன்.

(92) ஜென்ம லக்கினம் கடகம் (நாடி அம்சம் குமராம்சம்)ஆகி லக்கின கேந்திரத்தில் குரு இருந்தால் ஜாதகன் பிறக்கும்போது ஜாதகன் தாய்க்குப் பிரசவம் வெகு சீக்கிரமாக ஆகும்.

(93) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி ஜாதகன் ஜன்ம லக்கினத்தில் குரு ராகுவுடன் கூடியிருந்தால் ஜாதகன் தாய் பிரசவத்தில் அதிக வேதனைப்படுவாள், இத்துடன் கூட சந்திரனும் அப்போது ஐந்தாம் பாவத்தில் இருந்தால் ஜாதகனுக்கு சூதிதோஷ பயமுண்டாகும், அக்காலம் ஜாதகன் தாய்க்குப் பயமும், ஷ்ஷ சந்

திரனுக்கிரண்டாமிடத்தில் சனியுமிருந்தால் ஜாதகன் தாய்க்கு மரணமும் சம்பவிக்கும், வளர்ப்புத்தாயால் ஜாதகன் சுகமடைவான், பால ரோகங்களாலும் பீடையடைவன்.

(94) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி லக்கின பாவாதிபதியாகிய சந்திரன் ஐந்தாம் பாவத்திலும், எட்டாம் பாவாதி ஆறுமிடத்தில் குருவின் வீடான தனுசு ராசியிலும் இருந்து குரு லக்கின கேந்திரத்திலுமிருந்தால் ஜாதகனுக்குப் பூர்ணுயுளாக எழுபத்துமூன்று வயதுண்டாகும், இருபத்தெட்டு, முப்பத்தாறு, ஐம்பத்திமூன்று இக்காலங்களில் அபமிருத்து பயமுடையவன், அக்காலம் மிருத்தியுஞ்ஜெய ஜபம், ஆயுர்ஹோமம் முதலானவைகள் செய்தால் சுகமடைவான்.

(95) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி சூரியன் புதனுடன் கூடி ஒன்பதாம் பாவத்திலிருந்து குரு தன்உச்ச ராசியிலிருந்தால் ஜாதகன் தகப்பன் சுகமுடையவன், தயாளு, சிவ பக்தியுடையவன், கல்வியறிவுடைய விவேகி, வியாபார ஜீவனமுடையவன்.

(96) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி குரு தன் உச்ச ராசியில் இருந்தால் ஜாதகன் தகப்பன் தனமுடையவனும் கீர்த்தியுடையவனுமாவான், சுகி.

(97) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி புதன் ஒன்பதில் இருந்தால் ஜாதகன் தகப்பன் சாஸ்திர ஞானமடைவான், காவிய ஞானமுடையவன், எப்போதும் சிவபூஜையில் பிரியன், நற்செய்கை, சதாஆச்சாரமுதலியன உடையவன், கொஞ்சம் ரோகமுடையவன், வாகனுதியோகமுடையவன், ஜாதகனுடைய நான்காந்திசையில் தகப்பன் மரண முறுவான்.

(98) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி நான்காம் பாவாதிபதியாகிய சுக்கிரன் எட்டாம் பாவத்திலிருந்து சனியால் பார்க்கப்பட்டு, சந்திரன் நீச்சராசியிலிருந்தால் ஜாதகன் தாய் ஜாதகனுக்குப் பாலியத்தில் மரிப்பாள், ஜாதகன் மாற்றுந்தாயுடையவன், ஜாதகனுடைய நான்காந்திசையில் மாற்றுந்தாய் மரிப்பாள்.

(99) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி மூன்றும் பாவாதிபதி நீச்சமாகி ஒன்பதாம் பாவத்திலிருந்தால் ஜாதகன் பேத சகோதர சகோதரிகளுமுடையவன்.

(100) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி பத்திரயோகத்தில் சனி திரிம்சாம்சத்தில் பிறந்தவன் கறுப்பு நிறமுடையவன், சம தேகமுடையவன், ரூபலக்ஷணம் நிரம்பியவன், கல்வியும் தெளிந்த அறிவுமுடையவன், எழுதுவதில் சமர்த்தன், மூன்று பாஷைகளில் வல்லவன், நாடக அலங்கார காவியங்களில் பிரியமுடையவன், பிரிய

மாய்ப் பேச வல்லவன், பாலியமுதல் புகழும், பிதுரார்ஜித தனமும் உடையவன், விசேஷ சிவபக்தியுடையவன், வியாபார ஜீவன முடையவன், தீபாந்தரவஸ்துமூலம் கிரய விக்கிரயாதிகளால் லாப முடையவன், சமுத்திரப் பிராந்தியத்தில் வசிப்பவன், தனமுடையவன், பிரபுஆவான்.

(101) ஜென்ம லக்கினம் கடகம் (க்ஷமாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி இரண்டாம் பாவத்தில் வைசிய காலத்தில் இருந்தால் ஜாதகன் வைசிய குலத்தில் பிறந்தவன், அறிவுள்ளவன், சமுத்திரப் பிராந்தியத்தில் ஜனனமும், வாசமும் உடையவன்.

(102) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி லக்கின பாவத்தில் குருவும் சுக்கிரனும் கூடில் ஜாதகன் தாய் பிரசவத்தில் அற்ப வேதனையுடையவள்.

(103) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி சந்திர சூரியரிருவரும் இரண்டாம் பாவத்திலிருந்தால் ஜாதகன் தாய் பிரசவத்தில் வெகு பாதைபடைவாள், சூதிதோஷ பயமும், மாதுரு பீடையுமுண்டாகும்.

(104) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி இரண்டாம் பாவத்தில் சந்திரனிருந்து சனியால் பார்க்கப்பட்டிருந்தால் ஜாதகன் பால ரோகபீடையுடையவன்.

(105) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி எட்டாம் பாவாதிபதி சுயக்ஷேத்திரத்தில் இருந்து லக்கின பாவாதிபதி இரண்டாம் பாவத்திலும், குரு லக்கின கேந்திரத்திலுமிருந்தால் ஜாதகன் தீர்க்காயுளாக எழுபத்தேழு வயதடைவான், முப்பது, நாற்பது, ஐம்பத்தாறு இந்த வயதுகளில் பீடையடைவான், அக்காலங்களில் அபமிருத்து சாந்தியாக மிருத்தியுஞ் ஜெயஜபம், விஷ்ணு சகஸ்திர நாமம் முதலிய ஜபம் செய்தால் ஜாதகன் சுகமடைவான்.

(106) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி இரண்டாம் பாவத்தில் சூரியன் சுயக்ஷேத்திரத்திலிருந்து ஒன்பதாம் பாவாதிபதி தன் உச்ச ராசியிலிருந்தால் ஜாதகன் தகப்பன் அற்பசுகி, சகோதரருடையவன், கன்னியாதேவியின் வமிசத்தில் ஜனித்தவன், ஹரிசங்கர பக்தியுடையவன், தேவப் பிராம்மண பக்தியுடையவன், சுயவித்தையில் நிபுணன், வியாபார ஜீவன முடையவன், திரவிய சம்பாதனையில் சமர்த்தன், யோகமுடையவன், தனிகன், சுயஜனப் பிரசித்தன், பற்பல வியாபார ஜீவன முடையவன், பாலியத்தில் அற்பமாயும், மத்தியத்தில் அதிகமுமான சுகமுமுடையவன், பிரபு வழியாய் பிரசித்தி யடைவன், இவன் ஜாதகனுடைய இரண்டாந் திசையில் மரிப்பான்.

(107) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி நான்காம் பாவாதிபதி லக்கின கேந்திரத்தில் இருந்து சந்திரன் சூரியனுடன் இரண்டாம் பாவத்தில் இருந்தால் ஜாதகன் தாய் விசேஷ சுகமுடையவள், பதி பக்தியுடையவள், வமிச விருத்தியுடையவள், வேறு சிலர் பேத சகோதரனுடையவள் என்று எண்ணுகின்றனர், ஜாதகனுடைய நான்காந்திசையில் ஜாதகனுடைய தாய் மரணமடைவாள்.

(108) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி மூன்றும் பாவாதிபதி இரண்டாம் பாவத்திலும், செவ்வாய் மூன்றும் பாவத்திலுமிருந்தால் ஜாதகன் அற்ப சகோதரனுடையவன், சகோதரியுமப்படியே, பின் சகோதரனில்லாதவனுவான்.

(109) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி பத்திரயோகத்தில் குரு திரிம்சாம்சத்தில் பிறந்தவன் கறுப்பு நிறமுடையவன், வாதமும், பித்தமும் அதிகம் கலந்த தேகமுடையவன், சம அங்கங்களுடையவன், அறிவாளி, அழகிய முகமுங் கண்களும் பொருந்தியவன், அதிஷ்டசாலி, மேதாவி, தியாககுணமுடையவன், கம்பீர புத்தியுடையவன், கல்வியறிவுடைய விவேகி, சுபவித்தையில் நிபுணன், ஸ்ரீமான், மணி, ரத்தின பரீக்ஷை செய்பவன்.

(110) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி பத்தாம் பாவாதிபதி புதனுடைய ராசியான கன்னியில் இருந்தால் ஜாதகன் வியாபார மூலம் பொருள் சேர்ப்பான், பிதுரார்ஜித சுயார்ஜித தனங்கள் விசேஷமாயுடையவன், ஹரிசங்கர பக்தியுடையவன், தேவப் பிராமண பக்தியுடையவன், சாத்வீகன், அறிவாளி, சுகி, பதினறு வயதுமுதல் பிரசித்தியுடையவன், சுயப்பிரபலமும், தன சம்பாதனேயும், இருபது வயதுமுதல் சொர்ணவியாபாரமும், இருபத்தைந்தில் விசேஷமாகவும், இருபத்தேழில் பற்பல பிரபு சினேகமும், நீச்சப் பிரபு சமீபத்தில் உத்தியோகமும், பந்துமூலம் சுகமும், ஜன்ம தேசத்தில் முப்பதிற்கு மேல் பிரசித்தியும், பொக்கிஷ அதிகாரியாகவும், பிரபல உத்தியோகமும், நாற்பதில் தன வரவும், ஆயுள்வரை விசேஷ பாக்கியமுடையவனுகவுமாவான்.

(111) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி லக்கின தன பாவாதிபதிகள் இரண்டாம் பாவத்திலும், ஒன்பது பதினென்றுக் குடையவர்கள் லக்கின பாவத்திலுமிருந்தால் ஜாதகன் தனம், வாகனம், பாக்கியம் முதலியன உடையவன், தைவானுக்கிரகம் பொருந்தியவன், தைவானுக்கிரகத்தால் தனமடைவான், தீபாந்திர (வஸ்து) தனமும், பற்பல வழிகளாலும் தனமும் அடைவான்.

(112) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி ஏழாம் பாவாதிபதி சுய க்ஷேத்திரத்தில் எட்டாம் பாவத்திலிருந்து சுய க்ஷேத்திரத்தி

னுள்ள சூரியனால் பார்க்கப்பட்டால் ஜாதகன் காலந்தள்ளி விவாக மடைவான்.

(113) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி லக்கினத்திற்கு ஐந் தாம் பாவத்தில் ராகு இருந்தால் ஜாதகன் சந்தானத் தடையுடை யவன், அதற்காக பாலகிருஷ்ண பிரதிமையும், நாகசாந்தியும் செய் தால் இரண்டு புத்திரரும் மூன்று புத்திரிகளும் நீண்ட ஆயுளுட னிருப்பார்கள்.

(114) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி குருவும் சுக்கிரனும் கூடி (லக்கினபாவத்தில்) யிருந்தால் ஜாதகன் அரசனுவான், அரச னுக்குச் சமமானவனுவன், எப்போதும் அன்னதானம் செய்பவன், ஆயுள்வரை சுகியாவான்.

(115) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி கமலாகராம்சத்தில் சந் திரன் சுய க்ஷேத்திரத்தில் குருவுடன் கூடியிருந்து நான்காவது காலத்தில் ஜாதகன் பிறந்தால் விஷ்ணுபக்த குலத்தில் பாக்கிய வமிசத்தில் உடன் பிறந்த சகோதரஹீனனுகப் பிறப்பான்.

(116) ஜென்மலக்கினம் கடகம் ஆகி சுக்கிரன் சந்திராரூடாதி பதியாகி மீனத்தில் இருந்து குருவால் பார்க்கப்பட்டால் ஜாதகன் மகா நதிப் பிராந்திய தேசத்தில் பூர்வபாகத்தில் ஜனனமா னுல் மிக்க கீர்த்திவாய்ந்த பட்டிணத்திலும், உத்தர பாகமானுல் மாதாமகன் வீட்டில் பாக்கியமுள்ள காலத்தில் ஜனனமும், வாச மும் அடைவான், ஜன்மம்முதலாக பாக்கியமும் உடையவனுவான்.

(117) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி துலாம்சத்தில் கடகரா சியில் சந்திரனிருந்து குருவுடனும் கூடியிருந்து, சந்திரனுக்கு ஒன்பதாமிடத்தில் சுக்கிரனிருந்தால் ஜாதகன் கர்ப்ப ஸ்ரீமானுக வும், நல்ல புண்ணிய புத்தியுடையவனுகவும் ஆவான், ஷை சந்திரன் சனியுடன் கூடியிருந்தால் சூதிதோஷ பயமும், மாந்த ஜுரம் முத லியவற்றுல் பயமும் ஏற்பட்டு, தைவானுகூலமாக சாந்தியாகும்.

(118) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி லக்கின பாவாதிபதி கேந்திர பாவத்தில் இருந்து, எட்டாம் பாவாதிபதியும் கேந்திர பாவத்திலிருந்து சுக்கிரன் வர்க்கோத்தமத்திலிருந்தால் ஜாதக னுக்கு பாலாரிஷ்டம்நிவாரணமாகும்.

(119) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி லக்கினுரூடாதிபதி ஒன்பதாம் பாவத்திலிருந்து ரந்திராரூடாதிபதியாகி சுக்கிரன் லக் கினத்திற்கு ஐந்தாம் பாவத்திலிருந்தால் பாலாரிஷ்டம் நிவாரண மாகும், வர்க்கோத்தமத்தில் லக்கின பாவாதிபதி இருந்து சுக்கிர னும் வர்க்கோத்தமாம்சத்திலிருந்து ஜாதகன் சித்ரிணியம்சத்தில்

ஸ்திர லக்கினத்தில் ஜனித்தால் ஆயுள்விருத்தி யுடையவனுவான், எழுபத்துமூன்று வயது பரமாயுளாக அடைவான்.

(120) (பொது) ஷஷ்டாஷ்ட விரயாதிபதிகளிருக்கும் நவாம்ச ராசியில் கோச்சாரத்தில் சனிவரும்போது மாரக னுடைய தெசாகாலத்தில் தேகத்திற்கு அற்ப ஆயாசமுண் டாகும், சனி சாரங்களில் பயமுமுண்டாகும், அப்போது சாந்தி செய்தால் சுகமுண்டாகும், ஆறும் பாவாதிபதி யிருக்கும் அம்சத்தில் சனி வந்தால் பிரபுத்துவேஷமும், சத்துரு பயமும், பன்னிரண்டாமாதிபதியின் அம்சத்தில் சனி வரும் போது திரவிய நஷ்டமும் ஏற்படும், எந்தெந்த பாவங்களுக்கு அஷ்டமாதிபதியின் நவாம்சத்தைச் சனி கோச்சாரத்தில் அடைகி றனே, அந்த அந்த பாவங்களுக்கும் அது எந்த காரகருடைய (பாவ) அம்சமாகுமோ அதற்கும் பீடையுண்டாகும், மேலும் ஆறு எட்டுப் பன்னிரண்டு முதலிய ராசிகளில் சூரியனிருந்தால் அந் தந்த மாதங்களில் அதற்குத் தக்கபடி சுபா சுபங்களும், தேக ஜாட்டியமும், மந்தத்தன்மையும், சத்துரு சம்வாதமும், திரிகோ ணுதிபதிகளின் மாதங்களில் சூரியன் வரும்போதும், திரிகோணுதி களின் வாரங்களின் தாராபலானுகுணமாக நித்திய பலனுண்டா கும், மேலும் ஜன்ம நக்ஷத்திரத்திற்கு ஷஷ்டாஷ்டமாதிபதிகளின் பாப மாதங்களிலும், தெசைகளிலும், ஷஷ்டாஷ்டமாதிபதிகளின் வாரங்களிலும் ஜுரம், ராஜபயம், தேகபீடை, ரோய் முதலியன உண்டாகும்.

(121) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி கமலாகராம்சத்தில் சந் திரனிருந்து, சூரியன் கேந்திரத்தில் மீன நவாம்சத்தில் இருந்து, ஒன்பதாம் பாவாதிபதி சுய க்ஷேத்திரத்திலிருந்தால் ஜாதகன் பிது ருபாக்கியமுடையவன்.

(122) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி ஒன்பதாம் பாவத்தில் குரு இருந்து சந்திரனுக்கு ஒன்பதாமிடத்தில் சுக்கிரனிருந்தால் ஷெ குரு குரூர கிரகத்துடன் கூடினும் ஜாதகனுடைய தகப்பன் தீர்க்கவயதடைவான்.

(123) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி ஒன்பதாம் பாவாதிபதி சனியுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் விஷ்ணு பக்தி யுடையவனுவான், வைஷ்ணவ ஆச்சாரமுடையவன், தேவப் பிராம் மண பக்தி உடையவன், கல்வியால் ஜீவிப்பவன், பிரபுவின் ஸ்நே கத்தால் பிரசித்தி அடைவான், மேலும் அப்போது சூரியனுடன் புதன் கூடியிருந்தால் கல்வியால் ஜீவன மடைவான், பற்பல சாஸ் திரங்களிலும் பிரியமுடையவன், சிற்பசாஸ்திரத்தில் தேர்ச்சி

யுடையவன், ஆச்சரியமான சித்திரங்களைச் செய்பவன், அதனால் பிரபுக்களுடைய சினேகிதத்தையடைவான்.

(124) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி ஒன்பதாம் பாவாதிபதி சனியுடன் கூடியிருந்தால் ஜாதகன் ஞானமும், தத்துவ விவேகமும் உடையவன், வேறுசிலர் தத்துவஞான முடையவனுகாமல் தத்துவ சாஸ்திரத்தில் பிரியமுடையவன் என்றும், பிரபு சேவையுடையவனென்றும் எண்ணுகின்றனர், சீக்கிரத்தில் கோபமுடையவன், தெளிவான பேச்சு உடையவன், அறிவுடையவன், பாலியத்தில் அற்பசுகி, மத்தியில் விசேஷ சுகியும், பிரசித்தியுமடைவான், வயோதிக வயதில் புத்திரனால் சுகமடைவான்.

(125) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி நான்காம் பாவாதிபதியாகிய சுக்கிரன் தன் உச்சத்திலிருந்து சந்திரன் சுயக்ஷேத்திரத்திலிருந்தால் ஸ்திர லக்கினத்தில் பிறந்தவனுக்கு தாய் சௌக்கியமுண்டாகும், மேற்படி சந்திரன் குருவால் பார்க்கப்பட்டால் ஜாதகன்தாய் குணவதியாவாள், எப்போதும் பதிபக்தி உடையவள், புத்திரனால் சுகமுடையவள்.

(126) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி சந்திரனுக்கு மூன்றுமிடத்தில் கேது இருந்து, சுக்கிரனுடைய க்ஷேத்திரத்தில் செவ்வாயிருந்து சனி விசோத்தியாம்சத்தில் இருந்தால் ஜாதகன் சகோதர சுகமில்லாதவன், அதாவது முன் பின் ஆண் சகோதரனில்லாதவன், இரண்டு சகோதரிகளுடையவன், வேறு சிலர் மூன்று சகோதரர்களுடையவனென்று என்றுகின்றனர், இவர்களைவிட அதிக சகோதரர்கள் பிறந்தாலும் அவர்கள் இறந்துவிடுவார்கள்.

(127) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி கமலாகராம்சத்தில் சந்திரனிருந்து புத திரிம்சாம்சத்தில் மாளவீயோகத்தில் பிறந்த ஜாதகன் வெளுப்பு நிறமுடையவன், சமதேகி, நல்ல அறிவாளி, வெகு ஆயுசுடையவன், கல்வியுடையவன், சரசமுடையவன், ரூப லக்ஷண சம்பன்னன், யுக்தாயுக்தந் தெரிந்தவன், அதிருஷ்டசாலி, தர்மந் தெரிந்தவன், மேதாவி, நற்குணமுடையவன்.

(128) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி லக்கினத்தைக் குரு பார்த்தாலும், குரு லக்கினத்தில் இருந்தாலும், சந்திரன் குருவுடன் கூடியிருந்தால் ஜாதகன் சாத்மீகமுடையவன், குணம் உடையவன், கல்வியால் ஜீவனமுடையவன்.

(129) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி லக்கினத்திற்கு ஐந்தாம் பாவத்தில் சுக்கிரனிருந்தால் ஜாதகன் ஊஹாபோக சாமர்த்தியமுடையவன்.

சிம்ம லக்கினம்

(1) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி கும்ப நவாம்சத்தில் சந்திரன் துலா ராசியில் இருந்து ஷை சந்திரனுக் கிரண்டாமிடத்தில் குரு இருந்து, லக்கின பாவாதிபதி விப்பிரகாலத்தில் மகர ராசியில் இருந்தால் ஜாதகன் விஷ்ணுபக்தி உடைய பிராம்மண குலத்தில் விஷ்ணு, சிவ பக்தி உடையவனுகவும், சகோதரப் பிறப்புடையவனுகவும் ஜனனம் ஆவான்.

(2) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி சந்திராரூடாதிபதியாகிய சனி சுய க்ஷேத்திரத்தில் புதனுடன் கூடியிருந்தால் ஜாதகனுக்கு நதிப் பிராந்தியத்தில் சிறிய கிராமத்தில் அக்கிரஹாரத்தில் ஜனனம் நேரிடும்.

(3) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி லக்கினத்திற்கு ஏழாம் பாவத்தில் சுக்கிரனிருந்தால் பிரசவத்தில் ஜாதகன் தாய் அற்ப வேதனையடைவாள்.

(4) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி சந்திரன் துலா ராசியில் சனியின் நவாம்சத்தில் இருந்தால் கொஞ்சம் சூதிதோஷ பயமும், பாலாரிஷ்ட பயம் ஆறு வருஷம் வரையிலும் உண்டாகும், மாந்த ஜுர பீடையும், வைசூரி ஜுர பயமும் அற்பமாயுண்டாகும், ஜாதகன் தகப்பனுடைய புண்ணிய பலத்தால் பால தோஷம் நீங்கப் பெறுவான்.

(5) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி லக்கின பாவாதிபதி ஆறுவது பாவத்தில் இருந்து, சந்திரனுக்கு (லக்கின பாவாதிபதி யிருக்கும் ஸ்தானம்) கேந்திரமாகவுமாகி எட்டுக்குடைய குரு மித்திருடன் மித்திர ராசியான விருச்சிக ராசியில் இருந்தால் ஜாதகன் பால தோஷம் நீங்கப் பெறுவான், ஷை சூரியனே ஆறும் பாவத்திலேயே (பாபருடன் அதாவது) சனியுடன் கூடியிருந்தால் ஜாதகன் மத்திபாயுளாக அறுபத்தாறு வயதடைவான், இந்த ஜாதகன் சுக்கிர தெசை சூரிய புத்தி சூரியாந்திரத்தில் மரணமடைவான்.

(6) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி துலா ராசியில் கும்ப நவாம்சத்தில் சந்திரனிருந்து ஷை சந்திரனுக்குக் கேந்திரத்தில் சூரியன் மகரத்தில் வர்க்கோத்தமத்திலிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் பாக்கியமுடையவன், இரண்டுபேர் உடன்பிறந்த சகோதருடையவன், விஷ்ணு பக்த குலத்தினராயினும் சிவபக்தி உடையவர்கள், கல்வி அறிவும் உடையவர்கள், எழுதுவதில் சமர்த்தமுடையவர்கள், அதினுலும், பூமியாலும் ஜீவனமுடையவர்கள், சேவகத் தொழிலில் ஜாதகனுடைய தகப்பன் உத்தியோக ஜீவன

முடையவன், பாலியத்தில் தரித்திரமும், மத்திய வயதில் பிரசித்தியும், பிதுரார்ஜித மின்றியும், சுயார்ஜிதமுடையவனும், ஜன்ம தேசத்தைவிட்டு வெளி தேசத்தில் சுகமும், தைவானுக்கிரகமும் உடையவன், தேவப் பிராம்மண பக்தி உடையவன், யுக்தா யுக்த விவேகமுடையவன், மேற்படி சூரியனே இரண்டு சுபருடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் தர்ம புத்தியும், உதார குணமும் உடையவன், புத்திரீ புத்திர சுகமும், வயோதிக காலத்தில் பாக்கியமுமுடைய இவன் ஜாதகனுக்கு மூன்றாந் தெசையாக சனி தெசை வந்தால் அந்த தெசையில் மகரராசியின் கடைசியில் அல்லது கும்ப ராசியில் கோச்சார சனி வரும்போது ஜாதகனுடைய தகப்பன் மரிப்பான்.

(7) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி விருச்சிக ராசியில் நான்காம் பாவாதிபதியாகிய செவ்வாயுடன் குரு கூடியிருந்து(பன்னிரண்டாம் பாவமானது குருவால் பார்க்கப்பட்டால் ஜாதகன் தாய் சுகமுடையவள், குணவதி, சமர்த்தை, பிரியமாய் பேசுபவள், முன் புண்ணிய பலனுக புத்திர புத்திரீ சுகமுடையவள்.

(8) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி மூன்றும் பாவத்தில் சந்திரனிருந்து, செவ்வாயுடன் (கேந்திரத்தில்) விருச்சிக ராசியில் குரு கூடியிருந்தால் ஜாதகன் உடன் பிறந்த இரண்டு சகோதரரும் இரண்டு சகோதரிகளுமுடையவன், வேறுசிலர் மூன்று சகோதரிகளுண்டென்று எண்ணுகின்றனர்.

(9) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி சந்திரன் துலா ராசியில் கும்ப நவாம்சத்தில் இருந்து அமலாயோகத்தில் குருத்திரிம்சாம்சத்தில் பிறந்தவன் கறுப்பு நிறமுடையவன்.

(10) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி சனியுடன் கூட லக்கினதிபதி கூடியிருந்தால் ஜாதகன் வாத தேகமுடையவன், சமதேகமுடையவன், அறிவாளி, தீரன், கொஞ்சம் ரோக தேகமுடையவன், கொஞ்சம் ரோக சரீரமுடையவன், கல்வியுடையவன், புத்திமான், வாச்சாலகன், எழுதுவதில் சமர்த்தன்.

(11) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி லக்கினதிபதிக்கு இரண்டாமிடத்தில் சுக்கிரன் (கும்பராசியில்) இருந்தால் ஜாதகன் தேவப் பிராம்மண பக்தியுடையவன், விசேஷ குருபக்தி உடையவன், கல்வியால் ஜீவனமுடையவன், எழுதுவதால் நல்ல ஜீவனமுடையவன், உத்தியோகத்தால் சுகமுடையவனுவான்.

(12) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி கேந்திரத்தில் பத்தாம் பாவாதிபதி சனியின் ராசியான கும்பத்திலிருந்தால் ஜாதகன் உத்தியோகப் பிரபல மடைவான், சமுர்த்தியான க்ஷேத்திர பாக்கியமுடையவனுயினும் ஜன்மம்முதல் சுகமுடையவன், பிரசித்த உத்

தியோக மூலம் ஜீவனமுடையவன், பன்னிரண்டாவது வயதுமுதல் நற்புத்தியும், பதினாறுவது வயதுமுதல் திரவிய சம்பாதனையு முடையவன், அரசாங்க ஜன நேசமுடையவன், இருபது வயதிற்கு மேல் விசேஷ தனம் சம்பாதிப்பான், இருபத்தைந்தாம் வயதில் நல்ல புகழுடைவான், முப்பது வயதிற்குமேல் பாக்கிய முடைய வனுவான், வயோதிக வயதில கீர்த்தியுடையவன், தன் ஆயுள் பூரா வும் சுகமுடையவனுவான், ஜாதகனுடைய மனைவி ரூப லக்ஷண முடையவள்.

(13) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி குரு நான்காம் பாவத் தில் பாபருடன் கூடியிருந்தால் ஜாதகன் காலங்கடந்து புத்திரனை அடையவன், சுப்பிரமணிய விரதமிருந்து நாகசாந்தி செய்வதா லும், சேதுஸ்நானம் செய்வதாலும் சந்தான சௌக்கியமுடையனு வான், இரண்டு புத்திரரும், இரண்டு புத்திரிகளுமுடையவன், ஷை குருவே கேதுவுடன் கூடியிருந்தால் இரண்டு மூன்று சந்ததி கள் முதலில் நாசமடையும்.

(14) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி சந்திரன் துலா ராசியி லிருந்து, ஷை சந்திரனுக்குக் கேந்திரத்தில் சனியிருந்து, சுபக்கிர கத்துடனும் கூடி யிருந்தால் ஷை சனி தெசை நல்லயோகமும், அரசாங்கமூலம் சுகமும், உத்தியோகத்தால் சுகமும், நீச்ச அரசர் களின் சமீபத்தில் சேவையும், புக்திக்கனுகுணமாக பலன்களும், ஷை சனியுடன் புதன் கூடியிருந்தால் அந்த புத தெசையில் பிர பல உத்தியோகமும், அனேக கிராமாதி பத்தியமும், பிரபுத்துவ மும் அடைவான்.

(15) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி சந்திரன் கன்னியா ராசி யில் வர்க்கோத்தமத்திலிருந்து, செவ்வாயால் பார்க்கப்பட்டு விப் பிரகாலத்தில் பிறந்த ஜாதகன் சிவ பக்த விப்பிரகாலத்தில் உடன் சகோதரனுடையவனுகப் பிறப்பான், கொஞ்ச சூதிதோஷபயமுண் டாகும்.

(16) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி சந்திரனுக்கு நான்கா மிடத்தில் சுக்கிரனிருந்து குருவுடன் கூடியிருந்தாலும், லக்கினத்தி லுள்ள குருவால் சுக்கிரன் பார்க்கப்பட்டாலும் ஜாதகனுக்கு நதிதீரத்திலுள்ள நகரத்தில் ஜனனம் சந்தேகமின்றி நேரிடும், ஜாத கன் பிறக்கும்போது ஜாதகனுடைய தாய் அற்ப பிரசவவேதனையே யுடையவள், ஷை சந்திரனைச் செவ்வாய் பார்த்தால் ஜாதகன் தாய் ஜாதகனுடைய பாலியத்தில் மரித்துவிடுவாள், ஜாதகன் தன் மூத்த சகோதரியால் வளர்க்கப்படுவான்.

(17) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி லக்கின பாவாதிபதி சர (மகர) ராசியிலிருந்து, புதனுடனும் கூடியிருந்து, எட்டாம் பாவா திபதி லக்கினத்தில் (ஸ்திரராசியில்) இருந்து ஹோரா லக்கின

மும் சரமானால் ஜாதகன் தீர்க்காயுளாக எழுபத்தைந்து வயதடைவான், அறுபத்தாறுவது வயதில் மிக்கபயமும், அபமிருத்து பயமும் அடைவான், அக்காலம் சாந்தி செய்தால் சுகமுடையவனாகி எழுபத்தைந்து வயதுவரை ஜீவித்திருப்பான்.

(18) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி சூரியன் ஆறுவது பாவத்தில் புதனுடன் கூடியிருந்து, ஒன்பதாம் பாவாதிபதி சனியின் ராசியிலிருந்தால் ஜாதகன் அற்பபிதுரு சுகமுடையவன்.

(19) ஜென்ம லக்கினம் சிம்மமாகி ஒன்பதாம் ஆரூடாதிபதி குரு ஆகி அவர் லக்கினபாவத்திலிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் சிவ பக்தியுடையவன், வைதீகாச்சாரமுடையவன், வேத சாஸ்திரமறிவான், சுய கர்மங்களை விடாதவன், மதசாஸ்திரங்களை விசேஷமாயறிவான், ஆஸ்திகன், சத்தியமுடையவன், சைவசாஸ்திரத்தை உபதேசிப்பவன், வேதாந்தத்தை விசேஷமாயறிவான், தர்ம சாஸ்திரத்தை நன்கு அறிவான், பிரபுத்துவாராவாக பிரசித்தி உடையவன், பிரபுக்களுக்குப் பிரீதியை வளரச் செய்வான், திரவிய சம்பாதனையில் சமர்த்தன், நியாயமான வழியில் சம்பாதிப்பவன், இரு தாரமுடையவன், இரு மனைவியர்களிடத்திலும் நற்புத்திரனையுடையவன், இவன் ஜாதகனுடைய இரண்டாந் தெசையில் மரணமடைவான்.

(20) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி பத்தாம் பாவாதிபதி ராகுவுடன் கூடியிருந்தால் ஜாதகன் தகப்பனுடைய உத்தர கிரியைகளைச் செய்யமாட்டான், பிறருடைய கர்மங்களைச் செய்வான். பேத மூத்த சகோதரனுடைய கர்மங்களைச் செய்வான், அதனால் தீட்டு முதலிய உடையவன்.

(21) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி மூன்றுமாதிபதியான சுக்கிரன் ஐந்தாம் பாவத்தில் கேதுவுடன் கூடியிருந்தால் ஜாதகன் பின் சகோதரனில்லாதவன், இரண்டு மூத்தசகோதரருடையவன்.

(22) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி சந்திரன் கன்னியா ராசியில் வர்க்கோத்தமத்திலிருந்து, புத திரிம்சாம்சத்தில் சகடயோகத்தில் பிறந்தவன் வெளுப்பு நிறமுடையவன், குணமுடையவன், சம தேகமுடையவன், தெளிந்த அறிவுடையவன், கல்வி அறிவுடைய விவேகி, சைவாகம புராணந் தெரிந்தவன், மந்திர சாஸ்திரத்தில் மேலான அறிவுடையவன், தேவ உத்சவங்கள், யாகங்கள் முதலியவற்றில் தீக்ஷைகளுடையவன், தேவியின் ஸ்தோத்திரத்தில் பிரீதியுடையவன், தேவி சக்தியின் அருளுடையவன், இத்துடன் லக்கின கேந்திரத்தில் குரு இருந்தால் சிவ பூஜையில் பிரியமுடையவன், சிவாலயங்களில் தர்மம் செய்பவன், உயர்ந்த தர்மம் செய்பவன், எப்போதும் ராஜ வசியமுடையவன், பிரபுக்களுக்குப்

பிரியம் உண்டு பண்ணுபவன், மத்திய வயதில் தர்ம சித்தியுடையவன், வயோதிக வயதிலும் அப்படியே, தேவி சக்தியின் அருளால் வயோதிக வயதில் நிதிலாபமடைவான், அதனால் தர்ம சித்தி அடைவான், ஜன்மதிசையில் பாலரோகமுண்டாகி ஜன்ம திசையின் முடிவில் தாய் மரணம் அடைவாள், இரண்டாந்திசையில் சுதந்திரமின்றி சில நாளிருப்பான், சுக்கிர புக்தியில் சாத்துவீக முள்ளவளை மணப்பான், கிராமாந்தர சஞ்சாரமுடையவன், விவாகத்திற்குப் பிறகு மனைவி வமிசத்தில் அரிஷ்டம் சம்பவிக்கும், அப்படியில்லாவிட்டால் புத்திர நாச மேற்படும். மூன்றாந்திசையில் சுயார்ஜிதமும், பிரசித்தியும் ஏற்படும், சுபா சுபங்களிரண்டும் சமமாக நடக்கும், சகோதரனால் கிலேசமும், சுகமும் உண்டாகும், மூன்றாந்திசையில் அற்ப சுகமடைவான், அன்றி துன்பமும், அற்ப சுகமும் ஏற்படும், வியாபாரப் பிரபு சினேக மேற்படும், நான்காந் திசையில் சிவாலய தர்மமும், சுயபுக்தியில் அல்லது புத புக்தியில் மனைவி நாசமும் உண்டாகும், சூத்திரப் பிரபுவின் சினேக முண்டாகும், இரண்டாந் தாரத்தினால் சுகமும், மனைவிமூலம் வியாகூலமும் உடையவன், சுக்கிர புக்தியில் அல்லது ராகு புக்தியில்எருக்கு விவாகமும் அடைவான், பிறகு மூன்றாவது விவாகமும் அடைவான், மூன்றும்மனைவி புகழுடையவள், மூன்றும் மனைவி வந்த பின்பு புதையல் தனமடைவான், ஐந்தாந்திசை பூராவும் உத்தரோத்தரமான பிரபலமுடையவனாகவும், புத்திரீ புத்திர சுகமுடையவனாகவும் ஆவான், இந்த ஜாதகன் ஆறாந் திசையாக வரும் கேது தெசையில் சுக்கிர புக்தியில் அல்லது சனி புக்தியில், ரிஷப ராசியின் திரிகோணத்தில் அல்லது மீனராசியின் திரிகோணத்தில் சூரியன் வரும்போது வியாழக்கிழமையில் மரணம் அடைவான். தேக முடிவில் நற்கெதியுமடைவான்.

(23) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி வர்க்கோத்தம லக்கினம் ஆனால் சந்திராரூடபதி புதனாகி அவர் சந்திரனுக்கு கேந்திரத்தில் அல்லது திரிகோணத்தில் இருந்தால் ஜாதகனுக்கு நதி தீரத்தில் நகரத்தில் அல்லது பெரிய கிராமத்தில் தேவாலயத்துடன் கூடிய கிழக்கு மேற்கு வீதியில் ஜனனம் நேரிடும், உத்தர பாகத்தில் ஜனித்தவனுக்கு தாய் பாட்டன் வீட்டில் ஜனனம் நேரிடும்.

(24) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி சந்திரன் லக்கின கேந்திரத்தில் இருந்தால் ஜாதகன் சூதிதோஷ பயமடைவான், ஜாதகன் தாய் பிரசவத்தில் அற்ப வேதனையடைவாள், இருபத்தேழு நாள் வரை பால தோஷம் இருந்து தகப்பனுடைய புண்ணியத்தால் விலகிவிடும்.

(25) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி லக்கின பாவாதிபதி மித்திர ராசியில் லக்கினத்திற்கு கேந்திர திரிகோணத்தில் இருந்து,

எட்டாம் பாவாதிபதி பதினோராவது பாவத்திலிருந்தால் ஜாதகன் பால தோஷ நிவாரணமடைவான், மத்தியாயுளாக அறுபத்தோறு வயதடைவான்.

(26) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி சூரியன் மித்திர ராசியாகிய தனுசு ராசியில் இருந்து ஒன்பதாம் பாவாதிபதியாகிய செவ்வாய் விருச்சிக ராசியில் கேந்திர பாவத்திலிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் அற்ப சுகமுடையவன், புதன் பாக்கியாரூடாதிபதியாகி ஷ சூரியனுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் சகோதரனுடையவன், விஷ்ணு பக்த மதாச்சாரமுடையவன், வியாபாரத்தால் சுகமுடையவன், தேவப் பிராம்மண பக்தி உடையவன், தன் பாலியத்தில் நல்ல பாக்கியமுடையவன், மத்திய வயதில் பிரசித்தி உடையவன், வயோதிகத்தில் பாக்கியமுடையவன், ஜாதகன் பிறந்த பிறகு அதிக சுகமுடையவன், ஜாதகனுடைய தகப்பனுடைய சகோதரன் நல்ல புத்திரனுடையவன், வயோதிக வயதில் ரோக பயமுடையவன், ஜாதகனுடைய இரண்டாந் திசையில் ஜாதகனுடைய தகப்பன் மரிப்பான்.

(27) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி நான்காம் பாவத்தில் செவ்வாய் நான்காம் பாவாதிபதியாகி இருந்தால் ஜாதகன் தாய் தீர்க்காயுளடைவாள், குணமுடையவள், வீட்டு வேலைகளில் சமர்த்தை, முன் ஜென்மாந்திர பாபத்தினால் தலைப்பிள்ளையை இழந்து விடுவாள், இவள் ஜாதகனுடைய ஐந்தாவது திசையில் மரிப்பாள்.

(28) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி மூன்றும் பாவத்தில் கேது இருந்து அந்த பாவாதிபதியும் கூடியிருந்தால், செவ்வாய் சுய க்ஷேத்திரத்தில் இருந்தாலும் அல்ப சகோதரனுடையவனுவான், பின் சகோதரனின்றி மூத்த சகோதரனுடையவன், அவன் நல்ல தர்மமறிவான், வியாபாரத்தில் சுகமுடையவன், சர்வ காரியங்களிலும் சமர்த்தன், அற்ப பூர்ண வயதில் மரிப்பான், ஜாதகனுடைய சகோதரி ஒருவள் ஊமையாயிருந்து அல்பாயுளாய் மரித்து விடுவாள்.

(29) ஜென்ம லக்கினம் சிம்மம் (வர்க்கோத்தமம்) ஆகி குரு திரிம்சாம்சத்தில் ருசகயோகத்தில் பிறந்தவன் கறுப்பு நிறமுடையவன், சமதேகமுடையவன், உஷ்ண தேகமுடையவன், ரூபலக்ஷணமுடையவன், தேவப் பிராம்மண பக்தி உடையவன், கல்வியுடையவன், அறிவுடையவன், எழுத்து எழுதுவதில் சமர்த்தன், ஜாதி வித்தையில் சமர்த்தன், வியாபாரத்தில் சதுரன், பற்பல வியாபார சுகமுடையவன், ரத்ன, தானிய, வஸ்திரம் முதலியவற்றால் வியாபாரமுடையவன், ஜன்மம் முதலிலிருந்து சௌக்கியமுடையவன்,

தீபாந்தர வஸ்துக்கள் பற்பலவற்றால் வியாபார சுகமுடையவன், முப்பது வயதிற்குமேல் பாக்கியமும், நாற்பதில் நற்கீர்த்தியுமுடையவன்.

(30) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி ஏழாம் பாவாதிபதி பன்னிரண்டாம் பாவத்திலிருந்து, சுக்கிரன் கேதுவுடன் கூடி சுயக்ஷேத்திரத்தில் மூன்றாம் பாவத்திலிருந்தால் ஜாதகன் இரு மனைவியருடையவன், இரு மனைவியரிடத்திலும் சந்ததி உடையவன், மூத்த மனைவி ஒரு புத்திரனும், இரண்டு பெண்களுமுடையவள், இரண்டாம் மனைவியும் இப்படியே யுடையவள், இருபத்தேழாவது வயதில் ஜாதகன் புத்திரனை யடைவான், முதலில் ஸ்திரீ பிரஜையும், பிறகு நாக சாந்தி, கோதானம், சேதுஸ்நாநம், பாலகிருஷ்ண தானம்முதலிய செய்துஷ்டி புத்திரரை அடைவான், சாந்தி செய்யாவிடில் ஜாதகனுக்குப் புத்திரர் மரித்து விடுவார்கள், ஜாதகன் இருபது வயதிற்கு மேலிருந்து பிரபல வியாபாரமடைவான், தேசாந்திரத்தில் தனமுடையவனாகிப் பிரசித்தனாவான், நான்காவது தெசையில் புத்திர உற்பத்தியும், வியாபார பிரபலமும், திசையின் பிற்பாதியில் சுகமும், ஐந்தாவது திசையில் உத்தரோத்தரமாக பிரபலமும், வெகு வியாபார லாபமும் அடைவான்.

(31) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி சூரியன் தனுசுராசியில் கமலாம்சத்தில் விப்பிர காலத்தில் இருந்தால் ஜாதகன் விப்பிர குலத்தில் சகோதரப் பிராதா உடையவனாகி, விஷ்ணு பக்த குலத்தில் ஜனனமாவான்.

(32) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி லக்கின பாவாதிபதியும் இரண்டாம் பாவாதிபதியும் கூடி ஐந்தாம் பாவத்திலிருந்தால் நதிப் பிராந்தியத்தில் குளமுள்ள சிறிய கிராமத்தில் கிழக்கு மேற்கு வீதியில் ஜனனமடைவான்.

(33) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி ராகு லக்கின கேந்திரத்தில் இருந்தால் ஜாதகன் தாய் பிரசவத்தில் விசேஷ வேதனையடைவாள், நான்காம் பாவத்தில் குரு இருந்தால் ஜாதகன் தாய் அற்ப வேதனையடைவாள்.

(34) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி லக்கின பாவத்தில் பாபி (ராகு) இருந்தால் ஜாதகன் தாய்க்குச் சூதிதோஷ பயமுண்டாகும், ஜாதகன் எட்டு வருஷம் வரையில் பாலாரிஷ்டம் அதிகமாயுடையவன், இதற்கே சரலக்கினத்தில் பிறந்தவனுக்கு ராகு லக்கினத்தில் இருந்தால் மேற்படி பால தோஷமுண்டாகாது, கேந்திர திரிகோணங்களிலிருந்தாலும் மேற்படி தோஷமுண்டாகாது.

(35) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி லக்கினாரூடாதிபதி தன் உச்ச ராசியிலும், எட்டாம் பாவாரூடாதிபதி உச்சமாகவும்

இருந்து, குரு கேந்திர திரிகோணத்தில் இருந்தால் ஜாதகன் தீர்க்காயுசுடையவனாக எழுபத்திநான்கு வயது அடைவான், அறுபத்திரண்டாம் வயதில் தேக பீதியடைவான், அபமிருத்து பயத்தால் பீதியடைவான், விஷ்ணு சகஸ்திர நாம ஜபம் செய்து சாந்திசெய்தால் அந்த சாந்தியால் சுகமடைவான், முதலில் இருபத்திநான்காவது, இருபத்தைந்தாவதுவயதிலும் இப்படியே பீதியுண்டாகும், அக்காலம் தனக்குச் சமமானவர் மரிப்பதால் நிவர்த்தியுண்டாகும்.

(36) ஜென்ம லக்கினம் சிம்மம் (கமலாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி மித்திரராசி தனுசிலும், ஒன்பதாம் பாவாதிபதியாகிய செவ்வாயும் உச்சத்திலிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் அற்ப சுகமுடையவன், மத்திம வயதுடையவன், விஷ்ணு பக்த மதத்தை அனுசரிப்பவன், க்ஷேத்திர சுகமுடையவன், குருவின் ராசியான தனுசு ராசியில் இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் தேவப் பிராம்மண பக்தியுடையவன், பற்பல கிராமங்களிலும், அரசாங்கத்திலும் பிரசித்தி உடையவன், ஞாதிகள் பிரபல முடையவன், அற்பவித்தை சுகமுடையவன், ஆச்சாரமும் அப்படியே, பரோபகாரமும் உடையவன், இவன் ஜாதகனுடைய மூன்றுவது தெசையில் மரணமடைவான்.

(37) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி குரு நான்காவது பாவத்திலிருந்து, அந்த பாவாதிபதி சுக்கிரனுடன் கூடி கேந்திரதிரிகோணங்கள் அல்லது உச்சத்திலிருந்தாலும் ஜாதகன்தாய் அற்ப சுகமுடையவள், உடன்பிறந்த சகோதரருடையவள், பாக்கிய வமிசத்தில் பிறந்தவள், பதிபக்தி உடையவள், இவள் ஜாதகனுடைய பத்து, அல்லது பன்னிரண்டு, அல்லது பதினான்காவது வயதில் மரித்து விடுவாள்.

(38) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி மூன்றும் பாவாதிபதியாகிய சுக்கிரன் ஆறுவது பாவத்தில் உச்சத்திலுள்ள செவ்வாயுடன் கூடியிருந்தாலும், சூரியன் கமலாம்சத்தில் தனுசுராசியில் இருந்தால் ஜாதகன் பின்சகோதரனில்லாதவனாவான், ஒரு மூத்த சகோதரனுடையவன், வேறு சிலர் இரண்டு சகோதரருடையவனென்று எண்ணுகின்றனர், சகோதரிகளு மிப்படியே.

(39) ஜென்ம லக்கினம் சிம்மம் நவாம்சம் மேஷம் ஆகி குஜ திரிம்சாம்சத்தில் கேசரீ யோகத்தில் பிறந்தவன் சம தேகமுடையவன், அற்ப வித்தை யுடையவன், எழுதுவதில் சமர்த்தன், பாக்கிய வமிசத்தில் பாக்கியமுள்ள காலத்தில் நிச்சயமாக ஜனனம் அடைபவனாவான், மேலும் லக்கின பாவாதிபதி குருவினுடைய ராசியில் இருந்தால் ஜாதகன் தேவப் பிராம்மண பக்தி உடையவன், விஷ்ணு பக்தியுடையவன், வைதீகாச்சாரமுடையவன், இதற்கு

மேலும் லக்கின கேந்திரத்தில் ராகு இருந்தால் ஜாதகன் அனுச்சாரமடைவான், பாலியத்தில் பிதுரார்ஜிதத்தால் சுகியாவான், ஸ்ரீமான், மனைவி வம்சத்தில் க்ஷேத்திர பாக்கியம் முதலானவை அடைந்து சுகியாவான், அதிருஷ்ட முடையவன், மேதாவீ, தர்மமறிந்தவன், இரண்டு கிராமங்களில் வசிப்பவன், பரோபகாரமுடையவன், தன் ஜனங்களிடம் அன்புடையவன், குணமுடையவன், ஆஸ்தீகன், அறிவாளி, வைதீகப் பிரியன், சீக்கிரத்தில் கோபிப்பவன், நிர்மலமானவன், ஜன்மம்முதல் பாக்கியமுடையவன், பதினாறு வயதுமுதல் பிரசித்தி உடையவன், இருபது வயதிற்குமேல் தன சம்பாதனமுடையவன், வெளியூரில் சுகமடைவான், ஐந்தாவது வயதில் பாலியத்தில் அக்ஷராப்பியாசமுடையவன், (பிராம்மண ஜென்மத்தில் பிறந்தவன்,) எட்டாவது வயதிலல்லது ஒன்பதாவது வயதில் உபநயனம் அடைவான்), பதினாறு, அல்லது பதினேழு, அல்லது இருபதாவது வயதில் விவாகமடைவான்.

(40) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி ஏழாம் பாவத்தில் கேது இருந்து, சுக்கிரன் செவ்வாயுடன் கூடியிருந்தால் ஜாதகன் இரு மனைவியடைவான், இரு மனைவியரும் அற்ப புத்திருடையவர்கள்.

(41) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி லக்கின பாவத்தில் ராகு இருந்து, அந்த ராகு திசை நான்காவது திசையாக வந்தால் ஜாதகன் மனைவி அந்த திசையில் சுயபுக்தியில் மரிப்பாள், ஜாதகன் இரண்டாவதாக தன் மனைவியை உறவின் வர்க்கத்திலேயே அடைவான், இரண்டாம் மனைவியிடம் முதலில் ஸ்திரீ பிரஜை பிறக்குமென்று சிலர் எண்ணுகின்றனர், சாந்தியால் இரண்டாம் மனைவியிடம் புத்திரனையடைவான், இந்த மனைவியால் ஜாதகன் பூமிசுகம், தனம் முதலிய சுகத்தையும், யோகத்தையுமடைவான்.

(42) ஜென்ம லக்கினம் சிம்மம் (சுமதியம்சம்) ஆகி லக்கினத்திற்கு நான்காம் பாவத்தில் ராகு இருந்து கும்ப ராசியிலுள்ள சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகன் வனப்பிராந்தியத்திலுள்ள கிரிப்பிராந்தியத்தில் மாதாமகன் வீட்டில் ஜனனமடைவான்.

(43) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி லக்கின பாவத்தில் குரு இருந்தால் ஜாதகன் வெகு பாலபாதைக்குள்ளானாலும், தாயின் புண்ணிய வசத்தால் சுகமடைவான்.

(44) ஜென்ம லக்கினம் சிம்மம் (சுமதியாம்ச உத்தரபாகம்) ஆகி லக்கின பாவாதிபதி சர (துலாராசியிலும்), எட்டாம் பாவாதிபதி ஸ்திர (சிம்ம) ராசியிலும், சந்திரன் சர (துலா) ராசியிலுமிருந்தால் ஜாதகன் மத்திய வயதாக அறுபத்தாறு வயது அடைவான், பூர்வ பாகத்தில் பிறந்தவனுக்கு அறுபத்தெட்டு வயதுண்டாகும்.

(45) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி சூரியன் நீச்ச ராசியில், நீச்ச நவாம்சத்திலிருந்து, ஒன்பதாம் பாவாதிபதியாகிய செவ்வாயும் நீச்ச ராசியிலிருந்து, ஒன்பதாம் பாவத்தைச் சனி பார்த்தால் லக்கினத்தில் குரு இருந்தாலும் கூட ஜாதகனுடைய தகப்பன் அற்ப சுகமுமில்லாதவன், மத்திய வயதுடையவன், சிவபக்த மதாச்சாரமுடையவன், வீரசைவமதத்தை அடைவான், வியாபாரத்தால் எப்போதும் சுகமுடையவன், பற்பல வியாபாரத்தால் ஜீவிப்பவன், தீபாந்தர வஸ்துக்களை வாங்குவதாலும், விற்பதாலும், சகோதரனும், மூத்த சகோதரனும் சுகமுடையவன்.

(46) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி சூரியனும் சர (துலா) ராசியிலிருந்து, செவ்வாயும் சர (கடக) ராசியிலிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் ஜன்மதேசத்தைவிட்டு வெளி தேசத்தில் தேசாந்திரத்தில் சுகமடைவான், இரு தாரமடைவான், இவன் ஜாதகன் பிறந்த வருஷத்தில் அல்லது பிறந்த மாதத்திலேயே அதிசாரத்தினால் மரித்துவிடுவான், ஜாதகன் தாயின் சகோதரனால் சுகமுடையவனாவான்.

(47) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி பத்தாம் பாவாதிபதி நான்காவது பாவத்தில் இருந்து ராகுவுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய பாட்டன் முதலோருடைய பாபத்தினால் ஜாதகனுடைய தகப்பன் அற்பாயுளாக மரித்து விடுவான், மேலும் ஜாதகனால் ஜாதகனுடைய தகப்பன் உத்தரகிரியைகளை அடையமாட்டான், ஜாதகனுடைய சிறிய தகப்பன் பிரசித்தமடைவான், வியாபாரத்தில் வல்லவன், புத்திரீ புத்திர சுகமுடையவன், ஜாதகனுடைய புத்திரீ புத்திரர்களுக்கு ஜலகண்ட முண்டாகும்.

(48) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி நான்காம் பாவத்தில் சுக்கிரன் இருந்து, சந்திரன் துலாராசியில் தனுசு நவாம்சத்திலிருந்து, சுபக்கிரகத்துடன் கூடியிருந்தால் ஜாதகன் தாய் சுகமுடையவள், குணமுடையவள், புத்திரீ புத்திர சுகமுடையவளாக யிருப்பினும் முன்ஜென்ம பாபம் காரணமாக விதவையாகித் துக்கிப்பவளாவாள், ஜாதகனுடைய மூன்றுவதுதிசை சுயபுக்தியில் மரிப்பாள்.

(49) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி புதத் திரிம்சாம்சத்தில் கர்த்தரீயோக ஜாதகத்தில் பிறந்தவன் வெளுப்பு நிறமுடையவன், அறிவாளி, லக்கின கேந்திரத்தில் குரு இருந்தால் ஜாதகன் ரூப லக்ஷண முடையவன், தெளிவான முகமுங் கண்களுமுடையவன், கல்வியுடையவன், எழுதுவதில் சமர்த்தன், வியாபாரத்தில் நிபுணன், விசேஷ சிவபக்தி யுடையவன், சிவ விரதமுமுடையவன், லோப குணமுடையவனாயினும் தேவையானவற்றிற்குத் தகுந்தபடி செலவு செய்பவன், திரவிய சம்பாதனையில் அதிக சமர்த்தன்,

ஜன்மம்முதல் பாக்கியமுடையவன், தாயாதிப் பிரபலமுடையவன், கர்த்தரீயோகம் காரணமாக அடிக்கடி தாயாதி சத்துரு கலக முடையவன், தெளிவாகவும், உண்மையாகவும், அறிவுடனும் பேசு பவன், சைவ சாஸ்திரங்களில் பிரபலமுடையவன், சைவ ஆராத னையில் பிரீதியுடையவன்.

(50) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி கும்பராசியில் ஏழாம் பாவாதிபதி மனைவி நாசமடையும் பாகத்திலிருந்து செவ்வாயால் பார்க்கப்பட்டு, சுக்கிரன் ராகுவுடன் கூடியிருந்தால் ஜாதகன் மனைவிகள் மரித்து விடுவார்கள், மூன்று மனைவிகளை நாசம் செய் யும் யோகமுடையவன், நான்காவது மனைவியுடன் சுகியாயிருப் பான், ஜாதகனுடைய முதல் மனைவி பிரசவத்தில் மரிப்பாள், ஜாத கனுடைய இருபத்தைந்தாவது வயதில் முதல் மனைவி புத்திர பிரசவத்தில் மரித்தபிறகு, இரண்டாம் மனைவி ஒருபுத்திரியைப்பிர சவித்துப் பிறகு துர்மாணமாக மரித்துவிடுவாள், முப்பத்து மூன்று வது வயதில் இரண்டாவது மனைவி மரித்தபின்பு உடனே சீக்கி ரமே மூன்றுவது மனைவி அந்த பாபம் காரணமாக மரித்துவிடுவாள், முப்பத்தாறுவது வயதில் அற்ப சந்தானமுடைய மனைவியை நான்காம் மனைவியாக மணப்பான், இவள் அற்ப சந்தானமாக இரண்டு புத்திரரும், இரண்டு புத்திரியுமுடையவளாக ஆவாள்

(51) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி நான்காம் பாவத்தில் ராகு இருந்து, லக்கின பாவத்தில் குரு இருந்து, ஒன்பதாம் பாவத்தையும், ஷை குருவையும் சனி பார்த்தால் ஜாதகன் சந்தா னத் தடையுடையவனுவான், அந்த தோஷம் சாந்தியாக சேதுஸ் நானம், நாகசாந்தி பாலமுகுந்த தானம் முதலியன செய்தால் மேலுள்ளபடி இரு புத்திரரும், இரு புத்திரிகளும் தீர்க்காயுளுடை யவராவர்.

(52) ஜென்ம லக்கினம் சிம்மம் (சாங்கரியாம்சம்) ஆகி லக் கின பாவாதிபதி சாங்கரியாம்சத்தில் சூத்திர காலத்தில் கடக ராசி யிலிருந்தால் ஜாதகன் சூத்திர குலத்தில் நதிப்பிராந்தியத்தில் சகோதரனுடையவனுக சிவ பக்த குலத்தில் கியாதியுள்ள பெரிய கிராமத்தில் ஜனனமடைவான்.

(53) ஜென்ம லக்கினம் சிம்மம் (சாங்கரியாம்சம் பூர்வபாகம்) ஆகி லக்கின பாவத்தில் குரு இருந்தாலும், லக்கின பாவத்தைக் குரு பார்த்தாலும் ஜாதகனுடைய தாய்க்குப் பிரசவ காலத்தில் வேதனை அற்பமாயிருக்கும் ஆயினும் ஆறு வருஷம்வரையில் ஜாதக னுக்கு சூதிதோஷ பயமுண்டாகும்.

(54) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி லக்கின பாவத்திற் கைந் தாவது பாவத்தில் குருவும், இரண்டாவது பாவத்தில் சுக்கிரனு

மிருந்தால், சனி ரிஷபராசியில் நாடி அம்ச மைத்திராம்சத்தி லிருந்தாலும் ஜாதகன் பாலதோஷங்கள் விலகிச் சுகமடைவான்.

(55) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி லக்கின பாவாதிபதி சர (கடக) ராசியிலிருந்து மீனும்சத்தில் இருந்தால் ஜாதகன் ஆயுள் விருத்தியடைவான், எழுபத்தைந்து வயது தீர்க்காயுளாக அடைவான், ஐம்பத்தொன்பதல்லது அறுபதாம் வயதில் தேக பீடையடைவான், அக்காலம் சாந்தி செய்தால் சுகமுடையவனுவான், இதற்கு முன்பு நாற்பத்தேழாம் வயதிலும் சாந்திசெய்யவேண்டும்.

(56) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி சூரியன் ராகுவுடன் கூடி கடக ராசியிலிருந்து சனியால் ஷை சூரியன் பார்க்கப்பட்டால் ஜாதகனுடைய தகப்பன் அற்ப சுகமுடையவன், சிவ பக்தி மதாச்சாரமுடையவன், நூல்மூலமும், துணி நெய்வதாலும், வியாபாரத்தாலும் சுகமுடையவன், தேவப் பிராம்மண பக்தியுடையவன், சுய ஜனங்களில் பிரசித்தியுடையவன், மிதமான பாக்கியமுடையவன், மத்திய வயதில் பிரசித்தியுடையவன், தெய்வானுக்கிரகம் காரணமாக புத்திரீ புத்திர சுகமுடையவன், பின் வயதில் சுகமுடையவனுகி ஜாதகனுடைய பதினேழல்லது பதினெட்டாம் வயதில் மரிப்பான்.

(57) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி சந்திரன் கேந்திர திரிகோணங்களிலிருந்தாலும், கேதுவுடன் கூடி மகரராசியிலிருந்தாலும் ஜாதகன் தாய் தீர்க்காயுசும், புத்திர புத்திரீ சுகமும், புத்திரனுல் அதிக சுகமும் உடையவளாகி ஜாதகனுடைய நான்காந் திசையில் மரிப்பாள்.

(58) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி செவ்வாய்க்கு மூன்றுமிடத்தில் குரு தனுசு ராசியிலிருந்து, மேற்படி செவ்வாய் லாபாம்சமாகிய மிதுன நவாம்சத்திலிருந்தால் லக்கினத்திற்கு மூன்றும் பாவத்தில் செவ்வாயிருந்தாலும் ஜாதகன் இளையசகோதரனில்லாதவன். இரண்டு மூத்த சகோதரரும், சகோதரிகள் இரண்டு பேர்களுமுடையவன், வேறுசிலர் சகோதரிகள் மூன்று பேர்களிருப்பார்கள் என்றெண்ணுகின்றனர்.

(59) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி சகடயோகத்தில் சுக்கிர திரிம்சாம்சத்தில் பிறந்தவன் வெளுப்பு நிறமும், சம தேகமுமுடையவன், (சூத்திர ஜென்மம்,) நல்ல மேதாவி, கல்வி அறிவுடையவன், விவேகி, எழுத்து வேலையிலும், ஜாதிவித்தையிலும் சமர்த்தன், தேவப் பிராம்மண விசுவாசி, சிவ பக்த மதத்தை அனுசரிப்பவன், பகுத்தறிவுடையவன், அவசியமுள்ளவைகளைதெரிந்துகொள்பவன், எப்போதும் வியாபாரத்தால் சுகமுடையவன், வஸ்தி

ரம் செய்து ஜீவிப்பவன், வியாபாரத்தில் சதுரன், சமர்த்தன், தேவையறிந்து அளவுடன் தக்கபடி நிதானமாக சிலவுகளை செய்ப வன், பற்றுதலுடையவன், சத்தியம் தர்மம் இவற்றையறிந்தவன், உபாயந்தெரிந்தவன், பிரபு வசியமுடையவன், வீட்டு வேலைகளில் சுதந்திரமுடையவன், சகோதரப் பிரபலமுடையவன், மூத்த சகோதரனுக்கு வயப்பட்டவன், ஜாதகனுக்கு மூத்தவர்களில் எல் லோருக்கும் மூத்தவன் பொருமையுள்ளவன், மற்றவனும் சமர்த் தனே, பிதுரார்ஜிதம் அற்பமுடையவன், சுயார்ஜிதமுடையவன், தன் பாலியத்தில் ஜாதகன் அற்ப சுகமுடையவன், மத்திய வயதில் பிரசித்தியுடையவன்.

(60) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி லக்கின பாவாதிபதி ராகு வுடன் கூடில் ஜாதகன் துராலோசனை செய்பவன், பதினாறு வய திற்கு மேல் பிரசித்தியுடையவன், இருபது வயதிற்குமேல் தன சம் பாதனையும், இருபதில் நல்ல நிபுணத்துவமும், சுயப்பிரபலமும், ஜன வசியமும் உடையவன், வியாபாரத்தில் வல்லவனும், கிரய விக் கிரயங்களில் சமர்த்தனும், முப்பது வயதிற்குமேல் பிரசித்தியும், நாற்பது வயதிற்குமேல் பிரபல வியாபாரமும், ஆயுள்வரை சுகமும் உடையவனுவான்.

(61) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி சந்திரனுக்கு ஐந்தா மிடத்தில் சனியிருந்தாலும், குருவுக்கு ஐந்தாமிடத்தில் சனியிருந் தாலும், குரு லக்கினத்திற் கைந்தாமிடத்திலிருந்தாலும், ஷை குரு வந்தியாம்சத்தையடைந்திருந்தால் ஜாதகனுக்கு காலங்கடந்து புத் திரர் நாகசாந்தியும், சிவலிங்க தானமும் செய்த பின்பு முதலில் பெண்குழந்தையும், பிறகு ஆண்குழந்தையும் பிறக்கும், பால கிருஷ்ண பிரதிமை தானம்செய்யின் முப்பது வயதிற்குமேல் முப் பத்தாறுவது வயதில் புத்திர சந்ததி உண்டாகும்.

(62) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி சனி மித்திர க்ஷேத்திரத் தில் கேந்திர திரிகோண ராசியில் (ரிஷபத்தில்) இருந்து வலிவுடை யவராகி அவருடைய திசை வந்தால் அந்த சனி திசையில் ஜாத கன் விசேஷ பாக்கியமுடையவனுவான், உத்தரோத்தரமான பிர பல முடையவன் ஆவான்.

(63) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி பாக்கியாம்சத்தில் ரிஷப ராசியில் குருவுடன் கூடி சுக்கிரனிருக்தால் ஜாதகன் ராஜ வம்சத் தில், வனமத்தியில் உள்ள பட்டிணத்தில் மிக்க புகழ்வாய்ந்த பட்டி ணத்தில் பாக்கியமுள்ள காலத்தில் சகோதரனில்லாதவனுக ஜன னம் அடைந்து, ராஜயோகமும் அடைவான்.

(64) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி (நாடியம்சம் பங்கஜாம் சம்) பூர்வபாகத்தில் பிறந்தவனுக்கு லக்கின பாவத்தில் செவ்வா

யும், சந்திரன் நாடியம்சத்தின் நான்காங் காலத்திலுமிருந்தால் சிவ பக்தகுலத்தில் சீமந்த புத்திரனாக பாக்கிய வமிசத்தில் ஜனனமும், கீர்த்தியும் உண்டாகும்.

(65) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி லக்கின பாவாதிபதி கேந்திரத்திலும், நான்காம் பாவாதிபதி பதினோராம் பாவத்தில் அல்லது கேந்திர பாவத்திலும் இருந்தால் ஜாதகன் நதிப் பிராந்திய சமீப பெரியகிராமத்தில் அல்லது பட்டிணத்தில் பிரசித்த சிவாலய விஷ்ணு ஆலயமுள்ள இடத்தில் கிழக்கு மேற்கு வீதியில் வடக்குச் சரகத்தில் தகப்பன் வீட்டில் ஜனனமுமடைவான்.

(66) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி ரிஷப ராசியில் சூரியன் புதனுடன் கூடியிருந்து மேற்படி சூரியன் சத்துரு அம்சமான மகர நவாம்சத்திலிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் சௌக்கியக் குறைவுடையவனாகி ஜாதகன் ஒன்பது மாதத்திய கெற்பத்திலிருக்கும்போதே ஜாதகனுடைய தகப்பனுக்கு மரணமுண்டாகும், ஷை புதன் கும்ப நவாம்சத்திலிருந்தால் ஜாதகனுடைய அம்மான் பிரபலமும், பாக்கிய விருத்தியும் அடைவான்.

(67) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி மீனராசியில் சுக்கிரன் பாக்கியாம்சமாகிய விருச்சிகாம்சத்தில் இருந்தால் ஜாதகனுக்குப் பலவந்தமாக விவாகம் நடக்கும் ஜாதகன் ஒரே தாரமடைவான்.

(68) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி ஐந்தாம் பாவாதிபதி ஆறு எழுக்குடையவருடன் கூடி ஒன்பதாம் பாவத்தில் இருந்தால் ஜாதகன் புத்திர சந்தான விரோதமுள்ளவன், பிதுரு சாபதோஷமுடையவன், அந்த வழியில் ஜாதகனுடைய பாட்டன், மூன்றும் பாட்டன் இவர்கள் அக்கியானிகளாகி துர்மரணத்தை அடைந்து, கர்மஹீனர்களான தோஷமுற்று பிதுருலோகம் வாசமின்றி, பூலோகத்தில் ஜனனமுமின்றி, அவர்களிட்ட சாபம் காரணமாக ஜாதகனுக்கு மேற்படி தோஷமுண்டாகும், அந்த தோஷ நிவர்த்திக்காக நாராயண பலிசெய்தால் மேற்படி தோஷம் நீங்கி ஜாதகனுக்குப் புத்திர சந்தானமுண்டாகும், மேலும் ஷை சனி சிம்மலக்கின ஜாதக விஷயத்தில் ஷஷ்டாதிபத்திய தோஷத்துடன் மேஷ ராசியிலிருந்தால் நீச்ச தோஷமும் ஏற்படும், அதற்காக மூன்று விரற்கடைப்பொன்னால் சந்தான கோபாலப் பிரதிமைசெய்து கிருஷ்ண யாமள கல்பத்தில் உள்ள விதிப்படி மூன்று விரற்கடைப்பொன்னை ஜீவத் புத்திர சந்தானமுடைய பிராம்மணனுக்கு தானம் செய்து பிராம்மண போஜனமும் செய்வித்தால் ஒரு புத்திரனும், இரண்டு புத்திரிகளும் உண்டாவார்கள்.

(69) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி சூரியன் கும்ப ராசியில் வர்க்கோத்தமாம்சத்தில் இருந்து சந்திரன் நான்காங் காலத்தில்

இருந்தால் ஜாதகனுக்கு பாக்கியவமிசத்தில் மூன்றுவது கெற்பத்தில் ஜனனம் நேரிடும்.

(70) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி சூரியன் ஏழாம் பாவத்தில் கேந்திரத்தில் இருந்து, நான்காவது பாவாதிபதி நீச்ச ராசியில் இருந்தால் ஜாதகனுக்கு வனப்பிராந்தியத்தில் பெரிய கிராமத்தில் பிரசித்த சிவாலயம் விஷ்ணு ஆலயமுள்ள இடத்தில் தகப்பன் வீட்டில் ஜனனமும், உத்தரபாகத்தில் தாய்வீட்டில் ஜனனமும்நேரிடும்.

(71) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி ஒன்பதாம் பாவாதிபதி பன்னிரண்டாம் பாவத்தில் நீச்ச ராசியிலிருந்து சூரியன் கேந்திரத்தில் வர்க்கோத்தமாம்சத்தில் இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் மத்திம வயதுடையவன், சுகமுடையவன், ஒரேபாஷையில் சமர்த்தன் வியாபாரத்தில் சமர்த்தன், நூல்களில்வாதிப்பதில் சமர்த்தன், பிதுரார்ஜித கிரக க்ஷேத்திர லாபமுடையவன், அதனுல் ஜீவனமுடையவன், ஒன்றிரண்டுமூன்றுவித நூல் வியாபாரமும், வஸ்திர வியாபாரமும், சுகமும், புத்திர சந்தானயோகமும், இரண்டு தார யோகமும் உடையவன், முதல் மனைவி ஒரு புத்திரனைப் பிரசவித்து சுமங்கலியாய் மரிப்பாள், பிறகு இரண்டாம் மனைவியை மணந்து அவளுக்கு ஒரு புத்திரி பிறந்து, வேறு புத்திரப் பிரசவத்தின் பிறகு ஆராவது மாதத்தில் ஜாதகனுடைய தகப்பன் மரிப்பான், ஜாதகன் பிறகு தாயாலும், தாய்ப்பாட்டி தாய்ப்பாட்டனிவர்களாலும் சுகமடைந்து, தாய்ப் பாட்டியாலும், பிதுரார்ஜித ஆஸ்திமூலமும் சௌக்கியமடைவான், ஜாதகனுடைய தகப்பன் சகோதர சகோதரி உடையவன், மூன்று நான்கல்லது ஐந்துசகோதரருடையவன், இவர்கள் வம்சவிருத்தியின்றி பாலியத்தில் அல்லது யவ்வனத்தில் மரிப்பார்கள், ஜாதகனுடைய தகப்பனின் சகோதரிகள் நால்வரிருப்பர், அவர்களில் இரண்டுபேர் வமிசவிருத்தி உடையவர்கள், இருவர் வமிசவிருத்தியின்றி மரிப்பார்கள்.

(72) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி நான்காம் பாவாதிபதி பன்னிரண்டாம் பாவத்தில் இருந்து, சந்திரன் ஒன்பதாம் பாவத்திலிருந்தால் ஜாதகன் தாய் தீர்க்க வயதுடையவள், சாத்வீகம், சுத்தம், பதிபக்தி, வமிசவிருத்தி, புண்ணியம், புத்திரீ புத்திர பிரசவம் முதலியன உடையவள், ஒரு புத்திரனும் ஒரு கர்ப்பமும் நஷ்டமுடையவள், பிறகு ஒரு சுகமுடைய புத்திரனை அதாவது ஜாதகனை உடையவள், இவள் ஜாதகனுடைய நான்காந் தெசையில் மரிப்பாள்.

(73) ஜென்ம லக்கினம் சிம்மம் (தேவலோகாம்சம்) ஆகி லக்கின பாவாதி தன் உச்ச ராசியில் தேவலோகாம்சத்தில் (சூரியன்) இருந்தால் ஜாதகன் தேவ நிர்மாணம் செய்வான்.

(74) ஜென்ம லக்கினம் சிம்மம் (மஞ்சுளாம்சம்) ஆகி சூரியன் விருச்சிக ராசியில் வர்க்கோத்தமத்தில் இருந்தால் சூரிய காலத்தில் பிறந்தவனுக்கு சிவ பக்த குலத்தில் சீமந்த புத்திரனாக அல்லது நான்காவது கெற்பத்தில் ஜனனம் நேரிடும்.

(75) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி லக்கினாதிபதி விருச்சிக ராசியில் வர்க்கோத்தமத்திலும், நான்காம் பாவாதிபதி ஐந்தாம் பாவத்திலுமிருந்தால் ஜாதகன் நதிப்பிராந்தியத்திலுள்ள புண்ணிய க்ஷேத்திரத்தில் கிழக்கு மேற்கு வீதியில் தெற்கிலுள்ள வாடையில் சிவாலய சமீபத்தில் ஜனனமும், உத்தர பாகத்தில் பிறந்தவனுக்கு பட்டிணப் பிராந்தியத்தில் நதி சமீபத்தில் தாய் வீட்டில் ஜனனமும் நேரிடும்.

(76) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி சூரியன் வர்க்கோத்தமத்தில் இருந்து சந்திரனுடன் நான்காம் பாவாதிபதி கூடி தனுசில் இருந்தால் ஜாதகன் பிறக்கும்போது ஜாதகனுடைய தாய்க்குப் பிரசவவேதனை அற்பமாயிருக்கும், மேற்படி சந்திரனைச் சனிபார்த்தால் சூதிதோஷ பயமும், குரு பார்த்தால் சீக்கிரம் ஆரோக்கியமுமுண்டாகும்.

(77) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி சூரியன் விருச்சிக ராசியில் வர்க்கோத்தமத்தில் இருந்து ஒன்பதாம் பாவாதிபதி ஐந்தாம் பாவத்தில் இருந்து குருவால் பார்க்கப்பட்டு, ஒன்பதாம் பாவம் சனியாலும் சுக்கிரனாலும் பார்க்கப்பட்டால் ஜாதகனுடைய தகப்பன் தீர்க்காயுசும், விசேஷ பக்தியுமுடையவன், தேவிபக்தியால் சுகமும், தேவிஸ்தோத்திரப் பிரியனும், தேவப் பிராம்மண விசுவாசியுமாவான், கல்வி அறிவுடைய விவேகி, தன் ஜாதிக்குறிய வித்தையுடையவன், அதனால் சுகமுடையவன், பாலியத்தில் அல்ப சுகமும், மத்திய வயதில் நல்ல யோகமும் உடையவன், புத்திர உற்பத்திக்குப்பிறகு பாக்கியமுடையவன், ஒவ்வொரு நாளும் வளர்பிறைச் சந்திரனைப்போல் பாக்கிய விருத்தி உடையவன், வியாபாரத்தில் நாலுந்தெரிந்தவன், வாச்சாலகன், வஸ்திர வியாபார ஜீவனமுடையவன், இரண்டாயிரம் பொன் ஆஸ்தியுடையவன், புத்திரப் பிரபலமுடையவன், உடன்பிறந்த சகோதரருடையவன், சகோதரிகளுமுடையவன், ஒரு மூத்த சகோதரமுடையவன், அவன் புத்திர சந்தான ஹீனன், ஒரு புத்திரியுடையவன், அப்புத்திரியும் சில நாளில் மரித்து விடுவாள், பிறகு அவனும் மரித்துவிடுவான், ஜாதகனுடைய சிறிய தகப்பன்கள் வித்தை, புத்தி, விவேகம் முதலிய உடையவர்கள், வியாபார நிபுணர்கள், இவர்களில் ஒருவன் சிறியவன் வஸ்திர வியாபார ஜீவனமுடையவன், ஒரு புத்திரனுடையவன், அவன் சேது யாத்திரை செய்வான், வழியில் மத்தியில் விஷ

பேதியால் மரிப்பான், அவன் புத்திரனொருவன் பித்த பாண்டு ரோகத்தால் மரிப்பான், அவனுக்கு மூத்தவன் ஜாதகனுடைய சிற்றப்பன் இரு மனைவியருடையவன், புத்திர சந்தானமுடையவன், ஜாதகனுடைய தகப்பனின் சகோதரி அற்ப சுகமுடையவள், ஜாதகனுடைய தகப்பன் பிதுரார்ஜித சுயார்ஜித ஆஸ்திகளுடையவன், தனதான்னிய விருத்தியுடையவன், இவன் ஜாதகனுடைய ஐந்தாந் திசையில் மரிப்பான்.

(78) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி நான்காம் பாவாதிபதி ஐந்தாம் பாவத்திலிருந்து, அங்கு சந்திரனும் கூடி குருவால் இவர்கள் பார்க்கப்பட்டால் ஜாதகன் தாய் தீர்க்க வயதும், உடன்பிறந்த சகோதரருமுடையவள், ஜாதகனுடைய தாயின் சகோதரன் புத்திர சந்தான யோகமுடையவன், ஜாதகன் தாய் சாத்துவீகம், சுத்தம், பதிபக்தி, வமிசவிருத்தி முதலியன உடையவள், பாக்கிய வம்சத்தில் பிறந்தவள், ஜாதகன் தாயால் நல்ல யோகமுடையவன், ஜாதகன் தாய் உறவினர்களுக்குப் பிரியமானதைச் செய்பவள், இவள் ஜாதகனுடைய ஆறுந் தாராதிபதி திசையில் மரிப்பாள்.

(79) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி மூன்றும் பாவாதிபதி சுய க்ஷேத்திரத்தில் சனியுடன் கூடியிருந்து குருவால் பார்க்கப் பட்டாலும், குருவுடன் கூடியிருந்தாலும் ஜாதகன்தாய் அனேக கெற்பம் பிரசவித்தாலும் அனேகமும் மரித்துவிடும், ஜாதகனுக்கு இளைய இரண்டு சகோதரர்கள் நிலைப்பார்கள், அவர்களில் மத்திய சகோதரன் கல்வி அறிவுடையவன், கறுப்பு நிறமுடையவன், திடகாத்திர சொரூபமுடையவன், சிவ பக்தி உடையவன், கொஞ்சம் கண்ணில் அடையாளமுடையவன், வாச்சாலகன், மித்திர வஞ்சனையுடையவன், லோபகுணமுடையவன், திரவிய சம்பாதனையில் சமர்த்தன், பற்பல வழிகளிலும் தனம் சம்பாதிப்பான், பற்பல கிராமங்களிலும் பிரசித்தி உடையவன், மூவாயிரம் தனம் சம்பாதிப்பவன், புத்திர சந்தான தோஷமுடையவன், காலங்கடந்து சந்தானமடைவான், அவன் தனக்கு மூத்த, இளைய சகோதரரிடம் அன்புடையவன், அவர்களால் சுகமடைவான், அவனுக்கு இளையவன் கல்வியறிவுடையவன், ஒரே தாரமடைவான், புத்திர சந்தானமுடையவன், வியாபார நிபுணன், வாச்சாலகன், வஸ்திர வியாபாரமுடையவன், தன ரத்னலாபமுடையவன், சொர்ண லாபமுடையவன், எல்லோரிடமும் அன்பும் தயையுமுடையவன், தேவப் பிராம்மண பக்தியுடையவன், விசேஷ சிவபக்தி யுடையவன், குரு பக்தி, லக்ஷ்மீ பக்தியுடையவன், இரண்டாயிரம் தனம் சம்பாதிப்பவன், போகமுடையவன், கீர்த்தியுடையவன், இரண்டுசகோதரிகளுமுடையவன், அச்சகோதரிகள் புத்திரசந்தான முடையவர்கள்.

(80) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி சூரியன் வர்க்கோத்தமாம்சத்தில் விருச்சிக ராசியில் இருந்து குரு திரிம்சாம்சத்தில்

பிறந்தவன் தேகம் கறுப்பு நிறமுடையவன், ரூப லக்ஷணமுடையவன், கல்வி அறிவுடையவன், விவேகமுடையவன், சாத்வீகமுடையவன், அறிவாளி, யோகமுடையவன், சத்தியவந்தன், ஜிதேந்திரியன், வாததேகி, கொஞ்சம் அதிகபித்தமுடையவன், இளையசகோதரனால் சுகமுடையவன், சுயப் பிரபலமுடையவன், பிதுரார்ஜித சம்பத்துடையவன், சுயார்ஜித யோகமுடையவன், வியாபார நிபுணன், வாச்சாலகன், தர்மநெறியுடையவன், நல்ல அறிவாளி, பிறருக்கு இங்கிதம் சொல்லவறிந்தவன், மேதாவி, இருமனைவி யோகமுடையவன், ஐந்தாம் வயதில் அல்லது ஆரும் வயதில் அக்ஷராப்பியாசமுடையவன், ஜன்ம பூமிக்குமேற்கில் சிவாலய சமீபத்தில் ஜன்ம கிராமத்தில் விவாகம் அடைவான், மனைவி ரூபலக்ஷணமுடையவள், பதிபக்தி உடையவள், அதிருஷ்ட முடையவள், கொஞ்சகாலம்பொருத்து ஒரு புத்திரியைப் பிரசவிப்பாள், அப்புத்திரி மரித்துவிடும், அப்போது ஜாதகன் மனைவி தேகரோகமடைவாள், அதனால் ஜாதகன் அவளை விட்டுவிடுவான், அவள் சுய கிராமத்திலேயே வசிப்பாள், ஜாதகன் இரண்டாம் மனைவியை இருபத்தைந்தாம் வயதில் அல்லது முப்பதாம் வயதில் மணப்பான், ஜாதகனுக்குத் தன்னூருக்கு வடக்கில் சமீபத்திலேயே ஈசானியதிசையில் விவாகமடைவான், அவள் ரூபலக்ஷணமும், பதிபக்தியும், வம்சவிருத்தியும், பாக்கிய விருத்தியுமுடையவள், உடன்பிறந்தசகோதரியுடன் சகோதரருமுடையவள், அவன் புத்திரபிரதிபந்த முடையவன், புத்திரர் ஐந்துபேர் பிறந்து மரித்துவிடுவார்கள்.

(81) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி ஐந்தாம் பாவத்தில் செவ்வாய் சந்திரனுடன் கூடியிருந்து, புத்திரஸ்தானம் சனி குரு இவர்களால் பார்க்கப்பட்டால், சனியால் பார்க்கப்படுவதால் புத்திர தோஷம் உண்டாகி புத்திர மரணமும், குரு திருஷ்டியால் புத்திர விருத்தியுமுண்டாகும், அதற்குச் சாந்தியாக வெள்ளியால் பத்து ரூபாயிடையில் பாலமுகுந்தப் பிரதிமைசெய்து கிருஷ்ணயாமள பிரகாரம் பூஜைசெய்து, அதே அளவு தக்ஷிணையாகவும் ஜோதிஷனுக்கு பிராம்மணனுக்குத் தானம் செய்யவேண்டும், மேலும் சனிப் பிரீதிக்காக நாராயண பலியும், செவ்வாயிருப்பதற்காக சுப்பிரமணிய விரதமும் செய்யவேண்டும், அப்படிச்செய்தால் இரண்டு புத்திரரும், இரண்டு புத்திரிகளும் தீர்க்காயுசுடனிருப்பார்கள், இந்த சாந்திகளைச்செய்தால் முப்பது வயதுக்குமேல் சுகமும், வியாபாரத்தால் சுகமும், நாற்பதாம் வயதில் நல்ல யோகமும் உண்டாகும், கொஞ்சம் * ரேகாயோக முண்டாகும், புத்திர சந்தான

குறிப்பு:— * இந்த ரேகாயோகம் என்ன வென்பதை நமது ஜாதக கணிதம் மூன்றும் பாவம் என்னும் ஜாதக ராஜ மனோரஞ்சிதம் என்னும் புத்தகத்தில் பார்க்கவும்.

யோகமும், வியாபாரதனமும், வீடு, க்ஷேத்திர விருத்தியும், பசு, எருமை விருத்தியும் உண்டாகும், ஆயுள்வரை சுகமடைவான்.

(82) ஜென்ம லக்கினம் சிம்மம் (லக்ஷ்மீசாம்சம்) ஆகி சுக்கிரன் வர்க்கோத்தமம் ஆகி கும்ப ராசியி லிருந்தால் சந்திரன் விப்பிரகாலத்தில் கன்னியா ராசியிலிருக்கும்போது பிறந்தவன் நான்காவது கெற்பத்தில் ஜனனமடைவான், ஒரு மூத்த சகோதரனும், இரண்டு மூத்த சகோதரிகளுமுடையவன், ஒரு சகோதரி இவர்களில் மரணமடைவாள், ஜாதகனுக்கு மூன்று இளைய சகோதரரும், மூன்று இளைய சகோதரிகளுமுண்டாவார்கள், இவர்களிலும் ஒரு சகோதரனும், இரண்டு சகோதரிகளும் நஷ்டமடைவார்கள், மற்றவர்கள் சுகமுடையவர்களாவார்கள்.

(83) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி ஷ அம்ச பூர்வபாகத்தில் ஜனனமாகில் லக்கினபாவாதிபதி கேந்திரராசியிலும், நான்காம் பாவாதிபதி பதினோராம் பாவத்திலுமிருந்தால் ஜாதகன் நதிப்பிராந்தியத்தில் அடர்ந்த கிராமத்தில் சிவாலய விஷ்ணு ஆலயமுள்ள இடத்தில் தகப்பன் வீட்டில் ஜனனமும், உத்தராம்சத்தில் பிறந்தவனுக்குத் தாய்வீட்டில் ஜனனமும் நேரிடும், இந்த பூர்வ உத்தர பாகங்களிலேயே கொஞ்சம் பலனில் பேதப்படும்.

(84) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி சூரியன் சுக்கிரனிவர்கள் கேதுவுடன் கூடி கும்பராசியிலிருந்து மேற்படி சுக்கிரன் கும்ப ராசியில் வர்க்கோத்தமத்தில் பாரிஜாதாம்சத்திலுமிருந்து, சூரியன் மீன நவாம்சத்திலுமிருந்து, கேது துலா நவாம்சத்திலுமிருந்தால் அந்த சுக்கிரன் பலனுக விவாகமும், கேது மூன்றும் அம்சப்பலனுக சகோதரிகளில் இளைய சகோதரிகள் மூவர் நஷ்டமும் ஏற்படும்.

(85) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி மீன ராசியில் சனி சிம்ம நவாம்சத்திலிருந்து குரு ராகுவுடன் கூடி சிம்ம ராசியிலிருந்து மேஷ நவாம்சையில் ராகுவும், தனுசு நவாம்சத்தில் குருவும் இருந்தால் ஜாதகனுக்கு இந்தக் கிரக யோகத்தால் அந்த ராகுவின் தெசை வருங்காலத்தில் ஜாதகனுக்கு ராகு தெசை குரு புக்தியில் புதையல் தனமடைவான்.

(86) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி மீன ராசியிலுள்ள சனியால் கன்னியா ராசியில் (மேஷ நவாம்சத்திலுள்ள) சந்திரன் பார்க்கப்பட்டு, குரு சிம்ம ராசியில் ராகுவுடன் கூடியிருந்து தனுசு நவாம்சத்தில் குருவும், மேஷ நவாம்சத்தில் ராகுவும் இருந்து மேற்சொன்ன சந்திரனுடனும் கூடி ராகுயிருந்தால் ஜாதகனுடைய தாய்க்கு ஜாதகன் பிறந்த பிறகு கொஞ்சம் கொஞ்சமாக தேக ஜாட்டியமும், தேக துர்ப்பலமும் உண்டாகும்.

(87) ஜென்மலக்கினம் சிம்மம் ஆகி ஒன்பதாம் பாவாதிபதியாகியசெவ்வாய் லக்கினத்திற்குப்பதிஞேராம் பாவத்தில் இருந்து சூரியன் கேந்திர பாவத்தில் இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் தீர்க்காயுள், கல்வி அறிவு, சமர்த்தம், இரண்டெழுத்து, நீச்ச பாஷை எழுதுவதில் சமர்த்தம், எக்காரியங்களிலும் வல்லமை, எப்போதும் தேவிபூஜை அர்ச்சனையில் பிரீதி, அதனுல் யோகவிருத்தி, உத்தியோகப்பிரபலம் விசேஷகீர்த்தி, பிதுரார்ஜிதஆஸ்தி இன்மை, முப்பது விராகன் சம்பளம், நீச்ச ராஜாபிமானத்தால் ஆயுள் வரை உத்தியோக சுகம், புத்திர சந்தானம், ஒரேதாரமிவற்றுடன் கூடியிருப்பான், ஐந்து புத்திரரும், மூன்று புத்திரிகளும் பிறப்பார்கள், இவர்களில் ஒரு புத்திரனும், மூன்று புத்திரிகளும் மரிப்பார்கள், இவர்களில் (ஜாதகனுடைய சகோதரர்களில்) மூத்தவன் சுகமும், கல்வி அறிவும், உத்தியோக சுகமும், புத்திரீ புத்திர விருத்தியும் உடையவன், அவனுக்கிளையவன் கருப்பு நிறமுடையவன், சுப ஆகிருதி உடையவன், மெல்லிய நீண்ட தேகமுடையவன், பித்தம் நிறைந்தவன், தித்திப்பு, புளிப்பில் பிரியன், புஷ்ப சந்தன சங்கீதப் பிரியன், காமீ, பரஸ்திரீ சங்கமமுடையவன், ஜாரவேசிஸ்திரீ போகமுடையவன், கல்வி அறிவுடையவன், இரண்டு பாஷை நீச்ச பாஷைகளில் சமர்த்தன், நீச்சப்பிரபு நேசமுடையவன், அதனுல் உத்தியோக லாபமுடையவன், முதலில் ஒரு நிஷ்கம் பிறகு ஆறு நிஷ்கம் பிறகு, பத்து, முப்பது, ஐம்பது, அறுபது ஆக இம்மாதிரி உத்தியோகப் பிரபலம், மூன்று வாகனம், லோகப் பிரசித்தமானகீர்த்தியும், ஒருபுத்திரி நாசமுமுடையவன், புத்திரர்இருவர் புத்திரிகளிருவர், ஆக நால்வர், சுகமுடையவர்களையுடையவன், ஆயுள்வரை சுகமுடையவன், மற்ற இரண்டு சகோதரர் வியாபாரத்திலும், பூமியினுலும் சுகமும், வமிச விருத்தியுமுடையவர்கள், ஐந்து புத்திரிகளுடையவன், அவர்களில் இருவர் விருத்தி உடையவர்கள், மற்றவர்கள் மரிப்பார்கள், ஜாதகனுடைய தகப்பன் ஒரு சகோதரனுடையவன், அவன் அற்ப கல்வி உடையவன், புத்திரீ புத்திர விருத்தி நஷ்டமுடையவன், துஷ்ட தேவதாவேசமுடையவன், அந்த தேவதையினுலேயே கொல்லப்படுவான், பிறகு சிலகாலம் அவன் மனைவி இங்கு வசித்துவந்து அவளால் அல்ப ஆஸ்தியை அபகரித்துக்கொள்வான், அதனுல் அரசாங்கத்தில் விவகார மேற்பட்டு, ஆயிரத்தைந்நூறு தனத்தால் விவகார நிவர்த்தியும் உண்டாகும், ஜாதகன் பிறந்த இரண்டு அல்லது மூன்ரும் வருஷத்தில் விவகார நிவர்த்தியும், தகப்பனுக்கு பத்து விராகன் உத்தியோகமும் உண்டாகும், இவன்(ஜாதகனுடைய தகப்பன்) ஜாதகனுடைய இருபத்தெட்டல்லது இருபத்தொன்பதாம் வருஷத்தில் மரணமடைவான்.

(88) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி நான்காம் பாவாதிபதி லக்கினத்திற்குக் கேந்திர திரிகோணத்திலும், சந்திரன் இரண்டாம் பாவத்திலுமிருந்தால் ஜாதகனுடைய தாய் சுத்தம் பதிபக்தி, வமிச விருத்தி, புண்ணியம் முதலிய உடையவள், உடன் பிறப்பில்லாதவள், ஜாதகனுடைய இருபத்தினுன்கல்லது இருபத்தைந்தாம் வயதில் ஜாதகனுடைய தாய் மரிப்பாள்.

(89) ஜென்ம லக்கினம் சிம்மம் (சோதராம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி பதினோராம் பாவத்திலிருந்து, சந்திரன் விப்பிர காலத்தில் இருந்தால் ஜாதகன் பிராம்மண ஜென்மத்தில் நல்ல புத்திமானுய்ப் பிறந்து, உடன்பிறந்த சகோதரருடையவனும், இரண்டு மூத்த சகோதரருடையவனுமாவான், இளைய சகோதரன் ஒருவன் பிறந்து பாலியத்திலேயே மரித்து விடுவான், இரண்டு சகோதரிகளுடையவன், ஒரு சகோதரி இவர்களில் புத்திர சந்தானமுடையவள், மற்ற ஒருத்தி சந்தான மில்லாதவள்.

(90) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி லக்கின பாவாதிபதி நான்காம் பாவத்திலும், நான்காம் பாவாதிபதி பதினோராம் பாவத்திலும் இருந்தால் ஜாதகனுக்கு நதிப்பிராந்தியத்தில் சிறிய கிராமத்தில் அக்கிரகாரத்தில் தாய் வீட்டில் நல்ல மேலான ஜன்மமாகவும், உத்தர பாகத்தில் பிறந்தவனுக்கு மகா நதிப்பிராந்தியாத்தில் புண்ணிய தேசத்தில் கிழக்கு மேற்கு வீதியில் தகப்பன் வீட்டில் ஜனனமும் நேரிடும்.

(91) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி ஏழாம் பாவாதிபதியாகிய சனி லக்கின கேந்திரத்தில் கேதுவுடன் கூடியிருந்து, ஏழாம்பாவத்தில் சூரியன் ராகுவுடன் கூடியிருந்து, ஷை சனி சூரியனுல் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்கு ஜன்மாந்திரத்தில் சத்துரு சம்பந்தமும், பிராம்மண பிரம்மசாரியின் தோஷமும், ஏழாம் பாவத்தில் (கும்ப ராசியில்) லக்கின பாவாதிபதியாகிய சூரியன் ராகுவுடன் கூடிய படியால் விதவை ஸ்திரீயின் தோஷமும், துஷ்டதேவதாபீடையும், மனைவிக்கு மூலரோக பீடையும், தலையில் ரோகபீடையும், பற்பல ரோகங்களால் மனைவிக்குப் பீடையும், அதனுலும் பற்பல வழியாலும் தனவிரயமும், அவளுக்கு சுகக்குறைவும், ஏழல்லது ஒன்பது வருஷம்வரை மனைவிக்கு வியாகூலமும் ஏற்படும், இதற்கே மேலும் சுக்கிரன் குருவால் பார்க்கப்பட்டால் ஜாதகன் மனைவிக்கு பிரதிபந்த நிவர்த்தியும், இருபத்தி நான்காம் வயதில் நிச்சயமாக ரோகம் உண்டான ஏழாம் வருஷத்திலேயே சேதுஸ்நானத்தினுல் மட்டும் நிவர்த்தியும், சுபமும், பிறகு களத்திர சுகமும், தேக சுகமும், புத்திர சந்தான யோகமும், இருபத்தெட்டல்லது, இருபத்தொன்பதாம் வயதில் கர்ப்பாதானமும், புத்திர உற்பத்தியுமுண்டாகும்.

(92) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி ஐந்தாம் பாவாதிபதியாகிய குருவும், குருநின்ற ராசிநாதனும், வக்கிரமடைந்து, புத்திர ஸ்தானத்தில் சுக்கிரனிருந்து, புத்திர பாவமும் சுக்கிரனும், செவ்வாயால் பார்க்கப்பட்டாலும், நவாம்சத்தில் தனுசுராசியில் சனி சூரியனிவர்கள் கூடியிருந்து, குரு ரிஷப நவாம்சத்திலும் இருந்து, வக்கிர கெதியிலிவர்களிருந்தால் ஜாதகனுக்கு புத்திரப் பிரதிபந்த தோஷமுண்டாகும், அல்லது புத்திரியே பிறந்து இருந்தாவது மரித்து விடும், இதற்கு செவ்வாய் மூலம் ஏற்படும் தோஷ பரிகாரமாக நாகசாந்தியும், நாகபலியும், சுக்கிரனுடைய தோஷத்தின் பொருட்டு சேதுஸ்நானமும் செய்தால் புத்திரீ சந்தானமுண்டாகும், முப்பதாம் வயதில் நூதன கிரகலாபமும் உண்டாகும், உத்தியோகத்தினால் ஜாதகனுடைய சகோதரன் சுகமுடையவனுவான், மேலும் ஜாதகனுக்கு முப்பத்தைந்தாம் வயதில் வீடுலாபமும், புண்ணிய தீர்த்த ஸ்நானமும், முப்பத்தெட்டிலுமிப்படியேயுண்டாகும், அக்காலம் சகோதரி வர்க்கத்தில் அரிஷ்டமும், முப்பத்தொன்பதில் கர்ப்பாதானமும், நாற்பதில் புத்திரீ சந்தானமும், மனைவிக்குத்தேகபீடையும், அதிலிருந்துமூன்றும் மாதத்தில்மனைவி மரணமும் நேரிடும், ஜாதகனுடைய மூத்த சகோதரன் நாற்பத்தொன்றில் அல்லது நாற்பத்திரண்டில் மரிப்பான், ஜாதகன் இரண்டாம் மனைவியிடம் புத்திர சந்தானமடைவான், அவளும் பிரசவித்த ஒரு மாதம் அல்லது ஒன்னரை மாதத்தில் மரிப்பாள், ஜாதகனுக்கு நாற்பத்திமூன்றும் வயதில் வாத ரோகமுண்டாகும், நாற்பத்தாறு அல்லது நாற்பத்தேழாம் வயதில் வாத ரோகபய நிவர்த்தியும், சகோதரியால் சுகமும் உண்டாகும், ஜாதகன் அக்காலம் மூத்த சகோதரனால் பூமிமூலம் கலஹம் அடைவான், பிறகு கலஹம் நிவர்த்தியாகி, அதே வருஷத்தில் புத்திரிக்கு விவாகம் செய்வான், அப்புத்திரியை வெளி தேசத்தில் பாக்கிய வமிசத்தில் விவாகம் செய்து கொடுப்பான், ஜாதகன் சோதரியால் சுகமுடையவனுவான், இரண்டு மனைவியரும் மரித்த பின்பு மூன்றும் விவாகமில்லாமலேயே யத்தினம் செய்து நின்று விடுவான்.

(93) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி ஏழாம் பாவத்தில் புதன் சூரியனிவர்களுடன் ராகு கூடியிருந்தால் ஜாதகன் பரஸ்திரீ சங்கசித்தமுடையவன், சுயவர்க்க ஸ்திரீ விதவை ஸ்திரீசம்போகமுடையவன், பற்பல ஸ்திரீ சங்கம ரோக பாபம் இவற்றை அடைவான்.

(94) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி சுக்கிரன் ஏழாம் பாவத்தில் இருந்தால் ஜாதகன் அதிக காமமும், மிக்க நஷ்டமும், ரோக பீதியுமடைவான், போகஸ்திரீயுடன் கூடியிருப்பான், வியாபாரத்தால் வெளிதேசத்தில் வாசமுடையவன், அப்போது வாதரோக பயமுடையவனுவான், ஐம்பத்திரண்டாம் வயதில் சுகமும் புத்திரி

யின் கணவன் மூலமாக சுகமும், தேக சுகமும், ஹரிகதைகளைக் கேட்டலும், சிவ பூஜையும், ஐம்பத்தைந்தில் தேகசுகமும், சகோதரவர்க்க சுகமும், புத்திரீ வர்க்கத்தில் சுபாதிகமும், ஐம்பத்தாறும் வயதில் தேகபீடைமுயுண்டாகும், மேற்படி சுக்கிரனைக் குஜன்பார்த்தால் குஜப்பிரீதி செய்தால் சுகமுண்டாகும், அறுபதாம் வயதில் தேகபீதியும், அறுபத்தொன்றிலுமிவ்வாறே பயமும், தேக பீதியும் உண்டாகும், அக்காலம் புண்ணியகதைகளைக் கேட்டும், பற்பல தானம் ஸ்நானம் செய்தும் சுகமடைவான்,

(95) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி பத்தாம் பாவாதிபதி ஐந்தாம் பாவத்தில் இருந்து, நான்காம் பாவாதிபதி பத்தாவது (அம்சத்தில்) ரிஷப ராசியில் நவாம்சையில் குருவுடனும் கூடி இருந்தால் ஜாதகன் அந்திய வயதில் வேதாந்தத்தில் மனமுடையவனாகி எப்போதும் மன நிம்மதியுடையவனுவான், பன்னிரண்டாம் பாவாதிபதி சர ராசியில் இருந்து செவ்வாயால் பார்க்கப்பட்டாலும், பன்னிரண்டாம் பாவத்தில் கேதுயிருந்தால் ஜாதகன் ஆபத்துச் சன்னியாசமடைந்து, மரணகாலத்தில் ரோகபீதியின்றி ஞான மார்க்கத்திலேயே மரித்து விடுவான், மூத்த புத்திரியின் புத்திரன் மூலமாக கர்மமடைவான்.

(96) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி ஒன்பதாம் பாவாதிபதி பதினோராம் பாவத்திலிருந்து சூரியன் கேந்திர ராசியில் இருந்தால் ஜாதகன் தகப்பன் சுகமுடையவன், வேதாத்தியயனம் செய்பவன், நற்செய்கை, ஆச்சார மிவையுடையவன், சிவபூஜை செய்பவன், சாஸ்திர ஞானமுடையவன், சாத்வீகமுடையவன், சம்பூர்ண குணமுடையவன், வேதசாஸ்திரஞானமுடையவன், தேவப்பிராம்மண பக்தி, சிவ பக்தி வைதீகத்தில் நல்ல ஜீவனம், பிராம்மண மூலம் ஜீவனம், ஒரே தாரமுடையவன் ஆகி ஜாதகனுடைய மூன்றுந்திசையில் மரிப்பான்.

(97) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி நான்காம் பாவாதிபதி பதினோராம் பாவத்தில் இருந்து சந்திரன் ஆறும் பாவத்தில் இருந்தால் ஜாதகன் தாய் சுகமுடையவள், தாய் வமிசத்தில் பாக்கிய விர்த்தி உடையவள், அதனுல் சுகமுடையவள், சாத்துவீகம் சுத்தம், பதிபக்தி, புத்திர பௌத்திர விருத்தி உடையவள், ஜாதகனுடைய மூன்றுந்திசையில் மரிப்பாள்

(98) ஜென்ம லக்கினம் சிம்மம் (சுகதாம்சம்) ஆகி சூரியன் விருச்சிக நவாம்சத்தில் செவ்வாயுடன் கூடியிருந்தால் ஜாதகன் விஷ்ணுபக்த குலத்தில் பிறந்துஉடன் பிறந்த சகோதராருடையவன், ஜாதகன் மூத்த சகோதரனில்லாதவன், இளைய சகோதராருடையவன், சகோதரிகளுமுடையவன்.

(99) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி லக்கின பாவாதிபதி லக்கின பாவத்தில் பதினோராம் பாவாதிபதியுடன் கூடியிருந்தாலும், நான்காம் பாவாதிபதி சனியுடன் கூடி நீச்சராசியில் இருந்தாலும், சனியால் நான்காம் பாவாதிபதி பார்க்கப்பட்டாலும், ஜாதகன் நதிப்பிராந்தியத்தில் சிறிய கிராமத்தில் ஜனனம் அடைவான், உத்தராம்சத்தில் பிறந்தவன் புண்ணிய பூமியில் தாய் வீட்டில் ஜனனமடைவான்.

(100) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி சுய க்ஷேத்திரத்தில் சுகதாம்சத்தில் சூரியனிருந்து, நான்கு * ஒன்பதுக்குடைய பாவாதிபதிகளுடன் கூடியிருந்தாலும், இரண்டு பதினொன்றுக்குடையவருடன் கூடியிருந்தாலும், ஜாதகன் தகப்பன் சுகமுடையவன், கல்வியறிவுடையவன், க்ஷேத்திர மூலம் சுகமும், அல்ப லாபமுமுடையவன், புத்திர சந்தானமுமுடையவன், ஒரே தார முடையவன்.

(101) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி மூன்று பத்துக்குடைய சுக்கிரன் இரண்டாம் பாவத்தில் கடகாம்சத்தில் இருந்தால் ஜாதகனுடைய சகோதரன் சுகமுடையவன், புத்திர சந்தானமுடையவன், தன் இளைய சகோதரனுடன் கூடி உத்தியோகமும், சுகமும், வாச்சாலகமும், நீச்சப்பிரபு அபிமானமும், தனலாபமுமடைவான்.

(102) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி நான்காம் பாவாதிபதி மூன்றும் பாவத்திலிருந்து, குரு நான்காம் பாவத்திலிருந்தாலும், மாதுரு காரகனான சந்திரன் எட்டாம் பாவத்தில் இருந்து ஷை சந்திரன் லக்ஷ்மீசாம்சத்திலும், லக்கின பாவத்திற்கு நான்காம் பாவாதிபதி முன் சொன்னபடி மூன்றும் பாவத்தில், நவாம்சை சையில் விருச்சிகாம்சத்தில் சுகதாம்சத்திலுமிருந்தால் ஜாதகன் தாய் தீர்க்க வயதுடையவள், புத்திர சந்தானமுடையவள், சாத்துவீகம், சுத்தம், பதிபக்தி, வமிச விருத்தி, விசேஷ அறிவு இவை படைத்தவள், சுகமுடைய இரு புத்திரருடையவள், புத்திரரால் சுகமுடையவள், ஜாதகனுடைய சகோதரிகளிருவரில் ஒருவள் சந்ததியில்லாதவள், மத்திய வயதில் விதவையாவாள், வேறு ஒரு சகோதரி புத்திர சந்தானமுடையவள், சுகி, ஆயுள்வரை சுகமுடையவள், ஜாதகனுடைய தாய் அற்ப சுகமுள்ள உடன் பிறந்த சகோதரனுடையவள், தேவப் பிராம்மண பக்தி உடையவள், அன்னதானம் செய்பவள், பந்துக்களுக்கு உபகாரம் செய்பவள், புத்திர பௌத்திர விருத்தி உடையவள், ஆயுள் வரை சுகமுடையவள்,

---

* இங்கு சொல்லிய பாவாதிபதிகள் நான்கு ஒன்பதுக் குடையவர்கள் என்பது பாவஸ்புட ரீதியாக வெவ்வேறு கிரகமாக வரக் கூடும்.

ஜாதகனுடைய ஐந்தாந் தெசையில் அல்லது நான்காந் தெசையின் முடிவிலேயே மரித்துவிடுவாள்.

(103) ஜென்ம லக்கினம் சிம்மம் நாடியம்சம் (துருவாம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி பன்னிரண்டாம் பாவத்தில் தன் நவாம்சத்தில் இருந்து, சந்திரன் தனுசுராசியில் விப்பிரகாலத்தில் இருந்தால் ஜாதகன் விப்பிர குலத்தில் பிறந்து சுகமாகவும், உடன் பிறந்த சகோதரர்களுடனும், இளைய மூன்று சகோதரிகளுமுடையவன், மூத்த சகோதரனில்லாதவன்.

(104) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி லக்கின பாவாதிபதி நான்காம் பாவத்திலும், நான்காம் பாவாதிபதி பன்னிரண்டாம் பாவத்தில் தன் நவாம்சத்திலும் இருந்தால் ஜாதகன் நதிப்பிராந்தியத்தில் அடர்ந்த கிராமத்தில் சிவாலய விஷ்ணு ஆலயங்களுடன் கூடிய கிழக்கு மேற்கு வீதியில் வடக்கு வாடையில் தாய் வீட்டில் ஜனனமும், உத்தரபாகத்தில் தகப்பன்வீட்டில் ஜனனமும் அடைவான்.

கன்னியா லக்கினம்

(1) ஜென்ம லக்கினம் கன்னி (புஷ்கராம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி குருவுடன் கூடியிருந்தால் ஜாதகன் தாய் பிரசவத்தில் அற்ப வேதனை அடைவாள்.

(2) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி சந்திரன் சனியின் ராசியிலிருந்தால், ஜாதகனுக்குச் சூதிதோஷ பயமுண்டாகும், ஷை சந்திரனே ஐந்தாம் பாவத்திலிருந்து குருவால்பார்க்கப்பட்டால் சௌக்கியமுண்டாகும், பாலதோஷ பயமானது ஜன்மதாரம் வரையிலுமிருக்கும், ஜலம், நெருப்பு, விஷம் முதலியவற்றாலும் பயமுண்டாகி தகப்பனுடைய புண்ணியத்தால் சுகமுண்டாகும்.

(3) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி லக்கின பாவாதிபதி பதினோராம் பாவத்திலிருந்து, எட்டாம் பாவாதிபதி கேந்திர ராசியிலிருந்து, சுக்கிரன் ரந்திராரூடத்தில் இருந்தால் ஜாதகன் சகல தோஷங்களும் நீங்கப் பெறுவான், தீர்க்காரம்ப வயதாக எழுபத்திரண்டு வயதடைவான், ஐம்பத்தைந்து, ஐம்பது இந்த வயதுகளில் அபமிருத்து பயமுண்டாகும், அக்காலம் கிரகப் பிரீதியும், மிருத்தியுஞ் ஜெய ஜெபமும் செய்தால் சுகமுண்டாகும்.

(4) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி ஒன்பதாம் பாவாதிபதி பன்னிரண்டாம் பாவத்திலிருந்தாலும், சூரியன் பதினோராம் பாவத்தையடைந்து சுபருடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய

தகப்பன் தீர்க்காயுசுடையவன், பாக்கிய யோகமுடையவன், உடன் பிறந்த சகோதரருடையவன், பயிர்த் தொழிலுடையவன், வைஷ்ணவ மதத்தை அடைந்தவன்.

(5) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி ஒன்பதாம் பாவத்தில் கேது இருந்தால் ஜாதகன் தகப்பன் அனுச்சார மூடையவன், லோப குணமுடையவன், துராலோசனை செய்பவன், அரசாங்கப் பிரசித்தி உடையவன், பிரபு சினேகமுடையவன், தனம் சம்பாதிப்பான், ஜன்மம்முதல் ஆயுசுவரை சுகமுடையவன், இவன் ஜாதகனுடைய நான்காந்திசையில் மரிப்பான்.

(6) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி தன் உச்ச நவாம்சத்தில் சந்திரன் ஐந்தாம் பாவத்திலிருந்து குருவால் பார்க்கப்பட்டால் ஜாதகன் தாய் சுகமுடையவள், மேற்படி குரு கடகராசியில் இருந்தால் ஜாதகன் தாய் குணமுடையவள், பதிபக்தியுடையவள், புத்திரனால் சுகமுடையவள், பாக்கியயோகமுடையவள், பாக்கியசாலீ, இவள் ஜாதகனுடைய நான்காந் திசையில் மரிப்பாள்.

(7) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி மூன்றும் பாவத்தில் ராகு இருந்து, செவ்வாய் தசம கேந்திரத்தில் சத்துரு ராசியில் இருந்தால், ஜாதகனுக்குச் சகோதரர் பிறந்தாலும் மரித்து விடுவார்கள், ஜாதகன் சகோதரனில்லாதவனுவான்.

(8) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி லக்கின பாவாதிபதி புஷ்கராம்சத்தில் பதினோராம் பாவத்திலிருந்து கேசரீயோகத்தில் குஜ திரிம்சாம்சத்தில் பிறந்தவன், கறுப்பு நிறமுடையவன், நிறைந்த ரூபலக்ஷணமுடையவன், அதிருஷ்டசாலி, தர்மாத்துமா, பாக்கிய யோகமுடையவன், கல்வியும் அறிவுமுடையவனுயினும் எழுதுவதில் சமர்த்தன், தேவப் பிராம்மண விசுவாசமுடையவன், விஷ்ணு பக்த மதத்தையடைபவன், சாத்துவீகமான குணம் நிரம்பியவன், தியாகமுடையவன், கெம்பீர புத்தியுடையவன், நாடக அலங்கார காவியங்களிலும், சங்கீதத்திலும் பிரியமுடையவன், சந்தன புஷ்ப வஸ்திரப் பிரியன், சரசமுடையவன், பூமியால் சுகமுடையவன், எப்போதும் பயிர் செய்பவன், திரவிய சம்பாதனையில் சமர்த்தன், பிறருக்கு எல்லோருக்கும் உபகாரம் செய்பவன், ஜன்மம் முதல் சுகமுடையவன், மத்திய வயதில் பிரசித்தியுடையவன், வயோதிக வயதிலும் சுகமுடையவன், ஆயுள் பூராவும் சுகமுடையவன், ஜன்மம் முதல் ஏழு வயதுவரை பாலரோகமுடையவன், தகப்பனுடைய புண்ணியத்தால் சுகமுடையவன், தாய் தகப்பன் சுகமுடையவன், ஐந்தாம் வயதில் அக்ஷர ஞானமுடையவன், (பிராம்மண ஜென்மமானல் எட்டல்லது ஒன்பதாம் வருஷத்தில் தகப்பனல் உபநயன மடைவான்.)

(9) ஜென்ம லக்கினம் கன்னியாகி ஏழாம் பாவாதிபதி சூரியனுடன் கூடி பதினோராம் பாவத்திலிருந்து, பன்னிரண்டாம் பாவத்திலுள்ள சுக்கிரன் சனியால் பார்க்கப்பட்டாலும், தாராரூடமாகிய ஏழாமாரூடத்தில் ராகு விருச்சிகத்தில் இருந்தால் ஜாதகன் இரண்டாந் தாரமடைவான், ஜாதகனுடைய மூத்த மனைவி புத்திரனில்லாதவள், கணவனுடன் விரோதமுடையவள், ஜாதகனுடைய இரண்டாவது மனைவி புகழுடையவள், புத்திரீ புத்திரருடையவள், ஜாதகனுக்கு முப்பத்தாறுவது வயதில், அல்லது முப்பத்தேழாவது வயதில் இரண்டாம் மனைவியிடத்தில் முதலில் பெண் பிரஜையும், பிறகு புத்திர உற்பத்தியுமுண்டாகும், ஜாதகன் அற்ப சந்தான யோகமுடையவன்.

(10) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி சனி சுய க்ஷேத்திரத்திலிருந்து சிம்ம ராசியிலுள்ள சுக்கிரனால் பார்க்கப்பட்டால் ஜாதகன் அந்த சனி திசையில் பாக்கியமுடையவனாகவும், க்ஷேத்திர கிராமாதிபதியாகவும் ஆவான், ஷை சனி புக்தியில் பலன் மிச்ரமாக யிருக்கும்.

(11) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி சந்திரன் தன் உச்ச நவாம்சத்தில் கன்னியா ராசியிலிருந்து, வைசிய காலத்தில் பிறந்தவன் மூத்த சகோதரனுடையவனாகவும், பின் சகோதரனில்லாதவனாகவும், சகோதரியால் கிலேசமுடையவனாகவும் ஆவான், மேலும் வைசிய தொழில் செய்யும் குலத்தில் வனப்பிராந்தியத்தில் நதிப்பிராந்திய சிறிய கிராமத்தில் ஜனனமும் அடைவான், உத்தராம்சத்தில் பிறந்தவன் தாய்ப்பாட்டன் வீட்டில் ஜனனமடைவான்.

(12) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி உபலக்கினத்திற்கு நான்காம் பாவத்தில் சனியிருந்தால் ஜாதகனுடைய தாய் பிரசவத்தில் விசேஷ வேதனையுடையவளாவாள், எட்டு வருஷம் வரை ஜாதகனுக்குச் சூதிதோஷ பயமிருந்தாலும், தாயின் புண்ணியத்தாலேயே சுகமடைவான், மாந்த ஜுரத்தாலும், வைசூரி ஜுரபயத்தாலும் கண்டமடைவான்.

(13) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி லக்கினதிபதியிருக்கும் ராசி யதிபதியாகிய சூரியன் சுயக்ஷேத்திரத்தில் பலத்துடனிருந்து எட்டாம் பாவாதிபதி சிம்ம ராசியில் தன் நவாம்சத்திலிருந்தால் ஜாதகனுக்குப் பாலதோஷம் நீங்கிச் சுகமுண்டாகும்.

(14) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி லக்கினரூடத்தில் சுக்கிரன் கடக ராசியில் இருந்து, ரந்திராரூடாதிபதியாகிய குரு லக்கினத்திற் கிரண்டாம் பாவத்திலிருந்தால் ஜாதகன் சகல தோஷங்களும் விலகி எழுபதல்லது எழுபத்தோறு வயதுவரை ஜீவித்திருப்பான், ஐம்பத்தைந்து அல்லது ஐம்பத்தாறுவது வயதில் ஜாதகன்

தேகபீடையடைவான், அபமிருத்து பயமுண்டாகும், அக்காலம் மிருத்தியுஞ் ஜெய ஜபமும், நவக்கிரக சக்கிர தானமும் செய்து அறுபதாவது வயதில் எருமை தானமும் செய்தால் ஜாதகன் சுகமடைந்து ஷ வயதுவரை சுக ஜீவியாயிருப்பான்.

(15) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி சந்திரன் ஈசுவரியம்சத்தில் லக்கின பாவத்திலும், சூரியன் பன்னிரண்டாவது பாவத்தில் செவ்வாயுடன் கூடியிருந்து ஒன்பதாமாரூடத்தில் ராகுவும் இருந்தால் ஜாதகன் பாலியத்தில் தகப்பனை இழந்து விடுவான்.

(16) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி ஒன்பதாம் பாவாதிபதி சுக்கிரனாகி அவர் பதினோராவது பாவத்தில் இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் சிவ பக்தி, தேவப் பிராம்மண பக்தி, வியாபாரத்தால் சுகம்முதலிய உடையவன், பாலியத்தில் சுகமுடையவன், பற்பல வியாபாரங்களினாலும் ஜீவிப்பவன், வயோதிக வயதில் அற்பமான பாக்கியமுடையவன், உடன் பிறந்த சகோதரருடையவன், இவன் ஜாதகனுடைய மூன்றல்லது ஐந்தாம் வயதில் பாலியத்தில் ஜாதகனுடைய ஆறாவது வயதில் மரித்து விடுவான், அல்லது அதன் பிறகு ஜாதகனுடைய பத்தாவது வயதில் மரித்து விடுவான்.

(17) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி நான்காம் பாவாதிபதியாகிய குரு இரண்டாம் பாவத்திலும், சந்திரன் கன்னியா ராசியில் தன் உச்ச நவாம்சத்திலுமிருந்தால் ஜாதகனுடைய தாய் குணமுடையவள், சுகமுடையவள், தர்ம சிந்தை உடையவள், முன் பாப வசத்தால் விதவையாகி கிலேசமடைவாள், இவள் ஜாதகனுடைய இருபத்திரண்டாவது வயதில் மூன்றாந் திசையில் ராகு திசை கேது புக்தியில் மரிப்பாள்.

(18) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி மூன்றாம் பாவத்தில் சனியிருந்தால் ஜாதகன் இளையசகோதரனில்லாதவன், ஒருமூத்தசகோதரனுடையவன், அவனும் மத்தியாயுள் யோகமுடையவனாவான்.

(19) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி சந்திரன் லக்கின பாவத்தில் ஈசுவரியாம்சத்தில் இருந்தால் அமலாயோகத்தில் குரு திரிம்சாம்சத்தில் பிறந்தவன், கறுப்பு நிறமுடையவன், சூட்டுத்தேகி, மேதாவி, ரூபமும் அறிவும் உடையவன், அதிருஷ்டசாலி, சிவ பக்தி மதத்தை அடைபவன், சிவ பக்தியுடையவன், எழுதுவதில் சமர்த்தன், பற்பல வியாபாரத்தால் ஜீவிப்பவன், மத்திய வயதில் பிரசித்தி அடைவான், தீபாந்திர வஸ்துக்களாலும், பல வியாபாரத்தாலும் தனம் சம்பாதிப்பான், பாலியத்தில் தகப்பனை இழந்து தாய்மூலம் சுகமடைவான், தாய் வமிச ஜனப்பிரியன், அம்மானால் சுகமுடையவன், சிற்றப்பனாலும் அற்ப சுகியாவன், வெளி தேசத்தில் சுகமுடையவன், ஜன்ம பூமியைவிட்டு வெளி தேசத்தில் வசிப்

பான், புண்ணிய தேசத்தில் வசிப்பான், ஜன்மதார திசையில் பால ரோக பயமடைவான், தகப்பனால் அற்ப சுகமும், ஐந்தாவது வருஷத்தில் அட்சரஞானமும் அடைவான், மூன்றாந் திசையில் ஜன்ம பூமிக்கு மேற்கில் அல்லது வடக்கில் விவாகமடைவான்.

(20) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி ஏழாமதிபதியாகிய குரு இரண்டாம் பாவத்தில் இருந்து சுக்கிரன் பாபருடன் கூடாமலிருந்தால் ஜாதகன் மனைவி ரூபம் நிறைந்தவள், பதிபக்தி யுடையவள், முன் ஜென்மாந்திர பாபம் காரணமாக காலாந்திரத்தில் சற்புத்திரியுடையவள்.

(21) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி ஐந்தாம் பாவத்தைச் சனி பார்த்து, குரு கேதுவுடன் கூடி இரண்டாம் பாவத்தில் இருந்து பஞ்சமாரூடத்தில் சந்திரன் (லக்கினத்தில்) இருந்தால், ஜாதகன் சந்தானத் தடையுடையவன், அந்த தோஷ சாந்தியாக சேதுஸ்நானமும், சிவார்ச்சனையும், நாக சாந்தியும், சொர்ண பால கிருஷ்ண தானமும் செய்தால் ஜாதகனுக்குப் புத்திர சந்தான மேற்படும், காலாந்திரத்தில் புத்திரனுண்டாவான், சாந்தி செய்யாவிடில் கன்னிகைகள் பிறப்பார்கள், ஆண் சந்ததி பிறந்து மரித்து விடும், இந்த ஜாதகனுக்கு மேஷ திரிகோணத்தில் அல்லது கும்ப ராசியின் திரிகோணத்தில் கோச்சார குரு வரும் போது புத்திரீ புத்திரர் பிறப்பார்கள், மனைவியின் புண்ணிய வசத்தினால் சந்தான யோகமுண்டாகும், ஜாதகன் விவாகமடைந்ததிலிருந்து பாக்கிய யோகமும், இரண்டாந் தாராதிபதி திசையில் வெளி தேச வாசமும், அம்மானால் சுகமும், தென்மேற்கில் அல்லது மேற்கில் மூன்றாந்திசையில் உத்தரோத்தரமான பிரபலமும், சுபா சுபங்களுமடைவான், ஷை திசையின் பிற்பாதியில் சுகமதிகமும், நான்காந் திசையில் வியாபாரப் பிரபலமும், சகோதர சுகமும், தியாக போகாதி சுகங்களும், பற்பல கிராமங்களில் பிரபலமும், மனைவி சுகமும், தன வரவும், மேலும் மேலும் யோகமும், நான்காந் திசையில் மூத்த சகோதர நாசமும், சிற்றப்பன் நாசமும், திசையின் முடிவில் புத்திர லாபமும், ஐந்தாந் திசையாக சனி வந்தால் அத்திசையில் விசேஷ லாபமும், பதினாயிரத்திற்கு மேற்பட்ட தன வரவும், ஆயுள் பரியந்தம் சுகமும் அடைவான்.

---

(22) ஜென்ம லக்கினம் கன்னி (பங்கஜாம்சம்) ஆகி லக்கினாரூடாதிபதியாகிய சந்திரன் கேந்திர லாப திரிகோணத்திலிருந்தால் ஜாதகன் சமுத்திரப் பிராந்திய தேசத்தில் பெரிய நகரத்தில் ஜனனமும், உத்தர பாகத்தில் வனப் பிராந்தியத்தில் சிறிய கிராமத்தில் ஜனனமுமடைவான், ஜாதகன் ஜனன காலத்தில் ஜாதகன் தாய் அற்ப வேதனையும், பூர்வ பாகத்திற் கெதிராக உத்திர பாகத்தில் அதிக வேதனையும் அடைவாள்.

(23) ஜென்ம லக்கினம் கன்னி (பங்கஜாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி சூரியனுடன் கூடியிருந்து சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்கு சூதிதோஷ பயமுண்டாகும், உத்தராம்சத்தில் பிறந்தவனுக்கு மரண சமானபீடையுண்டாகும், பூர்வ பாகத்தில் பிறந்தவன் அற்பபாதை அடைவான், எட்டு வருஷம்வரை பாலாரிஷ்டபயமடைவான், மாந்த ஜுரம், வைசூரி முதலியவற்றால் பீடையுண்டாகி தகப்பனுடைய புண்ணியத்தால் சுகமுண்டாகும்.

(24) ஜென்ம லக்கினம் கன்னி (பங்கஜாம்சம்) ஆகி லக்கின ரந்திர பதத்தில் புதன் இருந்து, குருவாலும் பார்க்கப்பட்டாலும், லக்கினத்திற்கு நான்காம் பாவத்தில் குரு இருந்தாலும் ஜாதகனுக்குப் பாலதோஷ நிவாரணமுண்டாகும்.

(25) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி லக்கின பாவாதிபதி சிம்ம ராசியில் பங்கஜாம்சத்திலும், எட்டாம் பாவாதிபதி மீனத்தில் குசுமாம்சத்திலும் இருந்து பாபருடன் கூடியிருந்தால் ஜாதகனுக்குச் சகல அரிஷ்டங்களும் விலகிவிடும்.

(26) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி லக்கினாதிபதியாகிய புதன் ஸ்திர (சிம்ம) ராசியிலும். எட்டாம் பாவாதிபதி உபய (மீன)ராசியிலுமிருந்து ஹோரா லக்கினமும் உபய ராசியானால் ஜாதகன் அறுபத்தொன்பது வயதடைவான், உத்தரபாகத்தில் பிறந்தவன் எழுபத்திரண்டு வயதடைவான்.

(26) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி சூரியன் சனியுடன் கூடியிருந்தாலும், சனியால் பார்க்கப்பட்டாலும், சூரியாரூடத்தில் சனியிருந்தாலும் ஜாதகனுடைய தகப்பன் அற்ப சுகமுடையவன், ஷை சூரியனே சுபருடன் கூடியிருந்தால் ஜாதகன் தகப்பன் உடன் பிறந்த சகோதரருடையவன், சிவ பக்த மதத்தை அடைந்தவன், வியாபாரத்தால் சுகமுடையவன், அற்ப கல்வியுடையவன், பாலியத்தில் சுகமுடையவன், வயோதிக வயதில் அற்ப சுகமுடையவன், சொற்ப பாக்கிய முடையவன், இவன் ஜாதகனுடைய மூன்றுவது வயதில் மரித்து விடுவான்.

(27) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி நான்காம் பாவாதிபதியாகிய குரு மித்திர ராசியில் சனியுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தாய் தீர்க்காயுசுடையவள், உடன் பிறந்த சகோதரருடையவள், புத்திரனிடம் அன்புள்ளவள், தெய்வ சிந்தையுடையவள், ஜாதகனுடைய தாய் ஜாதகனுடைய இருபத்திரண்டல்லது இருபத்து மூன்றும் வயதில் மரிப்பாள்.

(28) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி மூன்றும் பாவத்தில் சனியிருந்து செவ்வாய் ஹாலாஹலாம்சத்தில் கேந்திர திரிகோணத்தி

யிருந்தாலும் ஜாதகன் அற்ப சகோதரனுடையவன், மூத்த சகோதரனுடையவன், ஜாதகனுடைய மூத்த சகோதரன் மத்திய வயதுடையவன், சகோதரியும் இளையசகோதரனுமில்லாதவன், உதார புத்தியுடையவன், மத்திப வயதுடைய ஷ சகோதரன் அல்ப வயதிலேயே மரித்து விடுவான், அவன் முன் பாபத்தினால் புத்திரனில்லாதவனுவான், சகோதரிகள் பிறந்தாலும் இறந்துவிடுவார்கள்.

(29) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி பாக்கிய கேசரியோகத்தில் பிறந்தவன் கறுப்பு நிறமுடையவன்.

(30) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி சூரியன் உப லக்கினத்தில் இருந்தால் ஜாதகன் உஷ்ண தேகமுடையவன், பித்தவாயு பீடையுடையவன், பாலரோகமுடையவன், தெய்வானுக்கிரகத்தால் ஜீவித்திருப்பவன், பாலியத்தில் தரித்திரமுடையவன், தகப்பன் இறந்தபிறகு கஷ்டமுடையவன், சுதந்தரமில்லாதவன், அற்பசுகி, அம்மானாலும், தன் தாயாலும் சுகமுடையவன், பதினாறு வயது முதல் பிரசித்தி உடையவன், இருபது வயதுக்கு மேல் திரவிய சம்பாதனையுடையவன், இருபத்தைந்தில் நிபுணத்துவமும், முப்பதுக்குமேல் பிரசித்தியும், ஐம்பதுக்குமேல் புகழும், ஆயுள்வரை சுகமும் உடையவன்.

(31) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி லக்கின பாவாதிபதி சுக்கிரனுடன் கூடி பன்னிரண்டாம் பாவத்தில் இருந்தால் உள்ளுக்குள் கபடமுடையவன், துராலோசனை செய்பவன், திரவியம் சம்பாதிப்பதில் சமர்த்தன்.

(32) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி குரு சனியுடன் கூடியிருந்தால் ஜாதகன் லோப சுபாவமுடையவன், சிவபக்த மதத்தையடைவான், பிறரை துரோகம் செய்வான், வியாபாரத்தில்நிபுணன், வாச்சாலகன், ஊஹாபோகம் தெரிந்தவன், உபாயமுடையவன், நாலுந் தெரிந்தவன், சர்வ வசியமுடையவன், மூத்த சகோதரனையுடையவன், ஜாதகனுடைய மூத்த சகோதரன் நல்ல புண்ணிய செய்கையுடையவன், வீட்டு விசாரணை செய்பவன், ஜாதகனுடைய மூன்றுவது தெசையில் தன்னுடைய இருபத்தைந்தாவது வயதில் விவாகமடைவான், ஜாதகனுடைய மனைவி ரூபலக்ஷணம் வாய்ந்தவள், காலங்கடந்து புத்திரரைப் பெறுபவள், சாந்தியால் காலாந்திரத்தில் புத்திரனைப் பெறுபவள், இருபத்தெட்டாவது வயதில் புத்திரிகளுண்டாவார்கள், அல்லது முப்பதாவது வயதில் புத்திரி பிறப்பாள், முதலில் பெண் பிரஜையும், பிறகு ஆண் சந்ததியுமுடையவன்.

(33) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி ஐந்தாம் பாவாதிபதியாகிய சனி செவ்வாயினுடைய ராசியில் குருவுடன் கூடியிருந்தால்

ஜாதகன் மறு மனைவியிடம் புத்திரனைக் காலாந்திரத்தில் பால கிருஷ்ணப் பிரதிமை தானத்தால் அடைவான்.

(34) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி சந்திரன் கடக நவாம் சத்தில் ரிஷபராசியில் மூலத்திரிகோணத்தில் இருந்து விப்பிர காலத்தில் இருந்தால் ஜாதகன் விப்பிரகுலத்தில் நல்ல அறிவாளி யாக சகோதரப் பிராதா இல்லாதவனுகவும், பேத சகோதரனுடை யவனுகவும், சீமந்த புத்திரனுக அல்லது இரண்டாவது கெற்பத் தில் ஜனனமடைவான்.

(35) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி லக்கினாரூடத்தில் சனி ரிஷப ராசியில் இருந்து, குரு சந்திராரூடாதிபதி ஆனால் ஜாதகன் நதிப்பிராந்தியத்தில் ஜனனமும், வாசமும் உடையவன், ஷெ சந்தி ரன் ஸ்திர (ரிஷப) ராசியிலிருந்தால் ஜாதகன் மூன்றுவது கெற்பத் தில் ஜனனமடைவான் என்று வேறுசிலர் எண்ணுகின்றனர்.

(36) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி லக்கின பாவாதிபதி மித் திர (மகர) ராசியில் இருந்து மைத்ராம்சத்தில் மித்திரன சுக் கிரனுடன் கூடியிருந்து, எட்டாம் பாவாதிபதி இரண்டாம் பாவத் தில் சுமநாம்சத்தில் இருந்தால் ஜாதகன் சகல தோஷங்களும் விலகி எழுபத்திரண்டு வயது பரமாயுளாக அடைவான், அறுபது அல்லது அறுபத்தோருவது வயதில் அபமிருத்து பயமுண்டாகும், அக்காலம் மிருத்துஞ்ஜெய ஜபம், எருமைதானம், ஆடுதானம் முத லியன செய்தால் ஜாதகன் சுகமடைவான்.

(37) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி சந்திரன் ரிஷப ராசியில் கடக நவாம்சத்திலிருந்து, நீசபங்க ஜாதகத்தில் குரு திரிம்சாம்சத் தில் பிறந்தவன், வெளுப்பு நிறமும், சமதேகமும் உடையவன், நல்ல அறிவாளி, விவேகமுடையவன், ரூபமுடையவன், புகழுடை யவன், வசியமுடையவன், லக்ஷணமுடையவன், பிறருக்கு இங்கித மரிந்து சொல்பவன், மேதாவீ, ஜன்மம் முதல் சுகமுடையவன், பிதுரார்ஜித க்ஷேத்திரமூலம் ஜீவிப்பவன், சுயார்ஜித மடைவான்.

(38) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி லக்கின பாவாதிபதி சுப ருடன் கூடி (மகரராசியில்) இருந்து லக்கினம் குருவால் பார்க்கப் பட்டால் ஜாதகன் சாத்வீக குணம் நிரம்பியவன், விசேஷ விஷ்ணு பக்தியுடையவன், எப்போதும் விசேஷ பக்தியுடன் விஷ்ணு ஸ்தோத்திரம் செய்பவன், சங்கீதத்தின் (ரச) ஸாரமறிந்தவன், நாட்டிய வித்தையில் நல்ல சிக்ஷையடைந்தவன்.

(39) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி இரண்டாம் பாவத்தில் செவ்வாயிருந்தால் ஜாதகன் பூமியால் ஜீவனமுடையவன், கொஞ் சம் வழவழப்பாக பேசுபவன், யுக்தாயுக்த விவேகமுடையவன்,

உற்சாகமுடையவன், சரசமுடையவன், எப்போதும் பயிர்த் தொழில் செய்பவன், சர்வ காரியங்களிலும் சமர்த்தன், திரவிய சம்பாதனையில் சமர்த்தன், உபாயமுடையவன், நாலுந் தெரிந்தவன், தகப்பனைவிட அதிக யோகமுடையவன்.

(40) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி ஏழாம் பாவாதிபதி பாலியாவஸ்தையில் இருந்து சுக்கிரன் புதன் இவர்களுடன் கூடி மகரராசியில் இருந்தால் ஜாதகன் அதிக பாலியமான மனைவியை (இளம் பெண்ணை) விவாகம் செய்து வெகுகாலங்கடந்து சுகிப்பான்.

(41) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி மூன்றும் பாவாதிபதியாகிய செவ்வாய் இரண்டாம் பாவத்திலிருந்தால் ஜாதகனுடைய மாமனார் பிரபலமுடையவன், ஜாதகன் தன் மாமனாரால் சுகமுடையவன், ஜாதகனுடைய மாமனார் மூன்று மனைவியருடையவனாக அல்லது அதிகமும் மனைவியருடையவனாக ஆவான்.

(42) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி ஐந்தாம் பாவத்தில் சுக்கிரனிருந்து மேற்படி சுக்கிரனுக்கு ஐந்தாமிடத்தில் சனி யிருந்து (இவர்கள்) செவ்வாயால் பார்க்கப்பட்டால், ஜாதகன் மறு மனைவியையுடையவனாயினும் இரண்டாம் மனைவியிடம் புத்திரனையடைவான், ஜாதகனுடைய மூத்த மனைவி புத்திரனில்லாதவள், அல்லது அவளுக்குக் குழந்தை பிறந்து மரித்துவிடும், ஜாதகன் ஜன்ம தேசத்தில் ஜன்ம கிராமத்தில் விவாகமடைவான், முப்பதாம் வயதில் மனைவி நாசமுடையவன், சீக்கிரமே மறுவிவாகமடைவான், காலங்கடந்து புத்திரருண்டாவர், அப்போதும் முதலில் பெண்குழந்தை பிறந்து அதன் பிறகு சாந்தியால் நாற்பதாவது வயதில் புத்திரனையடைவான், வேறு சிலர் முப்பத்தாறுவது வயதில் புத்திரனை அடைவான், என எண்ணுகின்றனர்.

(43) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி சூரியன் சுபருடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் தேவப் பிராம்மண பக்தியுடையவன், விசேஷ பக்தியுடையவன், பிதுரார்ஜிதத்தால் ஜீவிப்பவன், ஷை சூரியன் உச்சக் கிரகத்துடன் கூடியிருந்தால் கொஞ்சம் மூர்க்க சுபாவமுடையவன், முன் பின் ஆகிய இரண்டு விதத்திலுமாக மூன்று சகோதரருடையவன், இவர்களில் மூத்தவன் பிரசித்தியுடையவன், சர்வ காரியங்களிலும் சமர்த்தன், பிரபுத் துவாராவாகவும், தன் ஜனங்களாலும் விசேஷ கீர்த்தியடைவான, புத்திரீ புத்திர சுகமுடையவன், சிறிய தகப்பனும் நற்புத்திரனுடையவன், மற்ற சிறிய தகப்பன்கள் தத்த புத்திரருடையவர்களாவார்கள்.

(44) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி ஐந்தாம் பாவாதிபதியாகிய சனி கும்பத்தில் மூலத் திரிகோணத்தில் இருந்தால் ஜாதகனுடைய பிதுர்பாட்டன் வியாபாரத்தில் சதுரன், பிரசித்தியுடைய

வன், சுயார்ஜிதம் நிறைந்தவன், மத்திய வயதில் தன் ஜனங்களுக்கெல்லாம் சிரேஷ்டமானவன். புத்திர பாக்கியமுடைய இவன் ஜாதகனுடைய ஜன்ம திசையில் மரிப்பான்.

(45) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி நான்காம் பாவாதிபதியாகிய குரு கேந்திர ராசியில் இருந்து சந்திரன் லாப நவாம்சையிலிருந்தால் சந்திரன் சனியுடன் ராசியில் கூடியிருந்தாலும், ஷ குரு தனுசு நவாம்சத்தில் இருந்தால் ஜாதகனுடைய தாய் சுகமுடையவள், சற்குணமுடையவள், தெய்வானுக்கிரகத்தால் புத்திர பாக்கியமுடையவள், ஜாதகனுடைய மூன்றும் திசையில் மரிப்பாள்.

(46) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி கமலாகராம்சத்தில் வைசிய காலத்தில் குஜ திரிம்சாம்சத்தில் பிறந்தவன் வெளுப்பு நிறமுடையவன், நல்ல யோகமுடையவன்.

(47) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி பாக்கியாரூடம் லக்கினமானால், பாக்கிய காலத்தில் பிறந்தவன், உடன் பிறந்த சகோதரருடையவன், நதி தீரத்தில் பிறந்தவன், விப்பிர இதர குலங்களில் விஷ்ணு பக்த குலத்தில் ஜனிப்பான், இங்கு சுக்கிரன் கடக மகர ராசிகளிலிருந்தால் லக்கினம் பாக்கியாரூடமாக வரும்.

(48) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி லக்கின பாவாதிபதி சுமநாம்சத்திலும், எட்டாம் பாவாதிபதி மதிராம்சத்திலுமிருந்து சனி கேந்திர திரிகோணத்திலிருந்தால் பாலதோஷம் நீங்கிவிடும்.

(49) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி லக்கின பாவாதிபதி ஒன்பதாம் பாவத்திலிருந்து எட்டாம் பாவாதிபதி பதினோராவது பாவத்திலிருந்து, குரு கேந்திர திரிகோணங்களிலிருந்தால் சர்வ தோஷமும் விலகி, மத்திமாயுளாக அறுபத்தைந்து வயதடைவான், முப்பத்தைந்தல்லது நாற்பதாவது வயதில் தேகபாதையுண்டாகும் அப்போது அபமிருத்து சாந்தி செய்தால் தனக்குச் சமஜன நாசத்தால் சுகமேற்படும்.

(50) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி மூன்றும் பாவாதிபதி லக்கின பாவத்தில் சுக்கிரனுடன் கூடியிருந்தால் ஜாதகன் சகோதர சுகமுடையவன், மூத்த சகோதரனில்லாதவன், இளைய சகோதரர்கள் ஐந்தல்லது ஆறுபேர்களுண்டாவார்கள், இவர்களில்மூன்று பேர் தீர்க்க வயதுடையவர்களென்று சிலரும், வேறுசிலர் இரண்டு பேர்கள் தீர்க்காயுளுடையவர்களென்றும், ஒரு சகோதரி சுகமுடையவள் உண்டென்றும், எண்ணுகின்றனர்

(51) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி கமலாகராம்சத்தில் குஜ திரிம்சாம்சத்தில் கேந்திராதி யோகத்தில் பிறந்தவன் வெளுப்பு நிற

மும், அறிவுமுடையவன், ரூபமுடையவன், புகழுடையவன், வசிய முடையவன், அழகான கண்ணுடையவன், நல்ல அழகான மூக்கு டையவன், கல்வி அறிவுடைய விவேகி, எழுத்து வேலையில் சமர்த் தன், யுக்தா யுக்த விவேகமுடையவன், தேவப் பிராம்மண பக்தி யுடையவன், திட்டமாய் புசிப்பவன், அளவாய்ப் பேசுபவன், மித மான நித்திரையுடையவன், அதிக ஜாக்கிரதையுடையவன்.

(52) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி லக்கின பாவாதிபதி கேதுவுடன் கூடியிருந்தால் ஜாதகன் உள்ளுக்குள்ளே கபடமுடை யவன், கொஞ்சம் லோப குணமுடையவன், கர்ப்பஸ்ரீமான், நல்ல போகமுடையவன், ஜன்ம காலம்முதல் இருபத்தைந்து வருஷம் வரையில் ஒரே நிலைமையுடையவன், அதற்குப் பிறகு யோக பங்க முண்டாகும், சேர்த்துவைத்திருக்கும் தனம் அதிக விரயமாகும், பத்து வருஷம் அதிக விரயமேற்படும், வேறு சிலர் எட்டு வருஷம் வரையிலும்தான் விரயமாகும், என எண்ணுகின்றனர், அக்காலம் தகப்பனுடைய சகோதரன் நாசமடைவான், அவனுடைய புத்திர னுடன் விரோதமுண்டாகும், முப்பது வயதிற்குமேல் தாயாதியின் துவேஷம் காரணமாக பாகப்பிரிவினை ஏற்படும், முப்பத்தைந்து வயதிற்குமேல் சுகமும், அதுவும் ஐந்து வருஷம் அற்ப சுகமும், வெளி தேசத்து வியாபாரியின் சினேகத்தால் வியாபாரத்தில் சுக மும் ஏற்படும், நாற்பதாவது வயதில் வரவுக்குமேல் அதிக சிலவும், சகோதரனால் கிலேசமும், பிறகு சுகமும், சுபமும், நாற்பத்திரண்டு வயதிற்குமேல் மறுபடியும் பாக்கிய விருத்தியுமுண்டாகும், ஐம்பது வயதிற்குமேல் கீர்த்தியும், சகோதரனால் சுகமும், பாக்கியமும், தேசாந்திரத்து வியாபாரியின் சினேகத்தால் வியாபாரத்தில் விசேஷ லாபமும் விருத்தியும் உண்டாகும்.

(53) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி சூரியன் ஒன்பதாவது பாவத்தில் புதனுடன் கூடியிருந்து சுக்கிரன் ஒன்பதாம் பாவாதி பதியாகி பதினோராவது பாவத்தில் இருந்தால் ஜாதகன் பிதுரு பாக்கியமுடையவன் ஆவான்.

(54) ஜென்ம லக்கினம் கன்னி (புஷ்கராம்சம்) ஆகி ராகு ஒன் பதாம் பாவத்தில் வர்க்கோத்தமாம்சத்தில் இருந்து சந்திரன் சுய க்ஷேத்திரத்தில் நான்காம் காலத்திலிருந்தால் ஜாதகன் பாக்கிய முள்ள வமிசத்தில் சிவ பக்த குலத்தில் ஏழாவது கெற்பத்தில் ஜனித்து யோகமும் கீர்த்தியுமுடையவனுவான்.

(55) ஜென்ம லக்கினம் கன்னி (புஷ்கராம்சம் பூர்வபாகம்) ஆகி லக்கின பாவாதிபதி மூன்றும் பாவத்தில் நான்காம் பாவாதி யுடன் கூடியிருந்தால் ஜாதகன் சமுத்திரப் பிராந்தியத்தில் அடர்ந்த கிராமத்தில் அல்லது பட்டிணத்தில் தெற்கு வடக்கு

வீதியில் சிவாலய விஷ்ணு ஆலயங்களுள்ள ஊரில் மேற்குப்பார்த்த வாயிற்படியுள்ள தகப்பன் வீட்டில் ஜனனமும், உத்தர பாகத்தில் தாய் வீட்டில் ஜனனமும் அடைவான், இந்த பூர்வ உத்திர பாகங் களில் பிறந்தவர்களுக்கு ஜாதக பலவிஷயத்தில் சிறிய மாறுதலேற் படும்.

(56) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி லக்கின பாவாதிபதி மூன்றும் பாவத்திலும், பதினோராம் பாவத்தில் சந்திரனுமிருந் தால் ஜாதகன் பிறந்த பிரசவ அறையின் வாயிற்படி தெற்கு வடக் காக இருக்கும், பிரசவ அறையின் உள்ளுக்குள் விதவைகளிருவ ரும், சுமங்கலிகளிருவரும் இருப்பார்கள், ஜாதகன் தாய் சிகப்பில் தங்கம் கலந்த மான்தலைபோட்ட பலவித வேலைப்பாடுள்ள வஸ் திர முடுத்தியிருப்பாள், ஷை அறையில் மூன்று தீபமிருக்கும், அவைகளில் கசப்பான விளக்கெண்ணை விடப்பட்டிருக்கும், அரை வர்த்தியிடப்பட்டிருக்கும், வெளிப்பக்கத்தில் அனேக தீபங்களு மிருக்கும், அனேக ஜனங்களுமிருப்பார்கள், பிரசவ சமயத்தில் ஜாதகன் தாய் வெகு வேதனையடைவாள், இரண்டு மூன்று தட வைகளில் சூதிதோஷ பயமுண்டாகும்.

(57) ஜென்ம லக்கினம் கன்னி (புஷ்கராம்சம்) ஆகி சுய க்ஷேத்திரத்திலுள்ள சந்திரன் மகரத்திலுள்ள சனியால் பார்க்கப் பட்டால் ஜாதகனுக்கும் ஜாதகனுடைய தாய்க்கும் பதினன்கு வரு ஷம் வரையில் அம்மை ஜுரத்தால் பயமுண்டாகும், அப்போது சந்திரனுக்கு ஐந்தாமிடத்தில் குரு இருந்தால் ஜாதகனுக்கும் தாய்க்கும் சுகமுண்டாகும், சந்திரனுக்குப் பதினென்றில் ராகு இருந்தாலும் சகல தோஷங்களும் விலகும்.

(58) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி லக்கின பாவாதிபதி மூன்றும் பாவத்தில் மகர நவாம்சத்தில் இருந்து, ஐந்தாம் பாவாதி பதியாகிய சனி சுய க்ஷேத்திரத்தில் கடக நவாம்சத்திலிருந்து, ஷை புதனல் நவாம்சத்தில் பார்க்கப்பட்டிருந்தால் ஜாதகன் கல்வி அறிவுடைய விவேகியாவான், கல்வியைவிட நான்கு மடங்கு விவேக முடையவன், கல்வியால் சுகமும் ராஜதந்திரம் முதலிய சமர்த்தும் யோகமும் உடையன்.

(59) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி ஐந்தாம் பாவாதிபதியா கிய சனி சுய க்ஷேத்திரத்தில் ஐந்தாம் பாவத்திலேயேயிருந்து நவாம்சத்தில் கடகாம்சத்தில் இருந்தால், ஜாதகன் ராஜ யோகமும் அரசனுக்கு சமானமான வைபவமும் உடையவன், மேலும் அம்சத் தில் ஷை சனி சந்திரனுடைய க்ஷேத்திரத்திலிருந்தால் அச்சந் திர தெசை வரும்போது ராஜ தந்திராதி லாபமும், நீச்சப் பிரபு மூலம் உத்தியோகமும், உத்தியோகப் பிரபலமும், அடைந்து ராஜாவுக்குச்சமீபத்தில் ராஜ தந்திரியாகவுமிருப்பான்.

(60) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி நான்காம் பாவத்தில் சுக்கிரன் வர்க்கோத்தமத்திலிருந்து அந்த பாவம் குருவினுடைய க்ஷேத்திரமானால், ஜாதகனுக்கு அத்திசையில் முதலில் சம்பூர்ண பலனும், மூன்றுபாஷையில் ராஜஉத்தியோகமும், இரண்டு மூன்று பக்கங்களில் சுயப்பிரபலமும், அதற்கு முந்தியே விவாகமும் விவாகத்திற்குப் பிறகு உத்தியோகமும் பிறகு அக்கரைக் குறைவினால் ஆறு அல்லது எட்டுமாதம்வரையில் உத்தியோகபங்கமும், சுக்கிரதிசை குருபுத்தியில் மனைவியால் சுகமும், வேறு இடத்தில் உத்தியோகலாபமும், யோகப் பிரபலமும் உண்டாகும்.

(61) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி விரய பாவாதிபதியாகிய சூரியன், லக்கினத்திற்கு மூன்றும் பாவத்தில் குரு, புத, கேது, செவ்வாய், ஆகிய நான்கு கிரகங்களுடன் கூடியிருந்து, மேற்படி சூரியன் நவாம்சத்தில் மீனத்தில் சந்திரனுடன் கூடியிருந்தாலும், ராசியில் கடகராசியில் சந்திரனிருந்து, மேற்படி சந்திரனுக்கு ஐந்தாமிடத்தில் மேற்படி கிரகங்களிருந்தாலும், அந்த சூரிய தெசையில் முதல் பாகத்தில், பத்தொன்பது வயதுக்கு மேல் இருபத்திரண்டு வயது வரையில் ஆறுமாதம் சுபபாப பலன்கள் அடைவான், பிறகு இம்மூன்று வருஷங்களில் முன் ஒன்றரை வருஷம் கலஹமும், உத்தியோகலாபமும், பிறகு உத்தியோகம் ஒரு வருஷமல்லது ஒன்றரை வருஷம் வரையில் பங்கமும், பிற்பாகத்தில் உத்தியோகத்தில் அற்ப லாபமும், சொற்ப சுகமும், வரவுக்கு மீறிய சிலவும் உண்டாகும், மேலும் மேற்படி சூரியன் பன்னிரண்டாம் பாவாதியாகி லக்கின தசமாதிபதியாகிய புதனுடன் கூடினால், அந்திய வயதில் முன் ஜென்ம ஞான:விசேஷமிகுதியால், இச்சென்மத்தில் முக்திக்குறிய மோக்ஷ சாதன வழிகளையடைவான், மேலும், மோக்ஷ காரகனான கேதுவுடன் சம்மந்தத்தால் இந்த ஜென்மத்தில் மோக்ஷமும் அடைவான், மேலும் குருவும் செவ்வாயும் கூடினால், கன்னியா லக்கின ஜாதகத்திற்கு அஷ்டம பாவாதிபதியாகிய செவ்வாய் சூரியனுடன் கூடி முக்திஸ்தானமாகிய பன்னிரண்டாம் பாவசிம்ம நவாம்சத்திலிருந்தால் அஷ்டம பாவம் பிரம்ம ரந்திர ஸ்தானமானபடியாலும், ஷை ஆதிபத்தியத்தினால் பிரம்ம ஞான உபதேசமும் பெற்று, பிரம்மத்தைப் பற்றிய விசாரணை செய்து, திடச் சித்தத்துடன் மோக்ஷ இச்சையடைவான், மேலும் குருவுடன் அங்கு நான்கு கிரகங்களுடன் சூரியன் கூடினால் சுபர் சம்மந்தத்தின் காரணமாக, பாலியத்திலேயே மோக்ஷத்தை அடைய ஆசைப்பட்டு, அனுஷ்டான சித்தியை அடைந்து, குரு மூலமாக ஞான சாத்திய மடைந்து, வேதாந்த சாஸ்திர பரிசீலனை செய்வான், அவனுடைய மனைவியும் குரு சிஷ்ய சம்வாதாதி விசாரணைகளைக் கேட்டு, அவளும் மேற்படி ஞான

மடைந்து தீக்ஷண்ய ஞானம் படைத்து, திருஷ்டாந்தமாக சூக்ஷ்ம புத்தியால் சுலப சாத்தியமடைவாள்.

(62) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி சந்திரனுக்குக் கேந்திரத்தில் குருவும், குருவுக்கு கேந்திரத்தில் சந்திரனுமிருந்தால், ஜாதகன் கேசரீ யோகத்தின் பலனாக ஜகத்திலுள்ள சிருஷ்டி, ஸ்திதி, சம்மாரம் என்னும் முத்தொழிலையும் செய்ய வல்லவன்.

(63) ஜென்மலக்கினம் கன்னி ஆகி மற்றஎல்லாக் கிரகங்களும், எப்படியிருந்தாலும் சந்திர கேந்திரத்தில் குரு இருந்தால், மத்த மாதங்கயோகமுண்டாகும், அந்த கேசரீ யோகத்தில் பிறந்தவன் யானைக்கூட்டத்தை ஒரு சிம்மம் துரத்துவதுபோல் சத்துருக்களை அழித்து, சமாதியும், நித்திய சுகமும், அடைவான்.

(64) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி சந்திரன் லக்கினத்திற்குப் பதினோராமிடத்தில் சுய க்ஷேத்திர பலத்துடனிருந்து, அங்கிருந்து பாக்கியாம்சமாகிய மீன நவாம்சத்தில், ஷை சந்திரனிருந்து ராசியில் குரு விருச்சிக ராசியிலிருந்து ஷை குரு நவாம்சத்தில் கன்னியில் இருந்து ஷை சந்திரனை ராசி நவாம்சம் இரண்டிலும் குரு பார்த்தால் விசேஷ பலனடைவான்.

(65) ஜென்ம லக்கினம் கன்னியாகி சந்திரனுக்கு ஏழாமிடத்தில் சனியிருந்து இருவரும் சுயக்ஷேத்திரத்தில் இருந்து ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டாலும் லக்கினத்தில் சனியிருந்தாலும் ஜாதகன் நீச்சப் பிரபு சமீபத்தில் சர்வாத்தியக்ஷாதிகாரமடைவான், ராஜேந்திர நிபுணனுவான்.

(66) ஜென்ம லக்கினம் கன்னியாகி சந்திரனுக்கு ஒன்பதாமிடத்தில் சுயக்ஷேத்திர பலத்துடன் இருக்கும் கிரகம் உத்தியோக பலத்தைக் கொடுக்கும்.

(67) ஜென்ம லக்கினம் கன்னியாகி ஒன்பதாம் பாவத்தில் ராகுவர்க்கோத்தமம் பெற்றால், அந்தராகு சுக்கிரனுடைய பலனைக் கொடுப்பார், தனபாக்கிய காரகனாகிய சுக்கிரனுடை புக்தியில் உத்தியோகப் பிரபலமுண்டாகும்.

(68) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி சந்திரன் பதினோராம் பாவத்தில் இருந்து சந்திரனுக்குப் பதினொன்றில் ராகு இருந்தால் யோகப் பிரபலமும், தனவிருத்தியுமுண்டாகும்.

(69) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி நான்கு ஏழுக்குடைய குருவானவர் ஏழாம் பாவத்திற்கு ஒன்பதாம் பாவமாகிய மூன்றும் பாவத்தில் இருந்து, நவாம்சத்தில் கன்னியாநவாம்சத்தில் இருந்து சுய க்ஷேத்திரத்திலிருக்கும் சந்திரனுக்கு ஐந்தாமிடத்தில் ராசி

யில் இருந்தால், சுகாதிகமும், விசேஷ யோகமும் உண்டாகும், அந்த குரு புக்தியில் பிரபல க்ஷேத்திரத்தில் உத்தியோகத்தில் பிரபலமும், ராஜ சன்மானுதி சுகமும், நூதன கிரக லாபமும், அந்த வீட்டினுல் தெய்வானுகூலமாக இரண்டு லக்ஷம் தனலாபமும், மேலும் மூத்த புத்திரனுக்கு விவாகமும், வாகனுதி சுகமும், பூமிமுதலான லாபமும் உண்டாகும்.

(70) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி லக்கின பாவத்திற் கைந்தாம் பாவத்தில் சனி சுயக்ஷேத்திரத்தில் இருந்து, சுய க்ஷேத்திரத்திலுள்ள சந்திரனுக்குஏழிலிருந்து நவாம்சத்தில் சந்திரன் மீனத்திலும், சனி கடகத்திலுமிருந்தால் ஜாதகனுக்கு அந்த சனி புக்தியில் உத்தியோக சித்தியும், விசேஷ ராஜப் பிரீதியும், புத்திரனுக்கு அரசாங்கத்தில் உத்தியோகமும், மனைவி சௌக்கியமும், உத்தியோகப் பிரபலமும், புது வீட்டில் தனலாபமும், இருபதினுயிரம் தன லாபமும், தாய்க்குப் பீடையும், அதற்குப்பிறகு புத புக்தியில் விசேஷ பலனும் உண்டாகும்.

(71) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி லக்கின தசமாதிபதியாகிய புதன் சந்திரனுக்கு ஐந்தாமிடத்தில் விருச்சிக ராசியில் இருந்து அம்சத்தில் மகர நவாம்சத்தில் இருந்து விருச்சிக ராசியில் கன்னியா நவாம்சத்திலிருக்கப்பட்ட குருவால் பார்க்கப்பட்டால் இந்த குருவின் திசையில் ஷை புதனுடைய புக்தியில் பற்பல வழியில் தனமும், ராஜப்பிரீதியும், மூத்த புத்திரனுக்கு உத்தியோகமும், இரண்டாவது புத்திரனுக்கு அரசாங்கத்தில் உத்தியோகமும், மனைவி சுகமும், பூமி லாபமும், அன்னதானுதி தர்மமும், தர்ம சத்ராதி லாபமும், இருபதாயிரம் தனவிருத்தியுமுண்டாகும்.

(72) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி இரண்டு ஒன்பதுக்குடைய சுக்கிரன் நான்காம் பாவத்தில் வர்க்கோத்தமாம்சத்தில் இருந்து மீன நவாம்சத்திலுள்ள சந்திரனுக்குக் கேந்திரத்தில் இருந்தால், ஜாதகனுக்கு அந்த சுக்கிர புக்தியில் மணிரத்தினுதி லாபங்களும், ராஜ சன்மானங்களும், விசேஷ தனலாபமும் மூன்று மடங்கு தனலாபமும், உத்தியோகமும், ராஜ தந்திராதி சுகமும் ஏற்படும், மேலும் அழகு பொருந்திய லக்ஷ்மீகடாக்ஷமும், சொர்ண லாபமும், நாட்டியம், சங்கீதம், முதலியன அனுபவித்தலும், சகல காரியங்களிலும் தலைமைத்தன்மையும், கொஞ்சம் தாயாதி தோஷமுமுள்ளவன், திடசித்தமுடையவன், திட புத்தியுடையவன், அரசர்களால் சன்மானிக்கப் படுபவன், தியாக போகமுமுடையவன், பூமியிலும் சொர்க்கத்திலும், சகல வைபவ முடையவன், ராஜ ஆஸ்தானத்தில் சந்துஷ்டி யுடையவனுவான்.

(73) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி விரயாதிபதியாகிய சூரியன் ராசியில் மூன்றும் பாவத்திலும், நவாம்சத்தில் சந்திரனுடன் கூடி மீனத்திலும் இருந்தால் ஆறுந்திசையில் ஜாதகன் அந்த சூரிய புக்தியில் அரசாங்கத்தில் விரோதமும், உத்தியோகத்தால் கெட்ட ஆலோசனையும், அரசாங்க வேலையில் கவனக்குறைவால் மூன்று மாதம் உத்தியோக பங்கமும், பிறகு வேறிடத்தில் உத்தியோகமும் அடைவான், அதிகார யோகமடைவான்.

(74) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி செவ்வாய் விருச்சிக ராசியில் சுய க்ஷேத்திரத்தில் புதன், குரு, கேது இவர்களுடன் கூடி நவாம்சத்தில் ஷை செவ்வாய் சுய க்ஷேத்திரத்திற்கு தசம கேந்திர பாவமான பன்னிரண்டாம் பாவமாகிய சிம்ம நவாம்சத்திலேயேயிருந்தால் ஜாதகன் அந்த குஜதிசையில் பூமி விருத்தியும், வனகிரிப் பிரதேசத்தில் மேற்குப்பாகத்தில் மாதம் நூற்றுக்கு மேம்பட்ட தனலாபமுமுள்ள உத்தியோக லாபமடைவான்.

(75) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி சனி திசாநாதனுகிய குருவுக்கு மூன்றுமிடத்தில் மகரத்தில் இருந்தால் ஜாதகன் அரசாங்கத்தில் ராஜ தந்திரம் முதலியவற்றில் சமர்த்தனுவான், வெகு ஜன உபகாரியாவான், வெகு குடும்பங்களை ரக்ஷிப்பவன், ராஜ காரியத்தில் சமர்த்தன், ராஜாங்கப் பிரசித்தி அடைவான், உத்தியோகத்தினுல் தனப் பெருக்கடைவான்.

(76) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி பன்னிரண்டாம் பாவாதிபதி தேவாம்ச பாகமான ஷஷ்டியம்ச தேவாம்ச பாகத்தில் இருந்தாலும், உச்சத்திலிருந்தாலும், குருவால் பார்க்கப்பட்டால் ஜாதகன் அத்துவைத மார்க்கத்தால் கடவுளைக்காண நிஷ்டை அடைந்து பரமாத்துமாவை அறிவான்.

(77) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி குரு செவ்வாயுடன் கூடியிருந்து (எங்கிருந்தாலும்) அல்லது கடகத்திலாவது சுய க்ஷேத்திரத்திலாவது, கேந்திரத்திலாவது இருந்தாலும், ஜாதகன் பூர்ணயுளுடையவன், யானை குதிரை யேறுவதிலும், மலைகள்மீதில் வெகு வேகமாக ஏறுவதிலும் சமர்த்தன், நகரங்களுக்கும், பூமிக்கும், துர்க்கங்களுக்கும், சமுத்திரங்களுக்கும், கூட்டங்களுக்கும், அதிபதியாவான், நல்ல மனைவியுடையவன், அன்னிய ஸ்திரீகளுடன் கூடியவன், ஜனத் தலைவனுகவும், எப்போதும் போகசாலியாகவும், விளங்குவான்.

(78) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி எட்டாம் பாவாதிபதி பன்னிரண்டு ஆறு இந்த பாவங்களில் ஒன்றிலும், ஆறும் பாவாதி

பதி எட்டுப் பன்னிரண்டாம் பாவங்களில் ஒன்றிலுமிருந்து, பன்னிரண்டாம் பாவாதிபதி அப்படியே ஆறு, அல்லது எட்டாம் பாவத்திலிருந்தாலும், அல்லது இம் மூவரும் தன் தன் ராசியிலேயேயிருந்தாலும், ஒருவருக்கொருவர் க்ஷேத்திரம்மாறி பரிவர்த்தனையாயிருந்தாலும், எல்லோரும் ஷ ஆறு, எட்டுப் பன்னிரண்டாம் பாவங்களில் எங்காவது மூவரும் கூடியிருந்தாலும், அல்லது ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டாலும் அப்போது பிறந்தவன் அரசனாக அல்லது பெரிய வைபவமுள்ளவனாக பிரசித்தனாகி அரசர்களால் துதிக்கப்படுபவனுமாவான்.

(79) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி ஆறு, எட்டுப் பன்னிரண்டுக்குடையவர்கள் அன்னியோன்னியமாக சேர்ந்திருந்தாலும், ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டாலும், க்ஷேத்திர பரிவர்த்தனையாயிருந்தாலும் ஜாதகன் மகா ராஜனாகவும், தனிகனாகவும், சுகியாகவும் ஆவான்.

(80) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி கேந்திராதிபதிகளும், திரிகோணாதிபதிகளும் தன் தன் வீட்டிலிருந்து லக்கின பாவாதிபதி தன் உச்சத்திலிருந்தாலும், கேந்திரத்திலேயோ அல்லது திரிகோணத்திலேயோயிருந்தாலும், ஜாதகனுக்கு மத்தமாதங்கயோகம் என்கிற யோகமுண்டாகும், மேற்படி யோகத்தில் பிறந்தவன் மிகப் பெரிய சேனைகளும், ரத கஜ துரகமென்கிற தேர் யானை குதிரை முதலிய வைபவங்களுடையவனாகவும், ராஜ பூஜிதனாகவும் ஆவான்.

(81) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி இரண்டாம் பாவாதிபதி பரமோச்சபாகத்திலிருந்து தேவேந்திர பூஜிதனாகிய குருவுடன் கூடியிருந்தாலும், குருவால் பார்க்கப்பட்டாலும், ஜாதகன் ஆயிர லக்ஷம் தனமுடையவனாகவும், ஆயிரம் பேரை ரக்ஷிப்பவனாகவும், பிரதாபமுடையவனாகவுமாவான்.

(82) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி இரண்டாம் பாவாதிபதி கேந்திரத்தில் இருந்தாலும், கேந்திரத்தில் வர்க்கோத்தமத்திலிருந்தாலும், ஜாதகன் அழகிய முகமும் கண்களுமுடையவன், வாச்சாலகமுடையவன், தனமுடையவன்.

(83) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி சந்திரனுக்கு ஐந்தாமிடத்தில் கூட்டக் கிரகமிருந்தால் ஜாதகன் அந்த கூட்டக் கிரகங்களின் தெசையில் அல்லது புக்தியில் (விசேஷ யோகத்தை அடைவான்)

(84) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி நான்கு பதினொன்றுக்குடையவர்கள் ஒரு ராசியில் அல்லது ஒரு அம்சத்தில் கூடியிருந்தாலும், ஒருவரை ஒருவர் அம்சத்தில் பார்த்துக்கொண்டாலும் ஜாதகன் நிக்ஷேப தனமும், யோகமும், வாகன பாக்கியமுமடைவான்.

(85) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி ஒன்பதாம் பாவாதிபதி கேந்திர ராசியில் வர்க்கோத்தமத்தில் கோமலாம்சத்தில் தனுசு ராசியிலிருந்து, சூரியன் மூன்றும் பாவத்தில் மீன நவாம்சத்தில் சுப்பிரபாம்சத்தில் இருந்து, மேற்படி மீன நவாம்சத்தில் கூட சந்திரனிருந்தால் ஜாதகன் தகப்பன் தீர்க்காயுசுடையவன், கல்வி அறிவுடைய விவேகி, விநயமுள்ளவன், தர்மத்தை ரக்ஷிப்பவன், நீச்ச வித்தையில் சமர்த்தன், மூன்று எழுத்துகளறிபவன், தேவப் பிராம்மண பக்தி, தேவி பக்தி, பிறருக்கிங்கிதம் சொல்லல், சூக்ஷம புத்தி முதலியன உடையவன், எழுதுவதில் சமர்த்தன், யுக்தாயுக்தம், நியாயாநியாயம், சேர்க்கவும், கலைக்கவும்சமர்த்தம், எப்போதும் தர்மத்தில் மனது முதலியன உடையவன், தருமசிந்தையுடையவன், அனேகம் விவாகங்களுக்குத் தர்மமூலம் தனம் செலவிடுவான், தான தர்ம பரோபகாரமுடையவன், பிதுரார்ஜித மற்பமாக உடையவன், கிராமமுடையவன், பிதுரார்ஜிதத்தைவிட்டு வேறு பக்கத்தில் பிரசித்த பட்டிணத்தில் வாசமுடையவன், தன் தேசத்திலும், வெளிதேசத்திலும் அரசாங்கத்தில் நீச்ச வித்தையால் பிரசித்த ஜீவனமும், பிறகு தன் ஊரில் உத்தியோகப் பிரசித்தியும், யோகமும், கீர்த்தியும், வாகனமும், கீர்த்தியும், புத்திரன் பிறந்த பிறகு பெரிய யோகமும், புதுவீடு லாபமும், புதுதர்ம சித்தியும், தடாக உத்தியான தர்மமும், அனேக திரவியத்தை தானமும் செய்பவன், பற்பல தேசங்களிலும் கீர்த்தி அடைவான், ஒரேதாரமுடையவனுவான்.

(86) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி நான்காம் பாவாதிபதி மூன்றும் பாவத்தில் இருந்து சந்திரன் சுய க்ஷேத்திரத்தில் இருந்தால் ஜாதகன் தாய் தீர்க்கவயதடைவாள், சாத்வீகம், சுத்தம், பதி பக்தி, வம்சவிருத்தி, புண்ணியம் முதலிய உடையவள். புத்திரீ புத்திரர் பதினொரு கெற்பம் பிரசவிப்பவளாவாள், உடன் பிறந்த சகோதரரும், சகோதரிகள் நான்கல்லது, ஐந்தாறுபேர்களும் இருப்பார்கள், இவர்களில் இருவர் சந்ததியுடையவர்கள், மற்ற நால்வர் பாலியத்தில் மரிப்பார்கள், ஆயுள்வரை இவள்சுகியாவாள், ஜாதகனுடைய நாற்பதாம் வயதில் மரிப்பாள்.

(87) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி லக்கின பாவாதிபதி இரண்டாம் பாவத்திலும், சந்திரன் பன்னிரண்டாம் பாவத்திலுமிருந்தாலும், அல்லது செவ்வாயின் வீட்டில் புத சூரியர் கூடியிருந்தாலும் ஜாதகன் தீர்க்காயுசும், தனமும், இருதாரமும் அடைவான்.

(88) ஜென்ம லக்கினம் கன்னி (சுதாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபதி ஐந்தாம் பாவத்திலிருந்து சந்திரன் துலா ராசியில் நான்காங்காலத்தில் இருந்தால் ஜாதகன் சிவபக்த குலத்தில் பாக்

கிய வமிசத்தில் எட்டாவது ஜனனமாக ஜெனனமாகி யோகவானும் கீர்த்திமானுமாவான்.

(89) ஜென்ம லக்கினம் கன்னி (நாடி அம்ச சுதாம்ச பூர்வ பாகம்) ஆகி ஐந்தாம் பாவத்தில் நான்காம் பாவாதிபதியும், லக்கின பாவாதிபதியும் கூடியிருந்தால் ஆரண்ணியப் பிராந்தியத்தில் பெரிய கிராமத்தில் கிழக்கு மேற்கு வீதியில் சிவாலய விஷ்ணு ஆலயங்களுள்ள ஊரில் தெற்கு வாடையிலுள்ள தகப்பன் வீட்டில் ஜனனமும், உத்தரபாகத்தில் தாய் வீட்டில் ஜனனமும் அடைவான்.

(90) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி ஐந்தாம் பாவத்தில் ஒன்பதாம் பாவாதிபதியும் சூரியனும் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் சுகமடைவான்.

(91) ஜென்ம லக்கினம் கன்னி (சுதாம்சம்) ஆகி எட்டாம் பாவாதிபதி தசம கேந்திரத்திலிருந்து சந்திரன் மீன ராசியில் நான்காங் காலத்திலிருந்தால் ஜாதகன் சிவபக்த குலத்தில் நான்காவது கெற்பத்தில் மூத்த சகோதரனில்லாதவனாகவும், அன்றி இருந்தாலும் மூத்தவன் மரிக்கும் யோகமுடையவனாகவும் ஜனிப்பான், ஜாதகனுக்கு இரு மூத்த சகோதரிகள் உண்டு, அவர்களில் ஒருத்தி புத்திர சந்தானமுடையவள், வேறு ஒருத்தி சந்தானமில்லாதவளாகிப் புண்ணிய தீர்த்த ஸ்நானத்திற்குப் போகுமிடத்தில் விஷபேதியால் மரிப்பாள், ஜாதகன் இளைய சகோதரி புத்திரீ புத்திரருடையவள், ஜாதகன் சகோதரனில்லாதவன்.

(92) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி சுதாம்ச பூர்வபாகத்தில் ஜனித்தவனுக்கு லக்கின பாவாதிபதி கேந்திர பாவத்திலும், நான்காம் பாவாதிபதி பன்னிரண்டாம் பாவத்திலும் இருந்தால் நதிப் பிராந்திய புண்ணிய க்ஷேத்திரத்தில் சிவாலயத்துடன் கூடிய அடர்ந்த கிராமத்தில் வடக்குத் தெற்கு வீதியில் மேற்குமுக வாயிற்படியுள்ள தகப்பனுடைய வீட்டில் ஜனனமும், உத்தரபாகத்தில் ஜனித்தவனுக்கு கிழக்கு மேற்கு வீதியில் தாய் வீட்டில் ஜனனமும் நேரிடும்.

(93) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி லக்கின பாவாதிபதி பத்தாம் பாவத்தில் சிம்மாசனம்சத்திலும், பத்தாம் பாவாதிபதி கோபுராம்சத்திலும், ஐந்தாம் பாவாதிபதி சுய க்ஷேத்திரத்தில் சோபனம்சத்திலும், நான்காம் பாவாதிபதி விரய பாவத்திலும், இருந்தால் ஜாதகன் சகல தோஷங்களும் விலகிச் சுகமடைவான்.

(94) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி மேஷ ராசியில் சுக்கிரன் பாரிஜாதாம்சத்தில் இருந்து குரு சிம்ம ராசியில் ஐராவதாம்சத்தி

லும், சந்திரன் மீன ராசியில் பாராவதாம்சத்திலும் இருந்தால் ஜாதகன் சகல அரிஷ்டங்களும் விலகி தீர்க்காயுளும் யோகமும் கீர்த்தியும், அறிவும், மந்திராலோசனை செய்யும் திறமையும், அதிக சம்பத்தும், தனமும், கீர்த்தியும் அடைவான்.

(95) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி ஆறுக்கும் எட்டுக்குமுடைய பாவாதிபதிகள் நீச்சராசிகளிலிருந்து அந்தஸ்தானுதிபதிகள் தன் உச்ச சொக்ஷேத்திரங்களில் மூலத்திரிகோணங்களிலிருந்தாலும் லக்கின பாக்கிய பாவாதிபதிகள் பலத்துடன் கூடி இப்படி இருந்தாலும், ஜாதகன் அரசனுக அல்லது அரசனுக்குச் சம தனமுடையவனுக ஆகி சகல வலுவுடனும் சாசுவதமான ஐசுவரியமுடையவனுகவும் ஆவான்.

(96) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி இரண்டாம் பாவாதிபதி எட்டாம் பாவத்திலும் சந்திரன் ஏழாம் பாவத்திலுமிருந்து, செவ்வாய் புதனுடன் கூடி புதனுடைய க்ஷேத்திரத்திலும் இருந்து சிம்ம நவாம்சத்தில் ஷை சுக்கிரன் இருந்தால் ஜாதகன் தீர்க்காயுள், இரண்டு தாரம், கிராமாதிபத்தியம்முதலிய உடைய பிரபு ஆவான், பதினுறு வயதிற்குமேல் யோகமிக்க யோகமும், மேற்படி யோகம் முப்பது வருஷம் துடர்ந்து அதிக சம்பத்தும், புத்திரன், மனைவி முதலிய சுகத்துடனும், இஷ்ட தேவதையின் அருளுடனும் நடக்கும், மேலும் புத்திர சந்தானமுடையவனுவான்.

(97) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி வாகன ஸ்தானமான நான்காம் பாவத்திற்கதிபதியாகிய குரு பன்னிரண்டாம் பாவத்தில் லாபாம்சமாகிய கடக நவாம்சத்திலிருந்தால் ஜாதகன் பூர்வபாகத்தில் வாகன மில்லாதவனுவான், பின் வயதில் வண்டி வாகனமுடையவன், இஷ்ட தேவதையின் அருளாலும், தைவானுக்கிரகத்தாலும் வியாபாரத்தில் லக்ஷ்மீகடாக்ஷமடைவான்.

(98) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி ஐந்தாம் பாவாதி சுய க்ஷேத்திரத்தில் ஐந்தாம் பாவத்திலேயே கேதுவுடன் கூடியிருந்து மிதுன ராசியில் இருக்கப்பட்ட செவ்வாயால் பார்க்கப்பட்டால் ஜாதகன் சந்தானத் தடையுடையவனுவான், சாந்தி செய்தால் சந்தானமுண்டாகும்.

(99) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி ஐந்தாம் பாவாதிபதியாகிய சனி சுய க்ஷேத்திரத்திலும் புத்திர காரகனுகிய குரு பன்னிரண்டாம் பாவத்திலுமிருந்து ஒருவருக்கொருவர் ஷஷ்டாஷ்டகமாகி புத்திர ஸ்தானத்தைக் குரு பார்க்காமலிருந்தால் ஜாதகனுக்குப் புத்திர சந்தானத் தடையேற்படும்.

(100) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி ஐந்தாம் பாவாதிபதி வக்கிரமாகி, கேதுவுடன் கூடி ராசியில் மகர ராசியிலும், நவாம்சத்

தில் கும்பத்திலுமிருந்து, புத்திர காரகனாகிய குருவும் வக்கிரம டைந்து தன் உச்சாம்சத்திலிருந்தால் ஜாதகனுக்கு புத்திர சந்த திக்கு மனைவியிடம் கருத்தரிக்கினும் கர்ப்பசிராவம் உண்டாகும், இத்தோஷங்களுக்குச் சாந்தி செய்தால் புத்திர சந்தானம் உண் டாகும், மேலும் புத்திர ஸ்தானாதிபதியாகிய சனி சுயக்ஷேத்திரத்தி லிருக்கும் தோஷம் ஒராவது, அங்கு அவர் கேதுவுடன் கூடியிருந் தால் ஏற்படும் தோஷம் இரண்டாவது, நவாம்சத்தில் ஷஷ்டாம் சத்திலிருக்கும் தோஷம் மூன்றாவது, புத்திர காரகனாகிய குரு பன்னிரண்டாம் பாவத்திலிருந்தால் ஏற்படுந் தோஷம் நான்கா வது, புத்திர காரகனும், புத்திர ஸ்தானாதிபதியும் ராசி நவாம்சங் களில் ஷஷ்டாஷ்ட மத்திலிருக்கும் தோஷம் ஐந்தாவது, புத்திர ஸ்தானாதிபதி சத்துரு சேர்க்கை சத்துரு ராசியிலிருத்தல் இவற் றால் ஏற்படும் தோஷம் ஆறாவது, புத்திர ஸ்தானாதிபதி புத்திர காரகன் வக்கிரமடைதலாலேற்படும்தோஷம்ஏழாவது, புத்திரஸ்தா னாதிபதி ராகு கேதுக்களுடன் கூடியோ ராகு கேதுக்களால் பார்க்கப் பட்டோ இருந்தால் ஏற்படும் தோஷம் எட்டாவது, புத்திர ஸ்தானா திபதி சுயக்ஷேத்திரத்திலிருந்து சத்துரு வீட்டிலிருக்கும் செவ்வா யால் பார்க்கப்படுந்தோஷம் ஒன்பதாவது, ஆகிய ஒன்பது விதமான தோஷங்களுக்காக யுக்தப்படி சாந்திசெய்யவேண்டும், இக்காரணங் களால் ஜாதகனுக்கு விவாகமாகி மனைவியிடம் கர்ப்பாதானத்தின் பிறகு பதினெட்டு வருஷம்வரை புத்திரப்பிரதிபந்த தோஷத்தினால் சந்தானமின்றியிருந்து, ஜாதகனுடைய முப்பத்தைந்தாம் வயதிற் குப் பிறகு பிராம்மணன் மூலமாக புத்திரப் பிரதிபந்த சாந்தி செய் தால் முப்பத்தாறும் வயதில் புத்திர சந்தான யோகமும், முப்பத் தேழும் வயதில் சந்தான உற்பத்தியும் ஏற்படும்.

(101) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி ஐந்தாம் பாவாதிபதி உச்ச ராசியிலிருந்து புத்திர காரகனான குருவால் பார்க்கப்பட்டா லும், லக்கினாதிபதியும் குருவால் பார்க்கப்பட்டால் ஜாதகன் சந் தேகமின்றி புத்திரனுடையவனாவான்.

(102) ஜென்மலக்கினம் கன்னி ஆகி ஏழாம்பாவாதிபதியாகிய குரு பன்னிரண்டாம் பாவத்திலிருந்து, சுக்கிரன் கேந்திரத்தி லிருந்து ஏழாம் பாவம் சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகன் இரு மனைவியரடைவான், ஜாதகனுடைய மூத்த மனைவி ஜாதகனுடைய அம்மான் புத்திரியாவாள், அவள் பாக்கியமுள்ள வமிசத்தில் பிறந் தவள், அந்த ஆஸ்தியையும் ஜாதகன் அடைவான், பிறகு ஜாதகன் முப்பத்து மூன்றிலல்லது முப்பத்திநான்காம் வயதில் இரண்டாம் விவாகமடைவான், இவள் சற்று சாமானிய பாக்கியமுடைய வீட் டுப்பெண் ஆவாள், ஜாதகனுக்கு இவளிடம் ஆறு கெற்பமுண்டாகி இரண்டு கர்ப்பம் நஷ்டமாகும், மற்ற நான்குபேர் பிறந்து சுகியா

யிருப்பார்கள், மூத்த மனைவியுடனும், இரண்டாம் மனைவியுடனும் ஜாதகன் வெகுநாள் சுகியாகி, புத்திரி புத்திரருடையவனாகவும், பௌத்திர விருத்தியுடையவனாகவும், ஆயுள்வரை இரு மனைவியரு டனும் சுகியாயிருப்பான்.

(103) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி ஒன்பதாம் பாவாதிபதி எட்டாம் பாவத்திலிருந்து சூரியன் பங்கஜாம்சத்தில் ஒன்பதாம் பாவத்திலிருந்தால் ஜாதகன் தகப்பன் கல்வி அறிவுடையவன், விவேகி, ஜாதிக்குத்தகுந்த வித்தையை அறியும் சமர்த்தன், சுக முடையவன்.

(104) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி நான்காம் பாவாதிபதி தன் உச்சாம்சத்தில் பன்னிரண்டாம் பாவத்திலும், சந்திரன் கேந் திர ராசியில் சிம்ம நவாம்சத்திலுமிருந்தால் ஜாதகன் தாய் மத்திம வயதுடையவள், சாத்துவீகம், சுத்தம், பதிபக்தி, வமிசவிருத்தி புண்ணியம் முதலியன உடையவள்.

(105) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி மூன்றும் பாவாதிபதி யாகிய செவ்வாய் கேந்திரத்தில் லக்கின பாவாதிபதியுடன் கூடி யிருந்தால் ஜாதகனுடைய மாமனார் பாலியத்தில் அற்ப யோக முடையவன், அவனுடைய தகப்பனும் பாலியத்தில் மிதமான பாக்கியமுடையவன், ஜாதகனுடைய மாமனார் மத்திய வயதில் யோகமுடையவனுவான், வியாபாரத்தில் சாயநூல் வியாபாரத்தி லும், கிரய விக்கிரயத்திலும் சம்பாதனையில் லாபமடைவான்.

(106) ஜென்ம லக்கினம் கன்னி (சுப்பிரபாம்சம்) ஆகி இரண் டாம் பாவாதிபதி வர்க்கோத்தமாம்சத்திலும் சந்திரன் மூன்றும் பாவத்தில் நான்காங் காலத்திலுமிருந்தால் ஜாதகன் சிவபக்த குலத் தில் மூன்றுவது அல்லது நான்காவது கெற்பத்தில் ஒரு மூத்த சகோதரனும், ஒரு மூத்த சகோதரியுமுடையவனாக இரட்டைப் பிறவியாக (அதாவது கூட ஒரு பிறப்புடையவனாகி)ப் பிறப்பான்.

(107) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி சுப்பிரபாம்ச பூர்வ பாகத்தில் லக்கின பாவாதி பஞ்சம பாவத்தில் நான்காம் பாவாதி பதியுடன் கூடியிருந்தால் ஜாதகன் நதிப்பிராந்திய புண்ணியக்ஷேத் திரத்தில் சிவாலய விஷ்ணு ஆலயங்கள் அதிகமாக உடைய கிரா மத்தில் கிழக்கு மேற்கு வீதியில் வடக்கு வாடையில் தகப்பன் விட்டில் ஜனனமும், உத்தர பாகத்தில் பிறந்தவனுக்கு அடர்ந்த கிராமம் அல்லது பட்டிணத்தில் வடக்குத் தெற்கு வீதியில் மேற்கு முக வாயிற்படியுள்ள வீட்டில் ஜனனமும் அடைவான்.

(108) ஜென்ம லக்கினம் கன்னி (கலுஷாம்சம்) ஆகி இரண் டாம் பாவாதிபதி ஐந்தாம் பாவத்தில் இருந்து சந்திரன் நீச்ச ராசி யில் விப்பிர காலத்தில் இருந்தால் ஜாதகன் விப்பிர குலத்தில்

நான்கல்லது ஐந்தாவது கெற்பத்தில் ஜனித்து சுகியாவான், ஜாதகனுக்கு ஒரு மூத்த சகோதரன் பாலியத்தில் மரித்து விடுவான், மூன்று சகோதரிகளுடையவன், இவர்களில் ஒருத்தி புத்திர சந்தானமுடையவளாகி மத்திய வயதில் சுமங்கலியாகவே மரிப்பாள், வேறு ஒருத்தி விதவையாகி சுகியாயிருப்பாள், வேறு ஒருத்தி புத்திர சந்தானமுடையவள், அற்பமான ஒரு துஷ்ட தேவதை உபாசனை உடையவள், ஜாதகன் ஒரு இளைய சகோதரியுமுடையவன், இளைய சகோதரனில்லாதவன்.

(109) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி ஒன்பதாம் பாவாதிபதியும் சூரியனும் கூடி நான்காம் பாவத்திலிருந்து கடகாம்சத்தில் நவாம்சத்திலுமிருந்து இரண்டாம்பாவாதிபதியும்ஷெநவாம்சத்தில் சுப்பிரபாம்சத்தில் சூரியனுடன் கூடியிருந்தால் ஜாதகன் தகப்பன் மத்திம வயதுடையவன், ஹரிசங்கர பக்தியுடையவன், கல்வி அறிவுடைய விவேகி, ரூபலக்ஷணமுடையவன், இரண்டு பாஷைகளில் அல்லது மூன்று பாஷைகளில் மேலான ஞானமுடையவனுவான்.

(110) ஜென்ம லக்கினம் கன்னியாகி நான்காம் பாவாதிபதி நான்காம் பாவத்திலும் சந்திரன் நீச்சராசியிலுமிருந்தால் ஜாதகன் தாய் தீர்க்க வயதும் ரூபலக்ஷணமும் உடையவள், பதிபக்தியில்லாதவள், ஏழுகெற்பம் பிரசவிப்பவள், ஜாதகனுடைய தாய் ஜாதகனுடைய ஐந்தாம் தெசையில் மரிப்பாள்.

(111) ஜென்மலக்கினம் கன்னி (சம்பகாம்சம்) ஆகி பிறந்த ஜாதகம் பெண் ஜாதகமானுல் ஒன்பதாம் பாவாதிபதி இரண்டாம் பாவத்தில் வர்க்கோத்தமத்தில் இருந்து சந்திரன் விப்பிர காலத்தில் இருந்தால் ஜாதகி விப்பிர குலத்தில் நான்காவது கெற்பத்தில் ஜனித்தவள் ஆவாள்.

(112) ஜென்ம லக்கினம் கன்னி சம்பகாம்சம் பூர்வபாகமாகி நான்காம் பாவாதிபதி ஏழாம் பாவத்தில் கேந்திரத்தில் இருந்து லக்கின பாவாதிபதி லக்கின கேந்திரத்திலிருந்தால்,ஜாதகி வனப் பிராந்தியத்தில், அல்லது மலைப் பிராந்தியத்தில் சிவாலயம் விஷ்ணு ஆலயம் முதலிய உடைய ஊரில் தகப்பன் வசிக்கும் வீட்டில் அல்லது பிறர் வீட்டில் ஜனனமும், உத்தர பாகத்தில் தாய் வீட்டில் ஜனனமும் அடைவாள்.

(113) ஜென்ம லக்கினம் கன்னி (விக்கிரமாம்சம்) ஆகி பதினோராம் பாவாதிபதி நான்காம் பாவத்தில் வர்க்கோத்தமத்தில் விப்பிர காலத்திலிருந்தால் ஜாதகன் விஷ்ணு பக்த குலத்தில் சீமந்தகெற்பத்தில் ஜன்மமடைவான், ஜாதகனுக்கு ஒரு இளைய சகோதரி பிறந்து அந்த பிரசவத்தில் அச்சிசு சூதிகாகிரகத்தில் மரிக்கும்,

ஜாதகனுடைய ஐந்தாம் வயதில் தாய் மேற்படி சூதி தோஷத்தால் பிரசவித்த ஏழாம்நாள் மரிப்பாள்.

(114) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி விக்கிரமாம்ச பூர்வபாகத்தில் பிறந்தவனுக்கு லக்கின பாவாதிபதி எட்டாம் பாவத்திலும், நான்காம் பாவாதிபதி பன்னிரண்டாம் பாவத்திலுமிருந்தால் நதிப்பிராந்தியத்தில் சிறிய கிராமத்தில் மூன்று அல்லது நான்கு வீடுகளுள்ள இடத்தில், கிழக்கு மேற்கு வீதியில் வடக்கு வாடையில் தாய் வீட்டில் ஜனனமும், உத்தர பாகத்தில் தகப்பன் வீட்டில் ஜனனமும் நேரிடும்.

(115) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி ஒன்பதாம் பாவாதிபதி ஏழாவது கேந்திர பாவத்தில் உச்ச ராசியில் சூரியனுடன் கூடியிருந்து நவாம்சத்தில் ஷை சூரியன் தனுசில் சந்திரனுடன் கூடியிருந்தால், ஜாதகனுடைய தகப்பன் சௌக்கியமுடையவன், கல்வி அறிவுடைய விவேகி, வாதபித்த சுபாவமுடையவன், தித்திப்பு, புளிப்பு முதலிபவற்றில் பிரீதியுடையவன், சங்கீதப்பிரியன், சுகந்த புஷ்பப்பிரியன், பரஸ்திரீ சங்கம எண்ணமுடையவன், தன் மனைவியிடமும் சுகமுடையவன், இரண்டு எழுத்துகளில் சமர்த்தன், அன்னிய பாஷைகளும் கற்பவன், பிதுரார்ஜித ஆஸ்தி இல்லாதவன், சுயார்ஜிதமுடையவன், ஒன்னறை நிஷ்க உத்தியோகமுடையவன், ஆயுள்வரை உத்தியோக ஜீவனமுடையவன், அந்திய வயதில் ஜாதகன் தகப்பன் அவ்வுத்தியோகத்தை ஜாதகன் பேரில் மாற்றுவான், அப்போது மாதம் சம்பளம் இரண்டு நிஷ்கம் கிடைக்கும், ஜாதகனுடைய ஒரே தாரமுடைய தகப்பன் இரண்டாந்தாரமில்லாதவனுவான்.

(116) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி நான்காம் பாவத்திற்கதிபதி பன்னிரண்டாம் பாவத்திலும் சந்திரன் நான்காம் பாவத்திலுமிருந்து ஷை குருவால் ஷை சந்திரன் பார்க்கப்பட்டால் ஜாதகனுடைய தாய் சௌக்கியமும், இரண்டு சகோதரருமுடையவள், இவர்கள் புத்திரீ புத்திர வமிச விருத்தியுமுடையவர்கள், ஜாதகனுடைய தாய்க்கு எட்டு ஒன்பது சகோதரிகள் பாலியத்தில் மரிப்பார்கள், வேறு ஒருத்தி வமிசவிருத்தியுடையவளாகி சுமங்கலியாய் மரிப்பாள், ஜாதகனுடைய தாய் ஜாதகனுடைய ஐந்தாம் வயதில் மரிப்பாள், ஜாதகன் தாய்ப்பாட்டியின் வீட்டில் வளர்ந்து (வருவான்) கல்வியும் கற்பான், பிராம்மண ஜன்ம ஜாதகனுல் ஜாதகனுக்கு அம்மானுல் பலவந்தமாக விவாகமும், பிறகு பிரபல உத்தியோகமும், வேறு தேசத்தில் பிரபுவினுல் உத்தியோக லாபமும், அங்கு ஒரு மகாபுருஷனுடைய சேர்க்கையும், ஸ்ரீ ராம மந்திர உபதேசமும், ஹரிகதை பஜனேயும், உத்தியோக சுகமும், மனச்சந்துஷ்டியும் ஏற்படும்.

துலா லக்கினம்

(1) ஜென்ம லக்கினம் துலாம் (ஈசுவரியம்சம்) ஆகி விப்பிர காலத்தில் ஜனித்தவனுக்கு லக்கின கேந்திரத்தில் செவ்வாயிருந் தால் ஜாதகனுடைய தாய் பிரசவ காலத்தில் அதிக வேதனையடை வாள், அப்போது சந்திரன் நீச்ச ராசியிலிருந்தால் கொஞ்சம் சூதி தோஷ பயமுண்டாகும்.

(2) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி லக்கின பாவத்தில் செவ் வாய் கேதுவுடன் கூடியிருந்தால் ஜாதகன் விசேஷமாக பாலதோஷ மடைவான், அக்காலம் சந்திரனுக்குப் பிரீதி செய்தால் குணமுண் டாகும், மேலும் வெள்ளியால் சந்திரப் பிரதிமை செய்து அதை யும் பாலகிருஷ்ண பிரதிமையும் தானம் செய்தால் பாலரோ கம் நிவாரணமாகும், ஜாதகன் பிறந்த ஒரு வருஷம் வரை மாதுரு தோஷமுண்டாகி இரண்டாம் வருஷம் தாய்க்குச் சுகமுண்டாகும்.

(3) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி லக்கின பாவாதிபதி குரு வினுடைய ராசியான தனுசு ராசியில் குருவுடன் கூடியிருந்தால், எட்டாம் பாவாதிபதியுடனும் கூடியிருந்தால் ஜாதகனுக்கு சர்வ தோஷங்களும் நிவாரணமாகும், ஐந்தல்லது ஆறு வருஷம் வரை பாலரோகத்தால் பீடையடைவான், மாதாமகனுடைய புண்ணி யத்தால் தேகாரோக்கியமுண்டாகி தீர்க்காயுளாக எழுபது வயத டைவான்.

(4) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி சூரியன் செவ்வாயுடனும் ஒன்பதாம் பாவாதிபதியுடனும் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் தீர்க்க வயதடைவான், சிவ பக்தி மதத்தையடைந்தவன், பூமியால் சுகமுடையவன், சொற்ப வித்தையுடையவன், மேற்படி சூரியனே நீச்சராசியில் செவ்வாயுடன் கூடியிருந்தால் ஜாதகனு டைய தகப்பன் அனுச்சாரமுடையவன், கொஞ்சம் மூர்க்க சுபாவ முடையவன், தேவப் பிராம்மண பக்தியுடையவன், தாய் தகப்பன் சுகமுடையவன், மனைவி வர்க்கத்தாலும் சுகமுடையவன், ஜாதக னுடைய பிதாமகன் தீர்க்காயுசுடையவன், உத்தியோகமில்லாமல் தேசாந்திரம் முதலிய சஞ்சாரமுடையவனுகி திரவிய சம்பாதனை யில் சமர்த்தனுகவும், வயோதிக வயதில் சித்த சித்தியுடையவனுக வும் இருந்து ஜாதகனுடைய ஜன்ம திசையில் மரிப்பான், ஜாதகனு டைய தகப்பன் ஜாதகனுடைய ஐந்தாந்திசையில் மரிப்பான்.

(5) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி நான்காம் பாவாதிபதியா கிய சனி கும்ப ராசியில் வலுவுடனிருந்தால், சந்திரன் நீச்ச ராசி யிலிருந்தாலும் ஜாதகன் தாய் சௌக்கியமும், குணமும், சுத்த

மும் உடையவள், உடன்பிறப்பில்லாதவள், தைவயோகமுடைய வள், ஜாதகனுடைய மாதாமகியும் தைவ யோகமுடையவள், இதற்கே நான்காம் பாவத்தைச் செவ்வாய் பார்த்தால் ஜாதகன் பிறந்த வருஷத்தில் தாய் கிரகசங்கை பீடையுடையவள் ஆவாள், அதனுல் ஜாதகன் பிறந்த வருஷத்தில் ஜாட்டியமடைந்து இரண்டாம் வயதில் சுகமடைவாள், ஜாதகனுடைய தாய்ப்பாட்டன் பிரசித்தமுடையவன், ஞானி, தத்துவ விவேகமுடையவன், சித்த வித்தையில் பிரியமுடையவன், அன்ன தானம் செய்பவன், சிவ கீர்த்தனை செய்பவன், புண்ணியாத்துமா, சித்த தரிசனமுடையவன், தாது வாதம் முதலியன செய்பவன், வயோதிக வயதில் ரசவாதம் செய்பவனுவான்.

(6) ஜென்ம லக்கினம் துலாம் (சுமதியம்சம்) ஆகி சந்திராரூடாதிபதியாக செவ்வாய் ஆகி அவர் சனியின் ராசியில் இருந்தால் ஜாதகனுக்கு பாஞ்சராத்திரம் என்று சொல்லப்பட்ட விஷ்ணுவின் மதத்தை அனுசரித்த மத்துவர்களுடைய ஆச்சாரமுடையவனுக நதி தீரத்தில் ஜனனமும் வாசமும் ஏற்படும்.

(7) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி சந்திரன் மீனராசியில் ராகுவுடன் கூடியிருந்தால் ஜாதகன் கொடிசுற்றிப்பிறப்பான்.

(8) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி உபலக்கினத்தில் கேது இருந்தால் ஜாதகன் தாய் பிரசவத்தில் அதிக வேதனை அடைவாள், இப்படிக் கிரகமிருந்து சந்திரன் ராகுவுடன் கூடியிருந்தால் சூதிதோஷ பயமுண்டாயினும் முன் புண்ணிய வசத்தினுல் சுகமுண்டாகும், ஆயினும் ஆறு வருஷம்வரை பால தோஷ முண்டாகும்.

(9) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி லக்கின பாவாதிபதி ஒன்பதாம் பாவத்தில் ஒன்பதாம் பாவாதிபதியுடன் கூடியிருந்து லக்கினத்திற்கு மூன்றும் பாவத்தில் சனியும் இருந்தால் ஜாதகனுக்குப் பாலதோஷத்தினின்றும் சுகமுண்டாகும்.

(10) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி லக்கினரூடத்தில் செவ்வாய் கும்ப ராசியிலிருந்து எட்டாம் ஆரூடபதியாகிய சந்திரன் மீனராசியிலிருக்கப் பிறந்தவன் பாலதோஷம் விலகி எழுபத்து மூன்று வயதடைவான், ஐம்பத்தொன்பது அல்லது அறுபதில் தேகபீடையுண்டாகும், பித்த ஜுரத்தாலும், ரக்த சோகையாலும் பாதை ஏற்படும், ஆடு தானத்தினுல் சுகமடைவான்.

(11) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி சூரியன் சத்துரு ராசியில் இருந்து சிம்மாரூடத்தில் செவ்வாயிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் அற்ப சுகமுடையவன், விஷ்ணு பக்தியுடையவன், மத்து

வாச்சார மதத்தை அடைவான், க்ஷேத்திரத்தினால் சுகமடைவான், தனக்குச் சமமானவர்களுடன் சிநேகமடைவான், வைதீகாச்சாரம் நிரம்பியவன், தேவப் பிராம்மண பக்தி உடையவன், மதசாஸ்திரப் பிரவர்த்தகன், வேதாந்த ஞானமுடையவன், பிரபுக்களால் சுகமுடையவன்.

(12) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி சந்திரனும் ஒன்பதாம் ஆருடாதிபதியும் ராகு கேதுக்களுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் அற்ப பாக்கியமுடையவனாகி ஜாதகனுடைய ஜன்மதிசையிலேயே மரித்துவிடுவான்

(13) ஜென்மலக்கினம் துலாம் ஆகி நான்காம்பாவத்தில் நீச்சக் கிரகமிருந்து சந்திரன் மீனராசியில் ராகுவுடனும் கூடியிருந்துநான்காம் பாவாதிபதி தனுசுராசியில் காதாம்சத்தில் இருந்தால் ஜாதகனுடைய தாய் பாலியத்திலேயே ஜாதகனுடைய இரண்டாம் வயதில் இறந்துவிடுவாள், ஜாதகன் மாற்றாந்தாயுடையவனாவான்.

(14) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி மூன்றும் பாவத்தில் சனியிருந்தால் ஜாதகன் ஒண்டியாகி சகோதரனில்லாதவனாவான்.

(15) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி நீசபங்க ராஜயோகத்தில் குஜ திரிம்சாம்சத்தில் பிறந்தவன் கறுப்பு நிறமுடையவன், சமதேகமுடையவன், சூட்டுத்தேகமுடையவன், மேதாவீ, கல்வி அறிவுடைய விவேகி, ரூபலக்ஷணமும் தேவப் பிராம்மண பக்தியுமுடையவன்.

(16) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி லக்கினாரூடத்தில் கும்பராசியில் செவ்வாயிருந்தால் ஜாதகன் சூட்டுத்தேகமுடையவன், கொஞ்சம் ரோகசரீரமுடையவன், மேகவாயு பீடையுமுடையவன், இதற்கே சுக்கிரன் ஒன்பதாம் பாவத்திலிருந்தால் ஜாதகன் சந்தன புஷ்ப வஸ்திர அலங்காரப்பிரியன், நாடகாலங்காரமறிவான், தாமத சுபாவமுடையவன், ஷை சுக்கிரனே புதனுடன் கூடியிருந்தால் ஜாதகன் கல்வியும் சரசமும் உடையவன், சாத்துவீக குணமுடையவன், பரோபகாரமுடையவன்.

(17) ஜென்ம லக்கினம் துலாம் (சங்கரியாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி கடகராசியில் நிர்மலாம்சத்திலிருந்து விப்பிர காலத்தில் பிறந்தவன் விப்பிரகுலத்தில் சகோதரிகளுடையவனாகவும், சகோதரனில்லாதவனாகவும், சிவபக்த குலத்தில் ஆசையுடையவனாகவும் ஆவான்.

(18) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி சந்திரனுக்கு இரண்டாமிடத்தில் கன்னியாராசியில் குரு இருந்து, சந்திரன் பாக்கியாம்சத்தில் இருந்தால் ஜாதகன் நதிதீரத்தில் பெரிய கிராமத்தில், அக்கிர

காரத்தில் சிவபக்த குலத்தில் பாக்கியமுள்ள வமிசத்தில் ஜனன மடைவான், மேலும் இதற்கே நான்காம் பாவாதி சூரியனுடன்கூடி (சிம்மராசியில்) இருந்தால் சூரிய வாஸ்துவில் ஜாதகன் நிச்சயமாக ஜனனம் அல்லது வாசமாவது அடைவான்.

(19) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி லக்கின பாவாதிபதியாகிய சுக்கிரன் கேந்திரத்தில் கடகராசியில் இருந்து எட்டாம் பாவாதிபதிக்கு மூன்றுமிடத்தில் குரு இருந்து, சந்திரனுக்கு ஷெ குரு இரண்டாமிடத்தில் இருந்தால் ஜாதகன் பாலதோஷங்கள் விலகி சுகமுடையவனுவான்.

(20) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி லக்கினபாவாதிபதி சர (கடக) ராசியிலும், எட்டாம் பாவாதிபதியும் சர ராசியிலுமிருந்து ஹோராலக்கினமும் சரமானல் ஜாதகன் தீர்க்காயுளாக அறுபத்தெட்டு வயதடைவான், ஐம்பது ஐம்பத்தாறு இந்த வயதுகளில் தேகபீடையடைவான், அக்காலம் சாந்திசெய்தால் ஜாதகன் சுகமடைவான்.

(21) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி சூரியன் தன் மூலத்திரிகோணராசியிலிருந்து, ஒன்பதாம் பாவாதிபதியாகிய புதனுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் சௌக்கியமுடையவனுவான், சந்திரனுடனும் புதனுடனும் ஷெ சூரியன் அங்கு கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் வெகு ஆயுளடைவான்.

(22) ஜென்மலக்கினம் துலாம்ஆகி சுக்கிரன் பிதுராரூடாதிபதியானல் ஜாதகனுடைய தகப்பன் பாக்கியவானுவான், உடன்பிறந்த மூன்று சகோதரருடையவன், சிவபக்தமதத்தையடைவான், க்ஷேத்திர சுகமுடையவன், பிதுரார்ஜித க்ஷேத்திரத்தால் ஜீவனம் செய்பவன், சுயார்ஜிதமும் சம்பாதிப்பவன், பிதுராரூடாதிபதியாக சுக்கிரன் ஆவதற்கு சிம்மம் கும்பம் இந்த ராசிகளில் புதன் இருந்தால் சுக்கிரன் பிதுராரூடாதிபதியாக ஆவார்.

(23) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி சூரியன் சுய க்ஷேத்திரத்தில் சனி கேது இவர்களுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் கொஞ்சம் லோபகுணமுடையவன், எப்போதும் பயிர் செய்பவன், தேவப் பிராம்மண பக்தியுடையவன், கொஞ்சம் அனுச்சாரமுடையவன், இரு தாரமுடையவன், இரு மனைவியரிடத்திலும் புத்திரருடையவன், சாந்திசெய்து சுகமுடைய இரு புத்திரருடையவனுவான், நேர்மையான புத்தியுடையவன், அற்ப கல்வியால் சுகமுடைடயவன், ஜாதகனுடைய நான்காந்திசையில் ஜாதகனுடைய தகப்பன் மரணமடைவான்.

(24) ஜென்ம லக்கினம் துலாம்ஆகி நான்காம் பாவாதிபதி பதினோராவது பாவத்திலிருந்து சந்திரனுக்கிரண்ட

மிடத்தில் குரு, கன்னியாராசியில் இருந்தால் ஜாதகன் தாய் சுகமடைவாள், எப்போதும் சற்குணமுடையவள், அற்பபுத்திரவதி, சுகி, புத்திர சோகமுடையவள், ஜாதகனுடைய தாய் ஜாதகனுடைய ஐந்தாவது திசையில் மரிப்பாள்.

(25) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி செவ்வாய் குருவுடன் கூடியிருந்து லக்கினத்திற்குப் பன்னிரண்டாம் பாவத்திலிருந்தால் ஜாதகன் சகோதர சோகமுடையவனுவான், மூத்த சகோதரனில்லாதவன், இளைய சகோதரனுல் கிலேசமுடையவன், இரண்டு அல்லது மூன்று சகோதரிகளுடையவன்.

(26) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி மாளவீயோகத்தில் குஜத்திரிம்சாம்சத்தில் பிறந்தவன் வெளுப்பு நிறமுடையவன், சூட்டுத்தேகமுடையவன், அழகியவன், பித்த தேகமுடையவன்.

(27) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி லக்கின பாவாதிபதியாகிய சுக்கிரன் கேந்திர பாவத்திலிருந்தால் ஜாதகன் ஜன்மம் முதல் சுகமுடையவன், புகழுடையவன், சமர்த்தன், சொற்ப கல்வியுடையவன், எழுதுவதில் சமர்த்தன், க்ஷேத்திரமூலம் ஜீவனமுடையவன், சகோதரனில்லாதவன், சகோதரியுடையவன்.

(28) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி குரு உபலக்கினத்திலிருந்தால் ஜாதகன் தேவப் பிராம்மண பக்திஉடையவன், விசேஷ சிவபக்தி உடையவன், எப்போதும் பயிர்த்தொழிலுடையவன், க்ஷேத்திரம், தனம், பசு முதலியன சம்பாதிப்பவன், உபாயத்தால் காரியசாதனையடைவான், பிதுரு சுகமுடையவன், பிதாமகனும் சுகமுடையவன், ஜன்மம் முதலாக சுகமுடையவன், மத்திய வயதில் சுகமுடையவன், பதினாறு வயதிற்குமேல் பிரசித்தியுடையவன், பயிர்த்தொழில் செய்பவன், தியாகம் போகம் முதலிய உடையவன், அரசாங்க (வாயிலாக) பிரசித்தியடைபவன், கீர்த்தியடைவான், வயோதிக வயதிலும் கீர்த்தியுடையவன், ஆயுள் உள்ள மட்டும் சுகமுடையவனுவான், ஜன்ம திசையில் இருபத்தேழுநாள் பாலியத்தில் பாலரோகமுண்டாகும், பிதாமகனுடைய புண்ணிய வசத்தினுல் சுகமுண்டாகும், ஐந்தாவது வயதில் அக்ஷராப்பியாசமும் (பிராம்மண ஜாதகனுக்கு எட்டாவது வயதில் உபநயனமும்) நடக்கும், ஜாதகன் ஒன்பது அல்லது பத்து, அல்லது பன்னிரண்டு இந்த வயதில் பாலிய சமயம் விவாகமடைவான், ஜன்ம தேசத்திலேயே பந்து வர்க்கத்தில் பாக்கியமுள்ள வமிசத்தில் ரூபசாலியான மனைவியை மணப்பான், முன் பாபவசத்தினுல் சொர்ணலிங்க தானம், பாலகிருஷ்ண தானம் முதலிய செய்தபிறகு காலங்கடந்து புத்திரன் பிறப்பான், இரண்டு புத்திரரும் இரண்டுஅல்லது மூன்று புத்திரிகளுமடைவான்.

(29) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி பன்னிரண்டாம் பாவத்தில் குரு இருந்தால் ஜாதகன் தேகாந்தியத்தில் நற்கெதியடைவான்.

(30) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி புதன் லக்கின பாவத்தில் ராகுவுடன் கூடியிருந்தால் ஜாதகன் தாய் பிரசவத்தில் அதிக வேதனையடைவாள், அப்போது லக்கினத்திற்கு குருவின் பார்வையிருந்தால் சுகமுண்டாகும்.

(31) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி லக்கினத்திற்குக் குருவின் பார்வையேற்பட்டு சுக்கிரன் சந்திரனுடன் கூடியிருந்தால் ஆறு வருஷம் வரை தோஷமிருப்பினும் ஜாதகன் சகல தோஷங்களும் விலகி சுகமுடையவனுவான்.

(32) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி லக்கின பாவாதிபதி சந்திரனுடன்கூடி மூன்றாம் பாவத்தில் இருந்து லக்கின பாவத்தைக் குரு பார்த்தாலும், குரு கேந்திர திரிகோணங்களிலிருந்தாலும் ஜாதகன் சகல தோஷங்களும் விலகி சுகமடைவான்.

(33) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி லக்கினாரூடத்தில் குரு இருந்து சந்திரன் சுபருடன் கூடியிருந்தால் லக்கினத்தில் பாபரிருந்தாலும் ஜாதகன் பால தோஷம் விலகி அறுபத்தெட்டு வயதடைவான்.

(34) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி தனுசு ராசியில் சந்திரன் மேஷ நவாம்சத்தில் இருந்து, சூரியன் சனியுடன் கூடியிருந்து சூரியனுக்கு கேந்திரத்தில் குரு இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் சுகமடைவான், மத்தியாயுளுடையவன், விஷ்ணு சிவபக்தியுடையவன், வியாபார ஜீவனமுடையவன், பயிர்த்தொழிலிலும் சுகமுடையவன், தேவப் பிராம்மண பக்தியுடையவன், வியாபாரத்தில் சுகமுடையவன், ஷெ சூரியனுடன் சனி கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் அனுச்சாரமுடையவன், கிலேசமடைந்த மனமுடையவன், கொஞ்சம் மூர்க்க சுபாவமுடையவன், துராலோசனை செய்பவன், மிதமான பாக்கியமுடையவன், வயோதிக வயதில் புத்திரன் மூலமாக சுகமுடையவனுவான், ஜாதகனுடைய நான்காந் தெசையில் ஜாதகனுடைய தகப்பன் மரிப்பான்.

(35) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி சந்திரனுக்கு மூன்றுமிடத்தில் குரு இருந்து யோகாம்சத்தில் சுப ராசியிலிருந்தால் சர ராசியில் பிறந்தவனுடைய தாய் சுகமுடையவள், இந்த சந்திரன் குருவின் ராசியான தனுசில் இருந்தால் ஜாதகன் தாய் சற்குண முடையவள், புத்திர புத்திரீ சுகமுடையவளாக ஜாதகனுடைய நான்காவது திசையில் மரித்துவிடுவாள்.

(36) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி செவ்வாய்க்கு மூன்று மிடத்தில் லக்கின பாவத்தில் புதன் ராகுவுடன் கூடியிருந்தாலும், செவ்வாய் கேந்திர ராசியிலிருந்தாலும் ஜாதகன் மூத்த சகோதர னில்லாதவன், ஒரு இளைய சகோதரனுடையவன், வேறு சிலர் இர ண்டு இளையசகோதரருடையவன்என எண்ணுகின்றனர், சகோதரி யுமிப்படியே.

(37) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி தனுசு ராசியில் மேஷ நவாம்சத்தில் சந்திரனிருந்து குரு திரிம்சாம்சத்திலிருந்தால் பத் திரயோகத்தில் பிறந்தவன் கறுப்பு நிறமுடையவன், அறிவாளி, உஷ்ண தேகமுடையவன், கல்வி அறிவுடையவிவேகி, எழுதுவதி லும் வியாபாரத்திலும் சமர்த்தன், இதற்கே லக்கின பாவத்தில் ராகு புதனுடன் கூடியிருந்தால் ஜாதகன் தேவப் பிராம்மண பக்தி யுடையவன், சீக்கிர கோபியாவான், தெளிவுடையவன், வீண்சிலவு செய்யாதவன், பிதுரார்ஜிதத்தினுல் அற்ப சுகமடைவான்.

(38) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி சனி இரண்டாம் பாவத் தில் இருந்தால் ஜாதகன் துராலோசனை செய்பவன், ஆயினும் திர வியத்தில் கண்டிப்புள்ளவன், காரமான வஸ்துப்பிரியன், உள்ளுக் குள் கபடுடையவன், பிறரை வஞ்சிப்பதில் எண்ணமுடையவன், பதினறு வயதிற்குமேல் பிரசித்தியுடையவன், இருபது வயதிற்கு மேல் தனமுடையவன், வியாபாரத்தால் தனம் சம்பதிப்பான், முப்பது வயதிற்குமேல் திரவிய சம்பாதனையில் யோகமுடைய வன், நாற்பது வயதிற்குமேல் விசேஷ பாக்கியமுடையவன், க்ஷேத் திரமூலம் சுகமுடையவன், ஐம்பது வயதிற்குமேல் பாக்கியமுடை யவன், ஆயுள்வரையில் சுகியாயிருப்பான்.

(39) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி சூரியன் மேஷ ராசியில் வர்க்கோத்தமாம்சத்தில் ஏழாம் பாவத்தில் இருந்து சந்திரன் கடக ராசியில் நான்காவது காலத்திலிருந்தால் ஜாதகன் விஷ்ணு பக்த குலத்தில் பாக்கியமுள்ள வமிசத்தில் இரண்டாவது கெற் பத்தில் ஜனனமாவான்.

(40) ஜென்மலக்கினம் துலாம் (வைஷ்ணவாம்சம்) ஆகி பூர்வ பாகத்தில் லக்கின பாவாதிபதி கேந்திரத்தில் ஏழாம் பாவத்திலும், நான்காம் பாவாதிபதி பதினேராம் பாவத்திலும் இருந்தால் ஜாத கன் சமுத்திரப் பிராந்திய சமீபத்தில் சிறிய கிராமத்தில் சிவாலயம் விஷ்ணு ஆலயமிவைகளில்லாத ஊரில் தகப்பன் வசிக்கும் வீட்டில் ஜனனமும், உத்தர பாகத்தில் தாய் வீட்டில் ஜனனமும் அடை வான்.

(41) ஜென்ம லக்கினம் துலாம் (கின்னராம்சம்) ஆகி ஒன்ப தாம் பாவாதிபதியாகிய புதன் பன்னிரண்டாம் பாவத்தில் வர்க்

கோத்தமத்தில் இருந்தால் ஸ்திரீகாலத்தில் பிறந்த ஜாதகி விப்பிர குலத்தில் பிறந்து இரண்டாவது கெற்பத்தில் ஜனனமடைவாள்.

(42) ஜென்ம லக்கினம் துலாம் (கின்னராம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி நீச்ச பாவத்திலும், நான்காம் பாவாதிபதி நான்காம் பாவத்திலுமிருந்தால் ஜாதகன் வனப்பிராந்தியத்திலுள்ள சிறிய கிராமத்தில் சிவாலய விஷ்ணு ஆலயங்களுள்ள இடத்தில் தகப்பன் வீட்டில் ஜனனமும், உத்தரபாகத்தில் தாய்வீட்டில் ஜனனமும் அடைவான்.

(43) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி ஒன்பதாம் பாவாதிபதி பன்னிரண்டாம் பாவத்தில் சுயக்ஷேத்திரத்தில் தன் உச்ச ராசியில் சூரியனுடன் கூடியிருந்தால் ஜாதகியின் தகப்பன் சௌக்கியமடைவான், கல்வி அறிவுடையவன், விவேகி, பயிர்செய்து ஜீவிப்பவன், வைதீக வழியில் தனம் சம்பாதிப்பான், சிஷ்ப வர்க்கத்தாருடன் கூடி பல பல தேசங்களிலும் மேம்பாடாக தனலாபமடைவான், தன் இனப்பிரபுவால் பிரசித்தியுடையவனால் தனலாபமடைவான், ஆயுசுவரையில் யோகமும், சுகமும் உடையவன், ஒரேதாரமுடையவன் ஆவான்.

(44) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி ஐந்தாம் பாவாதிபதியாகிய சனி நான்காம் பாவத்தில் புத்திர பாவத்திற்கு விரய ஸ்தானத்தில் இருந்து, குரு லக்கின கேந்திரத்திலுமிருந்து, ராசியில் கன்னியா ராசியிலும், நவாம்சையில் கும்பத்திலும் சூரியன் இருந்தால் ஜாதகனுக்கு புத்திர சந்தானத் தடையேற்படும், முதலில் ஒரு பெண் பிரஜை பிறந்து அதன் பிறகு பதினெட்டல்லது பத்தொன்பது வருஷம் வரையில் புத்திர சந்தானத்தடையும் ஜாதகி தன் கணவனுடன் கூடியிராமல் (தனியாக புருஷனுடன் வசிக்காமல்) இருந்து கர்ப்பாதானமில்லாமல் இருந்து, பிறகு சாந்திசெய்த பின்பு கர்ப்பாதானத்தினால் புத்திர சந்தானமடைவாள், இந்த தோஷ நிவர்த்திக்காக நாகசாந்தி செய்யின் புத்திர சந்தானமாக ஜாதகியின் முப்பத்தெட்டாம் வயதில் ஒரு புத்திரன் ஜனிப்பான், மேலும் இதற்கே நாராயணபலியும், ஆறுவிரற்கடை வெள்ளியால் சூரிய யெந்திரமும் செய்து, அந்த சூரிய யெந்திரத்தை அருண சூக்த மந்திரத்தில் சொல்லிய விதிப்படி ஒரு மாதமல்லது ஒன்னரை மாதம்வரை பூஜித்து தானம் செய்யின் அப்புத்திரன் தீர்க்காயுசடைவான்.

(45) ஜென்ம லக்கினம் துலாம் (லக்ஷ்மீசாம்சம்) ஆகி பதினோராம் பாவாதிபதி மேஷ ராசியில் வர்க்கோத்தமாம்சத்திலிருந்து சந்திரன் நான்காவது காலத்தில் இருந்தால் ஜாதகன் பாக்கிய வமிசத்தில் கர்ப்ப ஸ்ரீமானாகவும், விசேஷ தனிகனாகவும், இரண்டா

வது கெற்பத்தில் மூத்த சகோதர ஹீனனாகவும் ஜனிப்பான், ஜாதகனுக்கு ஒரு மூத்த சகோதரி உண்டு, அவள் பாக்கிய வமிசத்தில் விவாகமடைவாள்.

(46) ஜென்ம லக்கினம் துலாம் (லக்ஷ்மீசாம்சம்) பூர்வ பாகம் ஆகி லக்கின பாவாதிபதி கேந்திரத்தில் மேஷ ராசியிலும், நான்காம் பாவாதிபதி பதினோராம் பாவத்திலுமிருந்தால் ஜாதகன் சமுத்திர சமீபத்திலுள்ள சிறிய கிராமத்தில் தகப்பன் வீட்டில் ஜனனமும், உத்தர பாகத்தில் தாய் வீட்டில் ஜனனமும் அடைவான்.

(47) ஜென்மலக்கினம் துலாம் ஆகி நான்காம் பாவாதிபதி பதினோராம் பாவத்தில் ராகுவுடன் கூடியிருந்து செவ்வாயால் பார்க்கப்பட்டால் ஜாதகன் தாய்க்குப் பிரசவ காலத்தில் ஜாட்டியமும், ஜாதகனுக்குப் பயமும் உண்டாகும், ஜாதகன் தாய் மரண சமமாக கிடைந்து பிழைப்பாள், அப்போது ஷை நான்காம் பாவாதிபதியுடன் குரு கூடியிருந்தால் ஜாதகனுக்கும் தாய்க்கும் சுகமுண்டாகும்.

(48) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி சூரியன் கேந்திர பாவத்தில் மேஷ ராசியிலிருந்து லக்கினத்திற்கு ஐந்தாம் பாவத்தில் செவ்வாயும் பதினோராம் பாவத்தில் சனியுமிருந்தால் ஜாதகன் பாலாரிஷ்ட பயத்தால் மாந்த ஜுரத்தாலும், வைசூரியாலும் ஆறு வருஷம்வரை பயமடைவான்.

(49) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி செவ்வாய் சனியுடன் கூடியிருந்தாலும், சனியால் பார்க்கப்பட்டாலும் ஜாதகனுக்குப் பின் சகோதரன் காலங்கடந்து பிறப்பான், மேற்படி செவ்வாய் அப்போது குருவால் பார்க்கப்பட்டால் ஜாதகனுடைய பதினொன்றல்லது பன்னிரண்டாம் வயதில் சகோதர விருத்தியும், சுகமும் உண்டாகும்.

(50) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி சிம்மராசியில் குருவுடன் சனி கேது கூடியிருந்து மேற்படி சனி கடக நவாம்சத்தில் சுப்பிர பாம்சத்திலும் சத்துரு ராசியில் சூரியனுடைய க்ஷேத்திரத்திலுமிருந்து சந்திராஷ்டக வர்க்கத்தில் அங்கு ஒரே பரலும்வந்து பாரிஜாதாம்சத்தில் சுபாம்சமாகிய ஒன்பதாம்அம்சத்தில் சந்திரனிருந்தால் ஜாதகனுக்கு அத்தெசையில் புத்திர உற்பத்தி உண்டாகும், அன்றி புத்திர ஸ்தானாதிபதியாக மேற்படி சனி ஆவதால் ஜாதகனுடைய ஐம்பது வயதிற்கும்மேல் ஐம்பத்தைந்து வயதிற்குள்ளாக காலாந்திரத்தில் புத்திரனை அடைவான், மேற்படி குரு ரிஷபநவாம்சத்தில் சத்துரு அம்சத்தில் ரந்திராம்சத்தில் இருந்தால் ஜாதகனுக்கு வேறு ஸ்திரீயிடம் சம்போகமுண்டாகி அங்கு ஜாதகனு

டைய வீரியத்தால் யவ்வன வயதில் சந்தானமுண்டாகி, தன் மனைவியிடம் கர்ப்பமுண்டாகாமல் தன் அந்திய வயதில் தன் மனைவியிடம் ஒரே ஒரு புத்திர சந்தானமுண்டாகும்.

(51) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி செவ்வாய் ராகுவுடன் கூடி கும்ப ராசியிலிருந்து நவாம்சையில் மேற்படிசெவ்வாய் மகரத்திலுமிருந்தால் ஜாதகன் பூமிவிருத்தி சுகமுடையவனும், மனைவி வமிசத்தினால் பாக்கிய விருத்தியும், அந்த வர்க்கத்தில் வமிசவிருத்தியும், போகவிருத்தியும், கீர்த்தியும், வெகு யோகவிருத்தியும், வெகு தனவிருத்தியும், லக்ஷம்முதல் ஐந்து லக்ஷம்வரை ஆஸ்தி உடையவனாகவுமாவான், சுயதேசத்தில் அரசாங்கத்தில் பிரசித்தியும், வெளி தேச அரசாங்கத்திலுமாக இரண்டு அரசாங்கங்களில் பிரசித்தியும், தினந்தோறும் வியாபார விருத்தியும், அந்த மனைவி வர்க்கத்தால் ஜாதகனுக்கு யோகவிருத்தியும் உண்டாகும்.

(52) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி ஒன்பதாம் பாவாதிபதி நீச்ச ராசியிலும், சூரியன் மேஷராசியில் கேந்திரத்தில் வர்க்கோத்தமாம்சத்திலுமிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் கல்வி அறிவுடைய விவேகியாவான், ஒரு பாஷை அல்லது இரண்டு பாஷைகளில் தெளிவுடையவன், தேவப் பிராம்மண பக்தி, ஹரிபக்தி முதலிய விசேஷமாயுடையவன், ஜன்மபூமியைவிட்டு தென் தேசத்தில் பிரசித்தமுள்ள உறவினர் வர்க்கபுருஷன் மூலமாக விஷ்ணுபக்த குலத்தில் வாசமும், அவ்விடத்திலேயே விவாகமுமுடையவன், மனைவியால் தன ஆபரணாதி லாபமுடையவன், அவ்விடத்திலேயே காலம் பூராவும் யோகமும், வாகனமும், க்ஷேத்திரமும் விருத்தி உடையவனாவான், முதலில் ஜாதகனுடைய தகப்பன் சிவமத ஆச்சாரமுடையவன், விவாகமானபிறகு விஷ்ணுமதத்தை அடைபவன், விஷ்ணுபக்த புருஷ சினேகிதமுடையவன், சிவமத தூஷணைசெய்பவன், மதபேதமும், மத தூஷணையும் குருவின் பேரால் செய்பவன், அப்பாபத்தால் புத்திர சந்தான விரோதமுடையவன், சிவபக்தி செய்யும் புருஷர்களைக்காண வெருப்புடையவன், அவர்கள் பார்த்த உணவுகூட போஜனம் செய்யாதவன், தாய் தகப்பன்மார்களுக்கு திதிகூட மந்திரக்குறைவாக (மந்திரமின்றியே) செய்தவன், அந்த தோஷத்தினால் பிதுரு சாபத்தால் சந்தானம் தடைப்படும் விதம் நடந்தவன், பிறகு நாராயண பலிசெய்து தோஷ சாந்தி செய்த பிறகு ஜாதகன் பிறந்தவன், ஜாதகனுடைய தகப்பன் செய்யும் சிவமத துவேஷத்தினால் அவனுடைய குருவும் கூட சந்தான விரோதமடைவான், அந்த குருவுக்கு ஒரு புத்திரனே பிறந்து அவனும் சந்தான விரோதமடைவான், அனேக சிஷ்யர்களுடைய பாபத்தை அந்த குரு அடைவான், அந்த சிஷ்யர்களுக்கும் குருவுக்கும் தாயாதாக்ஷிண்ணியமுண்டாகாது, இத்தோஷ பரிகாரமாக ஹரிஹரால

யம் சேர்ந்த மதபேதமில்லாத இடத்தில், பிரார்த்தனை செய்வதின் மூலம் மேற்படி குரு புத்திர சந்தானமடைவான், பிறகு வெகு சிஷ்யர்களுடன் மேற்படி ஜாதகனுடைய குரு யாத்திரைசெய்து வெகு தனமடைந்து ஜாதகனிருக்குமிடத்தில் ஐந்தல்லது ஆறு மாதம்வரை வசிப்பான், ஜாதகனும் ஜாதகனுடைய மனைவியும் தங்கள் பிரார்த்தனையை இந்த குருமுன்பு செய்து பலனை அடைவார்கள், பிறகு மேற்படி குரு புண்ணிய க்ஷேத்திர வாசமும், புண்ணிய க்ஷேத்திர யாத்திரையும் செய்து, மத பேதம் செய்வதையும், மத தூஷணை செய்வதையும் நிறுத்திவிட்டு ஜாதகனிடம் வாசம் செய்து சுகமடைவான், ஜாதகனுடைய தகப்பன் சௌக்கியமுடையவன், ஒரே தாரமுடையவன், ஒரு சுவீகார புத்திரனை உடையவன், அந்த சுவீகார புத்திரன் ஒரு புத்திரனை அடைவான், அச்சிசுவும் மரித்துவிடும், அவனும் சுவீகாரத்தால் சந்தானமடைவான், ஜாதகனுடைய தகப்பன் ஒரு சகோதரியுடையவன், அச்சகோதரியின் புத்திரனை (ஜாதகன்) ஒருவனை சுவீகாரமாய் எடுத்துக்கொள்வான், அப்புத்திரனும் மரித்து விடுவான், பிறகு ஜாதகனுக்குத் தன் மனைவியிடத்தில் புத்திரனுண்டாவான், ஜாதகனுடைய தகப்பன் ஜாதகனுடைய நான்காந்தெசையில் மரிப்பான், அல்லது ஜாதகனுடைய முப்பத்தொன்பதாம் வயதில் மரிப்பான்.

(53) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி நான்காம் பாவாதிபதி பதினோராம் பாவத்திலிருந்து சந்திரன் கடக ராசியில் கேந்திரத்திலிருந்தால் ஜாதகன் தாய் தீர்க்கவயதடைவாள், சாத்துவீகம், சுத்தம், பதிபக்தி, வமிசவிருத்தி, புண்ணியம், புத்திரீ புத்திர பிரசவம் நான்கு இவையுடையவள், ஜாதகன் தாய் ஒரு சகோதரனுடையவள், அவன் இரண்டு புத்திரரும் ஒரு புத்திரியுமுடையவன், இவர்களில் ஒரு புத்திரன் பாலியத்தில் மரித்துவிடுவான், வேறு ஒருவன் பாக்கிய வமிசத்தில் விவாகமடைந்து அவன் மனைவி பிரசவத்தில் மரித்து விடுவாள், ஜாதகனுடைய தாய் வெகு பாக்கிய விருத்தி உடையவள், ஜாதகனுடைய நான்காந்தெசையில் மரித்து விடுவாள்.

(54) ஜென்ம லக்கினம் துலாம் (சுப்பிரபாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபதி மூன்றாம் பாவத்திலிருந்து சந்திரன் தனுசு ராசியில் விப்பிரகாலத்தில் இருந்தால் ஜாதகன் விப்பிர குலத்தில் பாக்கிய வமிசத்தில் ஏழாவது கெற்பத்தில் ஜனனமடைவான்.

(55) ஜென்ம லக்கினம் துலாம் (சுப்பிரபாம்சம் பூர்வபாகம்) ஆகி லக்கின பாவாதிபதி கேந்திர பாவத்திலும், நான்காம் பாவாதிபதி நான்காங் கேந்திரத்திலுமிருந்தால் ஜாதகனுக்கு சிவாலயமும் விஷ்ணு ஆலயமும் உள்ள சிறிய கிராமத்தில் தகப்பன் வீட்டில் ஜனனமும், உத்தர பாகத்தில் தாய் வீட்டில் ஜனனமும் நேரிடும்.

(56) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி ஐந்தாம் பாவாதிபதியா கிய சனி ஐந்தாம் பாவத்திற்குப் பன்னிரண்டில் இருந்தால் ஜாதக னுக்குத்தன் வீட்டிற்கு வடக்கிலுள்ள ஒருபிரபுவிடம் அபாரமான அன்பும், அதனுல் ஜாதகனுக்கு கடனும்ஏற்படும், அவன் ஜாதகனு டைய நிலங்களை அபகரிக்க எண்ணமடைவான், ஜாதகன் அதனுல் கடன் நிவர்த்தி செய்து விடவேண்டி அரசாங்க மூலமாக அற்ப பூமியை கிரயம் செய்து கடனைபைசல்செய்து விடுவான், ஜாதகன் நூதன கிரகலாபமுடையவனுவான், ஜாதகன் பின்வயதில் முன் சினேகித பிரபுவால் விசேஷ சுகமடைவான், பின்வயதில் ஜாதகன் விசேஷ பூமியடைவான், யோகவிருத்தியுமடைவான், அப்பிரபுவும் விசேஷ பூமி தனம் முதலிய யோகமடைவான், புத்திர சந்தான யோக விருத்தியும், கீர்த்தி விருத்தியும், புது ஸ்தானத்தின் லாப மும், அங்கு வியாபாரப்பிரபலமும் அடைவான்.

(57) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி பிரபுஸ்தானமாகிய ஒன் பதாம் பாவத்தில் ராகு இருந்து, சூரியனுல் பார்க்கப் பட்டால் ஜாதகன் முன் வயதில் சந்தான விரோதமும், பின்வயதில் சந்தா னயோகமும் அடைவான், அப்போது லக்கினபாவத்தில் குரு இருந்து ஷ ஸ்தானத்தையும் புத்திர பாவத்தையும் பார்த்தால் ஜாதகனுக்கு புத்திரீ புத்திர விருத்தி அடைந்து மூன்று வாகன மும், யோகவிருத்தியும் உண்டாகும்.

(58) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி மிதுனராசியில் ராகு இருந்து நவாம்சையில் விருச்சிகத்திலிருந்தால் ஜாதகனுக்கு முன் வயதில் தன விரயமும், ரணபீதியும், பின்வயதில் கடன் நிவர்த்தி யும், தனவிருத்தியும், க்ஷேத்திர விருத்தியும் உண்டாகும்.

(59) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி ஒன்பதாம் பாவாதிபதி மூன்றும் பாவத்தில் சூரியனுடன் கூடியிருந்தால் ஜாதகன் தகப் பன் தீர்க்கவயதும், கல்வியறிவும், விவேகமுமுடையவன், ஒரே பாஷையில் சமர்த்தன், தேவப் பிராம்மண பக்தியும், விசேஷ சிவ பக்தியும் உடையவன், எப்போதும் சிவபூஜை செய்பவன், சிவ பூஜையின் பலனுக பாக்கிய விருத்தியுடையவன், வமிச விருத்தி யுடன் அரசாங்கத்தில் பிரசித்தியுமுடையவன், வாச்சாலகன், விவ காரத்தில் சமர்த்தமுடையவன், வெகு பிரபுப் பிரீதியுடையவன், யோகவிருத்தியும், கீர்த்தியுமுடையவன், சுயக்கிராமத்தில்பிரசித்தி யுடையவன், பற்பல கிராமங்களிலும், சுயதேசத்தில் தன் வர்க்கப் பிரசித்தியும், யோகமும், கீர்த்தியும், பிதுரார்ஜித க்ஷேத்திரவிருத்தி யும், அந்தபூமியால் சௌக்கியமும், தனவிருத்தியும், புத்திர சந் தான யோகமும், ஒரேதாரமும் உடையவன், புத்திரீ புத்திரர் பதின்மூன்று பேரையுடையவன், நான்கு புத்திரரும், ஒன்பது

புத்திரிகளுமுடையவன், இவர்களில் அதாவது ஒன்பது புத்திரிகளில் ஆறு பேர்களும், நான்கு புத்திரரும் புத்திரீ புத்திர விருத்தியுடையவர்கள், புத்திரிகளில் மூவர் வமிச விருத்தியின்றி நஷ்டமாவார்கள், ஜாதகனுடைய தகப்பனுக்கு ஒரு சோதரனுண்டு, அவன் தனியாகபாகப்பிரிவினை செய்து கொண்டு புத்திரீ புத்திரவமிச விருத்தியுடையவன் ஆவான், ஜாதகனுடைய தகப்பன் ஒரு சகோதரியுமுடையவன், அவளும் வமிசவிருத்தி உடையவளாகி பாக்கிய விருத்தியுமுடையவள் ஆவாள், இப்படிப்பட்டவன் (ஜாதகனுடைய தகப்பன்) ஜாதகனுடைய இருபத்தைந்தாம் வயதில் அல்லது இருபத்தாறும் வயதில் மரிப்பான்.

(60) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி நான்காம் பாவாதிபதி நான்காம் பாவத்திலும், சந்திரன் மூன்றும் பாவத்திலுமிருந்தால் ஜாதகன் தாய் தீர்க்காயுளுடையவள், சாத்துமீகம், சுத்தம், பதி பக்தி, வமிசவிருத்தி, புண்ணியம், புத்திரீ புத்திர பிரசவம் முதலியன உடையவள், ஜாதகன் தாய் உடன்பிறந்த ஐந்து சகோதரரும், இரண்டு சகோதரிகளுமுடையவள், இந்த சகோதரிகளில் ஒருத்தி பாலியத்தில் மரிப்பாள், மற்ற ஒருத்தி மத்திய வயதில் விதவையாகி மரிப்பாள், மேற்படி சகோதரர்களில் ஒருவன் விவாகமடைந்து மத்தியவயதில் சந்ததியில்லாமலேயே மரிப்பான், மற்ற நால்வர்கள் பாலியத்திலேயே மரிப்பார்கள், ஜாதகனுடைய தாய் ஜாதகனுடைய முப்பத்தைந்தல்லது முப்பத்தாறுவது வயதில் மரிப்பாள்.

(61) ஜென்ம லக்கினம் துலாம் (சுப்பிரபாம்சம்) ஆகி பதினோராம் பாவாதிபதி ஐந்தாம் பாவத்திலிருந்து சந்திரன் மீனராசியில் விப்பிரகாலத்திலிருந்தால் ஜாதகன் விப்பிர குலத்தில் பாக்கியமுள்ள வமிசத்தில் இரண்டாவது கெற்பத்தில் பிறந்து யோகமும், கீர்த்தியும் உடையவனாக ஆவான், ஜாதகனுக்கு ஒரு மூத்த சகோதரி ஒருத்தி விவாகமடைந்து சந்தானமின்றி விதவையாகி விடுவாள்.

(62) ஜென்ம லக்கினம் துலாம் (சுப்பிரபாம்கம்) பூர்வபாகம் ஆகி லக்கினபாவாதிபதி தன்உச்சராசியிலிருந்து நான்காம் பாவாதிபதி ஐந்தாம் பாவத்திலிருந்தால் ஜாதகனுக்கு பெரிய நதிப்பிராந்தியத்தில் சிறிய கிராமத்தில் சிவாலய விஷ்ணு ஆலயமில்லாத கிழக்கு மேற்குவீதியில் வடக்கு வாடையில் தகப்பன் வீட்டில் ஜனனமும், உத்தராம்சத்தில் தாய்வீட்டில் ஜனனமும் நேரிடும்.

(63) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி குரு சனியுடன் கூடியிருந்தாலும், சனியால் பார்க்கப்பட்டாலும் ஜாதகனுக்கு மாளவீ யோக பங்க மேற்படும், ஜாதகன் கல்வியால் ஜீவிப்பான், காமியாவான், கிரக கஷ்டங்களால் பீடையடைவான்.

(64) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி சூரியனும் சந்திரனின் புத்திரனான புதனும் ஒரு ராசியில் அல்லது ஓரே நவாம்சத்தில் கூடியிருந்து, லக்கின பாவாதிபதியும் தன் உச்சத்திலிருந்து, குருவும் தன் உச்சத்தில் அல்லது இரண்டாம் பாவத்திலிருந்தால் ஜாதகன் மகானாகவும், பண்டிதனாகவும் ஆவான், பண்டித யோகமடைவான், ஷெ ஜாதகன் நாற்பத்திரண்டாம் வயதிலிருந்து நல்ல யோக பலனடைவான், நரேந்திரனாகவும், அரசர்களுடைய சம்மதியின் பேரில் சாஸ்திரங்களைப் பார்ப்பவனாகவும், வித்துவானாகவும், உத்தியோக ஒழுக்கமுடையவனாகவும், தர்மசீலனாகவும் ஆவான், இதன் பலனாக மூன்று தலைமுறைகள் யோகவிருத்தியுடையவன், ஜாதகனுடைய தகப்பன் வர்க்கம்முதலாக யோகவிருத்தியும், ஜாதகனுடைய தகப்பனைவிட ஜாதகன் அதியோகவானாகவும், கீர்த்திமானாகவும், ஜாதகனைவிட ஜாதகனுடைய புத்திரன் அதிக யோகமுடையவனாகவும் ஆவான்.

(65) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி ஏழாம் பாவாதிபதி மூன்றும் பாவத்தில் வர்க்கோத்தமத்தில் இருந்து களத்திர காரகனாகிய சுக்கிரன் தன் உச்ச ராசியிலிருந்து லக்கினத்திற்கிரண்டாம் பாவத்தில் குரு ராகு கேதுக்களுடன் கூடியிருந்தாலும், ஏழாம் பாவத்தைச் சனி பார்த்து இருந்தாலும், ஜாதகனுக்கு இரு மனைவியரேற்படுவார்கள், ஜாதகனுக்கு மூத்த மனைவியால் சுகமின்றி அவள் அற்பாயுசாய் மரித்துவிடுவாள், பிறகு இரண்டாம் மனைவியை விவாகம் செய்வான், அவளால் சுகமடைவான், அம்மனைவியிடம் புத்திர சந்தானமுடையவன், ஜாதகனுடைய மூத்த (தலை)ப் பிள்ளை மரித்துவிடும், இரண்டாவது கெற்பம் சுகமடையும், தீர்க்காயுளுடைய புத்திரனாக ஆவான், மூன்றாவது பெண்பிரஜை பிறக்கும், நான்காவது கெற்பம் புத்திரனும், ஐந்தாவது கெற்பம் புத்திரியும், ஆறாவது சந்தானமுமாக, ஏழாவது புத்திரனும் ஆக நால்வர் புத்திரரும், மூன்று புத்திரிகளும் உண்டாவார்கள், ஒரு புத்திரனும், ஒரு புத்திரியும் இவர்களில் மரித்துவிடுவார்கள், மற்றவர்கள் சுகமடைவார்கள்.

(66) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி மூன்றும் பாவாதிபதியாகிய குரு மூன்றும் பாவத்திற்குப் பன்னிரண்டாம் பாவமாகிய இரண்டாம் பாவத்தில் இருந்து ராகு கேதுக்களில் ஒருவராலும் சனியாலும் பார்க்கப்பட்டு, சகோதர காரகனாகிய செவ்வாய் மூன்றும் பாவத்தில் வர்க்கோத்தமத்திலிருந்தால் ஜாதகனுடைய இளைய சகோதரன் ஒருவன் தீர்க்காயுசுடையவனாவான், மேலும் சகோதர ஸ்தானத்திற்கைந்தாம் பாவாதிபதியாகிய செவ்வாய் மூன்றும் பாவத்திலேயேயிருந்து சகோதர ஸ்தானமான தனுசு ராசியின் ஐந்தாம் பாவமான மேஷத்தைச் சனி பார்த்தால் ஜாதக

னுடைய இளைய சகோதரனுக்கு சித்த விகற்பமுண்டாகும், சிறிது காலம் பொருத்து அது நிவர்த்தியாகும், இதற்காக சனிப் பிரீதியாக விஷ்ணு தேவதாப் பிரீதியாகவும், குரு சகோதர ஸ்தானாதிபதியாகி வந்தால் அந்த குருவுக்காக சிவப்பிரீதியாக சிவ க்ஷேத்திரத்தில் தேவி சன்னிதியில் தக்ஷிணாயனத்தில் ஐப்பசி மாதத்தில் பூர்வ பாகத்தில் ஜாதகனுடைய முப்பத்தாறுவது வயதில் பிராம்மணன் மூலமாக (மஹான்னியாச பூர்வமாக) சாஸ்திர விதிப்படி ஐந்து கும்பம்வைத்து ஸங்கற்பம் செய்து, அந்த ஜலத்தினால் ஸ்நானம் செய்து மகா ருத்திராபிஷேகமும், நைவேத்தியமும் செய்வித்துப் பிறகு, சுப்பிரமண்னியப் பிரார்த்தனையும், முப்பத்திரண்டு பிதுருவாச க்ஷேத்திரத்தில் தென் தேசத்தில் ஜகத்ரக்ஷகன் என்னும் பெயருடைய விஷ்ணு க்ஷேத்திரத்தில் பிரார்த்தனையும்செய்து அந்த ஆலயத்திற்கு எதிரிலுள்ள பிரம்மஹத்தி முதலிய நீங்கும் புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நாநம்செய்து, பிறகு துலாமாதத்தில் காவேரி ஸ்நாநம்செய்து சுவாமி பிரார்த்தனையுடன் சுவாமியை கணக்காக பன்னிரண்டுதரம் சுற்றிப் பிரதக்ஷணம் செய்து சிவாலயத்தில் சுவாமி தரிசனம் செய்து, ஒன்னரை மாதம்வரையிலிப்படி செய்தால், பிறகு அத்தேவதையின் அருளால் ஜாதகன் பெயருடைய உத்தியோகமும், அரசாங்க மூலமாக அற்ப தனவிரயமும், பிறகு உத்தியோக லாபமும், மூன்று நிஷ்க உத்தியோகமும், நூறு அல்லது நூற்றைம்பதுக்கு சமமான தன லாபமும், ஜாதகனுடைய முப்பத்தாறு அல்லது முப்பத்தேழாவது வயதில் வேறுபக்கத்தில் தன் தகப்பன் அடைந்த உத்தியோகத்தை ஜாதகன் அடைந்து, ஜாதகனுடைய உத்தியோகத்தை ஜாதகனுடைய சகோதரனுமடைவான், ஜாதகனுடைய இளைய சகோதரன் ஒரே மனைவியுடையவன், புத்திரீ புத்திரர் ஐந்துபேர்களை அடைவான், ஜாதகனும் சகோதரனும் இருவரும் ஒரே குடும்பமாக இருப்பார்கள், இவர்கள் தனிப்பட பாகம் செய்து கொள்ளாதவர்கள், ஜாதகனுக்கு ஒரு மூத்த சகோதரியும், நான்கு இளைய சகோதரிகளும் உண்டு, இவர்களில் மூத்த சகோதரியும், ஒரு இளைய சகோதரியும் யவ்வனத்தில் விதவையாய்விடுவார்கள், வேறு ஒரு சகோதரி பிரசவத்தில் சுமங்கலியாக மரித்து விடுவாள், வேறு ஒருத்தி சுமங்கலியாக புத்திரீ புத்திர விருத்தியை யுடையவளாவாள்.

(67) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி ஒன்பதாம் பாவாதிபதி நான்காம் பாவத்திலிருந்து பிதுரு காரகனான சூரியன் ஐந்தாம் பாவத்திலிருந்து சனியுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் தீர்க்க வயதடைவான், சௌக்கியமுடையவன், சிவந்த சம தேகமுடையவன், ரூபலக்ஷணமுடையவன், கல்வி அறிவுடைய விவேகியாவான், இரண்டு பாஷைகளில் தெளிவு உடையவன் எழுதுவதில் சமர்த்தன், சிவ பூஜாபலத்தினால் இந்த ஜன்மத்தில்

பாக்கிய விருத்தி உடையவன், சிவபூஜைப் பிரியன், சிவபக்தி, தேவப் பிராம்மண பக்தி முதலியன உடையவன், சிவத்தியானம் செய்பவன், கிரக க்ஷேத்திர ஆஸ்தி உடையவன், வமிச விருத்தி உடையவன், புத்திரீ புத்திர விருத்தி உடையவன், முதலில் தன் ஜன்ம கிராமத்திலும், அதற்குத் தென்பாகத்திலும், பிறகு வடக்கு பாகத்திலுமாக மூன்று பக்கங்களில் உத்தியோகம் பார்ப்பவன், நியாயவாதி, நியாயாந்நியாயம் அறியும் விவேகமுடையவன், சுயார் ஜித தன க்ஷேத்திர பூமியும், பிதுரார்ஜித பூமி க்ஷேத்திரமுமுடையவன், அன்னிய தேசத்தில் உத்தியோகத்தினுல் தெற்குப் பக்கத்தில் ஒன்பது அல்லது பத்து வருஷமும், பிறகு ஜன்ம கிராமத்தில் சிறிது காலத்திற்கு வாசமும், பிறகு ஈசானிய திக்கில் தகப்பன் வகித்த உத்தியோகமும், ஜாதகனுடைய தகப்பனுடைய அந்திய காலத்தில் சகோதரனுக்கு அவ்வுத்தியோகமும், மூன்று நிஷ்க பிரமாண சம்பளமும், அக்காலம் அதிகாரத்திலிருக்கும் பிராம்மணனுல் உத்தியோக லாபமும், உத்தியோகத்தால் சுகமும், பற்பல கிராமங்களில் பிரசித்தியும், தனலாபமும், அரசாங்கப் பிரசித்தியும், அரசாங்க ஜன நேசமும், அரசப்பிரீதியும், ஆயிரத்துக்கு மேற்பட்ட தன விருத்தியும், ஆஸ்தி விருத்தியும், பின் வயதில் ஜாதகனுக்கு ஏற்படும், ஜாதகனுக்கு உத்தியோகமேற்கும் காலத்தில் வயது முப்பத்தாறு ஆகும், அல்லது முப்பத்தேழு ஆகும், ஜாதகனுடைய தகப்பன் ஒரே தாரமுடையவன், உடன்பிறந்த சகோதரரும், மூன்று சகோதரிகளுமுடையவன், இச் சகோதரிகளில் இருவர் சந்ததியில்லாதவர்கள், வேறுஒருத்தி சந்ததி உடையவள், ஷை சகோதரன்மட்டும் முதலில் தகப்பனுடன் வசிப்பான், பிறகு சமீப பட்டிணத்தில் தானிய வியாபாரம் செய்து பிரபலமாகி ஆயிரக் கணக்கில் தனம் சம்பாதிப்பான், பின் வயதில் பூமியால் விவசாயத்தில் சுகமடைவான், அவன் இரு தாரமுடையவன், அவனுடைய மூத்த மனைவி ஐந்துபேர் புத்திரீ புத்திரரைப் பிரசவித்துப் பிறகு மரிப்பாள், அவர்களில் மூன்றுபேர் புத்திரீ புத்திரர் சுகமடைவார்கள், பிறகு இரண்டாவது மனைவியை மணப்பான், அவளுக்கு மூன்று அல்லது நான்கு புத்திரிகள் பிறப்பார்கள், ஜாதகனுக்கு இவர்கள் தவிர வேறு ஒன்றிரண்டல்லது, மூன்றுபேர்கள் சகோதர சகோதரிகள் இளம் வயதில் மரித்துவிடுவார்கள், ஜாதகனுடைய தாய் ஜாதகனுடைய தகப்பனுக்குப் பின்வயதில் ரக்த சோகையால் மரிப்பாள், ஜாதகனுடைய தகப்பன் தன் பின்வயதில் புத்திரனுடன் அற்ப மனத்துன்பமுற்றுப் பிறகு சந்தோஷத்துடன் ஆயுள்மட்டும் சுகியாயிருந்து ஜாதகனுடைய நான்காந் தெசையில் மரித்து விடுவான்.

(68) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி நான்காம் பாவாதிபதி ஐந்தாம் பாவத்தில் (சனியுடன்கூடி) யிருந்து, சந்திரன் ஆறும்

பாவத்திலிருந்தால் ஜாதகன் தாய் மத்திய வயதடைவாள், சாத்து மீகம், சுத்தம், பதிபக்தி, வமிசவிருத்தி, நற்குணம், புண்ணியம் முதலியன உடையவள், புத்திரீ புத்திர பிரசவமுடையவள், உடன் பிறந்த சகோதரர்கள் இருவரும் சகோதரிகளில்லொன்றிரண்டல்லது மூன்று சகோதரிகளுமுடையவள், ஜாதகனுடைய தாய் மரண காலத்தில் இரத்த சோகையால் மரிப்பாள், பாவஸ்புட ரீதியாக சனி தவிர வேறு கிரகமும் நான்காம் பாவாதியாக வரக்கூடும்.

(69) ஜென்ம லக்கினம் துலாம் (ஸ்ரீதராம்சம்) ஆகி பூர்வ பாகத்தில் ஜனித்தவனுக்கு லக்கின பாவாதிபதி நான்காம் பாவத்திலும், பத்தாம் பாவாதிபதி பதினோராம் பாவத்திலுமிருந்தால் மகா நதிப்பிராந்தியத்தில் புண்ணிய க்ஷேத்திரத்தில் பெரிய கிராமத்தில் அல்லது பட்டிணத்தில் வீட்டிற்கு வடக்கு பாகத்தில் கங்கைக்குச் சமமான தடாகமுள்ளதும் சிவாலயங்களும் விஷ்ணு ஆலயங்களும் அதிகமாக உள்ள இடத்தில் கிழக்கு மேற்கு வீதியில் தெற்கிலுள்ள வாடையில் தகப்பன் வீட்டில் ஜனனமும், உத்தர பாகத்தில் வனப்பிராந்தியத்தில் பெரிய பட்டிணத்திலல்லது கிராமத்தில் வடக்குத் தெற்கு வீதியில் மேற்குமுக வாயிற்படியுள்ள தாய் வீட்டில்-ஜனனமும் நேரிடும்

(70) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி லக்கின பாவாதிபதி நான்காம் பாவத்திலும், எட்டாம் பாவாதிபதியும் அப்படியேயிருந்து லக்கின பாவாதிபதி வைஷ்ணவாம்சத்திலுமிருந்தால் ஜாதகன் பாலிப வயதில் அற்ப சுகமும், வைக்கோல் அல்லது புல்லால் கட்டப்பட்ட வீட்டில் ஜனனமும், நூல் வியாபாரத்தில் சமர்த்தமும், ஜீவனமும் அடைவான்.

(71) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி இரண்டு ஏழுக்குடைய பாவாதிபதியான செவ்வாய் நான்காம் பாவத்தில் கேதுவுடன் கூடியிருந்து நவாம்சத்தில் ஷ்டி செவ்வாய் நீசத்தில் கேதுவுடன் கூடி பாராவதாம்சத்திலுமிருந்தால் ஜாதகன் மூத்த சகோதரியால் சுகமடைவான், ஜாதகனுடைய மூத்த சகோதரி சுய கிராமத்திலேயே விவாகமடைவாள், அல்லது தன் ஜனன கிராமத்திற்கு மேற்கில் விவாகமடைவாள், அவளுடைய கணவன் நல்ல யோகமடைந்து தினம் தினம் விசேஷ யோகமுமடைவான், நூல் வியாபாரத்தில் பிரசித்தி உடையவன், சிகப்பும் [illegible] கலந்த பட்டு வியாபாரம் செய்பவன், ஜாதகனுடைய சகோதரியின் அதிருஷ்டம் காரணமாக விசேஷ பாக்கிய மடைவான், வியாபாரத்தில் நிபுணன், பற்பல தேசங்களிலும், பற்பல கிராமங்களிலும், பற்பல வழிகளால் தன விருத்தியும், வியாபார விருத்தியும், புதுவீடு லாபமும், வஸ்திர ஆபரணம், பசு, எருமை முதலியன விருத்தியும், வீட்டில் லக்ஷ்மீகடாக்ஷமும், புத்திர சந்தான யோகமும், இரு புத்திரரும்

ஒரு புத்திரியுமுடையவனுக ஆவான். வேறு சிலர் இரண்டு புத்திரி யுடையவனென்று எண்ணுகின்றனர், அப்புத்திரனும் புத்திரீசந் தானமடைந்து பிரபல யோகவானுவான், அப்புத்திரன் பாலியத்தில் தாய்தகப்பனே இழந்து வியாபாரத்தில் நஷ்டமடைந்து, ஒரு சைவ மதப் பிரபுவால் மேன்மையடைவான், ஜாதகனுடைய சகோதரி யின் கணவன் அந்த சைவப் பிரவியின் ஒரு ஆயிரம் தனத்தை அபகரிப்பான், அதன் பிறகு அந்த தனத்தினுல் புத்திரரிருவருக் கும் விவாகம் செய்வான், அதன் பிறகு அப்புத்திரனின் மாமனுர் மூலமாக நஷ்ட தனத்தை அடைவான், பிறகு வியாபாரப் பிரபல மடைந்து ஆயுள் வரை சுகியாவான், ஜாதகனும் தன் சகோதரியின் கணவன் மூலமாக விசேஷ தனமும், விவாகாதிகளும், பிரசித்தியும் அடைவான், இரண்டு லக்ஷம் தனம் ஆஸ்தி உடையவனுவான், பிறகு இந்த இரண்டு லக்ஷம் தனம் கடன் உண்டாகி மனச்சஞ்சல மடைவான், பிறகு இரண்டு புதுமெத்தை வீடுகள் சம்பாதிப்பான், பிறகு ஒருவாடை பூராவும் கிரயம் வாங்கி தன் வீட்டில் லக்ஷ்மீ கடாக்ஷம் ஏற்பட்டு, ஷை கடன்களே தீர்த்துவிடுவான், ஜாதகன் இரண்டு புத்திரரும் மூன்று புத்திரிகளுமடைவான், வேறு சிலர் நான்கு புத்திரிகளுண்டாவார்கள் என்று எண்ணுகின்றனர், இப் புத்திரரிருவரும் விசேஷயோகமுடையவர்கள், பெரியோர்களிருந்த வீட்டை தன் சகோதரனுக்கு விட்டு விடுவான், அச்சகோதரன் சீமந்த புத்திர நாசமுடையவன், இரு புத்திரரும் இரு புத்திரி களும் தீர்க்காயுசுடையவர்களேயுடையவன், மற்ற சந்ததிகள் இவர் களே தவிர்த்தவர்கள் மரித்து விடுவார்கள், ஜாதகனுடைய சகோ தரன் முப்பதாயிரம் ஆஸ்தி உடையவனுவான், ஜாதகனுடைய இளைய சகோதரி ஒருத்தி மத்திய வயதில் விதவையாகி ஜாதகன் வீட்டில் வசிப்பாள், வேறு ஒருத்தி மரித்து விடுவாள்.

(72) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி இளைய சகோதர ஸ்தா னுதிபதியாகிய குரு சுதாகராம்சத்தில் சுய க்ஷேத்திரத்தில் துலா நவாம்சத்தில் ஒன்பதாம் பாவாதிபதியுடன் கூடியிருந்தால் ஜாத கன் திடச்சித்தமுடையவன், கொஞ்சம் ரோக சரீரமுடையவன்.

(73) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி ஆறும் பாவாதிபதியா கிய குரு சுயக்ஷேத்திரத்தில் இருந்தால் ஜாதகன் மனைவியிடம் கெற்பாதானம் செய்த பிறகு மர்மஸ்தானத்தில் மத்திய வயதில் விசேஷ ரிணமும், பிறகு தேக ரிணமும் வெகு பயமுமடைந்து பிறகு தன் இனத்தானுல் மருந்து மூலமாக தேக சுகமுடையவ னுவான், பிறகு வியாபார விருத்தி, கீர்த்தி விருத்தி, புத்திரலாபம், புத்திரனின் அதிருஷ்டம் கார்ணமாக முப்பதாயிரம் தனம் முதலான விருத்தியுமுடையவனுவான்.

(74) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி நான்கு ஐந்து ஆகிய பாவங்களுக்கதிபதியாகிய சனி சுயக்ஷேத்திரத்தில் ராகு கேதுக்க

னுடன் கூடியிருந்து நவாம்சத்தில் எட்டாம் அம்சத்தில் இருந்தால் ஜாதகன் நல்ல புகழுடையவனாவான்.

(75) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி வித்தியா ஸ்தானாதிபதியாகிய சனி தன் வீட்டிலிருந்து செவ்வாயுடன் கூடி ராகுவால் பார்க்கப்பட்டாலும், ராகுவுடன் கூடியிருந்தாலும் ஜாதகன் கல்வியில்லாதவனானாலும் நல்ல அறிவாளியாவான், இதற்கே கும்ப நவாம்சத்தை நவாம்சத்தில் குரு பார்த்தால் ஜாதகன் புத்திரீ புத்திர விருத்தி உடையவனாவான், மூன்று புத்திரிகளும் இரண்டு புத்திரருமுடையவன், இவர்களில் ஜாதகனுடைய மூத்த புத்திரன் விசேஷ யோகமுடையவன், கல்வியறிவுடையவன், வியாபாரத்தினால் வெகு தனம் சேர்ப்பவன், பற்பல தேசங்களிலும், பற்பல வழிகளிலும், கீர்த்தியும், தனப்பெருக்கும், வியாபாரப் பெருக்குமுடையவன், இப்புத்திரன் மனைவி முதலிய சுகமுடையவன், மூன்று புத்திரரும் இரண்டு புத்திரிகளும் நல்ல யோகமுடையவர்களை உடையவனாவான், இவனுக்கு புனர்வசு நக்ஷத்திரத்தில் புத்திரன் பிறந்து அப்போதைய இக்குழந்தையின் ஜன்ம திசையில் ஜாதகனின் புத்திரன் நூதன கிரக லாபம் அடைவான், இரண்டாந் தெசையில் பிதுருலோக நிவாரணையும் செய்வான், கடன் கஷ்டம் நீங்குதலும், அப்புத்திரனுக்கு விவாகம் முதலியனவும் செய்வான், அப்புத்திரன் மனைவியால் சுகமுடையவன், முப்பதினாயிரம் தன லாபமுடையவன், அப்புத்திரனுடைய மூன்றாந்தெசையில் ஜாதகனும் ஜாதகனுடைய மனைவியும் மரிப்பார்கள், ஜாதகனுடைய இரண்டாவது புத்திரன் சுகம், கல்வி அறிவுமுதலியன உடையவன், மேதாவீ, பிறருக்குப் பிரியம் சொல்லத் தெரிந்தவன், வெகு ஆயுசுடையவன், மெதுவாய்ப் பேசுபவன், சாது, சன்மார்க்க மனமுடையவன், துஷ்ட சகவாசம் செய்யாதவன், விஷ்ணு பக்த குலத்தில் ஜனித்து தித்திப்பு, புளிப்பு முதலியவற்றில் இஷ்டமுடையவன், வஸ்திரம், புஷ்பம், சந்தனம் இவற்றில் பிரியமுடையவன், சங்கீதப் பிரியன், வைஷ்ணவ சினேகிதமுடையவன், ஹரி கதை கேழ்ப்பதில் பிரியமுடையவன், பதினாறு வயதுமுதல் பிரசித்தி பெறுவான், பன்னிரண்டாம் வயது முதலிலேயே விவாகமுடையவன், அல்லது பதினாலாம் வயதில் விவாகமும், இருபதாம் வயதில் மனைவி சுகமும் அடைவான், இருபத்தைந்தாம் வயது முதல் தன் தகப்பனைவிட விசேஷ மேன்மையான யோகமடைவான், வீட்டில் லக்ஷ்மீகடாக்ஷமும், தனதான்னிய சமுர்த்தியும் அடைவான், இவனுடைய இருபத்தைந்தாம் வயதில் தகப்பன் மரணமடையும் யோகமுடையவன், முப்பத்திரண்டல்லது முப்பத்து மூன்றாம் வயதில் தாய் மரணமடைவாள், முப்பது வயதிற்கு மேலிருந்து விசேஷயோக வியாபாரமுடையவனாவான், இரண்டு புத்திரரும் மூன்று புத்திரிகளுமுடையவன், இவர்கள் தவிர அதி

கம் புத்திரீ புத்திரருண்டாயினும் மரித்து விடுவார்கள், நாற்பதாம் வயதிலிருந்து ஐம்பதாம் வயதுவரையிலும் விசேஷ யோகமும், கீர்த்தியுமுண்டாகும், அறுபதில் அபமிருத்துவும், அறுபத்தெட்டில் மரணமும் அடைவான், இவன் மறு ஜென்மத்தில் திருவோண நட்சத்திரத்தில் ஜனன மடைவான்.

(76) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி ஏழாம் பாவாதிபதி நான்காம் பாவத்தில் தன் உச்சத்தில் களத்திர காரகனுகிய சுக்கிரனுடனும் ராகு அல்லது கேதுவுடனும் கூடியிருந்து மேற்படி செவ்வாய் அம்புஜாம்சத்திலுமிருந்தால் ஜாதகன் காலங்கடந்து விவாகமடைவான், ஜாதகன் ஜனித்த கிராமத்தில் அல்லது மேற்கு பக்கத்தில் விவாகமடைவான், வேறு சிலர் தென்மேற்கில் விவாகமென்று எண்ணுகின்றனர், ரூபலக்ஷணமுடையவளை ஜாதகன் மணப்பான், அவள் பதிபக்தி, வமிசவிருத்தி, பாக்கியவிருத்தி, புண்ணிய விருத்தி, சந்தானவிருத்தி முதலியன உடையவள், உடன் பிறந்த சகோதரருடையவள், சகோதரியுமுடையவள், அவர்கள் மிதமான பாக்கியமுடையவர்கள், ஆயுள்வரை சுகமுடையவராவார்கள்.

(77) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி எட்டாம் பாவாதிபதி நான்காம் பாவத்தில் சனியுடன் கூடி இருவரும் நவாம்சத்தில் ரிஷப நவாம்சத்திலிருந்து ஷை சுக்கிரன் சுப்பிரபாம்சத்திலும், ஷை சனி கோபுராம்சத்திலுமிருந்தால் ஜாதகன் தீர்க்காயுளுடையவனுக எழுபத்தைந்து வயதடைவான்.

(78) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி ஒன்பதாம் பாவாதிபதி இரண்டாம் பாவத்தில் பதினோராம் பாவாதிபதியுடன் கூடியிருந்து ஷை புதன் லக்ஷ்மீசாம்சத்தில் நவாம்சையில் துலாத்தில் குருவுடன் கூடியிருந்து சூரியன் வாகீசாம்சத்திலுமிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் தீர்க்க வயதுடையவன், விஷ்ணு பக்த குலத்தின் ஆச்சாரமுடையவன், தர்மமுடையவன், வைஷ்ணவ சினேகிதமுடையவன், தேவப் பிராம்மண பக்தியும், விஷ்ணுநாம பஜனையும் செய்பவன், ராம நாம பாராயணமுடையவன், ஹரிகதைகளைக் கேட்பவன், பாலியத்தில் அற்ப சுகமுடையவன், மத்தியவயதில் சுகமுடையவன், பின்வயதில் புத்திரனுல் சுகமுடையவன், புத்திரப் பிரபலமுடையவன், தன் தேசம்விட்டு அன்னிய தேசத்தில் வாசமுடையவன், பாக்கியக் குறைவுடையவன், புத்திரனுல் பாக்கிய விருத்தியுடையவன், நேர்மையான புத்தியுடையவன், சத்தியவாதி, நல்ல தர்மிஷ்டன், உடன்பிறந்த சகோதர சகோதரிகளில்லாதவன், ஒரு சகோதரி உடையவனென்று சிலர் எண்ணுகின்றனர், ஒரே மனைவியுடையவன், ஜாதகனுடைய நான்காந் தெசையில் ஜாதகனுடைய தகப்பன் மரிப்பான்.

(79) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி நான்காம் பாவாதிபதி நான்காம் பாவத்தில் சுக்கிரன், செவ்வாய், கேது இவர்களுடன் கூடியிருந்து சந்திரன் பதினோராம் பாவத்தில் இருந்தால் ஜாதகன் தாய் தீர்க்க வயதும், சாத்விகமும், சுத்தமும், பதிபக்தியும், வமிசவிருத்தியுமுடையவள், தேவப் பிராம்மண பக்தி, புண்ணியம், அன்னதானம் செய்தல் முதலிய மேன்மையுள்ளவள், பந்துக்களுக்கு எப்போதும் உபகாரம் செய்பவள், பாக்கியவிருத்தியுடையவள், இவள் ஜாதகனுடைய நான்காந் தெசையில் மரணமடைவாள்.

(80) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி ஒன்பது, இரண்டாம் பாவத்தில் பத்தாம் பாவாதிபதி இரண்டாம் பாவாதிபதி இவர்களுடன் கூடியிருந்தாலும், இவர்களால் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் தனவிருத்தியோகமும், ரண நிவர்த்தியுமுடையவனுவான்.

(81) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி நீச்சத்தில் உச்ச பாகத்தில் தன பாவாதிபதியான கிரகமிருந்தால் ஜாதகன் வெளி தேசத்தில் பாக்கியமடைவான் என்றும் யோகமுடையவன் என்றும், வெகுமானித்துப் பூஜிக்கக் கூடியவனென்றும் ரிஷிகள் எண்ணுகின்றனர், மேலும் இவனுக்கு ஆதியில் அற்பசுகமும், மத்திய வயதில் நல்ல யோகமும், மூன்று புதிய வீடுகளும் ஏற்படும், அதில் ஒரு வீட்டை விற்று விட்டு வியாபாரத்தினுல் தனப்பெருக்கமுமடைவான், நூல் வியாபாரத்தில் தன லாபமும், நல்ல வழியில் நேர்புத்தியுடன் அறிவாளியாக நடந்து கொள்ளுதலுடன் வாத சிலேஷ்ம சுபாவமுடையவனுகவும், சீக்கிரத்தில் கோபமுடையவனுகவும், சந்தோஷமுடையவனுகவும், தித்திப்பு, புளிப்பு இவற்றில் பிரியமுடையவனுகவும் ஆவான், விஷ்ணு பக்தி யுடையவரிடம் நேசமுடையவன், ஹரிகதை கேழ்ப்பவன், விஷ்ணு நாமங்களை ஜபிப்பவன், சாதுக்களுக்கு உபகாரம் செய்பவன், துஷ்டருக்கு விரோதி, தர்மவழியில் நடப்பவன், அன்னதானம் செய்யும் புண்ணியாத்துமா, வஸ்திர தானம் செய்பவன், பிராம்மண குடும்பப் பிரதிஷ்டை செய்பவன், பிராம்மணருடைய விவாகங்களுக்கு உதவி செய்பவன்.

(82) ஜென்ம லக்கினம் துலாம் (மாயாம்சம் பூர்வபாகம்) ஆகி லக்கின பாவாதிபதி தன் உச்சாம்சத்தில் கடகத்திலும், நான்காம் பாவாதிபதி பதினோராம் பாவத்திலுமிருந்தாலும், பன்னிரண்டாம் பாவாதிபதி குருவுடன் கூடியிருந்து சந்திரன் மூன்றும் பாவத்திலிருந்தாலும், பத்தாம் பாவத்தில் சூரியன் சுக்கிரனிவர்கள் கூடியிருந்தாலும் ஜாதகனுக்குப் பெரிய நதிப்பிராந்திய தேசத்தில் புண்ணிய க்ஷேத்திரத்தில், ஜன்ம பூமிக்குத் தென்கிழக்கில் கங்

கைக்கு சமமான தடாகமுள்ள ஊரில் சிவாலய விஷ்ணு ஆலயங்கள் அதிகமுடைய பெரிய கிராமம் அல்லது பட்டிணத்தில், வடக்குத் தெற்கு வீதியில் மேற்கு வாடையில் அக்கிர காரத்தில் தகப்பன் வீட்டிலும், உத்தர பாகத்தில் தாய் வீட்டிலும் ஜனனம் நேரிடும்.

(83) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி லக்கின பாவாதிபதி கேந்திர ராசியில் பத்தாம் பாவத்தில் பதினோராம் பாவாதிபதியுடன் கூடியிருந்து பத்தாம் பாவாதிபதி மூன்றும் பாவத்திலும், செவ்வாய் ஏழாம் பாவத்திலுமிருந்து, லக்கினமும் லக்கினாதிபதியும் மேற்படி செவ்வாயால் பார்க்கப்பட்டால் ஜாதகன் பிறந்த போது ஜாதகனுடைய தாய்க்குப் பிரசவ வேதனை அதிகமாயுண்டாகும், சூதிதோஷ பயமும் உண்டாகும், ஷ சந்திரன் பாப நவாம்சத்திலிருந்தால் அப்போது பிரசவத்தில் இரண்டு மூன்று தடவை மகா பீதியும் உண்டாகும், குரு ஷ சந்திரனுக்கு திரிகோணத்தில் இருந்தால் ஜாதகனுக்குச் சகல அரிஷ்டங்களும் விலகிவிடும், உத்தர பாகத்தில் ஜனித்தால் சூதிதோஷம் உண்டாகாது, மாந்த ஜுரம், வைசூரி முதலியவற்றால் எட்டு வருஷம்வரை பாலாரிஷ்ட பயமுண்டாகும்.

(84) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி சூரியன், சனி, செவ்வாய் இவர்கள் கேந்திர ராசிகளிலிருந்தால் ஜாதகனுக்கு பத்து நாள், அல்லது பத்து மாதம், அல்லது பத்து வருஷம்வரை கண்டமுண்டாகும்.

(85) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி ஒன்பதாம் பாவாதிபதி சுய க்ஷேத்திரத்தில் மஞ்சுளாம்சத்திலும், சூரியன் பத்தாம் பாவத்தில் எட்டாம் பாவாதிபதியுடனும் கூடியிருந்து மேற்படி சூரியன் சுமநாம்சத்திலுமிருந்தால் ஜாதகன் மத்திய வயதும், ஹரிசங்கர பக்தியுமுடையவன், கல்வி அறிவுடையவன், பரத நாட்டியத்தில் சமர்த்தன், பாட்டிலும் சமர்த்தன், சங்கீதத்தில் நல்ல ஞானமுடையவன், சங்கீதம், பரத நாட்டியம் முதலான வற்றாலும் ஜீவனம் செய்பவன், தாஸியாலும் ஜீவனமுடையவன், அரசாங்கத்தில் நன்கு பேசுபவன், சங்கீதத்தைப்பற்றிப் பிரசங்கங்கள் செய்பவன், அதனால் அதிக சுகமுடையவன், தன தான்னிய லாபமுடையவன், வஸ்திர ஆபரண லாபமுடையவன், அரசனிடத்திலும், மற்ற சகலரிடத்திலும் சிநேகிதமுடையவன், பிரபுத் துவாராவாகவும், பிரபுக்களாலும் சுகமுடையவன், தேவப் பிராம்மண விசுவாசி, கல்வியால் ஜீவனமுடையவன், சங்கீத சாகித்திய மூலமாக ஆயுள்வரையில் ஜீவனம் செய்வான், மூன்று சகோதரருடையவன், இவர்களில் இருவர் சந்ததி உடையவர்கள், ஒருவன் (சகோதரன்)

சந்ததி யில்லாதவன், அற்பகாலம் சுமங்கலியாயுள்ள ஒரு சகோதரியுமுடையவன், அவள் கொஞ்ச காலத்தில் மரித்து விடுவாள், ஜாதகனுடைய இரண்டாம் தெசையில் ஜாதகனுடைய தகப்பன் மரித்துவிடுவான்.

(86) ஜென்ம லக்கினம் துலாமாகி நான்காம் பாவாதிபதியாகிய சனி, பதினோராவது பாவத்தில் குரு, கேது இவர்களுடன்கூடியிருந்து சந்திரன் மூன்றும் பாவத்தில் இருந்தால் ஜாதகன் தாய் சாத்துவீகம், சுத்தம், பதி பக்தி, வமிசவிருத்தி, முதலியன உடையவள், தாய் வமிசத்தில் அற்பசுக முடையவள், தேவப் பிராம்மண பக்தியுடையவள், ஜாதகனுக்கு அம்மான் உண்டு என்று சிலரும், இல்லை யென்று வேறு சிலரும் எண்ணுகின்றனர், ஜாதகனுடைய தாய், பந்துக்களுக்கு உபகாரம் செய்பவள், அன்னதானஞ்செய்பவள், இவள் ஜாதகனுடைய ஜன்ம தெசையில் கண்டமடைவாள்.

(87) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி மூன்றும் பாவாதிபதியாகிய குரு பதினோராம் பாவத்தில் சனியுடன்கூடியிருந்தால் ஜாதகன் மூத்த சகோதரனில்லாதவனுவான், இளைய சகோதரனுடையவன் ஜாதகனுடைய இளைய சகோதரன் வெளுப்புநிறமும், சம தேகமும்உடையவன், ரூபலக்ஷணமுடையவன், அதிருஷ்டசாலி, மேதாவீ, கல்வியறிவுடையவன், எழுதுவதால் ஜீவனமுடையவன், நியாயவாதி, நல்ல நிபுணன், தாய்சுகமுடையவன், சகோதரனும் சுகமுடையவன், விவாகம் முதலியவற்றை சகோதரனுலேயே அடைவான், மனைவியால் சுகமுடையவன், பூமியாலும் சுகமுடையவன், தனம் தான்னியம், புத்திரபௌத்திரர்முதலிய விருத்தி உடையவன், மேற்படிமூன்றும்பாவமான தனுசுராசிக்கு ஐந்தாமிடமான மேஷத்தில் செவ்வாயிருந்தால் ஜாதகனுடைய சகோதரன் சந்ததிக்குத் தடையுடையவனுவான், அந்த தோஷ சாந்தியாக தானமும், சுப்பிரமணிய விரதமும் செய்து கிருஷ்ணயாமள கல்ப விதிப்படி பாலகிருஷ்ண பிரதிமையையும் தானம் செய்யின் ஆயுளுள்ள இரண்டு புத்திரரும், இரு புத்திரிகளுமுண்டாவார்கள், அவன் அதன் பிறகு யோகவிருத்தி அடைவான், மத்திய வயதில் அதிக யோகமடைவான், பதினறு வயதுமுதல் பிரசித்தியுடையவன், இருபதிலிருந்து எழுதுவதால் பிரசித்தி அடைவான், வீட்டில் லக்ஷ்மீகடாக்ஷமுடையவனுவான், அவனுடைய இருபத்தைந்தாம் வயதில் ஜாதகனுடைய சகோதரன் குடும்ப சொத்துக்களை பாகம் செய்துகொள்ளுவான், அதன் பிறகு விசேஷ தன விருத்தியும், ஆயிரத்திற்கு மேற்பட்ட யோகமும், தனமும், முப்பத்தைந்து வயதிலிருந்து யோகமும் அடைவான், சிக்ஷிக்கவும் ரக்ஷிக்கவும் அதிகாரமடைவான், பதினறு வருஷம் தொடர்ந்து யோக மனுபவிப்பான், கிரக க்ஷேத்திராதி லாபமடைவான், நூதன கிரக

லாபமுமுடையவன், மெத்தையிட்ட மண்டபம், யானை, குதிரை, பல்லக்குமுதலிய லாபமும், அரசப் பிரீதியும், சுய கிராமவாசமும் அடைவான், எட்டு வருஷம் சுயகிராமத்திலேயே உத்தியோகமும், பிறகு வேறு தேசத்தில் பிரபல உத்தியோக ஜீவனமும், ராஜ முத்திராதிகாரமும், நியாய சபையில் ஜீவனமும், அதனால் தனம் பூமி முதலிய விருத்தியும், தனதான்ய லாபமும், வாகனம் வஸ்திரம் முதலிய லாபமும், அரசாங்கப் பிரசித்தியும், அரசன்முதல் மற்ற சகலருடைய உள்ளன்புடையவனும், இருபதாயிரம் ஆஸ்திமானாக வும், ஐம்பதாவது வயதில் கீர்த்தி உடையவனாகவும், பற்பல கிராமங்களில் பிரசித்தி உடையவனாகவும் ஆகி புத்திரன் மனைவி முதலியவர்களால் சுகமும், பௌத்திர விர்த்தியும், ஐம்பத்தைந்தாவது வயதில் புதுவீடு, பூமிமுதலிய விருத்தியும், பசு எருமை முதலியனவும் விருத்தி உடையவனுவான், சாந்தி செய்யாவிடில் இவன் தத்த புத்திரனால் சந்ததி அடைவான்.

(88) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி சந்திரனுக்கு ஐந்தில் செவ்வாயும், சந்திரனுக்கு ஒன்பதில் சனியு மிருந்தால் ஜாதகன் துஷ்ட வேசி ஸ்திரீகளால் தன நஷ்டமும், தேகபீடையும், வழிவழியாயடைவான், பிறகு சுகமும் சுபமும் அடைவான்.

(89) ஜென்ம லக்கினம் துலாம் (குடிலாம்சம்) ஆகி பத்தாம் பாவாதிபதி வர்க்கோத்தமாம்சத்தில் தனுசு ராசியில் இருந்து விப்பிரகாலத்திலுமிருந்தால் ஜாதகன் விஷ்ணு பக்த குலத்தில் ஜனனமடைவான்.

(90) ஜென்ம லக்கினம் துலாம் (குடிலாம்சம்) ஆகி பூர்வ பாகத்தில் ஜனித்தவனுக்கு லக்கின பாவாதிபதி ஐந்தாம் பாவத்திலும், நான்காம் பாவாதிபதி சுய க்ஷேத்திரத்திலுமிருந்தால் ஜாதகனுக்குப் பெரிய கிராமத்தில் அல்லது பட்டிணத்தில் பிரசித்த விஷ்ணு ஆலயமுடையதும், சிவாலய சமீபமுமுள்ள கிழக்கு மேற்கு வீதியில் வடக்கு வாடையில் தகப்பன் வீட்டில் ஜனனமும், உத்தரபாகத்தில் தெற்கு வாடையில் தாய் வீட்டில் ஜனனமும் நேரிடும்.

(91) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி ஒன்பதாம் பாவாதிபதி ஐந்தாம் பாவத்திலும், சூரியன் நான்காம் பாவத்திலுமிருந்தால் ஜாதகன் தகப்பன் தீர்க்க வயதுடையவன், கல்வி அறிவுடையவன், மேன்மையான சுபாவமுடையவன், தித்திப்பு, புளிப்புப் பிரியன், பாலியத்தில் அற்ப சுகமும், மத்திய வயதில் சுகமும் உடையவன், அந்திய வயதில் கஷ்டமுடையவன், வீடு பூமி நஷ்டமுடையவன், பிறகு வேறு இடத்தில் பூமி லாபமும், அங்கு சுகமும், புத்திரீ புத்திரரால் சுகமும், ஆமமூல சுகமும், நானுமூலம் சுகமும், ஒரே தாரமும் அடைபவன்,

(92) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி நான்காம் பாவாதிபதி நான்காம் பாவத்தில் பதினோராம் பாவாதிபதியுடன் கூடியிருந்து குருவாலும் பார்க்கப்பட்டால் ஜாதகன் தப்பாமல் புதையல் தனமடைவான்.

(93) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி பதினோராம் பாவாதிபதியாகிய சூரியன் மகரராசியில் சிம்ம நவாம்சத்தில் இருந்து நான்காம் பாவாதிபதி நீச்சாம்சத்திலிருந்து ராசி நவாம்சங்களில் இவ்விருவரும் குருவால் பார்க்கப்பட்டால் ஜாதகன் தப்பாமல் புதையல் தனமடைவான்.

(94) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி நான்காம் பாவாதிபதி நான்காம் பாவத்திலும், சந்திரன் மூன்றும் பாவத்திலுமிருந்தால் ஜாதகன் தாய் தீர்க்க வயதுடையவள், சாத்து வீகம், சுத்தம், பதிபக்தி, வமிசவிருத்தி, விசேஷ அறிவு, புத்திரீ புத்திரர் பத்து அல்லது பதினாறு பிரசவம் முதலியன உடையவள், உடன்பிறந்த சகோதரருடையவள், ஜாதகனுடைய ஐந்தாந் திசையில் மரித்து விடுவாள்.

(95) ஜென்ம லக்கினம் துலாம் (பிராம்மியம்சம்) ஆகி நீச்ச ராசியில் சுக்கிரனிருந்தால் ஜாதகன் வியாபாரிகுலத்தில் விஷ்ணு பக்த வமிசத்தில் முன் பின் சகோதரனற்றவனாக ஜனிப்பான்.

(96) ஜென்ம லக்கினம் துலாம் (பிராம்மியம்சம் பூர்வபாகம்) ஆகி லக்கின பாவாதிபதி பன்னிரண்டாம் பாவத்தில் சூரியனுடன் கூடியிருந்து பன்னிரண்டாம் பாவாதிபதி லக்கின பாவத்திலும் நான்காம் பாவாதிபதி ஒன்பதாம் பாவத்திலுமிருந்தால் ஜாதகனுக்கு நதிப்பிராந்தியத்தில் புண்ணிய க்ஷேத்திரத்தில் சிவாலயம் அதிகமாயுள்ளதும் விஷ்ணு ஆலயம் சமீபத்திலுள்ளதும் ஆன பெரிய கிராமம் அல்லது பட்டிணத்தில் வடக்குத் தெற்கு வீதியில் மேற்கு வாடையிலுள்ள தகப்பனுடைய மிக்க பழமையாயுள்ள இடிந்த வீட்டில் ஜனனமும், உத்தராம்சத்தில் மிதமான சிறிய கிராமத்தில் தாய் வீட்டில் ஜனனமும் நேரிடும்.

(97) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி லக்கின பாவாதிபதி நீச்சத்தில் இருந்து பன்னிரண்டாம் பாவாதிபதி லக்கின கேந்திரத்தில் இருந்தால் ஜாதகன் பிறந்த பிரசவ அறையின் வாயிற்படி கிழக்கு மேற்காயிருக்கும், இரண்டு புறமும் வாயிற்படி யுள்ள தாயிருக்கும், பிரசவ அறையின் உள்ளில் ஒரு விதவையும், ஒரு சுமங்கலியும் இருப்பார்கள், சிவந்த அழுக்கடைந்த கிழிந்த ஆடையை ஜாதகன் தாய் அணிந்திருப்பாள், குழந்தைக்கும் அதே வஸ்திரம்தான்

போடப்பட்டிருக்கும், பிரசவ சமயத்தில் ஜாதகன் தாய் அதிக வேதனையடைவாள், உத்தராம்சத்தில் அற்ப வேதனை யடைவாள்.

(98) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி எட்டாம் பாவத்தில் சந்திரனிருந்தால் ஜாதகன் தாய் சாத்துமீகமுள்ளவளாயிருப்பாள், மேற்படி சந்திரனுக்கு ஐந்தாமிடத்தில் சுக்கிரனிருந்தால் ஜாதகனுடைய தாய்க்கும் ஜாதகனுக்கும் சகலாரிஷ்டங்களும் விலகிவிடும், மேற்படி சந்திரனுக்கிரண்டாமிடத்தில் சனியிருந்தால் ஜாதகன் பிறந்த பிறகு ஜாதகனுடைய தாய்க்கு பத்து தினம் பீடையல்லது துஷ்டக்கிரக தோஷம் சம்பவித்து ஜாதகனுடைய ஜன்மதிசையில் கஷ்டமுண்டாகிப் பிறகு சுகமடைவாள்.

(99) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி பிதுரு காரகனாகிய சூரியன் பன்னிரண்டாம் பாவத்திலிந்து பிதுரு ஸ்தானாதிபதியாகிய புதன் லக்கின கேந்திரத்தில் குரு, ராகு இவர்களுடன் கூடியிருந்து மேற்படி சூரியன் நீச்சநவாம்சையில் இருந்து, குருவுடன்கூடியிருந்தாலும், குருவால் பார்க்கப்பட்டாலும் ஜாதகனுடைய தகப்பன் தீர்க்க வயதுடையவன், விசேஷ விஷ்ணு பக்தி உடையவன், சொற்ப கல்வியறிவான், புத்திரனால் யோகமுடையவன், பாலியத்தில் அற்பசுகமும், சொற்ப லாபமும், தன் தகப்பனால் அற்பசுகமும், பிதுரார்ஜித ஆஸ்தி லாபமுமுடையவன், பிதுரார்ஜித கிரகத்தைக் கிரயம் செய்துவிட்டு அந்த வீட்டுக்குத் தெற்கில் அல்லது தென்கிழக்கில் அல்லது தென்மேற்கில் புதுவீடு லாபமடைவான், அந்த வீட்டாலும் வேறு பிரபுவாலும், தினம் ஒன்றுக்கு நூறு அல்லது நூற்றைம்பதுக்குமேல் தனமுடைய எண்ணெ வியாபாரம் செய்வான், ஜாதகனுடைய தகப்பன் இரண்டு பங்கு லாபமும், மற்றவன் ஒருபங்கு லாபமுமடைவான், பிறகு வியாபாரப் பிரபலமடைந்து பல வழிகளாலும், எண்ணெயாலும் அதிக தனமடைந்து, பிரபலவியாபாரம்செய்து, தனமும், யோகமும்,கீர்த்துமடைவான், எண்ணெ வியாபாரத்தால் விசேஷ தனமும் அடைவான், முதலில் தன் சகோதரியின் கணவனோடு வியாபாரமும், அதிலும் இரண்டு பங்கு லாபமும் உடையவன், வியாபாரத்தினால் வீடு, பூமி, பசு, எருமை, பொன், ஆபரணம் முதலியவற்றை அடைவான், தினந்தோறும் பாக்கியவிருத்தியடைந்து, இரண்டு பாக வியாபாரமுடையவனாவான், இதில் ஒரு பாகத்தை வேறு ஒரு பந்துவுக்குக் கொடுப்பதுபோல் செய்து மித்திர வஞ்சனை செய்பவன், கபட எண்ணமுடையவன், பிரீதியில்லாதவன், நியாயாந்நியாய விவேகமில்லாதவன், பாபச்செய்கை யுடையவன், முதலில் சொன்னபடியே பாகம் கொடாதவன், பிறகு பாகமே கொடாதவன், பிறகு ஒருவருக்கொருவர் விரோதமுண்டாகி தன் இனத்

தார் மூலமாக கணக்குத்தீர்த்து முதலிலிருந்து மூன்றிலொரு பாகம் மத்தியஸ்தத்தின்படி கொடுப்பான், பிறகு தனியாய் ஜாதகனுடைய தகப்பனின் சகோதரியின் கணவன் வியாபாரம் செய்வான், அதிலிருந்து தினந்தோறும் சம்பத்தும், கீர்த்தியும், யோகமும் விருத்தியுண்டாகும், பற்பல தேசங்களிலும் புகழடைவான், ஜாதகனின் தகப்பன் படிப்படியாய் நஷ்டமும், பயமும், கஷ்டமும், சஞ்சலமும், மித்திர துரோகம் செய்த காரணத்தால் வியாபாரமின்மையும் அடைவான், பிறகு முன்போல் இருவரும் கூடி பிரபல வியாபாரம் செய்து நஷ்ட திரவியத்தை ஜாதகனுடைய தகப்பனடைவான், ஜாதகனுடைய தகப்பன் ஒரே தாரமுடையவன், ஜாதகனுடைய நான்காந்தெசையில் மரிப்பான்.

(100) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி நான்காம் பாவாதிபதியாகிய சனி ஒன்பதாம் பாவத்திலிருந்து சந்திரன் தன் உச்ச ராசியிலிருந்து ஷை சனி எட்டாவது அம்சமாகும் ரிஷப நவாம்சத்திலிருந்து செவ்வாய், குரு இவர்களால் நவாம்சத்தில் பார்க்கப்பட்டு சந்திரன் ஏழாவது அம்சமான மேஷத்தில் இருந்தாலும், அல்லது மகரத்திலிருந்தாலும் ஜாதகன் தாய் சாத்துவீகம், சுத்தம், பதி பக்தி, வமிசவிருத்தி, பாக்கியவிருத்தி, சுத்தம் முதலியன உடையவள், ஒரு சகோதரனுடையவள், ஜாதகனுடைய நான்காந் தெசையில் இவள் மரிப்பாள்.

(101) ஜென்ம லக்கினம் துலாம் (குமுதாம்சம்) ஆகி ராகு வர்க்கோத்தமாம்சத்தில் இருந்து சந்திரன் கடக ராசியில் நான்காவது காலத்திலிருந்தால் ஜாதகன் விஷ்ணு பக்த குலத்தில், பாக்கியமுள்ள வமிசத்தில், நான்காவது கெற்பத்தில் ஜனனமடைவான்.

(102) ஜென்ம லக்கினம் துலாம் (குமுதாம்சம் பூர்வபாகம்) ஆகி லக்கின பாவாதிபதி ஆறுவது பாவத்திலும் நான்காம் பாவாதிபதி பன்னிரண்டாம் பாவத்திலுமிருந்தால் ஜாதகனுக்கு வனப் பிராந்திய பட்டிணத்தில் அல்லது பெரிய கிராமத்தில் சிவாலய விஷ்ணு ஆலயங்களுள்ள ஊரில் தெற்கு வடக்கு வீதியில், மேற்கு பார்த்த வாயிற்படி உள்ள வீட்டில் தகப்பன் வீட்டில் ஜனனமும், உத்தர பாகத்தில் தாய்வீட்டில் ஜனனமும் நேரிடும்.

(103) ஜென்மலக்கினம் துலாம் ஆகி இரண்டாம் பாவாதிபதி எட்டாம் பாவத்திலும், சந்திரன் பத்தாம் பாவத்திலுமிருந்து, சனியின் ராசியில் சூரியனும் புதனும் கூடியிருந்தால் ஜாதகன் தீர்க்காயுசு, தனம், இரட்டைமனைவி, கிராமாதிபத்தியம் முதலியன அடைவான்.

(104) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி ஒன்பதாம் பாவாதிபதி நான்காம் பாவத்தில் பிதுரு காரகனுடன் கூடியிருந்து சிம்ம நவாம்

சத்தில் சூரியன், குரு, சுக்கிரனிவர்களுடன் கூடியிருந்தால் ஜாதகனுக்குத் தகப்பன் இருவரும் தாய் இருவருமாவார்கள்.

(105) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி நான்காம் பாவாதிபதி பன்னிரண்டாம் பாவத்திலும் சந்திரன் பத்தாம் பாவத்தில் சுயக்ஷேத்திரத்தில் ராகுவுடனும் கூடியிருந்தால் ஜாதகன் தாய் தீர்க்காயுசு, சாத்துமீகம், கொஞ்சம் துஷ்ட சுபாவம் முதலியனவும், பதிபக்தியும் உடையவள், கொஞ்சம் தோஷமும் உடையவள், பந்துக்களுக்குப் பிரியை, புத்திரீ புத்திர வமிசவிருத்தி உடையவள், ஐந்து ஆறு பேர்கள் தன் உடன் பிறப்புடையவள், ஜாதகனுடைய தாய் ஜாதகனுடைய மூன்றுந்தெசையில் மரிப்பாள்.

(106) ஜென்ம லக்கினம் துலாம் (குசுமாம்சம்) ஆகி ஒன்பதாம் பாவாதிபதி லக்கின கேந்திரத்தில் இருந்து சந்திரன் மீன ராசியில் நான்காவது காலத்திலிருந்தால் ஜாதகனுக்கு சிவபக்த குலத்தில் ஜனனமேற்படும்.

(107) ஜென்ம லக்கினம் துலாம் (குசுமாம்சம் பூர்வபாகம்) ஆகி லக்கின பாவாதிபதி மூன்றும் பாவத்திலும், நான்காம் பாவாதிபதி ஐந்தாம் பாவத்திலுமிருந்தால், ஜாதகன் வனப் பிராந்தியத்தில் பெரிய கிராமத்தில் சிவாலயம் விஷ்ணு ஆலயம் முதாலனவை உள்ள ஊரில் கிழக்கு மேற்கு வீதியில் வடக்கு வாடையில் தகப்பன் வீட்டில் ஜனனமும், உத்தர பாகத்தில் தாய் வீட்டில் ஜனனமும் அடைவான், இவற்றில் பூர்வ உத்தர பாகங்களில் பலனில் கொஞ்சம் வித்தியாச மேற்படும்.

(108) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி லக்கின பாவாதிபதி மூன்றும் பாவத்திலும், நான்காம் பாவாதிபதி ஐந்தாவது பாவத்திலும் இருந்து, ஒன்பதாம் பாவாதிபதி லக்கின பாவத்தில் இரண்டாம் பாவத்திற்கதிபதியுடனும் சூரியனும் கூடியிருந்தால் ஜாதகன் பற்பல கிராமங்களில் பிரசித்தியும், சுயகிராமத்தில் அரசாங்கத்தால் பிரசித்தியும், சுகமும், எழுத்து மூல ஜீவனமும் ஒன்றல்லது ஒன்னரை நிஷ்கப்பிரமாண சம்பளமும் உடையவனுவான்.

(109) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி ஒன்பதாம் பாவாதிபதி லக்கின கேந்திரத்தில் சூரியனுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் சுகமுடையவன், கல்வி அறிவுடைய விவேகி, எழுத்து மூலமாக அரசாங்கத்தில் ஜீவனமுடையவன், பூமியாலும், சுகமடைவான், ஆயுள்வரை உத்தியோகத்தால் சுகமுடையவன்.

(110) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி நான்காவது பாவாதிபதியாகிய சனி சுயக்ஷேத்தில் ஐந்தாம் பாவத்திலிருந்து சந்திரன் மீன ராசியில் இருந்தால் ஜாதகன் தாய் தீர்க்க வயதுடையவள்.

சாத்துவீகம், சுத்தம், பதிபக்தி, வமிசவிருத்தி, புத்திர புத்திர பிரசவம் முதலியன உடையவள், இரண்டு சகோதரிகளும், ஒரு சகோதரனுமுடையவள், ஆயுள்வரை ஜாதகனுடைய தாய் ஜாதகனிடமே வாசம் செய்து ஜாதகனுடைய மூன்றுந் தெசையின் கடைசியிலல்லது நான்காந்தெசையின் கடைசியில் மரிப்பாள்.

(111) ஜென்மலக்கினம் துலாம் ஆகி ஏழாம் பாவாதிபதியாகிய செவ்வாய் லக்கின கேந்திரத்தில் இருந்து சுக்கிரன் மூன்றும் பாவத்தில் இருந்து ஏழாம் பாவத்தில் ராகு இருந்து சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்கு இரு மனைவியர் உண்டாவார்கள், ஜாதகனுடைய மூத்த மனைவி விவாககாலத்தில் இரண்டு மூன்று இடங்களில் ஜாதகனுடைய சகோதரி எத்தினப்பட்டு பிறகு விவாகமாகும், ஆயினும் கெற்பாதான காலத்தில் அவள் விரோதத்தால் அல்லது கலஹத்தால் வேறுபட்டு நின்று விடுவாள், பிறகு எட்டு அல்லது ஒன்பதாம் வருஷத்தில் ஜாதகன் இரண்டாவது மனைவியை மணப்பான், இந்த விவாகம் ரகசியமாகவே நடக்கும்.

(112) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி ஐந்தாம் பாவத்தில் சனி வக்கிரமடைந்திருந்தால் விஷ்ணு தேவதாப் பிரீதியும், சிவ விஷ்ணு ஆலயங்களைப் புதுப்பித்தலும் அதனால் வமிச விருத்தியும் உண்டாகும், மேலும் மேற்படி சனிப்பிரீதி காரணமாக பிரம்ம தீர்த்தத்தில் நாராயண பலியும், பாலமுகுந்த தானமும் செய்து, புண்ணிய க்ஷேத்திரத்தில் மேற்படி தானத்தை கார்த்திகை மாதத்தில் சுக்கில பக்ஷ தசமியில் அல்லது மாசி மாத ஏகாதசியில் பிராம்மணனைக் கொண்டு பூஜை விதிகளின் படி செய்து வெள்ளிக்கிழமையில் நான்கு வாரம் பிராம்மண போஜனம் செய்வித்து, பிறகு கட தீபம் சமர்ப்பித்து, சாந்தி செய்தால் சந்ததி நிச்சயமாயுண்டாகும்.

விருச்சிக லக்கினம்

(1) ஜென்மலக்கினம் விருச்சிகம் ஆகி சிம்ம நவாம்சத்தில் லக்கினமிருக்கப் பிறந்தவனுக்கு சூரியன் தன் உச்ச ராசியிலிருந்தால் விப்பிரகாலத்தில் விஷ்ணுபக்த குலத்தில் வைகாநஸ குலத்தில் அற்ப சகோதரனுடையவனாக ஜனனம் நேரிடும்.

(2) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி குரு லக்கினாரூடாதிபதியாகவும், நான்காம் ஆரூடாதிபதியாகவும் ஆனால் ஜாதகன் நதிப்பிராந்திய தேசத்தில் ஜனனமும் வாசமும் அடைவான்.

(3) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி லக்கினத்தில் சுக்கிர னிருந்தாலும், லக்கினத்தைச் சுக்கிரன் பார்த்தாலும் ஜாதகனு டைய தாய் பிரசவத்தில் அற்ப வேதனை அடைவாள்.

(4) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி லக்கின பாவாதிபதி சனியுடன்கூடி (மகரத்தில்) இருந்தால் ஜாதகன் தாய் சூதிதோஷ மடைவாள், முன் புண்ணிய பலத்தாலும், தகப்பன் புண்ணியத்தா லும் ஜாதகனும் தாயும் சுகமடைவார்கள்.

(5) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி லக்கின பாவாதிபதி யாகிய செவ்வாய் தன் உச்ச ராசியிலிருந்து எட்டாம் பாவாதிபதி யாகிய புதன் நீச்ச ராசியிலிருந்து பத்தாம் பாவாதிபதி தன் உச்ச பாகத்திலிருந்தால் ஜாதகனுக்கு சந்தேகமின்றி ஆயுள் விருத்தி உண்டாகும்.

(6) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி லக்கினரூடாதிபதி யும் ரந்திராரூடாதிபதியும் ஆக குருவாகி, அவர் பதினோராம் பாவத்திலிருந்து சுக்கிரன் கேந்திர திரிகோணத்தில் இருந்தால் ஜாதகன் எல்லா தோஷ நிவாரணமுமுள்ளவனுகி, மத்தியாயுளாக அறுபத்தாறு வயதடைவான், இந்த வயதில் நடுமத்தியில் தேக பீடையும் அபமிருத்து பயமும் அடைவான்.

(7) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி சூரியன் தன் உச்சத் சத்தில் இருந்து ஒன்பதாம் பாவாதிபதி சிம்ம ராசியில் இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் சுகமுடையவன், உடன்பிறந்த சகோதர ருடையவன், விஷ்ணுபக்தி யுடையவன், தேவப் பிராம்மண விசு வாசமுடையவன், தைவசொத்தால் ஜீவிப்பான், வயதின் மத்தியில் பிரசித்தி உடையவன், அற்ப வித்தையால் சுகமுடையவனுவான்.

(8) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி ஒன்பதாம் பாவாதி பதி பத்தாவது கேந்திரத்திலிருந்து பாக்கியாரூடத்தில் குரு இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் தேவதா பூஜை செய்பவன், ஜன்மம்முதலாக பாக்கியமும், சுகமும் உடையவன், ஆயுள்வரை யில் சுகமுடையவனுவான், ஜாதகனுடைய தகப்பன் ஜாதகனு டைய இரண்டாந் தெசையில் கடைசியில் அல்லது மூன்றுந் தெசை சுய புக்தியில் மரிப்பான்.

(9) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி நான்காம் பாவாதிபதி யாகிய சனி சுய க்ஷேத்திரத்தில் இருந்து சந்திரன் சிம்ம ராசியில் வர்க்கோத்தமாம்சத்தில் இருந்தால் ஜாதகன் தாய் சுகமுடைய வள், நற்குணமுடையவள், பதியிடம் பிரியமுடையவள், சுப முடை யவள், புத்திர சுகமுடையவள், மூன்றுந் தெசையில் மரிப்பாள்

(10) ஜென்ம லக்கினம் விருச்சிகம் கன்னியா நவாம்சம் ஆகி லக்கின பாவாதிபதி பதினோராவது பாவத்தில் இருந்து வைசிய காலத்தில் பிறந்தவன், வைசிய குலத்தில் சகோதர சகோதரிகளுடன் கூடியவனாக வீர வைசிய குலத்தில் ஜனனமானவனாவான்.

(11) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி நான்காம் பாவத்தில் புதனும் சுக்கிரனும் கூடியிருந்தால் ஜாதகனுக்கு நதீதீரத்திலுள்ள பெரிய கிராமத்தில் அல்லது பட்டிணத்தில் கிழக்கு மேற்கு வீதியில் ஜனனம் நேரிடும்.

(12) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி லக்கின பாவாதிபதி சுமதாம்சத்தில் பதினோராவது பாவத்தில் இருந்தால் ஜாதகன் தாய் பிரசவத்தில் அதிக வேதனையில்லாதவள்.

(13) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி இரண்டாம் பாவத்தில் ராகு இருந்தால் ஜாதகனுக்குப் பாலதோஷ பயமுண்டாகும், மாந்த ஜுரத்தாலும், வைசூரியாலும், பாதையுண்டாகும், அப்போது பாலகிருஷ்ணதானம் செய்தால் ஜாதகனுக்குச் சுகமுண்டாகும்.

(14) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி லக்கின பாவாதிபதி பதினோராவது பாவத்திலும் எட்டாவது பாவாதிபதி கேந்திர ராசியிலுமிருந்து சனி வர்க்கோத்தமத்திலிருந்தால் ஜாதகன் தீர்க்கமாக எழுபது வயதுடையவனாவான்.

(15) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி சூரியன் மித்திர ராசியில் ஐந்தாம் பாவத்தில் இருந்து ஒன்பதாம் பாவாதிபதியாகிய சந்திரன் மூன்றும் பாவத்தில் இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் தீர்க்காயுசுடையவன் ஆவான்.

(16) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி சூரியன் நின்ற ராசிக்கு மூன்றும் ராசியின் அதிபதியாகிய சுக்கிரன் (கும்பத்தில்) கேந்திர பாவத்தில் இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் சகோதரனுடையவனாவான்.

(17) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி சூரியன் குருவினுடைய ராசியில் இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் சிவபக்தியுடையவன், விசேஷ சிவபக்தியுடையவன், வீர சைவமத ஆச்சாரமுடையவன், வியாபாரத்தில் சுகமுடையவன், தேவப் பிராம்மண விசுவாசமுடையவன், வஸ்திர வியாபாரத்தால் ஜீவிப்பான் வியாபாரத்தில் சமர்த்துடையவன், திரவிய சம்பாதனையில் சமர்த்தன், ஆஸ்தீகன், நிறைந்த ஞானமுடையவன், முன் பாபங்களை நாசம் செய்பவன், அங்கு ஷ சூரியனே அஷ்டக வர்க்கத்தில்

நான்கு பரல்களுடன் கூடியிருந்தால் ஜாதகன் தகப்பன் மூத்த சகோதரனை இழந்து விடுவான், சிவகைங்கரியங்கள் செய்பவன், தர்மாத்துமா, ஜீர்ணோத்தாரணம் செய்பவன், சைவப்பிராம்மண ஜன சினேகமுடையவன், அவர்களால் அகஸ்மாத்தாக தர்ம சித்தி உடையவன், தன் ஜன சினேகமூலமாக வெளிதேசத்தில் தர்ம சித்தியுடையவன், பாட்டன்முதலானவர்கள் செய்த பாபமெல்லாம் தன்னுடைய சிவதர்மத்தினால் நாசம் செய்வான், விஷ்ணுவுக்கு தர்மம்செய்து புண்ணியங்களால் புத்திர புத்திரீ சுகமுடையவன் ஆவான், ஜாதகனுடைய தகப்பன் ஜாதகனுடைய நான்காந் திசையில் மரிப்பான்.

(18) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி நான்காம் பாவத்தில் சுக்கிரனிருந்து புதனுடனும் கூடியிருந்து குருவால் பார்க்கப்பட்டாலும், ஜாதகன் தாய் தீர்க்காயுளடைவாள், குணமும், சுத்தமும் உடையவள், முன் புண்ணியமுடையவள், கடவுளின் அருளால் புத்திர பாக்கியவதியாவாள், இவள் ஜாதகனுடைய மூன்றுந் தெசையில் மரணமடைவாள்.

(19) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி மூன்றும் பாவத்தில் சந்திரனிருந்து பதினோராவது பாவத்தில் செவ்வாய் பலத்துடனிருந்தால் ஜாதகன் சகோதரவிருத்தி உடையவன், இரண்டு மூத்த சகோதரரும் ஒரு இளைய சகோதரனுமுடையவன், தகப்பனுடைய புண்ணிய வசத்தினால் இரண்டு சகோதரிகளுடையவனாவான்.

(20) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி குரு திரிம்சாம்சத்தில் இரண்டாம்பாவ முதல் வரிசையாகவுள்ள கிரகமாலிகாயோகத்தில் பிறந்தவன், வெளுப்பு நிறமுடையவன், சூட்டுத்தேகி, பித்த தேகமுடையவன், நிறைந்த ரூபவான், அறிவாளி, வாச்சாலகன், கல்வி அறிவுடையவன், லக்ஷணமுடையவன், அழகிய முகமுங் கண்களுமுடையவன், அதிர்ஷ்டசாலீ, மேதாவீ, விசேஷ சிவ பக்தி உடையவன், எப்போதும் சிவ விரதமிருப்பான், வீரசைவ மதத்தை அனுசரிப்பவன்.

(21) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி இரண்டாம் பாவத்தில் ராகு இருந்தால் ஜாதகன் வாச்சாலகன், சாதுரியமான யுக்தியுடையவன், பாக்கியவமிசத்தில் பிறந்து பாக்கியவானயிருப்பான், துராலோசனை செய்பவன், திரவியசம்பாதனையில் வெகுசமர்த்தன்.

(22) ஜென்மக்கினம் விருச்சிகம் ஆகி லக்கின பாவத்திற்கைந்தில் சூரியனிருந்து சந்திரனுக்கு ஒன்பதில் (கன்னியில்) செவ்வாயிருந்தால் ஜாதகன் பிறந்த வருஷத்தில் தகப்பன் அற்பசுமுகம், அதி

விரயமும் உடையவன், மூன்றும் வயது முதல் சுகமும், வியாபாரத்தினல் சுகமும் உண்டாகும், ஜன்மதெசையில் ஜாதகனுக்குக் கொஞ்சம் பால தோஷ பயமுண்டாகும், தாய் தகப்பன் சுகமும், வியாபாரத்தில் அற்பசுகமும் உண்டாகும், இரண்டாந்தெசையில் பாக்கியயோகமுண்டாகும், தன் தகப்பன் வெகு பாக்கியமுடையவனுவான், ஒன்பதாம்பாவாதிபதியாகிய சந்திரனுடைய திசைவந்தால் அந்த தெசையில் விசேஷ பாக்கியமடைவான், பாலதோஷங்கள் விசேஷமாயுண்டாகும், அப்போது ஜீவித்திருந்தால் பிறகு மேற்சொன்ன பலனை இவன் அடைவான், ஐந்தாம் வயதில் அக்ஷரஞான மடைவான், சர்வ வித்தையும் கற்பான், பதினறு வயதிலிருந்து வியாபாரத்தில் விசேஷ பலனடைவான்.

(23) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (சுமத்திபம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி எட்டாம் பாவத்திலிருந்து சூரியன் பத்தாம் பாவத்தில் இருந்தால் ஜாதகன் தாய்க்குப் பிரசவத்தில் அற்ப வேதனையும், உத்தரபாகத்தில் வேதனை விசேஷமும் உண்டாகும்.

(24) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (சுமத்தியம்சம் பூர்வபாகம்) ஆகி சந்திரன் மகரத்திலிருந்து செவ்வாயால் பார்க்கப்பட்டால் ஜாதகன் பாலரோக பீடையடைவான்.

(25) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி லக்கின பாவாதி எட்டாம் பாவத்திலும், பத்தாம் பாவாதி பத்தாம் பாவத்திலுமிருந்து லக்கினத்திற் கைந்தாம் பாவத்தில் சனியிருந்தால் ஜாதகன் சகல தோஷங்களும் விலகி அறுபத்திரண்டு வயதடைவான், இருபத்தெட்டு, நாற்பத்திரண்டு இந்த வயதுகளில் ஜாதகன் பீடையுறுவான், அக்காலம் சாந்தி செய்தால் ஜாதகன் சுகமடைவான்.

(26) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி சூரியன் கேந்திரத்தில் சிம்மராசியில் புதனுடன் கூடியிருந்து ஒன்பதாம் பாவாதிபதி மூன்றும் பாவத்திலிருந்து மிதுனராசியிலிருக்கும் செவ்வாயால் பார்க்கப்பட்டால் ஜாதகனுடைய தகப்பன் சுகமுடையவன், தயையுடையவன், சகோதரஹீனன்.

(27) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி புதன் கூடிய சூரியன் சுயக்ஷேத்திரத்தில் ஸ்ரீதராம்சத்தில் இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் விசேஷ விஷ்ணுபக்தியும், மத்துவாச்சாரமும், தேவப் பிராம்மண பக்தியுமுடையவன், ஆஸ்தீகமுடையவன், சத்தியவாதி, தர்மமறிந்தவன், கல்வியறிவுடைய விவேகியாவான்.

(28) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி சிம்ம ராசியிலுள்ள மேற்படி சூரியன் சரஸ்வதாம்சத்திலிருந்தால் ராஜ சேவையால்

ஜீவனமுடையவனுவான், எழுதுவதில் ஜீவனமுடையவன், திட்டமாய்த்தெரிந்தவன், குணசாலீ, சேர்க்கவும், கலைக்கவும் சாமர்த்தியமுடையவன், வாச்சாலகன், சாதுரியயுக்தியுடையவன், துஷ்டருக்குத் துஷ்டன், குரூரனுக்குக் குரூரன் ஆவான்.

(29) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி கேந்திர ராசியில் சுய க்ஷேத்திரத்திலிருக்கும் சூரியன் ராகுவுடன் கூடியிருந்தாலும், ராகுவால் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் தகப்பன் ஜாதகன் பிறந்த பிறகு ரோகபீதியடைவான், சாந்தியால் சுகமடைவான்.

(30) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி சூரியன் புதனுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் மணிரத்தின பரீக்ஷை செய்பவன், விசேஷ விஷ்ணுபக்தியுடையவன், சாதுக்களுக்கு உபகாரம் செய்பவன்.

(31) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி ஒன்பதாம் பாவாதிபதி மூன்றும் பாவத்திலிருந்து மிதுனராசியிலுள்ள செவ்வாயால் பார்க்கப்பட்டால் ஜாதகன் தகப்பன் ராஜ காரியத்தில் பிரியமுடையவன், நல்ல அறிவாளி, பரஸ்திரீ சங்கமமுடையவன், பச்சாத்தாபத்தினுல் சுத்தியுடையவன், பாலியவயதில் கிலேசமுடையவன், பிதுராரிட்டமுடையவன்.

(32) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி நான்காம் பாவாதிபதி ஐந்தாம் பாவத்தில் வர்க்கோத்தமத்திலிருந்து சந்திரன் செவ்வாயால் பார்க்கப்பட்டு மூன்றும் பாவத்திலிருந்தால் ஜாதகன் தாய் சுகமுடையவள், ஜாதகனுடைய நான்காந்திசையில் தாய் மரிப்பாள்.

(33) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி மூன்றும் பாவாதிபதியாகிய சனி ஐந்தாம் பாவத்திலிருந்து சுக்கிரனுல் பார்க்கப்பட்டிருந்து மிதுன ராசியிலுள்ள செவ்வாயுடன் சந்திரன் கூடியிருந்தாலும், சந்திரன் ஷை செவ்வாயால் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் அற்பசகோதரமுடையவன், ஜாதகனுடைய மூத்த சகோதரன் விசேஷமுடையவன், ஒரு சகோதரி சுகமுடையவளையுடையவன், ஒரு பின்சகோதரனுடையவன், இளைய இரண்டு சகோதரிகளுமுடையவன்.

(34) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி (மகரத்தில் சந்திரனும் மேஷத்தில் குருவுமிருக்கும்) கேசரீயோகத்தில் குரு திரிம்சாம்சத்தில் பிறந்தவன் வெளுப்பு நிறமுடையவன், அதிருஷ்டசாலி, அறிவாளி, மேதாவீ, பித்த தேகமுடையவன், கொஞ்சம் வாயுபீடையுடையவன், சமதேகமுடையவன், சுரூபகுணம்நிறைந்தவன், கல்வியறிவுடையவன், நாடகாலங்கார காவியங்களைப் பிரிய

மாய் சொல்லத்தெரிந்தவன், மூன்று எழுத்துக்களில் வல்லவன் வேறு பாஷைகளில் அறிவுடையவன், ஸம்ஸ்கிருதப்பிரியன், கொஞ்சம் ஸமஸ்கிருத ஞானமுடையவன், தேவப்பிராம்மண பக்தியுடையவன்.

(35) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி பத்தாம் பாவாதிபதி சுயக்ஷேத்திரத்தில் புதனுடன் கூடியிருந்தால் ஜாதகன் சற்கரும ஆச்சாரமுடையவன், விசேஷ குருபக்தியுடையவன், மத்துவாச்சாரமுடையவன், பாலியம்முதல் சுகமுடையவன், எழுதுவதில் சமர்த்தன், சேர்க்கவும் கலைக்கவும் வல்லவன், சத்துருவைச் ஜெயிக்கும் பிரதாபமுடையவன்.

(36) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி சுக்கிரன் சனியுடன் கூடியிருந்தாலும், சனியால் சுக்கிரன் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் பரஸ்திரீ சங்கமமுடையவன், பிதுரார்ஜித சுகமுடையவன், சுயார்ஜிதமும் உடையவன், எழுதுவதில் சமர்த்தனுகி ஜீவிப்பான், பத்திரிகைகளைப் படிப்பவன், அல்லது குமஸ்தாவாயிருப்பான், அரசாங்கப் பிரசித்தியுடையவன், பதினாறு வயதுமுதல் பிரசித்தியுடையவன், இருபது வயதிற்கு மேல் நல்லயோகமுடையவன், ராஜ சன்மானமுடையவன், தியாகமுடையவன், போகசாலி, கெம்பீரமுடையவன், முப்பது வயதிற்குமேல் நீசபிரபுவால் சுகமடைவான், நீச்சராஜியத்தில், பதினாறு வருஷம் துடர்ந்து யோகமுடையவனுவான், நரவாகனம்முதலியன உடையவன், நாற்பது வயதில் நல்ல கீர்த்தியடைவான், பொன், வெள்ளி முதலிய ஆபரணமும். தன் வீட்டில் வெள்ளிபாத்திரம் முதலியனவும் அடைவான், பின் சகோதரனும் நல்லயோகமடைவன், ஜாதகன் நல்லமனைவியுடையவன், புண்ணியநதி, நதங்கள் முதலியவற்றிற்கு யாத்திரை செல்பவன், சகோதரனுடன்கூடியவன், தனமுடையவன், வாஹனமுடையவன், பிரசித்த ராஜனுக்குச்சமமானவன், நித்தியம் அன்னதானம் செய்யும் தாதா, வெகுமானம் அடைபவன், கெம்பீரம், இனிமை முதலியஉடைய பேச்சுடையவன், வாயு சரீரி, சற்புத்ரனுடையவன், ராஜசபையில் நன்கு பூஜிக்கப் பெறுபவன், சம அங்கங்களுடையவன், நன்முகமுடையவன், தயாளு ஆவன்.

(37) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி ஏழாம் பாவாதிபதி நீச்ச ராசியிலிருந்து ஏழாம் பாவம் சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகன் ஒரே தாரமுடையவன், வேறு சிலர் இரண்டு மனைவிகள் ஏற்படுவாள் என்று எண்ணுகின்றனர்.

(38) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி ஜன்ம காலத்தில் ராகு கும்ப ராசியில் இருந்து அவருடைய திசை வந்தால் அந்த

திசையில் ஜாதகனுடைய தகப்பன் மரிப்பான், ஜாதகன் பற்பல வழிகளிலும் விரயம் அடைவான்.

(39) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (காலாம்சம் பூர்வபாகம்) ஆகி நான்காம் பாவாதிபதி குருவால் பார்க்கப்பட்டிருந்தால் ஜாதகன் நதிப்பிராந்தியத்திலுள்ள புண்ணிய க்ஷேத்திரத்தில் சிவ க்ஷேத்திரத்தில் ஜனனமும் வாசமுமடைவான், உத்தர பாகத்தில் ஜனனமானல் குக்கிராமத்தில் தேவாலயமில்லாத ஊரில் ஜனனமும் வாசமுமடைவான்.

(40) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி லக்கின பாவாதிபதி நான்காவது காலத்தில் பதினோராவது பாவத்திலிருந்தால் ஜாதகன் வியாபாரிகுலத்தில் மூத்த, இளைய சகோதராருடையவனாக ஜனனமாவான்.

(41) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி லக்கின பாவாதிபதி பதினோராம்பாவத்தில் சனியுடன்கூடியிருந்து ராகுநான்காம்பாவத்திலிருந்தால் ஜாதகன் பிறக்கும்போது ஜாதகன் தாய்க்குப் பிரசவ வேதனை அற்பமாயிருக்கும், உத்தராம்சத்தில் அதிகமாயுண்டாகும், ஜாதகனுக்கு பாலரோகமுண்டாகும்.

(42) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி லக்கின பாவாதிபதி பதினோராம் பாவத்தில் எட்டாம் பாவாதிபதியுடனும் கூடியிருந்து சுயக்ஷேத்திரத்தில் பத்தாம் பாவாதிபதியிருந்தால் ஜாதகன் அறுபத்தைந்து வயதுடையவனாவான், ஐம்பத்தைந்து அல்லதுஅதற்கு முன்பே நாற்பது இந்த வயதுகளில் தேக பீடையுண்டாகும், சாந்திசெய்தால் அக்காலங்களில் சுகமுண்டாகும்.

(43) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி ஒன்பதாம் பாவாதிபதி சந்திரன் மூன்றும் பாவத்திலிருந்தால் ஜாதகன் தகப்பன் சிவபக்தியுடையவன், சொர்ண வியாபாரத்தால் ஜீவிப்பான், திரவிய சம்பாதனையில் சமர்த்தன், தேவப் பிராம்மண பக்தியும், விசேஷ சிவபக்தியுமுடையவன், அரசாங்கத்திலும், தன் ஜனங்களிலும் பிரசித்தியுடையவன், வயோதிக வயதில் புத்திரனல் சுகமுடையவன், மூத்த புத்திரனல் கிலேசமடைவான், வயோதிக வயதில் மூத்த புத்திரன் மரணமடைவதால் ஜாதகனுடைய தகப்பன் கிலேசமுற்று, ஜாதகனுடைய நான்காந்திசையில் மரிப்பான்.

(44) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி நான்காம் பாவாதிபதி பதினோராம் பாவத்தில் இருந்து, சந்திரன் கன்னியாராசியிலுள்ள குருவால் பார்க்கப்பட்டால், ராகு லக்கினத்திற்கு நான்காம் பாவத்திலிருந்தாலும் ஜாதகன் தாய் சுகமுடையவள், பதி

பக்தியுடையவள், குணமுடையவள், ஆயினும் முன் ஜென்மபாபம் காரணமாக மூத்த புத்திர நாசத்தால் வருந்துவாள்.

(45) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி லக்கினத்திற்கு மூன்றும் பாவத்தில் சந்திரனிருந்து செவ்வாய் பதினோராம் பாவத்தில் சனியுடன் கூடியிருந்து குருவால் மூன்றும் பாவம் பார்க்கப்பட்டால் ஜாதகன் சகோதர விருத்தியுடையவன், மேற்படி செவ்வாய் சத்துரு க்ஷேத்திரத்திலிருந்தால் ஜாதகனுக்கு சகோதரகிலேசமுண்டாகும், ஜாதகனுக்கு நான்கு சகோதரர்கள் உடன் பிறந்தவர்கள் உண்டு, இவர்களில் மூன்று சகோதரர்கள் மூத்தவர்களும், ஒருவன் இளைய சகோதரனும் ஆவான், சகோதரிகளில்லாதவன், இவர்களில் எல்லோருக்கும் மூத்தவனான மூத்த சகோதரன் அற்பாயுளாய் மரிப்பான், அவனுக்கிளையவனுமப்படியே, ஜாதகனுடன் பிறப்பில் ஒரு மூத்த சகோதரனும் ஒரு இளைய சகோதரனும் ஆயுளுடையவராவர்.

(46) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி பாக்கிய கேசரீயோகத்தில் சுக்கிர திரிம்சாம்சத்தில் பிறந்தவன் வெளுப்பு நிறமுடையவன், சமதேகமுடையவன், (சூத்திரஜன்மம்) நல்ல அறிவாளி, சூட்டுத்தேகி, பித்த சுபாவமுடையவன், சிவபக்த குலத்திலுதித்தவன், கல்வி அறிவுடைய விவேகி, விசேஷ சிவபக்தியுடையவன், எழுதுவதில் நிபுணன், சுயார்ஜிதமுடையவன், மத்திய வயதில் நல்ல அறிவுடையவனுவான், பாக்கிய வமிசத்தில் பிறந்தவனுவான், பாக்கிய கேசரீ யோகம் என்பது சந்திரனுக்கு ஐந்து, ஒன்பது, இந்த இடங்களில் குரு இருப்பது ஆகும்.

(47) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனதாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி சந்திரனுடன் கூடியிருந்து வைசிய காலத்தில் பிறந்தவன், வைசிய குலத்தில் இரண்டாவது கெற்பத்தில் அல்லது மூன்றுவது கெற்பத்தில் சகோதரஹீனனுகப் பிறப்பான், ஷெ அம்ச பூர்வபாகத்தில் ஜனனமானல் வனந்தர கிரிப்பிராந்திய பெரிய கிராமத்தில் நிச்சயமாய் தேவாலய சமீபத்தில் வடக்குத் தெற்கு வீதியில் மேற்கு வாடையிலுள்ள கிழக்குபார்த்த வீட்டில் தகப்பன் வீட்டில் ஜனனமும், உத்தரபாக ஜாதகனுக்கு நதிதீரத்தில் தேவாலயமில்லாத சிறிய கிராமத்தில் கிழக்கு மேற்கு வீதியில் தெற்கு வாடையிலுள்ள வடக்குப்பார்த்த வீட்டில் அன்னியருடைய வீட்டில் ஜனனமும் நேரிடும்.

(48) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி தனதாம்ச பூர்வ பாகத்தில் பிறந்தவனுக்கு லக்கின பாவாதிபதி ஆறும் பாவத்தில் சுயக்ஷேத்திரத்தில் சந்திரனுடன் கூடியிருந்தால் ஜாதகன் தாய் பிரசவ காலத்தில் மிதவேதனையேயுடையவள், உத்தர பாகத்தில்

சூதிதோஷத்தால் பயமுண்டாகும், அப்போது சந்திரனைக் குரு பார்த்தால் சுகமுண்டாகும்.

(49) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி லக்கின பாவாதிபதி மேஷத்தில் சுபருடன் கூடியிருந்து எட்டாம் பாவாதிபதி கும்ப ராசியில் இருந்து கேந்திர திரிகோணத்திலிருக்கும் குருவால் பார்க்கப்பட்டால் ஜாதகன் சகல தோஷங்களும் விலகி அறுபத்தெட்டு வயது அடைவான் இருபது, இருபத்தினன்கு, முப்பத்தைந்து, நாற்பது இந்த வயதுகளிலும், அறுபதாவது வயதிலும், பீடையடைவான், அக்காலங்களில் சாந்திசெய்தால் சுகமுண்டாகும்.

(50) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி சூரியன் கேந்திரத்தில் சுபருடன் கூடியிருந்து ஒன்பதாம் பாவாதிபதியாகிய சந்திரன் செவ்வாயுடன்கூடி ஆறும் பாவத்திலிருந்தால் குருவால் இவர்கள் பார்க்கப்பட்டாலும், குருவுடனிவர்கள் கூடியிருந்தாலும், ஜாதகன் தகப்பன் விசேஷ சுகமுடையவன், ஜாதகனுடைய தகப்பன் சகோதரஹீனன், உபாயந் தெரிந்தவன், சதுரன், தேவப்பிராம்மண விசுவாசி, ஹரிசங்கர பக்தியும், விஷ்ணுபக்த மதாச்சாரமுமுடையவன்.

(51) ஜென்ம லக்கினம் விருசிச்கம் ஆகி ஒன்பதாம் பாவாதிபதி செவ்வாயுடன் கூடி ஆறும் பாவத்திலிருந்தால் ஜாதகன் தகப்பன் கல்வி அறிவுடையவன்.

(52) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி சூரியன் நான்காம் பாவத்தில் புதனுடன் கூடியிருந்தால் ஜாதகன் தகப்பன் எழுதுவதில் நிபுணன், கன்னிதேவதையை பூஜிக்கும் வமிசத்தில் பிறந்தவன், வியாபார ஜீவனமுடையவன், திரவிய சம்பாதனையில் சமர்த்தன்.

(53) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி ஒன்பதாம் பாவாதிபதி செவ்வாயுடன் கூடில் ஜாதகன் தகப்பன் சொர்ண ரத்ந பரீக்ஷைசெய்பவன், கிரய விக்கிரயங்களும் செய்வான், வியாபாரத்தில் ஒழுக்கமுடையவன், பற்பல வியாபாரமும் செய்பவன், தன் ஜனங்களில் பிரசித்தியுள்ளவன், தனமும் கீர்த்தியுமுடையவன், பற்பல வழிகளால் சுயார்ஜிதமுடையவன், நல்ல வழியில் நல்லவர்களுக்குத் தானமீவான், ஞானி, தத்துவ விவேகமுடையவன், ரத்தினம், தானியம், நல்ல வஸ்திரம் முதலான பற்பல வியாபாரமுடையவன், மத்திய அந்திய வயதுகளில் தர்மசித்தியும், கீர்த்தியுமுடையவன், குளம், கிணறு, நடபாவி, இவற்றில தர்மம் செய்பவன், வாகனதி யோகமுடையவன், சொர்ணம், ரத்தினம் முதலிய

வியாபாரப்பெருக்கும், விருத்தியும் உடையவன், அரசாங்கப் பிரசித்தியும், அரசாங்க ஜனமூலம் சுகமும் உடையவன், வயோதிகத்தில் ஞானமும், புத்திரனால் சுகமும் உடையவன், ஜாதகனுடைய தகப்பன் ஜாதகனுடைய மூன்றாந்திசையில் மரிப்பான்.

(54) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி நான்காம் பாவாதிபதி வனுவுடன் சுயக்ஷேத்திரத்தில் மகரத்தில் கேதுவுடன் கூடியிருந்து சந்திரன் செவ்வாயுடன் கூடி ஆறாம் பாவத்தில் இருந்தால் ஜாதகன் தாய் விசேஷ சுகமுடையவள், ஜாதகன் தாய குணமுடையவள், பொறுமையுடையவள், பதிபக்தியும், அன்னதானப் பிரியமும் உடையவள், புத்திரனுக்கிஷ்டமானதைச் செய்பவள், பாக்கியவிருத்தி செய்பவள், கர்வி, சினந்துபேசுபவள்.

(55) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி மகரராசியில் நான்காம் பாவாதிபதி கேதுவுடன் கூடியிருந்தால் ஜாதகன் தாய் நேத்திர ரோகமுடையவள், முன் ஜென்ம பாபவசத்தால் வயோதிக வயதில் கண்ணையிழந்து விடுவாள், இவள் ஜாதகனுடைய நான்காந்திசையில் மரிப்பள்.

(56) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி சுயக்ஷேத்திரத்தில் மூன்றாம் பாவாதிபதியாகிய சனிகேதுவுடன்கூடி மூன்றாம் பாவத்திலேயேயிருந்து, ஆறாம்பாவத்தில் செவ்வாய் காதாம்சத்திலிருந்து, சந்திரனுடன் ஷை செவ்வாய் கூடியிருந்தால் ஜாதகன் முன் பின் சகோதரனில்லாதவன், ஜாதகனுக்குச் சகோதரன் பிறந்தாலும் சகோதரன் மரித்து விடுவான், சில காலம் வரை ஒரு சகோதரி அற்ப சுகியாயிருந்து அவளும் அற்பாயுளாய் மரித்து விடுவாள்.

(57) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி மாளவீயோகத்தில் குருதிரிம்சாம்சத்தில் பிறந்தவன் வெளுப்பு நிறமுடையவன், மிக்க அறிவாளி, அதிருஷ்டசாலி, மேதாவி, சமதேகமுடையவன், கொஞ்சமாய் உண்பவன், ரகசியமனதுடையவன், அற்பநித்திரையும், அதிஜாக்கிரதையுமுடையவன், பித்தசுபாவமானதேகமுடையவன், உஷ்ண வாயுவால் பீடையுடையவன், விவேகி, கல்வியுடையவன், எழுதுவதில் சமர்த்தன், ஊக்கிக்கவும் விலக்கவும் தெரிந்தவன், தன்வித்தையில் வல்லவன், விஷ்ணு மதாச்சாரமுடையவன், ஹரி சங்கரபக்தியுடையவன், பிறர் ரகசியங்களை வெளியாக்குபவன், தேவப்பிராம்மணபக்தியுடையவன்.

(58)ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி இரண்டாம் பாவாதிபதியாகிய குரு சிம்மராசியிலிருந்து சுக்கிரனால் பார்க்கப்பட்டால் ஜாதகன் போக இச்சையுடையவன், பரஸ்திரீ சங்கம முடையவன், சங்கீதப்பிரியன்.

(59) ஜென்ம லக்கினம் ஆகி லக்கினபாவாதி ஒன்பதாம் பாவாதிபதியுடன்கூடி மேஷராசியிலிருந்து குருவால்பார்க்கப்படின் ஜாதகன் சொர்ண ரத்தின பரீக்ஷை செய்பவன், ஒழுக்கமாக கிரய விக்கிரயம் செய்பவன்.

(60) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி பத்தாம் பாவாதிபதி நான்காம் பாவத்தில் புதசுக்கிரனுடன் கூடியிருந்தால் ஜாதகன் வியாபாரத்தால் தனமுடையவனாவான், வியாபாரம் விருத்தியாகும், திரவிய ரக்ஷணைசெய்பவன், சொர்ணம், இரத்தினம், தானியம்முதலியன வியாபாரம் செய்பவன், பாலியம்முதல் கீர்த்தியும், பிதுருசுகமுமுடையவன், பாலியத்தில் ஐந்தாம் வயதில் அக்ஷரஞானமடைவான், பதிமூன்றல்லது பதினான்கு வயதில் விவாகமடைவான், ஜன்மபூமிக்கு மேற்கிலல்லது வாயுதிக்கில் மனைவி ஏற்படுவாள், அவள் வெளுப்பு நிறமும், பதிபக்தியுமுடையவள், பதினைந்தல்லது பதினாறு வயதில் பிரசித்தியடைவான், வீட்டில் லக்ஷ்மீகடாக்ஷமுடையவன், பதினேழல்லது பதினெட்டாம் வயதில் மனைவியைச் சேர்வன், இருபது வயதிற்குமேல் விசேஷ சுயப்பிரபலமுடையவன், பொக்கிஷத்தானத்தில் பிரசித்தியடைவான், அரசாங்கத்தில் நல்ல யோகமுடையவன், இருபத்தைந்தில் அதிக யோகமும், இருபத்தேழில் மனோவேதனையும், முப்பதுக்குமேல் கீர்த்தியும், முப்பத்தைந்தில் மனஸ்தாபமும், நாற்பது, ஐம்பது இந்த வயதுகளில் விசேஷ பிரபலமும், ஆயுள்வரை நல்ல பாக்கியமும், வயோதிக வயதில் புத்திரனால் யோகமுமடைவான்.

(61) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனஞ்ஜெயாம்சம் பூர்வ பாகம்) ஆகி லக்கின பாவாதிபதி சிம்மராசியில் சூத்திரகாலத்தில் இருந்தால் ஜாதகன் சூத்திர ஜன்மத்தில் ஐந்தாவது கெற்பத்தில் அல்லது ஆறாவது கெற்பத்தில் பிறந்து சகோதரஹீனனாக ஆய்விடுவான்.

(62) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (தனஞ்ஜயாம்சம் பூர்வ பாகம்) ஆகி லக்கின பாவத்தில் சுபரிருந்தாலும், பார்த்தாலும், லக்கின பாவாதிபதி குருவால் பார்க்கப்பட்டுச் சிம்ம ராசியிலிருந்தால் ஜாதகன் தாய் பிரசவத்தில் அற்ப வேதனையடைவாள், உத்தரபாகத்தில் அதிக வேதனையும், சூதிதோஷபயமும் உண்டாகும்.

(63) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி ரிஷபராசியில் சந்திரனிருந்து சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகன் தாய்க்குப் பீடையும், ஜாதகனுக்குப் பாலதோஷபயமும், சிசுக்களுக்குறிய ரோகமும் உண்டாகும்.

(64) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி லக்கின பாவாதிபதியும், எட்டாம் பாவாதிபதியும் கேந்திர பாவத்தில் சிம்ம ராசியில்

குருவால் பார்க்கப்பட்டு இருந்து, சந்திரன் ரிஷப ராசியிலிருந்து சுபருடன் கூடியிருந்தாலும், சுபரால் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் எல்லாத் தோஷங்களும் விலகி பூர்ணாரம்ப வயதாக எழுபது வயதடைவான், இருபது வயதுக்குமேல் பித்தவாயுபீடையும், முப்பத்திரண்டிலுமிப்படியேயும், நாற்பதில் மேகஜாட்டியமும், அறுபதில் அபமிருத்துபயமுமடைவான், அக்காலங்களில் சாந்தி செய்தால் குணமுண்டாகும்.

(65) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி சூரியன் எட்டாம் பாவத்தில் ராகுவுடன் கூடியிருந்து ஒன்பதாம் பாவாதிபதி சுக்கிரனுடன் கூடி ரிஷபராசியிலிருந்து, தன் உச்சத்தில் மீன நவாம்சத்தில் ஷை சந்திரனிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் விசேஷ சுகமுடையவன், விசேஷ கீர்த்தியுடையவன், உடன்பிறந்த ஏழுசகோதரரும் மூன்று சகோதரிகளுமுடையவன், இச்சகோதரிகளில் ஒருத்தி அற்பாயுளுடையவள், சகோதரர்களில் இருவர் அற்பாயுளுடையவர்கள், மற்றவர்கள் சுகமுடையவர்கள், ஜாதகனுடைய தகப்பன் தன் சகோதரருடன் மனஸ்தாபமுடையவன், தன் தகப்பனைவிட மேலான தயாளு, தேவப் பிராம்மண பக்தியுடையவன், விஷ்ணுபக்தி மதாச்சாரமுடையவன், ஹரிசங்கர பக்திமான், கல்வியறிவுடைய விவேகி, நியாயவாதி, குருவுக்குப் பிரியன், குருபக்தியுடையவன், சீக்கிரகோபி, சந்தோஷ மனமுடையவன், தியாகம் செய்பவன், கெம்பீர புத்தியுடையவன், விசேஷ போகத்தில் மன இச்சையுடையவன், போகஸ்திரீ சரசப்பிரியன்.

(66) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி மிதுனராசியில் சூரியன் ராகுவுடன் கூடியிருந்தாலும், பார்க்கப்பட்டாலும் சத்துரு நாசமுடையவன், பிரதாபீ, சேர்க்கவும் கலைக்கவும் வல்லவன், வாச்சாலகன், சாதுரிய யுக்தியுடையவன், பாஷாந்திரத்திலும் ஞானமுடையவன், எழுதுவதில் சமர்த்தன், இதற்கே சந்திரன் ரிஷபத்தில் ஸ்ரீதராம்சத்தில் இருந்தால் ஜாதகன் தகப்பன் பாக்கிய லக்ஷ்மீவாசமுடையவன், எப்போதும் வியாபாரத்தில் வல்லவன், திரவிய சம்பாதனையும், அரசாங்கத்தில் பிரசித்தியும் உடையவன், தோட்டம், மனை, வீடுமுதலிய போகி, பிரபுக்களுக்குப் பிரீதி வளரச்செய்பவன், தீபாந்தர வஸ்துக்களாலும், பற்பல வியாபாரத்தாலும் தனமுடையவன், தினந்தினம் வியாபாரப்பெருக்குடையவன், ரத்னம், தான்னியம், பற்பல தானியம் முதலியவற்றால் சம்பாதிப்பவன், சுய ஜனங்களிடமும், பற்பல தேசங்களிலும் பிரசித்தியுடையவன், மத்திய வயதில் தர்ம சித்தியும், வெகு கீர்த்தியும் அடைவான், வயோதிக வயதில் புத்திரனால் சுகமும், தீர்த்தயாத்திரை பலனும் வெகு சுகமும் ஏற்படும், ஜாதகனுடைய நான்காந் திசையில் ஜாதகனுடைய தகப்பன் மரித்துவிடுவான்.

(67) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி நான்காம் பாவாதி பதியாகிய சனி காதாம்சத்தில் கேந்திர ராசியில் (சிம்மத்தில்) புதன் செவ்வாயிவர்களுடன் கூடியிருந்து சந்திரன் ரிஷபத்தில் சுக்கிரனுடன் கூடியிருந்தால் ஜாதகன் தாய் சுகம், பொறுமை, பதிபக்தி, அன்னதானப்பிரியம்முதலியன உடையவள், புத்திரனுக்கிஷ்டமானதைச்செய்பவள், பதிவிரதை, பாக்கியவிருத்தி செய்பவள், கெர்வி, கடுத்துப்பேசுபவள், ஜாதகனுடைய தாய் ஜாதகனுடைய நான்காந்திசையில் முன் புண்ணிய வசத்தினுல் சுமங்கலியாகவே மரிப்பாள்.

(68) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி மூன்றும் பாவாதிபதியாகிய சனி சத்துருக்ஷேத்திரத்தில் சிம்மராசியில் புதனுடனும், செவ்வாயுடனும் கூடியிருந்தால் ஜாதகன் மூத்த சகோதரனின்றியும், இளைய சகோதரனின்றியும், இரண்டு சகோதரிகளுடையவனுகவும் ஆவான்.

(69) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி செவ்வாய் பலமில்லாதவனுக பதினோராம் பாவத்தில் இருந்தால் ஜாதகன் சகோதரனில்லாதவனுவான்.

(70) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி குரு திரிம்சாம்சத்தில் (மேஷத்தில் குருவும் ரிஷபத்தில் சந்திரனும் உள்ள) சகடயோகத்தில் பிறந்தவன் வெளுப்பு நிறமுடையவன், அறிவாளி, அதிருஷ்டசாலி, மேதாவீ, சமதேகமுடையவன், பித்தசுபாவமுடையவன், வாயுகோபமுடையவன், திட்டமாய்ப் புசிப்பவன், மர்ம மனமுடையவன், காமீ, மித்திர வஞ்சனை செய்பவன், விஷ்ணுபக்தி மதாச்சாரமுடையவன், தேவப் பிராமமண விசுவாசி, குணமுடையவன், கொஞ்சம் தெரிந்தவன்.

(71) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி நான்காம் பாவாதிபதியாகிய சனி, செவ்வாய், புதனிவர்களுடன்கூடி பத்தாம் பாவத்தில் இருந்தால் ஜாதகன் கல்வி அறிவுடையவன், இரண்டு பாஷைகளில் வல்லவன், எழுதுவதில் சமர்த்தன், நீச்ச பாஷையில் நல்ல ஞானமுடையவன்.

(72) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி லக்கினத்திற்கிரண்டாம் பாவத்தில் கேது இருந்தால் ஜாதகன் வாச்சாலகன், யுக்தியாய் பிரசங்கம் புரிபவன், காமீ, விஷய புத்தியுடையவன், சௌந்தரியவதிகளுக்கு நாயகன், போகஸ்திரீ சரசப்பிரியன், சேர்க்கவும், கலைக்கவும் வல்லவன்.

(73) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி சுக்கிரன் சுய க்ஷேத்திரத்தில் வர்க்கோத்தமத்திலிருந்து ஒன்பதாம் பாவாதிபதியுட

னும், கூடியிருந்தால் ஜாதகன் தனிகன்,கர்ப்ப ஸ்ரீமான், மகாபோகி, சௌரிய சாகஸ கீர்த்தியுடையவன், சங்கீதப்பிரியன், சந்தன புஷ்ப வஸ்திர அலங்காரப்பிரியன்.

(74) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி சூரியன் மிதுனத்தில் கின்னராம்சத்தில் இருந்தால் ஜாதகன் வியாபாரத்தால் ஜீவன முடையவன், க்ஷேத்திர சுகமும், உத்தியோக தனமும், சுகமும் உடையவன்.

(75) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி பத்தாம் பாவாதிபதி ராகுவுடன் கூடி மிதுனராசியிலிருந்தால் ஜாதகன் நீச்ச சேவை செய்வான்.

(76) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி ஏழாம் பாவாதிபதி கேந்திர(ரிஷப)ராசியிலிருந்து ஒன்பதாம் பாவாதிபதியுடன் கூடில் ஜாதகன் மனைவி வெளுப்பு நிறமுடையவள், கணவனிடம் அதிக பக்தியுடையவள், பாக்கியவிருத்தி யுடையவள், பதியின்மனதை அனுசரித்து நடப்பவள்.

(77) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி ஏழாம் பாவாதிபதி சுயக்ஷேத்திரத்தில் இருந்து இரண்டாம் பாவாதிபதி மித்திர ராசி யில் மேஷத்தில் இருந்தால் ஜாதகன் ஒரே மனைவியுடையவன், போகஸ்திரீ, சௌக்கியமுடையவன், விவாகத்தின்பிறகு சுகமுடை யவன், வீட்டில் லக்ஷிமீகடாக்ஷமும், பிரபலமும், பிரசித்தியுமடை வான், வியாபாரத்தினுல் விருத்தியடைவான், இருபத்திரண்டாம் வயதில் மனைவி சுகமடைவான், இருபத்திமூன்றில் சுயார்ஜிதமாக யோகமுமடைவான், இருபத்தினன்கில் மனஸ்தாபமடைவான், அப்போது தாய் மூலம் கிலேசமுமடைவான், புத்திர உற்பத்தியும், வீட்டில் லக்ஷிமீகடாக்ஷமும், சந்தோஷமும், சுபமும், இருபத் தைந்தில் அரசாங்கப் பிரசித்தியும், எழுத்து உத்தியோகமும், வாகன உத்தியோகமும், இருபத்தேழில் விசேஷமும், பிரபல உத் தியோகமும், ஆக்ஞையிடும் தன்மையும், துரந்தரனுகவும், கொண் டாடப்பட்டவனுகவும், சிக்ஷிக்கவும், ரக்ஷிக்கவும் சமர்த்து உடைய வனுகவும் ஆவான், வேலையாள் சேவகர்கள் முதலியோருடையவன், பிரபு வசியமுடையவன், முப்பது வயதுக்குமேல் விசேஷ கீர்த்தி யும், முப்பத்திரண்டில் பிதுரு நாசமும், நாற்பதில் விசேஷ கீர்த்தி யும், ஐம்பதில் வெகு விசேஷ கீர்த்தியும், ஆயுள்வரை யோகமும் அடைவான்.

(78) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி ஐந்தாம் பாவாதி பதி மேஷத்தில் மித்திரராசியிலிருந்து ஒன்பதாம் பாவாதிபதி சுக் கிரனுடன் கூடி ரிஷபத்தில் இருந்து ஐந்தாம் பாவத்தில் செவ்வா

யிருந்தாலும், பார்த்தாலும் ஜாதகனுடைய புத்திரர் சிலர் இறந்து விடுவர், மூன்று புத்திரரும் நான்கு புத்திரிகளுமுடையவன், இவர் களைவிட அதிகம் சந்தானம் பிறந்தாலும் மரித்துவிடும்.

(79) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி (மேஷத்தில் குருவும் ரிஷபத்தில் பாக்கியாவஸ்தையில் சந்திரனுமுள்ள) சகடயோகத் தில் பிறந்தவன் அதிக பாக்கியமும் யோகமுமடைவான், ஆயினும் யோகபங்கமேற்படும் என்கிற விசாரமடைவான், ஜாதகன் புத்தி ரன் பிரபலனாக லோகத்தில் கொண்டாடப்பட்ட கீர்த்தியடை வான்.

(80) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (குமராம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி பத்தாம் பாவத்திலிருந்து சனியால் பார்க்கப்பட்டு, சூத்திரகாலத்தில் பிறந்தவன் ஐந்து அல்லது ஆறுவது கர்ப்பத்தில் ஜனனமானவன்.

(81) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (குமராம்சம் பூர்வபாகம்) ஆகி சனி லக்கினபாவத்தில் இருந்தாலும் பார்த்தாலும் துர்க்கா ரண்ணிய சமீபத்தில் பெரிய கிராமத்திலல்லது நதிதீரத்தில் தேவாலய சமீபத்தில் கிழக்கு மேற்கு வீதியில் வடக்கு முகம் வாயிற்படியுள்ளதான தகப்பனுடைய வீட்டில் ஜனனமும், வாச மும், உத்தர பாகத்தில் பிறந்தவன் புண்ணிய க்ஷேத்திரத்தின் சமீபத்தில் பிறர் வீட்டில் வடக்குத் தெற்கு வீதியில் கிழக்குப் பாகத்தில் ஜனனமும் அடைவான்.

(82) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (குமாராம்சம்) ஆகி லக் கின பாவத்தில் குரு இருந்தாலும் பார்த்தாலும், லக்கின பாவாதி பதி சுக்கிரனுடன் கூடி பத்தாம் பாவத்திலிருந்தால் ஜாதகன் தாய்க்குப் பிரசவத்தில் அற்ப வேதனையுண்டாகும், உத்தர பாகத் தில் பிறந்தவன் தாய்க்கு விசேஷ வேதனையும், சூதிதோஷபயமும் உண்டாகும், அப்போது சந்திரன் பாபருடன் கூடி மீன ராசியிலி ருந்தாலும், பார்த்தாலும் ஜாதகனுக்குப் பாலாரிஷ்ட பயமும், மாந்த ஜ்வரம் முதலியவற்றாலும், வைசூரி ரிண பீடையாலும், இரண்டு மூன்று வருஷம் வரையில் கண்டமுண்டாகும்.

(83) ஜென்மலக்கினம் விருச்சிகம் ஆகி லக்கின பாவாதிபதி பத்தாவது கேந்திரத்தில் இருந்து எட்டாம் பாவாதிபதி ஒன்பதாம் பாவத்திலும் நான்காம் பாவாதிபதி சுயக்ஷேத்திரத்தில் நான்காம் பாவத்திலுமிருந்தால் ஜாதகன் சகல தோஷங்களும்விலகி எழுபத் திரண்டு வயதடைவான், இவனுக்கு இருபது வயதிற்குமேல் அற்ப பீடையும், முப்பத்தாறில் ஜ்வர பீதியும், ஐம்பதில் விரண பயமும், அறுபதில் அபமிருத்து பயமுமுண்டாகும், அக்காலங்களில் புதப்

பிரீதி, எண்ணைக்குட தானம், மிருத்தியுஞ் ஜய ஜெபம், பதினாயிர நாமத்தால் சிவார்ச்சனை, *சாகதானம் முதலியன செய்தால் ஜாதகன் குணமடைந்து எழுபத்திரண்டு வயதுவரை ஜீவிப்பான்.

(84) ஜென்ன லக்கினம் விருச்சிகம் ஆகி சூரியன் சுயக்ஷேத்திரத்திலிருந்து ஒன்பதாம் பாவாதிபதியாகிய சந்திரன் ஐந்தாம் பாவத்திலிருந்து ஒன்பதாம் பாவத்தில் குரு புதனிவர்களிருவருமிருந்தால் ஜாதகன் தகப்பன் தன் தகப்பனை விடமேலான குணமுடையவன், உடன் பிறந்த சகோதரருடையவன், சுகமுடைய ஒரு சகோதரியுடையவன், அவள் புத்திர சுகமுடையவள், முன் பாபத்தினால் விதவையாகி மரிப்பாள், ஒரு மாற்று சகோதரன் ஆயுளுடையவனையுடையவன், சிவபக்தியுடையவன், தேவப்பிராம்மணவிசுவாசமுடையவன், விஷ்ணு சிவபக்தியுடையவன், கல்வி அறிவுடைய விவேகி, தன் வித்தையில் வல்லவன், எழுதுவதில் சமர்த்தன்,

(85)ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி ஒன்பதாம் பாவாதிபதி ஐந்தாம் பாவத்தில் கேதுவுடன் கூடியிருந்தால் ஜாதகன் தகப்பன் வாச்சாலகன், சாதுரியமானயுக்தியுடையவன், சத்தியவாதி, குருப்பிரியன், சேர்க்கவும் கலைக்கவும் வல்லவன்.

(86)ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி சூரியன் சுயக்ஷேத்திரத்தில் ஸ்ரீதராம்சத்தில் இருந்தால் ஜாதகன் தகப்பன் வியபார ஜீவனமுடையவன், வியாபாரத்தில் விசேஷவிருத்தியுண்டாகி பாக்கிய விருத்தியுடையவனாவன், தன் ஜனங்களில் இவன் பிரசித்தியுடையவன், மத்திய அந்திய காலங்களில் பற்பல மார்க்கங்களாலும் தனமடைவான், விசித்திரமான வீடுகட்டுபவன், தனமுடையவன், புகழுடையவன், வயோதிகவயதில் தோட்டம் முதலிய க்ஷேத்திர சுகமும், சொர்ணம் ரத்தினம் வாகனம் புத்திரனால் சுகம் முதலியனவும் உடையவன், ஜாதகனுடைய தகப்பன் ஜாதகனுடைய மூன்றாந் திசையில் மரிப்பான்.

(87) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி சுயக்ஷேத்திர, கேந்திரத்தில் நான்காம் பாவத்தில் ஷை நான்காவது பாவாதிபதியிருந்து சந்திரன் மீனராசியில் கேதுவுடன் கூடியிருந்து சிம்மநவாம்சத்தில் மித்திர நவாம்சத்திலுமிருந்து ஒன்பதாம் பாவத்திலுள்ள குருவால் மேற்படி சந்திரன் பார்க்கப்பட்டால் ஜாதகன் தாய் பதிபக்தியுடையவள், அன்னதானப்பிரியம், புண்ணியம், வமிச பாக்கியவிருத்தி முதலிய உடையவளாகி முன் பாபம் காரணமாக புத்திர சோகமடைவாள், ஜாதகனுக்கிஷ்டமானதைச் செய்வாள், கர்வி, குரூர

* சாக தானம் என்ன என்பதையும் அதை செய்யும் விதியும் நமது தெசாரிஷ்ட நிவாரணி என்னும் புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது அதின் விலை 0-6-0 ஆறணா தான்

மாக பேசுபவள், இவள் ஜாதகனுடைய இரண்டாந் திசையில் மரிப்பாள்.

(88) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி மூன்றும் பாவாதிபதி யாகிய சனி கேந்திரத்தில் சுயக்ஷேத்திரத்திலிருந்து செவ்வாய், சூரியனுடன் கூடி காதாம்சத்தில் சிம்மராசியிலிருந்து ஷ சனி யாலிவர்கள் பார்க்கப்பட்டாலும்,

(89) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி ஒன்பதாம் பாவத்தில் பதினொரும்பாவாதிபதி குருவுடன் கூடியிருந்து பதினொரும் பாவத்தில் ராகு இருந்தாலும் ஜாதகன் மூத்த சகோதரன் மரணமடையும் யோகமுடையவன், புத்திரீபுத்திர சுகமுடைய ஒரு மூத்த சகோதரியுடையவன், ஒரு இளைய சகோதரனும் இரண்டு இளைய சகோதரிகளுமுடையவன்.

(90) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி நாடியம்சங்களில் எந்த அம்சங்களில் ஜனித்தாலும் ஜாதகனுக்குச் செவ்வாய் பத்தாம் பாவத்திலிருந்து சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகன் சகோதரஹீனனுவன்.

(91) ஜென்ம லக்கினம் விருக்சிகம் ஆகி ஐந்தாம் பாவாதியாகிய குரு தன் உச்சராசியிலிருந்து புதனுடன் கூடியிருந்தால் ஜாதகன் பிதாமகன் பிரசித்த யோகவான், சிரஜீவியாவன், சாந்த சுபாவமுடையவன், போகி, நல்ல சகவாசமுடையவன், கல்வி அறிவுடையவன், மூன்று தாரமுடையவன், நியாயவாதி, குருப்பிரியன், சுயார்ஜிதமுடையவன், வியாபாரநிபுணன், பாக்கிய விருத்தியுடையவன், பற்பல கிராமங்களிலும் பிரசித்தன், சொர்ண ரத்தின வியாபார லாபமடைவான், தேவப் பிராம்மண விசுவாசி, உபாயத்தால் காரிய சாதனையுடையவன், கிராமாந்தரத்தில் வாசமுடையவன், கிரகக்ஷேத்திரவிருத்தி யுடையவன், தான்னிய வியாபார லாபமுடையவன், புத்திரனுல் சுகமும் நற்புகழு மடைவான், ஜாதகனுடைய ஜன்மதிசையில் ஜாதகனுடைய பாட்டன் மரிப்பான்.

(92) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி சாம்ராஜ்ஜிய யோகத்தில் புததிரிம்சாம்சத்தில் பிறந்தவன் மிக்க அறிவாளி, வெளுப்பு நிறமுடையவன், அதிருஷ்டசாலீ, வாச்சாலகன், பித்தசுபாவமுடையவன், கொஞ்சம் வாயு பீடையுமுடையவன், சம அங்கங்களுடையவன், தீரன், அழகிய முகமுங் கண்களுமுடையவன், துராலோசனை செய்பவன்.

(93) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி லக்கின பாவாதிபதி தசம கேந்திரத்தில் சூரியனுடனும், சுக்கிரனுடனும் கூடியிருந்தால் சிவபக்தி மதாச்சார முடையவன், ஹரிசங்கர பக்தி யுடையவன்

தேவப்பிராம்மண விசுவாசி, உபாயமுடையவன், சதுரன், ஸங்கீதப் பிரியன், காமீ, சந்தன புஷ்பவஸ்திரப் பிரிய முடையவன்.

(94) ஜென்ம லக்கினம் விருச்சிகம்ஆகி நான்காம் பாவாதிபதி யாகிய சனி சுயக்ஷேத்திரத்தில் இருந்து பத்தாம் பாவத்திலிருக்கும் சுக்கிரனால் பார்க்கப்பட்டால் ஜாதகன் கல்வி யுடையவன், இனிமையாய்ப் பேசுபவன், சுய வித்தையில் வல்லவன், எழுதுவதில் நிபுணன், இரண்டு பாஷைகளில் நல்ல தெளிவுடைய வனாவான்.

(95) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி சுய க்ஷேத்திரத்தில் பத்தாம் பாவாதிபதி சுக்கிரனுடனும், குஜனுடனும் கூடியிருந்தால் ஜாதகன் வியாபாரத்தால் ஜீவன முடையவன், சொர்ண ரத்தின பரீக்ஷை செய்பவன், கிரயவிக்ரயங்களில் ஒழுக்க முடையவன், க்ஷேத்திர மூலமும் சுக முடையவன், தானிய சேர்க்கையு டையவன்,

(96) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி ஒருவருக்கொருவர் பார்த்துக்கொண்டு இரண்டு கிரகங்கள் சுயக்ஷேத்திரங்களில் (சூரியனும் சனியும்) இருந்தால் ஜாதகன் யோக முடையவன், பாக்கியமு டையவன், ஜாதகன் ஐந்தாம் வயதில் அக்ஷர ஞானமடைவான், பிதுரு மாதுரு சுகமடைவான், ஏழு அல்லது எட்டு வயதில் அதிக கல்வி கற்பான், பதிமூன்றல்லது பதினன்கில் விவாகமடைவான், ரூபலக்ஷணமான மனைவியுடையவன், பதினைந்தல்லது பதினாறுவயதில் சுயப் பிரபலமுடையவனாவான், பதினெட்டில் வியாபாரத்தில் தகப்பனால் பிரசித்தியடைவான், சொர்ன ரத்தின பரீக்ஷைகள் செய்பவன், பத்தொன்பதில் மனைவியால் சுகமடைவான், இருபத்திரண்டாம் வயதில் முதலில் புத்திரியுடையவன், இருபத்தைந்தில் நற்கீர்த்தியும், சற்புத்திர ஜனனமுமுடையவன், வியாபார தன விருத்தியால் பாக்கிய லக்ஷ்மீ வாசமடைவான், முப்பதுக்கு மேல் விசேஷ கீர்த்தியும், முப்பத்தாறில் கொஞ்சம் வியாகூலமும், தாயின் மரணமும், முப்பத்தெட்டில் தகப்பன் மரணமும், மாதுரு பிதுரு மரணத்தால் சோகமும், பயமும் அடைவான், நாற்பதில் பாக்கிய விருத்தியும், ஐம்பதில் விசேஷ கீர்த்தியும், ஆயுள்வரை கீர்த்தியும், வயோதிக வயதில் புத்திர யோகமுமடைவான்.

(97) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி ஜன்ம தாராதிபதி சனியாகி அவர் சுயக்ஷேத்திரத்தில் நான்காம்பாவத்திலிருந்து செவ்வாய் சூரியனிவர்களிருவருநும் பார்க்கப்பட்டால் அவர் திசையில் சகோதர நாசமுண்டாகும், கொஞ்சம் உள்ளுக்குள் கலஹமும், பிதுரு வியாகூலமுமுண்டாகும்.

(98) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி ஐந்தாம் பாவாதிபதி தன் உச்சராசியில் புதனுடன்கூடி ஒன்பதாம் பாவத்திலிருந்தாலும்,

(99) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி சந்திரன் ஐந்தாம் பாவத்திலிருந்து கேதுவுடன் கூடியிருந்து, செவ்வாயால் ஷ்டி சந்திரன் பார்க்கப்பட்டாலும் ஜாதகனுக்கு சில புத்திரர் மரித்து விடுவார், ஜாதகனுக்கு மூன்று புத்திரரும், மூன்று புத்திரிகளும் ஆயுளுடையவராவர், இவர்களைவிட அதிகம் பிறந்தாலும் இவர்கள் தவிர அதிகமானவர்கள் இறந்துவிடுவார்கள், நாகசாந்தி செய்தால் ஜாதகனுக்குப் புத்திரர் விருத்தியுடையவராவர்.

(100) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (சுமதியம்சம்) ஆகி லக்கின பாவத்தில் செவ்வாயிருந்தாலும், பார்த்தாலும் ஜாதகன் தாய் அதிக பிரசவ வேதனையுடையவள், பூர்வ பாகத்தில் அற்ப வேதனையடைவாள்.

(101) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி சந்திரன் ஆறும் பாவத்திலிருந்து சூரியன் ஐந்தாம்பாவத்திலிருந்தால் ஜாதகனுக்கு சூதிதோஷபயமும், பாலாரிஷ்டபயமும் உண்டாகும்.

(102) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி ரிஷப ராசியில் லக்கின பாவாதிபதி கேந்திர பாவத்திலும், எட்டாம் பாவாதிபதி குருவுடன்கூடி கும்பராசியிலும், பத்தாம் பாவாதிபதி மித்திர ராசியிலுமிருந்தால் ஜாதகன் சகல தோஷங்களும் விலகி அறுபத்தெட்டு வயதடைவன், முப்பது வயதிற்குப் பிறகும், நாற்பதிலும், ஐம்பதிலும், தேக பீடையும், அறுபதில் அப மிருத்து பயமும் அடைவான். அக்காலங்களில் ராகுப் பிரீதி சாக தானம் முதலியன செய்வதால் சாந்தியுண்டாகிச் சுக முடையவனுவன்.

(103) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி சூரியன் ஐந்தாம் பாவத்திலும் ஒன்பதாம் பாவாதிபதி ஆறும் பாவத்திலுமிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் தீர்க்க வயதடைவன், சாத்துமீகன், சிவபக்த மதத்தையடைபவன், அற்ப கல்வியும் சொற்ப ஆச்சாரமுமுடையவன், தேவப் பிராம்மண விசுவாசி, விசேஷ குரு பக்தியுடையவன், திரவிய சம்பாதனையில் திறனில்லாதவன், பூமியால் ஜீவன முடையவன், உப்பு பயிர் செய்பவன், அற்ப பூமி யுடையவன், இரு மனைவியருடையவன், இருமனைவிரியடமும் சற்புத்திரனுடையவன், மத்திய அந்திய வயதுகளில் சுக முடையவன், புத்திரனுல் சுக முடையவன், சீக்கிர கோபி, தெளிவுடையவன், நேர்புத்தியுடையவன், ஜாதகனுடைய தகப்பன் ஜாதகனுடைய நான்காந்திசையில் மடைவான்,

(104) ஜென்ம லக்கிம் விருச்சிகம் ஆகி நான்காம் பாவாதிபதியாகிய சனி இரண்டாம் பாவத்தில் இருந்து சந்திரன் மேஷராசி

யில் வர்க்கோத்தமத்தில் இருந்தால் ஜாதகன் தாய் விசேஷ சுக முடையவள், பதிபக்தியுடையவள், புத்திரீ புத்திரனுடையவளாகி ஜாதகனுடைய ஆரூந்திசையில் மரிப்பாள்.

(105) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி மூன்றும் பாவாதிப தியாகிய சனி குருவின் வீடாகிய தனுசில் இருந்தால் ஜாதகன் மூத்த சகோதரனுடையவன், இளைய உடன் பிறந்த மூன்று சகோதரனுடையவன், ஒரு இளையசகோதரன் அற்பாயுசாய்மரித்து விடுவான், ஜாதகன் பேத சகோதரனுடையவன்.

(106) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி பத்திர யோகத்தில் சனித்திரிம் சாம்சத்தில் பிறந்தவன் கறுப்பு நிற முடையவன், பித் தசுபாவ முடையவன், சம தேக முடையவன், கல்வி அறிவுடைய விவேகி, எழுதுவதில் சமர்த்தன், சுய கல்வியில் சதுரன், திரவிய சம்பாதனையில் சமர்த் துடையவன், பிதுருமாதுரு சுகமுடையவன், வியாபர ஜீவன முடையவன், பதினாறு வயது முதல் பிரசித்தியும், சுயப் பிரபலமும், இருபது வயது முதல் பிரசித்தியுமுடையவன், இருபத்தைந்து வயதில் பற்பல வஸ்துக்களாலும் திரவிய மடைய வன், சூத்திர சினேகமுடையவன்.

(107) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி ஏழாம் பாவத்தில் செவ்வாயிருந்தால் ஜாதகன் மனைவி தன் குலத்தில் குரூரமாய்ப் பேசுபவள், ஜாதகன் மனைவி ரூபலக்ஷணமுடையவள், விவாகத்திற் குப் பிறகு ஜாதகன் பிரபலமும், சுயார்ஜிதமாக தன லாபமுமுடை யவன், தீபாந்திர வஸ்துக்களை கிரய விக்கிரயங்களினால் வியாபாரம் செய்து அதனாலும் மித்திர ராலும் தன மடைவான்.

(108) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி சூரியன் லக்கினத் திற்கு ஐந்தாம் பாவத்திலும் ராகுவுடன் குரு கூடிநான்காம் பாவத் திலுமிருந்தால் ஜாதகன் சந்தானத் தடையுடையவன், சிசுக்கள் ஆண் பெண் எதுவும் பிறந்து இறந்துவிடும், காலங்கடந்து சந்ததி உண்டாகும், பானுவார விரதமும், நாகசாந்தியும், சொர்ண சூரிய தானமும் செய்தால் தீர்க்காயுளுடைய இரண்டு புத்திரரும், இரண்டு புத்திரிகளு முண்டாவார்கள்.

(109) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (பிரபாம்சம் பூர்வபாகம்) ஆகி லக்கின பாவாதிபதி நீச்ச ராசியில் வைசிய காலத்திலிருந்து வைசிய காலத்தில் ஜனித்தவன் சுகமுடையவன், உடன் சகோதர பிறப்பில்லாதவன், ஒரு சகோதரி யுடையவன், வனப்பிராந்தியத் தில் அல்லது கிரிப்பிராந்தியத்தில் பெரிய கிராமத்தில் ஜனனமா வன், உத்தர பாகத்தில் பிறந்தவன் சிறிய கிராமத்தில் ஜனன மடைவான்.

(110) ஜென்ம லக்கினம் விருச்சிகம்ஆகி ஷஷ்டி நாடி அம்ச பூர்வ பாகத்தில் ஜனித்தவனுக்கு சந்திரன் சூரியனுடன் கூடினாலும்

சூரியனால் சந்திரன் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் தாய் ஜாதகன் பிறக்கும் போது விசேஷ பிரசவ வேதனையும், உத்தர பாகத்தில் அதிக வேதனையுமடைவாள், கொஞ்சம் சூதிதோஷ பயமுமுண்டாகும்.

(111) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி ஏழாம்பாவாதிபதி ராகுவுடன் கூடி ஒன்பதாம் பாவத்திலிருந்தால் ஜாதகன் பாலரோக பீடை யடைவான்.

(112) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி லக்கின பாவாதி குருவுடன் கூடி ஒன்பதாம் பாவத்தில் இருந்து பத்தாம் பாவாதிபதி சுயக்ஷேத்திரத்தில் இருந்து புதன் தன் உச்ச ராசியில் இருந்தால் ஜாதகன் எழுபதுவயதுடையவனுவன், ஐம்பத்தாறு, அறுபத்திமூன்று, இந்த வயதுகளில் அபமிருத்துடையவன், அக்காலங்களில் சாந்திக்காக மிருத்துஞ்ஜெய ஜெபம் சாக தானம் முதலியவற்றைச் செய்தால் ஜாதகன் குண மடைவான்.

(113) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி சூரியன் சுயக்ஷேத்திரத்திலிருந்து ஒன்பதாம் பாவாதிபதியுடனும் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் சுகமுடையவன், தயாளு, குணமுடையவன், ஹரிசங்கர பக்தி யுடையவன், வியாபார ஜீவன முடையவன், கன்னியா தேவியை குல தெய்வமாக பூஜிக்கும் வமிசத்தில் பிறந்தவன், சுய பாஷையில் வல்லவன், பாலிய முதல் சுகி, சுயவித்தையில் வல்லவன், ரத்தினம் தான்னியம் நல்ல வஸ்திரம் முதலிய பற்பல வியாபார மூலம் ஜீவன முடையவன், மத்திய வயதில் பிரசித்தி யுடையவன், வயோதிக வயதில் தர்மம் செய்பவன், தடாகம் உத்தியானமிவற்றிற்குத் தர்மம் செய்பவன், புத்திரப் பிரபலமுடையவன், ஜாதகனுடைய ஐந்தாம் திசையில் ஜாதகனுடைய தகப்பன் மரிப்பான்.

(114) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி நான்காம் பாவாதிபதி பதினோராம் பாவத்திலிருந்து அதிமித்திரக் கிரகத்துடன் கூடியிருந்து சந்திரன் கேந்திரதிரி கோணத்திலிருந்தால் ஜாதகன் தாய் சுக முடையவள், பொறுமையும் நற்குணமு முடையவள், புத்திரீ புத்திர பிரசவ முடையவள், பாக்கிய விருத்தியுடையவள், ஜாதகனுடைய ஆறுந் திசையில் மரிப்பாள்.

(115) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி மூன்றும்பாவத்தில் கேது இருந்தால் ஜாதகன் பின் சகோதரமில்லாதவன், ஒரு மூத்த சகோதரனும் சகோதரி ஒருத்தியுமுடையவன்.

(116) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி பத்திர யோகத்தில் பிறந்தவனுக்கு ஒன்பது பத்துக்குடைய பாவாதிபதிகள் கூடி சிம்ம

ராசியிலிருந்தால் ஜாதகன் வெளுப்பு நிறமுடையவன், மகா அறிவாளி, வாததேகமுடையவன், கொஞ்சம் பித்தாதிகமுடையவன், சம அங்கமுடையவன், தீரன், அழகிய முகமுங் கண்களுமுடையவன், பாலியமுதல் சுகமுடையவன், ஹரி சங்கர பக்தியுடையவன், மத்திய அந்திய வயதுகளில் விஷ்ணு பக்தியுடையவன், கன்னியா தேவியை பூஜிக்கும் வமிசத்தில் பிறந்தவன், சுய வித்தையில் வல்லவன், ஸ்ரீமான், எழுதுவதில் சமர்த்தன், திரவிய சம்பாதனையிலும் சமர்த்தன், சதுரன், சுகமுடையவன்.

117 ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி குரு ராகுவுடன் கூடியிருந்தாலும், ராகுவால் குரு பார்க்கப்பட்டிருந்தாலும் ஜாதகன் துராலோசனையுடையவன், சேர்க்கவும் கலைக்கவும் சமர்த்துடையவன், மித்திர வஞ்சனை செய்பவன்.

(118) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி லக்கினபாவாதிபதி ராகுவுடன் கூடி ஒன்பதாம் பாவத்திலிருந்தால் ஜாதகன் லோபியாவன், உள்ளுக்குள் கபடமுடையவன், பிறருடைய இரகசியங்களை வெளியிடுபவன்.

(119) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி பத்தாம்பாவாதிபதி சுயக்ஷேத்திரத்திலிருந்து சந்திரனுடன் கூடியிருந்தால் ஜாதகன் எப்போதும் சொர்ணம், ரத்தினம், தானியம், வஸ்திரம் முதலானவற்றை விற்பவன், பதினாறு வயது முதல் பிரசித்தியுடையவன், இருபது வயதுமுதல் விசேஷமும், இருபத்தைந்து, முப்பது, முப்பத்தைந்து இந்த வயதுகளில் விசேஷ கீர்த்தியும், நாற்பதில் சொற்பவிரயமும், நாற்பத்துமூன்றில் சுகமும், ஐம்பதில் கீர்த்தியும், ஆயுளுள்ளவரையில் யோகமுமுடையவன்.

(120) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி ஏழாம் பாவாதிபதி நீச்ச ராசியிலிருந்து, ஏழாம்பாவாரூடத்தில் கேது இருந்தால் ஜாதகன் மறுமனைவியுடையவன், முதல் மனைவி நற்புத்திரனுடையவள், இரண்டாம் மனைவியும் சற்புத்திரனுடையவள், ஜாதகன் மூன்று புத்திரனுடையவன், சிலர் நான்கு புத்திரனுடையவனென எண்ணுகின்றனர், கன்னிகைகள் அதாவது ஸ்திரீபிரஜைகளுமிப்படியேயுடையவன்.

(121) ஜென்மலக்கினம் விருச்சிகம் ஆகி சூரியன் ஒன்பதாம் பாவாதிபதியுடன் கூடி சிம்ம ராசியில் சுயக்ஷேத்திரத்தில் இருந்தால் ஜாதகன் அந்த திசையில் விசேஷ கீர்த்தியும், பிதாவைவிட பிரபலமும் அடைவான், ஜாதகனுடைய மூத்த சகோதரன் நல்ல யோகமுடையவன், உத்தரோத்தரமாக பிரபலமடைவான், வஸ்திர வியாபாரத்தால் தனமடைவான், புத்திரீ புத்திர சுகமுடைய

வன், ஜாதகன் ஷ திசை மத்தியில் மனைவி நாசமுடையவன், மறு படி சீக்கிர விவாகமுடையவன்.

(122) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி சந்திரனுக்குப் பன்னிரண்டாமிடத்தில் ஜென்ம லக்கினத்திற்கு ஒன்பதாம் பாவத்தில் ராகு இருந்து அவர் திசை வந்தால் ஜாதகன் அத்திசையில் யோகமடைவான், பற்பல வியாபாரத்தால் லாபமடைவான், இரண்டாயிரத்திற்கு மேல் லாபமுடையவன்.

(123) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி ராகு தன் உச்ச ராசியிலிருந்து அவருடைய திசை நடந்தால் ஜாதகன் அத்திசையில் பிரபல தனவரவும், திசாந்தியத்தில் புத்திர யோகமும் உடையவன், தனமும், கீர்த்தியுமடைவான், சுகமுடையவனுவன்.

(124) ஜென்ம லக்கினம் விருக்சிகம் (காலகூடம்சம்) ஆகி லக்கின பாவத்தில் செவ்வாயிருந்தாலும், பார்த்தாலும் ஜாதகன் தாய்க்குப் பிரசவத்தில் அற்பவேதனையும், உத்தரபாகத்தில் அதிக வேதனையும் உண்டாகும்.

(125) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி சூரியனும், ராகுவும், சந்திரனும், கும்பத்தில் ஒரு ராசியிலிருந்தால் ஜாதகனுடைய தாய்க்குப் பீடையும், ஜாதகனுக்கு பாலரோகமுமுண்டாகும்.

(126) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி லக்கின பாவாதிபதி கேந்திர (ரிஷப) ராசியில்இருந்து எட்டாம் பாவாதிபதி குருவுடன் கூடி மகர ராசியிலிருந்து லக்கினத்திற்கிரண்டாம் பாவத்தில் சுக்கிரன் இருந்தால் ஜாதகன் சகல தோஷங்களும் விலகி எழுபத்திரண்டு வயதடைவான், முப்பதிற்கு மேலும் நாற்பதிலும், ஐம்பத்திமூன்றிலும் ஜாதகனுக்கு அபமிருத்து பயமுண்டாகும், அக்காலங்களில் ஜாதகன் மிருத்துஞ்ஜெய ஜெபமும், ஆயுர்ஹோமமும் செய்தால் சுகமடைவான்.

(127) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி சூரியன் நான்காம் பாவத்தில் கேந்திரத்தில் பலிஷ்டனுயிருந்து ஒன்பதாம் பாவாதியும் கூடியிருந்தால் ஜாதகன் தகப்பன் தீர்காயுளுடையவன், விஷ்ணு சிவ பக்தியுடையவன், அற்ப கல்வியுடையவன, பூமியால் அற்ப சுகமுடையவன், நற்செய்கை, ஆச்சாரம், புத்திரீ புத்திரர் வயோதிகவயதில் புத்திரசுகம் முதலிய உடயைவன், ஜாதகனுடைய தகப்பன் மரிப்பான். (மேல் திசையில்)

(128) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி இரண்டாம் பாவத்தில் நான்காம் பாவாதிபதி இருந்து சந்திரன் கேந்திர திரிகோணத்தில் இருந்தால் ஜாதகன் தாய் விசேஷ சுகமுடையவள், பதிபக்தியுடையவள், வமிச விருத்தியுடையவள், ஜாதகனுடைய மூன்றும் திசையில் மரிபுபாள்

(129) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி மூன்றும் பாவாதிபதியாகிய சனி இரண்டாம் பாவத்தில் சுக்கிரனுடன் கூடியிருந்தால் ஜாதகனுக்குப்பின் சகோதரன் ஒருவனல்லதிரண்டுபேர்களும் ஒரு மூத்தசகோதரனும் ஆயுளுடையவர்களாயிருப்பார்கள், ஜாதகனுடைய மூத்த சகோதரன் காலாந்திரத்தில் சுபுத்திரனையுடையவனுவன், பிரபல உத்தியோக ஜீவனமுடையவன், தனமும் சுகமுடையவன், சகோதரிகள் இரண்டு அல்லது மூன்று பேர்கள் ஆயுளுடையவர்களையுடையவன்.

(130) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி கலயோகத்தில் தர்ம கர்மாதிபதிகளாகிய சூரியனும், சந்திரனும் கூடி (நான்காம் பாவத்தில்) யிருந்தால் சமஉயரமும், வாததேகமும், சூட்டுத் தேகமும்,கல்வியறிவும், விவேகமும், திட்டமான போஜனமும், ரகசிய மனமுமுடையவன்.

(131) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி லக்கின பாவத்தைக் குஜன் பார்த்தாலும், லக்கின பாவத்திலிருந்தாலும் ஜாதகன் சாகசமுடையவன், பராக்கிரமமுடையவன், சபையில் பிரபுத்துவாராவாக வாச்சாலகனுக பிரசித்தி பெறுபவன், எல்லோருக்கும் பயத்தை உண்டுபண்ணுபவன், அரசாங்கத்தில் *கோள் சொல்லுபவன், பிறருக்கு ஹிம்சையைச் செய்பவன், வஞ்சகன், சுயகாரியவாதி, சதுரன், பிறர் காரியங்களை கெடுத்து விடுபவன், சாகசக்காரன், துஷ்டன் அண்டினோரிடம் அதிக அன்புடையவன், பிறர் ரகசியங்களை வெளியாக்குபவன், கடின தண்டனையிடுபவன், பிரதாபமுடையவன்.

(132) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி லக்கினத்திற்கு இரண்டாம்பாவத்தில் சனியிருந்தால் ஜாதகன் காமமுடையவன், எப்போதும் காமாதுரனுயிருப்பவன், பற்பல ஜாதி ஸ்திரீகளைச் சேர்வான், தன் மனைவிக்கு விரோதமான காரியங்களை செய்பவன், பதினறு வயது முதல் பிரசித்தியும், இருபது வயதுமுதல் விசேஷமும், நீச்ச அரசாங்கத்தில் ஒற்றர்வேலையும் செய்பவன், பிராம்மணனுல் இருபத்தைந்து வயதுமுதல் விசேஷ சுகமும், பிரபுவின் அன்புமுடையவன், ஒற்றர்தலைவனுவன், சேர்க்கவும் கலைக்கவும வல்லவன், முப்பதுவயது முதல் நல்ல கீர்த்தியுடையவன், வாகனதி சுகமுடையவன், முப்பத்தி நான்கில் நல்ல யோகமும், அனேக கிராமாதிகாரமும், நாற்பது வயதுவரை ஒரே யோகமாகவும் இருப்பான், பிறகு பிறபல உத்தியோகமும், நரவாகன பாக்கியமும், நாற்பத்திரண்டுக்குப் பிறகு சிறிதுகாலம் யோக பங்கமும், நாற்பத்தாறு வய

*அரசாங்கத்தில் கோள் சொல்லுதல் என்பது ஸி. ஐ. டி. அதாவது ரகசியமறியும் உத்தியோகமுடையவன். தற்கால ரீதியாக இப்பொருள் பொருந்தும்.

திற்குமேல் விசேஷயோகப்பிரபலமும், பல்லக்கு ஆபரணம் முதலா னலாபமும், பதினாயிரத்துக்கும் அதிக தனமும் சம்பாதிப்பான், வயோதிக வயதில் மனோ சுத்தியும், ஆயுள் உள்ள வரையில் சுக முடையவனாகவுமாவன்.

(133) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி ஐந்தாம் பாவாபதி பதி நீச்சராசியில் அலிக் கிரகத்துடன் கூடி யிருந்து லக்கினத்திற் கேழாம் பாவத்தில் செவ்வாயிருந்தால் ஜாதகன் சந்தானத் தடை யுடையவன், அந்த தோஷ பரிகாரமாகும்படி குருப் பிரீதியும் பால கிருஷ்ண தானமும் செய்தால் புத்திர விருத்தியுடையவனாகி இரு புத்திரரும் இரு புத்திரிகளு முடையவனாவான்:

(134) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி நான்காந்திசை நா தனாக கேது வாகி அவர் சிம்மராசியிலிருந்து சுபரால் பார்க்கப்பட் டால் ஜாதகன் அத்திசையில் விசேஷ பாக்கியமும், பதினாயிரத்துக் கதிகம் தனமும் சம்பாதிப்பான், தேசாதிபதியால் சர்வகாரிய சுதந் திரனாவன், நரவாகன பூஷணாதிகளும் வீட்டில் லக்ஷ்மீகடாக்ஷமும், க்ஷேத்திர பாக்கிய சமுர்த்தியும், தனதான்னியமும், புத்திர வர் கத்தில் சுபமும், நற்கீர்த்தியும் திசை முடிவில் யோகப்பிரபலமும் விருத்தியுமுடையவனாவான்.

(135) ஜென்ம லக்கினம் விருச்சிகம் (மாயாம்சம் பூர்வபாகம்) ஆகி பதினோராம் பாவத்தில் லக்கின பாவாதிபதி வைசிய காலத் தில் இருந்தால் ஜாதகன் பின் சகோதரனுடையவன், மூத்த சகோ தனில்லாதவனாக சமுத்திர சமீபத்தில் ஜனனமும் உத்திரபாகத் தில் நதிப் பிராந்தியத்தில் ஜனனமும் சமுத்திர சமீபத்தில் வாச மும் அடைவான்

தனுசு லக்கினம்

(1)ஜென்ம லக்கினம் தனுசு (வசுதாம்சம்) ஆகி குரு திரிம் சாம்சத்தில் விப்பிரகாலத்தில் பிறந்தவன், எழாவது கெற்பத்தில் அல்லது நான்காவது கெற்பத்தில் ஜெனனமடைவான், ஜாதகன் அறிவாளி, சகோதரருடையவன், வெளுப்பு நிறமும், சமதேகமும் உடையவன், அழகுடையவன்.

(2) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி லக்கின பாவாதிபதி கேந் திர ராசியில் இருந்து சுதாம்சத்திலுமிருந்து, இவர் வேறு சுபக்கிர கத்தாலும் பார்க்கப்பட்டால் ஜாதகன் புண்ணிய க்ஷேத்திரத்தில் மகா நதி சமீபத்தில் ஜனனமடைவான்.

(3) ஜென்மலக்கினம் தனுசு ஆகி லக்கினபாவாதிபதி கேந்திர ராசியிலிருந்து பாபக்கிரகத்துடன் கூடியுருந்தாலும், பாபக் கிரகத்

தால் பார்க்கப்பட்டாலும் வனப் பிராந்தியத்தில் அல்லது சமுத்திர சமீப பட்டிணத்தில் ஜனனமும் வாசமும் அடைவான், வசுதாம்சத்தில் பிறந்தவன் பிரசித்தியடைவான்,

(4) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி சந்திரன் பாபக்கிரகத்துடன் கூடியிருந்தாலும், பாபக்கிரகத்தால் பார்க்கப்பட்டாலும் சூதிகாரிஷ்ட தோஷபயமும், தாய்க்குபயமும் உண்டாகும், அதற்குசாந்தி செய்தால் சுக முண்டாகும்.

(5) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி சந்திரன் கேந்திர திரிகோணத்தில் சுபாம்சத்தில் (சுபராசியில் இருந்தாலும்) நிர்மலாம்சத்தில் இருந்தாலும் சூதிதோஷ பயமுண்டாகாது.

(6) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி எட்டாம் பாவாதிபதி நிர்மலாம்சத்திலும் லக்கின பாவாதிபதி வசுதாம்சத்திலு மிருந்தால் வசுதாம்சத்தில் பிறந்தவன் பூர்ணுயுளுடையவனுவான்.

(7) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி சந்திரனும் பாபருடன்கூடி லக்கினுதிபதியும் பாபருடன் கூடியிருந்தால் மத்தியாயுளுடைவனென்று ரிஷிகள் சொல்லுகின்றனர்.

(8) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி வசுதாம்சத்தில் பிறந்தவனுக்கு சந்திரனும், லக்கினுதிபதியும் ராகு கேதுகளுடன் கூடிருந்தாலும் கூட ஆயுளுக்கு தோஷ முண்டாகாது.

(9) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி எட்டாம் பாவாதிபதி நின்ற ராசிநாதன் துர்பெலனுயிருந்தாலும் ஆயுளுக்குத் தோஷமில்லை.

(10) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி எட்டாம் பாவாதிபதி நின்ற ராசிநாதன் தன் உச்ச, மித்திர, சொக்ஷேத்திர ராசிகளில் அல்லது திரிகோணங்களிலிருந்தாலும் ஜாதகன் வெகு ஆயுசுடையவனுவான்.

(11) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி எட்டாம் பாவாதிபதி நின்ற பாவாதிபதி மூன்று, ஆறு, எட்டாகிய இவைகளில் இருந்தால் மத்திய வயதடைவான்:

(12) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி எட்டாம் பாவாதிபதி அவன் நின்ற ராசிநாதன் இவர்கள் ஆறு எட்டுப்பன்னிரண்டு முதலிய பாவங்களிலிருந்தால் ஜாதகன் அற்ப வயதடைவான்.

(13) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி எட்டாம் பாவாதிபதியும், லக்கின பாவாதிபதியும், ராகு கேதுக்களுடன் கூடி பலத்துடனிருந்தாலும், ஸ்திர ராசியிலிருந்தாலும் தீர்க்காயுளுடையவனுவான், வேறு பாவர்களுடன் கூடினுல் அற்பாயுளுடையவனுவான்.

(14) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி மேல் சொல்லியபடி கிரகங்கள்கூடி சரராசியில் இருந்தால் வேறு விதமாக ஆயுளாகும், அல்லது தரித்திரமாவது அடைவார்கள் என்று வசுதாம்ச பலனாக சொல்லப்பட்டது.

(15) ஜென்மலக்கினம் தனுசு ஆகி லக்கினபாவாதிபதியும் எட்டாம் பாவாதிபதியும் ராகு கேதுக்களுடன் கூடி வேறு பாவருடன் கூடாமல் சர ராசியில் இருந்தாலும் ஆயுள் விருத்தியுண்டாகும்.

(16) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி சூரியன் கேந்திர திரிகோணராசியிலிருந்தாலும் நாடியம்ச காதாம்சத்திலிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் அற்ப சுக மடைவான்.

(17) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி சூரியன் காதாம்சத்திலிருந்தாலும் ஒன்பதாம் பாவாதிபதி காதாம்சத்திலிருந்தாலும் லக்கின பாவத்திற்கொன்பதாம் பாவத்தில் சனி யிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் சூத்திர சினேக முடையவன், க்ஷேத்திர மூலம் அற்பசுக முடையவன், சூத்திரரால் விசேஷ ஜீவன முடையவன், அற்ப வித்தை தனமுடையவன், போகி, சாப்பாடும், ஆச்சாரமும் அற்பமாகவே யுடையவன், இங்கு ஒன்பதாவது பாவாதிபதியாக பாவஸ்புட ரீதியாக வேறு கிரகம் சூரியனைத் தவிர்த்த கிரகம் வரலாமாதலால் மூலத்திலுள்ள படியே எழுதப் பட்டது.

(18) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி ஒன்பது ஐந்து ஆகிய பாவங்களில் பாபரிருந்து ஒன்பதாம் பாவாதிபதியும் பாபருடன் கூடி யிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் பாபச் செய்கை யுடையவன், கஷ்ட முடையவனாவான்.

(19) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி ஒன்பதாம் பாவாதிபதி சுபருடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் நற்செய்கையுடையவன், சுகியாவன், தேவப்பிராம்மண பக்தியுடையவன், வைதீகாச்சார தர்மமுமுடையவன்.

(20) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி ஒன்பதாம் பாவத்தில் பாபரிருந்தாலும், ஒன்பதாம்பாவாதிபதி சுபாம்சத்தில் சுபராசியிலிருந்தால் ஜாதகன் தகப்பன் கொஞ்சம் அனுசாரமுடையவனாயினும் வயோதிக வயதில் மனோசுத்தியடைவான், வெகு ஆயுளுமடைவான்.

(21) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி சூரியன் காதாம்சத்தில் இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் ஜாதகனுடைய பாலிய வயதில் இறந்துவிடுவான், அல்லது ஜாதகனுடைய தகப்பன் பீடையடைவான், அல்லது ஜாதகனுடைய ஐந்தாவது வயதிலாவது, ஆறுவது வயதிலாவது, அல்லது பதினாறுவது வயதிலாவது ஜாதகனுடைய

தகப்பன் மரணமடைவான், நான்காம் பாவாதிபதியிருக்கும் அமிச திரிகோணத்தில் அல்லது நான்காம் பாவாதிபதி பார்க்கும் ராசியிலாவது சனி கோச்சாரத்தில் வரும்போது ஜாதகனுடைய தகப்பன் மரணமடைவான், ஜாதகனுக்கு பிதுர் பாவம் ஒன்பதாவது பாவமானதால் அதனால் பாக்கியத்தையும் அப்படியே அறியவும்.

(22) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி சந்திரன் கேந்திர திரிகோணத்தில் இருந்து குரு சுதாம்சத்திலிருந்தால் ஜாதகன் தாய் சுகமுடையவளாவாள், மேற்படி சந்திரன் நிர்மலாம்சத்திலிருந்தால் பாபச் செய்கையுடையவளாயினும் நிர்மலமான மனதுடையவளாவாள், குணவதி, புகழுடையவள், கொஞ்சம் ரோக முடையவள், அன்ன தானப் பிரியை, புண்ணியவதி, வெகு காலம் ஆயுளுடையவள், ஜாதகனுக்குச் சனி மகரத்தில் இரண்டாம் பரியாயத்தில் வரும்போது ஜாதகன் தாய் மரிப்பாள், வேறு சிலர் ஜாதகனுக்கு நாற்பத்திரண்டாம் வயதில் கும்ப ராசியில் சனி ஷை இரண்டாம் பரியாயத்தில் வரும்போது மரண முண்டாகுமென எண்ணுகின்றனர்.

(23) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி சனி கேந்திர திரிகோணத்தில் இருந்து செவ்வாய் சமாம்சத்திலிருந்தால் ஜாதகனுடைய மூத்த சகோதரன் வெகு ஆயுளுடையவன், பின் சகோதர ஹீனன், ஜாதகன் இரண்டு பின் சகோதரிகளை யுடையவன், வேறு சிலர் மூன்று சகோதரிகள் என எண்ணுகின்றனர், இவர்களைவிட அதிக சகோதரம் பிறந்தாலும் மரித்துவிடும்.

(24) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி குரு திரிம்சாம்சத்தில் குரு சுதாம்சத்திலிருக்கப் பிறந்தவன் வெளுப்பு நிற முடையவன், வித்தை யுடையவன், இனிமையாய்ப் பேசுபவன், மத்திய வயது காலத்தில் நல்ல பாக்கியமடைவான்.

(25) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி புதன் சாரஸ்வதாம்சத்தில் இருந்தால் ஜாதகன் கல்வியால் ஜீவிப்பான், அரசாங்கத்தாலும் பிரசித்தியாவன், இராஜ ஸேவை செய்பவன், இரு தாரமடைவான்.

(26) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி சந்திரன் சனியுடன் கூடியிருந்தாலும், சனியால் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் பாலிய வயதில் பீடையடைவான்.

(27) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி சந்திரன் ராகு, கேதுக்களுடன் கூடியிருந்தால் ஜாதகன் சில சமயம் துக்கமும், சில சமயம் சுகமும் உடையவன்.

(28) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி சந்திரன் வர்க்கோத்தமத்தில் இருந்தால் ஜாதகன் இராஜ ஸேவை செய்பவன்.

(29) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி புதன் சாரஸ்வதாம்சத்திலும், குரு வசுதாம்சத்திலும் இருந்தால் வசுதாம்சத்தில் பிறந்தவன் இருபத்தைந்து வயதிற்கு மேல் எழுத்து வேலையால் சுகமடைவான், முப்பது வயதிற்கு மேல் பிராம்மணனால் நல்ல யோகமும், வெளி தேசத்தில் தனமும் சம்பாதிப்பான், அன்னிய ஜாதிப் பிரபுவினிடம் சினேக முடையவன், பல்லக்கு முதலிய வாகன யோகமுடையவன், முப்பத்தாறுவது வயதிலிருந்து பற்பல வழிகளிலும் தனமடைவான், இருபது வயதிற்கு மேலிருந்து சுயப் பிரபலமாக ஆயுள் வரை சுகமுடையவனுவான்.

(30) ஜென்ம லக்கினம் தனுசு (மாத்வினீயம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி செவ்வாயுடன் கூடியிருந்து குரு திரிம்சாம்சத்தில் பிறந்தவன், வெளுப்பு நிறமுடையவன், நல்ல ஆகிருதி உடையவன், சகோதரனுடையவன், தான் இரண்டாவது கெற்பத்திலாவது நான்காவது கெற்பத்திலாவது ஜனிப்பான், பூர்வ பாகத்தில் ஆனல் நதிப் பிராந்தியத்தில் தேவாலய சமீபத்தில் ஜனனமும், உத்தராம்சமானல் ஜாதகன் ஒராவது கெற்பத்திலல்லது இரண்டாவது கெற்பத்தில் ஜனனமும் அடைவான், சகோதர னில்லாதவனுவான், ஜாதகன் தாய் பிரசவத்தில் அற்ப வேதனையடைவாள்.

(31) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி நான்காம் பாவாதிபதி சுய க்ஷேத்திரத்தில் இருந்தால் ஜாதகன் தாய் சுகமடைவாள்.

(32) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி சந்திரன் குருவுடன் கூடியிருந்தால் ஜாதகன் சுருதி தோஷ மில்லாதவனுகிப் பூர்ணயுளுடையவனுவான்.

(33) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி சுயக்ஷேத்திரத்தில் லக்கின பாவாதிபதி எட்டாம் பாவாதிபதியுடன் கூடியிருந்து ஷை சந்திரன் கமலாகராம்சத்திலிருந்தால் ஜாதகன் அறுபத்தெட்டு வயதடைவான், ஐம்பது, அறுபது இந்த வயதுகளில் அபமிருத்து பயமுடையவனுவான், சாந்தி செய்தால் அக்காலம் குணமுண்டாகும்.

(34) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி ஒன்பதாம் பாவாதிபதி விரய பாவமாகிய பன்னிரண்டாம் பாவத்திலிருந்து ஒன்பதாம் ஆரூடாதிபதி பாபரானல் ஜாதகனுடைய தகப்பன் அற்ப சுகமுடையவன், வைஷ்ண மதாச்சார முடையவன், பாஞ்சராத்திர மதத்தையடைந்தவன், கல்வியுடையவன், கொஞ்சம் வாயு பீடையுடைய தேகமுடையவன், யாசகம் செய்து ஜீவிப்பவன், ஜாதகனுடைய இரண்டாந் திசையில் ஜாதகனுடைய தகப்பன் மரிப்பான்.

(35) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி நான்காம் பாவாதிபதி சொட்சேத்திரத்திலிருந்து சந்திரன் அவருடன் கூடியிருந்தால்

ஜாதகன் தாய் சுகமுடையவன், ஜாதகனுடைய தாய் புகழுடைய வள், தைரியமுடையவள், சமர்த்தை, பிரியத்தை வளர்ச்சி உண்டு பண்ணுபவள், உடன் பிறந்த சகோதரருடையவள், திரவிய சம்பாத னையில் கருத்துடையவள், சுபமுடையவள், தன் தாய் வமிசத்தில் அற்ப சுகமுடையவள், ஜாதகன் அம்மானால் சுகமுடையவன், ஜாத கன் தாயின் சகோதரியு மிப்படியே, ஜாதகனுடைய தாய் ஜாதக னுடைய நான்காந் திசையில் மரிப்பாள்.

(36) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி குரு சந்திரனுடன் கூடி யிருந்தால் குரு திரிம்சாம்சத்தில் பிறந்தவன் வெளுப்பு நிறமுடைய வன், அறிவுடையவன், பாலியத்தில் கொஞ்ச சுகமுடையவன், பன்னிரண்டு வயதிற்குப் பிறகு கஷ்டமும், மனோ வியாதியு முண் டாகும், தன் அம்மானால் கொஞ்சம் ஜாதகன் தாய் ரக்ஷிக்கப்படு வாள், ஜன்ம திசையில் சுகமுடையவன், தகப்பனால் சுகமுடைய வன், ஆறு॰ாது வயதில் அட்சராப்பியாச முடையவன், அற்ப வித்தையும், அதிக சுகமுமுடையவன்.

(37) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி நான்காம் பாவாதிபதி சனியால் பார்க்கப்பட்டு இரண்டாம் பாவாதிபதி சூரியனுடன் கூடியிருந்தாலும், ராகு கத்கதாம்சத்தி லிருந்தாலும் ஜாதகன் தன முடையவன், ஆயினும் கொஞ்சம் வாய் தடுமாறிப் பேசுபவன், அல்லது பேசுவது புரியாமல் பேசுபவன், (பிராம்மண ஜன்மத்தில் பிறந்தவன்) அதிக பாலியத்தில் விவாகமடைவான், ஜன்ம தேசத் தில் தன் கிராமத்திலேயே அல்லது தெற்கில் விவாகமடைவான், தன் உறவினர் வர்க்கத்தில் விவாகமுடையவன், மாமனார், மாமியா ருடையவன், ஜாதகனுடைய மனைவி ரூப லக்ஷண முடையவள், வமிச விருத்தியுடையவள், மங்களமுடையவள், ஜாதகன் பதினாரு வது வயதிற்கு மேல் சுகமுடையவன், பற்பல தேசங்களில் சஞ்சார முடையவன், யாசகம் செய்து ஜீவிப்பவன், இருபது வயதிற்குமேல் தனமடைவான், தாயால் அற்ப தனமடைவான், இரண்டாந் திசை யில் பிரபு சினேகமும், தன லாபமும், முன்னூறு தனமும் அடை வான், வெகு ஆயுசுடைய இரண்டு புத்திரர்களும், இரண்டு புத்திரி களுமுடையவன்.

(38) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி எந்த அமிசத்தில் ஜாத கன் பிறந்தாலும் குரு பலவானு யிருந்தால் அவனுடைய புத்திரன் பிரசித்தி யடைவான், ஷை குருவுடன் செவ்வாயும் கூடியிருந்தால் விசேஷ பிரசித்தி உடையவனுவான்.

(39) ஜென்ம லக்கினம் தனுசு (முத்திரிகாம்சம்) ஆகி சிம்ம ராசியில் சனி சுதாம்சத்திலிருந்து குருவுடன் கூடியிருந்தாலும், குருவால் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் சகோதரனின்றி ஒண்டி

யாவான், (பிராம்மண ஜன்மத்தில் பிறந்தவன்), அதிக மேதாவி, பாலியம் முதல் சுகமுடையவன், சம தேகி, சம அங்கங்களுடைய வன், அறிவாளி, தீரன், விசேஷ சிவ பக்தி யுடையவன், எழுதுவ தில் சமர்த்தன், இருபது வயதிற்கு மேல் பிரசித்தி யுடையவன், கொஞ்சம் தெரிந்தவன், குணமுடையவன், பாலியத்தில் சவுக்கிய முடையவன், பிதுரார்ஜித மில்லாதவன், சுயார்ஜித சம்பத்து நிறைந்தவன், உத்தியோக ஜீவன முடையவன், இருபத்தைந்திலும் எழுத்து உத்தியோகமே, முப்பது வயதிற்கு மேல் நற்கீர்த்தி யுடையவன், பிரபு சினேகம் முதலான சித்தி யுடையவன், ஞானி, தத்துவ விவேக முடையவன், கடவுளின் பெயரைப் பாடுபவர்களை நேசிப்பவன், தன் கிராமத்தில் பூஜிக்கப்படுபவன், சுகி, ரண பீடை யுடையவன், தன் ஜனங்களால் கொண்டாடப்படுபவன், குரு பக்தி யுடையவன், தவம் செய்பவன், தேவி சக்தியின் அருளடைபவன்.

(40) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி சந்திரன் சிம்ம ராசியி லுள்ள சனியுடன் கூடினாலும், சந்திரன் சனியால் பார்க்கப்பட்டா லும், சந்திரன் பத்தாம் பாவாதிபதியுடன் கூடியிருந்து ஷை சனிக் கிரண்டா மிடத்தில் சுக்கிர னிருந்தால் ஜாதகன் சித்த சாஸ்தி ரார்த்த நிஷ்டை யுடையவனுவான்.

(41) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி பத்தாம் பாவத்தில் சூரி யனும், சுக்கிரனும் கூடியிருந்தால் ஜாதகன் நாற்பது வயதிற்கு மேல் ஞானியாகவும், தத்துவ விவேக முடையவனுகவும் ஆவான், மிக்க சிரேஷ்ட சித்த புருஷனுவான், ஐம்பதாவது வயதிலும் விசேஷ முடையவன், மகா புருஷனுடைய தெரிசனையடைவான், நாற்பத் தாறுவது வயதிற்குப் பிறகே சித்த புருஷனுடைய சந்தோஷத் தையும், அருள் பாக்கியமு மடைவான், ஐம்பதுக்கு மேல் அடை வான் என்பது சிலர் மதம், யத்தன மில்லாமலே குரு தெரிசன முடையவன், அந்த குருவின் அருளால் நிரந்தரமான அன்ன தானம் செய்பவன் ஆவான்.

(42) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி சனி சிம்ம ராசியில் சுதாம்சத்திலிருந்து முத்திரிகாம்சத்தில் பிறந்தவன், ஆயுள் பூர் ணமா யடைவான், அரோக முடையவனுவான், வெகு காலம் ஜீவிப் பவன் ஆவான், அறுபத்தெட்டு வயதில் கொஞ்சம் பீதியடைவான், சாந்தியால் சுகமடைவான், ஐம்பது வயதிற்குப் பிறகே தன தான் னியாதிக ளுடையவனுவான், சித்த புருஷனுடைய அருளுடையவ னுகி ஆயுள் வரையில் நல்ல தர்மம் செய்பவனுவான், சித்தாயுள் யோகமுடையவனுவன், ஆயுளின்முடிவு இங்கு சொல்லப்படவில்லை.

(43) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி முத்திரிகாம்சத்தில் தனுசு லக்கினத்தில் பிறந்தவனுக்கு, சனி சிம்ம ராசியில் ஜனன

காலத்தில் இருந்து (அந்த சனி பகவான் இராசி ஒன்றுக்கு வருஷம் இரண்டரை வீதம் சஞ்சரிப்பதாக ஏற்பட்டிருக்கிற நியதியில்) ஜாதகன் ஜனித்தபோது சிம்ம ராசியில் இருந்த காலம் சென்று மேலும் அதில் இருக்க வேண்டிய காலம் ஒன்றரை வருஷம் அல்லது அதிகம் சில மாதங்களிருந்தாலும் அதன் பலன் ஜாதகனுக்கு சொல்லப்படுகிறது, இங்கு சிம்ம ராசியில் சந்திரனும் கூட இருக்கிறார், ஆதலால் ஜன்ம ராசியில் மேற்குறித்த சனி பகவானின் சஞ்சார காலம் முன் குறித்த இரண்டரை வருஷங்களில் ஒன்றரை வருஷமல்லது அத்துடன் அதிகமாக சில மாதங்க ளிருப்பினும், அப்போது ஜாதகனுக்குப் பலாபலன், பால ரோக முண்டாகும், மேலும், ஒரு ஜாதகனுக்குப் பரியாயப்படி சனி பகவான் இராசி மண்டலம் முழுவதையும் சுற்றிக்கொண்டு திரும்பவும் தான் புறப்பட்ட ராசிக்கு வரும் காலம் இடையில் முப்பது வருஷங்கள் செல்லும், இப்படி சில ஜாதகர்கள் விஷயத்தில் இரண்டு பரியாயங்கள் அல்லது மூன்று பரியாயங்கள் வரை சுற்றி வருகிற காலங்களில், அந்தந்த பரியாயங்களில் அந்தந்த ராசிகளில் நேரும் பலனைச் சொல்லப்படுகிறது, பரியாயம் என்பது இராசிகள் பன்னிரண்டும் அடங்கிய ராசி மண்டலத்தை ஒரு கிரகம் ஒரு தரம் சுற்றி வருவது ஒரு பரியாயம் ஆகும், அப்படி வரும் பரியாயங்களின் பலனைக்கீழேதரப்படுகிறது, பரியாயம்ஓராவது ஆரம்பகாலத்தில்:—

(44) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி சிம்ம ராசி அவருக்கு ஜன்ம ராசி ஆகி, அங்கு ஜன்ம காலத்தில் சனி இருந்தால் அவர் அந்த ராசியிலிருக்குமளவும் ஜாதகனுக்குப் பால ரோக முண்டாகும்.

(45) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி சிம்ம ராசி ஜன்ம ராசி ஆகி அதற்கிரண்டா மிடமாகிய கன்னியா ராசியில் ஓராவது பரியாயத்தில் சனி கோச்சாரத்தில் சஞ்சரித்து வரும்போதும், சிம்ம ராசியில் சொல்லியபடியே பலன்கள் நடக்கும்.

(46) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி சிம்ம ராசி ஜாதகனுக்கு ஜன்ம ராசியாகி, அதற்கு மூன்றுமிடமான துலா ராசியில் ஓராவது பரியாயத்தில் கோச்சாரத்தில் சனி சஞ்சரித்தால் அவர் அங்கு இருக்கும் வரையில் அற்ப சுக முண்டாகும், தாய், தகப்பன் சுகமடைவார்கள்.

(47) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி சிம்ம ராசி ஜாதகனுக்கு ஜன்ம ராசியாகி, அதற்கு நான்காமிடமான விருச்சிக ராசியில் ஓராவது பரியாயத்தில் சனி கோச்சாரத்தில் சஞ்சரிக்கும்போது, கலஹமும், வெளி தேசம் செல்லலும், கஷ்டமும், பற்பல தேசந் திரிதலும் ஏற்படும்.

(48) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி சிம்ம ராசி ஜாதகனுக்கு ஜன்ம ராசியாகி அதற்கு ஐந்தாமிடமான தனுசு ராசியில் ஜாதகனுக்கு கோச்சாரத்தில் ஓராவது பரியாயத்தில் சனி சஞ்சரிக்கும் காலம் விருச்சிக ராசியில் என்ன பலன் ஏற்படுமோ அதுவே பலன் தனுசு ராசிக்கும் நடக்கும்.

(49) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி சிம்ம ராசி ஜன்ம ராசியாகும் ஜாதகனுக்கு சிம்மத்திற்காறுமிடமான மகர ராசியில் ஓராவது பரியாயத்தில் சனி கோச்சாரத்தில் சஞ்சரிக்கும்போது பிதுரு மரணம் சம்பவிக்கும்.

(50) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி சிம்ம ராசி ஜன்ம ராசியாகி ஜனித்த ஜாதகனுக்கு, சிம்ம ராசிக்கேழாமிடமான கும்பத்தில் கோச்சாரத்தில் ஓராவது பரியாயத்தில் சனி சஞ்சரிக்கும்போது அற்ப சுகமும், தன் தேசத்திலேயே அற்ப சுகமும் ஏற்படும்.

(51) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி சிம்ம ராசி ஜன்ம ராசியாகி ஜனித்த ஜாதகனுக்கு ஓராவது பரியாயத்தில் சிம்ம ராசிக்கெட்டாமிடமான மீன ராசியில் கோச்சாரத்தில் சனி சஞ்சரிக்கும் காலம் விவாகம் நடக்கும்.

(52) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி சிம்ம ராசி ஜன்ம ராசியாகிப் பிறந்தவனுக்கு கோச்சாரத்தில் ஓராவது பரியாயத்தில் சிம்ம ராசிக்கு ஒன்பதாவது ராசியாகிய மேஷ ராசியில் சனி சஞ்சரிக்கும் காலத்தில் ஆரம்பித்து சுயப் பிரபலமும், தன சம்பாதனையும் ஏற்படும்.

(53) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி சிம்ம ராசி ஜன்ம ராசி ஆகிப் பிறந்தவனுக்கு சிம்ம ராசிக்குப் பத்தாமிடமான ரிஷப ராசியில் ஓராவது பரியாயத்தில் சனி கோச்சாரத்தில் சஞ்சரிக்கும் காலத்தில் மேஷ ராசிக்குச் சொல்லிய பலனே நடைபெறும், மேலும் உத்தியோகத்தால் திரவியத்தைச் சம்பாதிப்பான், சேர்க்கவும், கலைக்கவும் சாமர்த்திய முடையவனுவான்.

(54) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி சிம்ம ராசி ஜன்ம ராசியாகிப் பிறந்தவனுக்கு சிம்ம ராசிக்குப் பதினோராமிடமான மிதுன ராசியில் கோச்சாரத்தில் ஓராவது பரியாயத்தில் சனி சஞ்சரிக்கும் காலத்தில் சேர்க்கவும், கலைக்கவும், சாமர்த்தியமும், சௌக்கியமும் உண்டாகும்.

(55) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி சிம்ம ராசி ஜன்ம ராசி ஆகிப் பிறந்தவனுக்கு கோச்சாரத்தில் ஓராவது பரியாயத்தில் சனி சிம்ம ராசிக்குப் பன்னிரண்டாமிடமாகிய கடக ராசியில் சஞ்சரிக்

கும்போது தேக ஜாட்டிய முண்டாகும். (இனி இரண்டாவது பரியாயப்படி பலன் சொல்லப்படுகிறது).

(56) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி மேற்சொல்லியபடி சிம்ம ராசி ஜன்ம ராசி ஆகிப் பிறந்தவனுக்குச் சனி சிம்ம ராசியில் இரண்டாவது பரியாயத்தில் கோச்சாரத்தில் சஞ்சரிக்கும் காலத்தில் ஜாதகனுடைய தாய்க்குப் பீடை யுண்டாகும், ஜாதகனுக்கு அற்ப சுக முண்டாகும்.

(57) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி சிம்ம ராசி ஜன்ம ராசி ஆகிப் பிறந்தவனுக்கு சனி சிம்ம ராசிக்கு இரண்டாமிடமான கன்னியா ராசியில் இரண்டாவது பரியாயத்தில் கோச்சாரத்தில் சஞ்சரிக்கும்போது ஜாதகனுக்குப் புத்திரி சந்தானம் உண்டாகும், கீர்த்தியு முண்டாகும்.

(58) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி சிம்ம ராசி ஜன்ம ராசி ஆகிப் பிறந்தவனுக்கு சிம்ம ராசி முதலாக மகர ராசி வரையில் இரண்டாம் பரியாயத்தில் சனி சஞ்சரிக்கும் காலம் கோச்சாரத்தில் அற்ப யோக முண்டாகும், இதின் மத்தியில் கொஞ்சம் கடன் உபத்திரவமும், கோச்சாரத்தில் துலா ராசியில் சஞ்சரிக்கும்போது அற்ப சுகமும், சிவ பக்தி விசேஷமும், தன் தேசத்தில் பூஜிக்கப் படுதலும், சுகமும் அடைவான், மனைவி வர்க்கத்தினால் மனோ வியா கூலமும் உண்டாகும்.

(59) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி, சிம்ம ராசி ஜன்ம ராசி ஆகிப் பிறந்தவனுக்கு சனி இரண்டாம் பரியாயத்தில் சிம்ம ராசிக் கைந்தாமிடமான தனுசு ராசியில் சனி கோச்சாரத்தில் சஞ்சரிக் கும்போது ஜாதகனுக்குத் தேக ஜாட்டிய முண்டாகும்.

(60) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி சிம்ம ராசி ஜன்ம ராசி ஆகிப் பிறந்தவனுக்கு சிம்ம ராசிக்கு ஆறுமிடமான மகர ராசியில் சனி இரண்டாம் பரியாயத்தில் கோச்சாரத்தில் சஞ்சரிக்கும் காலம் தனுசு ராசியில் ஏற்பட்டபடி தேக ஜாட்டியமும், சித்த புருஷ தரிசனமும், க்ஷேத்திர கிராமாதிபத்தியமும், சூத்திர சித்த புருஷனின் பிரிவால் மனோ வியாகூலமும் உண்டாகும்.

(61) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி சிம்ம ராசி ஜன்ம ராசி ஆகிப் பிறந்தவனுக்கு சனி இரண்டாவது பரியாயத்தில் சிம்ம ராசிக்கு ஆறுமிடமான மகரராசியின் கடைசியிலும், ஏழாமிடமான கும்ப ராசியிலும் கோச்சாரத்தில் சஞ்சரிக்கும்போது யத்தன மின்றியே சித்த புருஷ தரிசனமும், அவரால் விசேஷ சம்பத்தும் ஏற்படும், புத்திர உற்பத்தியு முண்டாகும்.

(62) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி சிம்ம ராசி ஜன்ம ராசி ஆகிப் பிறந்தவனுக்கு இரண்டாம் பரியாயத்தில் ஏழா மிடமான கும்ப ராசியில் கோச்சாரத்தில் சனி சஞ்சரிக்கும் காலையில் விசேஷ தன லாபமும், நிதி பார்க்கும் சந்தோஷமும், க்ஷேத்திரக் கிராம லாபமும், கடன் நிவர்த்தியும் (ரிணசாந்தியும்) உண்டாகும், அதன் பிறகு விசேஷ சுபாதிக்கியமும், மனைவி சுகமும், புத்திர விருத்தியும், கீர்த்தியும் உண்டாகும்.

(63) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி ஜன்ம ராசி, சிம்ம ராசி ஆகிப் பிறந்தவனுக்கு சனி மேற்படி சிம்ம ராசிக்கு எட்டா மிடமான மீன ராசியில் கோச்சாரத்தில் இரண்டாம் பரியாயத்தில் சஞ்சரிக்கும் காலம் கும்ப ராசிக்குச் சொல்லிய பலனுடன், தன தான்னியாதிகமும், தேவி சக்திபின் அருளும், தேவி சக்தியின் கிருபையால் எல்லாக் காரியங்களிலும் ஜயமும், நிரந்தரமான தர்மம் செய்தலும் ஏற்படும்.

(64) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி சிம்ம ராசி ஜன்ம ராசியாகிப் பிறந்தவன் ஷெ சிம்ம ராசிக்கு ஒன்பதாமிடமான மேஷ ராசியில் இரண்டாம் பரியாயத்தில் கோச்சாரத்தில் சனி சஞ்சரிக்கும்போது அதிக சுகமும், சித்த புருஷர்களின் சேர்க்கையால் பற்பல வழிகளிலும் தன வரவும் அடைந்து தபசு செய்யும் தபசியுமாவான்.

(65) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி, சிம்ம ராசி ஜன்ம ராசி ஆகிப் பிறந்தவனுக்கு இரண்டாவது பரியாயத்தில் சிம்ம ராசிக்குப் பத்தாமிடமான ரிஷப ராசியில் கோச்சாரத்தில் சனி சஞ்சரிக்கும் போது ஜாதகன் தர்மம் செய்வான், தர்மங்களை கிரகிப்பான்.

(66) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி சிம்ம ராசி ஜன்ம ராசி ஆகிப் பிறந்தவனுக்கு இரண்டாம் பரியாயத்தில் சனி ஷெ சிம்ம ராசிக்குப் பதினோராமிடமான மிதுன ராசியில் கோச்சாரத்தில் சஞ்சரிக்கும்போது சம்பத்தும் நிறைந்து தேசாந்திரமும் செல்லல் நேரிடும்.

(67) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி ஜன்ம ராசி, சிம்ம ராசி ஆகிப் பிறந்தவனுக்குச் சனி இரண்டாம் பரியாயத்தில் ஷெ சிம்ம ராசிக்குப் பன்னிரண்டாமிடத்தில் கடக ராசியில் கோச்சாரத்தில் சஞ்சரிக்கும்போது ஜாகதன் தன் தேசம் திரும்புதலும். பிறகு தர்மம் செய்தலும் நேரிடும், மேலும் வெகு திரவியம் செலவு செய்து, பற்பல வழிகளிலும் விரயம் செய்து, இவ்வாறு செலவு செய்தும் அமிதமான திரவியமுடையவனுவன்.

(68) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி சிம்ம ராசி ஜன்ம ராசி ஆகிப் பிறந்தவனுக்கு சனி திரும்பவும் ஜன்ம ராசிக்கு வரும்

போது பரியாயம் இரண்டு முடிந்து மூன்றாவது பரியாயம் ஆரம்ப மாகும், அப்போது ஜாதகனுக்கு நேரிடும் பலனாவது:—

(69) ஜென்ம ராசியான ஷை சிம்மத்தில் சனி கோச்சாரத் தில் சஞ்சரித்தால் நல்ல யோகமும், சிம்ம ராசியின் கடைசியில் அல்லது கன்னியா ராசியில் பிரவேசிக்கும் சமயம் மனைவியின் மர ணமும் நேரிடும், சிம்ம ராசியிலிருக்கும்போது பைரவருடைய அனுக்கிரகமும், பூமியும், வித்தியாபலனுமுண்டாகும், அக்காலம் ஜாதகனுக்கு வயதும் அறுபது பூர்த்தியாகி அக்காலபலனாக மனைவி மரணமும் நேரிடும்.

(70) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி சிம்ம ராசி ஜன்ம ராசி யாகி மூன்றும் பரியாயத்தில் சனி கோச்சாரத்தில் சிம்ம ராசிக் கிரண்டாமிடமான கன்னியா ராசியில் சஞ்சரித்தால் மூன்றாவது பரியாயமானபடியால் இங்கு குபேரனுடைய பொக்கிஷ காவல் கூடத்திலுள்ள தேவ கண சம்பந்தப்பட்டவர்களானாலும் மரணம் சம்பவிக்கும் என்றும், இங்கு கால சக்கிர தானத்தால் ஆயுள் விருத்தியானது தீர்க்காயுள் ஜாதகருக்கு மட்டும் விருத்தியுண் டாகி தேசாந்தர பலனுண்டாகும், என்றும் ரிஷிகள் எண்ணு கின்றனர்.

(71) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி சிம்ம ராசி ஜன்ம ராசி ஆகிப் பிறந்தவனுக்கு சனி கோச்சாரத்தில் மூன்றும் பரியாயத்தில் சிம்ம ராசிக்கு மூன்றுமிடமான துலா ராசியில் சஞ்சரிக்கும் காலை யில் தேசாந்திர பலனுண்டாகும்.

(72) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி சிம்ம ராசி ஜன்ம ராசி ஆகிப் பிறந்தவனுக்கு சனி மூன்றாவது பரியாயத்தில் கோச்சாரத் தில் விருச்சிக ராசியாகிய சிம்ம ராசிக்கு நான்காமிடத்தில் சஞ்ச ரித்தால் விசேஷ பாப விருத்தியுண்டாகும்.

(73) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி சிம்ம ராசி ஜன்ம ராசி ஆகிப் பிறந்து, ஜன்ம ராசியான சிம்ம ராசிக்கு ஐந்தாமிடமான தனுசு ராசியில் கோச்சாரத்தில் மூன்றும் பரியாயத்தில் சனி சஞ்ச ரித்தால் ஜாதகனுக்குத் தேக பீடையுண்டாகும், அக்காலம் கால சக்கிர தானம் செய்தால் ஜாதகன் ஆயுள் விருத்தி அடைவான்.

(74) ஜென்ம லக்கினம் தனுசு (குமாராம்சம்) ஆகி நான்காம் பாவாதிபதி கும்ப ராசியிலிருந்தால் ஜாதகன் நதிப் பிராந்தியத்தில் ஜனனமாவான்.

(75) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி சந்திரன் சுக்கிரனுடன் கூடி மேஷ ராசியிலிருந்தால் ஜாதகனுக்கு சூதி தோஷ பயம் உண் டாகாது.

(76) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி எட்டாம் பாவாதி சுக்கிரனால் பார்க்கப்பட்டு, குருவுடன் கூடியிருந்தால் ஜாதகன் எழுபத்தொன்பது வயதடைவான்.

(77) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி சூரியன் ரிஷப ராசியில் ராகுவுடன் கூடியிருந்து ஒன்பதாம் பாவத்தில் செவ்வாயிருந்தால் ஜாதகன் தகப்பன் சொற்பமான பாக்கியமுடையவனுவன், சிவ பக்தியுடையவன், தேவப் பிராம்மண பக்தியுடையவன், அரசாங்கத்தில் அற்ப புகழுடைவன், அரசாங்க ஜன நேசமுடையவன், அனுச்சாரமுடையவன், பரஸ்திரீ சங்கமமுடையவன், திரவிய சம்பாதனையில் சமர்த்தன், அற்ப கல்வியுடையவன், ஜாதகனுடைய நான்காந் திசையில் மரித்துவிடுவான்.

(78) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி நான்காம் பாவாதிபதியாகிய குரு கும்ப ராசியில் சனியுடன் கூடியிருந்து சந்திரன் செவ்வாயின் ராசியான மேஷ ராசியிலிருந்தால் ஜாதகன் தாய் மத்திம வயதடைவாள், நல்ல குணமுடையவள், புகழுடையவள், பதி பக்தியுடையவள், பதிவிரதை, சுபமுடையவள், புண்ணியமுடையவள், வமிச விருத்தியுடையவள், இவள் ஜாதகனுடைய மூன்றுந் திசையில் மரிப்பாள்.

(79) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி மூன்றும் பாவாதிபதியாகிய சனி சுய க்ஷேத்திரத்தில் மூன்றும் பாவத்திலேயே குருவுடன் கூடியிருந்து செவ்வாய் கேந்திர திரிகோணத்தில் இருந்தால் ஜாதகன் அற்ப சகோதரனுடையவன், மத்தியாயுளுடைய ஒரு மூத்த சகோதரனுடையவன், அவன் எப்போதும் சுகி, புத்திரீ புத்திர சுகமுடைய ஒரு சகோதரியுமுடையவன், இரண்டு சகோதரிகளிருப்பர் என வேறு சிலர் மதம்.

(80) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி ஐந்தாம் பாவத்தில் சுக்கிரனிருந்து சந்திரனின் பிள்ளையான புதனுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய சகோதரியின் புத்திரன் எவனுவது ஒருவன் இராஜ யோகமுடையவனுவன்.

(81) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி ஏழாம் பாவாதிபதி சுக்கிரனுடன் கூடி மேஷ ராசியிலிருந்து, சனி செவ்வாயுடன் கூடியிருந்தாலும், சனி செவ்வாயால் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் பற்பல ஜாதி ஸ்திரீகளைச் சேர்வான், பாலியத்தில் ஆறு அல்லது ஏழாவது வயதில் அக்ஷராப்பியாசமும், பதினேழாவது வயதில் விவாகமும் அடைவான்.

(82) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி ஏழாம் பாவாதிபதி சுக்கிரனுடன் கூடியிருந்தால் ஜாதகன் போகியாயும், இராஜ வல்லவனுகவும், பரஸ்திரீகமனத்தால் கிரந்தி நோயுடையவனுகவுமாவான்.

(83) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி பன்னிரண்டாம் பாவத்தில் கேது இருந்தால் ஜாதகன் தியாகியும், கெம்பீர மனமுடையவனுமாவான், தகப்பன் சொல்லை மதிக்காதவன், பிறர் சொல் கேட்பவன், பரதார கமனி, தன் மனைவியிடம் நிதான ஆசையுடையவன், விவாகமடைந்த பிறகு சுயப் பிரபலமும், சௌக்கியமும், நீசப் பிரபுவிடம் ஸேவையால் தன சம்பாதனையும், அதனால் ஜீவனமும் உடையவன், இருபத்திரண்டல்லது இருபத்து மூன்றும் வயதில் யஜமான விரோதமுமடைவான்.

(84) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி ஒன்பதாம் பாவத்தில் செவ்வாயிருந்தால் ஜாதகன் வழி வழியாக யஜமான துவேஷமடைவான், நீச்சப் பிரபுவைத் துரும்புக்குச் சமமாக நினைப்பவன், சுயமாகவே விசேஷ சுயார்ஜித யோகமடைவான்.

(85) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி மூன்றும் பாவத்தில் சனியிருந்தால் ஜாதகன் தீரனுகவும், சூரனுகவும், நல்ல அறிவுடையவனுகவும் ஆவான், இவனுடைய இருபத்தைந்தல்லது முப்பத்து மூன்றும் வயதில் தாய் மரிப்பாள், தன்னுடைய இருபதாவது வயது முதல் முப்பத்து மூன்று வயது வரையில் நீச்சப்பிரபுவிடம் சுகமடைந்து, பிறகு வழி வழியாக விரோதமடைவான், ஷை பிரபுவின் விரோதத்தால் தேசாந்திரம் செல்லுவான்.

(86) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி ஏழாம் பாவாதிபதி சனியால் நன்கு பார்க்கப்பட்டால் ஜாதகன் ஸ்திரீ காரணமாக கலஹமடைவான், ஜன்ம பூமிக்கு கிழக்கில் நகரத்தில் பயத்தினுல் வசிப்பான், பூர்வார்ஜிதம் கொஞ்சம் விரயமும், புத்திரக் கிலேசமும் அடைவான்.

(87) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி லக்கினத்திற்கு மூன்றும் பாவத்தில் குரு இருந்து சனி செவ்வாயிவர்களால் பார்க்கப்பட்டாலும் சனி செவ்வாயிவர்களுடன் குரு கூடியிருந்தாலும் குரு மிருத புத்திராம்சத்திலிருந்தாலும் ஜாதகனுக்கு புத்திரர் பிறந்து பிறந்து மரித்துவிடுவர்.

(88) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி ஏழாம் பாவாதிபதி ஐந்தாம் பாவத்திலிருந்தால் ஜாதகன் தன் சகோதரனுடைய புத்திரனை தத்துப் புத்திரனுகக் கொள்வன், வேறு சிலர் மறு மனைவியிடம் புத்திரனுண்டாவான் என்று எண்ணுகின்றனர், ஜாதகனுக்கு முப்பத்தைந்து வயதின் மேல் வெளி தேசத்தில் அற்ப சுகமுண்டாகும், நாற்பத்து மூன்றும் வயதில் சகோதரனுல் கிலேசமடைவான், அதற்கு முன் சகோதரியால் கிலேசமடைவான், சகோதரன் இறந்த பின்பு அவன் சுகமடைவான், சகோதரியின் புத்திரனுல் ஜாதகனுக்கு பாக்கிய யோகமுண்டாகும், சொர்ணம்,

வஸ்திரம், ஆபரணம் முதலிய நர வாகனுதிகளும் உண்டாகும், பாக்கிய யோகமடைவான், நீச்சப் பிரபுவால் சுகமும், க்ஷேத்திர கிராமாதி அனேக கிராமாதிகாரமும், தன் ஜன்ம பூமிக்குகிழக்கிலாவது தெற்கு திக்கிலாவது தானுகவே ஷ யோகமும் உண்டாகும், பிறகு பற்பல தேசங்களில் சுகமும், அங்கு மேலான சந்தோஷமுமாக சில காலம் வாசமுமடைவான், பிராம்மண ஸ்திரீ சங்கமுடையவன், வேசி ஸ்திரீ சேர்க்கையும் ஏற்படும், ஐம்பதாம் வயதில் மனைவி மரித்துவிடுவாள், அதற்கு முன்பே யோக பங்கமேற்படும், மகா நதிப் பிராந்திய தேசத்தில் வாசம் சம்பவிக்கும், பற்பல வழிகளிலும் விரயாதிகமடைவான்.

(89) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி லக்கின பாவாதிபதி சுய க்ஷேத்திரத்தில் இருந்தால் ஜாதகன் தாய்க்குப் பிரசவ வேதனை அற்பமாயிருக்கும்.

(90) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி சந்திரன் செவ்வாயுடன் கூடி மேஷ ராசியிலிருந்தால் தாய்க்கு விசேஷ பிரசவ பாதையுண்டாகும், குரு பார்வையிருந்தால் ஜாதகன் தாய்க்குச் சுகமுண்டாகும்.

(91) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி லக்கின பாவாதிபதி ராகுவுடன் கூடியிருந்தால் ஜாதகன் பால ரோக பீடையும், மாந்த ஜுரம், ரிண பீடை முதலியனவும் அடைவன்.

(92) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி சுய க்ஷேத்திரத்தில் லக்கின பாவாதிபதியிருந்து வர்க்கோத்தமத்தில் மேஷத்தில் சந்திரனிருந்து சுக்கிரன் தன் உச்ச ராசியிலிருந்தால் ஜாதகன் சகல தோஷங்களும் விலகிச் சுகமடைவான்.

(93) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி சந்திரன் மேஷத்தில் சுப்பிரபாம்சத்திலும், தனுசு ராசியில் குரு குந்தாம்சத்திலுமிருந்து குமாராம்சத்தில் பிறந்தவன் எழுபத்தெட்டு வயதடைவன், இதில் மத்திய வயதில் தேக ஜாட்டியமடைவான், நாற்பதிலுமிப்படியே, அறுபத்திரண்டிலபமிருத்து பயமுண்டாகும், அக்காலம் மிருத்துயுஞ்ஜெயஜபம், ஆயுள் ஹோமம் முதலியன செய்தால் தீர்க்காயுளுடையவனுவான்.

(94) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி பிதுர் காரகனுகிய சூரியன் ஆரும் பாவத்திலிருந்தாலும், ஒன்பதாம் பாவாதிபதியாகிய ஷ சூரியன் சுமநாம்சத்திலிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் தீர்க்க வயதும், சகோதர சுகமுமடைவன், ஹரி சங்கர பக்தியுடையவன்.

(95) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி சூரியனிருக்கும் ராசிக்குப் பத்தாம் ராசியாதிபதி புத க்ஷேத்திரத்தில் வனுத்திருந்தால்

ஜாதகனுடைய தகப்பன் எழுத்து மூலம் ஜீவனமுடையவன், உத்தியோக ஜீவனமுடையவன், பாலியம் முதல் சுகமுடையவன், மத்திய வயதில் பிரசித்தியும், அரசாங்கப் பிரசித்தியும், அரசாங்க ஜனங்களாலடையப்படுதலுமுடையவன், பிரபு வசியமுடையவன், நீச்ச ராஜ்ஜியத்தில் நீச்ச பிரபு மூலமாக ஜீவனமுடையவன், உபாயந் தெரிந்தவன், கப்பல் வியாபாரமுடைய பிரபுவின் நட்புடையவன், வயோதிக வயதில் க்ஷேத்திர மூலம் ஜீவிப்பவன், நான்காந் திசையில் ஜாதகனுடைய தகப்பன் மரிப்பான்.

(96) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி சந்திரன் மேஷ ராசியில் வர்க்கோத்தமாம்சத்தில் இருந்து நான்காம் பாவாதிபதி சுய க்ஷேத்திரத்தில் இருந்தால் ஜாதகன் தாய் விசேஷ சுகமுடையவளாவள், நற்குணமுள்ளவளானாலும் புத்திரீபுத்திரருடையவள், வீட்டு வேலைகளில் சமர்த்தை, கர்வி, சுதந்திரமுடையவள், பிரியமாய் விவாதிப்பாள், செவ்வாயின் க்ஷேத்திரத்தில் சந்திரனிருந்தால் கொஞ்சம் ரோகமுடையவளாவள், ஜாதகனுடையநான்காந் திசையில் இவள் மரிப்பாள்.

(97) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி மூன்றும் பாவாரூடத்தில் சுயக்ஷேத்திரத்தில் செவ்வாயிருந்து சனி வர்க்கோத்தமாம்சத்திலிருந்தால் ஜாதகனுக்கு மூத்த ஒரு சகோதரனும், ஒரு இளைய சகோதரனுமிருப்பர், நான்கல்லது அதிகம் சகோதரிகளுமுடையவன், ஜாதகன் கறுப்பு நிறமுடையவன், கொஞ்சம் வாத தேகமுடையவன், நல்ல ரூபமுடையவன், சம அங்கங்களுடையவன், அறிவாளி, தீரன், சேர்க்கவும், கலைக்கவும் சாமர்த்தியமுடையவன், எழுதுவதில் சமர்த்தன்.

(98) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி குரு, ராகுவுடன் கூடியிருந்தால் ஜாதகன் துராலோசனை செய்பவன், பிறர்களின் இரகசியங்களை அறிபவன், சேர்க்கவும், கலைக்கவும் வல்லவன், விஷ்ணு, சிவ மதாச்சாரமுடையவன், தேவி சக்தியின் அருளுடையவன், பாலியம் முதல் சுகி, பதினாறு வயது முதல் பிரசித்தியும், இருபது வயது முதல் பிரபுவழியாக எழுத்து உத்தியோகமுமுடையவன், பத்திரிகை படிப்பவனாவான், இருபத்தைந்து வயது முதல் பிரபல யோகமுடையவனாவான்.

(99) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி சந்திரன் மேஷத்தில் வர்க்கோத்தமாம்சத்திலிருந்து செவ்வாயுடனும் கூடினால் மங்கள யோகப் பலனாக இருபத்தேழு வயதின் பிறகு தேசாதிபதி வழியாக எழுத்து வேலையில் நிபுணனாவான், முப்பது வயதிற்கு மேல் நல்ல யோகமும், பிரபல உத்தியோகமும், அனேக கிராமாதிகாரமும், வாகனம், கீர்த்தி முதலியனவும் உண்டாகும், நாற்பதிலும் விசேஷமுண்டாகும், யோகமுடையவன், உத்தரோத்தரமாக பிரபலமடை

வான், இருபதாயிரம் தனமும், ஐம்பதில் தனமும், சுகமும் அடைந்து ஆயுள் வரை இரண்டு வாகனமுடையவனாகி சுகமுடையவனாவன்.

(100) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி ஐந்தாம் பாவாதிபதி சுய க்ஷேத்திரத்திலிருந்து குரு ராகுவுடன் கூடியிருந்தால் ஜாதகனுக்கு தலைப் பிள்ளை இறந்துவிடும், பிறகு சாந்தி செய்தால் மூன்று புத்திரிகளிருப்பார்கள்.

(101) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி லக்கின பாவாதிபதி, எட்டாம் பாவாதி, பத்தாம் பாவாதிபதி இவர்கள் கேந்திர கோணங்களிலிருந்து இரண்டாம் பாவத்தில் சனியிருந்தால் ஜாதகனுக்கு மத்திமாயுளாக எழுபது அல்லது அறுபத்தொன்பதே உண்டாகும்.

(102) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி லக்கினத்தில் சந்திரன் ராகுவுடன் கூடியிருந்து நான்காம் பாவாதிபதி ஐந்தாம் பாவத்திலிருந்தால் ஜாதகன் தாய் குணவதி, பதி பக்தியுடையவள், முன் ஜென்ம பாபத்தால் விதவையாய்த் துக்கிப்பாள், ஜாதகனுடைய மூன்றாந் திசையில் மரிப்பாள்.

(103) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி சகோதர ஸ்தானத்திற்காரூடத்தில் ராகு இருந்தால் ஜாதகன் சகோதர ஹீனனாவன், சகோதரிகளுடையவன், இந்த சகோதரிகளில் ஒருத்தி விதவையாகிவிடுவாள்.

(104) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி ஐந்தாம் பாவத்தில் குரு இருந்தால் ஜாதகன் அற்ப சந்தானமடைவான்.

(105) ஜென்ம லக்கினம் தனுசு (சோதராம்சம்) ஆகி, லக்கின பாவாதிபதி துலா ராசியில் சூத்திர காலத்தில் இருந்தால் ஜாதகன் மகோததிப் பிராந்தியத்தில் ஜனனமும், வாசமும் அடைவான், சகோதரருடையவன்.

(106) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி லக்கின பாவாதிபதி பதினோராம் பாவத்திலும், எட்டாம் பாவாதிபதி தசம கேந்திரத்திலுமிருந்தால் ஜாதகன் பால ரோகம் நிவாரணமாகி அறுபத்தோறு வயதடைவான்.

(107) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி ஒன்பதாம் பாவாதிபதி பன்னிரண்டாம் பாவத்திலும், ஒன்பதாம் பாவத்தில் செவ்வாயுமிருந்தால் ஜாதகன் தகப்பன் அற்ப சுகி, சகோதரருடையவன், சிவ பக்த மதத்தையடைவான், சகோதரனால் சுகமடைவன், தேவப் பிராம்மண பக்தியுடையவன். க்ஷேத்திர கிராம விசாரணை செய்ப

வன், வீட்டு வேலைகளில் சமர்த்தன், சகோதரனால் உத்தியோகமும், தனமுமடைவான், தன விருத்தி செய்பவன், சாத்துமீகன், வியா பாரத்தால் தனந் தேடுவன், பின் சகோதரனால் சுகமுடையவன், ஜாதகனுடைய தகப்பன் ஜாதகனுடைய மூன்றாந் திசையில் மரண மடைவான்.

(108) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி நான்காம் பாவாதிபதி சுக்கிரனுடன் கூடி பதினோராவது பாவத்திலிருந்து சந்திரன் பத்தாவது பாவத்தில் இருந்தால் ஜாதகன் தாய் சுகமடைவாள், சுத்த முடையவள், பதி பக்தியுடையவள், கொஞ்சம் ரோகமுமுடையவள், முன் புண்ணியவசத்தினால் புத்திரீ புத்திரருடையவள், இவள் ஜாதகனுடைய நான்காந் திசையில் மரிப்பாள்.

(109) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி மூன்றாம் பாவம் செவ்வாயால் பார்க்கப்பட்டு செவ்வாய் கேந்திர திரிகோணத்திலிருந்தால் ஜாதகன் அற்ப சகோதரனுடையவன், ஒரு இளைய சகோதரனுடையவன், இரண்டு சகோதரிகளுமுடையவன்.

(110) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி குரு திரிம்சாம்சத்தில் ஒன்பதாம் பாவம் முதலாக வரிசையாக உள்ள கிரக மாலிகா யோகத்தில் பிறந்தவன், வெளுப்பு நிறமுடையவன், பாக்கிய காலத்தில் பிறந்தவன், அழகுடையவன், வாச்சாலகன், தெளிந்த முகமுங் கண்களுமுடையவன், பாலியம் முதல் சுகமுடையவன், சிவ பக்த மதத்தையடைபவன், தேவப் பிராம்மண விசுவாசமுடையவன், சிற்றப்பன் மூலம் விசேஷ சுகமுடையவன்.

(111) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி பதினோராவது பாவத்தில் சுக்கிரன் குருவுடன் கூடியிருந்தால் ஜாதகன் சிற்றப்பனால் விசேஷ சுகமுடையவன், இருபத்திரண்டு வயது வரை அவதியுடையவன், ஜன்ம திசையில் பால ரோகமுடையவன், சொற்ப வித்தையடைவான், இரண்டாந் திசையில் சிற்றப்பனால் சுகமடைவான், மூன்றாந் திசையின் மத்தியில் பிதுரு நஷ்டமுடையவனாவன், மூன்றாந் திசை வரையில் சிற்றப்பனால் சுகமடைவான், இருபது வயதில் விவாகமடைவான், விவாகத்தின் பிறகு சுயப் பிரபலமடைவான், சிலர் பத்தொன்பதாம் வயதிலேயே விவாகம் நடக்குமென்கின்றனர், ஜாதகனுடைய சிறிய தகப்பன் பிரபல வியாபார நஷ்டமுடையவன், சேர்த்து வைத்த திரவிய நஷ்டமுண்டாகும், ஜாதகனுடைய சிற்றப்பன் தன நஷ்டத்தால் ரோக பீதியடைந்து சீக்கிரத்தில் மரிப்பான், ஜாதகனுடைய சிற்றப்பன் புத்திரன் பிரபலமடைவான், ஜாதகனுடைய இருபத்தைந்து வயதில் பிரசித்தியடைவன், ஜாதகன் சிற்றப்பன் புத்திரனால் திரும்பவும் வியாபார பிரபலமுடையவன், இருபத்தேழு, முப்பது இந்த வயதில் நல்ல

யோகமடைவான். உத்தியோக மூலம் தனமடைவான், ஜாதகனுடைய சகோதரனும் பிரசித்தியடைவான்.

(112) ஜென்ம லக்கினம் தனுசு (உரகாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி கேந்திர ராசியிலிருந்து விப்பிர காலத்தில் இருந்தால் ஜாதகன் விப்பிர குலத்தில் சகோதர ஹீனனுகப் பிறப்பான்.

(113) ஜென்ம லக்கினம் தனுசு (உரகாம்சம் பூர்வ பாகம்) ஆகி லக்கின பாவத்தில் சூரியனுடன் புதன் கூடியிருந்து லக்கின பாவாதிபதி கேந்திர ராசியிலிருந்தால் மகா நதிப் பிராந்திய தேசத்தில் புண்ணிய க்ஷேத்திரத்தில், நகரத்தில் ஜனனமும், உத்தராம்சத்தில் அக்கிரகாரத்தில் சிறிய கிராமத்தில் ஜனனமுமடைவான், பிரசவ காலத்தில் ஜாதகன் தாய் அதிக பிரசவ வேதனையும், பூர்வ பாகத்தில் சொற்ப பிரசவ வேதனையும் அடைவாள், அப்போது குரு பார்த்தால் சூதி தோஷம் நீங்கி சுகமுண்டாகும்.

(114) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி லக்கின பாவாதிபதி கேந்திர பாவத்திலும், எட்டாம் பாவாதிபதி தன் உச்ச ராசியிலுமிருந்து பத்தாம் பாவாதிபதி லக்கின கேந்திரத்தில் இருந்தால் ஜாதகன் அறுபத்தைந்து வயது அடைவான், முப்பத்திரண்டு, நாற்பத்துமூன்று, அறுபது இந்த வயதுகளில் ஜாதகன்தேகபீடையடைவான், அக்காலம் சாஸ்திர விதிக் கிரமமாக மிருத்துஞ்ஜெயஜெபம், மகிஷி தானம் இவைகளைச் செய்தலாலும், எள்ளு தானத்தாலும் சுகமுண்டாகும்.

(115) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி சூரியன் லக்கின பாவத்தில் புதனுடன் கூடி குருவால் பார்க்கப்பட்டாலும், குருவுடன் கூடியிருந்தாலும் ஜாதகன் தகப்பன் சுகமுடையவன், மத்திம வயதும், விசேஷ விஷ்ணு பக்தியுமுடையவன், பாஞ்சராத்திர மதானுஷ்டானமுடையவன், உத்தியோக ஜீவனமுடையவன், தன் பிதாமிதமான பாக்கியமுடையவன், சாத்துவீக குணம் நிறம்பியவன், நியாயமான வழியில் ஜீவிப்பவன், பின் வயதில் விசேஷ சுகமுடையவன், எழுதுவதில் விசேஷ சுகமுடையவன், திரவிய சம்பாதனையில் சமர்த்தன்.

(116) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி தனுசு ராசியில் சூரியன் இருந்து குருவால் பார்க்கப்பட்டால் ஜாதகன் தகப்பன் தர்ம புத்தியுடையவன், வயோதிக வயதில் பிரசித்தியுடையவனுவான்.

(117) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி சந்திரன் ஆறுவது பாவத்திலிருந்து விஷாக்கியாம்சத்தில் இருந்தால் ஜாதகன் தாய் அற்ப சுக முடையவள், குணமும் பதிபக்தியு முடையவள், அன்னதானப் பிரிய முடையவளாயினும் ஜாதகனுடைய மூன்றுந்திசையில் சுமங்கலியாய் மரிப்பாள்.

(118) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி மூன்றும் பாவாதிபதி எட்டாம் பாவத்திலிருந்து செவ்வாய் பன்னிரண்டாம் பாவத்திலிருந்து சகோதராரூடத்தில் சுக்கிரன் இருந்தால் ஜாதகன் சகோதரரில்லாதவன், சகோதரிகளுடையவன், சகோதரி மத்திமாயுளுடையவள், பேத சகோதரன் காலங் கடந்து பிறந்தாலும் பேத சகோதரனும் சுகமடைவான், ஒரு பேத சகோதரி ஒருத்தி உண்டாவாள், சிலர் இரண்டு சகோதரிகளுண்டு, ஆனாலும் அவர்களுமிப்படியே யிருப்பார்களென எண்ணுகின்றனர்.

(119) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி அமலா யோகத்தில் குரு திரிம்சாம்சத்தில் பிறந்தவன் வெளுப்பு நிறமும் சமதேகமுமுடையவன், (பிராம்மண ஜன்மம்) அறிவாளி, பாலிய வயதில் தாயை இழந்துவிடுவான், மாற்றாந்தாயுடையவன், பிதுரு சுகம் அதிகமுடையவன், விஷ்ணு பக்தியும், மத்துவாச்சாரமுமுடையவன், கல்வி அறிவுடையவன், சாத்துவீகன், தேவப் பிராம்மண விசுவாசி, விசேஷ குரு பக்தியுடையவன், பாலிய வயதில் மிதமான புத்தியுடையவன், மத்திய வயதில் விசேஷ புத்தியுடையவன், நன்றாய் எழுதத் தெரிந்தவன், திரவியத்தைச் சம்பாதிப்பவன், மூன்று பாஷைகளில் வல்லவன், பதினேழு வயதுக்கு மேல் பிரசித்தமடைவான், இருபது வயதிற்கு மேல் சுயார்ஜிதம் சம்பாதிப்பான், அரசாங்க ஜன நேசமுடையவன், எழுதுவதால் நல்ல ஜீவனமுடையவன், மத்திய வயதில் உத்தியோக மூலம் பிரசித்தியடைவான், அதிருஷ்டசாலி, மேதாவி, இருபத்தைந்திலுமிப்படியே, இருபத்தேழு வயதிற்கு மேலும், முப்பதுக்கு மேலும் விசேஷ சுகமுடையவன், பிரபல உத்தியோகமுடையவன், நாற்பதாவது வயதில் பிரசித்தியும், யோகமும் ஏற்படும், ஐம்பதில் உத்தியோக சுகம் மிதமாகிவிடும், நல்ல திரேக சுகமடைவான்.

(120) ஜென்மலக்கினம் தனுசு (தனதாம்சம்) ஆகி மேஷ ராசியில் குரு இருந்து லக்கினத்தைப் பார்த்தாலும், அல்லது லக்கின பாவத்தில் குரு இருந்தாலும் ஜாதகன் தாய்க்குப் பிரசவத்தில் அற்ப வேதனையுண்டாகும்.

(121) ஜென்ம லக்கினம் தனுசு (தனதாம்சம் பூர்வ பாகம்) ஆகி லக்கின பாவாதிபதி சுக்கிரனுடன் கூடி ஐந்தாம் பாவத்தில் இருந்து எட்டாம் பாவாதிபதி சுய க்ஷேத்திரத்தில் இருந்து பத்தாம் பாவாதிபதியுடனும் கூடியிருந்தால் ஜாதகன் சகல தோஷங்களும் விலகி அறுபத்தினன்கு வயதடைவான், உத்தர பாகத்தில் பிறந்தவன் எழுபது வயதடைவான், முப்பது வயதுக்கு மேல் மிக்க கஷ்டமும், நாற்பத்தினன்கிலும் கஷ்டமும், ஐம்பத்தாறில் மூத்திர ரோகமும், சாந்தியால் சாந்தியும் அடைவான், மிருத்தியுஞ் ஜெயஜபமும், பதினயிர நாமத்தால் சிவார்ச்சனையும் செய்தாலும்,

அல்லது சிவ லிங்கப் பிரதிஷ்டை செய்தாலும் அபமிருத்து நீங்கி சுகமடைவான்.

(122) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி சூரியன் புதனுடன் கூடி மிதுன ராசியிலிருந்தால் ஜாதகன் தகப்பன் விசேஷ சுகமுடையவன், சகோதர ஹீனன், சிவ பக்த மதத்தையடைந்தவன், வியாபார ஜீவனமுடையவன், திரவிய சம்பாதனையில் சயர்த்தன், சொர்ண வியாபார ஜீவனமுடையவன், வேறு வழிகளாலும் தனந் தேடுபவன், பாலியத்தில் அற்ப சுகி, மத்திய வயதில் வெகு சுகமடைபவன், வியாபாரத்தில் நிபுணன், சுய ஜனங்களில் பிரசித்தியுடையவன், சைவ ஆகம புராண(ங்களறிபவன்) தத்துவங்களை அறிந்து தத்துவங்களைப் போதிப்பவன், சிவ தர்ம விசாரணையுடையவன், ஜீரணோத்தாரணம் முதலான தர்மமறிபவன்; வயோதிக வயதில் தர்ம சங்கிரகமுடையவனுவன்.

(123) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி ஒன்பதாம் பாவத்தில் சனியிருந்து ராகு கேதுக்களுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் முன் வயதில் வழி வழியாக யோக பங்கமுடையவன், தன் புத்திரனுடைய அதிருஷ்டங்காரணமாக வயோதிக வயதில் தனமுடையவனுவன், பற்பல கிராமங்களில் பிரசித்தியுடையவன், நானுவழிகளிலும் தன வரவுடையவன், தேசாந்தரங்களில் சஞ்சாரமுடையவன், சஞ்சல புத்தியுடையவன், நீதியுடையவன், வயோதிக வயதில் புத்திர யோகமுடையவன், ஜாதகனுடைய மூன்றுந் திசையில் ஜாதகனுடைய தகப்பன் மரணமடைந்துவிடுவான்.

(124) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி சந்திரன் சுய க்ஷேத்திரத்தில் இருந்து நான்காம் பாவாதிபதி மேஷ ராசியில் சுக்கிரனுடன் கூடியிருந்தால் ஜாதகன் தாய் சுகமுடையவளாவள், பொறுமையுடையவள், புகழுடையவள், நற்குணவதி, பாக்கிய விர்த்தியுடையவள், ஜாதகனுடைய நான்காந் திசையில் மரிப்பாள்.

(125) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி செவ்வாய் ஆறும் பாவத்திலிருந்து லக்கினத்திற்கு மூன்றும் பாவத்தில் கேது இருந்தால் ஜாதகன் சகோதர சுகமில்லாதவன், இரண்டு சகோதரிகளுடையவன், இவர்களில் ஒருத்தி விதவையாய்விடுவாள், மற்ற ஒருத்தி நல்ல புத்திரீபுத்திரருடையவளாகி மங்கிலியத்துடன் வாழ்பவள் ஆவாள்.

(126) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி கேஸரீ யோகத்தில் (கடகத்தில் சந்திரனும், மேஷத்தில் குருவுமுள்ள கேஸரீ யோகத்தில்) குரு திரிம்சாம்சத்தில் பிறந்தவன், வெளுப்பு நிறமுடையவன், பித்த சுபாவமுடையவன், கொஞ்சம் பித்த விகாரமுடையவன்.

(127) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி லக்கின பாவத்தில் சூரியனிருந்தாலும், பார்த்தாலும் ஜாதகன் சூட்டுத் தேகமுடையவன், அறிவாளி, அதிருஷ்டசாலி, மேதாவி, ரூப லக்ஷணமுடையவன், நற்பெயருடையவன், அழகிய முகமுங்கண்களும் பொருந்தியவன், எழுத்து எழுதுவதில் சமர்த்தன், மணி ரத்ந பரீக்ஷை செய்பவன், வாச்சாலகன், சேர்க்கவும், கலைக்கவும் சமர்த்துடையவன், சாதுரிய யுக்தியுடையவன், துஷ்டருக்குத் துஷ்டன், ஸ்ரீமான், அண்டினோரிடம் அன்புடையவன், தெய்வ அனுக்கிரக யோகமுடையவன், சொர்ணம், வஸ்திரம் முதலான வியாபாரம் செய்பவன்.

(128) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி தர்ம கர்மாதிபதிகளாகிய சூரியனும், புதனும் கூடி ஏழாம் பாவத்திலிருந்தால் ஜாதகன் தானே பிரபு ஆவன், தர்மம் செய்பவன்.

(129) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி குருவும், சுக்கிரனும் கூடி (மேஷ ராசியில்) ஐந்தாம் பாவத்திலிருந்தால் ஜாதகன் அரசனாவன், அல்லது அரசனுக்குச் சமானமான தனமுடையவனாவன், பதினாறு வயது முதல் பிரசித்தியுடையவன், இருபது வயது முதல் விசேஷமுடையவன், தகப்பனால் சுகமும், இருபத்தைந்து வயதிற்கு மேல் சொர்ண வியாபாரத்தால் தனமும், இருபத்தேழு வயதிற்கு மேல் பாக்கியமும், தனக்குச் சம ஜனங்களின் சேர்க்கையும், வைஷ்ணவப் பிரபுக்களின் சினேகமும், ஆந்திரப் பிரபுவால் சுகமும், தீபாந்தர வஸ்துவால் தன வரவும், வெள்ளை ரத்னங்களால் தன வரவுமுடையவன், முப்பது வயதிற்கு மேல் நல்ல பாக்கியமும், பற்பல வழிகளில் தன வரவும், தேவாலயாதி தர்மமும், அதனால் அதிக செலவும், (தைவத்தின் தனம்) புதையலால் தனமும் அடைவான், வியாபார விருத்தியும், ஒவ்வொரு நாளும் முன்னூறு தனம் வியாபாரத்தில் லாபமும், தினந்தினம் தர்ம மூலத்தால் தன விரயமும், நரவாகனம் முதலிய வாகனாதி யோகமும், லோகத்தில் பிரசித்த பாக்கியமும், நாற்பதில் இப்படியே யோகமும், நாற்பத்தாறு வயது முதல் அனேக தர்ம ரக்ஷணங்களும், ஆயுள் வரை பாக்கியமும், ஆயுள் வரை தன சம்பாதனையும், குபேரனுக்குச் சம வாழ்வுமுடையவனாக வாழ்வன், அரசனுக்குச் சம புகமுடையவனாவன்.

130) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி இரண்டாம் பாவாதிபதி ஒன்பதாம் பாவத்திலும், லக்கின பாவாதிபதி ஐந்தாம் பாவத்திலுமிருந்து ஜன்ம லக்கின பாவாதிபதி சுக்கிரனுடன் கூடியிருந்தாலும், ஒன்பது பத்துக்குடையவர்கள் கூடி ஏழாம் பாவத்தில் கேந்திரத்திலிருந்தாலும் ஜாதகன் தனமுடையவனாகவும், தர்ம விருத்தியுடையவனாகவுமாவான்.

(131) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி ஏழாம் பாவாதிபதி சுய க்ஷேத்திரத்தில் இருந்து சூரியனுடன் கூடியிருந்து சுக்கிரன்

கேந்திர திரிகோணத்தில் இருந்தால் ஜாதகன் இரண்டு தாரமுடையவன், மூத்த மனைவி புத்திரரில்லாதவள், இரண்டாம் மனைவி புகழுடையவள், வமிச பாக்கிய விருத்தியுடையவள், ஜாதகன் வியாபாரத்தில் தனமடைவான், ஆயினும் அவை வழி வழியாய் குறைந்து விடும்.

(132) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி குருவும், சுக்கிரனும் கூடியிருந்தால் ஜாதகன் அரசனுக்குச் சம புகழடைவான்.

(133) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி லக்கினத்திற்கு மூன்றும்பாவத்தில் கேதுஇருந்து இரண்டாம்பாவாதிபதியால்ஷை கேது பார்க்கப்பட்டாலும், ஷை பாவாதிபதி கேதுவுடன் கூடியிருந்தாலும் ஜாதகன் அவர் திசையில் விசேஷ தனமும், தன விரயமும் அடைவன், தேவாலயம் முதலியதர்மமூலமும், புண்ணியதீர்த்தாதிளாலும், தேவ தெரிசனையாலும் விரயமுடையவன், ஷை கேது திசை வந்தால் அத்திசையில் பிதுரரிஷ்டமும், திசை மத்தியில் தேக ஜாட்டியமும், அக்கிரகாரப் பிரதிஷ்டையும், தடாக உத்தியாஞதி தர்மமும் செய்வான்.

(134) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி ஒன்பதாம் பாவாதிபதியாவது தன காரகனுவது மித்திரக் கிரகத்துடன் கூடி தன் உச்சத்தில் அல்லது சுய க்ஷேத்திரத்தில் இருந்தால் ஜாதகன் அனேக கிராமங்களுடையவன், தடாகங்கள், கோபுரங்கள், தர்மங்கள், யாகங்கள், சஜ்ஜனர் சேர்க்கை, சற்புத்திரர் முதலிய உடையவனுகி வாழ்வான்.

(135) ஜென்ம லக்கினம் தனுசு (சிவதாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி இரண்டாம் பாவத்தில் சூத்திர காலத்தில் இருந்தால் ஜாதகன் சூத்திர ஜன்மம், பெரிய நதிப் பிராந்தியத்தில் நகரத்தில் தேவாலயததுடன் கூடிய இடத்தில் சகோதரருடையவனுக நல்ல அறிவாளியாய் ஜனனமும், உத்தர பாகத்தில் பெரிய கிராமத்தில் ஜனனமுமடைவான்.

(136) ஜென்ம லக்கினம் தனுசு (சிவதாம்சம் பூர்வ பாகம்) ஆகி லக்கினத்திற்குப் பன்னிரண்டில் ராகு இருந்து செவ்வாயும் அந்த ராகுவுடன் கூடியிருந்து லக்கினம் சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகன் தாய்க்குப் பிரசவத்தில் அதிக வேதனையும், உத்தர பாகத்தில் அதிக வேதனையும், சூதி தோஷமும், பூர்வ பாக ஜாதகனுக்கு கொஞ்சம் பால ரோக பீடையும் உண்டாகும்.

(137) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி லக்கின பாவாதிபதி இரண்டாம் பாவத்திலும், எட்டாம் பாவாதிபதி ஒன்பதாம் பாவத்திலும், பத்தாம் பாவாதிபதி சுய க்ஷேத்திரத்திலுமிருந்தால் ஜாத

கன் சகல தோஷங்களும் விலகி அறுபத்திரண்டு வயதடைவான், முப்பத்தாறு. நாற்பத்திமூன்று, ஐம்பத்திரண்டு இந்த வயதுகளில் பீடையடைவான், அக்காலங்களில் சாந்தி செய்தால் சுகமுண் டாகும்.

(138) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி சூரியன் புதனுடன் கூடி கேந்திரத்தில் (தசமகேந்திரத்தில்) இருந்து ஒன்பதாம் பாவாதி பதியாக சூரியனும் ஆவதால் ஜாதகன் தகப்பன் சுகமடைவான், சகோதரனுடையவன், சகோதர சுகமுடையவன், விசேஷ சிவ பக்தியுடையவன், சிவ பக்த மதத்தையடைந்தவன், தேவப் பிராம் மண விசுவாசி, கல்வி அறிவுடைய விவேகி, சைவ ஆகம சாஸ்திர புராணங்களில் நல்ல ஞானமுடையவன், பாலியத்தில் அற்ப சுகி, மத்திய வயதில் தனமும், விசேஷ சுகமுமுடையவன், சொர்ண ரத்ந விக்கிரயம் செய்பவன், ஜல வஸ்துக்களால் மத்திய வயதில் தன சம்பாதனையுடையவன், மித்திரர் மூலமாக யோகமடைவன், சுயார்ஜித யோகமுடையவன், சகோதரனால் சம்பாதனையுடைய வன், மத்திய வயதில் கீர்த்தியும், மத்தியத்தினந்தியத்தில் அற்ப சுகமும், சத்துரு விருத்தியும், கொஞ்சம் விரயமும், வயோதிக வய தில் தன லாபமும், நற்செய்கை, ஆச்சாரமிவையுமுடையவனாகி மறு தாரத்தால் யோகமுடையவனாகவும், புத்திர மூலம் யோகமும் அடைந்து ஜாதகனுடைய மூன்றாந்திசையில் மரிப்பான்.

(139) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி சந்திரன் கேந்திர திரி கோணத்திலிருந்து நான்காம் பாவாதிபதி இரண்டாம் பாவத்தில் இருந்தால் ஜாதகன் தாய் சுகமுடையவள், குணமுடையவள், வமிச விருத்தியுடையவள், முன் பாபவசத்தால் இறந்த சந்ததி களைப் பெறுபவள், ஜாதகனுடைய நான்காந் திசையில் மரிப்பாள்.

(140) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி மூன்றாம் பாவாதிபதி தன் உச்ச ராசியில் இருந்து செவ்வாய் ராகுவுடன் கூடி பன்னி ரண்டாம் பாவத்தில் இருந்தால் ஜாதகன் பின் சகோதரருடைய வன், முன் சகோதரமில்லாதவன்.

(141) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி பன்னிரண்டாம் பாவத் தில் செவ்வாயிருந்து ராகு, கேதுக்களுடன் கூடியிருந்தால் ஜாத கன் சகோதரர் ஒருவரல்லது இருவர் இறந்துவிடுவார்கள், ஜாத கன் ஆயுளுடைய ஒரு இளைய சகோதரனுடன் இரண்டு சகோதரி களுமுடையவன், மற்ற சகோதரங்கள் ஆண், பெண் ஆக எவ்வ ளவு பேர்கள் பிறந்தாலும் இவர்கள் தவிர மீதமானவர்கள் மரித்து விடுவார்கள்.

(142) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி பாஸ்கர யோகத்தில் குரு திரிம்சாம்சத்தில் பிறந்தவன், வெளுப்பு நிறமும், சம தேகமு

முடையவன், பித்த சுபாவமுடையவன், கொஞ்சம் வாயு பீடையு டையவன், நல்ல ரூப குணமுடையவன், கல்வியறிவுடையவன், விவேகி, பாலியம் முதல் சௌக்கியமுடையவன், பிதுரு, மாதுரு சுகமுடையவன்.

(143) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி இரண்டாம் பாவத்தில் குரு இருந்தால் ஜாதகன் வாச்சாலகன், க்ஷேம புத்தியுடையவன், பாலியத்தில் மந்த மதியுடையவன், சாது,யவ்வன வயதில் தெளிந்த புத்தியுடையவன், சிவ பக்த மதத்தையடைவான், தேவப் பிராம் மண பக்தியுடையவன், எழுதுவதில் சமர்த்தன், சுய வித்தையில் நிபுணன், பிதுரார்ஜிதமும், சுயார்ஜிதமும் உடையவன், மணி ரத்ந பரீக்ஷை வியாபாரம் செய்து ஜீவிப்பவன், பதினாறு வயது முதல் பிரசித்தியும், இருபது வயது முதல் தன சம்பாதனையும் உடைய வன், சொர்ண வியாபார சுகமுடையவன், இருபத்தைந்து வயது முதல் நல்ல யோகமும், முப்பது வயது முதல் பாக்கியமும், நர வாஹனாதி பாக்கியமும், தன் தகப்பனைவிட மேலான யோகமும், தைவ யோகத்தால் தனமுமடைவான்.

(144) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி ஒன்பது பத்துக்குடைய வர்கள் தசமத்திலும், இரண்டு பதினொன்றுக்குடையவர்கள் பதி னொன்றிலுமிருந்தால் ஜாதகன் ஆயுள் எது வரையுள்ளவனோ அது வரையில் தனம் சம்பாதிப்பான், கீர்த்தியுடையவன், விசேஷதனம் சம்பாதிப்பன், ஸ்ரீமானுவான்.

(145) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி ஐந்தாம் பாவாதிபதி யுடன் கூடி ஆறுந் தாராதிபதியாகிய ராகு பன்னிரண்டாம் பாவத்திலிருந்தால் அவர் திசையில் விசேஷ யோகமுண்டாகும், தேசாந்தர தனமடைவான், தீபாந்தரங்களிலிருந்து தன வரவுடை யவனுவன், புத்திர வர்க்கத்தில் சுபமுடையவன், திசை மத்தியில் மகா தனம் சம்பாதிப்பான், திசையின் கடைசியில் தர்ம சித்தி யடைவான், தடாகம், உத்தியானமிவற்றிற்குத் தர்மம் செய்வன், பிரபுவுக்குச் சமமாக புகழடைவான், தன் ஜனங்களில் யோகமடை வான், ஜாதகன் புத்திரன் பிரபலமடைந்து அவனும் தனம் சம்பா திப்பான், வயோதிக வயதில் தர்ம சித்தியுடையவன்.

(146) ஜென்ம லக்கினம் தனுசு (கோகிலாம்சம்) ஆகி விப்ர காலத்தில் சுய க்ஷேத்திரத்தில் லக்கின பாவாதிபதி நான்காம் பாவத்திலிருந்தால் ஜாதகன் ஸீமந்த கர்ப்பத்தில் அல்லது இரண் டாவது கெற்பத்தில் மூத்த, இளைய சகோதரமில்லாதவனுக ஜனிப் பான், பேத சகோதரனுடையவன்.

(147) ஜென்ம லக்கினம் தனுசு (கோகிலாம்சம்) ஆகி பூர்வ பாகத்தில் லக்கினத்திற்கு நான்காம் பாவாதிபதி நான்காம் பாவத்தில் வர்க்கோத்தமாம்சத்திலிருந்து, ராகு கேதுக்களுடன் கூடியிருந்தாலும், ராகு கேதுக்களால் பார்க்கப்பட்டிருந்தாலும் ஜாதகன் புண்ணிய க்ஷேத்திரத்தில் அல்லது பெரிய கிராமத்தில் மகாநதிப் பிராந்திய தேசத்தில் ஜனனமும், வாசமும், உத்தராம்சத்தில் குக்கிராமத்தில் வாசமும் அடைவான்.

(148) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி லக்கினத்திற்காவது சந்திர லக்கினத்திற்காவது ஐந்தாமிடத்தில் பாபக் கிரகமிருந்து, சந்திரன் விஷாக்கியாம்சத்தில் இருந்தால் ஜாதகன் தாய் மிக்க பயமுடையவளாவள், ஷை சந்திரனுக்கிரண்டாமிடத்தில் சனியிருந்தால் ஜாதகனுடைய தாய் ஜாதகனுக்குப் பாலியத்திலேயே மரிப்பாள், ஜாதகன் வளர்ப்புத் தாயால் சுகமடைவன், கொஞ்சம் கொஞ்சம் பால தோஷமடைவான்.

(149) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி லக்கின பாவாதிபதி நான்காம் பாவத்தில் சுய க்ஷேத்திரத்திலும், எட்டாம் பாவாதிபதி பதினோராம் பாவத்திலும், சனி பன்னிரண்டாம் பாவத்தில் சிரஜீவாம்சத்திலுமிருந்தால் ஜாதகன் சகல தோஷங்களும் விலகி சுகமடைவான், அப்போது சுக்கிரன் இரண்டாம் பாவத்தில் குந்தளாம்சத்திலிருந்தால் ஜாதகன் எழுபது வயதிற்கதிக்மாயடைவன், இருபத்தெட்டு, முப்பத்தேழு, ஐம்பத்தாறு இந்த வயதுகளில் பீடையும், வாத ரோகமும் உண்டாகும், அக்காலங்களில் மிருத்துஞ்ஜெய ஜெபமும், ஆயுள் ஹோமமும் செய்ய வேண்டும், அப்படிச் செய்தால் ஜாதகன் சுகமடைவான்.

(150) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி ஒன்பதாம் பாவாதிபதியாகிய சூரியன் சுக்கிரனுடன் கூடி இரண்டாம் பாவத்தில் இருந்தால் ஜாதகன் தகப்பன் தீர்க்காயுளடைவான், சகோதரருடையவன், ஹரி சங்கர பக்தியுடையவன், வேத சாஸ்திர புராணமறிந்தவன், நியாயவாதி, குருப் பிரியன்.

(151) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி சூரியன் சனியின் க்ஷேத்திரத்தில் இருந்தால் ஜாதகன் தகப்பன் சேர்க்கவும், கலைக்கவும் பிரியன், பாலியத்தில் அற்ப சுகமுடையவன், மத்திய வயதில் யோகமுடையவன், நீச்ச ராஜ்ஜியத்தில் பிராம்மணனால் நல்ல பாக்கியமடைவான், நீச்சப் பிரபு வழியாக சர்வாதிகாரியாவன், சர்வாதிகார சுதந்திரமுமுடையவன், நர வாகனம், ஆபரணம் முதலியன உடையவனாகி லோகத்தில் பிரசித்த கீர்த்தியுடையவனாவன், வெகு க்ஷேத்திரம், தனம், சம்பாதித்து வயோதிகத்தில் சம்பத்தடைவான், ஜாதகனுடைய மூன்றாந் திசையில் தகப்பன் மரித்துவிடுவன்.

(152) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி சந்திரன் பதினேராம் பாவத்திலிருந்து விஷாக்கியாம்சத்தையடைந்திருந்தால் ஜாதகன் தாய் சுகமில்லாதவன், மாற்றுந்தாயுடையவன், வளர்ப்புத் தாய் சுகமுடையவன்.

(153) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி செவ்வாய் மூன்றும் பாவத்தில் இருந்து லக்கினத்திற்குப் பன்னிரண்டாம் பாவத்தில் சனியிருந்தால் ஜாதகன் சகோதரனில்லாதவன்.

(154) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி மூன்றும் பாவத்தில் புதனிருந்தால் ஜாதகன் பேத சகோதரனுடையவன், இரண்டு பேத சகோதரரும், இரண்டு பேத சகோதரிகளுமுடையவன்.

(155) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி துலா ராசியில் சந்திரனும், மீன ராசியில் குருவும் இருக்கும், சகட யோகத்தில் குரு திரிம்சாம்சத்தில் ஜனித்தவன், வெளுப்பு நிறமுடையவன், பித்த தேகி, அதிருஷ்டசாலி, மேதாவி, பிதுரார்ஜித பாக்கியமுடையவன்.

(156) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி வித்தியா ஸ்தானுதிபதியாகிய குரு நான்காம் பாவத்தில் வர்க்கோத்தமத்திலிருந்தால் ஜாதகன் கல்வியும், தெளிந்த அறிவுமுடையவன், சாஸ்திர ஞானமுடையவன், ஆசையுடையவன், காவிய சாஸ்திரப் பிரியன், திரவிய சம்பாதனையில் சமர்த்தன், நாடக அலங்கார காவியங்களில் ஞானமுடையவன், கற்றவற்றை பிரியமாக அறிந்து சொல்ல வல்லவன், பாலியம் முதல் கீர்த்தியுடையவன், பூமி, ரத்நம், தனம் முதலியன உடையவன்.

(157) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி இரண்டாம் பாவத்தில் சுக்கிரன் வர்க்கோத்தமத்தில் இருந்தால் ஜாதகன் வாகனம் சம்பாதிப்பான், பல்லக்கு முதலிய வாகனமுடையவன், மூன்று வாகன யோகமுடையவனுவான்.

(158) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி ஏழாம் பாவாதிபதி செவ்வாயுடன் கூடி மூன்றும் பாவத்திலிருந்து சுக்கிரன் சூரியனுடன் கூடி இரண்டாம் பாவத்தில் இருந்தால் ஜாதகன் மறு தாரமுடையவன், ஜாதகனுடைய மூத்த மனைவி சந்ததியில்லாதவள்.

(159) ஜென்ம லக்கினம் தனுசு (பாசாம்சம்) ஆகி பூர்வபாகத்தில் லக்கின பாவத்தைச் சூரியன் பார்த்தாலும், சூரியன் லக்கின பாவத்தில் இருந்தாலும் நான்காம் பாவத்தில் சனியிருந்தால் ஜாதகன் தாய்க்குப் பிரசவத்தில் அதிக வேதனையும், உத்தராம்சத்தில் அற்ப வேதனையுமுண்டாகும்.

(160) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி லக்கின பாவாதிபதி நான்காங்கேந்திரத்திலும், எட்டாம் பாவாதிபதி ஸ்திர (கும்ப)

ராசியிலும், சுக்கிரன் லக்கின கேந்திரத்திலுமிருந்தால் ஜாதகன் சகல தோஷங்களும் விலகி அறுபத்தெட்டு வயது அடைவான், முப்பத்திரண்டு, ஐம்பத்திமூன்று இந்த வயதுகளில் பீடையும், அறுபதில் அபமிருத்துவும் அடைவான், அக்காலங்களில் சாந்தி செய்தால் சுகமடைவான்.

(161) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி சூரியன் லக்கின பாவத்தில் கலுஷாம்சத்தில் இருந்தாலும் ஜாதகனுடைய தகப்பன் அற்ப சுகமுடையவன், சிவ பக்தியுடையவன், தேவப் பிராம்மண பக்தியுடையவன், அற்ப கல்வியும், அற்ப கீர்த்தியுமுடையவன், ஆச்சாரமுமிப்படியே, சேவகத் தொழில் செய்பவன், விலக்கப்பட்டவனுவன், அப்போதப்போது சொற்ப சொற்ப தனமடைவன், தைவ யோகத்தினுல் சுகமடைவன், ரேகா யோகமுடையவன், வயோதிக வயதில் புத்திர யோகமுடையவன், ஜாதகனுடைய இரண்டாந்திசையில் ஜாதகனுடைய தகப்பன் மரிப்பான்.

(162) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி நான்காம் பாவாதிபதியாகிய குரு பத்தாம் பாவத்தில் இருந்து சனியால் பார்க்கப்பட்டு சந்திரன் மூன்றும் பாவத்தில் இருந்தால் ஜாதகன் தாய் சுகமடைவாள், வமிச விருத்தியுடையவள், இரண்டாந்திசையில் ஜாதகனுடைய தாய் மரணமடைவாள்.

(163) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி நான்காம் பாவத்தில் மூன்றும் பாவாதிபதியிருந்து பதினோராம் பாவாதிபதி லக்கின கேந்திரத்தில் (லக்கின பாவத்தில்) இருந்தால் ஜாதகன் இரண்டு மூத்த சகோதாருடையவன், பின் சகோதரனில் லாதவன், வெகு ஆயுளுள்ள ஒரு சகோதரியுமுடையவன், ஜாதகனுடைய சகோதரரில் எல்லோருக்கும் மூத்த சகோதரன் கல்வியும், சுகமும், அரசாங்கப் பிரசித்தியும், நீச்ச மூலம் சுகமும், பிரபல உத்தியோகமும், கப்பல் வியாபாரப் பிரபுவின் சினேகமும், அதனுல் பிரமுகனுகவும் ஆவன், சேர்க்கவும், கலைக்கவும் வல்லவன், மத்திய அந்திய வயதில் யோகமும், சுகமுமுடையவன், மற்ற ஒரு சகோதரன் அற்ப சுகியாவன்.

(164) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி பதினோராம் பாவத்தில் ராகு இருந்தால் ஜாதகனுடைய மூத்த சகோதரன் துர்ப்பல தேகமுடையவன், ரோகியாவன்.

(165) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி அமாத்திய யோக ஜாதகத்தில் குஜ திரிம்சாம்சத்தில் பிறந்தவன் கறுப்பு நிறமுடையவன், சம உயரமுடையவன், பித்த தேகமுடையவன், சூட்டுத் தேகி, ரூபமுடையவன், சம அங்கங்களுடையவன், அறிவாளி, கல்வியறிவுடையவன், எழுதுவதில் சமர்த்தன், தேவப் பிராம்மண பக்தியுடையவன்.

(166) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி சுக்கிரன் லக்கின கேந்திரத்தில் இருந்தால் ஜாதகன் காமி, விஷயலோலன், பரஸ்திரீ சங்கமமுடையவன், துராலோசனை செய்பவன், திரவியம் சம்பாதிப்பவன், சமர்த்தன், அளவாய்ப் புசிப்பவன், இரகசிய மனமுடையவன், காமி, பிதுரார்ஜிதமில்லாதவன், மூத்த சகோதரனால் சுகமடைவான், சுயார்ஜிதமுடையவன், மூத்தவனால் அதிக சுகமடைவன், பாலியத்தில் அற்ப சுகி, இருபது வயது முதல் தன சம்பாதனையடைவன், மூத்த சகோதரன் மூலமாக எழுத்து உத்தியோகம் அடைவன், இருபத்திரண்டு வயதில் சுயப் பிரபலமடைவான், நீச்சப் பிரபுவால் எழுதும் உத்தியோகமடைவான், இருபத்தாறு, இருபத்தேழு இந்த வயதுகளில் நல்ல உத்தியோகமும், கீர்த்தியுமடைபவன், முப்பது வயது முதல் விசேஷ சுகமடைவன், முப்பத்தைந்திலும் யோகமடைவன், முப்பத்தாறில் யோக பங்கமுடையவன், நாற்பது வயது முதல் ஆயுசு வரை யோகமுடையவனவான்.

(167) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி நான்காந் தாராதிபதியாகிய புதன் இரண்டாம் பாவத்தில் செவ்வாயுடன் கூடியிருந்து அவர் திசை வந்தால் ஜாதகன் அந்த திசையில் க்ஷேத்திர விருத்தியும், புத்திரனால் சுகமுமடைவான்.

(168) ஜென்ம லக்கினம் தனுசு (குந்தாம்சம் பூர்வ பாகம்) ஆகி, சனி லக்கின கேந்திரத்திலிருந்தால் ஜாதகன் தாய் பிரசவத்தில் அதிக வேதனையடைவள், உத்தர பாகத்தில் அற்ப வேதனையே யடைவள், ஜாதகன் கொடி சுற்றிப் பிறப்பன், பூர்வ பாக ஜாதகனுக்கு கொடியினால் சுற்றப்படுதலுண்டாகாது, அப்போது சந்திரன் நீச்சாம்சத்தில் இருந்தால் ஜாதகன் தாய் பீடையடைவாள், அப்போது லக்கினத்தைக் குரு பார்த்தால் சுகமுண்டாகும், லக்கின பாவத்தில் சனியிருந்தால் ஜாதகனுக்கு மாந்த ஜுரம், ரிணம், வைசூரி முதலியவைகளால் பீடையுண்டாகும்.

(169) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி லக்கின பாவாதிபதி ஏழாம் பாவத்தில் இருந்து எட்டாம் பாவாதிபதி நான்காங் கேந்திரத்தில் இருந்து பத்தாம் பாவாதிபதி சுய க்ஷேத்திரத்தில் இருந்தால் ஜாதகன் சகல தோஷங்களும் விலகி அறுபத்திமூன்று வயதடைவன், முப்பத்திரண்டு, நாற்பது, இந்த வயதுகளில் தேக பீடையும், ஐம்பத்தாறில் மூத்திர கிருச்சின ரோகமும் அடைவான், அக்காலங்களில் சாந்தி செய்தால் சாந்தி உண்டாகும்.

(170) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி ஒன்பதாம் பாவாதிபதியாகிய சூரியன் குருவுடன் கூடி ஏழாம் பாவத்திலிருந்தால் ஜாதகன் தகப்பன் சுகமடைவான், சிவ பக்தி, தேவப் பிராம்மண பக்தி முதலியன உடையவன், கல்வியறிவுடைய விவேகி, எழுதுவ

தில் சமர்த்தன், உத்தியோக ஜீவனமுடையவன், சேர்க்கவும், கலைக் கவும் வல்லவன், அரசாங்க ஜனங்களாலடையப்படுபவன், உத்தி யோக சதுரன், சுகி, பாலியத்திலற்ப சுகி, மத்தியத்தில்யோகமும், வயோதிக வயதில் அதிக சுகமுமடைந்து, ஜாதகனுடைய நான்காந் திசையில் ஜாதகனுடைய தகப்பன் மரணமடைவான்.

(171) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி நான்காம் பாவாதிபதி ஏழாம் பாவத்தில் இருந்து சந்திரன் குருவின் க்ஷேத்திரமாகிய மீன ராசியில் இருந்தால் ஜாதகன் தாய் விசேஷ சுகமுடையவள், வமிச விருத்தியுடையவள், ஜாதகனுடைய நான்காந் திசையில் மரிப்பாள்.

(172) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி மூன்றும் பாவத்தில் கேது இருந்தால் ஜாதகனுக்கு ஒரு இளைய சகோதரனும், இரண் டல்லது மூன்று சகோதரிகளும் ஆயுளுடனிருப்பார்கள்.

(173) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி அதியோக ஜாதகத்தில் குருத் திரிம்சாம்சத்தில் பிறந்தவன் வெளுப்பு நிறமுடையவன், சம உயரமுடையவன், ரூப லக்ஷணமுடையவன், கல்வியுடைய வன், தெளிந்த அறிவுடையவன், அதிருஷ்டசாலி, மேதாவி, பாலிய முதல் சுகி, தாய் தகப்பன் சுகமுடையவன், பதினாறு வயது முதல் பிரசித்தியும், எழுதும் உத்தியோகமும், இருபது முதல் எழுத்து உத்தியோக பிரபலமும், அற்ப கிராமாதிகாரமும், அர சாங்கப் பிரசித்தியும், முப்பது வயது முதல் பிரபல உத்தியோக பாக்கியமும் அடைவன்.

(174) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி இரண்டாந் தாராதி பதியாகிய புதன் சுயக்ஷேத்திரத்தில் குருவுடன் கூடி ஏழாம் பாவத் தில் இருந்தால் அந்த திசையில் ஜாதகன் தகப்பன் பிரபல உத்தி யோகமும், சுகமும் அடைவான், ஜாதகன் விவாகமடைவன், ஜாத கன் மனைவி பாக்கிய வமிசத்திற் பிறந்தவள், ரூப லக்ஷணமுடைய வள், கணவன் மனம் போல் நடப்பவள், ஷ புதனுடன் சேர்ந்த குரு புத்தி முதல் சுயமாகப் பிரபலமடைவான், ஷ திசையில் பிற் பாதியில் அற்ப கிராமாதிகாரமும் பிறகு சில கிராமாதிகாரமும், விசேஷ யோகமும் படிப்படியாய் அடைந்து வருவான்.

(175) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி லக்கின கேந்திரத்தில் செவ்வாயிருந்தால் ஜாதகன் தாய் பிரசவத்தில் அதிக வேதனை யடைவாள், ஷ செவ்வாய் சுபருடன் கூடியிருந்தால் சௌக்கிய மடைவாள், ஆயினும் கொஞ்சம் சூதி தோஷ பயமுண்டாகும், ஜாதகனுக்கு வைசூரியால் விசேஷமான பாலாரிஷ்ட கண்டம் உண்டாகி, முன் ஜென்ம புண்ணியவசத்தாலும், தைவ யோகத்தா லும் சுகமுண்டாகும்.

(176) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி குரு லக்கினாதிபதியாகி இரண்டாம் பாவத்தில் தன் உச்சாம்சத்தில் பலத்துடனிருந்து எட்டாம் பாவாதிபதியாகிய சந்திரன் ஒன்பதாம் பாவத்திலிருந் தால் ஜாதகன் பாலாரிஷ்டத்தில் சுகமடைவான்.

(177) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி லக்கினாதிபதியாகிய குரு சர (மகர) ராசியிலிருந்து எட்டாம் பாவாதிபதி ஸ்திர (சிம்ம) ராசியிலிருந்து ஹோரா லக்கினமும் ஸ்திரமாகி இருந்தால் ஜாதக னுக்கு வயது தீர்க்காரம்பமாக எழுபத்தைந்து உண்டாகும், இந்த கிரக அமைப்புள்ள ஜாதகனுக்கு அறுபதாம் வயதில் தேக பீடை யும், அல்லது அறுபத்தோராவது வயதில் தேக பீடையும் உண்டா கும், அக்காலம் உறுதியுடன் சனிப்பிரீதி செய்தால் சுகம் உண்டா கும், மேலும் இவனுக்கு சனி திசையில் புத புக்தியில் கோச்சாரத் தில் சனி கெட்ட ஸ்தானங்களில் வரும்போது மேற்சொன்ன மாதிரி அரிஷ்டம் சம்பவிக்கும், மேலும் எட்டாம் பாவாதிபதி யிருக்கும் அம்சத் திரிகோணத்தில் சனி வரும்போது ஜாதகனுக்கு தேக பீடையுண்டாகும், அல்லது எட்டாம் பாவாதிபதி பார்க்கும் ராசியிலாவது சனி வரும்போது இப்பலனுண்டாகும், அக்காலங்க ளில் சாந்தி செய்ய வேண்டும், ஆறாவது பாவாதிபதி யிருக்கும் அம்சத் திரிகோணத்தில் சனி வரும்போது அற்ப ரோகமும், பன் னிரண்டாம் பாவாதிபதியின் அம்சத்திலும் அப்படியே பலனும், அதிக விரயமும், தனக்குச் சம்மந்தப்பட்ட ஜன மரணமும், மார காதிபதி திசையில் எட்டாம் பாவாதிபதி புக்தியில் கால சக்கிரப் படி மண்டூக கெதியில் முன் சொன்ன பீடையும் நேரும், சாந்தி யால் அப்போது சுகமுண்டாகும்.

(178) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி சூரியன் பன்னிரண் டாம் பாவத்தில் சுபருடன் கூடியிருந்து ஒன்பதாம் பாவத்தில் சனி சந்திரனுடன் கூடியிருந்தாலும், பார்த்தாலும் பிதுரு சௌக் கியம் அற்பமாயுண்டாகும், ஜாதகனுடைய தகப்பன் சிவ பக்தி யுடையவன், ஹரி சங்கர பக்தி உடையவன், பயிர்த் தொழிலில் ஜீவனமுடையவன், பாலியத்திலும், மத்திய வயதிலும் அற்ப சுக முடையவன், தேவப் பிராம்மண பக்தி உடையவன், மிதமான பாக் கியமுடையவன், தேசாந்திர சஞ்சாரி, வயோதிக வயதில் சௌக் கியமுடையவன், ஜாதகனுடைய நான்காவது திசையில் ஜாதக னுடைய இருபது அல்லது இருபத்திரண்டாவது வயதில் தகப் பன் மரிப்பான்.

(179) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி நான்காம் பாவாதிபதி யாகிய குரு இரண்டாம் பாவத்தில் தன் உச்சநவாம்சத்திலிருந்து கேந்திர திரிகோணத்தில் சந்திரனிருந்தால் ஜாதகன் தாய் தீர்க்க வயதுடையவள், குணமுடையவள், அற்ப சந்தானமுடையவள்,

முன் ஜென்மாந்திர பாபம் காரணமாக விதவையாய்த் துக்கிப்பாள், இவள் ஜாதகனுடைய ஆறுந்திசையில் மரிப்பாள்.

(180) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி மூன்றும் பாவாதிபதி யாகிய சனி செவ்வாய்க்கு கேந்திர திரிகோணத்தில் இருந்து எட்டாம் பாவாதிபதியுடனும் கூடியிருந்தால் ஜாதகன் சகோதரனில்லாதவனுவான், ஒரு சகோதரியுடையவன், அவளும் விதவையாய் விடுவாள், ஜாதகனுக்கு உடன் பிறப்பு ஆண் சகோதரம் பிறந்தாலும் மரித்துவிடும்.

(181) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி குஜதிரிம்சாம்சத்தில் சகடயோகத்தில் பிறந்தவன் கறுப்பு நிறமுடையவன், உஷ்ணசரீர முடையவன், அற்பவித்தை யுடையவன், எழுத்து வித்தைதெரிந்தவன், தேவப்பிராம்மண பக்தி யுடையவன், சிவபக்தி மத ஆச்சார முடையவன், விஷ்ணு பக்தியுமுடையவன், பூமியால் சுகி, பாலியத்தில் அற்பசுக முடையவன், வயதின் மத்தியில் பிரசித்த முடையவன், பிராம்மண சினேகிதத்தால் சுக முடையவனுவான், ஆயுள் பூராகவும் பூமியாலும் சுக முடையவனுவன்.

(182) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி கேந்திரத்தில் லக்கின பாவத்தில் ஐந்தாம் பாவாதிபதி இருந்து குரு நீச்சராசியில் தன் உச்சநவாம்சையிலிருந்தால், கோச்சாரத்தில், கன்னி மீனம் இந்த ராசிகளில் குரு வரும்போது ஜாதகனுக்கு புத்திரீ புத்திரரின் ஜனனமாவது, கர்ப்பாதானமாவது நேரிடும், மூன்று புத்திரரும் மூன்று புத்திரிகளும் தீர்க்காயுசாயிருப்பார்கள், வேறு சிலர் ஜாதகனுக்கு சந்தானம் அற்பமாகும் என எண்ணுகின்றனர், விவாகத்திற்குப் பிறகு ஜாதகன் சுக மடைவான்.

(183) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி (சிம்ம ராசியிலுள்ள) சந்திரனுக்கு மூன்றுமிடத்தில் ராகு இருந்து சுபக்கிரகத் துடன் கூடியிருந்தாலும் சுபக்கிரகத்தால் ராகு பார்க்கப்பட்டாலும் அந்த திசையில் ஜாதகன் பிரசித்தியடைவான், உத்தரோத்தரமாக பிரசித்தி அடைவான் மனைவியால் சுகமும், தனமும், தெசையின் பிற்பாதியில் விசேஷசுகமும், ஐந்தாந்திசையில் க்ஷேத்திரலாபமும், குரு தெசையில் சுகமும், லக்கினுதிபதி தெசையில் பிராம்மண பிரபுவால் சுகமும், புத்திர சுகமும், அரசாங்கப் பிரசித்தியும், ஆறுந்தெசையாகி சனி தெசை வந்தால் அந்த சனி தெசையில் கீர்த்தியும், புத்திர பிரபலமும், க்ஷேத்திர சுகமும், தனவரவும், வயோதிக வயதில் ஞானமும், தெசையின் முடிவில் மரணமும், அந்தியத்தில் ஞானமும் அடைவான்.

(184) ஜென்ம லக்கினம் தனுசு (ஜர்ஜராம்சம்) ஆகி மிதுன ராசியில் சந்திரன் மேஷநவாம்சத்தில் இருந்து சுபராலும் சந்திரன்

பார்க்கப்பட்டால், விப்பிரனல்லாத இதர சிவபக்த குலத்தில் ஜாதகன் ஆண் சகோதர பிறப்பில்லாமல் இருஸ்திரீ சகோதரிகளை உடையவன் ஆவான்.

(185) ஜென்ம லக்கினம் தனுசு (ஜர்ஜராம்சம்) ஆகி சந்திரன் நின்ற ராசிக்கு நான்காம் ராசியதிபதியாகிய புதன் துலா(மித்திர) ராசியில் குருவுடன் கூடியிருந்தால் ஜாதகன் நதிதீரத்திலுள்ள பெரிய கிராமத்தில் அல்லது பட்டினத்தில் தேவாலயமுள்ள ஊரில் ஜனனம் அடைவான்.

(186) ஜென்ம லக்கினம் தனுசுஆகி லக்கினதிபதியாகிய குரு பதினோராவது பாவத்தில்இருந்து எட்டாம்பாவாதிபதி மிதுனராசியில் கேந்திரத்திலிருந்து மீனத்திலுள்ள சனியின் கேந்திரத்தில் சுக்கிரனிருந்தாலும், சுக்கிரன் சந்திரனுக்குக் கேந்திரத்திலிருந்தாலும் ஜாதகனுக்குச் சகல தோஷங்களும் நீங்கிவிடும்.

(187) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி எட்டாம் பாவாதிபதி நின்ற ராசிநாதன் பதினோராம் பாவத்தில் குருவுடன் கூடியிருந்து சந்திரன் ஷை குருவால் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்கு சகல தோஷங்களும் விலகிவிடும், ஜாதகன் மத்தியாயுளடைவான், அறுபத்தோறு வயதுள்ளவன், ஐம்பதில் அல்லது அதற்கு முன்பே நாற்பத்தொன்பதில் மிக்க பயமும், தேகபீடையும், அபமிருத்துவால் பயமும் அடைவான், அப்போது நவகிரகப் பிரீதி செய்தால், குணம் உண்டாகும், முப்பத்திநான்கல்லது முப்பத்தைந்தில் மரணத்துக்குச் சமமாகக் கிடந்து பிழைப்பான், அக்காலம் எருமைக் கிடாதானமும், கிரகப்பிரீதியும் செய்தால் தேகாரோக்கியம் உண்டாகும், அப்படியில்லாவிடில் திரவிய நாசமும், பல வித பரிபவங்களும் ஏற்பட்டு, தைவாநுகூலமாக தன் ஜனங்களால் சுகம் உண்டாகும், மேற்சொல்லிய சமயங்களில் சனி துர்ஸ்தானங்களில் இருந்தால் அபமிருத்து பயமும் உண்டாகும், துர்ஸ்தானம் என்பது ஆறு, எட்டுப் பன்னிரண்டாமிடங்களைக் குறிக்கும்.

(188) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி பாக்கியாம்சமாகிய மீன நவாம்சத்தில் சூரியன் விருச்சிக ராசியில் மித்திர க்ஷேத்திரத்திலிருந்தால் ஜாதகன் பிதுரு பாக்கியம் உடையவனுவான், விருச்சிக ராசியானது தனுசு லக்கினத்திற்குப் பன்னிரண்டாம் பாவமாகி அங்கு சூரியனிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் மத்திம வயதடைவான், மூன்று சகோதரருடையவன், வேறு சிலர் இரண்டே சகோதரருடையவன் என்றெண்ணுகின்றனர், மேலும் புத்திரக் கிலேசம் உடைய ஒரு சகோதரியும் உடையவனுவான்.

(189) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி சூரியன் நின்ற ராசிக்கு மூன்றும் ராசிக்கதிபதியாகிய சனி லக்கினத்திற்கு நான்காம் பாவத்

தில் கேதுவுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் சகோதரக் கிலேசம் உடையவன், இவனுடைய இந்த சகோதர வர்க்கங்களில், அரிஷ்டங்களும் உண்டாகும், இவர்களில் இந்த சகோதரர்கள் புத்திரனில்லாதவருவார்கள், அல்லது குழந்தைகள் இவர்களுக்கு பிறந்து இறந்துவிடும், அல்லது இவர்களுக்கு இறந்த குழந்தைகள் பிறக்கும், முன் ஜென்மாந்திர பாபத்தாலும், சிசுஹத்தி செய்த தோஷத்தாலும் இந்த பலன்களுண்டாகும், முன் ஜென்மாந்திர புண்ணியத்தினால் ஜாதகனுடைய தகப்பன் மட்டும் புத்திர சௌக்கியமடைவான், இவன் சிவ பக்தியுடையவன், தேவ பிராம்மண பக்தி உடையவன், (கான வித்தையில்) சங்கீதத்தில் சமர்த்துடையவன், பகவானுடைய ஹரி ஹர நாமங்களை கீர்த்தனை செய்பவன், இந்த புண்ணியங்களின் பலனாக அற்ப சந்தான யோகம் உடையவன், பற்பல தேசங்களிலும் பிரசித்தமுடையவன், பிரபுக்களின் சினேகத்தால் சுகமடைவான், ஜாதி வித்தையால் ஜீவிப்பவன், வியாபாரத்திலும் சமர்த்தன், திரவிய சம்பாதனையில் வெகு சமர்த்தன், பாக்கிய யோகம் உடையவன், ஜாதகனுடைய தகப்பன் ஜாதகனுடைய ஜன்ம திசையில் கடைசியில் அல்லது இரண்டாந் திசையில் ஜாதகனுடைய பதினேழல்லது பதினெட்டாம் வயதில் மரிப்பான், வேறு சிலர் இருபதாவது வயதில் மரிப்பான் என எண்ணுகின்றனர்.

(190) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி நான்காம் பாவத்தில் பாபர்கள் (சனி கேது இவர்கள்) இருந்து சந்திரன் மிதுன ராசியில் ஸுவாஸிநியம்சத்தில் மேஷ நவாம்சத்திலிருந்தால் ஜாதகன் தாய் அற்ப சுகமுடையவள், எப்போதும் நல்ல குணமுடையவள், புத்திர சுகமுடையவள், இவள் சுமங்கலியாகவே ஜாதகனுடைய ஜன்ம திசையில் மரித்துவிடுவாள், ஜாதகன் எட்டு அல்லது ஒன்பதாம் வயதில் தாயை இழப்பான்.

(191) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி மிதுன ராசியில் மேஷ நவாம்சத்தில் சந்திரனிருந்து, மாலிகா யோகத்தில் புததிரிம்சாம்சத்தில் பிறந்தவன் கறுப்பு நிறமுடையவன், நல்ல ஆகிருதி உடையவன், உஷ்ணமான தேகமுடையவன், பித்த சுபாவமுடையவன், ரூப லக்ஷணம் நிறைந்தவன், கல்வியுடையவன், அறிவுடையவன், யவ்வன ஸ்திரீகளிடம் ரமிப்பவன், சூரியனைப் போல் தேஜசுடையவன், நிலையான ஆயுசுடையவன், இருபது வயதிற்கு மேல் சிவபாத (குரு) பூஜை செய்பவன், நானாவித மந்திராகம சாஸ்திரங்களறிபவன், வயோதிக வயதில் பாக்கியவானாவான், சம்பத்துடையவன், ஞானமுடையவன், பிரமுகன், (மேன்மையுள்ளவன்) வைபவமுடையவன், இராஜ பூஜிதனாவான், ஜன்மம் முதல் சுகமுடையவன், இருபது வயதிற்கு மேல் அதிக விரயம் உடையவன், இருபத்தைந்தில்

நல்ல யோகம் உடையவன், தியாகி, போகி, பிரசித்தியடைவான், பிதுரார்ஜிதத்தில் அதிக விரயம் உடையவன், முப்பது வயதுக்கு மேல் அதிக விரயம் செய்பவன், கடனால் அதிக பீதியடைவான், ரோக் பீதியால் வீண் செலவு செய்வான், நாற்பதாவது வயதில் நல்ல பாக்கியம் உடையவனுவான், அதிலிருந்து ஆயுசு முழுதும் சுகமடைவான், இதற்கே லக்கின பாவாதிபதி சுபருடன் கூடியிருந்தால் ஜாதகன் தர்ம புத்தியும், உதார குணமும் உடையவன், ஸங்கீதப் பிரியன், விஷய போகத்திலாசையுள்ளவன், பரஸ்திரீ சங்கமத்தால் ரோக பீதியடைவான், அதிக உதார குணம் உடையவன், பிரசித்தாத்துமா, பிரபு சின்னம் உடையவன், ஜன்ம தார திசையில் பிதாவுக்குப் பிரபலம் உண்டாகும், இதற்கே ஒன்பதாம் பாவத்தில் செவ்வாயிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் வியாகூலமடைவான், ஜாதகனுடைய தகப்பன் தன் சகோதரர்களும், சகோதரரின் புத்திரரும் நாசமடைவதால் ஜாதகனுடைய ஜன்ம திசையில் அதிக அசுபம் அடைவான், ஜாதகனுடைய தாயும் ஜாதகனுடைய ஜன்ம திசையில் மரித்துவிடுவாள், பாலியத்தில் தாய் இறந்த பின் ஜாதகனுடைய தகப்பனின் சகோதரன் ஒருவன் கொஞ்சம் சுகமடைவான், ஜாதகன் ஐந்தாவது வயதில் அட்சராப்பியாசமும், அற்ப கல்வியும், சங்கீத வித்தையும், பிதுருப் பிரபலமும், அதனால் சுகமும், சம்பத்தார திசையில் பிரசித்தியும், சுயப் பிரபலமும், திரவிய சம்பாதனையும், சம்பத்தார திசையில் சுய புக்தியில் விவாகமும் அடைவான், சாத்துவீக வதியும், உடன் பிறப்பில்லாதவளும், பாக்கிய வமிசத்தில் பிறந்தவளும் ஜாதகனுக்கு மனைவியாக வாய்ப்பாள், பேத சகோதரனும், தத்து சகோதரனுமுடையவள், இவளுடன்கூட இரண்டு சகோதரிகள் பிறந்து மரித்துவிடுவார்கள், இவள் புத்திரீ புத்திர வமிச விருத்தி உடையவள்.

(192) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி ஐந்தாம் பாவாதிபதி ஒன்பதாம் பாவத்திலிருந்து குரு, புதனுடன் கூடி பதினோராம் பாவத்திலிருந்து பலத்துடனுமிருந்தால் ஜாதகன் காலங்கடந்து முப்பது வயதிற்கு மேல் புத்திரனையடைவான், இருபத்து மூன்றும் வயதில் ஸ்திரீ பிரஜை பிறந்து மரித்துவிடும், பிறகு ஸ்திரீ பிரஜை பிறந்து சுகமடையும், அதன் பிறகு புத்திர சந்தானமடைவான், இந்த ஜாதகனுக்கு மேஷ திரிகோணத்தில் குரு வரும்போது, அல்லது துலா ராசியில் அல்லது அதன் திரிகோண ராசியில் குரு வரும்போது, புத்ரீபுத்ரர் ஜனிப்பார்கள், ஜாதகன் மூன்று புத்திரரும், மூன்று புத்திரிகளும் சுகமுடையவர்களையுடையவன், இவர்களைவிட அதிகம் பிறந்தாலும் அச்சந்ததிகள் இறந்துவிடும், விவாகத்திற்குப் பிறகு ஜாதகன் சௌக்கியமடைவான், மேலும் இரண்டாந்திசையில் பிரசித்தியடைவான்.

மகர லக்கினம்

(1) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி மைத்ராம்சத்தில் சந்திரன் மேஷ ராசியில் மிதுன நவாம்சத்தில் இருந்து ஷை சந்திரனுக்கு கேந்திரத்தில் குரு இருந்தால் நான்காவது காலத்தில் விஷ்ணு பக்தகுலத்தில் பாக்கியமுள்ள வமிசத்தில் ஜனனமாவான், பிரசவ காலத்தில் ஜாதகன் தாய் அற்ப வேதனையடைவாள், உத்தராம்சத்தில் ஜனனமானால் ஜாதகன் தாய் அதிக பிரசவ வேதனை அடைவாள், ஷை சந்திரனுடன் சூரியன் கூடியிருந்தால் கொஞ்சம் சூதி தோஷ பயமுண்டாகும்.

(2) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி ஐந்தாம் பாவத்தில் சுக்கிரனிருந்து லக்கின பாவாதிபதி குருவுடன் கூடியிருந்தால் ஜாதகன் சூதி தோஷ பயமில்லாதவன், ஆயினும் ஐந்து அல்லது ஆறு வருஷம்வரை பாலாரிஷ்ட பயமுடையவனாவான், பிறகு முன் புண்ணியத்தால் சௌக்கியமடைவான்.

(3) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி லக்கினாதிபதியால் அடையப்பட்ட ராசிநாதனான சந்திரன் கேந்திரத்தில் மிதுன நவாம்சத்திலிருந்தால் ஜாதகன் சகல தோஷங்களும் விலகி சுகமுடையவனாவான்.

(4) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி சந்திராரூடாதிபதியாகிய சனி கேந்திரத்தில் இருந்து சந்திரன் கேந்திரத்தில் புதனுடைய அம்சத்திலிருந்து ஷை சந்திரனுக்கிரண்டாமிடத்தில் சுக்கிரன் இருந்தால் ஜாதகனுக்கு ஆயுள் விருத்தியுண்டாகும், ஜாதகன் தீர்க்காரம்ப வயதாக எழுபது வயதடைவான், உத்தராம்சத்தில் பிறந்தவன் அறுபத்தெட்டு வயதடைவான், ஜாதகனுக்கு ஐம்பத்தொன்பது அல்லது அறுபதாவது வயதில் மிக்க பயமும், தேக ஜாட்டியமும் உண்டாகும், அக்காலம் நவக்கிரகப் பிரீதியாக கிரக சக்கிரதானம் என்னும் நவக்கிரக சக்கரத்தைத் தானம் செய்தால் தனக்குச் சம ஜனங்களின் நாசத்தால் ஜாதகன் சுகமடைவான்.

(5) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி சந்திரன் மேஷ ராசியில் புதனுடைய நவாம்சத்திலிருந்து ஒன்பதாம் பாவாதிபதி நீச்ச பாவத்திலிருந்து குருவால் பார்க்கப்பட்டு சூரியனும் வர்க்கோத்தமத்தில் மேஷத்தில் இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் தீர்க்காயுளடைவான், வைஷ்ண மதத்தையடைவான், தேவப் பிராம்மண விசுவாசமுடையவன், விசேஷ குரு பக்தி உடையவன், பிதுரு சௌக்கியமுடையவன், மானி, கல்வி மூலம் ஜீவிப்பவன், பாலியத்தில் அற்ப சுகி, குருவின் திரவியத்தால் ஜீவிப்பான், குருவின் காரி

யாதிகளால் பாலியத்தில் சுகமடைவான், வயதின் மத்தியில் நீச்சப் பிரபு மூலமாக சுகமும், பிரசித்தியுமடைவான், எழுத்து உள்ள பிரபல உத்தியோகமடைவான், வயோதிக வயதில் புத்திரனுல் சுக முடையவன் ஆவான்.

(6) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி ஐந்தாம் பாவாதிபதியாகிய சுக்கிரன் சுய க்ஷேத்திரத்தில் பலத்துடன் இருந்தால் ஜாதகனு டைய பிதாமகன் பிரசித்தியுடையவன், தன் குருவினுடைய காரி யங்களைச் சாதிப்பவன், குருவினுடைய காரிய விசாரணையுடைய வன், தன் குருவால் பிரமுகனுவான், ஜாதகனுடைய தகப்பன் வழிப்பாட்டனுடைய குரு அனேக சிஷ்யர்களுடையவன், மகாத் துமா, பற்பல தேச சஞ்சாரி, சிஷ்யர்களால் ஜீவிப்பவன், யானை முதலிய அனேக வாகனம் நிறைந்தவன், யானையை இரக்ஷிக்கும் அளவு ஐசுவரியமுடையவன், நித்திய கர்மானுஷ்டானமுடையவன், அன்ன தானம் செய்பவன், சத்திர சாமராதிகளுடையவன், பிர பலமான ஆஸ்தான சித்தியுடையவன், நல்ல புண்ணியமுடைய வன், இவன் ஜாதகனுடைய நான்காந் திசையில் புண்ணிய லோகத்தையடைவான்.

(7) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி லக்கினத்திற்கு மூன்றும் பாவத்தில் ராகு இருந்து அந்த பாவாதிபதி சனியுடன் கூடி யிருந்து செவ்வாயும் சத்துரு ராசியிலிருந்தால் ஜாதகன் அற்ப சகோதர சகோதரிகளுடையவன்.

(8) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி சந்திரன் மேஷ ராசியில் மிதுன நவாம்சத்தில் இருந்து குரு கடக ராசியில் இருந்து பாப கேஸரி யோகமாக கேஸரி யோகம் உண்டானுல் ஜாதகன் அதிக சுபமுடையவன், லக்கின பாவாதிபதி ஷை குருவுடன் கூடியிருந் தால் ஜாதகன் சாத்துவீக குணமுடையவன், பிறருக்கு இங்கிதம் சொல்பவன் (உபாயத்தால் காரியசாதனை செய்துகொள்வான், மேலும் வெளுப்பு நிறமுடையவன், சம தேகி, வெகு ஆயுசுடைய வன், கொஞ்சம் அதிக உஷ்ணமுடையவன், ரூப லக்ஷணம் நிரம் பியவன், கல்வியுடையவன், சரசமுடையவன், எழுதுவதிலும், ஜாதி வித்தையிலும் சமர்த்தன், உற்சாகமுடையவன், நன்முகமு டையவன், ஸ்ரீமான், சர்வ வித்தைகளிலும் பிரியமுடையவன், நீச்ச வித்தை விசேஷமாயறிவான், நீச்ச பாஷையில் சிரமப்படுபவன், ஷை குருவுடன்கூட சனி கூடியிருந்தால் ஜாதகன் உள்ளுக் குள்ளே கபடமுடையவன், ஜாதகன் கெற்ப ஸ்ரீமான், மகா போகி, தனிகன், கீர்த்தியுடையவன் ஆவான், ஜாதகன் ஜன்ம தார திசை யில் சௌக்கியமுடையவன், ஜாதகனுடைய தகப்பன் பிரபல முடையவனுவான், இரண்டாந் திசையில் தகப்பனுல் ஜாதக னுக்குச் சுகமுண்டாகும், ஐந்தாம் வயதில் அட்சர ஞானமடை

வான், மூன்று பாஷைகளில் வல்லவனுவான், பதினேழல்லது பதினறுவது வயதிலேயே இரண்டாந் திசையில் விவாகமடைவான்.

(9) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி ஏழாம் பாவாதிபதி கேந்திரத்தில் இருந்து சுக்கிரன் ரிஷப ராசியில் வர்க்கோத்தமத்திலிருந்தால் ஜாதகன் மனைவி சாத்துவீகமுடையவள், புத்திர சுகமுடையவள்.

(10) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி லக்கின பாவத்திற்கேழாம் பாவத்தில் பாபக் கிரகமாகிய சனியிருந்தால் ஜாதகன் மனைவியால் விசாரமடைவான், அந்த ஏழாவது பாவாதிபதியே பலமுடையவனுக பாபருடன் கூடி எங்கிருந்தாலும் ஜாதகன் இரு மனைவியருடையவனுவான், ஷை ஏழாம் பாவாதிபதியையும், ஏழாம் பாவத்தையும் சுபர் பார்த்தாலும், சுபர்கள் ஷை பாவங்களில் இருந்தாலும் ஜாதகனுக்கு இரண்டாந் தாரமேற்படாது, மனைவிக்கு ரோகம் உண்டாகும், இதே போல கிரக நிலைமை அமைந்து ஜாதகன் தனுசு லக்கினத்தில் ஜனித்திருந்தால் அவன் இரு தாரமடைவான், மேலும் ஜாதகன் மனைவியிடம் துவேஷமுடையவனுவான், அல்லது மனைவியின் வமிசத்தில் அரிஷ்டமுண்டாகும், சர லக்கினங்களில் பிறந்தவன் மேற்சொல்லிய கிரக வரிசையுள்ளவனுனல் விவாகத்திற்குப் பிறகு சுகமடைவான், சுயமாக பிரபலமடைவான், தனம் சம்பாதிப்பான், இவனுக்கும் மறு தாரமேற்படாது, அரசாங்க ஜன நேசமடைவான், எழுதுவதினுல் சுகமுடையவனுவான், மூன்றாந் திசையில் பிரசித்தி அடைவான், திசையின் பிற்பாதியில் விசேஷ யோகமடைவான்.

(11) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி லக்கின பாவாதிபதி மேஷ ராசியில் மைத்திராம்சத்தில் இருந்து விப்பிரகாலத்தில் பிறந்த ஜாதகன் சகோதரனில்லாதவனுகவும், சுகமுடையவனுகவும் ஆவான்.

(12) ஜென்ம லக்கினம் மகரம் சந்திராரூடபதம் ஆகிப் பிறந்தவனுக்கு சந்திரனுக்குக் கேந்திரத்தில் குரு இருந்தால் நதிப் பிராந்தியத்தில் அக்கிரகாரத்தில் வடக்குத் தெற்கு வீதியில் ஜனனம் நேரிடும்.

(13) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி சந்திரன் மேஷ ராசியில் சனியுடன் கூடியிருந்தால் சூதி தோஷ பயமுண்டானுலும் ஜாதகனுடைய தாய்க்குப் பிரசவத்தில் வேதனை அற்பமாக நேரிடும், ஆயினும் முன் புண்ணியவசத்தினுல் சுகமுண்டாகும்.

(14) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி லக்கின பாவாதிபதி கேந்திரத்தில் மைத்திராம்சத்தில் இருந்து குருவால் பார்க்கப்

பட்டாலும், எட்டாம் பாவாதிபதியும் மித்திர ராசியிலிருந்தால் பாலாரிஷ்ட சாந்தியுண்டாகும்.

(15) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி சந்திரன் லக்கினருடாதி பதியாகி தன் உச்ச நவாம்சத்தில் கேந்திர ராசியில் இருந்தாலும், சனி மைத்திராம்சத்திலிருந்தால் சகல தோஷமும் நிவர்த்தியாகும்.

(16) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி லக்கின பாவாதிபதி சர (மேஷ ராசியிலும்) எட்டாம் பாவாதிபதி உபய (மிதுன) ராசியிலும் இருந்து ஹோரா லக்கினம் ஸ்திரமானல் ஜாதகனுக்கு மத்தியாயுளாக அறுபத்தாறு வயதுண்டாகும்.

(17) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி சூரியன் ஆருவது பாவத்தில் இருந்து சனியால் பார்க்கப்பட்டாலும், ஒன்பதாவது பாவத்தில் பாபரிருந்தால் ஜாதகன் தகப்பன் இவனுடைய பாலியத்தில் மரித்துவிடுவான், ஒன்பதாம் பாவாதிபதியாகிய புதன் ஷெ சூரியனுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் தர்மபுத்தியுடையவன், தேவப் பிராம்மண பக்தியுடையவன், சிவ பக்தி மதத்தை அடைந்தவன், வைதீகாச்சார தர்மமறிந்தவன், க்ஷேத்திரமூலமாக ஜீவனமுடையவன், இரு மனைவியருடையவன், வேறு சிலர் மூன்று மனைவியருடையவன் என எண்ணுகின்றனர், ஒன்பதாம் பாவத்தில் செவ்வாயிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் ஜாதகன் பிறந்த வருஷத்தில் மரித்துவிடுவான், வேறு சிலர் ஜாதகன் பிறந்த மூன்ருவது வருஷத்தில் தகப்பன் மரிப்பான் என எண்ணுகின்றனர்.

(18) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி நான்காம் பாவாதிபதி ஒன்பதாம் பாவத்திலிருந்து சந்திரன் கேந்திர திரிகோணத்திலிருந்தால் பாபக் கிரகத்துடன் கூடியிருந்தாலும் ஜாதகனுடைய தாய் தீர்க்க வயதடைவாள், குணமுடையவள், புத்திரனுக்கிஷ்டமானதையே செய்பவள், ஜாதகனுடைய நான்காந்திசையில் இறந்துவிடுவாள்.

(19) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி மூன்ரும் பாவத்தில் கேது இருந்து செவ்வாய் ராகுவுடன் கூடியிருந்தால் ஜாதகன் முன் பின் சகோதரனில்லாதவன்.

(20) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி குரு திரிம்சாம்சத்தில் பத்ர யோகத்தில் பிறந்தவன் வெளுப்பு நிறமுடையவன், சமதேகி, சூட்டுத் தேகமுடையவன், மேதாவி, புத்திமான், கல்வியுடையவன், சம்ஸ்கிருதத்தில் ஆஸ்தையுடையவன், வேதம் கற்பவன், மாதுரு சுகம், க்ஷேத்திர சுகம் முதலியன உடையவன், வைதீகாச்சாரமுடையவன், தர்மமறிந்தவன், யுக்தா யுக்தமானவற்றை அறிந்தவன், ஆஸ்திகன், சத்தியவாதி, மத்திய வயதில் பிரசித்தி உடை

யவனுவான், மேலும் செவ்வாயுடன் ராகு கூடியிருந்தால் துராலோசனை செய்பவன், திரவிய சம்பாதனையில் சமர்த்தன், தகுதியான வற்றைத் தெரிந்து செய்பவன்.

(21) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி மூன்ரும் பாவாதிபதி கேந்திர ராசியில் இருந்தால் ஜாதகன் தீரன், சூரன், புத்தியுடையவன்.

(22) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி ஏழாம் பாவாதிபதி சனியுடன் கூடி மேஷ ராசியிலிருந்து சுக்கிரன் சுய க்ஷேத்திரத்திலிருந்தால் ஜாதகன் இரு மனைவிகளுடையவன், மூத்த மனைவி புத்திரனில்லாதவள், இரண்டாம் மனைவியிடத்தில் புத்திரீ புத்திரருடையவன் ஆவான்.

(23) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி மூன்ரும் பாவத்தில் கேது இருந்தால் ஜாதகனுடைய மாமனுர் ஜாதகனுக்கு விவாகமான வருஷத்தில் அரிஷ்டமடைவார், அப்படியில்லாவிடில் ஜாதகனுடைய மனைவியின் வமிசத்தில் அரிஷ்டமுண்டாகும், ஜாதகன் மனைவி ரூபவதியாயிருப்பாள்.

(24) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி மீன ராசியில் சந்திரன் கன்னியா நவாம்சத்திலிருந்து சந்திரனுக்கு கேந்திரத்தில் குரு இருந்தால் விப்பிரகாலத்தில் பிறந்த ஜாதகன் சகோதரனில்லாதவனுக பாக்கியமுள்ள வமிசத்தில் சிவ பக்த குலத்தில் ஜனிப்பான்.

(25) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி சந்திரன் சுமநாம்சத்தில் மீன ராசியில் இருந்து ஷை சந்திரனுக்கு நான்காமிடத்தில் குரு இருந்தால் ஜாதகனுக்கு நதி தீர வனப் பிராந்தியத்தில் சிறிய கிராமத்தில் தாய் பாட்டன் வீட்டில் ஜனனமுண்டாகும்.

(26) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி நான்காம் பாவாதிபதி சனி, சுக்கிரனிவர்களுடன் கூடியிருந்தால் ஜாதகன் வேறு தாயிடம் சுகமடைவான், அல்லது தன் தாய்க்குத் தாயிடம் சுகமடைவான், இத்துடன் லக்கின பாவாதிபதி குருவுடன் கூடியிருந்தால் ஜாதகன் சுகியாவான்.*

(27) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி சந்திரனுக்குக் கேந்திரத்தில் செவ்வாயிருந்தால் ஜாதகனுக்கு விசேஷ பால தோஷமேற்படும், முன் புண்ணியவசத்தால் குணமடைவான்.

குறிப்பு:—* இங்கு பாவஸ்புடரீதியாக லக்கின பாவாதிபதி வேறு கிரகமாக வருதல் கூடுமென்பது பற்றி லக்கின பாவாதிபதி குருவுடன் கூடினுல் என எழுதப்பட்டது.

(28) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி லக்கின பாவாதிபதி ஐந்தாம் பாவத்திலிருந்து, குரு எட்டாவது பாவாதிபதியுடன் ஆறும் பாவத்தில் கூடியிருந்து லக்கினத்திற்கு ஐந்தாம் பாவத்திலேயே சுக்கிரனுமிருந்தால் ஜாதகனுக்குப் பால தோஷமிருப்பினும் சுகம் உண்டாகும்.

(29) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி லக்கினுதிபதியிருக்கும் ராசிநாதன் சுய க்ஷேத்திரத்தில் (ரிஷப ராசியில்) சனி, புத, மித்திரக் கிரகத்துடன் கூடியிருந்தாலும், கேந்திர திரிகோணத்திலிருந்தாலும் ஜாதகன் ஆயுள் விருத்தி அடைவான்.

(30) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி லக்கின பாவாதிபதி ஸ்திர (ரிஷப) ராசியிலும், எட்டாம் பாவாதிபதி உபய (மிதுன) ராசியிலுமிருந்து, ஹோரா லக்கினம் உபயமானல் ஜாதகன் தீர்க்காயுள் யோகமடைவான், எழுபத்தினன்கு வயதடைவான், அறுபது, அறுபத்தைந்து அல்லது அறுபத்தாறு இந்த வயதில் அபமிருத்துவால் பயமுண்டாகும், அக்காலம் ஆடு, வஸ்திரம் இவற்றைத் தானம் செய்தால் குணமுண்டாகும்.

(31) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி சந்திரன் மீனத்தில் கன்னியா நவாம்சத்தில் இருந்து சூரியன் மிதுன ராசியில் தனுசு நவாம்சத்தில் இருந்து ஒன்பதாம் பாவாதிபதி தன் மித்திர, சனி, புதனிவர்களுடன் கூடி ரிஷப ராசியிலிருந்தால் ஜாதகன் தகப்பன் அற்ப சுகமுடையவன், வெகு ஆயுசுடையவன், தேவப் பிராம்மண பக்தியுடையவன், வைதீகாச்சாரமுடையவன், க்ஷேத்திர சுகம் அற்பமாயுடையவன், மூன்று தாரமுடையவன், சொற்ப பாக்கிய முடையவன், இங்கு புதனைத் தவிர வேறு கிரகம் பாவஸ்புட ரீதியாக வரலாமாதல்பற்றி ஒன்பதாம் பாவாதிபதி என மூலப்படியே மொழி பெயர்க்கப்பட்டது.

(32) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி சூரியன், குரு, கேது இவர்களுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் ஞானம், தத்துவ விவேகம் முதலியன உடையவனுவான், மனைவி சுகமற்ப முடையவன், மிதமான பாக்கியமுடையவனுவான், இவன் ஜாதகனுடைய மூன்றுந்திசையில் மரிப்பான்.

(33) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி சந்திரனுக்கு நான்காமிடத்தில் கேதுவும், சந்திரனுக்கு ஏழாமிடத்தில் செவ்வாய் கன்னியா ராசியிலும் இருந்தால் இவர்கள் சுப க்ஷேத்திரங்களிலிருந்தாலும் ஜாதகன் தாய் ஜாதகனுக்குப் பாலியத்திலேயே மரித்துவிடுவாள், ஜாதகனுடைய தாய் உடன் பிறப்பில்லாதவள், பாக்கிய வமிசத்திற் பிறந்தவள், ஜாதகனுடைய ஜன்ம திசையில் ஜன்ம வருஷத்

திலேயே சுமங்கலியாகவே ஜாதகனுடைய தகப்பன் மரணமடைய வேண்டிய காலத்தில் தாய் மரித்துவிடுவாள், தாய் சுகமின்றி, ஜாதகன் தாய்ப் பாட்டியால் வளர்க்கப்படுவான், இவன் பிதுரு சுகமும் குறைவடைந்து, வளர்ப்புக்குச் சமமாக இரு வமிசத்திற்கும் ஒருவனாக சுகமடைவான்.

(34) ஜென்ம லக்கினம மகரம ஆகி ஒன்பதாம் பாவத்தில் செவ்வாயிருந்தால் ஜாதகனுக்குச் சகோதர சுகமுண்டாகாது, ஜாதகன் பேத சகோதரனால் சுகமுடையவன்.

(35) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி சந்திரன் மீனராசியில் கன்னியா நவாம்சத்தில் இருந்து குஜ திரிம்சாம்சத்தில் பாபகேஸரி யோகத்தில் ஜனித்தவன் வெளுப்பு நிறமுடையவன், சம தேகி, வெகு ஆயுளும், கல்வியுமுடையவன், சம்ஸ்கிருதப் பிரியன், எழுத்து வேலையில் சமர்த்தன்.

(36) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி லக்கின பாவாதிபதி தன் மித்திரக்கிரகமான சுக்கிரன், புதனிவர்களுடன் கூடி ரிஷப ராசியிலிருந்தால் ஜாதகன் ஜன்மம் முதலாக பாக்கியமுடையவன், தாய் வமிசத்தால் சுகமுடையவன், தாய்ப் பாட்டியால் சுகமுடையவன், தேவப் பிராம்மண பக்தி, ஹரி சங்கர பக்தி முதலியன உடையவன், விசேஷ சிவ பக்தியுடையவன், தியாக குணமுடையவன், கெம்பீர புத்தியுடையவன், தைவானுக்கிரகமுடையவன், ஸ்தான சுகமுடையவன்.

(37) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி பத்தாம் பாவாதிபதி சூரியனுடன் கூடியிருந்தால் ஜாதகன் அரசாங்கப் பிரசித்தியுடையவனாவான், உத்தியோகப் பிரசித்தி உடையவன், பிரபல உத்தியோகமுடையவன், வைதீக ஆச்சாரமுடையவன், தன் வேலைகளைக் கவனிப்பவனாவான்.

(38) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி பத்தாம் பாவத்தில் ராகு இருந்தால் ஜாதகன் புண்ணிய ஸ்நானம், தர்மம் முதலியன செய்வான், பகுத்தறியும் விவேகமுடையவன், அவசியமானவற்றிற்குத் தக்கபடி செலவு செய்வான்.

(39) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி பத்தாம் பாவாதிபதி கேதுவுடன் கூடியிருந்து பத்தாம் பாவத்தில் ராகு இருந்தால் ஜாதகன் பிறருடைய உத்தரகிரியைகளைச் செய்வான், தாய்ப் பாட்டனுடைய உத்தரகிரியைகளைச் செய்து தாய் வமிசத்தின் தனத்தை அடைவான்.

(40) ஜென்மலக்கினம் மகரம் ஆகி சனி ஐந்தாம் பாவத்தில் சுக்கிரனுடன் கூடியிருந்து ஏழாம் பாவத்தைப் பார்த்தால் ஜாதக

கன் மறு தாரத்தினிடம் புத்திரனை அடைவான், மூத்த மனைவி புத்திரியையுடையவள்.

(41) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி இரண்டாம் பாவத்தில் வர்க்கோத்தமத்தில் சந்திரனிருந்து ஷை சந்திரனுக்குக் கேந்திரத்தில் குரு இருந்து விப்பிர காலத்தில் ஜனித்தவன் விப்பிர குலத்தில் நல்ல அறிவாளியாகி அற்ப சுகியான மூத்த சகோதரனுடையவன், இளைய சகோதர ஹீனன், மிக்க உயர்ந்த பிரதேசமான மலைப் பிராந்தியத்தில் அல்லது வனப் பிராந்தியத்தில் தாய்ப் பாட்டன் வீட்டில் ஜனனமானவன்.

(42) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி நான்காம் பாவத்தைச் சனி பார்த்தால் ஜாதகன் தாய் பிரசவத்தில் அற்ப வேதனையடைவாள், அப்போது சந்திரன் கேதுவுடன் கூடியிருந்தால் சூதிதோஷ பயமுண்டாகும், ஷை சந்திரனுக்குக் கேந்திரத்தில் குரு இருந்தால் இருபத்தேழு நாள்களுக்குப் பின் குணமடைவான், இதற்கே லக்கின பாவாதிபதி லக்கினத்திற்குக் கேந்திரத்திலிருந்தாலும் தகப்பனுடைய புண்ணியத்தால் குணமுண்டாகும்.

(43) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி லக்கின பாவாதிபதியிருக்கும் ராசிநாதன் எட்டாம் பாவாதிபதி யிருக்கும் ராசிநாதனுகி, சுய க்ஷேத்திரத்தில் பலத்துடனிருந்தால் ஜாதகன் பால தோஷங்கள் விலகிச் சுகமடைவான்.

(44) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி லக்கின பாவாதிபதி சர (மேஷ) ராசியிலிருந்து எட்டாம் பாவாதிபதியும், அங்கு இருந்து ஹோரா லக்கினமும் சர ராசியானல் ஜாதகன் நிச்சயமாக ஆயுள் விருத்தியடைவான்.

(45) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி லக்கின பாவாதிபதியாகிய சனி நீச்ச ராசியிலிருந்து எட்டாம் பாவாதியுடன் கூடியிருந்தாலும், கேந்திர திரிகோணங்களிலிருந்தாலும் ஜாதகன் சந்தேகமின்றி மத்திய வயதாக அறுபத்தாறு வயதைப் பரமாயுளாக அடைவான், ஐம்பத்தொன்பதல்லது அறுபதாவது வயதில் இவனுக்கு மிக்க பயமுண்டாகும், அப்போது விஷ்ணுப் பிரீதி செய்தால் குணமுண்டாகும்.

(46) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி சந்திரன் கும்ப ராசியில் வர்க்கோத்தமாம்சத்தில் இருந்து சூரியனும், ஒன்பதாம் பாவாதிபதியாகிய் புதனும் சனியுடன் கூடி நான்காம் பாவத்திலிருந்தால் ஜாதகன் தகப்பன் அற்ப சுகமுடையவன், ஜாதகனுடைய தகப்பன் மத்திம வயதுடையவன், உடன் பிறந்த சகோதரருடன் கூடியவன், சிவ பக்தி மதாச்சாரமுடையவன், புரோகிதம் செய்து வைத்து ஜீவிப்பவன், க்ஷேத்திர சுகமும் அற்பமுடையவன், ஆச்

சாரமுமப்படியே அற்பமாயுடையவன், சூத்திரர் மூலமாக சுக மடைவான், சூத்திரர்களின் தனத்தால் சுகமடைவான், சிவ பக்தி, தேவப் பிராம்மண பக்தி முதலியன விசேஷமாயுடையவன், பிரபுக் களின் சினேகமுடையவன், மத்திய வயதில் பிரசித்தியுடையவன், தன் ஜனங்களிடத்தும் பிரசித்தியுடையவன், மிதமான பாக்கியமு டையவன், இவன் ஜாதகனுடைய மூன்று அல்லது ஐந்தாம் வய தில் அல்லது ஏழாவது வயதில் மரித்துவிடுவான், வேறு சிலர் ஜாத கனுடைய இரண்டாந் திசையில் மரிப்பான் என எண்ணுகின்றனர்.

(47) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் பாவாதிபதியாகிய செவ்வாய் சுய க்ஷேத்திரத்தில் சனி, சூரியனிவர்களுடன் கூடியிருந்தாலும், சந்திரன் கும்பத்தில் வர்க் கோத்தமாம்சத்தில் இருந்தால் ஜாதகன் தாய் மூலம் விசேஷ சுக முடையவன், மேற்படி சந்திரனுக்கு நான்காமிடத்தில் சுக்கிர னிருந்தால் ஜாதகன் தாய் நற்குணமுடையவள், மூத்த புத்திர நாச யோகமுடையவள், உடன் பிறந்த சகோதரருடையவள், தாய் வமி சத்தில் சுகமுடையவள், இவள் ஜாதகனுடைய மூன்றாந் திசையில் ஜாதகனுடைய நாற்பத்தொன்றல்லது நாற்பத்திரண்டாவது வய தில் மரிப்பாள்.

(48) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி மூன்றும் பாவாதிபதி யாகிய குரு கேந்திரத்தில் இருந்து செவ்வாயுடன் சனி கூடி மேஷ ராசியிலிருந்தால் ஜாதகன் பின்சகோதரனில்லாதவன், ஜாதகனுக்கு மூத்தவன் அற்ப சுகியாகி விஷம், அக்கினி, ஆயுதமிவற்றால் செவ் வாய்க்கு ஏழாம் ராசியில் அல்லது செவ்வாயின் திரிகோண ராசிக ளில் சனி கோச்சாரத்தில் வரும்போதுமரிப்பான்.

(49) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி குரு திரிம்சாம்சத்தில் பிறந்தவனுக்கு, கேஸரி யோகமுண்டாகி சந்திரன் கும்ப ராசியில் வர்க்கோத்தமத்திலிருந்தால் ஜாதகன் வெளுப்பு நிறமும், சம ஆகி ருதியுமுடையவன், சம தேகி, மத்தியாயுளுடையவன், ரூபமுடை யவன், அறிவாளி, புகழுடையவன், கல்வி அறிவுடைய விவேகி, சத் தியவாதி, பகுத்தறிவுடையவன், வைதீகாச்சார பக்தியுடையவன், புரோகிதத்தால் ஜீவிப்பவன், பிதுரார்ஜித சுகமுடையவன், தாய் வமிசத்தினால் சுகியாவான், ஜன்ம தேசத்தை விட்டு தேசாந்தரத் தில் சுகமடைவான், ஷெ சந்திர கேந்திரத்திலுள்ள குரு பலவானா யிருந்தால் ஜாதகன் விசேஷ சிவ பக்தியடைவான், தேவி ஸ்தோத் திரப் பிரியன், நியாயமாக சம்பாதிப்பவன், சுகி, மத்திய வயதில் பிரசித்தியடைவான், இருபது வயது முதல் தனம் சம்பாதிப்பான், ஜன்ம திசையில் ஏழு வருஷம் வரையில் பால தோஷமும், அற்ப சுகமுமுடையவன், (பிராம்மண ஜன்மத்தில் பிறந்தவன் இரண்

டாந் திசையில் உபநயனமடைவான்,) இருபதாம் வயதில் அல்லது அதற்குப் பிறகு இருபத்தைந்து வயதில் விவாகமடைவான், வேறு சிலர் இருபத்தேழாவது வயதில் விவாகமடைவான் என எண்ணு கின்றனர், இவன் மனைவி வம்சத்தால் சுகமடைவான், சாத்துவீகமு டைய மனைவியுடையவன், நாற்பதாவது வயதில் புத்திர உற்பத்தி யுடையவன், அதற்கு முன்பே முப்பத்தெட்டாம் வயதில் புத்திரி பிறந்த பின்பு சாந்தி செய்யின் நாற்பதாவது வயதில் சற்புத்திர னுண்டாவான், மீனத் திரிகோண ராசிகளிலல்லது ரிஷப ராசித் திரிகோணங்களில் குரு வரும்போது புத்திரியல்லது புத்திரன் பிறப்பான், இரண்டு புத்திரரும், இரண்டு புத்திரிகளுமுடையவன், வேறு சிலர் மூன்று பேர் புத்திரிகளுடையவனென்று எண்ணுகின் றனர், ஜாதகன் ஷ குரு திசை வரும்போது தாய் வமிசத்தால் சுகமடைவான், மூன்றுந்திசையில் பிரசித்தியும், சுய புக்தியில் மனைவி லாபமும் அடைவான், புரோகிதத்தால் நதி தீரத்தில் வாச மும், விசேஷமான வரவும், புண்ணிய தேசத்திலேயே மூன்றுந் திசை பூராவும் வாசமும், நான்காந்திசையில் பிதுரார்ஜித கிராம வாசமும், பிரபு ஸ்நேகமும், பிரசித்தியும், பூமி லாபமும், புரோகி தத்தில் அதிக சுகமும், நான்காந் திசையில் வீடு முதலிய சுகமும், திசை முடிவில் அந்தியத்தில் ஞானத்துடன் தேக நிரியாணமும் அடைவான்.

(50) ஜென்ம லக்கினம் மகரம் (கமலாம்சம்) ஆகி விப்பிர காலத்தில் பிறந்தவனுக்கு லக்கின பாவத்தில் குரு இருந்தாலும், பார்த்தாலும் ஜாதகன் தாய் பிரசவத்தில் அற்ப வேதனையடைவள்.

(51) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி சந்திரன் சனியுடன் கூடி யிருந்தாலும், சனியால் பார்க்கப்பட்டிருந்தாலும் ஜாதகன் பால ரோக பீடையடைவான்.

(52) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி லக்கின பாவாதிபதியும், ஒன்பதாம் பாவாதிபதியும், எட்டாம் பாவாதிபதியும் கேந்திரத்திலி ருந்தாலும், சனி கேந்திரத் திரிகோணத்திலிருந்தாலும் ஜாதகன் சகல தோஷங்களும் விலகி சுகமடைவான்.

(53) ஜென்ம லக்கினம் மகரம் (கதாம்சம்) ஆகி விப்பிர காலத் தில் புததிரிம்சாம்சத்தில் பிறந்தவன் ஸீமந்த கர்ப்பத்தில் அல் லது மூன்றுவது கெர்ப்பத்தில் ஜனனமானவன்.

(54) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி லக்கின கேந்திரத்தில் ராகு இருந்தால் ஜாதகன் தாய் பிரசவத்தில் வெகு வேதனையடை வாள், அப்போது லக்கினத்திற்கு குரு பார்வையிருந்தால் ஆரோக் கியமுண்டாகும்.

(55) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி சந்திரன் சனியுடன் கூடியிருந்தால் ஜாதகனுக்குப் பாலாரிஷ்டத்தால் பயமுண்டாகும்.

(56) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி குரு லக்கினத்திற்கு கேந்திரத்திலல்லது திரிகோணத்தில் சுபாம்சத்திலிருந்து லக்கின பாவத்திற்கைந்தாம் பாவத்தில் சனியிருந்தால் ஜாதகன் பாலாரிஷ்டத்தினின்றும் சுகமடைவான்.

(57) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி பத்தாம் பாவாதிபதி பலத்துடனிருந்து லக்கின பாவாதிபதி மித்திர ராசியிலிருந்து பதினோராவது பாவத்தில் சூரியனிருந்தால் ஜாதகன் மத்தியாயுளாக அறுபத்தைந்து வயதடைவான்.

(58) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி ராகு லக்கின கேந்திரத்தில் இருந்தால் ஜாதகன் ரோக பீதியடைவான், ஷை ராகுவைக் குரு பார்த்தால் ஜாதகனுக்கு ஆயுள் விருத்தியுண்டாகும்.

(59) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி சூரியன் கேந்திர கோணத்திலிருந்தாலும், லாப பாவத்தில் மித்திர ராசியிலிருந்தாலும் ஜாதகனுடைய தகப்பன் சுகமடைவான்.

(60) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி சூரியன் கேந்திர திரிகோணங்களிலல்லது லாப பாவமாகிய பதினோராம் பாவத்தில் இருந்து சுபக் கிரகத்துடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் சகோதரனுடையவன், மேற்படி சூரியன் சிவதாம்சத்தில் இருந்தால் அவன் சிவ பக்த மதத்தையடைவான்.

(61) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி சூரியன் லாப பாவமல்லது கேந்திர திரிகோணங்களிலிருந்து ஒன்பதாம் பாவாதிபதியுடனும் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் அரசாங்கத்தில் பிரசித்தியடைவன், ஷை ஒன்பதாம் பாவாதிபதியாகிய புதன் நிர்மலாம்சத்தில் இருந்தால் ஜாதகன் தகப்பன் தேவப் பிராம்பண பக்தியுடையவனுவன்.

(62) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி ஒன்பதாம் பாவத்தில் குரு இருந்தால் ஜாதகன் தகப்பன் தர்ம புத்தியும், உதார குணமுமடைவன், பரோபகாரம் செய்பவன்.

(63) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி ஒன்பதாம் பாவாதிபதி பதினோராம் பாவத்திலிருந்தால் ஜாதகன் தகப்பன் திரவிய சம்பாதனையில் சமர்த்தனுவன்.

(64) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி சனியால் சூரியன் பார்க்கப்பட்டிருந்து ஷை சனி திசை வந்தால் ஷை சனி திசையில் ஜாதகன் தகப்பன் மரிப்பான்.

(65) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி லக்கினத்திற்கு ஒன்பதாம் பாவத்தில் சனியிருந்தாலும், ஐந்தாம் பாவத்திலிருந்தாலும் அந்த சனி திசை வரும்போது ஜாதகன் தகப்பன் அந்த சனி திசையில் மரிப்பான், ஜாதகனுக்கு இரண்டாம் பரியாயத்தில் மேஷ ராசியில் சனி வரும்போது ஜாதகன் தகப்பன் மரணமடைவான்.

(66) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி சந்திரன் கேந்திர திரிகோணத்திலிருந்து நான்காம் பாவாதிபதி வாருணம்சத்தில் ஷை சந்திரனுக்கு கேந்திரத்தில் இருந்தால் ஜாதகன் தாய் சுகமுடையவள், குணமுடையவள், சமர்த்தை, கெர்வி, புகழுடையவள், பலசாலி, புண்ணியவதி, விசேஷ பதி பக்தியுடையவள், தர்ம சிந்தையுடையவள், இவள் சுமங்கலியாய் மரிப்பாள், வேறு சிலர் தன் கணவனை அனுசரித்து உடன்கட்டை ஏறுவள் என எண்ணுகின்றனர்.

(67) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி சந்திரனுக்குக் கேந்திரத்தில் செவ்வாயிருந்து லக்கினத்திற்கு மூன்றும் பாவம் குருவால் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்கு சகோதர விருத்தி உண்டாகும், ஜாதகன் மூத்த சகோதரரில்லாதவன், இளைய இரண்டு சகோதரர்கள் தீர்க்காயுளுடையவர்களையுடையவன், அல்லது மூன்று பேர்களையுடையவன், உடன் பிறந்த சகோதரி மரித்துவிடுவாள், பிறந்தாலும் சகோதரிகள் இறந்துவிடுவார்கள், ஜாதகனுடைய சகோதரர்கள் மூவர்களும் கங்கா யாத்திரை செய்து கங்கையில் ஸ்நாநம் செய்து திரும்புகையில் மத்தியில் வழியில் ஒருவன் மரணமடைந்து நற்கெதியடைவான்.

(68) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி ஒன்பதாம் பாவத்தில் குரு இருந்தால் ஜாதகன் இரண்டு சகோதரர்கள் தீர்க்காயுசுடையவர்களும், ஒரு விதவையான சகோதரியுமுடையவனுவன்.

(69) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி லக்கினத்திற்கிரண்டாவது பாவத்தில் செவ்வாயிருந்தால் ஜாதகன் வாச்சாலகமுடையவன், சாதுரிய யுக்தியுடையவன், சேர்க்கவும், கலைக்கவும் வல்லவன், மத்திய வயதில் நல்ல யோகமுடையவன், பாலியம் முதல் சுகமுடையவன், ஆறுவது வயதில் அக்ஷராப்பியாசமுடையவன், (பிராம்மண ஜன்ம ஜாதகன் எட்டாம் வயதில் உபநயனமடைவான்,) பதினுன்கல்லது பதினைந்து வயதில் விவாகமடைவான், தன் ஜன்ம பூமிக்கு மேற்கில் அல்லது தன் கிராமத்தில் ஜாதகன் விவாகமடைவான், ஜாதகன் மனைவி குரூர மனதுடையவள், பாபம், புண்ணியமென்பதில்லாதவள், தயை யில்லாதவள், ஜாதகன் விவாகமடைந்த பிறகு மனைவியின் பாபம் காரணமாக வியாதியடைவான்.

(70) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி ராகு லக்கின கேந்திரத்திலிருந்து ஐந்தாம் பாவத்தில் சனியிருந்தால் ஜாதகன் ராகு திசை

வந்த உடன் ரோக பீடையடைவன், லக்கினத்திலுள்ள ராகுவை குரு ஒன்பதாம் பாவத்திலிருந்து பார்த்தால் ரோக நிவாரண மடைவான்.

(71) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி லக்கின பாவத்தில் ராகு இருந்து சூரியனால் பார்க்கப்பட்டால் ஜாதகன் வாயு, பித்தம் முதலியவற்றால் நோயடைவன், குரு ஒன்பதாம் பாவத்திலிருந்து ஷை ராகுவைப் பார்த்தால் ஜாதகனுக்கு மத்திய வயதில் ஷை ரோக அனுபவமுண்டாகும், மேற்படி குருவின் திசையில் சுவாச காச சம்பந்தமான நோயுண்டாகும், அதற்குச் சாந்தியாக கோடி மிருத்தியுஞ்ஜெய ஜபமாவது, சிவ லிங்கப் பிரதிஷ்டையாவது, அதுவுமில்லாவிடில் சொர்ண லிங்க தானமாவது செய்தால் மேற்படி சுவாசகாசம் நிவாரணமாகும்.

(72) ஜென்ம லக்கினம் மகரம் (க்ஷமாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி மகரத்தில் விப்பிரகாலத்தில் இருந்தால் ஜாதகனுக்கு விப்பிர குலத்தில் ஜனனம் நேரிடும்.

(73) ஜென்ம லக்கினம் மகரம் (க்ஷமாம்சம்) ஆகி லக்கின பாவத்தைப் பாபர்கள் பார்த்தாலும், பாபர்கள் லக்கின பாவத்திலிருந்தாலும் ஜாதகன் தாய் பிரசவத்தில் அதிக வேதனையடைவாள்

(74) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி நான்காம் பாவாதிபதி பாபருடன் கூடி லக்கின பாவத்திலிருந்தால் ஜாதகன் தாய் பீடையடைவாள், ஜாதகன் சூதி தோஷ பயமடைவன், மாந்த ஜுர ரிண பயத்தாலும், வைசூரியாலும் வாத பயமடைவன்.

(75) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி லக்கின பாவாதிபதி கேந்திரத்தில் சுய க்ஷேத்திரத்தில் வர்க்கோத்தமாம்சத்திலிருந்து எட்டாம் பாவாதிபதி சுப க்ஷேத்திரத்தில் சுபருடன் கூடியிருந்து சுக்கிரனும் கேந்திர திரிகோணத்திலிருந்தால் ஜாதகன் சகல தோஷங்களும் விலகி அறுபத்தேழு வயதடைவான்.

(76) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி சூரியன் குருவுடன் கூடி மீன ராசியில் இருந்து ஒன்பதாம் பாவாதிபதி கேந்திர ராசியிலிருந்து பாபாம்சத்தில் பாபரால் பார்க்கப்பட்டிருந்து மேற்படி சூரியன் காதாம்சத்திலிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் பிதுரு சுகம் குறைவாயுடையவன், ஜாதகன் தகப்பன் தயையுடையவன், விஷ்ணு பக்தி மதாச்சாரமுடையவன். தேவப் பிராம்மண பக்தியுடையவன், கல்வி அறிவுடைய விவேகி.

(77) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி மூன்றும் பாவத்தில் இருக்கப்பட்ட சூரியன் சனியால் பார்க்கப்பட்டாலும், சூரியன் மூன்றும் பாவத்தில் சனியுடன் கூடியிருந்தாலும் ஜாதகன் தகப்

பன் இராஜஸேவையால் ஜீவிப்பான், மிலேச்சப் பிரபுவால் சுகமடைவான், எழுத்து உத்தியோகமுடையவன், அரசாங்க ஜீவனமுடையவன், பிரசித்தி உடையவன், பற்பல வழிகளில் தனம் சம்பாதிப்பான்.

(78) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி மூன்றும் பாவத்திலுள்ள சூரியன் குருவால் பார்க்கப்பட்டாலும், குருவுடன் கூடியிருந்தாலும் ஜாதகன் தகப்பன் தர்ம புத்தியுடையவன், விசேஷ விஷ்ணு பக்தியுடையவன், விஷ்ணு கைங்கரிய தர்மம் செய்யும் புத்தியுடையவன், தேவ க்ஷேத்திரத்தில் பிரசித்தியுடையவன், தானாகவே தர்மம் செய்பவனாவன்.

(79) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி ஒன்பதாம் பாவாதிபதி செவ்வாயால் பார்க்கப்பட்டால் ஜாதகன் தகப்பன் தோட்டம், க்ஷேத்திரம் முதலிய சுகமுடையவன், வயதின் மத்திய காலத்தில் மகா சுகமுடையவன், பற்பல தேசங்களிலும் கீர்த்தியுடையவன், அரசாங்கத்தில் நல்ல யோகமடைவான், இராஜ சன்மானமடைவான், பிரபல உத்தியோக சித்தியுடையவன், விசேஷ பிரபுப் பிரீதியுடையவன், வாகனாதி யோகமுடையவன், சுயார்ஜிதமுடையவன், மத்திய வயதில் வெகு கீர்த்தியுடையவன், இவன் ஜாதகனுடைய இரண்டாந்திசையில் மரிப்பான்.

(80) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி நான்காம் பாவாதிபதி தன் உச்ச ராசியிலிருந்து நான்காம் பாவத்தில் சுபனான புதனிருந்தாலும், பார்த்தாலும் ஜாதகன் தாய் சுகமுடையவன்.

(81) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி நான்காம் பாவாதிபதி தன் உச்ச ராசியிலிருந்து நான்காம் பாவத்தைச் சுபர் பார்த்தாலும், நான்காம் பாவத்தில் சுபரிருந்தாலும், சந்திரன் பன்னிரண்டாம் பாவத்தில் இருந்தாலும் ஜாதகன் தாய் விசேஷ சுகமுடையவள், குணமுடையவள், பொறுமையும், பதி பக்தியுமுடையவள், கொஞ்சம் ரோகமுடையவள், பதிவிரதை, வமிச விருத்தியுடையவள், பாக்கிய விருத்தியும், யோகமுமுடையவள், முன் ஜென்ம பாபம் காரணமாக புத்திர சோகவதியாவாள், இவள் ஜாதகனுடைய நான்காந்திசையில் மரிப்பாள்.

(82) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி மூன்றும் பாவாதிபதியாகிய குரு சுய க்ஷேத்திரத்தில் மூன்றும் பாவத்தில் சூரியனுடன் கூடியிருந்து செவ்வாய் லக்கின பாவத்தில் பாபருடன் (சனியுடன்) கூடியிருந்தால் ஜாதகன் அற்ப சகோதரமுடையவன், சகோதரியுமப்படியே, ஜாதகனுடைய மூத்த சகோதரன் ஒருவன் தீர்க்க வயதுடையவனாயினும் அற்பாயுளாய் மரிப்பான், மூத்த சகோதரியுமிப்படியே.

(83) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி மாளவீ யோகத்தில் புத திரிம்சாம்சத்தில் பிறந்தவன் வெளுப்பு நிறமுடையவன், மிக்க அறிவாளி, அதிருஷ்டசாலி, மேதாவி, சூட்டுத் தேகி, விஷ்ணு பக்தி மதாச்சாரமுடையவன், வைஷ்ணவ மதாச்சாரமுடையவன், மூன் றல்லது நான்கு பாஷைகளறிபவன், வேறு பாஷைகளிலும் ஞான முடையவன், ஜோதிட சாஸ்திரமறிவான், சாந்த சுபாவமுடைய வன், ஆசையுடையவன், கல்வியுடையவன்.

(84) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி இரண்டாம் பாவாதிபதி ராகுவுடன் கூடி லக்கினத்திலிருந்தால் ஜாதகன் லோப குணமு டையவன், திட்டமாய்ப் புசிப்பவன், மர்ம மனமுடையவன், துஷ்ட சங்கமமுடையவன், கிருத்தியா கிருத்தியங்களை அறிவான், நியமி, மவுன யோகமுடையவன், பிதுரு சுகமில்லாதவன், பரஸ்திரீ சங் கமமுடையவன், நல்ல வாலிப சரீரமுடையவன், உபாயம் தெரிந்த வன், சேர்க்கவும், கலேக்கவும், நான்குந்தெரிந்தவன்.

(85) ஜென்ம லக்கினம் மகரம் (சுமதாம்சம், பூர்வ பாகம்) ஆகி சனி உப லக்கினத்தில் இருந்தால் ஜாதகன் தாய் பிரசவத் தில் வெகு பாதையடைவாள், சூதி தோஷ பயமுண்டாகும், அப் போது சந்திரன் ஆறும் பாவத்தில் இருந்து மேற்படி சனியின் பார்வையுடையவனுனல் ஜாதகன் தாய் பீடையுமடைவான், உத்த ராம்சத்தில் பிறந்தவனுடைய தாய் மரித்துவிடுவாள், பாலாரிஷ்டத் தால் ஜாதகனும் ஜன்ம திசையில் மரித்துவிடுவான்.

(86) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி லக்கின பாவாதிபதி பன் னிரண்டாம் பாவத்தில் குருவின் ராசியிலிருந்து எட்டாம் பாவாதி பதி குருவுடன் கூடி கும்ப ராசியில் இருந்து லக்கினத்தில் இரு சுபர்களிருந்தால் ஜாதகன் பால தோஷம் நீங்கி சர்வ தோஷமும் விலகி அறுபத்தேழு வயதடைவான்.

(87) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி சூரியன் இரண்டாம் பாவத்தில் குருவுடன் கூடி இருந்து ஒன்பதாம் பாவாதிபதி லக் கின கேந்திரத்தில் இருந்தால் பிதுரு சுகமுடையவன், ஜாதகன் தகப்பன் வெகு ஆயுளுடையவன், வியாபார ஜீவனமுடையவன், தேவப் பிராம்மண பக்தியுடையவன், பற்பல வியாபாரத்தால் சுக மடைபவன், தனத்தைச் சம்பாதிப்பதில் சமர்த்தன், மறு மனேவி யுடையவன், அவளிடமும் புத்திரனுடையவன், தாயாதிப் பிரபல முடையவன், வயதின் கடைசி காலத்தில் அற்ப சுகியாவன், தன் ஜனங்களில் பிரசித்தியுடையவன், ஜாதகனுடைய மூன்றுந்திசை யில் தகப்பன் மரிப்பான்.

(88) ஜென்ம லக்கினம் மகரம் (சுமதாம்சம் பூர்வ பாகம்) ஆகி ஆறும் பாவத்தில் சந்திரனிருந்து சனியால் பார்க்கப்பட்டாலும்,

சந்திரன் சனியின் அம்சத்திலிருந்தாலும் ஜாதகன் தாய் அற்ப சுகமுடையவள், பதி பக்தியுடையவள், சற்குணமுடையவள், பதிவிரதை, மங்களமுடையவள் ஆயினும் ஜாதகனுடைய பாலியத்தில் மூன்றாவது வயதில் மரித்துவிடுவாள். உத்தராம்சத்தில் பிறந்தவன் தாய் ஆறாவது வயதில் மரிப்பாள்.

(89) ஜென்ம லக்கினம் மகரம் (சுதாம்சம் பூர்வ பாகம்) ஆகி மூன்றாம் பாவாதிபதியாகிய குரு ராகுவுடன் கூடி இரண்டாம் பாவத்திலிருந்து செவ்வாய் ரிஷப ராசியில் விசோத்தியாம்சத்தில் இருந்தால் ஜாதகனுக்கு உடன் பிறப்புண்டாகாது, பேத சகோதரியுடையவன், உத்தராம்சத்தில் பிறந்தவனுக்கு ஒரு சகோதரியிருப்பாள், வேறு சிலர் இரண்டு சகோதரிகள் இருப்பர் என எண்ணுகின்றனர்.

(90) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி சுக்கிர திரிம்சாம்சத்தில் கேஸரி யோகத்தில் சந்திரன் காமினியம்சத்தில் இருந்தால் ஜாதகன் ரூப லக்ஷணமுடையவன், கல்வி அறிவுடையவன், அழகிய முகமுங்கண்களுமுடையவன், சம தேகமுடையவன், விஷய போகத்திலாசையுடையவன், ஸ்திரீ மூலம் அதிக செலவுடையவன், மத்திய வயதுடையவன்.

(91) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி சுக்கிரன் லக்கின கேந்திரத்தில் இருந்தால் ஜாதகன் ரூப லக்ஷணமுடையவன், பிறருக்கு இங்கிதமறிந்து சொல்லுந்திறமையுடையவன், சதுரன், உற்சாகமுடையவன், பிரபு சிநேகமுடையவன், நாடகாலங்கார காவியங்களில்பிரியன், ஸம்ஸ்கிருதப்பிரியன், தேவப்பிராம்மண விசுவாசி, பிதுரார்ஜித சுகமுடையவன், சுயார்ஜிதமாக பிரபல வியாபாரத்தால் பொருள் தேடுபவன், சொர்ண வியாபாரம் செய்பவன். கொஞ்சம் ரதந வியாபாரமும் உடையவன், வயோமத்தியில் பிரசித்தியுடையவன், வியாபார மூலம் திரவியவந்தனவன்.

(92) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி ஆறும் பாவாதிபதி லக்கின கேந்திரத்தில் இருந்தால் ஜாதகன் பிரபல தாயாதி சத்துரு உடையவன்.

(93) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி ஆறும் பாவத்தைச் சனி பார்த்தாலும், ஆறும் பாவத்தில் சனியிருந்தாலும் ஜாதகன் சத்துரு நாசம் செய்பவன், பிரதாபமுடையவன்.

(94) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி லக்கினத்திற்கைந்தாம் பாவத்தில் செவ்வாயிருந்து இரண்டாம் பாவத்தில் குரு ராகுவுடன் கூடி கும்ப ராசியிலிருந்து சனியுடன் குரு கூடியிருந்தாலும், சனியால் மேற்படி குரு பார்க்கப்பட்டாலும் ஜாதகன் இறந்த சந்ததி

யடைவான், அந்த தோஷ பரிகாரமாகும்படி சுப்பிரமணிய விரதமும், பாலகிருஷ்ண தானமும் செய்தால் ஜாதகன் இரண்டு புத்திரரும், இரண்டு புத்திரிகளுமுடையவன், மூன்று நான்கு சந்தானம் முதலில் மரித்துவிடும்.

(95) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி ஒன்பதாம் பாவாதிபதியாகிய புதனும், சுக்கிரனும் கூடி லக்கின கேந்திரத்தில் இருந்து ஷ புத திசை வந்தால் ஜாதகன் மேற்படி திசையில் விசேஷ பாக்கியமும், வீட்டில் லக்ஷ்மீ விலாஸமுமடைவான், தன் புத்திரனின் அதிருஷ்ட யோகத்தால் தன தான்னிய விருத்தியடைவான், தன் புக்தியிலேயே விசேஷ பாக்கியமுடையவனுவன், சுக்கிர புக்தியிலும் அதிக சௌக்கியம் அடைவன்.

(96) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி பன்னிரண்டாம் பாவத்தில் பாபக் கிரகமிருந்தால் ஜாதகன் நரகத்தையடைவான்.

(97) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி பன்னிரண்டாம் பாவத்தில் சுபரும், பாபரும் கூடியிருந்தால் பாப புண்ணியங்கள் இரண்டும் சமமாயிருக்கும்.

(98) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி விரயாரூடத்தில் ராகு, கேதுக்களிருந்தால் ஜாதகனுக்குத் தாழ்மையான வமிசத்தில் ஜனன மேற்படும்.

(99) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி பன்னிரண்டாம் பாவத்தில் குரு இருந்து நவாம்சத்தில் ஷ குரு சுபாம்சத்தில் இருந்தால் ஜாதகனுக்கு மறு ஜன்மம் பிராம்மண ஜன்மமாக நேரிடும்.

(100) ஜென்ம லக்கினம் மகரம் (பிரபாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி பத்தாம் பாவத்தில் சூத்திர காலத்தில் இருந்தால் சூத்திர ஜன்மத்தில் சீமந்த கர்ப்பத்தில் அல்லதிரண்டாவது கெற்பத்தில் மூத்த சகோதரனில்லாதவனுக ஜனனமாவான்.

(101) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி பிரபாம்ச பூர்வ பாகத்தில் லக்கின பாவாதிபதி தன் உச்ச ராசியிலிருந்து ராகு கேதுக்களுடன் கூடியிருந்தாலும், ராகு கேதுக்களால் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் துர்க்காரண்ணிய சமீபத்தில் தேவாலயமில்லாத இடத்தில் சிறிய கிராமத்தில் நதி தீரத்தில் வடக்குத் தெற்கு வீதியில் மேற்கு முக வாயிற்படியுள்ள வீட்டில் தாய்ப் பாட்டன் வீட்டில் ஜனனமும், வாஸமும், உத்தர பாகத்தில் மகா நதிக்குச் சமீப பெரிய கிராமத்தில் தேவாலயத்துடன் கூடிய கிழக்கு மேற்கு வீதியில் வடக்குப் பார்த்த வீட்டில் ஜனனமுமடைவான்.

(102) ஜென்ம லக்கினம் மகரம் பிரபாம்சம் பூர்வ பாகம் ஆகி சந்திரன் சுபருடன் கூடினுல் ஜாதகன் தாய் பிரசவத்தில் அற்ப

வேதனையடைவாள், உத்தராம்சத்தில் அதிக பாதையும், கொஞ்சம் சூதி தோஷ பயமும் உண்டாகும், மேற்படி சந்திரன் செவ்வாயால் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்குக் கொஞ்சம் பாலாரிஷ்ட பயமும், சிசுக்களுக்குரிய ரோகமுமடைவன், மாந்த ஜுரம், வைசூரி, ரிணம் முதலியனவும் உண்டாகும்.

(103) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி லக்கின பாவாதிபதி தன் உச்ச ராசியில் இருந்து புதனுடனும் கூடியிருந்து எட்டாம் பாவாதிபதி சுய க்ஷேத்திரத்தில் குருவுடன் கூடியிருந்தால் ஜாதகன் சகல தோஷங்களும் விலகி அறுபத்தைந்து வயதடைவான், முப்பத்திரண்டு, நாற்பது, ஐம்பது இந்த வயதுகளில் பீதியடைவான், அக்காலங்களில் குரு சக்கிர தானமும், மிருத்தியுஞ் ஜெய ஜபமும், சாகதானமென்கிற ஆடு தானமும் செய்தால் அபமிருத்தி நீங்கிச் சுகமுண்டாகும்.

(104) ஜென்ம லக்கினம் மகரம் ரிஷப நவாம்சம் (பிரபாம்சம்) ஆகி சூரியன் எட்டாம் பாவத்தில் குருவுடன் கூடியிருந்து ஒன்பதாம் பாவாதிபதி தன் உச்ச ராசியிலிருந்தாலும், காதாம்சத்தில் சத்துருவுடன் கூடியிருந்தாலும் ஜாதகன் தகப்பன் சொற்ப சுகமுடையவன், சகோதரருடையவன், தகப்பன் வர்க்கத்தில் யாராவது ஒருவன் தன் கோத்திரத்தில் தத்து ஆய்விடுவான், ஒரு சகோதரி சுகமில்லாதவளாக விதவையாகி துக்கிப்பவளையுடையவன், ஜாதகன் தகப்பன் விஷ்ணு பக்தி, தேவப் பிராம்மண பக்தி முதலியன உடையவன், கல்வியறிவுடைய விவேகி, அற்ப கல்வியுடையவனாயினும் கீர்த்தியுடையவன், பூமியால் நல்ல ஜீவனமுடையவன், சுயார்ஜித விவசாய பலனுமுடையவன், சகோதரனால் சுகமும், பயிர்த் தொழிலால் சுகமுடையவனுமாவான், தானிய வியாபாரத்தில் க்ஷேமமடைவன், திரவிய சம்பாதனையில் சமர்த்தன்.

(105) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி ஒன்பதாம் பாவத்திற்கொன்பதாம் பாவாதிபதியாகிய சுக்கிரன், செவ்வாய், சனியிவர்களுடன் கூடி பத்தாம் பாவத்தில் இருந்தால் ஜாதகன் தகப்பன் அற்ப பாக்கியமுடையவன், சாந்த சுபாவமுடையவன், நற்குணமுடையவன், பயிர் செய்பவன், தானியம் சேர்த்து லாபமடைவான், ஜன்ம தேசத்தை விட்டு வெளி தேசத்தில் சௌக்கியமுடையவன், மனைவி வர்க்க ஜனங்களை அடைந்தும், பந்து வர்க்க ஜனங்களாலும் சுகமுடையவனாகி, க்ஷேத்திர கிராம விசாரணையுடையவனாகவும், மாமனார் வீட்டில் வசிப்பவனாகவுமாவன், ஜாதகனுடைய தகப்பனார் ஜாதகனுடைய ஜன்ம திசையிலேயே மரித்துவிடுவார்.

(106) ஜென்ம லக்கினம் மகரம் ரிஷப நவாம்சம் (நாடியம்சப் பிரபாம்சம்) ஆகி லக்கின பாவத்திற்கு நாலாம் பாவாதிபதி பத்

தாம் பாவத்திலிருந்து சந்திரன் லக்கின கேந்திரத்திலிருந்தால் ஜாதகன் தாய் சுகமுடையவள், பொறுமையுடையவள், பதி பக்தியுடையவள், கர்வி, சிடுசிடுத்துப் பேசுபவள், சமர்த்தை, முன் பாபம் காரணமாக விதவையாகித் துக்கிப்பாள், இவள் ஜாதகனுடைய மூன்றுந்திசையில் மரித்துவிடுவாள்.

(107) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி மூன்றும் பாவாதிபதியாகிய குரு எட்டாம் பாவத்தில் எட்டாம் பாவாதிபதியுடன் கூடியிருந்து மூன்றும் பாவம் புதனல் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்கு ஒரு இளைய சகோதரனுண்டாகி அவன் பிரபலமடைவான், ஜாதகன் சகோதரிகளில்லாதவன்.

(108) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி பத்திர யோகத்தில் குரு திரிம்சாம்சத்தில் பிறந்தவன் வெளுப்பும், சம தேகமுமுடையவன், பித்த சுபாவமான தேகமுடையவன், கொஞ்சம் வாயுவுமுடையவன், அறிவாளி, தீரன், அழகிய முகமுங் கண்களும் பொருந்தியவன், திட்டமாய் புசிப்பவன், ரகசிய மனதுடையவன், கொஞ்சம் மூர்க்க சுபாவமுடையவன், விஷ்ணு பக்தி மதாச்சாரமுடையவன், ஹரி சங்கர பக்தியும், தேவப் பிராம்மண பக்தியும், கல்வி அறிவும், விவேகமுமுடையவன், எழுதுவதில் சமர்த்தன், இரண்டு பாஷைகளை நன்கு படிப்பான்.

(109) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி லக்கின பாவாதிபதி ராகுவால் நன்கு பார்க்கப்பட்டு, பத்தாம் பாவத்தில் இருந்தால் ஜாதகன் துராலோசனை செய்பவன், சேர்க்கவும், கலைக்கவும் வல்லவன், மித்திர வஞ்சனை செய்பவன்.

(110) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி நான்காம் பாவாதிபதி பத்தாம் பாவத்தில் இருந்து சனி, சுக்கிரனிருவருடனும் கூடியிருந்தால் ஜாதகன் குதிரையேறுவதில் வல்லவன், சாகஸமும், சற்ஜனப் பிரியமுமுடையவன், தாய் வமிச ஜனப் பிரியமுடையவன், தேஜசுடையவன், தெளிந்த புத்தியுடையவன்.

(111) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி இரண்டுக் கிரகங்கள் சுய க்ஷேத்திரத்தில் (புதன் கன்னியிலும், சுக்கிரன் துலாத்திலும்) இருந்தால் ஜாதகன் சந்தன வஸ்திர புஷ்ப அலங்காரப் பிரியன், அழகிய ரூபவதிகளின் நாயகன், பாக்கிய யோகவிருத்தியுடையவன்.

(112) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி பத்தாம் பாவத்தில் பத்தாம் பாவாதிபதி சுய க்ஷேத்திரத்தில் இருந்தால் ஜாதகன் க்ஷேத்திர மூலம் ஜீவனமுடையவன், பயிர்த் தொழிலில் எப்போதும் தனம் சம்பாதிப்பவன்.

(118) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி ஏழாம் பாவாதிபதி பலவானுகி லக்கினபாவத்திலும், சுக்கிரன் பத்தாம் பாவத்தில் வர்க்

கோத்தமத்திலுமிருந்தால் ஜாதகன் மனைவி நல்ல வமிசத்தில் பிறந்தவள், கணவன் மனதை அனுசரிப்பவளாவள், ஜாதகன் மனைவியால் விசேஷ சுகமுடையவன், இருபத்தைந்தாம் வயதில் நல்ல யோகமும், முப்பதுக்கு மேல் முப்பத்திரண்டில் தாயின் மரணமும், முப்பத்தைந்தில் நற்கீர்த்தியும், யோக காலத்தில் மனஸ்தாபமும், அம்மான் நாசமும், நாற்பதில் நல்ல யோகமும், ஐம்பதில் விசேஷ புகழும், ஆயுள் வரை யோகமும் அடைவன், வயோதிக வயதில் புத்திரன், மனைவி முதலியோரால் சுகமடைவான்.

(114) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி மூன்றும் பாவத்தில் சுபக் கிரகம் இருந்தால் ஜாதகன் மாமனர் விசேஷ சுகமடைவார், விவாகத்தின் பிறகு ஜாதகன் அம்மானல் விசேஷ பாக்கியமும், சுகமும் அடைவான், வீட்டில் லக்ஷ்மீ கடாக்ஷமுடையவனவன்.

(115) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி ஐந்தாம் பாவாதிபதி பத்தாம் பாவத்தில் கேது, செவ்வாய், சனி இவர்களுடன் கூடியிருந்தாலும், ஒன்பதாம் பாவாதிபதி தன் உச்ச ராசியிலிருந்து புத்திர காரகனுகிய குரு, சூரியனுடன் கூடி எட்டாம் பாவத்திலிருந்தாலும் ஜாதகன் சந்தான நாசமுடையவன், அதற்காக சேது ஸ்நாநமும், தேவார்ச்சனையும், நாகப் பிரார்த்தனையும், சுப்பிரமணிய விரதமும், சொர்ண சூரிய தானமும் செய்தால் இரு புத்திரர்களும், இரு புத்திரிகளுமடைவான், இன்னும் அதிகம் பிறந்தால் இவர்கள் தவிர மற்றவர்கள் மரித்துவிடுவார்கள்.

(116) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி பன்னிரண்டாம் பாவாதிபதி சூரியனுடன் கூடி எட்டாம் பாவத்திலிருந்து பன்னிரண்டாம் பாவம் குருவால் பார்க்கப்பட்டால் ஜாதகன் அதிசாரத்தினல் மரிப்பான், பிறகு உத்தமமான ஜன்மமடைவான்.

(117) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி லக்கின பாவாதிபதி வர்க்கோத்தமத்திலிருந்தாலும், உச்சத்திலிருந்தாலும் சுக்கிரனுடன் கூடியிருந்தால் ஜாதகன் நற்செய்கையுடையவனுகவும், தனமுடையவனுகவுமிருந்து, லோகாந்தரத்திலும் சுகமுடையவனுவான்.

(118) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி சுக்கிரன், தன் உச்சத்தில் அல்லது சுய க்ஷேத்திரத்தில் அல்லது சுய க்ஷேத்திர கேந்திரத்தில் பலமுடையவனுக இருந்தால் ஜாதகன் மாலவீ யெனப் பெரிய யோகமடைந்து யானை, குதிரைகளுடன் கூடியும், பல்லக்கு முதலிய உடையவனுகவும், பூமி, நகரம், குணம் (அதாவது தன்மை) கூட்டத்திற்கு தலைமை முதலிய உடையவனுகவும், நன் மனைவியுடையவனுகவும், அன்னிய ஸ்திரீகளிடம் மனப் பற்றுடையவனுகவும், சமுத்திரத்திற்கதிபதியாகவும், ஜன பதியாகவும், எப்போதும் போகசாலியாகவும் விளங்குவன்.

(119) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி சகட யோகத்தில் சிம்ம ராசியில் குருவும், மகரத்தில் பாக்கியாவஸ்தையில் சந்திரனும் இருவரும் சுபாம்சத்தில் இருந்தாலும் அல்லது சுபருடன் கூடியிருந்தாலும் ஜாதகன் அதிக யோக பலனடைவான், மத்தியில் மத்தியில் யோக பங்கமேற்படுமென்கிற விசாரமடைவான், ஆயினும் ஜாதகன் சகல போகமுடையவனுவான்.

(120) ஜென்ம லக்கினம் மகரம் (சுமதியம்சம்) ஆகி பூர்வ பாகத்தில் லக்கின பாவாதிபதி தன் உச்ச ராசியில் விப்பிரகாலத்தில் இருந்தால் ஜாதகன் தூர்க்காரண்ணிய கிரிப் பிராந்திய சிறிய கிராமத்தில் கிழக்கு மேற்கு வீதியில் தெற்குப் பாகத்தில் உள்ள வீட்டில் ஐந்தல்லது ஆருவது கர்ப்பத்தில் ஜனனமும், உத்தர பாகத்தில் நதி தீரத்தில் பெரிய கிராமத்தில் தேவாலயத்துடன் கூடிய ஊரில் தெற்கு வடக்கு வீதியில் கிழக்குப் பக்கத்திலுள்ள வாடையில் ஜனனமும் அடைவன்.

(121) ஜென்ம லக்கினம் மகரம் (சுமதியம்சம் பூர்வ பாகம்) ஆகி லக்கின பாவாதிபதி பத்தாம் பாவத்தில் சூரியனுடன் கூடியிருந்தால் ஜாதகன் தாய் பிரசவத்தில் அற்ப வேதனையும், உத்தர பாகத்தில் அதிக வேதனையும், சூதி தோஷ பயமுமடைவாள், சந்திரனை அக்காலம் ஷை சனி பார்த்தால் ஜாதகன் தாய் பயமடைவாள், ஜாதகனுக்கு ஐந்து வருஷம் வரையில் பாலாரிஷ்ட பயமும், வைசூரி, ரிணம், மாந்த ஜுரம் முதலியவற்ருல் பீடையுமுண்டாகிப் பிறகு சுகமுண்டாகும்.

(122) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி ஒன்று எட்டுக்குடைய பாவாதிபதிகள் கூடி பத்தாம் பாவத்தில் கேந்திரத்தில் இருந்து பத்தாம் பாவாதிபதி பதினேராம் பாவத்தில் செவ்வாயுடன் கூடியிருந்து எட்டாம் பாவத்தில் குருவும் இருந்தால் ஜாதகன் சகல தோஷங்களும் விலகி, அறுபத்திரண்டு வயது பரமாயுளாயடைவான், மேலும் இவனுக்கு இருபது வயதிற்கு மேல் அற்ப பீடையும், முப்பத்துநான்கில் சன்னி பாத ஜுர பயமும், மேக உபத்திரவமும், நாற்பதில் ரிண பீதியும், நாற்பத்தாறினுமிப்படியேயும், அறுபதில் அபமிருத்து பயமுமுண்டாகும், அக்காலங்களில் கிரகப் பிரீதியும், ஆயுள் ஹோமமும், மிருத்தியுஞ் ஜெய ஜெபமும், சாகதானமும் செய்தால் ஜாதகன் குணமடைந்து அறுபத்திரண்டு வயது வரை ஜீவித்திருப்பான்.

(123) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி சூரியன் சனியுடன் கூடி பத்தாம் பாவத்திலிருந்து ஒன்பதாம் பாவாதிபதி தன் உச்ச ராசியிலிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் விசேஷ சுகமுடையவன், தயாளு, தீரன், சகோதர ஈனன், சிவ பக்தி மதாச்சாரமுடையவன்,

தேவப் பிராம்மண பக்தியுடையவன், கல்வியறிவுடன் கூடியவன், திட்டமாய்த் தெரிந்தவன், சாஸ்திர ஞானமில்லாதவன், வேத மோதுபவன்.

(124) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி சூரியன் பத்தாம் பாவத்திலிருந்து சனியுடன் கூடியிருந்தாலும், சனியால் சூரியன் பார்க்கப்பட்டாலும் ஜாதகனுடைய தகப்பன் சாகஸமுடையவன், துஷ்ட புத்தியுடையவன், சேர்க்கவும், கலைக்கவும் வல்லவன், யுக்தியாய் பிரசங்கம் புரிபவன், இரு தாரமுடையவன், போகத்திலாசையுடையவன்.

(125) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி துலா ராசியிலுள்ள சூரியன் கேதுவுடன் கூடியிருந்தாலும், கேதுவால் பார்க்கப்பட்டாலும் ஜாதகனுடைய தகப்பன் மந்திர சாஸ்திரத்தை ஆராய்ச்சி செய்பவன், ஜோதிடத்தில் பிரசித்தியுடையவன், திரவிய சம்பாதனையில் சமர்த்தன், பாலியத்தில் அற்ப சுகமும், மத்திய வயதில் விசேஷ சுகமும், கீர்த்தியுமடைவான்.

(126) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி ஒன்பதாம் பாவத்திற் கொன்பதாம் பாவாதிபதியாகிய சுக்கிரன் பதினோராம் பாவத்தில் செவ்வாயுடன் கூடியிருந்தால் ஜாதகன் தகப்பன் க்ஷேத்திரப் பிரபுவால் சுகமும், ராஜாங்கப் பிரசித்தியுமுடையவன், கல்வியால் நல்ல கீர்த்தியும், க்ஷேத்திரத்தால் தனமுமடைவான்.

(127) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி ஒன்பதாம் பாவாதிபதி தன் உச்ச ராசியில் தன் அம்சத்திலிருந்து விருச்சிக ராசியில் தனுசு நவாம்சத்தில் அல்லது மீன நவாம்சத்தில் உள்ள சுக்கிரனால் நவாம்சத்தில் புதன் பார்க்கப்பட்டால் ஜாதகனுடைய தகப்பன் சேது யாத்திரை, கங்கா ஸ்நாந பலன் முதலியன அடைவான், தேசாந்தரத்தில் சஞ்சாரம் செய்பவன், வெளி தேசங்களில் கீர்த்தியுடையவன், வெளி தேச சஞ்சார காலத்தில் பிரபுத் துவேஷமும், ஸ்தான நாசமுமடைவன், சத்துரு பயமுடையவன், பிறகு சுய தேசம் வந்து பிரபுப் பீதியும், புத்திர சோகமும் அடைவன், வயோதிக வயதில் சுகமுடையவனுன ஜாதகனுடைய தகப்பன் ஜாதகனுடைய ஜன்ம திசையில் மரித்துவிடுவான்.

(128) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி நான்காம் பாவாதிபதி பதினோராம் பாவத்தில் சுய க்ஷேத்திரத்தில் விருச்சிகத்தில் சுக்கிரனுடன் கூடியிருந்தால், சந்திரன் சுய க்ஷேத்திரத்திலிருந்து உச்ச ராசியிலிருக்கும் சனியால் பார்க்கப்பட்டு இருந்தால் ஜாதகன் தாய் விசேஷ சுகமும், பதி பக்தியும், அன்ன தானப் பிரியமும், கர்வமும், குரூர சொல்லுமுடையவள்.

கும்ப லக்கினம்

(1) ஜென்ம லக்கினம் கும்பம் (சுமதியம்சம்) ஆகி லக்கின பாவத்தில் குரு இருந்தாலும், லக்கின பாவத்தைக் குரு பார்த்தாலும் ஜாதகன் புண்ணிய க்ஷேத்திர சமீபத்தில் நதி தீரத்தில்தேவாலயத்துடன் கூடிய சிறிய கிராமத்தில் தகப்பன் வெளியில் இருக்கும்போது தாய் வீட்டில் ஜனனமடைவான், உத்தர பாகத்தில் ஜனனமானுல் பெரிய கிராமத்தில் சமுத்திர சமீபத்தில் அக்கிரகாரத்தில் உறவினர் வீட்டில் ஜனனமாவான், ஜாதகன் தாய் பிரசவத்தில் அற்ப வேதனையடைவாள்.

(2) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி லக்கின பாவாதிபதி எட்டாவது பாவத்திலிருந்து எட்டாம் பாவாதிபதி சிம்ம ராசியில் சூரியனுடன் கூடியிருந்து குரு கேந்திர திரிகோணத்தில் இருந்தால் ஜாதகன் எல்லாத் தோஷங்களும் விலகிச் சுகமடைவான், எழுபத்து மூன்று வயதுடையவனுவான், இவனுக்கு பதினறு, பத்தொன்பது இந்த வயதுகளில் வைசூரியாலும், குல்ம ரோகத்தாலும் பயமுண்டாகும், முப்பத்திரண்டில் தேக பாதையுடையவன், ரத்தம் விழுவதால் பீடையடைவான், முப்பத்தெட்டிலும், நாற்பத்தெட்டிலும் இப்படியேயுண்டாகும், பிறகு அறுபதாவது வயதில் அபமிருத்துவும் அடைவான், அக்காலம் சாகதானமும், நவக் கிரக சக்கிர தானமும் செய்தால் ஜாதகன் சுகமடைவான், மேலும் ஞாயிற்றுக்கிழமையில் சொர்ண சூரியப் பிரதிமையை நன்கு பூஜித்து பிராம்மணனுக்குத் தானம் செய்தால் சகல ரோகங்களும் சீக்கிரமாக விலகி சம்பூர்ண குணமடைவான்.

(3) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி சூரியன் சுய க்ஷேத்திர கேந்திரத்தில் புதனுடன் கூடியிருந்து ஒன்பதாம் பாவத்தில் குரு இருந்தால் ஒன்பதாம் பாவாதிபதி கேதுவுடன் கூடியிருந்தாலும் ஜாதகனுடைய தகப்பன் விசேஷ சுகமுடையவனுவான், சகோதர ஹீனன், சிவ பக்தி மதாச்சாரமுடையவன், விஷ்ணு, சிவனிவர்களிடம் பக்தியுடையவன், சாந்த சுபாவமுடையவன், ஆசையுடையவன், வைதீகாச்சார சீலன், வேதமோதுபவன், நியாயவாதி, குருப் பிரியன், சம்ஸ்கிருதப் பிரியன், சீலன், பிரம்ம வித்தைகளை அறிவன், பஞ்ச யக்கியங்களைச் செய்பவன், விரதமுடையவன், மௌனமுடையவன், சாஸ்திர ஆகம புராணங்களின் தத்துவமறிவான், ஷை தத்துவங்களைப் போதிப்பவன், கல்வியால் ஜீவிப்பவன், வெளி தேசங்களில் புகழுடையவன், திரவிய சம்பாதனையில் சமர்த்தன், தன் ஜனங்களிடம் பிரசித்தியுடையவன் .

(4) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி ஒன்பதாம் பாவத்திற் கொன்பதாமிடமான ஐந்தாமிடத்தில் செவ்வாயிருந்தால் ஜாதகன்

தகப்பன் இரு தாரமடைவான், எப்போதும் புகழடைவான், சேது ஸ்நாநம் முதலிய செய்யும் புண்ணியவான், வயோதிக வயதில் அற்ப சுகமும், தன் பிரபுவுடன் மனஸ்தாபமும், யாதனையும், மனத் துன்பமும், புத்திரனால் சுகமும், வயோதிக வயதில் அன்ன தானம் செய்தலும், பற்பல வழிகளில் தன் வரவும், சற்காரியங்களும், சுப சம்பவங்களும், புத்திரப் பிரபலமும் அடைந்து ஜாதகனுடைய ஐந்தாந்திசையில் ஜாதகனுடைய தகப்பன் மரணமுமடைவான்.

(5) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி நான்காம் பாவாதிபதி கேதுவுடன் கூடி ஆறுவது பாவத்திலிருந்து கேந்திரத்தில் சந்திரன் நீச்ச ராசியிலிருந்து சனியால் பார்க்கப்பட்டாலும், சூரியன் சுய க்ஷேத்திரத்திலிருந்தால் ஜாதகன் தாய் சுகமுடையவள், விசேஷ குணவதி, பொறுமையுடையவள், புத்திரனுக்கிஷ்டமானதைச் செய்பவள், பதிவிரதை, அன்ன தானம் செய்பவள், முன் ஜென்ம பாபம் காரணமாக இறந்த பிள்ளை பெறுபவள், இவள் ஜாதகனுடைய ஐந்தாந் திசையில் சுமங்கலியாகவே மரிப்பாள்

(6) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி மூன்றும் பாவாதிபதியாகிய செவ்வாய் ஐந்தாம் பாவத்திலிருந்து ஒன்பதாம் பாவத்திலிருக்கும் குருவால் பார்க்கப்பட்டால், எட்டாம் பாவத்திலுள்ள சனியால் (ஷை செவ்வாய் சத்துரு க்ஷேத்திரத்திலுள்ளவர்) பார்க்கப்பட்டாலும் லக்கினத்திற்கு மூன்றும் பாவத்தைக் குரு பார்த்தால் ஜாதகன் அற்ப சகோதரனுடையவன், மூத்த சகோதரனில்லாதவன், ஒரு சகோதரனிளையவனையுடையவன், புத்திரீ புத்திர சுகமுள்ள இரண்டு சகோதரிகளுமுடையவன்.

(7) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி எந்த நாடியம்ச அம்சத்தில் பிறந்தவனுக்கும் செவ்வாய் பலஹீனனாக ஐந்தாம் பாவத்திலிருந்தால் ஜாதகனுக்கு எட்டு சகோதரர் மரித்துவிடுவார்கள், ஜாதகனுடைய பின் சகோதரன் சுகமும், அரசாங்கப் பிரசித்தியுமடைவான், எழுத்து வித்தையில் மேன்மையடைவான், திரவிய சம்பாதனையில் சமர்த்தன், அரசனாலும், அரசாங்கத்தாலும் சுகமடைவான், பிராம்மணனாலும், பிராம்மணப் பிரபுவாலும் உத்தியோக லாபமும், வாகனமும், கீர்த்தியும், நீச்சப் பிரபு வசமாக சுகமும், விசேஷ பிரபு பிரீதியும், விசேஷ கிராமாதிகாரமும், தன் தேசத்தில் கீர்த்தியும், மனைவி புத்திர சுகமும், சுயார்ஜிதமும், தன் ஜனங்களில் மேன்மையும், மத்திய அந்திய வயதுகளில் வெகு கீர்த்தியுமுடையவன் ஆவான்.

(8) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி சுக்கிர திரிம்சாம்சத்தில் பண்டித யோகத்தில் பிறந்தவன் வெளுப்பு நிறமுடையவன், மிக்க அறிவாளி, அதிருஷ்டசாலி, வாச்சாலகன், சம தேகமுடையவன், நல்ல ரூபமுடையவன்.

(9) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி லக்கின பாவாதிபதி எட்டாம் பாவத்திலிருந்து மிதுன ராசியிலுள்ள செவ்வாயால் பார்க்கப் பட்டால் ஜாதகன் பித்த சுபாவமுடையவன், கொஞ்சம் வாயு பீடையுடையவன், சீக்கிர கோபீ, தெளிந்த முகமும், தெளிந்த அறிவுமுடையவன், சிவ பக்தி மதாச்சாரமுடையவன், விஷ்ணு சிவ பக்தியுடையவன், தேவதை, பிராம்மணனிவர்களிடம் பக்தி யுடையவன், நன்மை, தீமைகளையறியுந்திறனுடையவன், கல்வியு டையவன், இனிமையாய்ப் பேசுபவன், விநயமுடையவன், தர்ம ரக்ஷகன்.

(10) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி இரண்டாம் பாவத்திற்கு சனி பார்வையிருந்தால் ஜாதகன் சேர்க்கவும், கலைக்கவும் பிரியமு டையவன், விசேஷ குரு பக்தியுடையவன், சத்தியவாதி, நற்புத்தி யுள்ளவன், வேதாத்தியயனமுடையவன், (சுருதி, ஸ்மிருதி) பிரம்ம வித்தையறிவான்.

(11) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி பத்தாம் பாவாதிபதி ஐந்தாம் பாவத்திலிருந்து ஒன்பதாமிடத்திலுள்ள குருவால் பார்க் கப்பட்டாலும், சூரியன் ஏழாம் பாவத்தில் சாரதாம்சத்திலிருந் தால் ஜாதகன் சற்கருமமுடையவன், ஆச்சார சீலன், அக்கினியில் ஹோமம் முதலிய செய்பவன், யாக சித்தியுடையவன், சம்பூர்ண வேதாந்த ஞானமுடையவன், ஞான சாஸ்திரப் பிரியன், தத்து வத்தை அறிவான், தத்துவ போதனை செய்பவன், பாலியம் முதல் சுகமுடையவன், இவன் ஐந்தாம் வயதில் அக்ஷர ஞானமுண்டா கும், (பிராம்மண ஜன்மத்தில் பிறந்தவனுக்கு ஒன்பதாவது வயதில் உபநயனம் நடக்கும்) கல்வி லாபமும், அதிக சுகமும், ஜாதகனு டைய தகப்பன் கொண்டாடப்பட்ட கீர்த்தியுடையவன், ஜாதகன் பிறந்த ஊருக்கு வடக்கில் விவாகமடைவான், வெளுப்பு நிறமுள்ள வளும், பதி பக்தியுடையவளும், அன்னதானப் பிரியமுள்ளவளும், பதிவிரதையும், வமிச விருத்தியுடையவளும் ஜாதகனுக்கு மனைவி யாவாள், ஜாதகன் இருபது வயதிற்கு மேல் மனைவி சுகமும், பிர பலமும், பிரசித்தியுமடைவன், இருபத்திமூன்றும் வயதில் பிரசித் தியும், புத்திரன் பிறந்து அச்சிசு மரித்தலுமடையும், இருபத்தேழு வயதில் சற்புத்திரனுண்டாவான், அப்புத்திரன் தெய்வ யோகானுக் கிரகமுடையவன், தன் இன ஜனப் பிரபு மூலம் சுகமும், க்ஷேத்திர சுகமும் உடையவன், புத்திர விருத்தியும், சுகமும் உடையவன், முப்பது வயதிற்கு மேல் மனஸ்தாபமும், முப்பத்தைந்து வயதில் குல்ம ரோக பீடையும் உண்டாகும், உடனேயே ரோக நிவர்த்தி யும், புத்திர வர்க்கத்தில் சுபமும், தன் வீட்டில் யோக விருத்தியும், விப்பிர பிரபுவால் யோகமும், சுயார்ஜிதமும், கல்வியால் சுகமும், கீர்த்தியும், திரவிய சம்பாதனையும், சமர்த்தும், பற்பல வழிகளில்

தன வரவும், முப்பத்தேழாம் வயதில் அதிக சுகமும், தன் இளைய சகோதரனுக்கு நல்ல மேன்பாடான யோகமும், அரசாங்கப் பிரசித்தியும், உத்தியோகமும், வீட்டில் லக்ஷ்மீ கடாக்ஷமும், ஜாதகனுடைய நாற்பதாவது வயதில் தாய் மரணமும், நாற்பத்திரண்டில் தகப்பன் மரணமும், மனத் துன்பமும் உண்டாகி, ஐம்பதாவது வயதில் கீர்த்தியும், ஆயுள் வரை யோகமும் உண்டாகும், வயோதிக வயதில் புத்திரனுக்கு யோகமும், ஜாதகனுக்குப் புத்திரனால் சுகமும், கீர்த்தியுமுண்டாகும்.

(12) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி சுய க்ஷேத்திரத்தில் சூரியனிருந்து அவர் புதனுடனும் கூடியிருந்து அவர் திசை நான்காந்திசையாகி வந்தால் அந்த சூரிய திசையில் ஜாதகனுக்கு பிற்பாதியில் விசேஷமடைவான்.

(13) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி சந்திரன் நீச்ச ராசியிலிருந்து அவர் திசை ஐந்தாவது திசையாகி வந்து ஷ சந்திரன் எட்டாம் பாவத்திலிருக்கும் சனியால் பார்க்கப்பட்டிருந்தால் அந்த திசையில் ஜாதகனுக்கு சௌக்கிய விருத்தியும், கல்வியால் தன வரவும், மித்திர பிரபுவால் சுகமும், திசையின் முடிவில் க்ஷேம லாபங்களும், சுய புக்தியில் அற்ப சுகமும், அதிக விரயமும், மனைவி புத்திரன் முதலியவர்களுக்குச் சுகமும், கல்வியால் தனமும், வீட்டில் லக்ஷ்மீ கடாக்ஷமும் உண்டாகும்.

(14) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி ஐந்தாம்பாவாதிபதி ஏழாவது பாவத்தில் சூரியனுடன் கூடியிருந்து செவ்வாய் ஐந்தாம் பாவத்திலிருந்து குரு ஒன்பதாம் பாவத்திலிருந்தால் ஜாதகன் மூன்று புத்திரர்களும், இரு புத்திரிகளுமுடையவன், மற்றவை பிறந்தாலும் மரித்துவிடும் யோகமுடையவன்.

(15) ஜென்ம லக்கினம் கும்பம் (சம்பகாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி சுய க்ஷேத்திரத்தில் மகர ராசியிலிருந்து க்ஷத்திரிய காலத்தில் பிறந்தவன் ராஜ வம்சத்தில் மூத்த சகோதரனில்லாதவனாகவும், பேத சகோதரனுடையவனாகவும், ஒரு சகோதரி இப்படியேயுடையவனாகவும் ஆவான்.

(16) ஜென்ம லக்கினம் கும்பம் (சம்பகாம்சம் பூர்வ பாகம்) ஆகி லக்கின பாவத்தில் செவ்வாயிருந்தாலும், பார்த்தாலும் ஜாதகன் தாய்க்குப் பிரசவத்தில் அதிக வேதனையுண்டாகும், உத்தர பாகத்தில் ஜனித்தால் விசேஷ பாதையும், அக்காலம் தாய்க்குப் பீடையுமுண்டாகும்.

(17) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி சந்திரனுடைய திரிகோணத்தில் சனியிருந்தால் ஜாதகன் தாய் அற்ப பீடையடைவாள்,

ஜாதகனுக்கு பாலாரிஷ்டமும், மாந்த ஜுர பயமும் உண்டாகும், அப்போது சந்திரனுக்கும், சனிக்கும் குரு பார்வையிருந்தால் சுகமுண்டாகும்.

(18) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி லக்கின பாவாதிபதி சுய க்ஷேத்திரத்தில் மகரத்தில் இருந்து குருவால் பார்க்கப்பட்டு எட்டாம் பாவாதிபதியும், பத்தாம் பாவாதிபதியும் சிம்ம ராசியில் கேந்திரத்தில் இருந்தால் ஜாதகன் சகல தோஷமும் விலகி, அறுபத்தோறு வயதடைவான், வேறு சிலர் ஐம்பத்தொன்பதே வயதுடையவனென எண்ணுகின்றனர், இருபத்தொன்பது, முப்பத்தாறு, நாற்பது, ஐம்பது இந்த வயது காலங்களில் ஜாதகனுக்குத் தேக பீடையுண்டாகும், அக்காலம் சாந்தி செய்தால் ஜாதகனுக்கு சுகமுண்டாகும், அதாவது சனி சக்கிர தானம், நவக்கிரக பூஜை, சொர்ண லிங்க தானம் முதலிய தானம் செய்தால் ஜாதகன் சுகம் உடையவனுவான்.

(19) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி சூரியன் சுய க்ஷேத்திரத்தில் இருந்து ஒன்பதாம் பாவாதிபதி மித்திர ராசியில் இருந்தால் ஜாதகன் தகப்பன் விசேஷ சுகம் உடையவன்.

(20) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி சூரியன் ஏழாம் பாவத்தில் ராஜ்ஜியாவஸ்தையில் இருந்தால் ஜாதகன் தகப்பன் ராஜ யோகமடையவன், சகோதரருடையவன், ஒரு சகோதரியுடையவன், ராஜ குணம் பொருந்தியவன், ஆஸ்தானத்தில் சுதந்திரமுடையவன்.

(21) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி கடக ராசியில் ஒன்பதாம் பாவாதிபதி தன் உச்ச நவாம்சையில் இருந்தால் ஜாதகன் தகப்பன் சிம்மாதனபதியாவான், யானை, குதிரையுடையவன், அனேக சேனைகளைப் போஷிப்பான், குதிரை ஏறுவதில் வல்லவன், அநேக வேலையாள்களுடன் கூடியவன், சத்திர சாமராதிகளுடையவன், பாடகர்களுக்குத் தலைவன் ஆவான்.

(22) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி சூரியன் புதனுடன் கூடி ராஜ யோக கலாம்சத்தில் இருந்தால் ஜாதகன் தகப்பன் கல்வியுடையவன், இனிமையாய்ப் பேசுபவன், விநயமுள்ளவன், எப்போதும் சரசப் பிரியன், உற்சாகமுடையவன், பிரபு சக்தியுடையவன், சௌரியமும், சாகஸமும், கீர்த்தியுமுடையவன், பராக்கிரமமுடையவன், சுதந்திரமுடையவன், சத்துருவை அழிப்பவன், பிரதாபமுடையவன், பிறர் ரகசியங்களை வெளிப்படுத்துபவன், உபாயத்தால் காரியங்களை முடித்துக்கொள்பவன், சாஸ்திர ஆகம புராணங்களின் தத்துவமறிந்து ஷெ தத்துவங்களைப் போதிப்பான், நாடக அலங்கார, காவிய, சாஸ்திர சங்கீதப் பிரியன், ஹரி சங்கர பக்தியுடைய

வன், தேவி சக்தியினருளுடையவன், விஷய போகத்திலாசையுள்ள வன், பரதார ரதிப் பிரியன், இரு மனைவியருடையவன், போக ஸ்திரீ சரசமுடையவன், தியாகி, போகமுடையவன், பிரசித்தியு டையவன், தேசாந்திரங்களில் புகழடைபவன், தடாகம், உத்தி யானமிவற்றில் தர்மஞ்செய்பவன், தேவாலயம், சத்திரமிவற்றில் தர் மஞ்செய்பவன், விசேஷ குரு பக்தியுடையவன், யோக சாஸ்திரத் தில் பிரியமுடையவன்.

(23) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி ஒன்பதாம் பாவாதிபதி யைச் சனி பார்த்தால் ஜாதகன் தகப்பன் கொஞ்சம் ரோக சரீரமு டையவன், யவ்வன வயதில் அற்ப ரோகமும், மத்திய வயதில் ரோகாதிகமும், மத்தியத்தில் ராஜ யோகமுமுடையவன், அற்ப ருண பீடையடைவான், வயோதிக வயதில் தர்ம சித்தியுடையவன், புத்திரனால் சுகமுடையவன், ஜாதகனுடைய தகப்பன் ஜாதகனுக் கிரண்டாந்திசையில் மரணமடைவான்.

(24) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி சந்திரன் தன் உச்ச ராசியில் பலத்துடனிருந்து நான்காம் பாவாதிபதி சனியால் பார்க் கப்பட்டு ஆறுவது பாவத்திலிருந்தால் ஜாதகன் தாய் விசேஷ சுக முடையவள், அன்னதானப் பிரியை, பதி பக்தியுடையவள், வம்ச விருத்தியுடையவள், புத்திரனுக்கிஷ்டமானதைச் செய்பவள், தர்ம விருத்தி செய்பவளாவள்.

(25) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி ஜாதகனுக்கு அம்மான் ஸ்தானாதிபதியாகிய சந்திரன் தன் உச்ச ராசியிலிருந்து எட்டாம் பாவத்திலுள்ள குருவால் பார்க்கப்பட்டால் ஜாதகனுடைய அம் மான் சௌரியம், சாகசம், கீர்த்தி முதலியன உடையவன்.

(26) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி ஆறும் பாவத்தில் சனி யிருந்தாலும், பார்த்தாலும் ஜாதகனுடைய அம்மான் பந்துக்களு டன் துவேஷமும், கலஹமும் அடைவான்.

(27) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி ஆறும் பாவத்தில் சுக் கிரனிருந்தால் ஜாதகனுடைய அம்மான் சுகமடைவான்.

(18) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி சிம்ம ராசியில் செவ் வாய் சூரியனுடன் கூடி கேந்திர பாவத்திலிருந்து பதினோராம் பாவத்தில் கேது இருந்தாலும், பார்த்தாலும் ஜாதகனுக்குச் சகோ தர சுகமுண்டாகாது, ஒரு பேத சகோதரனும், ஒரு பேத சகோ தரியுமிருப்பர்.

(29) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி தன் உச்ச ராசியில் ஆறும் பாவாதிபதியிருந்தால் ஜாதகனுடைய மாற்று சகோதரன் பிரசித்தியடைவன், ராஜ யோகப் பெருக்குடையவன், ராஜ்ஜிய தந்

திரத்தில் சுபுத்தியுடையவன், சேர்க்கவும், கலைக்கவும் வல்லவன், கடினமான தண்டனையிடுபவன், பிரதாபி, பராக்கிரமமுடைய வன், சுதந்திரன், வெகு சேனை குதிரைகளுக்கு யஜமானனுவன், குதிரை ஏறுவதில் வல்லவன், தேஜசுடையவன், தெளிந்த அறிவு டையவன், யானை, தேர், குதிரை முதலிய அனேக வாகனம், அநேக சேனை, அனேக வேலையாள் முதலிய உடையவன், சத்திர சாமர யோகமுடையவன், வணங்குவோர்களுக்குத் தலைவன்.

(30) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி சனி பன்னிரண்டாம் பாவத்திலுமிருந்து ஷ சனி சிம்மாசனும்சத்திலுமிருந்தால் ஜாத கனுடைய பேத சகோதரன் மகாராஜனுவான், பேரிகை, மிருதங்கம், புள்ளாங்குழல் முதலிய வாத்திய கோஷமுடையவன், தேவதா துவிஜ பத்தியுடையவன், சௌரிய, சாகஸ, கீர்த்தியாதிகளுடையவ னுவன், ஆஸ்தானத்தில் சர்வ சுதந்திரன், தியாக போகாதி குணங்க ளுடையவன், ஆயினும் முன் பாப வசத்தினுல் அற்பாயுள் யோக முடையவனுவான்.

(31) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி ஹம்ஸ யோகத்தில் குரு திரிம்சாம்சத்தில் பிறந்தவன் கறுப்பு நிறமுடையவன், சம தேகமு டையவன், ரூபமுடையவன், நற்புகழுடையவன்,சமர்த்தன்,அழகிய முகமுங்கண்களுமுடையவன், கல்வியுடையவன், இனிமையாய்ப் பேசுபவன், விநயமுடையவன், தர்ம ரக்ஷகன், சாஸ்திர ஆகம புரா ணங்களையும், தத்துவங்களையும் கற்று, கற்ற அவைகளைப் போதிப் பான், நிர்மலமான மனதுடையவன், தாதா, எல்லோருக்கும் சம்ம தையுடையவன், உபகாரம் செய்பவன், அன்ன தாதா, நித்தியம் சுகமுடையவன், ஸ்ரீமான், பயந்தவரை ஆதரிப்பவன், ஹரி சங்கர பக்தியுடையவன், தேவப் பிராம்மணர்களை ரக்ஷிப்பவன்.

(32) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி லக்கினருடத்தில் கேது இருந்தால் ஜாதகன் சீக்கிரகோபி, ஆயினும் சந்தோஷமுடையவன்.

(33) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி பாக்கிய கேஸரி யோகம் உண்டானுல் ஜாதகன் மகாராஜனுவான்.

(34) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி இரண்டாம் பாவம் சனி யால் பார்க்கப்பட்டால் ஜாதகன் சௌரியம், சாகஸம், கீர்த்தி முத லியன உடையவன்.

(35) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி ஏழாம் பாவாதிபதி சுய க்ஷேத்திரத்திலிருந்தால் ஜாதகன் மூன்று தாரமுடையவன், மூன்று தாரமுடையவ னுயினும் போக ஸ்திரீ சரசப் பிரியன், பதினுன்காம் வயதில் பிதுரரிஷ்டமுடையவன், அல்லது பதினைந்தில் பிதுரரிஷ் டம் ஏற்படும், பதினுருவது வயதில் பின்ன சகோதரன் மரிப்பான்,

பதினெட்டு அல்லது பத்தொன்பதாம் வயதில் விவாகமடைபவன், ராஜ்ய தந்திரத்தில் வல்லவன், சுதந்திரமுடையவன், தேசாந்தரத்தில் கீர்த்தியடைவான், நல்ல மனைவியுடையவன், இருபது வயதிற்கு மேல் நல்ல யோகமுடையவன், இருபத்திரண்டாவது வயதில் புத்திர லாபமுடையவன்.

(36) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி ஐந்தாம் பாவாதிபதி கேந்திரத்தில் சிம்ம ராசியில் செவ்வாய், சூரியனிவர்களுடன் கூடியிருந்து ஐந்தாம் பாவத்தில் ராகு இருந்தால் ஜாதகன் நாக சாந்தி, சுப்பிரமணிய விரதம் முதலியவற்றால் நல்ல தீர்க்காயுளுடைய சந்தானத்தை இருபத்துமூன்றாவது வயதிலடைவான், இருபத்தைந்தாம் வயதில் நற்கீர்த்தியும், முப்பதுக்கு மேல் சுகமும், நாற்பது வயது முதல் தன வரவும், விசேஷ கீர்த்தியும், ஐம்பது வயது முதல் விசேஷ புகழும், வயோதிக வயதில் புத்திரனால் யோகமும் அடைவான்.

(37) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி செவ்வாய் ஏழாம் பாவத்தில் சூரியன், புதனிவர்களுடன் கூடியிருந்து ஷை செவ்வாய் ஜன்ம தாராதிபதியாகி அவருடைய திசை வந்தால் அந்த திசையில் ஜாதகன் தகப்பன் ரிண ரோகாதி மேக நோய் பீடையடைவன், அதற்காக ருத்திரப் பிரீதி ஜபம் செய்தால் சுகமுண்டாகும்.

(38) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி சுக்கிரன் சர (கடக) ராசியிலிருந்து செவ்வாய் ஏழாம் பாவத்திலிருந்தால் ஜாதகனுடைய மூத்த மனைவியும், இரண்டாம் மனைவியும் சற்புத்திரனுடையவர்கள், மூன்றாம் மனைவி புத்திரீ புத்திரருடையவள், பர்த்தாவுக்கினியவள், இவள் இரண்டு புத்திரிகளுமிரண்டு புத்திரரும் தீர்க்காயுளுடையவர்களைப் பெறுவாள்.

(39) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி மிதுன ராசியில் ராகு இருந்து அவருடைய திசை வந்தால் சுபாசுப பலனிரண்டும் சமமாயடைவன், தர்ம மார்க்கத்தில் நடப்பவன், விசேஷ புத்திர சுகமடைவான்.

(40) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி லக்கினத்திற்கேழாம் பாவத்தில் செவ்வாயிருந்து ஷை செவ்வாய்க்குக் கேந்திரத்தில் சந்திரனிருந்தாலும்,

(41) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி செவ்வாய் கேந்திரி கோணத்தில் மித்திர ராசியில் மித்திருடன் கூடியிருந்தாலும் மேற்படி யோகமுண்டாகும், மேற்படி யோகத்தில் பிறந்தவன் பலமுள்ள தேகமுடையவன், சம்பத்தும், கீர்த்தியும், நல் ஒழுக்கமும், ஆயுத தாரணமுடையவனும், மந்திர ஜபமுடையவனும், மந்திர

க்ஷேமமுடையவனும் ஆகி, அரசனல்லது அரசனுக்குச் சமமானவனாகி, லாவண்ணியமும், சூரியனுக்குச் சம காந்தியுடையவனும், மிருதுவும், அழகுமுடைய சரீரமுடையவனும், தியாகியும், சத்துருக்களை ஜெயிப்பவனும், தனிகனும், மிதமான அறுபது வயதுடையவனும், சுகியும், சேனாதிபதியாகவும், சேனை, குதிரைகளுக்கதிபனாகவுமாவான், ஆயுள் வரை பாக்கியமுடையவனாவான்.

(42) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி லக்கினத்திற்கு ஏழாம் பாவத்தில் சூரியனிருந்தால் லக்கினாதி யோகம் என்னும் யோகமுண்டாகும், மேற்படி யோகத்தில் பிறந்தால் ஜாதகனுக்கு கீர்த்தியும், சம்பத்தும் உண்டாகும், மேலும் ஸ்ரீமானாகவும், பிரசித்த பிரபுவாகவும், நித்தியம் குதிரை முதலிய வாகனமும், பல்லக்கு முதலிய உடையவனாகவும், நல் மனைவி, சற்புத்திர பாக்கியம், தூய்மையான காந்தி, புகழ், சௌரியம், சாகஸம் முதலியனவும் உடையவனாவான்.

(43) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி லக்கின பாவாதிபதி வர்க்கோத்தமாம்சத்தில் சுய க்ஷேத்திரத்தில் மகர ராசியிலாவது இருந்து அல்லது தன் உச்சத்திலாவதிருந்து குருவால் பார்க்கப் பட்டால் ஜாதகன் வேதாந்த நிஷ்டையுடையவனாகி பரமாத்துமாவை அறிவான்.

(44) ஜென்ம லக்கினம் கும்பம் (மாலாம்சம்) ஆகி மாலிகா யோகத்தில் சூத்திரகாலத்தில் ஜனித்தவன் பாக்கியவானாக ஆவான்.

(45) ஜென்ம லக்கினம் கும்பம் (மாலாம்சம் பூர்வ பாகம்) ஆகி லக்கின பாவாதிபதி கலுஷாம்சத்தில் இருந்து சனியுடன் கூடியிருந்தாலும், சனியால் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் சமுத்திரப் பிராந்திய பூமியில் நகரத்தில் தேவாலயத்தில் பாக்கியமுள்ள வமிசத்தில் சிவ பக்த குலத்தில் ஜனனமடைவான், உத்திர பாகத்தில் சிறிய கிராமத்தில் நதி தீரத்தில் ஜெனனமடைவன், பூர்வ பாகத்தில் பிறந்தவன் சுப ஆகிருதியுடையவன், சகோதரப் பிராதாஉடையவன்.

(46) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி புதன் லக்கின கேந்திரத்தில் இருந்தால் ஜாதகன் தாய் பிரசவத்தில் அற்ப வேதனையடைவாள்.

(47) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி சனியுடன் சந்திரன் கூடியிருந்தால் ஜாதகனுக்குச் சூதி தோஷ பயமுண்டாகும், ஷை சனி சந்திருடன் குரு கூடியிருந்தால் சௌக்கியமுண்டாகும், ஆயினும் ஜாதகன் கொஞ்சம் மாந்த ஜுர பீடையடைவான்.

(48) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி லக்கின பாவாதிபதி குருவுடன் கூடி தனுசு ராசியில் இருந்து எட்டாம் பாவாதிபதி

லக்கின பாவத்திலிருந்து சனியால் பார்க்கப்பட்டு லக்கினருடத்தைச் செவ்வாய் பார்த்தால் ஜாதகன் மத்தியாயுளடைவான்.

(49) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி பதினோராம் பாவத்தில் லக்கின பாவாதிபதி கலுஷாம்சத்திலிருந்து எட்டாம் பாவாதிபதி லக்கின கேந்திரத்தில் குடிலாம்சத்திலிருந்தாலும், கேந்திர திரிகோணங்களிலிருந்தாலும் மத்தியாயுளாக ஜாதகன் அறுபத்தைந்து வயதடைவான், மாலாம்ச உத்திர பாகத்தில் பிறந்தவன் ஐம்பத்திரண்டு வயதடைவான்.

(50) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி ஒன்பதாம் பாவாதிபதி தன் உச்ச ராசியிலிருந்து சூரியன் மகர ராசியில் பாக்கியாம்சத்திலிருந்தால் ஜாதகன் தகப்பன் அற்ப சுகமுடையவன், பாக்கியமுடையவன், சிவ பக்த மதத்தையடைவன், வியாபாரத்தால் தனமுடையவன், கப்பல் வியாபாரப் பிரபு, ஆயினும் தர்ம புத்தியுடைவன், பற்பல தேசங்களிலும் பிரசித்தியுடையவன், தியாகமுடையவன், கெம்பீர புத்தியுமுடையவன், எப்போதும் லாபமடைபவன், லக்ஷத்திற்கு மேற்பட்ட தனமுடையவன், விசேஷ கீர்த்தியுடையவன், ஜாதகனுடைய மூன்றுந்திசையில் ஜாதகனுடைய தகப்பன் மரிப்பான்.

(51) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி நான்காம் பாவாதிபதி ராகுவுடன் கூடி இரண்டாம் பாவத்திலிருந்து சந்திரன் சனியுடன் கூடி பதினோராம் பாவத்திலிருந்தால் ஜாதகன் தாய் சுகமுடையவள், குணவதி, சுத்தமுடையவள், பதி பக்தியுடையவள், அன்ன தானப் பிரியை, வமிச விருத்தியுடைய இவள் சுமங்கலியாகவே ஜாதகனுடைய இரண்டாந்திசையில் மரிப்பாள்.

(52) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி நான்காம் பாவாதிபதி தன் உச்ச ராசியிலிருந்தால் ஜாதகன் மாற்றுந்தாயுடையவனுவான்.

(53) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி மூன்றும் பாவாதிபதி சுய க்ஷேத்திரத்தில் மூன்றும் பாவத்திலேயேயிருந்தால் ஜாதகன் அற்ப சகோதரனுடையவனுவான்.

(54) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி பதினோராவது பாவம் முதல் வரிசையாயுள்ள கிரக மாலிகா யோகத்தில் குஜ திரிம்சாம்சத்தில் பிறந்தவன், கறுப்பு நிறமும், சம தேகமும் உடையவன், சம தேகி, மத்திய வயதுடையவன், ரூபலக்ஷணமுடையவன், அழகிய முகமுங் கண்களுமுடையவன், கல்வி அறிவுடைய விவேகி, மிக்க பாக்கியமுள்ள குலத்தில் பிறந்தவன், தேஜசுடையவன், தெளிந்த புத்தியும், சாமர்த்தியமான பேச்சுமுடையவன், நாடக அலங்கார காவிய சங்கத்தில் பிரியன், காமுகன், பர ஸ்திரீ கமனத்

தால் ரோகமுடையவன், சந்தன புஷ்ப வஸ்திர வாசனைப் பிரியன், மேதாவி, பிறருக்கு இங்கிதமறிந்து சொல்வான், சிநேக துரோகம் செய்பவன், துராலோசனையும், லோப குணமும், அனுச்சாரமு முடையவன், பிறர் ரகசியங்களை வெளியாக்குபவன்.

(55) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி குரு சனியுடன் கூடினால் ஜாதகன் பாபத் தொழிலுடையவன், முன் பாபத்தால் பிதுரு துவேஷமுடையவன், சிவ பக்தி மதாச்சாரமுடையவன், பிராம் மண பக்தியுடையவன், சனி சேர்க்கையால் குருவின் பலனாக வயோதிக வயதில் தர்ம புத்தியடைவான்.

(56) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி ஏழாம் பாவாதிபதி சனி யின் ராசியில் (மகரத்தில்) இருந்தால் ஜாதகன் பர ஸ்திரீ சங்கம முடையவன், அப்படியில்லாவிடில் ஜாதகன் மனைவி ரோகவதியா வாள், காலங்கடந்தபின் புத்திரனை பிரசவிப்பவள், முதலில் பெண் பிரஜை பிறக்கும், பிறகு புத்திரனுண்டாவான்.

(57) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி ஏழாம் பாவாதிபதி சனி யின் வீட்டிலிருந்து, குரு சனியுடன் கூடி (தனுசு ராசியில்) இருந் தால் ஜாதகன் சந்தானத் தடையுடையவன், அந்த தோஷத்திற்கு சேது ஸ்நானம், சிவார்ச்சனை, சிவலிங்க தானம், பாலகிருஷ்ண தானம் இவைகள் செய்யவேண்டும், மேலும் இவைகளுக்கு முந் தியே கோதானம் செய்து பிறகு மற்றவைகளைச் செய்யவேண்டும், ஒரு புத்திரனும், நான்கு புத்திரிகளும் தீர்க்காயுளுடையவர்களுண் டாவார்கள், ஜாதகன் விவாகமான பிறகு விசேஷ சுகமும், தன் வீட்டில் லக்ஷ்மீ விலாஸமும், வெள்ளி, பொன் பாத்திரங்களும், நிரந்தரமான அன்ன தானமும், விசேஷ சுகமும், நர வாகனாதி சுக மும், சுயார்ஜிதப் பிரபலமும், கடின தண்டனையிடுதலும், பிரதாப மும் அடைவான், ஆயினும் குரு சனி கூடிய பலனாக கொஞ்சம் அபகீர்த்தியுண்டாகும்.

(58) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி இரண்டாம் பாவாதிபதி பதினோராம் பாவத்தில், சுய க்ஷேத்திர பலத்துடன் சனியுடன் கூடியிருந்தால் ஜாதகன் சந்தேகமின்றி தனவானாவான், மூன்று வாகனமுடையவன், ஆயுள் வரை சுகமும், மேன்மையான லக்ஷ்மீ கடாக்ஷமும், பசுக்களும் உடையவன், விளையாட்டு, நாட்டியம், பாட்டு முதலிய சகலங்களிலும் முதன்மையானவனாகவும், தாயாதி துவேஷ கலாபமுடையவனாகவும், ஸ்திர புத்தியுடையவனாகவும், நல்ல அரசர்களால் மதிக்கப்பட்டவனாகவும், வியாபார தனாதிகமு டையவனாகவும், தன நிதியுடையவனாகவுமாவான்.

(59) ஜென்ம லக்கினம் கும்பம் (துருவாம்சம் பூர்வ பாகம்) ஆகி சூத்திர காலத்தில் லக்கின பாவாதிபதி பதினோராம் பாவத்

தில் இருந்தால் ஜாதகன் மகா நதிப் பிராந்தியத்தில் தேவாலயத்துடன் கூடிய கிராமத்தில் சகோதரனுள்ளவனுக ஜனனமும், உத்தர பாகத்தில் தாய் வீட்டில் ஜனனமும் அடைவான்.

(60) ஜென்ம லக்கினம் கும்பம் (துருவாம்சம் பூர்வ பாகம்) ஆகி குரு லக்கின கேந்திரத்தில் ராகுவுடன் கூடியிருந்து பதினோராம் பாவத்தில் உள்ள சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகன் பிறந்த காலத்தில் ஜாதகன் தாய் அற்ப பிரசவ வேதனையுடையவள், உத்தராம்சமானுல் அதிக வேதனையடைவாள்.

(61) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி சந்திரன் சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகன் தாயின் தோஷத்தால் பயமுடையவனுவன், குரு சந்திரனைப் பார்த்தால் சுகமுடையவனுவன்.

(62) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி லக்கின பாவாதிபதி பதினோராவது பாவத்திலிருந்து எட்டாம் பாவாதிபதி சூரியனுடன் மேஷ ராசியிலிருந்து சந்திரன் பத்தாவது பாவாதிபதியுடன் கூடியிருந்தால் ஜாதகன் பால தோஷம் விலகி சுகமடைவான், அறுபத்தைந்து வயதடைவான், இருபத்தேழுக்குப் பிறகு இவனுக்கு சொற்ப பீடையும், மத்திய வயதில் சகோதர நாசமும் நேரிடும்.

(63) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி சூரியன் தன் உச்ச ராசியில் புதனுடன் கூடியிருந்து ஒன்பதாவது பாவாதிபதியும் தன் உச்ச ராசியிலிருந்தால், ஜாதகன் தகப்பன் விஷ்ணு பக்த மதத்தை அடைவான், சுகமில்லாதவன், மிதமான பாக்கியமுடையவன், தேவப் பிராம்மண விசுவாசமுடையவன், பாலிய வயதில் தரித்திரமுடையவன், மத்திய வயதில் சுகமுடையவன், மிலேச்சனிடம் சேவகத் தொழிலால் ஜீவனமுடையவன், கப்பல் வியாபாரப் பிரபுவிடம் நேசமுள்ளவன், எழுதுவதில் சமர்த்தன், மிலேச்சப் பிரபுவின் வேலை விஷயமாக தீபாந்தரங்களில் சஞ்சரிப்பவன், அதனுல் பிரசித்தியும், மத்திய வயதில் யோகமுமடைவான், ஜாதகனுடைய இரண்டாவது வயதிலேயே கண்டமடைவான்.

(64) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி சந்திரன் கேந்திர திரிகோணங்களிலிருந்து நான்காவது பாவாதிபதி தன் உச்ச ராசியிலிருந்தால் ஜாதகன் தாய் விசேஷ சுகமுடையவள், பதிபக்தியுடையவள், அன்ன தானப் பிரியை, ஜாதகனுடைய மூன்றுந்திசையில் மரிப்பாள்.

(65) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி மூன்றுவது பாவாதிபதி ஐந்தாவது பாவத்தில் சந்திரனுடன் கூடியிருந்தால் ஜாதகன் இரண்டு சகோதரரும்ஒரு சகோதரியுமுடையவன், மூத்த சகோதரன் பிரசித்தன், திரவிய சம்பாதனையில் சமர்த்தன், வியாபாரத்

தில் பற்பல தேசங்களிலும் பிரசித்தியும், வியாபாரத்தினுல் தனமு மடைவான், பிரபு வசியம், வாச்சாலகம் முதலியன உடையவன்.

(66) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி லக்கின பாவாதிபதி பதினோராம் பாவத்திலிருந்து சந்திரன், செவ்வாயிவர்கள் ஐந்தாம் பாவத்திலிருந்தால் ஜாதகனுடைய மூத்த சகோதரன் கடினமான தண்டனையிடுபவன், சேர்க்கவும், கலைக்கவும் வல்லவன், துணிச்சலான குரூர கிருத்தியங்களுடையவன், நர வாகனுதி சம்பத்து நிறைந்தவன், நல்ல யோகமுடையவன், மத்தியாரம்ப வயதுடையவனுக ஜாதகனுடைய மூன்ருந்திசையில் மரிப்பான்.

(67) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி (மிதுன ராசியில்) சந்திரனும், செவ்வாயும் கூடியிருந்து ஏற்படும் மங்கள யோகத்தில் சனி திரிம்சாம்சத்தில் பிறந்தவன் கறுப்பு நிறமுடையவன், சம தேகமுடையவன், பித்த தேகமுடையவன், சூட்டுத் தேகமுடையவன், விஷ்ணு பக்த மதாச்சாரமுடையவன், தேவப் பிராம்மண பக்தியுடையவன், திட்டமாய்ப் புசிப்பவன், மர்ம மனமுடையவன், காமி, அறிவாளி, சாது, வாச்சாலகன், பாலிய வயதில் பிதுரு நாசமுடையவன், ஜாதகன் மூத்த சகோதரனுல் சுகமுடையவன், விசேஷமாக தாய் சுகமுடையவன், எழுதுவதில் சமர்த்தன்.

(68) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி குரு லக்கின பாவத்தில் ராகுவுடன் கூடியிருந்தால் ஜாதகன் அநாச்சாரமுடையவன், பாலிய வயதில் கிலேசமும், தரித்திரமுமடைபவன், மூத்த சகோதரனை அடைவான், பன்னிரண்டு வயதுக்கு மேல் சுகமுடையவன், பாலியத்தில் ஐந்தாவது வயதில் அக்ஷர ஞானமடைவன், அல்லது ஆருவது வயதில் அடைவான், அற்ப கல்வியேயடைவான்.

(69) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி லக்கினத்திற்கேழாவது பாவத்தில் கேது இருந்தால் ஜாதகன் மனைவியால் விசாரமடைவான், அந்த ஏழாவது பாவாதிபதி பலவானுக எங்கிருந்தாலும் பாபருடன் கூடியிருந்தால் ஜாதகன் இரு மனைவியரடைவான், முதலில் பெண் பிரஜையும், காலங்கடந்து புத்திரனுமுடையவனுவன்.

(70) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி ஐந்தாவது பாவத்தில் பாபரிருந்து குரு, ராகுவுடன் கூடியிருந்தாலும், கேதுவுடன் கூடியிருந்தாலும் ஜாதகனுக்கு முதலில் பெண் பிரஜை பிறக்கும், பிறகு நிச்சயமாய் ஆண் சந்ததி பிறக்கும், ஆயுளுள்ள இரண்டு புத்திரரும், மூன்று புத்திரிகளுமுடையவன்.

(71) ஜென்ம லக்கினம் கும்பம் (விச்வம்பராம்சம்) ஆகி சூரியன் லக்கின பாவத்திலிருந்தாலும், பார்த்தாலும் சந்திரன் ரிஷப ராசியில் பாபநவாம்சத்தில் இருந்தால் ஜாதகன் தாய்க்குப் பிரசவத்தில் அதிக வேதனையும், பீடையும், ஜாதகனுக்குப் பால ரோகமுமுண்டாகும்.

(72) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி சூரியன் ஏழாவது பாவத்தில் ஹாலாஹலாம்சத்திலும் சந்திரன் ரிஷப ராசியில் விஷாக்கியாம்சத்திலுமிருந்தால் ஜாதகன் தன் சொந்த தாய்தகப்பன் மூலம் அற்ப சுகமுடையவன், வளர்ப்புத் தாய் மூலமதிக சுகமுடையவனாவன்.

(73) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி எட்டு, ஒன்று முதலிய இந்த பாவாதிபதிகள் கேந்திர ராசிகளிலிருந்து பத்தாவது பாவாதிபதி சுக்கிரனுடன் கூடியிருந்தாலும் குரு கேந்திர திரிகோணங்களிலிருந்தால் ஜாதகன் அறுபத்தைந்து வயதடைவான்.

(74) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி சூரியன் சுய க்ஷேத்திரத்தில் புதனுடன் கூடியிருந்து ஒன்பதாவது பாவாதிபதி சத்துரு ராசியில் இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் சுகமில்லாதவன்.

(75) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி பாக்கியாரூடத்தில் ராகு இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் கீர்த்தி அடைவான், பயிர்த் தொழிலுடையவன், ஹரி சங்கர பக்தியுடையவன், மத்திய வயதில் யோகமுடையவன், தாயாதி பிரபலமுடையவன், திரவிய சம்பாதனையில் சமர்த்தன், சேர்க்கவும், கலைக்கவும் வல்லவன், அற்பாயுளுடையவன், தாயாதி சத்துரு பயமுடையவன், இதற்கே சூரியன் சிம்ம ராசியில் ஹாலா ஹலாம்சத்திலிருந்தால் ஜாதகன் தகப்பன் தாயாதி சத்துருக்களால் சிரச்சேதஞ்செய்யப்பட்டு துர்மரணமாய் மரிப்பான்.

(76) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி நான்காவது பாவாதிபதி நீச்சமடைந்த செவ்வாயுடன் கூடியிருந்து சந்திரன் தன் உச்ச ராசியிலிருந்து சனியால் சந்திரன் பார்க்கப்பட்டால் ஜாதகன் தாய் அற்ப சுகி, பதி பக்தியுடையவள், மேற்படி சந்திரன் விஷாக்கியாம்சத்தில் இருந்தால் ஜன்ம வருஷத்திலேயே ஜாதகன் தாய் பாலியத்திலேயே இறந்துவிடுவாள்.

(77) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி மூன்றுவது பாவத்தில் ராகு இருந்தால் ஜாதகன் சகோதரனில்லாதவன், இரண்டு சகோதரிகளுடையவன், வேறு சிலர் மூன்று சகோதரிகளுடையவன் என எண்ணுகின்றனர்.

(78) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி மூன்றுவது பாவாரூடத்தில் கேது இருந்தால் ஜாதகன் சகோதர ஹீனனாவன், சகோதரிகளுடையவன், வேறு சிலர் பேத சகோதரனுண்டாவானென எண்ணுகின்றனர்.

(79) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி குஜ திரிம்சாம்சத்தில் சச யோக ஜாதகத்தில் பிறந்தவன் வெளுப்பு நிறமுடையவன், சம

அங்கங்களுடையவன், ரூப லக்ஷணம் நிரம்பியவன், அழகிய முக முங்கண்களும் பொருந்தியவன், கல்வி அறிவுடையவன், விவேகி, தேவப் பிராம்மண பக்தியுடையவன்.

(80) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி லக்கின பாவாதிபதி தசமகேந்திரத்தில் இருந்தால் ஜாதகன் கீர்த்தியும், தனமும் உடையவன், சூட்டுத் தேகி, வாத சுபாவமுடையவன், சம அங்கங்களுடையவன், அறிவாளி, தீரன், சேர்க்கவும், கலைக்கவும் தைரியமுடையவன், சுய காரியவாதி, சத்துரு நாசமுடையவன்.

(81) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி லக்கின பாவாதிபதி நான்காம் பாவத்திலிருக்கும் சந்திரனால் பார்க்கப்பட்டால் ஜாதகன் பயிர், பசு முதலிய விருத்தியுடையவன், அரசாங்க பிரசித்தியுடையவன், அரசாங்க ஜனங்களாலடையப்படுவான், க்ஷேத்திர கிராமாதிப் பிரபு ஆவான், தனமுடையவன், தானிபத்தை கிரகிப்பவன், பாலியத்தில் கிலேசமும், தகப்பன் நாசமுமுடையவன், மாதா மகனால் சுகமுடையவன், மேற்படி சனி தத்த யோகாம்சத்தில் இருந்தால் ஜாதகன் தத்து ஆய்விடுவான், கர்த்தரீ யோகமுண்டானால் தாயாதி சத்துரு கலஹங்களுடையவன் ஆவான், சேர்த்து வைத்த திரவியமழியும், இருபது வயதிற்குமேல் பிரசித்தியடைவான், இருபத்தைந்து வயது முதல் திரவிய சம்பாதனையுடையவன், முப்பதிலுமிப்படியே, முப்பத்தைந்தில் நல்ல யோகமடைவான், நாற்பது வயதில் தனிகனவன், வெகு கிராமாதிபதியாவன். பிரபு ஆவன், வாகனம், கீர்த்தி முதலிய அடைந்து பதினாயிரத்துக்கு மேல் சம்பாதிப்பவனாவன், ஐம்பது வயதிலும், வயோதிக வயதிலும் சம்பத்துடையவனாவான்.

(82) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி ஏழாவது பாவாதிபதி சுய க்ஷேத்திரத்திலேயேயிருந்தால் ஜாதகன் சகோதரியின் புத்திரியை மணப்பான், ஜாதகன் ஓரே தாரமடைவான்.

(83) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி சுக்கிரன் செவ்வாயுடன் கூடி ஆறுவது பாவத்திலிருந்தால் ஜாதகன் பர ஸ்திரீ சங்கமமடைவான், வேறு சிலர் இரண்டாந்தாரமுடையவனென் றெண்ணுகின்றனர்.

(84) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி ஐந்தாவது பாவாதிபதி சூரியனுடன் கூடியிருந்து ஏழாவது பாவத்திலுமிருந்து குரு, கேதுவுடன் கூடி துலா ராசியிலுமிருந்தால் ஜாதகன் அற்ப சந்தான யோகமுடையவன், சுப்பிரமணிய விரதம், பாலகிருஷ்ண தானம் முதலியவற்றால் இரண்டு புத்திரரும், மூன்று புத்திரிகளுமாயுளுடையவர்களை அடைவான்.

(85) ஜென்ம லக்கினம் கும்பம் (சுகதாம்சம்) ஆகி பூர்வ பாகத்தில் ஜனித்தவனுக்கு லக்கின கேந்திரத்தில் ராகு இருந்தால் ஜாதகன் தாய் பிரசவத்தில் அற்ப வேதனையடைவாள், உத்தர பாகத்தில் அதிக வேதனையடைவாள்.

(86) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி சந்திரன் மகர ராசியி லிருந்து மேஷ ராசியிலுள்ள சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகன் சூதி தோஷ பயமுடையவன், ஏழு வருஷம் வரையில் பால தோஷ பயமடைவான்.

(87) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி லக்கின பாவாதிபதி நீச்ச ராசியில் சுமநாம்சத்திலும், எட்டாம் பாவாதிபதி ரிஷப ராசி யில் மங்களாம்சத்திலுமிருந்து குரு கேந்திர திரிகோணங்களிலு மிருந்தால் இந்த ஜாதகன் சகல தோஷங்களும் விலகி, எழுபத் தோறு வயது பரமாயுளாக அடைவான், நாற்பதாவது வயதில் தேக ஜாட்டியமும், ஐம்பதில் தேக ஜாட்டியமும், அபமிருத்து பய முமடைவான், அக்காலம் ருத்திரப் பிரீதியும், சொர்ண லிங்க தான மும் செய்தால் ஜாதகன் அபமிருத்து நீங்கிச் சுகமடைவான்.

(88) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி சூரியன் மீன ராசியி லிருந்து குருவால் பார்க்கப்பட்டு ஒன்பதாவது பாவாதிபதி கேந்தி ரத்தில் இருந்தால் ஜாதகன் தகப்பன் வெகு பாக்கியமடைவான், சிவ பக்த மதத்தையடைவான், வீர சைவ மதாச்சாரமுடைய வன், கர்ப்ப ஸ்ரீமான், கப்பல் வியாபாரப் பிரபு ஆவான், மகா பாக் கியமுடையவன், மிக்க உதார குணமுடையவன், தியாகி, போகி, தனாதிகமுடையவன்.

(89) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி ஒன்பதாவது பாவத்தில் சனியிருந்தாலும், பார்த்தாலும் ஜாதகன் தகப்பன் எப்போதும் அனுச்சாரமுடையவன், வெகு வாகன சம்பன்னன், அனேக வேலைக்காரர்கள், சேவகர்கள் முதலியன உடையவன், விஷய போகி, அனேக ஸ்திரீ சங்கம சௌக்கியமுடையவன், மூன்று தார முடையவன், போக ஸ்திரீ சரசத்தில் பிரியன், நல் வழியில் அற்ப மாகவும், கெட்ட வழியில் அனுவசியமாக அதிகமாகவும் செலவு செய்பவன்.

(90) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி சூரியன் மீன ராசியில் தனதாம்சத்தில் இருந்தால் ஜாதகன் தகப்பன் குபேரனுக்குச் சம தனமுடையவனுவான், நிஷ்கங்களாக இரண்டு லக்ஷங்களுக்கதிக மான தனமுடையவன், மேலும் மேலும் விருத்தியுடையவன், மக தைசுவரியமுடையவன், வீடு, தோட்டம், க்ஷேத்திரம் முதலியன உடையவனுகி ஜாதகனுடைய ஐந்தாந்திசையில் மரிப்பான்.

மீன லக்கினம்

(1) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி மகர ராசியில் கும்ப நவாம்சத்தில் சந்திரனிருந்து சந்திராரூடத்தில் சூரியனிருந்து மூன்ருவது காலத்தில் ஜனனமாளுல் ஜாதகன் விஷ்ணு பக்த குலத்தில் சகோதரப் பிராதா இல்லாதவனுகவும், இரண்டு சகோதரிகளுடையவனுகவும் ஆவான்.

(2) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி கும்பத்தில் மூலத் திரிகோண ராசியில் சனி இருந்து அவர் சந்திர லக்கினுதிபதியாகி இருந்தால் ஜாதகனுக்கு மகோததிப் பிராந்தியத்தில்.கீழ் மக்களால் பிடிக்கப்பட்ட பட்டினத்தில் தன் ஊரல்லாத வெளி தேசத்தில் ஜனனமும், உத்தர பாகத்தில் நகர சமீப பெரிய கிராமத்தில் ஜனனமும் நேரிடும், பிரசவ காலத்தில் ஜாதகன் தாய் வெகு வேதனையும், நதி தீரத்தில் வாசமும், கொஞ்சம் சூதி தோஷ பயமும் அடைவா,ள் ஜாதகனுக்குத் தகப்பன் புண்ணியத்தால் சௌக்கியமும், பால தோஷ பயமிருப்பினும் தெய்வாநுகூலமாக சுகமும், தாய்க்குக் கிலேசமும் உண்டாகும்.

(3) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி சனி சந்திர லக்கினுதிபதியாகி சுய க்ஷேத்திரத்தில் பலத்துடனிருந்து லக்கினுதிபதியாகிய குருவும், சுய க்ஷேத்திரத்தில் தனுசு ராசியில் பலத்துடனிருந்தால் ஜாதகன் பாலாரிஷ்டம் நீங்கிச் சுகமடைவான், தீர்க்காரம்ப வயதாக எழுபதுக்கு அதிகமாக ஜீவித்திருப்பான், மேலும் ஆருவது தாராதிபதி திசையில் லக்கினுதிபதி புக்தியில் விருஷப ராசியின் கடைசியில் அல்லது மிதுன ராசியில் கோச்சாரத்தில் சனி வரும்போது ஜாதகன் தேக பீடையடைவான், பூர்வ பாகத்தில் பிறந்த ஜாதகன் எழுபத்து மூன்று வயதடைவான், இவனுக்கு ஒவ்வொரு திசையிலும், சூரிய புக்தியிலும், புத புக்தியிலும் சனி அரிஷ்ட ஸ்தானத்தில் சனி வரும்போது அபமிருத்து பயமும் உண்டாகும், வேறு சிலர் செவ்வாய் புக்தியிலுமுண்டாகுமென்றும், சாந்தியால் சுகமுண்டாகுமென்றும் எண்ணுகின்றனர், மேலும் ஆருவது பாவாதிபதியும், எட்டாவது பாவாதிபதியும் இருக்கும் ராசி அம்ச திரிகோணத்திலும் சனி கோச்சாரத்தில் வரும்போது பீடையும், பன்னிரண்டாமாதிபதியின் அம்ச திரிகோணத்தில் சனி வரும்போது மனஸ்தாபமும், தன் பந்துஜன பீடையும், அதிக விரயமுமேற்படும், எந்தெந்த பாவங்களுக்கு அஷ்டம பாவாதிபதியின் அம்ச திரிகோணத்தில் சனி வருகிருனே அந்தந்த பாவங்களுக்கு (குரூரக் கிரக திசை புக்திகளில்) பீடையுண்டாகும், அந்தந்த காரகருடைய பாவ அம்சங்களிலுமிப்படியே ஹானி உண்டாகும்.

(4) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி கும்பாம்சத்தில் மகர ராசியில் சந்திரனிருந்து நீச்ச ராசியில் தன் உச்ச நவாம்சத்தில் சூரியனிருந்து சிம்மாரூடத்தில் சுக்கிரனிருந்தால் ஜாதகன் பிதிரு சவுக்கியமுடையவன், மேற்படி சூரியனுக்கு மூன்றாமிடத்தில் குரு இருந்தால் ஜாதகன் பிதிரு பாக்கியமுடையவனுவான், மூத்த சகோதரனில்லாதவன், பின் சகோதரமுடையவன், இரண்டு சகோதரிகளுடையவன், இவர்களில் ஒரு சகோதரி விதவையாய்விடுவாள், தன் வயதில் மத்தியில் ஜாதகனுடைய தகப்பன் சகோதரனுல் சோகமடைவான், ஜாதகனுடைய தகப்பன் இரு தாரமுடையவன், ஜன்மமுதலாக பாக்கியமுடைய இவன் இரு மனைவியிடத்திலும் புத்திரருடையவனுவான்.

(5) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி ஒன்பதாமாரூடத்தில் ஒன்பதாமாரூடாதிபதியாகிய புதனிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் விஷ்ணு பக்த மதத்தை அடைவான், சிற்றப்பனுடைய தனத்தால் ஜாதகனுடைய தகப்பன் பிரசித்தியடைவான், மேற்படி ஆரூடத்தில் சுபரிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் பிரசித்தியடைவான், தியாகி, போகமுடையவன், பிரசித்தமுடையவன், யுக்தாயுக்த விவேகமுடையவன்.

(6) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி எட்டாவது பாவத்தில் சூரியனுடன் செவ்வாய் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் சத்துரு வஞ்சனையுடையவன், சத்துரு காரியங்களைக் கெடுப்பவன், சேர்க்கவும், கலக்கவும் சக்தி உடையவன், திரவிய சம்பாதனையில் சமர்த்தன், பட்டு வியாபாரத்தால் ஜீவனஞ்செய்பவன், வாச்சாலகன், சாதுரிய யுக்தியுடையவன், பாலியத்தில் சுகமுடையவன், வயதின் மத்தியில் அற்ப லாபமுடையவன், புத்திரன் பிறந்த பிறகு அதிக விரயமுடையவன், சுய ஜன துவேஷம், கலஹமுதலானவையுடையவன், சத்துருக்களை நாசஞ்செய்பவனுவான்.

(7) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி கும்பாம்சத்தில் மகர ராசியிலிருக்குஞ்சந்திரனுக்கு நான்காமிடத்தில் ராகு இருந்து ராகு நின்ற ராசி நாதனை செவ்வாய் லக்கினத்திற்கெட்டாவது பாவத்தில் சூரியனுடன் கூடியிருந்து சந்திராரூடத்திலும் பாபரிருந்தால் ஜாதகனுக்கு பாலியத்திலேயே தாய் இறந்துவிடுவாள், ஜாதகன் தாய் உடன் பிறந்த சகோதரருடையவன், பதி பக்தியுடைய இவள் ஜாதகனுடைய இரண்டாந்திசையில் ஜாதகனுடைய நான்காவது வயதிலேயே மரித்துவிடுவாள், ஜாதகன் மாற்றாந்தாயுடையவன் ஆவான்.

(3) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி மூன்றாவது பாவாதிபதியாகிய சுக்கிரன் அந்த பாவத்திற்கெட்டாமிடத்தில் அந்த பாவாதி

பதியாகிய குருவுடன் கூடியிருந்து எட்டாம் பாவத்தில் செவ்வாயிருந்தால் ஜாதகனுக்குச் சகோதர சுகமுண்டாகாது, ஜாதகன் இரண்டு சகோதரிகளுடையவன், இரண்டு பேத சகோதரரும் இரண்டு பேத சகோதரிகளுமுடையவன், வேறு சிலர் இரண்டல்லது மூன்று சகோதரிகள் உண்டென்று எண்ணுகின்றனர்.

(9) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி மகர ராசியில் கும்ப நவாம்சத்தில் சந்திரனிருந்து குரு திரிம்சாம்சத்தில் சகட யோகத்தில் ஜனித்தவனுக்கு தேகம் வெளுப்பு நிறம், சம தேகம், வெகு ஆயுள், கல்வி அறிவு, புத்தி, எழுதுவதில் சமர்த்து, ஜாதி வித்தையில் புகழ், ஸம்ஸ்கிருதப் பிரியம், தேவப் பிராம்மண பக்தி, வைஷ்ணவர்களிடம் அதிக அன்பு, விசேஷ விஷ்ணு பக்தி, ரூப லக்ஷணம் முதலிய அமைந்து பாக்கியமும் ஏற்படும்.

(10) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி இரண்டாம் பாவத்தில் ராகு இருந்து அந்த இரண்டாம் பாவத்திற்கதிபதியாகிய செவ்வாய் எட்டாம் பாவத்திலிருந்தால் அவனே பாக்கிய பாவாதிபதியாகி ஒன்பதாம் பாவத்திற்குப் பன்னிரண்டாமிடமான லக்கினத்திற்கு எட்டாம் பாவத்தில் அங்கு இருந்தால்) ஜாதகன் பிறந்த ஜன்ம வருஷத்தில் வெகு தன விரயமும், பாலியத்தில் ஜாதகனுக்கு தாய் மரணமும் உண்டாகும்.

(11) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி பதினொரும் பாவத்தில் செவ்வாயிருந்தாலும், பதினொரும் பாவத்தைச் செவ்வாய் பார்த்தாலும் ஜாதகன் தகப்பன் சகோதர சோகமடைவான், தகப்பன் சகோதரன் பிரசித்தியுடையவன், திரவிய சம்பாதனையில் சமர்த்தன், வியாபாரத்தில் சமர்த்தன், பிதிரு பிராதா இருதாரமுடையவன், புத்திர சுகமுடையவன், ஆயினும் பிதுரு சகோதரன் சுகமுடையவன், தாயாதி திரவியத்தை அபகரிப்பவன்.

(12) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி ரிஷப ராசியில் சந்திரன் மேஷ நவாம்சத்திலிருந்து ஷை சந்திரனுக்குக் கேந்திரத்தில் சுக்கிரனிருந்தால் விப்பிரகாலத்தில் சிவ பக்த குலத்தில் சகோதரனில்லாதவனாக விப்பிர குலத்தில் ஜனிப்பான், ஒரு சகோதரியுடையவனாவான்.

(13) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி சந்திராரூடாதிபதியாகிய குரு சுய க்ஷேத்திரத்தில் இருந்து செவ்வாயால் பார்க்கப்பட்டால் ஜாதகன் நதி தீரத்தில் உள்ள பட்டினத்தில் புகழ் பெற்ற பட்டினத்தில் ஜனனமாவான்.

(14) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி லக்கின பாவாதிபதி கேந்திர பாவத்தில் இருந்து எட்டாம் பாவாதிபதி சுக்கிரனால் ஜாதகன் பால தோஷத்தினின்றும் குணமடைவான்.

(15) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி லக்கினருடாதிபதியாகிய புதன் கேந்திர திரிகோணத்திலிருந்து ரந்திராரூடபதியாகவும் ஆனால் ஜாதகன் ஆயுள் விருத்தியடைவான், தீர்க்காரம்ப வயதாக எழுபது வயது அடைவான், ஐம்பதாவது வயதில் அல்லது நாற்பத் தொன்பதாவது வயதிலேயே அபமிருத்திய பயமுண்டாகும், அக் காலம் ஈசுவர சன்னதியில் லக்ஷ மிருத்துஞ்ஜெய ஜபமும், எருமைக் கிடா தானமும் செய்தால் அபமிருத்து நீங்கிச் சுகமுண்டாகும், ரந்திராரூடம் என்பது எட்டாம் பாவ ஆரூடமாகும்.

(16) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி ரிஷப ராசியில் சந்திரன் மேஷ நவாம்சத்திலும், சூரியன் கடக ராசியில் விருச்சிக நவாம்சத் திலும் இருந்து மேற்படி சந்திரனுக்கு ஐந்தாமிடத்தில் செவ்வா யிருந்தால் ஜாதகனுக்குப் பிதுரு சுகமுண்டாகாது, ஜாதகனுடைய தகப்பன் மத்திம வயதுடையவன், சிவ பக்தி மதத்தை அடைய வன், வைதிகத்தினல் சுகமுடையவன், ஸ்தான சுகமுடையவன், உக்கிரமான தானங்களை வாங்குபவன், தானம் வாங்கும் பாபத் திர வியத்தினுல் சுகிப்பான், பிதுரார்ஜித சுகமுடையவன், அற்ப கல்வி யுடையவன், ஆயுளும் அற்பமாயுடையவன், ஜாதகனுடைய தகப் பன் ஜாதகனுடைய ஜன்ம திசையில் மரிப்பான், ஜன்ம லக்கினுதி பதி செவ்வாயால் பார்க்கப்பட்டால் க்ஷுத்திரம் என்னப்பட்ட ஏவல், சூனியம் முதலியவைகளால ஜாதகனுடைய தகப்பன் மரிப்பான்.

(17) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி நான்காம் பாவாதிபதியா கிய புதன் ஐந்தாம் பாவத்திலிருந்து சந்திரன் மூலத் திரிகோணத் தில் இருந்தால் ஜாதகனுடைய தாய் தீர்க்க வயதடைவாள், உடன் பிறந்த சகோதரருடையவள், பாக்கிய வமிசத்தில் பிறந்தவள், முன் ஜென்மாந்திர பாபத்தினுல் விதவையாகித் துக்கிப்பாள், இதற்கே இந்த ஜென்ம லக்கினத்திற்கேழாம் பாவத்தில் செவ்வாயிருந்தால் ஜாதகன் தாய் மூர்க்க சுபாவமுடையவள், கிரக சங்கையால் பீடை யடைவாள், தன் ஜனங்களால் நிச்சயமாக ஏவல் மூலமாக வீட்டில் பீடை இருப்பாகிவிடும், அந்த தோஷ பரிகாரமாக சேது ஸ்நாநம் செய்து பூமியில் கோலம் முதலிய போட்டு பூஜை செய்தால் மேற்படி தோஷம் நிவாரணமாகும், தாய் வமிசத்தில் சுகமுண்டா கும், ஜாதகனுடைய தாய் ஜாதகனுடைய மூன்றுந்திசையில் மரிப்பாள்.

(18) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி சந்திரனுக்கு மூன்றுமி டத்தில் சூரியன் கடக ராசியிலிருந்து செவ்வாய் லக்கினத்திற்கு ஏழாம் பாவத்தில் ஹாலாஹலாம்சத்திலிருந்தால் ஜாதகன் சகோ தரனில்லாதவனுவான், ஒரு சகோதரி மட்டும் உடையவன்.

(19) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி மேஷ நவாம்சத்தில் ரிஷப ராசியில் சந்திரனிருந்து கர்த்தரீயோகத்தில் குஜ திரிம்சாம்சத்தில் பிறந்தவன் வெளுப்பு நிறமுடையவன், சம தேகமுடையவன், சூட்டுத் தேகி, பித்த சுபாவமுடையவன், ரூபவான், புகழுடையவன், சமர்த்தன், சொற்ப கல்வியுடையவன், மூன்றல்லது நான்காம் வயதில் அம்மையால் கண்டமுடையவன், தெய்வாநுகூலமாக சுகமடைவான், பாலியத்தில் மந்த சுபாவமுடையவன், பன்னிரண்டாவது வயது முதல் நல்ல புத்தியுடையவனுவான், கல்வியில் நிபுணனுவான், சம்ஸ்கிருதப் பிரியன், ஜன்ம திசையில் வழிவழியாக பால ரோகமுடையவன், அப்போது பாலகிருஷ்ணப் பிரதிமை தானம் செய்தால் பால ரோகம் நீங்கிவிடும், மூன்றும் வயதில் தகப்பன் மரணமடைவான், தாய் வமிசத்தால் சுகமடைவான், அம்மானுல் ஜீவிப்பவன், தாய்ப் பாட்டியாலும் சுகமடைவான், இரண்டாந் திசையில் பன்னிரண்டல்லது, பதிநான்காம் வயதில் விவாக மடைவான்.

(20) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி ஏழாம் பாவாதிபதியாகிய புதன் சூரியனுடன் கூடியிருந்து சுக்கிரனும் கேந்திரத்தில் சுபாம்சத்தில் இருந்தால் ஜாதகன் பாக்கியமுள்ள வமிசத்தில் விவாக மடைவான், இரண்டாந்தாரமுமுடையவனுவான்.

(21) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி லக்கினத்திற்கேழாம் பாவத்தில் பாபரிருந்தால் ஜாதகன் மனைவியால் விசாரமடைவான், மேலும் அந்த ஏழாம் பாவாதிபதி பலவானுகி பாபருடன் கூடி எங்கிருந்தாலும் இரு தாரமடைவான், அப்படியில்லையேல் ஜாதகன் மனைவி கர்ப்ப காலத்தில் கிரக சங்கையால் பீடையல்லது சங்கா தோஷமடைவாள், காலங்கடந்து ஜாதகனுக்கு (ஞாயிறு விரதமிருந்தும் பாலகிருஷ்ண தானத்தாலும்) அற்ப சந்தானமுண்டாகும், ஜாதகனுடைய இருபத்தைந்தாம் வயதில் புத்திர உற்பத்தி ஏற்படும்.

(22) ஜென்ம லக்கினம் மீனம் தனுசு நவாம்சம் ஆகிப் பிறந்தவனுக்கு மீன நவாம்சத்தில் நீச்ச ராசியில் சந்திரனிருந்து சந்திர கேந்திரத்தில் குரு இருந்தால் ஜாதகனுக்கு நதிப் பிராந்தியத்தில் உள்ள பெரிய கிராமத்தில் சூரிய வாஸ்து ஆகிய கிழக்கு, மேற்கு வீதியில் ஓராவது அல்லது மூன்றுவது கெற்பத்தில் ஜனனம் நேரிடும்.

(23) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி குரு உபலக்கினத்தில் இருந்தால் ஜாதகன் தாய் பிரசுவத்தில் அற்ப வேதனை அடைவாள்.

(24) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி லக்கினுதிபதி நின்ற ராசி நாதன் சந்திரனுக்குக் கேந்திரத்தில் சுபாம்சத்திலிருந்தால் ஜாத

கன் தீர்க்காரம்ப வயதாக எழுபது வயதடைவான், ஐந்தல்லது ஆறு வருஷம் வரை பால தோஷமடைந்து முன் புண்ணியவசத்தால் சுகமுடையவனுவான், ஐம்பத்தொன்பது அல்லது அறுபதாவது வயதில் அதிசாரத்தால் தேக பீடை அடைவான், அக்காலம் சாந்தி செய்தால் சுகமுண்டாகும்.

(25) ஜென்ம லக்கினம் மீனம் தனுசு நவாம்சம் ஆகி சூரியன் தன் உச்ச ராசியில் சுபருடன் கூடியிருந்து ஒன்பதாம் பாவாதிபதி தனுசு ராசியிலிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் தீர்க்காயுசுடையவன், வெகு ஆயுசுடையவன், தேவப் பிராம்மண பக்தி உடையவன், விஷ்ணு பக்தி மத ஆச்சாரமுடையவன், வீர வைஷ்ண வமிசத்தில் பிறந்தவன், ஸ்தான சுகமுடையவன், கல்வியால் தனம் சம்பாதிப்பான், ஜோதிட சிந்தையுடையவன், அதனுல் சுகமுடையவன், வாச்சாலகன், சாதுரிய புத்தியுடையவன், திரவிய சம்பாதனையில் சமர்த்தன், ஷை சூரியனுக்கிரண்டாமிடத்தில் சனியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் நன்கு ஜோதிடமறிவான், அற்ப கல்வியுடையவனுயினும் நல்ல புத்திமானுவான், ஆஸ்திகன், நேர்மையான புத்தியுமுடையவன், முன் புண்ணிய பலனுக புத்திர சுகமடைவான், மத்திய வயதிலும், வயோதிகத்திலும் கீர்த்தியுடையவன், ஜாதகனுடைய ஐந்தாந்திசையில் மரிப்பான்.

(26) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி லக்கினத்திற்கு நான்காவது பாவத்தில் சுக்கிரனிருந்து சந்திரன் நீச்ச ராசியில் மீன நவாம்சத்திலிருந்தால் ஷை சுக்கிரன் (ராகுவுடன்) பாபக் கிரகத்துடன் கூடியிருந்தாலும் ஜாதகன் தாய் தீர்க்காயுசுடையவள், குணமுடையவள், ஜன்மாந்திர அதிருஷ்டத்தினுல் புத்திர பாக்கியமுடையவளாகி ஜாதகனுடைய ஐந்தாந் திசையில் மரிப்பாள்.

(27) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி மூன்ரும் பாவாதிபதியாகிய சுக்கிரன் தனுசு ராசியில் செவ்வாய், கேது இவர்களுடன் கூடியிருந்தாலும் செவ்வாய்க்கு மூன்ருமிடத்தில் குரு இருந்தால் ஜாதகன் சகோதர விருத்தியுடையவன், மூத்த சகோதரனில்லாதவன், இளைய சகோதர விருத்தி உடையவன், ஐந்து அல்லது ஆறு பேர்கள் வெகு ஆயுசுடையவர்களாவார்கள், சகோதரியால் கிலேசமுடையவனுவான்.

(28) ஜென்ம லக்கினம் மீனம் தனுசு நவாம்சம் ஆகி குரு திரிம்சாம்சத்தில் * பாபகேசரீயோகத்தில் பிறந்த ஜாதகன் வெளுப்பு நிறமுடையவன், சம தேகமுடையவன், சூட்டுத் தேகி, கொஞ்

* பாபகேசரீயோகம் என்பது சந்திரன், குரு இருவரும் பாப ராசியில் கேந்திரங்களில் ஒருவருக்கொருவரிருப்பது.

சம் பித்தாதிகமுடையவன், சொற்ப படிப்புடையவன், க்ஷேத்திர சுகமுடையவன், மத வித்தையிலும், மந்திர வித்தையிலும் சமர்த்தன், இதற்கே இரண்டாமிடத்தில் சூரியனிருந்தால் பிதுரார்ஜித சுகமுடையவன்.

(29) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி பத்தாம் பாவத்தில் செவ்வாயிருந்தால் சகோதரப் பிரபலமுடையவன், மத்திய வயதில் பிரசித்திபடைவான், முப்பத்தைந்து வயதிற்கு மேல் பாக்கியமுடையவன், க்ஷேத்திரப் பிரபலமுடையவன், பத்து வருஷம் வரை சுகாதிக்கியமுள்ளவன், ஐம்பத்திரண்டு வயதிற்குமேலு மிப்படியே, ஆயுள் வரை சுகியாயிருந்து எழுபது வயதடைவான்.

(30) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி ஏழாம் பாவாதிபதி சூரியனுடன் கூடி சுக்கிரனும் ராகுவுடன் கூடியிருந்து ஏழாமாரூடத்தில் சந்திரன் இருந்தால் ஜாதகன் இரண்டாவது விவாகமுடையவன், மறு தாரத்தினிடம் சந்தானமுடையவன், அதை காலாந்திரத்தில் அடைவான், மூத்த மனைவி புத்திரனில்லாதவள், சுகமில்லாதவள் ஆவாள், ஜாதகன் ஐந்தாந்திசையில் விசேஷ சுகமுடையவனுவான்.

(31) ஜென்ம லக்கினம் மீனம் (சௌம்மியாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி சத்துரு ராசியில் சுப க்ஷேத்திரத்திலிருந்தால் ஜாதகன் நதிப் பிராந்தியத்தில் புண்ணிய தேசத்தில் அக்கிரகாரத்தில் ஜனனமடைவான்.

(32) ஜென்ம லக்கினம் மீனம் (கும்பினீயம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி ஒன்பதாம் பாவத்திலிருந்து சூத்திர காலத்தில் பிறந்தவன் சிவ பக்த குலத்தில் நதிப் பிராந்தியத்தில் தேவாலய சமீபத்தில் ஜனனமும், உத்தர பாகத்தில் சமுத்திர சமீபத்தில் ஜனனமும் அடைவன்.

(33) ஜென்ம லக்கினம் மீனம் (கும்பினீயம்சம் பூர்வ பாகம்) ஆகி சந்திரன் லக்கினத்திலிருந்தால் ஜாதகன் தாய்க்குச் சிரமமில்லாமல் பிறந்தவன், உத்தர பாகத்தில் ஜாதகன் தாய்க்கு அதிக பீடையுண்டாகும், ஷை சந்திரனைக் குரு பார்த்தால் ஜாதகன் தாய்க்கு சுகமுண்டாகும்.

(34) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி எட்டு, ஒன்று, பத்துக்குடைய பாவாதிபதிகள் கேந்திர லாப திரிகோணத்திலிருந்தால் ஜாதகன் அறுபத்தேழு வயதடைவான்.

(35) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி சூரியன் கேந்திர திரிகோணத்திலிருந்து ஒன்பதாம் பாவாதிபதி கேதுவுடன் கூடியிருந்தால்

ஜாதகன் தகப்பன் அற்ப சுகமுடையவன், மத்தியாயுளுடையவன், விசேஷ சிவ பக்தியுடையவன், வியாபார மூலம் வாங்குவதிலும், விற்பதிலும் ஜீவனமுடையவன், கொஞ்சம் ரோக சரீரமுடையவன், தேவப் பிராம்மண விசுவாசி, தன் ஜனங்களிடம் அன்புடையவன், இவன் ஜாதகனுடைய ஜன்ம திசையிலேயே மரித்துவிடுவான்.

(36) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி நான்காம் பாவாதிபதி ஒன்பதாம் பாவத்திலிருந்து சந்திரன் லக்கினத்தில் அல்லது கேந்திர திரிகோணத்தில் இருந்து நான்காம் பாவத்தைச் சூரியன் பார்த்தால் ஜாதகன் தாய் குணமுடையவள், ஆயுள் உள்ளவள், பாக்கிய வமிசத்தில் பிறந்தவள், பதிவிரதை, நன்மையுடையவள், ஜாதகனுடைய இரண்டாந்திசையில் மரிப்பாள்.

(37) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி மூன்றும் பாவாதிபதி ஒன்பதாம் பாவத்திலிருந்து செவ்வாய், கேதுவுடன் கூடி எட்டாம் பாவத்திலிருந்து மூன்றும் பாவம் சனியால் பார்க்கப்பட்டால் இரண்டு சகோதரரும், இரண்டு சகோதரிகளும் உடையவன், வேறு சிலர் மூன்று சகோதரிகளுடையவன் என எண்ணுகின்றனர்.

(38) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி ஏழாம் பாவாதிபதியும், சுக்கிரனும் ஒன்பதாம் பாவத்தில் சனியுடன் கூடியிருந்து இரண்டாம் பாவத்தில் ராகு இருந்தால் ஜாதகன் இரு தார யோகமுடையவன், மூத்த மனைவி புத்திரனில்லாதவளென்று சிலரும், ஒரு புத்திரியுடையவளென்று சிலருமெண்ணுகின்றனர், இரண்டாம் மனைவி காலங்கடந்து புத்திரனைப் பிரசவிப்பவள்.

(39) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி (தனதாம்சத்தில்) லக்கின பாவாதிபதி வைசிய காலத்திலிருந்தால் ஜாதகன் வைசிய குலத்தில் நான்காவது அல்லது ஆறுவது கெற்பத்தில் ஜனனமுடையவன் ஆவான்.

(40) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி (தனதாம்சத்தில் பூர்வ பாகத்தில்) லக்கின பாவத்தில் சனியிருந்தாலும், பார்த்தாலும் ஜாதகனுக்கு துர்க்காரண்ணியப் பிரதேசத்தில் பெரிய கிராமத்தில் தெற்கு, வடக்கு வீதியில் தேவாலய அருகில் மேற்கு வாயிற்படியுள்ள வீட்டில் தகப்பன் வீட்டில் ஜனனமும், உத்தர பாகத்தில் நீச்ச பட்டினத்தில் அல்லது நதி தீரத்தில் கிழக்கு மேற்கு வீதியில் தெற்கு பாக வீட்டில் தாய் வீட்டில் ஜனனமும் நேரிடும்.

(41) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி சுபர் லக்கின பாவத்திலிருந்தாலும், பார்த்தாலும் ஜாதகன் தாய்க்கு பிரசவ வேதனை அற்பமாயுண்டாகும், உத்தராம்சமானல் அதிக வேதனையுண்டாகும்.

(42) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி லக்கின பாவத்திலுள்ள சந்திரன் சனியால் பார்க்கப்பட்டு இருந்தால் ஜாதகன் தாய்க்குப் பீடையுண்டாகும், ஜாதகன் பால தோஷத்தால் பீடையடைந்து ஐந்து வருஷத்திற்குப் பிறகு குணமடைவான், மாந்த ஜுரம், வைசூரி, ரிண பயம் முதலியன உண்டாகும்.

(43) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி எட்டாம் பாவாதிபதி புதனுடன் கூடி ஏழாம் பாவத்திலிருந்து சந்திரன் லக்கின கேந்திரத்திலிருந்தால் சர்வ தோஷங்களும் விலகி ஜாதகன் சுகமடைவான், மேலும் இந்தக் கிரக வரிசையுடன் சனி பதினோராம் பாவத்திலிருந்தால் ஜாதகன் அறுபத்தாறு வயதடைவான்.

(44) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி சூரியன் சுய க்ஷேத்திரத்தில் இருந்து ஒன்பதாம் பாவாதிபதி தன் உச்ச ராசியில் இருந்தால் ஜாதகன் தகப்பன் சுகமடைவான், தயாளு, உடன் பிறந்த சகோதரருடன் பிறந்தாலும் அவர்களிறந்துவிடுவர், இரண்டு பேர் ஆயுளுடைய சகோதரிகளுடையவன், அவர்களிலொருத்தி புத்திரனால் விசாரமடைவாள், ஜாதகன் தகப்பன் நியாயவாதி, குருப் பிரியன், கல்வி அறிவுடையவன், கொஞ்சம் தெரிந்தவன், உபாயமுடையவன், சதுரன், தேவப் பிராம்மண விசுவாசமுடையவன்.

(45) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி ஒன்பதாம் பாவத்திற்கு ஒன்பதாம் பாவாதிபதியாகிய சந்திரன் லக்கின பாவத்திலிருந்து புதன், சுக்கிரனிவர்களால் பார்க்கப்பட்டால் ஜாதகனுடைய தகப்பன் தன் வித்தையில் வல்லவன், எழுதுவதில் சமர்த்தன்.

(46) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி ஒன்பதாம் பாவாதிபதி சனியுடன் கூடி பதினோராம் பாவத்திலிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் மித்திர வஞ்சனை செய்பவன், சேர்க்கவும், கலைக்கவும் வல்லவன், வாச்சாலகன், சாதுரிய யுக்தியுடையவன்.

(47) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி ஒன்பதாம் பாவத்தில் ராகு இருந்தால் ஜாதகனுடைய தகப்பன் இரு தாரமுடையவன், சொர்ண ரத்ந பரீக்ஷை செய்பவன், சொர்ணம், ரத்நமிவற்றை வாங்கி விற்பவன், ஒழுக்கமுடையவன், வியாபாரத்தில் நாலுந் தெரிந்தவன், திரவிய சம்பாதனையில் சமர்த்தன், வியாபாரவிருத்தியுடையவன், சொர்ணம், ரத்நம் முதலியன சேர்ப்பவன், முத்து மணிப்ரவாளாதிகள் அடைவான், பற்பல வித வியாபாரமுடையவன், பல ஜாதிகளாலும் தனமடைவான், க்ஷேத்திர சுகமுடையவன், தன் ஜனங்களில் கீர்த்தியுடையவன், அரசாங்க பிரசித்தியுடையவன், கர்ப்ப ஸ்ரீமான், மகா போகி, தனமுடையவன், கீர்த்தியுடையவன், சுகி, பாக்கிய லக்ஷ்மி வாசமுடையவன், மூன்று வாகன யோகமுடையவன், மத்திய வயதிலும், அந்தியத்திலும்,

பற்பல தேசங்களிலும் நற்புகழடைவான், சேது ஸ்நாநம் முதலிய புண்ணியம் செய்பவன், தேவாலயப் பிரதிஷ்டை, குளம், கிணறு, நடபாவி முதலியவற்றிற்குத் தர்மம் செய்பவன், தோட்டம், க்ஷேத்திரம் முதலியன உடையவன், புண்ணிய கர்மாதிகளைச் செய்பவன், வேலைபாள், சேவகர் முதலியன உடையவன், தனம், ரத்நம் அதிகமாயுடையவன், பிரபு, எப்போதும் நற்கதைகளைக் கேட்டு தேவப் பிராம்மணர்களை பூஜிப்பவன், நல் வழியில் நல்லோர்க்குத் தானம் செய்பவன், புத்திரனால் சுகமுடையவனாகி ஜாதகனுடைய மூன்றாந் திசையில் மரிப்பான்.

(48) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி நான்காம் பாவாதிபதி தன் உச்ச ராசியில் இருந்து ஏழாம் பாவத்தில் சுக்கிரன் இருந்து சந்திரன் லக்கின கேந்திரத்தில் இருந்தால் ஜாதகன் தாய் விசேஷ சுகமுடையவள், பொறுமையுடையவள், பதி பக்தியுடையவள், பதி விரதை, அன்ன தானப் பிரியை, கணவனுக்கினியவள், பாக்கிய விருத்தியுடையவள், புத்திரனுக்கிஷ்டமானதைச் செய்பவள், கணவன் மனங்கோணாமல் கணவனை அனுசரித்து நடப்பவள்.

(49) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி மீன ராசியில் சந்திரன் சனியுடன் கூடியிருந்தாலும், மீன ராசியிலுள்ள சந்திரன் சனியினால் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் தாய் சமர்த்தை, கர்வி, குரூரச் சொல்லுடையவள், இவள் ஜாதகனுடைய மூன்றாந்திசையில் மரிப்பாள்.

(50) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி மூன்றாம் பாவாதிபதியாகிய சுக்கிரன் ஏழாம் பாவத்தில் புதனுடன் கூடியிருந்து சகோதர காரகனான செவ்வாய் பதினோராம் பாவத்திலிருந்தால் ஜாதகன் உடன் பிறந்த சகோதர சகோதரிகளுடையவன்.

(51) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி பதினோராம் பாவாதிபதி சுய க்ஷேத்திரத்திலிருந்தால் ஜாதகன் ஒரு மூத்த சகோதரனுடையவன், மூன்றல்லது இரண்டு சகோதரிகளுடையவன், பின் சகோதரனில்லாதவன், ஜாதகனுடைய மூத்த சகோதரன் நல்ல யோகமுடையவன், சாந்தமுடையவன், நற்குணமுடையவன், கல்வியுடையவன், இனிமையாய்ப் பேசுபவன், லோப குணமுடையவன், நற்புத்தியுடையவன், தன் வித்தையில் வல்லவன், சதுரன், எழுதுவதில் சமர்த்தன், நாடக அலங்கார சாஸ்திர காவியங்களை பிரியமாய் சொல்ல அறிந்தவன், சம்ஸ்கிருத ஞானமுடையவன், தெலுங்கில் நன்றாய்ப் பேசுபவன், வியாபார சதுரன், கிரய விக்கிரயங்களில் ஒழுக்கமுடையவன், சொர்ண ரத்ந பரீக்ஷை செய்பவன், திரவிய சம்பாதனையில் வியாபாரத்தில் விருத்தியால் சந்தோஷமுடையவன், தேவதா குரு பக்தியுடையவன், பற்பல வழிகளில் தனமடை

வான், மனைவி, புத்திரன் முதலிய சுகமுடையவன், பாக்கியப் பெருக்குடையவன், வாகனாதி யோகமுடையவன், சற்கீர்த்தியுடையவன், தன் ஜனங்களிடமும் நற்புகழடைவான்.

(52) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி அதியோக ஜாதகத்தில் சுக்கிர திரிம்சாம்சத்தில் பிறந்தவன், கறுப்பு நிறமுடையவன், குணமுடையவன், பித்த சுபாவமுடையவன், கொஞ்சம் வாத பீடையுடையவன், சமாங்கமுடையவன், அறிவாளி, தீரன், அழகிய முகமுங்கண்களும் பொருந்தியவன், அதிருஷ்டசாலி, மேதாவி, கர்ப்ப ஸ்ரீமான், சுகி, மகா தனிகன்.

(53) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி இரண்டாம் பாவத்தில் லக்கின பாவாதிபதியிருந்து ஒன்பதாம் பாவாதிபதியால் பார்க்கப்பட்டால் ஜாதகன் ராஜ யோகமுடையவன், அரசனாவன், அல்லது சம தனிகனாவன், விஷ்ணு பக்தி மதாச்சாரமுடையவன், ஹரி சங்கர பக்தி உடையவன், திட்டமாய் புசிப்பவன், ரகசிய மனதுடையவன், காமி, சொற்ப நித்திரையும், அதிக ஜரக்கிரதையுமுடையவன், அழகிய ஸ்திரீகளுக்குப் புருஷனாவன், தேஜசுடையவன், தெளிந்த புத்தியுடையவன், சந்தன புஷ்ப வஸ்திரப் பிரியன், சூரன், சர்வ ஜனப் பிரியன், கல்வியறிவுடையவன், தேவப் பிராம்மண விசுவாசி, எப்போதும் தன் கல்வியில் வல்லவன், பிறரை வஞ்சிக்கும் புத்தியுடையவன், எழுதுவதில் சமர்த்தன், வேறு பாஷைகளையும் அறிவான்.

(54) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி செவ்வாய் பதினோராம் பாவத்திலுள்ள சனியுடன் கூடினாலும், ஷ சனியைப் பார்த்தாலும் ஜாதகன் சேர்க்கவும், கலைக்கவும் வல்லவன், வாச்சாலகன், சாதுரியமான யுக்திகளுடையவன், பிரசங்கம் புரிபவன்.

(55) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி செவ்வாய் மகர ராசியில் புதனுடைய நவாம்சத்தில் இருந்தால் இரண்டு பாஷையில் வல்லவனாகியும் சுக்கிரனுடைய நவாம்சத்தில் இருந்தால் போகியாகியுமிருப்பான், சம்ஸ்கிருதப் பிரியன், சற்கருமாச்சாரமுடையவன்.

(56) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி பத்தாம் பாவாதிபதி மித்திர ராசியில் மேஷ ராசியில் இருந்தால் ஜாதகன் வியாபாரத்தில் வல்லவனாவான், ஜாதகன் சொர்ணம், ரத்தினம் முதலிய பரீக்ஷை செய்பவன், முத்து மணிப்பிரவாளம் முதலியவைகளை கிரய விக்ரயம் செய்பவன், திரவிய சம்பாதனையில் சமர்த்தன்.

(57) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி ஆறும் பாவத்தில் சூரியனிருந்தாலும், பார்த்தாலும் ஜாதகன் சத்துருவை அழித்துப் பிரதாபமடைவான்.

(58) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி இரண்டு கிரகங்கள் சுய க்ஷேத்திரங்களில் இருந்தால் ஜாதகன் ராஜ யோகமடைவான், ஆனால் மேற்படி கிரகங்கள் ராஜ யோகாம்சத்தில் இருந்தால் மட்டும் ராஜ யோகமுண்டாகும்.

(59) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி சனி இரண்டாந்தாராதிபதியாகி அவர் பதினோராம் பாவத்தில் சுய க்ஷேத்திரத்தில் இரண்டு ஒன்பதுக்குடையவருடன் கூடியிருந்தால் ஜாதகனுக்கு அந்த சனி திசையில் மூத்த சகோதரனுக்கு விவாகமும், சுபமும், ஜாதகனுடைய பிதுர் வர்க்க ஜன நாசமும் உண்டாகும்.

(60) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி ஏழாம் பாவாதிபதி கேந்திர ராசியிலிருந்து அது தன் உச்ச ராசியாகி அங்கு சுக்கிரனுடனும் கூடியிருந்து இரண்டாம் பாவத்தில் குருவும் இருந்தால் ஜாதகன் நன்மனைவியுடையவனாவன், மேற்படி சுக்கிரன் அதிமித்திராம்சத்திலிருந்தால் ஜாதகன் ஒரே மனைவியுடையவனாவன், பாக்கியமுள்ள குடும்பஸ்தன் வீட்டுப் பெண்ணை ஜாதகன் மணப்பான், மாமியார், மாமனாருள்ள பெண்ணை மணப்பான்.

(61) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி இரண்டாம் பாவாதிபதி தன் உச்ச ராசியில் பதினோராம் பாவாதிபதியுடன் கூடியிருந்து குரு ஷை செவ்வாய்க்குக் கேந்திர ராசியிலிருந்தால் ருசகம் என்கிற யோகமுண்டாகும், மேற்படி யோகத்தில் பிறந்தவன் தனமுடையவன், சுகமுடையவன், கீர்த்தியடைவான், மூன்றுந்திசையில் விசேஷ கீர்த்தியடைவான்.

(62) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி ஐந்தாம் பாவாதிபதி லக்கின கேந்திரத்திலிருந்து சுக்கிரன், புதனிவர்களால் பார்க்கப்பட்டுமிருந்து ஒன்பதாம் பாவாதிபதி பதினோராம் பாவத்தில் சனியுடன் கூடியிருந்தாலும்,

(63) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி ஒன்பதாம் பாவத்தில் ராகு இருந்தாலும் ஜாதகனுக்கு காலங்கடந்து புத்திரருண்டாவார், ஜாதகன் அற்ப சந்தான யோகமுடையவன், நாக சாந்தி, சுப்பிரமணிய விரதம் முதலிய செய்தால் நீண்ட ஆயுளுடைய இரண்டு புத்திரர்களும், மூன்று புத்திரிகளுமுண்டாவார்கள்.

(64) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி இரண்டாம் பாவாதிபதி பதினோராவது பாவத்தில் பதினோராம் பாவாதிபதியுடன் கூடி இருந்தால் ஜாதகன் இவர்கள் புக்தியில் ஒவ்வொரு திசையிலும் விசேஷ தனம், வேலையாள், சேவகன் தர்மம் முதலியன அடைவான்.

(65) ஜென்ம லக்கினம் மீனம் (சித்திரிணீயம்சம்) ஆகி தனுசு ராசியில் சூரியன் சந்திரனுடன் கூடியிருந்தால் ஜாதகன் பாலாரிஷ்ட பீடையடைவான், தாய்க்கும் பீடையுண்டாகி சுகமுண்டாகும், வேறு சிலர் ஜன்ம வருஷம் வரையில் ஜாதகனுடைய தாய் பீடையுறுவாள் என எண்ணுகின்றனர்.

(66) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி லக்கின பாவாதிபதி பன்னிரண்டாம் பாவத்திலிருந்து எட்டாம் பாவாதிபதி பதிஞேராம் பாவத்திலிருந்து சனி கேந்திரத் திரிகோணத்திலிருந்தால் ஜாதகன் மத்திய வயதடைவன்.

(67) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி சூரியன் கேந்திர திரிகோணத்தில் இருந்து ஒன்பதாம் பாவாதிபதியாகிய செவ்வாய் ஒன்பதாம் பாவத்திலேயே இருந்தால் ஜாதகன் தகப்பன் தீர்க்காயுளுடையவன், வியாபார சுகமுடையவன், தேவப் பிராம்மண பக்தியுடையவன், அற்ப கல்வியுடையவன்.

(68) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி சூரியன் தனுசு ராசியிலிருந்து சனியுடன் கூடியிருந்தாலும், சனியால் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் தகப்பன் சொற்ப பாக்கியமுடையவன், கொஞ்சம் சுகமுடையவன், அற்பமான ஆச்சாரமுடையவன், ஜாதகனுடைய மூன்றுந்திசையில் அல்லது நான்காந்திசையில் ஜாதகனுடைய தகப்பன் மரிப்பான்.

(69) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி நான்காம் பாவாதிபதி சனியுடன் கூடியிருந்து சந்திரனும் சனியுடன் அங்கு கூடியிருந்து நான்காம் பாவம் பாபக் கிரகத்திஞல் பார்க்கப்பட்டால் ஜாதகனுடைய தாய் சுகக் குறைவுடையவள், குணமுடையவள், உடன் பிறந்த சகோதரருடையவள், அற்ப காலத்தில் மரிப்பாள்.

(70) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி புத திரிம்சாம்சத்தில் (மாலிகா யோகத்தில்) ஒன்பதாம் பாவம் முதலாக பன்னிரண்டாம் பாவம் வரையிலுள்ள கிரக மாலிகா யோகத்தில் பிறந்தவன் வெளுப்பு நிறமுடையவன், அறிவுடையவன், நீதியுடையவன், கல்வியும் கொஞ்சம் உடையவன், எழுதுவதிலும், வியாபாரத்திலும் சுகமுடையவன், சுகமுடையவன், அம்மானிடம் அன்புடையவன், தாய் வம்சத்தில் அதிக சுகமுடையவன்.

(71) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி ஏழாம் பாவம் சனியால் பார்க்கப்பட்டு ஏழாம் பாவாதிபதி பாபருடன் கூடி பத்தாம் பாவத்திலிருந்தால் ஜாதகன் மறு தாரமுடையவன், அற்ப சந்தான யோகமுடையவன், இரண்டு புத்திரர்களுடையவன், மூன்று புத்திரர்கள்

ஆயுளையுடையவர்களென்று சிலர் எண்ணுகின்றனர், புத்திரிகளு மிப்படியேயுடையவன்.

(72) ஜென்ம லக்கினம் மீனம் (சுராம்சம், பூர்வ பாகம்) ஆகி குரு லக்கின கேந்திரத்திலிருந்து சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகன் தாய் வெகு சீக்கிரப் பிரசவமுடையவள், உத்தராம்சமானால் அற்பமான வேதனையடைவாள், அப்போது சந்திரனும் சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகன் தாய் பீடையடைவாள், ஜாதகன் பாலாரிஷ்ட பீடையுடையவனாவன்.

(73) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி லக்கின கேந்திரத்தில் குரு இருந்து சனியால் பார்க்கப்பட்டு எட்டாம் பாவாதிபதி ஒன்பதாம் பாவத்திலிருந்தால் ஜாதகன் மத்திம ஆயுளாக அறுபத்தைந்து வயதடைவான், ஐம்பது, ஐம்பத்திரண்டு இந்த வயதுகளில் தேக பீடையடைவன், அறுபதிலும் பீடையுண்டாகும், அக்காலங்களில் சாந்தி செய்தால் சுகமடைவான்.

(74) ஜென்மலக்கினம் மீனம் ஆகி சூரியன் கேந்திர திரிகோணத்திலிருந்து சந்திரன் தத்தாவஸ்தையிலிருந்தால் ஜாதகன் தத்தவமிசத்தில் வளர்வான், ஜாதகன் இரண்டு தகப்பன்களும், இரண்டு தாய்களுமுடையவன், ஜாதகன் தகப்பன் தேவப் பிராம்மண விசுவாசமுடையவன், உத்தியோக சுகமுடையவன், ராஜாங்கத்தில் எழுதும் உத்தியோகமுடையவன், பிரசித்தன், ஜாதகனுடைய இரண்டாந்திசையில் மரிப்பான்.

(75) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி லக்கினத்திற்கு மூன்றாம் பாவத்தில் செவ்வாய் இருந்து மூன்றும் பாவாதிபதி ஷை செவ்வாயால் பார்க்கப்பட்டு குரு, சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகன் சகோதர சகோதரிகளுடையவனாயினும் அவர்களைத் தியாகம் செய்துவிடுவான்.

(76) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி லக்கினத்திற்கு மூன்றும் பாவத்தில் செவ்வாயிருந்தால் ஜாதகன் மனைவி வம்சம் நாசமடையும், ஜாதகன் இரு தாரமடைவான், முதல் மனைவி அற்ப சந்தானமுடையவள், இருபத்தி நான்காவது வயதில் புத்திர சந்ததி அடைவான்.

(77) ஜென்ம லக்கினம் மீனம் (சீதளாம்சம்) ஆகி லக்கின பாவாதிபதி மேஷ ராசியிலிருந்து கமலாம்சத்திலுமிருந்தால் சூத்திர காலத்தில் பிறந்தவன் நல்ல அறிவாளியாவன்.

(78) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி லக்கின பாவாதிபதி இரண்டாம் பாவத்திலிருந்து சீதளாம்ச பூர்வ பாகத்தில் ஜாதகன்

ஜனனமானால் கிழக்கு மேற்கு வீதியில் பெரிய கிராமத்தில் பாக்கிய வமிசத்தில் ஜனனமடைவான்.

(79) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி கேது நான்காம் பாவத்தில் இருந்தால் ஜாதகன் தாய் பிரசவத்தில் அதிக வேதனையடைவாள், அப்போது சந்திரன் பன்னிரண்டாமிடத்தை அடைந்திருந்தால் சூதி தோஷ பயமுண்டாகும், எட்டு வருஷம் வரை பால ரோகமுண்டாகும்.

(80) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி லக்கின பாவாதிபதி இரண்டாம் பாவத்திலும் எட்டாம் பாவாதிபதி பதினோராம் பாவத்தில் சுய க்ஷேத்திரத்திலுள்ள சனியுடன் கூடியுமிருந்தால் ஜாதகன் பூர்ணயுளடைவான், இவனுக்கு முப்பதுக்கு மேலும், நாற்பத்திரண்டு, ஐம்பத்திரண்டு இந்த வயதுகளிலும் மேக ரோகமுண்டாகும், சாந்தி செய்தால் சாந்தியுண்டாகும்.

(81) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி சூரியன் ராகுவுடன் கூடி பத்தாம் பாவத்தில் தனுசு ராசியிலும், ஒன்பதாம் பாவாதிபதி சுய க்ஷேத்திரத்தில் ஒன்பதாம் பாவத்திலுமிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் சுகி, பாக்கியமுடையவன், சிவ பக்தி மதாச்சாரமுடையவன், வியாபார குலத்தில் பிறந்தவன்.

(82) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி புதன் ஒன்பதாம் பாவத்திலிருந்தால் ஜாதகன் தகப்பன் தர்ம புத்தியுடையவனவன்.

(83) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி சூரியன் ராகுவுடன் கூடியிருந்தாலும், ராகுவால் பார்க்கப்பட்டாலும் ஜாதகனுடைய தகப்பன் வாத பீடையுடையவன், தன் ஜனப் பிரசித்தியுடையவன், பருத்தியால் நெய்த துணி வியாபாரமுடையவன்.

(84) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி நான்காம் பாவாதிபதி ஒன்பதாம் பாவத்திலிருந்து சந்திரன் மித்திர ராசியில் பன்னிரண்டாம் பாவத்திலிருந்தால் ஜாதகன் தாய் விசேஷ சுகமுடையவள், ஜாதகனுடைய நான்காந்திசையில் மரிப்பாள்.

(85) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி மூன்றாம் பாவாதிபதி பதினோராம் பாவத்திலிருந்து செவ்வாய் சுய க்ஷேத்திரத்தில் ஒன்பதாம் பாவத்திலிருந்தால் ஜாதகன் சகோதர சகோதரிகளுடையவன்.

(86) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி சச யோகத்தில் குஜ திரிம்சாம்சத்தில் பிறந்தவன் வெளுப்பு நிறமுடையவன், வாத தேகி, கொஞ்சம் பித்தாதிகமுடையவன், சமதேகி, தெளிந்த மனமுடையவன், வியாபாரத்தால் பொருள் சேர்ப்பான், சிவ பக்தன்,

தன் குல வித்தையில் வல்லவன், கிருத்தியா கிருத்தியங்களறிந்தவன், விவேகி, கிரக கிருத்தியங்களில் சுதந்திரமுடையவன், தன விருத்தி செய்பவன், பணத்தை வட்டிக்குக் கொடுத்து வாங்குபவன், பேத பிதாவால் யோகமுடையவன், பதினாயிரத்துக்கு மேற்பட்ட தனம் சம்பாதிப்பான்.

(87) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி பதினோராம் பாவத்தில் சுக்கிரன் சனியுடன் கூடினால் ஜாதகன் எப்போதும் தன லாபமுடையவன், இருபது வயதிற்கு மேல் பிரசித்தியுடையவன், சர்வ காரியங்களிலும் சுதந்திரமுடையவன், மூத்த சகோதரன் பிரசித்தியுடையவன், காமி, விஷய லோலன், இருபத்தைந்து வயதிற்குமேல் விசேஷ யோகமுடையவன், தனமுடையவன், சுகி.

(88) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி ஏழாம் பாவாதிபதி செவ்வாயுடன் கூடி ஒன்பதாம் பாவத்திலிருந்தால் ஜாதகன் காலங் கடந்து புத்திரனையடைவான், கொஞ்சம் ரோக களத்திரமுடையவன்.

(89) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி ஐந்தாம் பாவாதிபதி சனியின் ராசியில் கும்ப ராசியிலிருந்து சுய க்ஷேத்திரத்தில் நீச்சாம்சத்திலுள்ள செவ்வாயால் பார்க்கப்பட்டால் சந்தானத் தடையுடையவன், இந்த தோஷ பரிகாரமாக ஆடு, நாகாபரண சகித நாகேசுவரன் இந்த தானங்களை விதிப்படி செய்தால் ஜாதகன் ஒரு புத்திரனும், இரண்டு புத்திரிகளும் அடைவான்.

(90) ஜென்ம லக்கினம் மீனம் (சாங்கரியாம்சம் பூர்வ பாகம்) ஆகி லக்கின பாவாதிபதி சுய க்ஷேத்திரத்திலிருந்தால் ஜாதகன் தாய் பிரசவத்தில் அற்ப வேதனையடைவாள், உத்தராம்சமானால் சீக்கிரப் பிரசவமாகும், அப்போது லக்கினத்தைச் சனி பார்த்தாலும், சனி லக்கின பாவத்தில் இருந்தாலும் ஜாதகனுக்கு கொஞ்சம் சூதி தோஷ பயமுண்டாகும், ஜன்ம திசையில் ஆறு வருஷம் வரை பால ரோகமுண்டாகும்.

(91) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி லக்கின பாவாதிபதி லக்கின பாவத்தில் இருந்து சுக்கிரனும் தன் உச்ச ஸ்தானமாகிய அங்கு கூட இருந்தால் ஜாதகன் எழுபத்தேழு வயதடைவான், முப்பத்தாறு, அறுபது இந்த வயதுகளில் தேக பாதையுடையவன், சாந்தி செய்தால் சுகமடைவான்.

(92) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி லக்கின பாவாதிபதியுடன் சூரியன் கூடி லக்கின பாவத்தில் விஷாக்கியாம்சத்தில் ஷெ சூரியனிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் அற்ப சுகமுடையவன், சகோதரனுடையவன், சிவ பக்த மதத்தைச் சேர்ந்தவன், சகோதரனால்

யோகமுடையவன், சகலருக்கும் உபகாரம் செய்பவன், தேவப் பிராம்மண விசுவாசி, பாலியத்தில் மித பாக்கியமும், மத்தியத்தில் விசேஷமும் அடைவான், பிதுரு சகோதரன் தேசாந்திரத்தில் பிர சித்த கீர்த்தியுடையவன், அவனால் பாக்கிய விருத்தியுடையவன், சிவ கைங்கரிய தர்மம் முதலியன செய்பவன், ஜாதகனுடைய இரண் டாந்திசையில் ஜாதகனுடைய தகப்பன் மரிப்பான்.

(93) ஜென்ம லக்கினம் மீனம் (சுமதியம்சம்) ஆகி குரு சுய க்ஷேத்திரத்தில் லக்கின பாவத்தில் விப்பிரகாலத்திலிருந்தால் விப் பிர குலத்தில் சகோதரனுடையவனாக தான் ஸீமந்த கெர்ப்பத் தில் அல்லது இரண்டாவது கெர்ப்பத்தில் சமுத்திர அருகில் தேவாலய அருகில் நகரத்தில் தகப்பன் மறைவிலிருக்கும்போது தாய் வீட்டிலும், உத்தராம்சத்தில், பெரிய கிராமத்தில் அக்கிரகா ரத்திலும் ஜெனனமடைவான்.

(94) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி லக்கினத்தில் குரு இருந் தாலும், பார்த்தாலும் ஜாதகன் தாய் விசேஷ வேதனையுடையவ ளாவாள்.

(95) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி ஆறும் பாவத்திலுள்ள சந்திரன் செவ்வாயால் பார்க்கப்பட்டால் ஜாதகன் தாய் பிரசவத் தில் பயமும், பீடையுமடைவாள், மாந்த ஜுர ரிண பயத்தால் பீடையும், பால தோஷ பயமும் ஜாதகனுக்குண்டாகும்.

(96) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி லக்கின பாவாதிபதி லக் கின கேந்திரத்திலும், எட்டாம் பாவாதிபதி ஒன்பதாம் பாவத்தி லும் இருந்து பத்தாம் பாவத்தில் புதனுமிருந்தால் ஜாதகன் சகல தோஷங்களும் விலகி அறுபத்தேழு வயதடைவான், மேலும் இரு பத்து நான்கு, இருபத்தேழு, முப்பத்திரண்டு, முப்பத்து மூன்று இந்த வயதுகளில் பீடையும், நாற்பதில் மனஸ்தாபமும், பித்த வாயு பீடையும், ஐம்பதில் ஜுர பீதியும், அறுபதிலபமிருத்தும் உண்டாகும், அக்காலங்களில் சாந்தி செய்தால் சுகமுண்டாகும்.

(97) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி சூரியன் புதனுடன் கூடி பத்தாம் பாவத்திலிருந்து ஒன்பதாம் பாவாதிபதி உச்சத்தில் பதி னோராம் பாவத்திலிருந்து சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகன் தகப்பன் விசேஷ சுகமுடையவன், சகோதரருடையவன், கல்வி அறிவுடைய விவேகி, சொற்பம் தெரிந்தவன், விஷ்ணு, சிவ பக்தி வைதீகாச்சாரம் முதலியன உடையவன்.

(98) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி ஒன்பதாம் பாவத்தில் சனியிருந்தாலும், பார்த்தாலும் ஜாதகனுடைய தகப்பன் துரா லோசனை செய்பவன், சேர்க்கவும், கலைக்கவும் சமர்த்துடையவன்,

வாச்சாலகன், யுக்திபாய் பிரசங்கம் செப்பவன், சுய காரியவாதி, பலிஷ்டன், சத்துரு காரியங்களைக் கெடுப்பவன், விஷய போகத்தி லாசையுடையவன், பர தார ரதிப் பிரியன், சங்கீதப் பிரியன், காமி, வேசி ஸ்திரீ சேர்க்கையுடையவன், ரூபவதிகளுக்கு நாயகன், போக ஸ்திரீ சுகமுடையவன், பிரசித்தியும், தியாகமும், போகமுமுடை யவன், திரவிய சம்பாதனையில் சமர்த்துடையவன்.

(99) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி ஒன்பதாம் பாவத்திற் கொன்பதாம் பாவாதிபதியாகிய சந்திரன் லக்கினத்திற்காறும் பாவத்திலிருந்து சனி, செவ்வாயிவர்களால் பார்க்கப்பட்டால் ஜாத கன் தகப்பனுர் எப்போதும் உத்தியோகமுடையவன், பிதுரார்ஜி தத்தை விட்டுவிடுபவன், சுயார்ஜித யோகமுடையவன், பிரபு வசிய முடையவன், பிரபுக்களுக்குப் பிரியன், ராஜாங்கப் பிரசித்தியுடைய வன், பாலியம் முதல் சுகமுடையவன், நீச்சப் பிரபுவால் சுகமுடை யவன், தனம் சம்பாதிப்பவன், பிரபல உத்தியோக சித்தியுடைய வன், வாகனுதி போகமுடையவன், தனது ஜனங்களில் கீர்த்தியு டையவன், தேசாந்தரங்களில் சஞ்சரிப்பவன், இரண்டு வாகனமு டையவன், மத்திய வயதினுடைய அந்தியத்தில் மனைவி நாசமுடை யவன், பிறகு சுய தேசம் வருபவன், அக்காலம் யோகம் பங்க மாகும், பற்பல பிரபுக்களால் சுகமுடையவன், வயோதிக வயதில் அற்ப சுகி, புத்திரனல் சுகமுடையவன், ஏதாவது கொஞ்சம் தர்ம சித்தியுடையவன், தீர்த்த யாத்திரை செய்த பலனடையவன், அஸ ஹாய சமர்த்தன், பற்பல வழிகளால் தனம் சேர்ப்பான், நிரந்தர மான அன்ன தானம் செய்பவன், புத்திரனுல் சுகமும், சுபமு முடையவன், தேவப் பிராம்மண பக்தியுடையவன், தள்ளாத வய தில் கீர்த்திபடைவான், இவன் ஜாதகனுடைய நாலாந்திசையில் மரிப்பான்.

(100) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி நான்காம் பாவாதிபதி பத்தாம் பாவத்தில் சூரியனேடு கூடியிருக்க ஆறும் பாவத்திலுள்ள சந்திரனை செவ்வாய், சனி இவர்கள் பார்த்தால் ஜாதகன் தாய் விசேஷ சுகமுடையவள், பதி பக்தி, அன்ன தானப் பிரியம், வமிச விருத்தி, புண்ணியம், புத்திரனுக்கிஷ்டமானதைச் செய்தல் முதலி யன உடையவள், போக பாக்கியமுடையவள்.

குறிப்பு:—இந்த புத்தகத்தில் மேஷம் முதல் மீனம்வரை கொடுக் கப்பட்டுள்ள ஐட்டங்கள் போக இன்னும் என்னிடத்தில் உள்ள அச் சியற்றுத மேஷம்முதல் மீனம்வரையுள்ள ஐட்டங்கள் அனேகமாயி ரம் இருப்பதால் அவைகளை ஐந்தாம்பாகமாக இனி அச்சிடப்படும்.

நான்காம் பாகம் முற்றிற்று.

ஜாதக கணிதம்

என்னும்

ஜோதிட கிரக சட்பலம் ஆயுள் கணிதம்

(இரண்டாம் பதிப்பு)

இதில் தச வர்க்கம், கிரக சட்பலம், கிரகங்களின் வலிவின் தாரதம்மியம், பாவச் சக்கிரம், துவாதச பாவ பலம், உச்ச பலம், திக்குப் பலம், பட்ச பலம், கிரக யுத்த பலம், ஹோரா பலம், அயன பலம், கிரக திருஷ்டி பலம் முதலிய 24 வித பலங்கள் ஆயுள் இவைகளை வெகு சுலபமாகக் கணிக்க அநேக வாக்கியங்களும், (Tables) குளிகாதி ஐவர் ஸ்புட கணனமும், பிராண ஸ்புடம், தேக ஸ்புடம், மிருத்யு ஸ்புடம், உதாரணங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. கிரகங்களின் வலிவை அனுசரித்து பலாபலன் அறிவதற்கும், ஆயுள் கணிதத்தில் அரணம் செய்வதற்கும், பிருஹத் ஜாதகம், ஸ்ரீ பதி ஜாதக கர்ம பத்ததி, கேசவ ஜாதக கர்ம பத்ததி, பல தீபிகை இவைகளைச் சுலபமாயும், நன்றாயும் அறிவதற்கும் இப்புத்தகம் மிகவும் உபயோகமாகும். இதை யாவரும் பிறருடைய உதவியின்றித் தாமே படித்துத் தெரிந்துகொள்ளலாம். இது கெவர்ன்மெண்ட் டெக்ஸ்ட் புக் கமிட்டியாரால் (Text Book Committee) லைப்ரரி (Library) உபயோகத்திற்காக அங்கீகாரஞ்செய்யப்பட்டது. இது ஆனந்த போதினி சுத்த திருக் கணித பஞ்சாங்க கணிதரும், பிருஹத் ஜாதகத்தின் பதிப்பாசிரியரும், நவக் கிரக ஸ்புட கணனமாகிய இராஜ ஜோதிட கணிதம், ஜாதக கணிதம் இரண்டாம் பாகம் என்ற ஜாதக பலாபலன்கள் நிர்ணயம் என்ற புத்தகத்தின் ஆசிரியருமாகிய C G, ராஜன், B. A, (*Mathematics*) அவர்களால் எழுதப்பட்டது. கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டது. 318 பக்கம் உடையது.

தபால் செலவு பிரத்தியேகம். இதன் விலை ரூ. 2—4—0 .

ஜாதக கணிதம்

இரண்டாம் பாகம்

என்னும்

ஜாதகப் பலாபலன்கள் நிர்ணயம்.

இதில் கிரக சட்பலம், துவாதச பாவ பலம், ஜாதக கணிதத்தின் முதல் பாகத்தின் முன்னுரையில் குறித்துள்ள உச்ச பலம், திக்குப் பலம், பட்ச பலம், கிரக யுத்த பலம், ஹோரா பலம், அயன பலம், கிரக திருஷ்டிப் பலம் முதலிய 24 வித பலங்கள் முதலிய கிரக, பாவ வலிவுகளை அநுசரித்துப் பலன்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. மேலும் ஜாதக கணிதம் பிரகாரம் கிரக சட்பலம், பாவ பலம் முதலியவைகளைக் கணிக்கச் சந்தர்ப்பப்படாதபோது சாதா

கிடைக்குமிடம் :—C. விஸ்வநாதம் அண்டு கோ.,
நெ. 7, வெங்கடேச மேஸ்திரி தெரு,
சௌகார்பேட்டை போஸ்ட், மதராஸ்.

ரண வழி பிரகாரம் கிரகங்களின் பலத்தையூகித்துப் பலாபலன் நிர்ணயஞ்செய்யும் மார்க்கத்தையும் கொடுத்திருக்கிறது. மிகவும் புராதீனமான சிறந்த கிரந்தங்களில் கொடுக்கப்பட்டுள்ள விஷயங்களில் மிகவும் அவசியமாயும், சிறந்ததாயும் உள்ள விஷயங்களையும், விதிகளையும் இப்புத்தகத்தில் கொடுத்திருக்கின்றது. சில நாடிக் கிரந்தங்களில் கொடுக்கப்பட்டுள்ள விதிகளையும் இந்தப் புத்தகத்தில் கொடுத்திருக்கின்றது. இது ஜாதகப் பலாபலன் சொல்லுவதற்கு மிகவும் உபயோகமானது. இது ஆனந்த போதினி சுத்த திருக்கணித பஞ்சாங்க கணிதரும், நவக் கிரக ஸ்புட கணனமாகிய இராஜ ஜோதிட கணிதம் என்ற புத்தகத்தின் ஆசிரியரும், பிருஹத் ஜாதகத்தின் பதிப்பாசிரியருமாகிய C. G. ராஜன். B.A., (*Mathematics*) அவர்களால் எழுதப்பட்டது. கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டது. 416 பக்கம் உடையது.

இதன் விலை ரூ. 2—12—0

தபால் செலவு அணா 7 பிரத்தியேகமானது.

ஜாதக சிரோன்மணி

என்னும் வராஹமிஹிரருடைய

பிருஹத் ஜாதகம்

இது தமிழில் சுலபமான வசன நடையில் எழுதப்பட்டது. இதில் விசேஷ வியாக்கியானங்களும், கஷ்டமானவிடங்களில் உதாரணங்களும், வாக்கியங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆயுர்தாய அத்தியாயமாகிய ஏழாவது அத்தியாயம் மிகவும் தெளிவான உதாரணங்களுடன் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆயுளைச் சுலபமாகக் கிரகங்களின் வலிவை அனுசரித்து நிர்ணயிக்கும் விதி பிரத்தியேகமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இராஜ யோகம், கிரக யோகம், நாபச யோகம், சங்கிய யோகம் முதலிய யோக அத்தியாயங்கள் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. இதில் இதர கிரந்தங்களிலிருந்து விஷயங்கள் எடுத்து தேவையானவிடத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இது கவர்ன்மெண்ட் டெக்ஸ்ட் புஸ்தக கமிட்டியாரால் (Text Book Committee) லைப்ரரி (Library) உபயோகத்திற்காக அங்கீகாரஞ்செய்யப்பட்டது. இது ஆனந்த போதினி சுத்த திருக்கணித பஞ்சாங்க கணிதரும், ஜாதக கணிதம் என்ற புத்தகத்தின் ஆசிரியரும், நவக் கிரக ஸ்புட கணனமாகிய இராஜ ஜோதிட கணிதம் என்ற புத்தகத்தின் ஆசிரியருமாகிய C. G. ராஜன். B.A., (*Mathematics*) அவர்களால் எழுதப்பட்டது. கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டது. 318 பக்கம் உடையது. தபால் செலவு பிரத்தியேகமானது.

இதன் விலை ரூ. 2—0—0.

கிடைக்குமிடம் :—C. விஸ்வநாதம் அண்டு கோ.,
நெ. 7, வெங்கடேச மேஸ்திரி தெரு,
சௌகார்பேட்டை போஸ்ட், மதராஸ்.

தெசா புக்தி சிந்தாமணி

இப்புத்தகத்தில் பல அருமையான ஜோதிட கிரந்தங்களிலிருந்து சாராம்சத்தை எடுத்து ஒன்றாகச் சேர்த்து ஒழுங்காக அமைத்து எழுதி இருக்கின்றது. ஜாதக பலாபலன்களைச் சொல்ல வேண்டுமானால் அப்பலன்கள் நடைபெறும் காலம் முக்கியமானது. இக்காலத்தை தெசா புக்தி அந்திரம் என்ற கிரக பலன்கள் நடக்கும் காலத்தைக் குறிக்கின்ற ஜோதிடப் புத்தகங்களால் அறிய வேண்டுமே ஒழிய வேறே வழி ஒன்றும் கிடையாது. இப்படிப் பட்ட புத்தகங்களில் இப்புத்தகம் மிகவும் அருமையானது. இப் புத்தகம் பலாபலனைச் சொல்லத் துணிகின்ற ஒவ்வொரு ஜோதிடரிடத்திலும் இருக்க வேண்டியது அவசியம். மற்றப் புத்தகங்களைப் போல் இராமல், இப்புத்தகத்தில் தெசா புக்தி பலன்களைக் கிரகங்கள் இராசியிலும், பாவச் சக்கிரத்திலும் இருக்கும் நிலையையும், அவைகளுடன் சம்மந்தப்பட்ட கிரகங்களையும், அவைகளைப் பார்க்கும் கிரகங்களையும் அநுசரித்து, விபரமாகவும், விஸ்தாரமாகவும் சொல்லி இருக்கின்றது. இது மிகவும் ஜோதிட அனுபோகமும், பயிற்சியுமுள்ள சேந்தமங்கலம், கோமடம், ஜோதிடர், ஸ்ரீனிவாஸ அய்யங்காரால் சில ஜோதிடர்களின் வேண்டுகோளுக்கிணங்க எழுதப்பட்டு, C. G. ராஜன், B.A., (*Mathematics*) அவர்களால் பார்வையிடப்பட்டது. அழகிய கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டது. 312 பக்கம் உடையது. தபால் செலவு பிரத்தியேகமானது.

இதன் விலை ரூ. 1—8—0.

ஜாதக தெசாரிஷ்ட நிவாரணி

இதில் தெசா புக்தி அந்திர காலங்களில் சம்பவிக்கும் வியாதி, கஷ்டம் முதலிய கெட்ட பலன்களை நிவர்த்திக்கச் செய்ய வேண்டிய நவக் கிரக சாந்திகளின் விபரத்தை விஸ்தாரமாகச் சொல்லி இருக்கிறது. இது ஜோதிடர்களுக்கும் மற்றவர்களுக்கும் மிகவும் அவசியமானது. இது சேந்தமங்கலம், கோமடம், ஜோதிடர் ஸ்ரீனிவாஸ அய்யங்காரால் எழுதப்பட்டு C. G. ராஜன், B. A. (*Mathematics*) அவர்களால் பார்வையிடப்பட்டு, கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டது.

86 பக்கம் உடையது, தபால் செலவு பிரத்தியேகமானது.

இதன் விலை அணா 0—6—0.

கிடைக்குமிடம் .—C. விஸ்வநாதம் அண்டு கோ.,
நெ. 7, வெங்கடேச மேஸ்திரி தெரு,
சௌகார்பேட்டை போஸ்ட், மதராஸ்.

மனனோகுடி.

ஜாதக கணிதம் மூன்றும் பாகம்

என்னும்

ஜாதக ராஜ மனோரஞ்சிதம்.

மலர் 1.

இதில் மேஷம் முதல் மீனம் வரையிலுமுள்ள ஒவ்வொரு லக்கினத்திற்கும் நூற்றறுபத்தைந்து முதல் இருநூற்றறுபத்து நான்கு வரையிலுமுள்ள விதிகள் அதாவது மொத்தத்தில் இரண்டாயிரத்து ஐந்நூற்று பதினொன்று வித கிரக அமைப்பு விதிகளும், அவைகளால் உண்டாகக்கூடிய பலாபலன்களும் விவரமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன, இதில் ஜாதகருடைய சர்வ பலன்களும், அவருடைய தாய், தகப்பன், அவருடைய சகோதர சகோதரி, அவருடைய தகப்பனுடைய சகோதர சகோதரி, அவருடைய அம்மான், அவருடைய மாற்றாந்தாய், அவருடைய மாற்றாந்தாயின் புத்திர புத்திரிகள், அவருடைய மாமனார் ஆகிய இவர்களுடைய பலன்களும் அந்தந்த ஆதிபத்திய காரக கிரக நிலைகளையுங் கிரக பார்வையையும், கிரக சம்மந்தத்தையும் அனுசரித்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இப்பலாபலன்கள் விருத்த வசிஷ்டர், பராசர், நாரதர், காசிபர், ஜெயமுனி, கர்கர், பிருகு, சத்தியாச்சாரி, மனு, விஷ்ணு, ஈஸ்வரர், யவனர், மயன் இவர்கள் கொள்கைபடி கொடுக்கப்பட்டிருக்கின்றன. C. G. ராஜன், B.A., (*Mathematics*) அவர்களால் எழுதப்பட்டது.

இதன் விலை ரூ. 3—4—0.

தபால் செலவு பிரத்தியேகமானது.

கிடைக்கும் இடம்:—(1) C. விஸ்வநாதம் அண்டு கம்பெனி,
நெ. 7, வெங்கிடேச மேஸ்திரி தெரு, கிருஷ்ணப்ப நாய்க்கன் குளம் சமீபம், சௌகார்பேட்டை போஸ்ட்டு, மத்ராஸ்.